182
II Part

ஜீவர் ராய டார் லோ

ஜீனமும் காந்தங்களும்

3ம் புத்தகம் பகுதி உ.

Vol: 14 Part II. 1902

76MSP3
NO2·3·2
1142 21

O-,6M5P5
NO2 3-2

## ௲அ௱எ௧-௵ சனுவரிமீ ௧-உ புதன்கிழமைமுதல்
## சுவிசேஷபுரம் உபதேசி சவரிராயபிள்ளை
## நிற்பேரட்டு— நகரு
## தமிழ் ௲௯௱அ-௵ மார்கழிமீ ௰௬-உ

௧—உ காலைச் ஜெபம் மோசே உபதேசியார் ஜெபம். பின்பு நானும் என் மகன் சஞ்சீவிப்பிள்ளை, பேரன் யாக்கோபு சவரிராயபிள்ளையும் கனம் ஆர்கோட் ஐயரவர்களை சந்தித்து வந்தோம். அப்பால் நாங்கள் எல்லாருங் கூட விருந்து சாப்பிட்டோம். பின்பு ௰-மணிக்குமேல் உபதேசிமார் உபாத்திமார் உபாத்திச்சிகள் மற்றப் பள்ளிப் பிள்ளைகள் வேலைக்காரர்களெல்லாருங் கனம் ஷை ஐயரவர்களைச் சந்திப்பு வைத்துக் கண்டார்கள். பின்பு சிலர் நல்லம்மாள்புரத்தில் கனம் மதுரேந்திர ஐயரவர்களை புது வருஷப் பிறப்புக்கு கண்டுவரப் போனார்களாம். இரவில் கனம் ஐயரவர்கள் கோவில் ஆராதனை நடத்தினார்கள். நானுந் தருமராத சஞ்சீவிப்பிள்ளையும் யாக்கோபுப்பிள்ளையும் கிருபை பெற்றாளும் போய் வந்தோம். பின்பு கூ-சங்கீதம் வாசித்து ஜெபம்.

உ—உ கனம் மதுரேந்திரஐயர் புது வருஷத்து சந்தோஷத்துக்குத் தேவனுக்கு ஸ்தோத்திரமும் எனக்குந் தாயாருக்கும் வந்தனமும் எழுதிய காயிதமும் பழமும் அனுப்பினார்.

௩—உ மகா கனம் விசோப்புக் கண்காணியாரவர்கள் காலை ௯-மணியில் இடையன்குடியிலிருந்து வந்தார்கள். பின்பு மதுரேந்திரஐயரும் வந்தார். ௰உ-மணிக்குப் பின்புபோய் சந்தித்தோம் கண்காணியாரவர்களைக் காலை எங்களுடன் மதுரேந்திரஐயரவர்கள் வந்தார்கள்: ஷை யவருக்கும் மாலை போட்டார்கள். அவ்விடத்திலிருந்து இனி முடிந்து வீட்டுக்கு வந்தார்.

௪—உ திடப்படுத்தல் பிரசங்கமும் மகா கனம் விசோப்பு ஐயரவர்கள் நடத்தினார்கள், ௰உ-மணிக்குப் பின்பு முடிந்தது, கிருபைப் பெற்ற மரியம்மாளுந் திடப்படுத்தல் அடைந்தாள். இரவு மதுரேந்திரஐயர் நமது வீட்டில் சாப்பிட்டுப் படுத்திருந்தார் சாலமோனும்.

௫—உ விடியக்காலமே முதலூருக்கு மகாகனம் விசோப்பு ஐயரவர்களும் போனார்கள். பின்பு மதுரேந்திரஐயர் ஊருக்குப் போனார்.

௬—உ விடியக்காலம் சஞ்சீவிப்பிள்ளை தமைக்கையா ஸின்னுநி அம்மாளை யிங்கே கூட்டி வரும்படிக்கு அனுப்பினோம்.

---

௩-உ ஆராதனையும் நற்கருணையும் இங்கே நடந்தது. வடக்கன்குள த்துக் கடை வீட்டுத் தருமராசபிள்ளை தமது விலை ஒட்டியெழுத்து பட் டாவைக் கொண்டு வந்தார்.

௪-உ ஷெ பட்டாவை வாங்கிக்கொண்டு அவருக்கு சப்பழுங் கால்-ரூ யும் கொடுத்தனுப்பினேன். நல்லம்மாள்புரத்துக்குப் போய் மதுரைக்குப் போ றதாக அனுப்பிப் போனார். வெஸ்ப்பதித்ததேவ ஷ்ன்று: அவர்களிலிச் சிறப்புக் கொண்டாட்டம் இந்த வருஷம் சாணாருக்கு மலர்களுக்கும் விரோ தத்தினால் நிறுத்தப் பட்டுப் போனதாகச் சொன்னார். சஞ்சீவிப்பிள்ளை வழி யிற் சுகமில்லையென்றதினால் ஒரு காயிதம் அவனுக்கு எழுதித் தவ்வாலிலனுப் பினேன் அவர்கள் அக்காளையும் கூட்டி வரவென்று.

---

✝

பிரியமுள்ள குமாரன் சஞ்சீவிப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாக.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படி நீயும் சுகமாய் ௪-உ சாயங்கிரம் சேர்ந்திருப்பா யென்றும் நம்புகிறோம். குருபாத மானுக்கன் உமக்குத் தலையிடியும் நெஞ்சு வலியும் உண்டாயிருக்கிறதாய்க் கேட்டோம், கர்த்தர் தனக்கும் மற்றவர்களுக்கு சுகங்கொடுத்து இவ்விடம் வந்து சேரச் செய்தருள மன்றாடுகிறோம். இவ்விடத்திற் சனிக்கிழமை யுங் கள் தலைமையானவர்களுமிருந்த திடப்படுத்தலும் நடந்தது. இதுதானே முதலாருக்கு மகா கனம் விசோப்பு ஐயரவர்கள் போய்விட்டார்கள். உனக் கு வேண்டிய செலவுக்கு திருநெல்வேலித் தம்பி வசத்தில் ரூ-கள் வாங்கிக் கொண்டு நாம் பேசினபடிக்கு வண்டி யமர்த்தி ஜீனத் திட்டஞ் செய்து வந்து சேரவேண்டியது. தேவசகாயப்பிள்ளை யிடத்தில் ரூ ௰-ம் வாங்கிக் கொண்டு வந்து சேரவும் வேணும். அவ்விடத்திலுள்ள என் சனமாகிய யாவ ருக்கும் புது வருஷத்திற் காத்ததற்காக ஆண்டவருக்குத் தோத்திரமும் உங்கள் எல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௰௩

சனுவரியீ ௫-உ

இப்படிக்கு
சவரிராயன்
கவிசேவுபுரம்

[இது—முருகன்குறிச்சி வடக்குக் கல்விச்சாலையில் சஞ்சீவிப்பிள்ளைக் குக் கொடுப்பது.]

---

258



௭-உ சம்பழக்கூடுதல், கனம் ஐயர் வந்திருந்தார். ௮-உ காலையிற் போனார். அதிசயபுரத்துக்கு கனம் ஆர்கோட் ஐயரவர்களுங் கூட யாக்கோ புப்பிள்ளையுங் கூடப் போனார்.

௯-உ மிற் தருமராசசஞ்சீவி பக்காளைக் கூட்டிவருகிறதாக எழுதிய படிக்கு வரவில்லை. இரவில் கவமணிக்குப் பெருகால வருக்க மென்று கேட்டது. ௰-உ மிது மப்படித்தானிருந்தது, மிகவிருமல். ௰௧-உ காலை ௧௦-மணிக்கு ஷெ கவமணிக்கு ஆண்குழந்தை பிறந்தது. கர்த்தர் முற்றுஞ் காப்பாராக. கனம் ஐயர் வந்தார்கள் முதல் நாளே. யாக்கோபுப்பிள்ளை வரவில்லை இன்றும்.

௰௨-உ ஆர்கோட்டையரவர்கள் நல்லம்மாள்புரத்தில் இராப்போ சனங் கொடுக்கப் போனார்கள் முதல் நாளே. மோசே உபதேசியாரிங்கே ஆராதனை நடத்தினார். தமிளர் மாசப்பிறப்புக்கொண்டாடுகிறார்கள்: தட்சன் சொல்லன் குடிமகன் சாண. வந்தார்கள். செலவு ரூ-ல

௰௩-உ இன்னாசியம்மாள் வருவாளென்றிருந்தது வரவில்லை.

௰௪-உ நல்லம்மாள்புரத்திலிருந்து அண்டப்பிள்ளை புல்லுக்கு வந் தவர் சொன்னது: விசையாகுபவனம் வியாசப்பபிள்ளை வந்து வந்திருந்து இலை காய்கள் வாங்கிக்கொண்டு போனதாகவும் அங்கே விருந்தாளிகளும் கூட்டமுங் குறைவில்லைச் செலவுக்கு வகைத்தா னென்றார்.

௰௫-உ இரவில் எழுமணியில் இன்னாசியம்மாள் குழந்தைகளுடன் சஞ்சீவி பிள்ளையும் கூட இரண்டு ஆள் கூட்டிக்கொண்டு பனிரெண்டுநேரி புறப்பட்டு முனைஞ்சியில் வந்து புதுக் கண்டச்செட்டியார் வீட்டிற் போய்ப் படுத்துக்கொள்ளப் போனார்களாம். அவர் மனவி வெகு உபசாரஞ் செ ய்து இன்னாசியம்மாளுக்குச் சுடுசாதமும் கறியும் சுடுதண்ணீர் கைகழுவ வென்னீருங் கொடுத்து மிகு உபகாரமாய் விசாரித்தாளென்று சொன்னா ளாம். அந்த வீட்டுக்காரர் முன் ஸ்ரீமதியாதவர்களாயிருந்தவர்களைக் கொ ண்டு தேவன் செய்த உபகாரமென்று அவருக்குத் தோத்திரமுண்டாவதாக. ஷெ யார் வந்து மிருந்த ஆட்சரியமாக நடத்தி வந்தானென்று மகிழ்ந்தோம். முனிசுப்பிள்ளை சந்தாகூடியும் மிக்க முருக்கம் இல்லாமலுஞ் செலவுக்கும் ஒரு ஆட்டுங் கொடாமலும் வழிச்செலவும் கொடாமலும் மனைவியும் பிள்ளைகளும் போகவிட்டாராம் இங்கு.

௰௬-உ ஷெ யின்னாசியம்மாள் கூட வந்தவர்களுக்கு ரூ-சம்பள மும் சாப்பாடுங் கொடுத்தனுப்பினோம். ஷெ அம்மாளுக்கும் பிள்ளைகளுக்

ரும் நடக்த அநுப்பும் வாய்ப்புன்றும் காட்சறும் பல உபத்திரவமுமாகவே வருத்தப்பட்டார்கள், ௧௨-௳ முறைதர்.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்கு கர்த்தர் கிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதி சங்கதியை யறிய விரும்புகிறோம். ஆண்டவர் கிருபையினாலே தங்கட்சி யின்றுசியம்மாளும் பிள்ளைகளுஞ் சுகத்துடன் நேத்து யிரவில் வந்தார்கள்.

அவர்களைக் கர்த்தர் விசேஷித்த விதமாய் நடத்தி வந்தாரென்று நம்புகிறோம். நானுங்களை வந்து எப்போது காண்பே னென்றுமித்த வருஷத்துச் சங்கத்துக்கு வரவுங் கல்ல விசேஷமாக நம்முடைய பிள்ளைகள் யாவரும் விசேஷமாகக் கனம் பொருந்திய விசோப்பு ஐயரவர்களும் வந்து பட்டங்கள் கொடுக்கிறதையுங் கண்டு கொள்ளவும் வேண்டு மென்றும் மிகுந்த ஆவலாயிருக்கிறது. கனம் மதுரேந்திர ஐயருங்கூட இல்லை யானால் எனக்கு அவ்விடத்தில் வருகிறதினால் என் சரீரத்துக்குச் சுகவீனமும் மனதுக்கு வருத்தமு மாகிறதினால் எனக்கு வரக்கூடாது. ஆகையால் உமக்கு மெய்யாயித்தப் புதுவருசத்திற் காண விருப்பினால் நீர் செய்யவேண்டியது நாம் அவ்விடத்தில் நிர்மாணித்துக் கொண்டபடிக்கு வீடும் மனையும் பாதிக்கு கூடுமானவரைப்படிக்கு பத்திரம் வாங்கித் தம்பி சஞ்சீவிப்பிள்ளைக்கு எழுதி இவ்விடத்துக் கனுப்பவும். அப்பால் நாங்கள் வந்திருந்து எல்லாம் ஒழுங்கு படித்தி உமது கடனையுந் தீர்ப்போம். இதுவே உறுதியான உடம்படிக்கை. இதற்கு நீர் வேறு மாறுதல் அல்லது நாங்கள் மாறுதலானால் அவ்விடத்துக்கு நாங்கள் வந்தாலுஞ் சமாதான மிராது. ஆகையால் நீர் எவ்விதமும் அவ்விடத்தில் சமாதானமாய் நாங்கள் வரவும் அந்த வீட்டிற் தங்கித் தரித்து எல்லாக்காரியமும் ஒழுங்கு செய்யவும் வேறுமென்றுஞ் செய்வீரென்றும் நம்பி எழுதுகிறேன்.

கிருபைபெற்ற மரியம்மாள் வகைக்கு கூலிரும் இப்போது தவ்வாலில் அநுப்பவும் வேண்டியது. அந்த வகைப்பணம் இன்னம் வாங்கியனுப்பாதிருக்கிறீர்களென்று கனம் உங்கள் அண்ணாட்சி யவர்க ளென்னை கேட்கிறார்கள். இதுவும் இத்தபா தமின்த் தைபா ஆனதால் துரிதத்தில்



நடத்தவேண்டியதாயிருக்கிறது. நாஞ் செய்யவேண்டியதைத் தாமதிக்காமற் செய்யவேண்டியது.

கர்த்தர் கிருபை செய்யக் கடவர். உங்களெல்லாருக்கு வாழ்த்துதலும் பிள்ளைகளுக்கு முத்தியும் சொல்லுகிறேன்.

௲௮௱௭௰௩-ம் ஜனவரி ௧௬-௳ — இப்படிக்கு சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் முனிசுப்பிள்ளை யாகிய தேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.)

---

௧௮—௳ மாசாந்திரக்கூட்டம், கனம் மதுரேந்திரஐயர் வந்தார் நமது வீட்டில் இரவு தங்கட்சி வந்தவன் காரியங்களையும் முனிசுப்பிள்ளையின் செய்கையும் தேவசகாயம்பிள்ளையும் மனவியும் நடத்திவருகிற செய்தியின் விபரமும் இன்றுசியம்மாளை மரியாதியில்லாமற் பேசி வீட்டை விட்டுப் போகச்சொன்னதும் மிக்கேலம்மாள் மனவி பேட்சுத் தனக்கு விசனமாயிருந்துந் தேவசகாயம்பிள்ளை பேசாமலிருந்து அக்காளை யமத்தினதும் பேசிக்கொண்டும் வெகுநேர மிருந்தோம்.

௧௯—௳ விடியக்காலம் ஊருக்குப் போனார். பகல் காலை மதியமும் யோசேப்பதேசியார் ஆராதனை பிரசங்கமுஞ் செய்தார். ஐயரவர்கள் சவேரியாற் கோயிலுக்குப் போயிருந்தார்கள்.

௨௰—௳ த. சஞ்சீவிப்பிள்ளை சிநேகிதன் பிராட் ஐயரவர்கள் மேட்டி யாரியென்பவனுக்கு விருந்து செய்தது.

௨௧—௳ காலைச்செபத்துக்குப் போனேன். பின்பு காரிநேரட்டம் அருணகிரிநாத பிள்ளை யவர்கள் விருத்தாப்பிய வயதில் இறந்து போனார்களென்று ஆள்ச்சொல்லி வந்தது.

௨௨—௳ தருமநாதசஞ்சீவிப்பிள்ளை திசையன்விளைக் கடைக்குப் போய் வந்தான்.

௨௩—௳ நாட்டுச் சங்கக் கூடுதலுக்கு கனம் மதுரேந்திரஐயர் வந்து உடனே ஊருக்குப் போய்விட்டார்.

௨௪—௳ பாளையங்கோட்டைக்குச் சங்கத்துக்குப் போக வந்து போனார் இரவில். தருமநாதசஞ்சீவி காலையிற் போனான் கல்லம்மாள்புரத்துக்குப் போனவன் வரவில்லை,

௨௫—௳ காலையில் வந்தான், யாக்கோபுப்பிள்ளை தனது கிராமத்து முதிலம்விளைக்கும் போனார். இஞ்சிப்பிட்டார் மாடத்தை பள்ளிக்கூடஞ்

சோதனை. ஜனம் ஆற்கோட்டையாரவர்கள் பாளையங்கோட்டைக்குப் போய் விட்டார்கள். நான் தூத்துக்குடிச் சவரிராயபிள்ளைக்கு காகிதம் எழுதினேன் நாங்குன்னேரித்தாலுகாச் சேவகன் சுடலைமுத்துப்பிள்ளை மகன் வேலாயுதம்பிள்ளைக்குச் சிப்பாரிசுக்கு: ௨௬-௳ ஓய்வுநாள், ௨௭-௳ தபாலில் முத்திரைபோட்டுக் கொடுத்தது ஷெ தாலுகா சுடலைமுத்துப்பிள்ளைக்கு. நான் சுகமில்லாததினாற் போகவில்லை யென்றிருந்தும்: இந்தச் சங்கத்துக்குப் பிள்ளைகளெல்லாரும் வருவார்களே, நாமும் போய்ப் பார்த்து வருவோம், அடுத்த சங்கத்துக்கு இருப்பேனோ என்னமோ, போய்த்தான் வரவேண்டும் என்றும், தருமதாசஞ்சீவி தனிமையாய்ப் போனாற் சந்தோசமிராதென்றும், ௨௭-௳ விடியக்காலம் பாளையங்கோட்டைக்குக் கூடப் புறப்பட்டு மூலைக்கரைப்பட்டியில் தங்கினோம்.

௨௮-௳ ௰௨-மணிக்குமேற் பாளையங்கோட்டைக்குச் சேர்ந்தோம் கூனியூர் தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளை தவிர மற்றப்பிள்ளைகளை யெல்லாம் பார்த்தேன். இரவில் ஏசுதாசபிள்ளை தவிர மற்றவர்களும் யாக்கோபுப் பிள்ளையுங்கூட வெகுநேரம் நமது காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டோம். ஒன்றுந் தீர்மானமாக முடியவில்லை.

௨௯-௳ தூத்துக்குடி சவரிராயபிள்ளை காலையில் வந்தார், அவ்விடத்தில் சுகயீன செய்திதான். ௰௨-மணியிற் சங்கங் கூடினது கோவிலில் அநேக உபாஸ்தர்கள் கூட்டமானதினாற் பிந்தினவர்களுக்கு நாற்காலி கிடைக்கவில்லை. வெள்ளைக் குருக்கள்மார்கள்தான் சங்கத்திற் பேசினது, வேதாகம சங்கம் சன்மார்க்கப் புஸ்தக சங்கம் இரண்டும், நான் காணிக்கை வாங்கிறவன் கிட்டவாராததினாற் காணிக்கை போடவில்லை. தேவசகாயம்பிள்ளைக்கு உள்ளே வர இடமில்லாதிருந்தது. அநேக சனங்க ளிந்தவருசத்தில் கூடினது. ஏசுதாசபிள்ளை முதல்நாளிருட்டில் வந்து என்னைக் கண்டு கொண்டவன் பள்ளிக்கூடம் படிப்பானதால் ௩௰-௳ காலையிற் போய்விட்டான் திருநெல்வேலிக்கு, சாயந்திரம் மதுரோத்திர ஐயரும் போனார்.

௩௧-௳ கூடப்போயிருந்த சஞ்சீவி, சவரிராயபிள்ளையும் வந்தார்கள். ஷெ ஏசுதாசபிள்ளை சாயுங்காலம் வந்தான் அனுப்பிக்கொண்டு போக. நானும் ஷெ ஐயர் கூடப் போகவென்றிருந்தேன். சுகமில்லை யதினாலும், நான் குதிரையிற் போறதானால் ஐயர் நடக்கவேணும், அவர் குதிரையிற் போகவென்றால் நானுடனே நடந்து போகக் கூடாது உடனே, யதினால் நானிருந்து வருகிறேன், நீங்கள் போங்களென்று தீர்மானித்தேன். இங்கு கூடின





தித் தனது காரியங்கள் பேசினதில் ஒன்றும் ஒழுங்காகவே யில்லைச் சவரிமுத்துப்பிள்ளையும் ஏசுதாசபிள்ளையும் சவரிராயபிள்ளையும் வீட்டுக்காரியங்களாவது எனக்குச் செலவுக்காக வேண்டியதாவது ஒன்றும் பேசினதில்லை. சஞ்சீவிக்கும் அவனுக்கு இடமாகவும் வேண்டியதுக்கு வேண்டியதையும் சவரிராயபிள்ளைக்கு மாச வேண்டியதுகளும் பேசிக்கொண்டார்கள். யாக்கோபுப்பிள்ளை வந்ததும் போனதும் ஒன்றுமில்லை. சவரிமுத்துப்பிள்ளை மகனை ஷெ யான் கலியாணை முடிப்பானென்ற எண்ணத்தைப் பற்றி என்னிடத்திற் கேட்டான். அதுக்கிடமில்லை, எங்கள் சொற்படிக்கு அவனுக்கு கேள்க்க மனமுடையவனையும் காணவில்லை, யதால் அந்தஎண்ணம் நமக்கு வேண்டாம் என்றுஞ் சொல்லிவிட்டேன் தனித்து ஷெ சஞ்சீவிக்கு ஏசுதாசன் கொழுந்தியை விவாகஞ் செய்யலாமென்று யோசனை நினைக்கிறதாயும் நானு மென்றேன், அவருந் தனக்கு அது பிரியமென்றார், ஆனால் மற்றச் சகோதரர் மனம் எப்படி யிருக்குமென்பது தெரியவில்லை என்றும் பேசிக்கொண்டோம். அப்பால் ஊருக்குப் போய்விட்டார். அவர் தகப்பன் தாயை விசாரிக்கிறவனாகக் காணோம். கூ. ஞானப்பிரகாசம்பிள்ளை வரவில்லை சங்கத்துக்கு. கூனியூரில் சாஸ்திரியார் கூட்டங்களிருந்து அவனைத் தங்களுக்கு ஒத்தாசையாய்ப் பெரிய வீட்டுக்காரரிடத்திற் பேசும்படிக்கு இருந்துக் கொண்டதாகவும் கடன் காரர் அவனைத் தொந்தரிக்கிறதினாலும் தமது சம்சாரத்தையும் இரண்டு குழந்தைகளையும் வண்டி வைத்து அட்சக்கூடத்து றயிட்டர் தெய்வநாயகம்பிள்ளை யிடத்துக்கு அனுப்பி கூ.ஊருக்கு வாங்கிக்கொண்டு வாவென்றனுப்பினதாகவும் அன்னம்மை சாயந்திரம் வந்து சேர்ந்தாளிங்கு. வந்த வண்டிக்காரனுக்குத் தேவசகாயம்பிள்ளை கூ. அரைக்கால் படி கொடுத்தான். ஷெ ஏசுதாசபிள்ளை மனைவிக்கு பேறுகாலமானதால் எங்களை யனுப்பிக்கொண்டு போய்விட்டான். சஞ்சீவியை மாத்திரம் ஊருக்கு வாவென்று சொன்னான். என்னிடத்தில் இந்தவீட்டு மனைக்காரியத்தைப் பற்றிய மனஸ்தாபமிருக்கிறது. மேல்க்கண்ட விதமாய் தான் பேசுகிறதாய்த் தான் எனக்குத் தோன்றுகிறது. நானுமதைக் காட்டாமல் அன்னம்மையையும் மற்றசகோதரர் சகோதரிகளையும் பற்றியும் பட்சமாய் விசாரித்துப் பேசினேன். தேவசகாயம்பிள்ளை, சவரிராயபிள்ளை மற்றுங் கூடிய யாவரும் வெளிப் பேச்சன்றி உள்ளன்பாயும் பொதுவாயு மில்லாமல் தன் தன் காரியங்களில் தங்கள் காரியமாகவே கண்டது. இதினால் கனம் ஐயர் புறப்படும்போது நான் செபஞ்செய்ததில் எல்லாரு மன்பும் ஐக்கமுள்ளவர்களாயிருக்க பிரதானமாய்த் தேவன் கிருபை செய்து காப்

பாற்றப் பிரார்த்தித்துக் கொண்டேன். தேவகிருபையினால் இந்த வருஷ இத்தம் வரையும் காப்பாற்றின தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பிப்ரவரி கடை சனிக்கிழமை

க-டை விடியக்காலம் காப்பி சாப்பிட்டுக்கொண்டு ஷெ ஐயர் ஊருக்குப் புறப்பட்டுப் போனார். சவரிராயபிள்ளையும் நானுஞ் சஞ்சீவியு மிருந்தோம். தேவசகாயம்பிள்ளை என்னிடத்தில் வீட்டுத் பாதிக்குப் பத்திரம் எழுதித் தாருமென்கிறீர்களே பேசாதிருக்கிறீர்களே என்றார். அது வுங்களெல்லாருக் கும் மனதானாற் செய்யலா மென்றேன். எனக்கு இப்பொழுதே செய்கிறது சந்தோஷ மென்றார். அதைப்பற்றிச் சவரிராயபிள்ளை யிடத்தில் தனித்து என் மனதிலுள்ளதைச் சொன்னேன். அதை ஒப்புக்கொண்டு சவரிராய பிள்ளைக்குச் சம்மதமாயிற்று. சஞ்சீவிக்கு அறுவலகப்பட்டதிலிருந் தவன் மனம் வெறுப்பட்டது. அவனை யிருக்கச்சொன்னேன், பேசாதிருந்தான்.

உ-டை ஐய்யாசன் காலையிற் ஐயாவர்களும் மாலை றாலமுத்தமரும் ஆராதனை நடத்தினார்கள். சாயந்திரம் பத்திரம் வாங்கி அவர்க்கு எழுதி முடிக்கிறோ மென்று தேவசகாயம்பிள்ளை, ஐயாவாலே பணம் ஆக வழியில் லையே, முந்த அன்றாடம் பார்த்தா லாகவேண்டிய தென்று சொன்னார் ஆகையால் அவர் நாஞ் சொன்னபடிக்கு செய்ய மனமில்லை.

கூ-டை கூ இரண்டேயகாணி பத்தக்குத் திருநெல்வேலியில் மந்தி ரவியில் இரண்டு வேட்டியும் ஒரு வெள்ளைத் துண்டும் வாங்கித் தந்தார் ஷெ யூர் உவாத்தியாராகிய என் மகன் ஏகநாசபிள்ளைக்கு மதியம் பனி ரண்டு மணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாகச் செய்தி வந்தது. கேட்ட யாவரும் ஆண்பிள்ளை பிறந்ததில்லை யென்று கவலையாயிருந்து தேவசித்தத் தின்படி யான தென்றாறுதலடைந்தோம். ஐந்தாவது பெண்ணானதினால் என் மனதுக்கு ஆறுதலாயிருந்தது. நானும் பெரியபிள்ளையும் ஊருக்குப் போக விரும்பினோம். மழையினால் தாமதித்தோம்.

ச-டை பகலில் சவரிராயபிள்ளைக்குச் செல்லவேண்டிய கூ-ம்க்கும் மாகாணி கூக்காயிதத்தில் ஒரு வருஷம் வாயிதா வைத்து எழுதிக்கொடுக் கும்படி பெரியும் தேவசகாயம்பிள்ளை நடத்திக்கொண்டு ஏகநாசபிள்ளை தாவேண்டியது வரவில்லையே என்றார். அதற்கு நீ கேட்கவேண்டியதி யோசன் வைக்கவும் வேண்டும், இதற்கும் அதற்கு என்ன சம்பந்த மென்ன வென்றுஞ் சொல்லியும் ஷெ சவரிராயபிள்ளைக்கு வட்டி கொடுக்கவும் வே ண்டுமென்றுஞ் சொல்லியும் எழுதிக் கொடாதிருந்து விட்டார். இர



வுமணிக்கு ஷெ தூத்துக்குடி வண்டியிற் போய் விட்டார். அன்னம்மை யவள் தமையனிடத்திலே கடனுக்குதவி செய்ய மன்றாடிக் கொண்டு இருக்கிறாள்.

ரு-டை செபமணிப்பிள்ளை கூனியூரிலிருந்து வந்தவர் சேசாய தேவியிற் கலெக்டர் துரை தம்மை சுதிப்பவர்த்து வெகு வேடிக் கிறப்பித்ததும் உத்தியோகத்த செல்வாருக் துரைக்காக கூடவும் வேதப்பிரசங்கஞ் செ ய்யது கனமாயிற் றென்றார். தமக்கு வீட்டுத் பங்கு இல்லாததினால் என் மகள் இன்றுமியம்மாளுக்கு ஒரு வீடு கட்டிக்கொடுக்க வேண்டு மென்ற எண்ணம்: அதை நடத்தத் தக்க வழியைத் தம்பி யிடத்தில் யோசித்தேன் அவரப்படிச் செய்யலா மென்றார். ஷெ சவரிராயபிள்ளை புன்னியத்தக்குக் கட்டிக் கொடுத்தாலும் ஷெ முனிசப்பிள்ளை யதிலிருந்தால் கடன் வாங்கித் தின்று செத்தப்போவார், அப்பொழுது ஷெ வீட்டைத்தான் வந்து பிடிக்கும் அவர் வேறாக கூடும் வைத்துக்கொண்டு சாப்பிட்டு இந்த வீட்டில் வாச திருப்பார்களானால் செய்லாம், மற்றப்படி செய்கிறது பிரயோசனமாக மா ட்டாதென்றுரே மென்றேன். தம்பி யப்படி யாகாது, கட்டுகிறபணத்தக்கு எழுதி வாங்கிறு மென்றார். அப்படியானால் எங்காவது கடன் வாங்கிச் செய்து எழுத்தாக்கி ஷெ முனிசப்பிள்ளை சருசாரத்துடன் போக விட வே ண்டும், இல்லையானால் வீதவீட்டை விட்டுப் போகவிடயில்லை யென்றேன். சாயந்திரம் கட்டுச்சாதம் கட்டச்சொன்னதற்கு மழையிற் போகப்படா தென்று சிறுத்தினான், பகலும் இரவும் சாப்பாடு கிடைக்கவில்லை, பதினால் பெரி வெகுத்து வருத்தப் பட்டேன், கவலை யதிகம்.

கூ-டை காலமே தொடுத்து மழைபாகவே யிருந்தது. எனக்கோ சொல் படி நடத்தாதவனிடத்தில் இருக்கப் பிரியமில்லை, நடக்கத் தவிரியமு மில்லை யதினாற் கவுங்கலாயிருக்கிறோம் நானுஞ் சஞ்சீவியும்.

எ-டை காலையில் சஞ்சீவி வண்டி விசாரிக்கப் போன யிடத்தில் குருவி குத்தும் சேவிசப்பிள்ளையைக் கண்டு செத்தி தெய்வாயியை சுகமாயிருக்கிறாளா வென்று கேட்டதின் பேரி லவன் போன சனிக்கிழமை மரித்துப் போனா ளாகச் சொன்னானென்று ஷெ சஞ்சீவி வந்தான். அந்தாள் பிப்ரவரி க-டை அவள் தன் சரீரத்தைத் தானே கெடுத்து மரணத்தை வகித்துக் கொ ண்டாளென்று நானும் பிள்ளைகளும் மனஸ்தாபப் பட்டோம். பின்பு நடுக் கடை பிக்கேஸ்ப்பிள்ளை மனைவி செபத்தியாயி கோட்டைக்குள்ப் போக வந்தவள் மருமகள் வீட்டுக்கு வந்தா ளவள் ஷெ தெய்வாயிக்கு மருமகள் தன்றாய் வியாதிக்குப் பார்த்தாளென்று இவளும் அவளு மரண அவள்ளைத்

குதவியாயிருந்து செத்த பின்னுஞ் செய்யவேண்டியதைச் செய்தும் இருந்தும் அவளைச் சிறப்பா யடக்கஞ் செய்த தாகவும் சொன்னாள். பின்பு நான் சுவிசேஷபுரத்திலிருக்கிற அசகாருக்குத் தெரியப்படுத்தக் கிருபை பெற்ற மரியம்மாள் பேருக்கு காயிதம் எழுதினேன் தவ்வாலில். சகாயமுபதேசியார் கொண்டு போன நமது தம்பூரை வெகுகாலமாய் வைத்துக்கொண்டவரதை யனுப்பும்படிக்குக் கண்டிப்பாய் ஒரு காயிதமு மெழுதினேன். கூனியூர்த் தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளை வரும்படி காயிதம் போயிருக்கிறதினால் வருவானென்றிருந்தேன், வரவில்லை. மழையுமிருக்கிறதினால் திங்கட்கிழமை போகலாமென்று தீர்மானித்தேன். சனம் இன்ஸ்பெக்டர்யாரவர்கள் தூத்துக்குடித் துறைமுகமா யிறங்கி வந்திருந்தவர்கள் அ-ஙு காலையிற் பங்களா வந்து சேர்ந்தார்கள். அவர்களிடத்திற் சஞ்சீவி போய்க் கண்டவுடன் பரிட்சை கிறவெழுதனதை விட்டு மனஸ்தாபப் பட்டும் இவனுக்கு ஆறுதலாயும் இவனை விடப்படாதென்ற நோக்கமாகவும், பள்ளிக்கூடத்திற் படி, உனக்கு மேலாவில் ரூ கூ-உ-ம் கொடுப்போ மென்றுஞ் சொல்லிச் சாவகாசத்திற் பேசிக்கொள்ளலாமென் றனுப்பினார்கள். எனக்குப் பகல் சாப்பிட்டதுஞ் செமியாமல் இரவு சாப்பிட்டதும் கூட வாந்தி பண்ணிப் பேதியு மாயிற்று.

---

†

மிகவும் பிரியமுள்ள சகாயம் உபதேசியாருக்கு, இப்பவும். இப்பொழுது இவ்விடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம், அப்படியே தாமுஞ் சமாதானமுங் குழந்தைகளுஞ் சேமமாயிருக்கிற தறிய விரும்புகிறேன்.

இந்தவருஷத்தில் மகா சனம் பொருந்திய விசேஷப்பு வந்தஞ் சேகரங்களெல்லாம் பார்த்து முருகன்குறிச்சி தேவாலயத்தில் அநேகருக்கு குருப்பட்டமும் பாஸ்தர்ப்பட்டங்களுங் கொடுத்துச் சங்கமுங் கூடுகிறதினாற் சகலரும் வருவார்களே, ஆனாலும் மிதவனையும் நாஞ் சுகத்துடனிருக்கத் தேவன் செய்தாரே, ஆகையாற் போய் வரவேணுமென்று பெலவீனத்தையும் வியாதியையும் பாராமல் வந்தேன், முருகன்குறிச்சியில் நீர் வருவீர், கண்டு பேசலாமென்றிருந்தது. நீர் வர வில்லை, உம்மை விசாரித்து உமது காரியங்களையெல்லாம் அறிந்தேன்.

இப்போதிந்தக் கடிதம் எழுதின முகாந்திரம்: எனது தம்பூர் என்னுத்தரவில்லாமற் றாமே கொண்டு போயும் கேட்கிற காலங்களில் நீர் தம்பூர்.





வழுதுபார்த்தனுப்புகிறேன் என்றதையும் நம்பினேன். பின்பு சவரிமுத்துப் பிள்ளை மூலமாயும் கேட்டேன். அவரிடத்தில் வந்திருக்கு மென்று மிருந்தேன், அப்படியும் வரவில்லை. அதை யிப்போது பக்குவமில்லாமல் அனுப்பவும். மேலும் பாட்டு கையெழுத்துப் புஸ்தகமும் விசாரிப்பலகையும் கூடக் கொடாதிருந்து விட்டீர். இதினால் நினைக்கிறது என்னையும் செய்த உபகாரத்தையும் மறந்து போனீரென்றே.

இங்கே பங்களாவில் நுட்பமான வேலைகள் செய்கிற ஆசாரி வந்திருக்கிறதினால் பழுது பார்த்துக் கொள்ளக் கூடுமானதையா லிந்த வேளை யனுப்பினால் கிருபகாரமாய்ப் பத்திரமா பண்ணித் தந்ததாக என்றுவிசுமட்டு நினைப்பேன். அதுவும் என்னை நினைப் பூட்டுதலா யிருக்கும்.

இல்லையானால் உமக்கும் எனக்கும் உள்ள சிநேகத்துக்கு நமது காவிலத்தானே கெடுதலாமென்று நினைக்கிறேன். அப்படி வராமல் வருகிற ஆள் வசத்தில் உடனே யனுப்பவும் வேணும், நான் அனுப்பிய ஆளுக்கு சம்பளம் நானே கொடுக்கிறேன், நீர் ஒரு துட்டாவது கொடுக்க வேண்டாம்.

ருஅாஎக-ஙு பிப்பிரவரியீ எ-உ

இப்படிக்கு
சவரிராயபிள்ளை

(இது:—புளியனாயிலிருக்கும் பிரியமுள்ள சகாயன் உபதேசியாருக்கு வருவது.)

(ஷை காகிதம் போய்ச் சேரவில்லை, நம்முடைய தம்பூர் திரும்ப வரவுமில்லை, J. D. S.)

---

†

பிரியமுள்ள தம்பி மரியசவரிமுத்துப் பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதி சமாசாரங்களையும் அறிய விரும்புகிறேன். சங்கத்திற்கு என் பிள்ளைகளெல்லாரும் வரும்போது நான் போகாதிருந்தால் பிள்ளைகள் தகப்பனில்லாப் பிள்ளைகள் போல ஐயாவைக் காணாமற் போச்சே யென்று பரிதாபப் பட்டுப் பேசுவார்கள், நமக்கும் மனத்திருத்தி யிராதென்றும், நமது புறம்பான காரியங்களெல்லாருங் கூடி யிருக்குந் தருணத்திற் பேசிக்கொள்ளலா மென்றும், இதனடுத்த சங்கத்திற் கூடுவதும் பேசுவதும் என் பெலகீனத்தினால் நம்பிக்கை யில்லை யென்றும் நினைத்து, நான் வருத்தப்

ப்டு நடந்து வந்தேன், கர்த்தர் கிருபையினாலே உங்களெல்லாரையும் கண்டது சந்தோஷம். கூனியூர் ஞானப்பிரகாசம்பிள்ளையைக் காணாதது மனஸ்தாபம். நாங் கூடி வந்தவர்கள் ஒன்றுக்கொன்று அன்பு ஐக்கியமுஞ் சமாதானமுமாய் எல்லாக் காரியங்களும் பேசித், தகப்பன் தாய்க்கும் மற்றும் விவாகஞ்செய்ய பிராயமானதுகளுக்கு இன்னபடி யென்று நிதானித்துத் தீர்மானிக்காமலும் மேற் கண்டதும் பேசினதும் மற்ற இனமுறையாரைக் கண்டது போலவும் பேசினது போலவுமே பேசிச் சிநேகிதர் பிரிந்தது போலவே யிருந்தது என் மனதுக்கு ஆறுதலில்லாத தவிப்பாயிற்று.

உம்மைப் பெற்று வளர்த்து, விவாகஞ்செய்து வைத்து, குழந்தையும் பெற்று உபதேசியாய்ச் சுறண்டைச் சேகரத்துக்கு உங்களனுப்பி யவர்களிடத்திற் சேரு மட்டும் நானுந் தாயும் அவரும் உனக்காக இன்பத்திலுந் துன்பத்திலும் வியாதியிலும் பட்ட பிரயாசங்கள் பணச்செலவுகள் யாதொன்றையும் நினையாமலும் நாங்கள் கொடுத்த பொருள்களையும் என்றுமதும் நினையாமலும்

இப்போ அனேகிருக்கிற இடுக்க வருத்தங்களுக்கு உதவி செய்யாதிருக்கிறோ மென்பதே உமக்கு வெறுப்பாயிருக்கிற தென்று திட்டமாய்க் காண்பிக்கிறீர்.

உனக்கு உத்தியோகமுண்டாய் வருமானம் வந்த நாள் முதல் நாஞ் சொன்ன புத்திகளைக் கவனித்து நடவாமற் போனது உனக்கு நஷ்டமுந் துன்பமும் எங்களுக்குக் கவலையும் மிகுத்து, உபகாரமு மில்லாதே போயிற்று.

இனிமேலாகிலும் உனது காரியங்களில் ஒழுங்காயும் புத்தியாயும் நடந்துவர உங்கள் இருவருக்குஞ் சொல்லுகிறேன். நாங்கள் இருவரும் இப்போ திருக்கிறோம், எங்கள் பெலவீனம் எங்களுக்குந் தேவனுக்குந் தெரியும், எவ்வளவு காலந் தேவனிருக்கச் செய்தாலும் எங்களால் ஒன்றும் உதவிக் கிடையில்லை, பிள்ளைகளால்த் தானுதவி வேண்டும், பிள்ளைகள் வருத்தமே மனக்கவலை,

எல்லாவற்றையும் ஆண்டவருக்கு ஒப்புவித்திருக்கிறதே மனத் திருத்தி யென்று மிருக்கிறேன், கர்த்தர் தமதிரக்கத்தினா லெல்லாரையுங் காப்பாராக.

இத்துடன் சகாயஉபதேசியாருக்கு எழுதிய காயிதம் வருகிறதைப் பார்த்து என் ஆசை நிறைவேற அவரிடத்திலிருக்கிற தம்பூரும் பாட்டுக் கையெழுத்துப் புஸ்தகமும் வாங்கி யனுப்பும், அதற்குக் கூலியாள் அனுப்பித்





சம்பளம் நீர்தானே கொடுத்து வாங்கி வைத்து எனக்கு எழுதும். இந்தகாரியத்தில் நீர் மற்றுங் காரியங்களுக் கெழுதியதுக்குக் கீழ்ப்படித லில்லாமற் செய்தது போல இதுகாரியத்தி லிராமற் சாக்கிறிதியாய் எனக்குக் கிடைக்கச் செய்வீரென்றும் நம்பி எழுதினேன். போய் வாங்கி வருகிற ஆளுக்கும் நானே கூலி கொடுத்து விடுவேன், அதின்பேரில் லெனக்கிருக்கிற பிரியம் அப்படி யிருக்கிறது.

இப்போது அடைக்கலபுரத்தில் தம்பி வீட்டில் இருக்கிறேன். நல்ல சுகமில்லாமலும் மனோக்கொந்தலினாலுந் துணைக்காள் ஆளில்லாமலுந் தாமிதப் பட்டேன். ௰-௳ ஊருக்குப்போவேன்.

குருவிகுளத்தில் உமது சிறியதாயார் தெய்வாயி யம்மாள் காலித பிப்பரவரியீ ௧-௳ சனிக்கிழமை மாலை மாறுமென்று கேட்டு ௭-௳ காலையிற் கேள்விப்பட்டோம், அவளுக்குவக துன்பமும் விசாரமுந் தீர்ந்தது கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

௲௮௱௭௰௩
பிப்பரவரியீ ௮-௳

இப்படிக்கு
சவரிராயன்

[இது:—அம்பாசமுத்திரம் உபதேசியாராகிய பிரியமுள்ள தம்பி ம. சவரிமுத்துப்பிள்ளைக்கு வருவது.]

---

௯—௳ ஓய்வுநாளாயிருந்தும் கோவிலுக்குப் போகவில்லை. பகலிற் சிலமருந்துங் கொடுத்தார்கள். ஒருதரம் வாந்தியும் கொஞ்சம் பேதியும் இருந்தது, வயிற்றில் வேற்றுமை ஒன்றும் இல்லை, இரவு நித்திரையில் பேதி யெடுத்தது மனதுக்கு மிகுந்த ஆயாசம்.

௰—௳ ஓமம் சுக்குக் கருக்குச் சாப்பிட்டேன். வித்தியாசமில்லாமற் சுகமாயிருந்தது. கொஞ்சஞ் சாப்பிட்டேன். இரவிற் சாமத்துக்குப்பின் இடையிற் பேதியாயிற்று. இதினிடையில்த் திருநெல்வேலியிற் சஞ்சீவி வாங்கி வந்த மருந்துஞ் சாப்பிட்டு வந்தேன்.

௰௨—௳ காலையில் டாக்கிட்டர் மாசில்லாமணியாபிள்ளையை சஞ்சீவி கூட்டிவந்தான். ஒரு மருந்து கொடுத்து ஒரு கருக்குக் கஷாயமும் சொன்னார் காலையிற் கனம் இஸ்பிராட் ஐயரவர்கள் தாவீதுப்பிள்ளை உபாத்தியாயரிடத்திற் சஞ்சீவிப்பிள்ளை யிடத்திற் சொன்னபடிக்குச் சொல்லி மருந்தைக் கேட்டுச் சொல்லென்றதாகச் சொன்னார். அதைப்பற்றி முதல் நானே என்னிடத்திலும் தமையனார்களிடத்திலும் பேசி யோசித்த படியினாலே யெல்லாந்

தேவசித்தப்படி நடக்குமென்று நிர்மாணித்து சம்மதித்தபடி ௰௨-உ சாயந்திரத்தில் ௸ கனம் ஐயரவர்களைப் போய்க்கண்டானாம், சுகசெய்தி கேட்டு முன் சொல்லியபடியே இப்போதே கல்விச்சாலையிற் போய் படி யென்றனுப்பினதாய் வந்தான். அந்தப்படிக்கு இங்கே சாப்பிட்டுக் கல்விச்சாலைக்குப் போய்ச் சேர்ந்தான். இது தேவகிருபையினாலே கனம் ஐயரவர்கள் மனதில் இரக்கமாய்க் கிடைத்தது. எனக்குப் பகல் அன்னப்பால் ஒருமணிக்குச் சாப்பிட்டது இரவில் வாயாலெடுத்தது, பேதி ஒரு போது மில்லை.

௰௩—உ விடியக்காலஞ் சவ்வரிசிக் கஞ்சி தேவசகாயம்பிள்ளை வைத்துத் தந்து பகல் ௮ மணிக்கு ௸ கசாயமும் வைத்துத் தந்து ௰௧-மணிக்குள்ளாக ௸ கஞ்சியும் வைத்துத் தந்து கல்விச்சாலைக்குப் போனது: இப்படிப் பிள்ளைகளெனக்கு பிள்ளைகளுக்குச் செய்கிறது போலப் பார்க்கிறார்கள் திருநெல்வேலித் தம்பி யேசுதாசபிள்ளையும் வந்து என்னைப்பார்த்தும் பட்சமாய்ப் பேசிக்கொண்டு அநுப்பிக்கொண்டு போனார்.

அம்பாசமுத்திரம் மேரியன்னம்மாளையும் கூட்டிக்கொண்டு ௰௪-உ நானும் மேரியன்னம்மாள் லீதியருளம்மாளும் வண்டியிற் புறப்பட்டு முனைஞ்சியிற் தங்கி ௰௫-உ காலை ஒன்பதுமணியிற் சுவிசேஷபுரம் வந்து சேர்ந்தோம், வெகு ஆயாசமும் பிலவீனமும் மிகுதியாயிருந்தது. மேரியன்னம்மாளுங் காய்ச்சலா யிருந்ததினாற் பிலவீனம், லீதியருளம்மாளுக்கு இருமல்; எல்லாருக்கும் பத்தியபாகமுஞ் சாப்பாடும் தலைமுழுக்குமாக வீட்டாள்களுக்கும் வருத்தந்தான். மழையு மிகுதி மூன்றுநாளாக. மன வேதனை சொல்ல முடியாது.

௰௬—உ கோவிலுக்கு முதலாய்ப் போக மேலாது, இரண்டு ஓய்வுநாள்களாயும் சுகவீனத்தினாற் கோவிலுக்குப் போகாதிருந்தது மனத்துக்கம்.

௰௭—உ பிள்ளைகளைக் கூட்டிப்போக வருவேனென்ற சாலமோன் வரவில்லை. ௰௮-உ யும் ௰௯-உ யும் பெரு மழை பெய்தது. ஐயர் கூடப் போயிருந்த யாக்கோபுபிள்ளையும் வந்தான். ஞானசவரிபாய்பிள்ளை, சஞ்சீவிப்பிள்ளை காயிதமிரண்டும் வந்தது.

---

†

கர்த்தர் தமதாவியைத் தந்தருளுவாராகவும்.

இதுவரையுங் கர்த்தர் கிருபையினாலே காப்பாற்றப் பட்டிருக்கிறோம். அவருக்கு ஸ்தோத்திரம். நான் பாளையங்கோட்டையிலிருந்து சீக்கிரம் பயப் புறப்படவும் த. சஞ்சீவியைத் தானே கொண்டு வந்து விடவும் யென்றிருந்தோம். ஐயா எழுதிய காயிதத்தில் பிள்ளைகளை விடுமுறைக்குக் கூட வண்டி வைத்துக் கூட்டிவரச் சொன்னதினால் என்னைப் பிலவீனமா யிருப்பதினால் கூடத்தான் போகவென்று தம்பி நிருத்தினான். அப்படிக் கிருக்க எனக்கு நல்ல சுகமில்லை, ஆகிலும் ஊருக்குப் பிள்ளைகளுடன் போவேனென்று துரிதமாய்ப் புறப்பட்டேன். இட்டம்புளி வண்டிக்காரனுக்கு ரூ உவ- வ்டகை பேசிக்கொண்டு ௰௭-உ புறப்பட்டு ௰௮-உ காலை ௯-மணிக்கு வந்தேன். வண்டி யெனக்குப்பிடியாமல் வாந்தியும் கிறுகிறுப்புமாய்ப் பட்ட அவதி மெத்த இருந்தது. வீட்டில் வந்தும் இரண்டுநாட் சுகமில்லை, வாந்தியும் கிறுகிறுப்பும். பின்பு தலை முழுகிச் சுகமாயிருக்கிறேன்.

மழை வாடையும் விசையுமா யிருந்தது. என் பிலவீனம் இப்போது சற்று திடமாயிற்று.

தம்பி தேவசகாயம்பிள்ளை எனக்கு ஒரு சோடு வேட்டி சிகரதம், பிலனுண்டாக ஒயின் பெட்டி ஒன்று ரூ உரு-க்கும் கையிற் கால்ரூபாயும் கொடுத்தனுப்பினான். என்னையும் நன்றாய்ப் பாராமரித்து மருந்து சாப்பாடுகள் முதலானது செய்து உபசரித்தார்கள் இரண்டு பேரும், மது பிள்ளைகளையும் கூடத்தான்.

இவ்விதத்துடன் கர்த்தர் கிருபையால் இந்த வதலி வந்து சேர்ந்தோம் இவ்விடத்தில்.

இங்கே வாடகைக்கு ரூ வீட்டில் ஒரு ரூ நான் கால் ரூ ௸ ஒரு ரூபாயும் ஆசவண்டிக்கு கொடுத்தது. பின் செலவுக்குங் கடனுக்கும் பணம் ஒன்றுமில்லைப் பிள்ளைகளைக் கூட்டிப்போக வருகிற ஆள்வசம் ஐயாவனுப்புவார்களென்றிருந்தோம். ஆள் வரவில்லை மழையாயிருந்ததினால். இப்போது எவ்விதமும் ரூ உவ-ம் அநுப்பினால் மெத்த உபகாரமாயிருக்கும், நானே சர்வதைச் செலவுக்கும் உதவும். விறகுதான் வெகு முட்டு, பிள்ளைகளுக்கும் எனக்கும் தண்ணீர் வெந்நீர் சாப்பாடு தலைமுழுக்கெல்லாம் நடந்து இதுவரையும் குறை யொன்றும் இல்லை. விறகுதான் முட்டு. தேவகிருபையால் யாதொன்றுங் குறைவில்லை.

உங்களெல்லாருக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௰௩ ௵ பிப்ரவரி ௴ ௨௰-உ

இப்படிக்கு
சவரிராயன்

[இது:—கல்லம்மாள்புரத்தில் வாசமாயிருக்குங் கனம் பொருத்திய மகாராஜேந்திர ஐயரவர்களுக்கு வருவது.]

---

௨௰—௳ நதரேந்திரஜயருக்குக் காயிதம் எழுதினேன் சுகசெய்திக்கும் வண்டிவாடகைக்கும். பிள்ளைகள் வந்து மிதவனையும் ஆள்விடாமல் போகவும் இல்லை. சாயந்திரம் சாலமோன் வசம் காயிதமும் வாடகைக்கு ௨௰-ம் நன்னாரிவேர்க் கசாயம் இவைகளை யனுப்பி பிள்ளைகளையும் இன்னாசியம்மாளையும் கூட்டிவரச் சொன்னார்கள். எனக்கு உதவியாய் இன்னாசியம்மாளை நிறுத்தி ஷை மேரியன்னம்மாளையும் லீகியருளம்மாளையும் ௨௨-௳ காலையிலனுப்பினோம். சாயந்திரமும் காயிதமும் ஷை யானும் வந்திருந்து ௨௩-௳ விடியக்காலம் ராப்போசனைச் சாமானுங் கொண்டு போனான். எனக்கு சற்று சுகம் வந்ததினால் கோவிலுக்கு ஆராதனைக்கு இரண்டு நேரமும் போய் வந்தேன். தேவசகாயம்பிள்ளை காயிதத்துக்குப் பதில் ௨௪-௳ காயிதம் எழுதினேன். ௨௫-௳ தவ்வாலில் அனுப்பினேன்.

---

✝

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்கு கர்த்தருடைய கிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவரும் நானுந் தேவயிரக்கத்தினாலே சுகமே யிருக்கிறோம். அப்படியே அவ்விடத்துச் சேமாதி சயங்களையு மறிய விரும்புகிறேன்.

கூனியூர் ஞானப்பிரகாசம்பிள்ளை வந்ததுங் காயிதத்தினா லறிந்தேன். அவரை நான் பாராததுதான் மனஸ்தாபம். அவர் வந்தும் அன்னம்மை வந்திருந்து அவர்கள் காரியங்களுக்கு என்ன ஒழுங்காயிற்று, அவர்கள் எவ்விதமாய்ப் போனார்கள்.

அரிசித் தழுப்ப னிவ்விடத்தில் விலை பார்த்ததில் குறைவில்லையாம். சீக்கிரம் பணம் வந்து உமக்குச் சேரும். அதைத்திரும்ப நகை செய்யாமல் அனுப்பி விட்டால் உமக்கு நலமாயிருக்கும், அல்ல வென்றால் உமக்குப் பணம் நஷ்டமும் ஆவலாதியும் வருமென்றும் நினைக்கிறேன். உங்கள் சிரியதாயாரைப் பற்றின துக்கம் உமது தாயாருக்கு மிகுந்ததா யிருந்தது, நான் வந்த கேவலத்தைப்பார்த்து அவளுக்கு ஆறுதலாய் இருந்தது. மூன்று நாளாய் எனக்காகப் பிறையாசப்பட்டாள், கூட இன்னாசியம்மா ளதிகம். எனக்குச் சீர பலனுண்டானபின் ஆறுதலாயிருந்தார்கள். கனம் உங்க ளண்ணாட்சி முதல் நாள் வந்திருந்தவர்கள் நான் வருமுன் காலமே போய் விட்டார்கள். மழையும் துயர்ந்தது, வரவேதுவில்லை, ஆளு மனுப்பவில்லை,



பிள்ளைகளு மவ்விடத்துக்குப் போகவில்லை. எட்டு நாளாக இங்குதானிருந்தது. நான் வெள்ளிக்கிழமை ஐயாவுக்கு சுகசெய்திக்கு எழுதினேன். ஆள் வந்து சனிக்கிழமை பிள்ளைகளைக் கூட்டிப்போயிற்று. ஷை ஐயர் எனக்கு வண்டிவாடகையும் நன்னாரிவேர்க் கசாயத்தில் மருந்து மனுப்பினார்கள். மூன்னாள் வந்த காயிதத்தில் தம்பி காப்பிக்கொட்டை வாங்கியனுப்புவே னென்றதை நம்பி யிருந்தோம், இப்போது மூன்றுநாளாய்க் கிடையாதது வருத்தமென்றார்கள். அது யிப்போதாவது ஒரு படி வாங்கியனுப்புவீராகப் பணம் வரும் சம்பழத்துடன். யாக்கோவுப்பிள்ளைக்குப் பெட்டிக்குச் சொன்னேன். பணம் மாற்ற ஆள் விடும்போதனுப்புகிறதாய்ச் சொன்னார். அவருக்கு அரைப்படி கொட்டை வந்ததிற் பாதி ஷை ஐயாவுக்கனுப்பினோம். எனக்கு நீர் கொடுத்த மருந்து சாப்பிடுகிறேன். ஈ-ஸ்ரீ மாசில்லாமணியா பிள்ளை யவர்கள் சொன்ன மருந்தும் பழம் ஐந்தும் வந்ததினாற் செய்திருக்கிறது. கர்த்தர் நம்மெல்லாருக்குந் தயவுள்ள கிருபை செய்தார் விசேஷமாய்.

பிலவீனம் இருக்கிறது, பொறுமை வேணும். கர்த்தருக்களை யாசேர்ப்பிப் பாரகே.

௲௮௱௭௰௩-௵ இப்படிக்கு
பிப்பரவரிமீ ௨௪-௳ சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம் பிள்ளைக்கு வருவது.)

---

௨௬—௳ ஷை தேவசகாயம்பிள்ளைக்கு விடுமுறை நேத்து முதல் எப்பிறல்மீ ௰௫-௳ வரையும் மென்றும் சிலநாளவ்விடத்தி லிருந்து வருகிறதாயும் தூத்துக்குடி சவரிராயபிள்ளை கடனுக்குப் பத்திரம் ௯௱-க்கு எழுதியும் ஷை ௯௯௫-ம் அனுப்புகிறதாகவும் எழுதிய காயிதம் வந்தது.

இன்று தவசுநாள்த்துவக்கம், எனக்கு உபவாசிக்கக் கூடாத பிலவீனம், அதினால் என் வீட்டில் விசேஷித்த நாளாகக் காணவில்லை. நல்லம்மாள் புரத்திலிருந்து மருமகனுக்கு கட்டுச்சாதங் கொடுத்ததாயும் தன்வீட்டில் வந்து சாப்பிட்டிருக்கிறதாயும் செய்தி.

௨௭—௳ யிரவு சாலமோன் வந்தவன் தங்கி, ௨௮-௳ கத்தரிகாத்து வாங்கி, ௨௮-௳ காலை போனான்.

௨௮—௳ ஷை ஞானப்பிரகாசம்பிள்ளை முன் வெட்டின கிணத்தைப்

பின்னுங் கொஞ்சம் வெட்டினார்கள். தகப்பனார் வீட்டில் வெள்ளிக்கிழமை நவமணி உபவாசஞ் சமையலில் ஷை யானுக்குஞ் சாப்பாடாம். மித்திரக் கூட்டம், உபதேசி உவாத்திகள் கனம் மதுரேந்திரஐயரும் வந்தார்கள். நமது வீட்டில்ச் சமையல் செய்திருந்ததில் ஷை ஐயரும் குதிரைக்காரனுஞ் சாப்பிட்டது. எனக்குக்கூட ஒருவரு மதியஞ் சாப்பிடாதது மனதுக்கு ஆறுதலில்லை என்றதினால் இன்னுசியம்மாளும் கிருபைபெற்ற மரியம்மாளும் சாப்பிட்டார்கள். இரவில் ஷை ஐயர் ஊருக்குப்போய் விட்டார். மூத்தமரிய வியாகுலத்துக்கும் எட்டய்யாவுக்கும் வைசூரியாம்.

௲௮௱௭௰௩-ளு மார்ச்சு௴ ௧-௳ சனிக்கிழமைமுதல்
சவரிராயபிள்ளை றிப்போறட்டு

௧—௳ எனக்கு சற்று பெலன் கொண்டதுபோலிருந்தது. தோட்டம் விளை இரண்டுக்குங் கூலியாள்விட்டு வேலி யடைக்கச் சொன்னேன். சாலமோன் இரவில் வந்து தங்கி காலை செமை ஷை ஐயர் உடுப்பும் கொண்டு போகவும் தாயாரையுங் கூட்டி வரவுஞ் சொன்னதாக வந்தான்.

௨—௳ காலையில் அம்மாள் போகவில்லை, யவன் போனான். இங்கே நற்கருணை பரிமாறும் நாளாயிருந்தது.

௩—௳ குருவினத்தத்தில் மரித்த தெய்வாயி நக்காயிதம் இடையன்குடித் தவ்வால் வழியாய் வந்ததுக்குத் தட்டு ௩-சேவகனுக்கு கொடுத்து வாங்கினேன்.

௪—௳ கல்லம்மாள்புரத்திற் போய்ப் பிள்ளைகளைப் பார்த்து வர என் சமுசாரத்தை யநுப்பினேன். ௫-௳ யும் ௬-௳ அங்கிருந்து

௭—௳ காலையில் வந்தாள். இன்று சம்பழக்கூட்டத்துக்கு கனம் மதுரேந்திரஐயர் வரவில்லை, யாற்கோட்டய்யர் காயிதமனுப்ப மறந்து போனார்களாம், ஒரு நேரமாகச் சாப்பிட்டோம், இரண்டாங் கிழமை.

௮—௳ சாலமோன் வசத்தில் மதுரேந்திரஐயர் கொடுக்கிற ௫-ம் வந்தது.

௯—௳ மூன்று வேளையும் கனம் ஆற்கோட்டய்யரவர்கள் தான் ஆராதனை நடத்தினார்கள். விசையநாராயணத்திலிருந்து வியாசப்பபிள்ளையும் தம்பியும் முதலாம் நாளில் வந்து, ஞானப்பிரகாசப்பிள்ளை யிடத்திற் பேசிக்கொண்டு, மலையாளத்தான் வீட்டிலும் விசாலனைப்பிள்ளை வீட்டிலுந் திரிந்து ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் போனார்கள். அண்டாப்பிள்ளை யிரவில் வந்து, மலையாளத்தான் வீட்டிலிருந்த ஞானப்பிரகாசம்பிள்ளை பயறு எடுத்து,



௰—௳ விடியக்காலம் போனார் அம்பாசமுத்திரம் சவரிமுத்துப்பிள்ளை காயிதம் எனக்கு வந்ததையும் அநுப்பினேன். அதிலவன் தமையனாருக்கு முற்காலத்தில் ௫௰-கொடுத்ததை மறந்து விட்டதானதுக்கு எழுதினான். சாயந்திரந் தேவசகாயம்பிள்ளைக்கும் சஞ்சீவிக்குங் காயிதம் எழுதினேன்: இதுவரையும் நானொன்றுங் கேட்டதில்லை, இப்போது ஒரு ரொட்டியும் காப்பி படி௨-யும் கேட்டெழுதினேன். திருநெல்வேலி ஏசுதாசபிள்ளை இடத்தில் எனக்குத் தருகிற ௫-யுண்டானதை வாங்கியனுப்பச் சஞ்சீவிக்கும் எழுதினேன். ௰௧-௳ தவ்வாலில் அநுப்பு.

---

/ †

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருங் கர்த்தருடைய பெரிதான இரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையுமறிய விரும்புகிறோம். நீங்கள் விடுமுறை யானதால் வருவீர்கள் சிலநாள் சென்றதினால் என்று நான் காயிதம் எழுதவும் நீங்கள் எழுதவு மில்லாதிருந்தது. அவ்விடத்துச் செய்தி யொன்று மிப்போ தெறிய விரும்புகிறேன். திருநெல்வேலித் தம்பியும் வருவேன் யென்றவர்க்கு விடுமுறை எப்போதோ, சஞ்சீவிக்கும் எப்போதோ: அவன் சீறுஞ் சுகமும் எப்படியோ.

கூனியூர்த் தம்பி காயிதமுன் வந்ததில் அவர் காரியங்களையும் மட்டுனப்பிள்ளை யவர்கள் தங்கட்கிவை அநுப்பிய விதமும் அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தது மிப்படியென் றெழுதாமல் வந்தது. கனம் இஸ்பிராட் ஐயரவர்கள் சுகமில்லாமல் வந்தவர்கள் இப்போது சுகமாயிருப்பார்களென்றும் நம்புகிறேன்.

மரியசவரிமுத்துப்பிள்ளை காயிதம் நேத்து வந்ததில் நானெழுதியதுக்குப் பதில் ஒன்றுமில்லைத் தமது சிறியதாயார் மரணத்தைப்பற்றி மாத்திரம் விபர மெழுதினார், மற்றக்காரியம் ஒன்றுமில்லை.

௱-ஸ்ரீ யாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்குக் கிருபைபெற்ற மரியம்மாள் காயிதம் எழுதினாள், அது தவ்வால்க்காரன் மி. அருளம்மாளிடத்திற் கொடுத்தானும், அது அவர்களிடத்தில்ச் சேர்ந்ததும் பதில். இன்னதென்றுந் தெரியவில்லை. நீங்கள் எப்போது வருவீர்களென்றும் பார்த்திருக்கிறோம்.

எனக்கு நல்ல சுகந்தான், இன்னுஞ் சிலநாளிருக்கத் தேவசித்த மிருந்

குமோவென்று நம்புதலாய்த் தோன்றுது, கர்த்தர் சித்தமாவதாக. இப்போது வழக்கப்படி சாப்பாடுதான். ஈ-ஸ்ரீ டாக்கிட்டர்பிள்ளை யவர்கள் சொன்ன மருந்தும், நீர் வாங்கித்தந்த மருந்துந்தான் சாப்பிடுகிறேன். வேறு மருவத்துக்கு இடமில்லை. ஒரு ரொட்டியும் இ-ப்படி காப்பியும் அநுப்பினால் சில நாளுக்கு எனக்காகும். சிலவுக்கு ஒருவருங் கொடுக்கக்காணோம் என்றும் பார்க்கிறதாயிருக்கிறது. எவ்விதமும் நடக்கிறது நடந்து வருகிறது வேறு விசேஷமில்லைக் கர்த்தர் எல்லாரையுஞ் சுகத்துடன் காப்பாற்றும்படி பிரார்த்தித்து வருகிறோம்.

உங்களெல்லாருக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௰௩
மார்ச்சு௴ ௰-௳

இப்படிக்கு
சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.)

---

௰௨—௳ கனம் ஐயர் மூன்று கோழிகள் எனக்கு அநுப்பினார். காலை மாலை செபத்துக்குப் போனேன்.

௰௩—௳ யாக்கோவுப்பிள்ளை விசையநாருயணத்துக்கு உத்தரவு வாங்கிப் போனான். மதியம் அவர்கள் தாயாரிடத்திற் போய்ப் பேசிக்கொண்டு பழைய கடனுக்கு முன் சொன்னதை நினைப்பூட்டி மகனிடத்திற் சொன்னதுண்டாவென்றுங் கேட்டேன். ஆம் சொன்னேன், அவன் தனக்குத் தெரியாது, மூத்த தமையமார்கள் ஒத்துக்கொண்டு கொடுத்தால் நான் கொடுப்பேனென்றும், அவர்கள் வரட்டும், அப்போது பேசுகிறது, முன்னேன் கேளாதிருந்து ஐந்து வருசத்துக்குப்பின்பு கேள்க்கிறதென்னவென்றுஞ் சொன்னானென்றாள்.

௰௪—௳ மீங்கிக் கூட்டமாக உபதேசி, உவாத்தி, வாத்திச்சிகள், கனம் ஐயர்மார்: ராப்போசனம் நடந்தது. இரவில் மதுரேந்திரஐயர் நமது வீட்டிற் தங்கியிருந்தார்கள். தருமதாசஞ்சீவியும் கூனியூர் தம்பி மகன் ஏசுதாசனும் வந்தார்கள். விடுமுறை முதல்நாளாம். ஷெ சஞ்சீவி ௨௬-தனது பணம் கொண்டு வந்தான். தேவசகாயம்பிள்ளை ஒரு ரொட்டி யனுப்பினதும் வந்தது.

௰௫—௳ எனக்கு இருமல் அதிகமாயிருந்தது.

௰௬—௳ ஓய்வுநாள் உபதேசியார்தான் ஆராதனை நடப்பித்தார் நான்



பிறந்தது முதல் இதுவரையும் தவசு நாள்களில் ஆடு கோழி தின்னாதிருந்து இந்தவருஷம் ௭௨-வயதில் கோழிக்கறி சாப்பிட்டது மனதுக்கு வெகு விசனமாயிருந்தது.

௰௭—௳, ௰௮-௳யும் நல்ல சுகமில்லை எனக்கு. ௰௯-௳ இரவில் ஆராதனைக்குப் போய் வந்தேன். பகல் மேலவீட்டில் வரவேண்டியதுக்கு அன்னம்மை யிடத்தில் கேட்டதுக்குப் பதில் என் மகன் அண்ணக்கமாருக்குப் போய் மூத்தவரிடத்திற் கேட்டு வருவே னென்றா னென்றாள்.

௨௰—௳ தருமதாசஞ்சீவியும் ஏசுதாசனும் விளையிற் காணம் பிடுங்கினார்கள். கனம் ஆர்க்கோட் ஐயரவர்கள் பிள்ளைகள் யாவரும் இளஞ்சுனைக்குப் போனார்கள், யாக்கோவுப்பிள்ளை போகவில்லை.

௨௧—௳ ஒரு சாணான் கொட்டிப்போட்டு ஆடம்பரமாய் வந்தான். கனம் ஆர்க்கோட்டய்யரவர்கள் கலியாணமுடித்து விட்டார்கள்.

௨௨—௳ கனம் மதுரேந்திரஐயர் காயிதம் வந்ததில் பிள்ளைகள்க்கு வசூரி வந்ததுகளுக்கு லேசாய்த் தீர்ந்தது, மூத்தமரிய வியாகுலத்து மகனிலையவனுக்குத் தான் சற்றதிகம் என்றெழுதினார்கள்.

௨௩—௳ உபதேசியார் காலை மதியம் வி. சத்தியநாத உபதேசியாரும் பிரசங்கம் சாயுங்காலமும் காலையிலுங் கனம் ஐயர் செபம்.

௨௪—௳ ஷெ ஐயர் போனார்கள் இளஞ்சுனைக்கு. ௨௫-௳ காலை பத்து மணியில் முனிசு தேவசகாயம்பிள்ளை வடக்குன்குளத்திலிருந்து வந்தான் சமுசாரங் குழந்தைகள் அவ்விடத்திலிருக்கிறார்களாம்.

௨௬—௳ இளஞ்சுனைக்கு ஊரிற் படிக்கிற பிள்ளைகளைக் கூட்டிப்போய் ஐயரவர்கள் விருந்து செய்தார்கள். காலையில் நான் கோவிலிற் செபம் இரவில் வி. உபதேசியார்.

௨௭—௳யும் ஷெ யார் செபம், இரண்டுநாளும் படிப்பில்லை. இடையன்குடியில் என் பேத்தி மருளம்மாள் ஏ-வது பெண்குழந்தை பெற்றது ௨௬-௳ என்றும், ஷெ அம்மாளுக்குச் சுகமில்லாதிருக்கிறதாயும் கேள்வி. ௨௭-௳ சுகமாயிருக்கிறதாகவுங் கேட்டோம்.

---

†

பிரியமுள்ள தம்பி சவரிமுத்துப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவரும் தேவயிரக்கத்தினாலே க்ஷேமம், அப்படியே

அவ்விடத்துச் சேமாதி சங்கதிகளையு மறிய விரும்புகிறோம். தாஞ் சாமுவேல்நாடான் வசமனுப்பிய கடிதம் வந்தது. அதில் தமது சிறியதாயாரைப் பற்றிய தன்றி நான் எழுதிய காயிதத்துக்கு பதிலாவது சகாயம் உபதேசியாருக்கு எழுதியதுக்காவது மற்றும் நமது விசேஷத்தாவது காணோம். உமக்கு என்பேரிலிருக்கிற அன்பானது எனக்குச்சரியான பதில் எழுத தடைப்படுகிறதாக்கும்.

இப்போது ஷெ சகாயனுபதேசியார் சிடத்திலிருக்கிற என் தம்பூரும் பாட்டுப்புஸ்தகமும் வாங்கி யனுப்பவும். அதற்கு வருஞ் சிலவு நான் கொடுக்கிற விபரமானது முந்தி எழுதியும் உமது மனம் வைத்தனுப்பாதிருக்கிறது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது.

நல்லம்மான்புரத்தில் கனம் ஐயரவர்கள் வீட்டிலப் பிள்ளைகளெல்லாருக்கும் ஒரு விதமா வைசூரி யுண்டாய்க் காப்பாற்றப்பட்டது. இடையன்குடி அருளம்மாள் ௨௨-௳ ஒரு பெண்குழந்தை பெற்றாள், சுகமாயிருக்கிறதாயுங் கேள்வி. விடுமுறைக்குத் தம்பிமார்கள் நமது வீட்டுக்குத் தேவசகாயம்பிள்ளை, தருமநாதன், கூனியூர் ஏசுதாசனும் வந்தார்கள். கூனியூர்த் தம்பி காயிதம் முன் வந்தது. அவருக்கு வரக்கூடாதிருக்கிறது அவர் துன்பம். இப்பொழுது எனக்கு இருமல் பதினைந்துநாளாய் உண்டாயிருக்கிறது. வேறு விசேஷமில்லை.

உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்,
கர்த்தர் எல்லாரையுங் காப்பாராக.

௲௮௱௭௰௩ — இப்படிக்கு
மார்சு௴ ௨௮-௳ — சவரிராயன்

(இது:—அம்பாசமுத்திரம் உபதேசியாராகிய ம. சவரிமுத்துப்பிள்ளைக்கு வருவது.)

---

௨௮—௳ சம்பழக்கூடுதல், கனம் மதுரேந்திரஐயரும் வந்தார், இரவு தங்கியிருந்தார்.

௨௯—௳ கனம் பிரட்டய்யரவர்கள் சீர்மைக்குப் போகச் சாமான்களை விற்கிறதாயும் கேள்விப்பட்டதினால் நானுமென்பிள்ளைகளும் மனஸ்தாபமடைந்தோம். ஏனென்றால் வெகு கால சிநேகமுள்ளவர்களும் அன்புமானவர்கள் இங்கே குறைந்து போகிறார்களென்பதினாலேயே. மதுரேந்திரஐயர் காலமே ஊருக்குப்போனார். அவர் மகன் ஏலியேப்பேத்துக்குச் சுகமில்லை என்



றும் சுகத்துக்கு டோஹ்னூருக்குப் போகாமல் நல்லம்மாள்புரத்துக்கு வர வேண்டுமென்றும் எழுதி வந்ததாம் அதுக்குப்பதில் இவ்விடத்தில் பிள்ளைகள் பெரியவர்களிலும் சிலருக்கு வைசூரி வியாதி யுண்டாயிருப்பதினால் வரக்கூடாதென்று யோசித்திருக்கிறோம். எனக்கும் தேவசகாயம்பிள்ளைக்கும் நீர்க்கொண்டதினால் சுகமில்லை.

௩௰—௳ ஓய்வுநாள் இரண்டுவேளை ஆராதனைக்கும். இரவே மழை பெய்தது மிருதியாய். சாயுங்காலம் நல்லம்மாள்புரத்துக்குப் போய் வரும்படிக்குத் தேவசகாயம்பிள்ளை போனார்.

௩௧—௳ சாயந்திரம்வந்தார். அங்கு இடையன்குடிப் பாக்கியம்பிள்ளையும் கூடங்குளம் கனம் சாமுவேல் ஐயரும் வந்திருந்து போனார்களாம். பெரும்பனைக்கு சஞ்சீவியை அரப்பு ஆகுவக்கு கற்கண்டு வாங்கி வந்து தேவசகாயம்பிள்ளைக்கும் பாதி கொடுத்தேன். வீட்டிலிருக்கிற கெருபாகம் ஒருவருக்குந் தெரிகிறதில்லை. பெண்பிள்ளைகள் சண்டை இந்த நாள்களிலுண்டாயிருக்கிறது சாத்தான் வருதல்.

மழை அடைத்துப் பெய்கிறது.

௲௮௱௭௰௩ ஏப்பிறல்௴ ௧-௳ செவ்வாய்க்கிழமை

௧—௳யும் மழைதான், ௨-௳யும் மழைதான். ஷெ தேவசகாயம்பிள்ளை வடக்குன்குளத்துக்குப் போய்ப் பாளையங்கோட்டைக்கும் போய்க் கனம் பிரட் ஐயரவர்கள் வியாதியினால் சீர்மைக்குப் போகிறதானால் போய்ப் பார்த்து வரவேண்டுமென்று போனார். திசையன்விளை கடைக்குச் சஞ்சீவி போய்வந்தான். ௩-௳ ஷெ யான் சாயுங்காலம் நாலுமணிக்குப் புறப்பட்டான் பாளையங்கோட்டைக்கு கனம் இஸ்பிராட்டய்யரை யனுப்பும்படிக்குப் போனான்.

௪—௳ பாடத்துக்கு உபதேசியார் உவாத்தியார்கள் கனம் மதுரேந்திர ஐயருடன் வந்தார்கள். இரவில் ஷெ ஐயர் நமது வீட்டிலுண்டான பேட்சு டைப்புச்சிலவு முதலானதுகளையும் கிருபைபெற்றாள்க்கும் பாக்கியம்பிள்ளை சாமுவேல்ஐயர் முதலானவர்கள் பேட்சுகளும் விபரமாய்ப் பேசிக்கொண்டது.

௫—௳ காலையில் போனார் நல்லம்மாள்புரத்துக்கு. முனிசிப்பிள்ளை தமது மகளுக்கு எழுதிய காயிதம் வந்தது: அவ்விடத்தில் முடக்குச் சுரம் அநேகருக்கு வந்திருக்கிறதாகவும், தமக்குக் கடன்காரரால் உபத்திரவங்களுக்கும் மிகுதி யென்றுஞ் செய்தி. கனம் ஆற்கோட்டய்யரவர்கள் சாயந்திரம் இழஞ்சுனைக்குப் போனார்கள்.

௬—உ டூ.பவுநான் உபதேசியார் தான் ஆராதனை நடத்தினார். அன்னம்மை யிடத்திற் கடன் காரியங் கேட்டதற்கு மூத்தவர் தனக்குச் சொல்லவேண்டும், அவர் தம்பி கொடுக்கவேண்டியது, கொடுக்கத்தான் வேண்டியது, என் வீதப்பணம் அவர் மகன் ஞானிசு தேவசகாயம்பிள்ளையை எங்கள் தகப்பனார் கல்லறையிற் போட்டுத் தாண்டினாற்றான் கொடுப்பே னென்றுஞ் சொன்னதாகவுஞ் சொன்னான், செபமணியாபிள்ளையும் அறியத்தான். இரவிற் சாமத்தில் விசையாருயணத்து வியாகப்பபிள்ளை சகோதரர் இரண்டு பேருடன் வந்து யாக்கோவை யாள் விட்டு எழுப்பினார், ஷை யான் யெழுந்திராமற் போனதினால் ஊருக்குடனே போய்விட்டார்கள். ௬-உ இரவில் எனக்கு இருமலுக்கு மருந்துகள் சாப்பிட்டுஞ் சுகங் காணவில்லை. இதினால் மருந்து வேண்டாம் என்று தீர்மானித்தேன், ௯-உ முதல்.

௯—உ இரவில் பாளையங்கோட்டைக்குப் போயிருந்த சஞ்சீவி வந்தான். திருநெல்வேலியில் அவர்கள் அன்றாட்சி காயிதமும் ௯-ம் வந்தது எல்லாருஞ் சுகந்தானென்றும் அவர் மனவி யன்னம்மைக்குப் பிள்ளைப் பெற்றநாள்முதல் வாதவலி யிருக்கிறதாம், ஷை யாருக்கு உதவிக்கு ஆளில்லாததினால் விடுமுறைக்கு வர வேதுவில்லை யென்றெழுதினார்.

௰—உ கூடுதலுக்கு சுனம் மதுரேந்திரஐயர் வந்து போனார். அப்போது அவர்கள் வீட்டில் வகுரி வியாதிக்காரராய்ச் சிலரிருப்பதினால் பண்டிகைக்குக் கிடாய் அறுக்கக்கூடாதென்றேன். அப்படியும் சொல்வதற்குப் பார்த்துக் கொள்வோமென்று போனார். இரவில் நமது கிடாயிருந்தாப்போலே வியாதியினாற் றள்ளி விழுந்து சாகிறது போலிருந்ததினால் இரவில்தானே அறுக்க வேண்டியதானது எல்லாருக்கும் மனஸ்தாபமா யிருந்தது; பாடு பட்ட நாளானதினால்.

௰௧—உ கிறிஸ்து நாதர் பாடுபட்ட திருநாளாசரித்தோம். அன்று சம்பழங் கொடு ஒரு ஆள்வசத்தில் ரண்டு சந்தக்கறி கல்லம்மாள்புரத்துக்கு ஐயர்க்கனுப்பிற்று, காயிதம் எழுதிப் பதிலும் வந்தது.

௰௨—உ தருமநாத சஞ்சீவி போயிருந்து இரவில் வந்தான். பாறைச் சாலைக்கிறிஸ்தவன் பவுல்ப்பிள்ளை யென்ற மனிதன் யாசகத்துக்கு வந்ததுக்கு சுனம் ஆற்கோட்டையர் ௨௰-கொடுத்ததாகவும் கேள்வி. பாடு பட்ட நாளில் இராப்போசனமும் ஆராதனையும் மூன்றுவேளையும் நடத்தினார்கள்.

௰௩—உ உயிர்த்தெழுந்த பண்டிகையும் அப்படியே நடந்தது. செபத்தியாயியும் நாலு பிள்ளைகளும் நமது வீட்டில் வந்தார்கள். இன்றுதான் ஷை கடாய்க்கறி சிலவிட்டது. நமது வீட்டில் ஒரு முருங்கைமரமும் முறிந்து



விழுந்தது காற்றினால். ஷை செபத்தியாயி யிருந்து கொண்டாள் காமினி யென்ன சொல்லுகிறது, நமக்கு மூப்பதிகாரம் இல்லை, அவன் தம்பியும் நம்மிடத்திலிருக்கிறான்.

௰௪—உ ஷை யாக்கோவுப்பிள்ளை ஒரு கடாய் கொண்டு வந்ததைத்தான் கல்லம்மாள்புரத்திற் கடாய் அறுக்கவில்லை, ஷை யாருக்குக் கறி குடுக்கவும் அவனுக்கு மனம் இல்லை. இரவில் என் மூத்தமருமகளும் எட்டுவாரட்டும் காலமோனைத் துணைக்குக் கூட்டி வந்தார்கள். தோசையும் பழமும் கொண்டுவந்தார்கள். ஷை செபத்தியாயியும் அவள் தமையன் ஞானப்பிரகாசம்பிள்ளையும் யாக்கோவுப்பிள்ளையும் தனித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள் தெருவில் வெகுநேரமாய்.

௰௫—உ ஷை யார்கள் செய்தி யின்னதென்றுந் தெரியவில்லை. வேறு அணைக்கரை வியாகப்பபிள்ளை நம்பிகுறிச்சி முதலி சுப்பிரமணியன் வசம் ஒரு பத்திரம் தனது நிலங்களை கன்னான்குளம் வயல் விளைந்ததை எழுதி மற்றக் கடன்காரனை எத்தலாம் என்று வைத்ததாகவும், இவர் பணம் வாங்காமல் எத்தாக எழுதிக் கொடுத்திருந்த பத்திரம் வாங்கின ஷை முதலி இவர்கள் மூவரையும் எத்திச் சில ஆள்க்களைச் சேர்த்து ஷை யார்கள் வயல் விளைச்சல் யாவற்றையும் அறுத்துத் தனக்காக்கிக் கொண்டதாகச் செய்தி ஷை யான் ஒருவன் அவகடஞ் செய்யப் பார்த்தது சகோதரரான யாக்கோவு மரியவியாகப்பன் எல்லாருக்கும் கஸ்டம் வந்தது. ஷை முதலி எல்லாரையும் கொள்ளை யிட்டான். காயிதாச் சட்டப்படி செய்து இருக்கிறான், ஷை விசார்ணைப்பிள்ளை மக்கள் எல்லாரும் அக்கிரமத்தில் நடப்பட்டவர்கள் பாவமிப்படியென்று நினைத்தேன். என்னையும் மனவி பிள்ளைகளையும் நன்றி யற்ற விதமாய்த் தூஷணித்தபின்னை மக்களில் ஷை செபத்தியாயி நமது வீட்டில் மூன்றுநாளாய் வந்திருக்கிறது எவ்வளவு லெட்சை. நாங்கள் எங்கள் வறுமையிலும் அவர்களுக்குச் செலவு செய்தோம் பெருமையினாலும் ஆங்காரஞ்செய்தவர்களுக்குப் பதில் செய்ய மனமில்லாமலும்.

௰௬—உ காலையில் ஷை செபத்தியாயி பிள்ளைகள் பழயது சாப்பிட்டுப் போனார்கள் ஊருக்கு. இருக்கச் சொல்வாரில்லை. சஞ்சீவி கிசையன்விளைப் பெருங்கடைக்குப் போனான். ஷை முத்துக்கன்னு செட்டியார் குமாரன் சிவசுப்பிரமணியனுக்குக் கலியாணம் நிச்சயித்துத் திருமங்கிலியத்துக்குப் பொன்னிட்டார்களாம்.

௰௭—உ அமுதுபடித் தட்டாகி நெல் வாங்கி வந்து அமுதாகவேணு

மென்று யாக்கோவுப்பிள்ளை யிடத்தில் நாலுமரக்கால் நெல்க்கேட்டும் பேசாதிருந்து விட்டான் அவன் தமையனோர் மூத்தவர் முதல்கள் இரவில் வந்து காலம்பெற போனதாய்ச் செய்தி நவெள்ள பிள்ளை மூன்றுநாளாய் வந்து மலையாளத்தாள் வீட்டி லிருக்கிறாராம். ஷெ வி. பிள்ளை மக்கள் எல்லாரும் பெருமபடியான அக்கிரைக்குணம் வினை விளைக்கிறது. யாக்கோவுப்பிள்ளை, கனம் ஐயரவர்களுத்தாவுப்படிக்கு பங்களாவில் இருந்து மரமத்து வேலை நடப்பிக்கிறான் சாயுங்காலம் என் மூத்தமருமகனும் போனும் நல்லம்மாளபுரத்துக்குப் புறப்பட்டார்கள். கூடத் தருமதாசசஞ்சீவியும் கூனியூர்ப் பேரன் ஏசுதாசனும் போனார்கள் வந்த ஆளுங்கூட.

௰௮—௳ வெள்ளிக்கூட்டமில்லை உபதேசிமாருக்கு. பின்பு சாயுங்காலம் ஷெ சஞ்சீவியும் ஏசுதாசனும் வந்து முருகன்குறிச்சிக்குப் படிக்கப் போக எத்தனித்தார்கள். ஷெ சஞ்சீவிக்கு நான் சாயங்காட்டின வேட்டி இரண்டும் யாக்கோவுப்பிள்ளை ஒரு புள்ளிச் சட்டையும் கொடுத்துக் கட்டுச்சாதமும் செலவுக்குக் கையில் ரண்டு துட்டு மாத்திரம் கொடுத்தது. ௰௯—௳ விடிகாலம் போனார்கள். பத்துமணிக்கு கனம் மதுரேந்திரஐயர் வந்தார் உபதேசி உவாத்திகள் கூட்டம் முடிந்து காத்து மிருதியான நினைவில் இருந்து விடிகாலம் அதிசயபுரத்துக்குப் போனார் அங்கே ராப்போசனம் கொடுக்க. ஆர்க்கோட்டய்யரவர்கள் சடையன் ஏறியில்.

௨௰—௳ ஓய்வுநாள் மூன்று வேளையும் மோசே உபதேசியார் ஆராதனை நடத்தினார்.

௨௧—௳ கனம் ஐயரவர்கள் இழஞ்சுனைக்குப் போனார்கள், சாயங்கிரம் தேசாந்திரம் போதிக்க மோசே உபதேசியார் போனார்.

௨௧—௳ காலை மாலை விசாரணை உபதேசியார் செபம்.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குக் கர்த்தருடைய கிருபை யென்மேலும் பெருக உண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சுகமே யிருக்கிறோம் அப்படியே அவ்விடத்துச் சேமாதி சயங்களையும் அறிய விரும்புகிறோம்.

தாமிவ்விடத்துக்கு வந்தது சந்தோசமாகிலுஞ் சுகமில்லாதிருந்ததும் மழையோடு போனதும் வழியில் மழையில் வருத்தப்பட்டுப் போனதும் கனம் இஸ்பிராட் ஐயரவர்களைப் பார்க்கக் கூடாமலிருந்து விட்டதும் எங்களுக்கு உண்டான கலக்கம் மிகுதியாயிருந்தது போன தவ்வாரவை



யும். சனிக்கிளமை மதியத்துக்குப் பின்னறிந்தேன் சமுசாரங் குழந்தைகளுடன் வந்து சுகமே யிருக்கிறதாக மனதுக்கு ஆறுதலாயிற்று.

நீர் வடக்குன்குளத்திலிருந்து ஷெ ஐயரைப் பார்க்கக்கூடாமல் போன முகாந்திர மென்ன, உமக்கு நல்ல சுகமிருந்ததா, அவ்விடத்தில் யாவருஞ் சுகமாயிருக்கிறார்களா, உமது பேரில் சந்தோஷமாயிருந்ததும் அல்லது சிறுவை சுமத்தினது முண்டா, பண்டிகை கொண்டாட்டமா.

வரும்போது சந்தோஷத்துடன் வழியில் விக்கினமின்றி வந்து சேர்ந்தீர்களா. இது முதலிய விசேஷங்களும் நமது விளையில் இந்த வருஷத்து வருமான மேதாவதுண்டா, மாப்பிள்ளை சின்ன ஞானப்பிரகாசம்பிள்ளையவர்களிடத்தில் பணம் செலுத்தி ரசீது வாங்கினவர்கள் பட்டா வாங்கினார்கள், அவர்களுக்கு நான்பணம் செலுத்தவேண்டுமே, ஷெ விளைவை இரங்கிப் பார்த்தீரா, ஷெ தேவசகாயம்பிள்ளை யிடத்தில் பேசி அவனை நீக்கிச் சிலகாலம் வேறாரிடத்தில் ஆவது இறைக்கூட்டுக்குக் கொடுத்து அடைஓலை பிறப்பிக்க யோசித்த தெப்படி, பின்னும் செபத்தியாய்ப்பிள்ளை எழுதித்தந்த மனைக்காரியத்தைப்பற்றி உமது சகலன் சவரிமுத்துப்பிள்ளை யிடத்தில் யோசித்துக் கொண்டதும் ஏதாவது செய்ததுமுண்டா வென்பது முதலிய மற்று மவ்விடத்து விசேஷங்களும் விபரமா யறிய விரும்புகிறேன்.

எனக்குக் கண்ணொளி மங்கலும் தாயாருக்கும் மிருக்கிறதுடன் மனக்கவலையும் இருக்கிறது, நமது வீட்டிலுங் கனம் ஐயர் வீட்டிலுமுள்ள குமரு காரியங்களுங் கடாறும் வழியுங் காணோம்.

இப்போது இந்தவருசம் பெரியதிருநாள் விசேஷ விருந்து நமது வீட்டில்தான் முக்கியமாய் நடந்தது. நமது வீட்டில் இருந்த பெரியகடாய் அறுத்ததுக்கு பின்பு நாலாம்நாள் யாக்கோவுப்பிள்ளை கடாய் ஒன்று ஆள்கள் விசேஷமாய் வராத ஆளெல்லாம் வந்தது; விசையநாராயணம் செபத்தியாயி நாலுபிள்ளைகளுடன், கனம் மரியம்மாள், எட்வொர்ட், சாலமோன், சஞ்சீவி, கூனியூர் ஏசுதாசன் பின்னும் வழக்கமாய் வாராதுகள், நமது வீட்டிலிருக்கிறதுகள் ஆக இந்த வருசம். போனவருசம் ஐயர் வீட்டில் நடந்ததுக்கு நான் சற்று மனஸ்தாபப் பட்டேன். இது எனக்குக் கட்டாயமாய் வந்து நடந்தது. செலவும் வரவில்த்தான், கடனில்லை. மனவேதனை தான்.

இப்போதிவ்விடத்தில் நெல்கோட்டை விலை ரூந்துக்கு விற்கிறது வாங்கப்பணமில்லைச் சாப்பாடு வருத்தமாயிருக்க நேரிட்டது. இனி எங்களுக்குத்தான் குறைச்சல், இப்போது நல்ல தரிசனுங் கிடைக்கிறதில்லை

எனக்கு நல்ல சுகமுமில்லை, ஒன்றுபோனால் ஒன்று சுகவீனமாகிறது, கர்த்தரின் சித்தப்படி யாவதாக.

அம்பாசமுத்திரத்து தம்பிக்குஞ் சகாயம் உபதேசியாருக்குங் காயிதம் எழுதி விட்டேன். ஷ தம்பிக்குச் சேர்ந்ததுக்குப் பதில் உத்தரவு சரியா யெழுதாமலும் செய்யாமலும் சிறியதாய் மரணத்தைப்பற்றி மாத்திரம் எழுதினார்.

இது முன்னும் நான் எழுதுவதுக்குக் கீள்ப்படிதலில்லை. ஆதலால் நான் அவனுக்கு மதிப்பில்லை, இனி நானெழுதமாட்டேன், நீராவது எழுதி போகிற வருகிற ஆள்ப்பார்த்து அவருக்கனுப்பும், அப்பால் அவர் செய்தியறிவோம்.

இப்போது பாளையங்கோட்டையிலும் முடக்குச்சுரங்கள் நடக்கிறதாய்க்கேள்வி. ஆண்டவரிடத்தில் நமக்கு வேண்டிய பெலத்தையும் சுகத்தையும் கேட்டுக்கொண்டு அந்தவியாதி வரு முகாந்திரங்களை விசாரித்து எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். முனிசப்பிள்ளை காரியம் நாம்பேசிக்கொண்டதை நினைப்பூட்டுகிறேன். வேறுவிசேஷமில்லை. கர்த்தர் எல்லாரையுங் காக்கக்கடவது.

௲௮௱௭௰௩ ௵ இப்படிக்கு
எப்பிறல்மீ ௨௧-௳ சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.)

௨௨—௳ நான் தேவசகாயம்பிள்ளைக்குக் காயிதமனுப்பினேன்.

௨௩—௳ ஷ யார் காயிதம் வந்ததில் முடக்குச்சுரம் யென்ற வியாதியவ்விடத்தில் நடக்கிறதாம். வடக்குன்குளத்தில் மாப்பிள்ளை இராக்குளம் சவரிமுத்துப்பிள்ளை வீட்டில் கன்னல் களவு நடந்து ௫௦-க்கு பணம் நகை போனதாம். தாம் ஷ கோயிலிச் சாணார் பக்கத்திலப் போயிருந்து அவர்கள் பூசைகளைப் பார்த்ததாகவும், வெள்ளாளர் தங்கள் பக்கத்திலும் வந்திருந்து பார்க்கச்சொன்னதாகவும் சாணாற்கு வேறு சுருபமும் வெள்ளாளருக்கு வேறு சுருபமும் வைத்து முத்தி செய்ததாகவும், தெருவிற் சுருபம் எடுக்காமலும் பாட்டுகள் பாடுகிறதும் நிறுத்தப்பட்டதாகவும் எழுதினார். தருமநாதசஞ்சீவி காயிதமும் வந்தது: அட்சக்கூடத்துத் தெய்வசகாயம்பிள்ளைக்கு முடக்குச்சுரமாம். முனிசுப்பிள்ளை கிருபை பெற்றாளுக்கு ஒரு காயிதமனுப்பினார்கள்.

௨௪—௳ சம்மனசியாப்பள்ளிக்கூடச் சோதனைக்கு யாக்கோபுப்பிள்ளையும்



விசாரணை உவாத்தியாரும் போனார்கள், கனம் ஐயரவர்க ளவ்விடத்தில் இருந்தார்களாம். இராயப்பர்கோவு நல்லம்மாள்புரத்திற் தங்கி ௨௫-௳ காலையில் வந்தான்.

௨௬—௳ காலையில் இழஞ்சுனைக்குப் போயிருந்த கனம் ஐயரவர்கள் அம்மாள் பள்ளிப்பிள்ளைகள் யாவரும் வந்து சேர்ந்தார்கள். தேவசகாயம்பிள்ளை எனக்கு ஒரு ரொட்டியனுப்பினார். காப்பிச்செலவு அதிக மாகிறதும் அந்தவழக்கம் பின்னுக்கு வருத்தமு மாகுமென்று நான் வேண்டா மென்றேன். மற்றவர்கள் இப்போதிருக்கிற பெலவீனத்துக்குப் பால் விட்டு கொஞ்சம் சாப்பிடுகிறது நல்ல தென்றார்கள்.

௨௭—௳ சாலமோன் ஷ ரொட்டி நல்லம்மாள்புரத்துக்கு வழக்கமாய் வருகிறதென்று கொண்டுபோய் விட்டான். காலை யாராதனை கனம் ஐயரவர்கள் ௨௬-௳ காலையில் வாசிக்கிறதை மறதியாய் வாசித்தார்கள். மதியமலர்களில்லை. உபதேசியார் பிரசங்கம். இராவிற் கனம் ஐயரவர்கள் செபம் வாசிப்பு உபதேசியாரும்.

௨௮—௳ இரவில் எனக்கு வாந்தி யெடுத்தது விக்கலுங் கொட்டாவியுமாய்ப் பாளையங்கோட்டையிலுண்டானது போல இருந்தது. ௨௧-௳ யும் மிகுந்த ஆயாசங்கண்டது. ௬௨-௳ சுகமாயிற்று. வேதநாயக சாஸ்திரியார் மக்கள் கூட்டம் விசயநாராயணத்திலிருந்து வந்தார்களிரவில்.

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவபிரசாதத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையும் அறிய விரும்புகிறோம்.

தமது கடிதம் விபரமாய் வந்தது பார்த்து சந்தோஷமானோம். விசேஷமாய் நீங்கள் சுகத்துடன் வந்து சேர்ந்ததே பிரதானம். அவ்விடத்தில் முடக்குக் காட்சலுக்கு உண்டாகிற முகாந்திரங்களென்ன, அது வரித்து [illegible]மாயிருக்கத் தக்க வழி பார்க்க வேண்டும். போனதவாவில் ரொட்டி [illegible]பினது வந்தது. அதைச் சனிக்கிழமை யிரவு நல்லம்மாள்புரத்துக்கு வழக்கமாய் வருகிற ரொட்டி யவர்களுக்கு வரவில்லை, நீர் கொடுத்ததைத் தெரியாமல்ச் சாலமோன் எடுத்துப்போய்விட்டான். அதற்குப் பதில் [illegible]

வந்தது. ௨௮-௳ இரவில் பாளையங்கோட்டையில் எனக்கு வயால் எடுத்து வயிற்றாலும் போயிற்று, பித்தவாய்வுதான், விக்கலும் கொட்டாவியும் வந்திருக்கிறது. இப்போது அதற்கு ம·ஸ்ரீ மாசிலாமணிபிள்ளையவர்கள் சொன்ன மருந்து செய்யலாமென்று நினைக்கிறேன்.

அதற்கு காறுபழம் வாங்கியனுப்பினால் செய்து சாப்பிட்டால் சுகமாகுமென்று யோசனையிருக்கிறது. முனிசுப்பிள்ளை வீடு ஓட்டைவீடானதினால் அவர்களிடத்திற் கேட்டு வட்டில் செம்பு குத்துவிளக்கும் வாங்கி நமது வீட்டில் வைத்துக்கொள்ளவும்.

எனக்கு நீர் ௴ க-க்கு ௲-௫-கொடுத்துவிடு வேறொன்றுக்கும் ஒருவருமிடத்திலும் வீட்டிலும் வருகிறதில்லையென்று முன்னவ்விடத்தில் வந்திருந்து கடைசியாய்ச் சொன்னபோது ஆமென்றீர். அது விளையாட்டைப்போல நினைத்துச் சொன்னீரோ. அதற்கு பின்னிவ்விடத்துக்கு வரும்போது நீர் தந்ததென்ன, அதின் பின்னனுப்பின ரூவாயென்ன.

ஏசுதாசனுக்குப் பள்ளிக்கூடத்திற் சாப்பாட்டுக்காவது ௲-௨-௫-கொடுக்கிறதுடனே என் செலவு வருத்தமறிந்து அவனுக்காக வாகிலும் உதவி செய்யவில்லை. நானுங்களை வேதினைப் படுத்தப்படாது, உங்கள் மனம்போல நமக்குச் சந்தோஷஞ் செய்வார்களென்றே யிருக்கிறேன். கனம் மதுரேந்திர ஐயரிடத்தில் நான் ஒருக்காலும் ஒரு காசாவது கேட்டதில்லை. அவர் என் தன்மையறிந்தும் அவர் மனதில் நியமித்தபடி ௴-௲- ௫-௲- குறையாமல் அனுவல் வந்தகாலமுதல் விதுவலாயும் செய்துவருகிறார். அவருக்கு என்னால் கிடைத்ததென்ன. உங்கள் நானுபேரிலும் அதை நினைத்துக் கொள்ளவும். வெகுகாலம் அவருதவி யெங்களுக்கு உங்கள் உதவி சொற்பகாலமிருக்கலாம். அது ஆண்டவர் சித்தம் நமது செல்வம் அதிகம் பேசப்பிரியமில்லை பெரியவிடத்து சம்பந்தஞ் செய்ததினால் நீர் கொடுக்கிறதைத் திட்டப்படி ௴ தோறு மனுப்பவேண்டியது. அப்பா ரூங்கள் மனம்.

இவ்வளவு எழுதினதுதானு முன்னமே கொஞ்சங் கடனிருந்தது வருத்தமாயிற்று. இது முன் திருநெல்வேலி ஏசுதாசபிள்ளை ௲-௰-சஞ்சீவி வசமனுப்பினார். மற்றுங்காரியங்களை பின் பெழுதுவேன். வேறு விசேஷமில்லை.

நஅாக-௫௫ இப்படிக்கு
மெய்௴ க-௳ சவரிராயன்

[சஞ்சீவிக்குச் சொல்லும் வருகிறதவ்வாலில் காயிதம் எழுதுவேன்.

[இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவ



272

சகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.]

---

மெய்௴ க-௳ வியாழக்கிழமை

முதலாந்தேதி திருநெல்வேலிக்குமாரன் ஏசுதாசபிள்ளைக்கு ஆறுமாசத்துக்கு முன் காயித மெழுதி யிருக்கும், பின் மனஸ்தாபத்தினால் சிலகாலம் எழுதாதிருந்தேன். அவர் தாமே ஒரு காயிதமெழுதி ௲- பத்துந் தம்பி சஞ்சீவி வசமனுப்பினார். பின்னும் ஒரு ௴ சென்றபின் இன்றைக்கு ஆகிலும் எழுதுவோமென்று ஒரு காயிதம் எழுதினேன். தேவசகாயம்பிள்ளைக்கும் எழுதினேன், ௨-௳ தவ்வாலில் அனுப்பினேன். இங்கே மாசாந்திரக் கூட்டம், கனம் மதுரேந்திரஐயரும் வந்தார், விசையநாராயணத்திலிருந்து நெல் ஒரு வண்டி வந்தது அவர்களுக்குச் சாயுங்கால வரை பங்களாவிலிருந்து அஸ்தமிக்க நமது வீட்டில் வந்து இருமைபெற்ற மரியம்மாளுக்குக் கலியாணம் தனித்துத்தான் நடத்லாம் போலப் பேசி, யென்னை நல்லம்மாள்புரத்துக்கு வரவும் சொன்னார், பின்பு தாமதாடக் காலமில்லையென்று போனார் ஊருக்கு. சாஸ்திரியார் கூட்டத்துக்குப் போய் விசாரிக்கவில்லை. ௩-௳ ஆள்வந்து நெல்கொண்டு போனார்கள்.

௪-௳ இவ்விடத்தில் நற்கருணை பரிமாறப்பட்டது, ஞானசிகாமணி சாஸ்திரியார் முதலானவர்களுஞ் சேர்ந்தார்கள்.

௫-௳ கனம் ஐயர், யாக்கோவு, விசாரணை உபாத்தியாரும் கிழ்சேகரம் பள்ளிக்கூடச் சோதனைக்குப் போனார்கள். நான் சஞ்சீவிப்பிள்ளைக்கு காயிதம் எழுதினேன்.

௬-௳ ஷை காயிதம் அனுப்பிற்று. கடைச்செலவு வாங்கி வரக் கூலியாள் விடவேண்டியதாயிற்று, அவ்வளவு பலவீனம்.

௭-௳ புதன்கிழமை தவ்வால்க்காரன் வரவில்லை, அவன் பாளையங்கோட்டையிற் றானே முடக்குச்சுரம்.

௮-௳ கனம் ஐயர், யாக்கோவுப்பிள்ளையும் வந்தார்கள். ஞானமுத்து சேவகனுக்கு இரண்டாந்தாரம் நாஞ்சிநாட்டிலிருந்து ஒரு பெண்பிள்ளை வேதக்காரியாய் சிறப்பத்தில் விவாகஞ் செய்தவன் இறந்து போனவள் மூன்று ஓலை அறிக்கையிட்டு இங்கே கனம் ஆற்கோட் ஐயரவர்களால் விவாகம் நிறைவேற்றப்பட்டதுக்கு நானும் அறிவுசாட்சி கையொப்பம் வைத்தேன்.

௯-௳ உபதேசி உபாத்தியார் கனம் ஐயன்மார்கள் கூட்டம், இராப்போசனம் நடந்தது; மதுரேந்திரஐயரிருந்தார், இரவில் சாஸ்திரியார் சதுர்ப்

பிரசங்கம் பள்ளிக்கூடத்தில்: சனம் ஐயரவர்கள் கிலவு.

௰—௳ மதுரோந்திரஐயர் கல்லம்மாள்புரத்துக்குப் போனார்.

௰௧—௳ ஓய்வுநாள் வழக்கப்படிக்கு ஆராதனை பிரசங்கம். என் சமுசாரம் காதிலிருந்து ஒத்தை மேலீடு தெரியாமல் விழுந்து போயிற்று. அது போகிற காலமென்று தேடிப் பார்த்திருந்தோம், கிடைக்கவில்லை. ௰௨-௳யும் விசாரித்துப், போனது நகை பொருளல்லவென்றிருந்தோம்.

௰௩—௳ சனம் மதுரோந்திரஐயர் ஆலோசனை சங்கமென்று வந்திருந்து சாயங்கிரம் போய்விட்டார்.

௰௪—௳ ௰௨-மணிக்குமேக்ச் சபைச் சங்கவரி எழுதினது: என்போால் ஆஉவ்-மன்வி அரிசிக்கலையத்துக்கு ரூ.இ-வீட்டுக்காரி பேராலும் எழுதினது சஞ்சீவி காயிதமும் ரூ௨-ம் ஷை காயிதம் ஒன்றும், ஞா. ஞானப்பிரகாசம் பிள்ளை காயிதமும் வந்தது.

௰௫—௳ மதுரோந்திரஐயர் இடையங்குடிக்குப் போயிருக்கிறதாகச் செய்தி. பின்பு நான் தேவசகாயம்பிள்ளைக்குஞ் சஞ்சீவிக்குங் காயிதம் எழுதினேன் சுகசெய்திக்கு. கொழும்பிலச் சங்கை பொருந்திய ஞானதீப் அம்மாள் மரித்துப்போனதாகவும் செய்தி கேட்டோம், துக்கமாயிருந்தது.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாக வாழ்த்தி எழுதுகிறது.

இவ்விடத்தில் நானும் மற்றயாவருக் தேவிரக்கத்தினாலே சரீர சுகத்துடன் இருக்கிறோம்,

எனக்குச் சுகவீனம் என்றெழுதினதுக்கு ஆண்டவர் மூன்று நாளுக்குள் நல்ல சுகமுண்டாகச் செய்தார். நீர் அனுப்பியதும் வந்தவுடனே சுக்கு வாங்கி மருந்துஞ்செய்து சாப்பிட்டும் வருகிறது. நீர் அனுப்பிய ஒயின்பாட்டல் வைத்திருக்கிறேன். அது கிலவாக்க மனதில்லை. உங்கள் தாயார் உடைமாத்து வஸ்திரத்துக்கு மன்றாடிக்கொண்டு யிருக்கிறாள். இத்துடன் வீட்டுச் செலவுக்கு வருத்தப்படுகிறது, வெகு கவலையாயிருக்கிற சமையம், இப்படியிருக்க, ௰௧-௳ காலைச்செபத்துக்குப் போய்த்திரும்பும் வழியில் அவள் காதில் ஒத்தை மேலீடு இல்லை யென்று காணப்பட்டது. இவ்விடத்தில் கூடியமட்டுந் தேடியும் காணவில்லை, இதுக்காக நாங்கள் கஸ்திப்படவில்லைச் செலவோடு செலவு தானென்று எல்லாத்துடன் இதுவும் வந்ததென்றும் தயிரியமாகவே யிருக்கிறோம்.



தம்பி காயிதம் வந்ததில் உமக்கு முடக்குச்சுரமுண்டானதாய் அறிந்து மிகவும் மனஸ்தாபப் பட்டோம். ஆகிலுந் தேவசித்தத்தின்படி யாவதாக வென்றுந் தேறுதலாயிருக்கிறோம். அந்த வியாதியைப்பற்றி முன்னமே பயந்தான்.

கர்த்தர் உம்மையும் மற்ற நமது பெந்து சனத்தார் மி. அருளம்மாள் குழந்தைகள் யாவரையுஞ் சுகத்துடன் காப்பாற்ற மன்றாடுவோமாக.

தூத்துக்குடிச் சவரிராயபிள்ளைக்குஞ் சுகவீனம் வந்தும் வெகுநாளாயியும் நடக்கக் கூடுகிறதில்லையாம். அவர் வீட்டிலிருக்கிற பிள்ளை அன்னம்மைக்கு சுரமுண்டானதில் பிடரிவலி யிழுப்புமாய் வருத்தப்பட்டதாயும் கொஞ்சசேமமாகி வந்ததாயும் செய்தி, இப்போது எப்படியென்பது தெரியவில்லை.

அவ்விடத்தில் ஆராவது வந்தால் விசாரித்துக் கொள்ளுங்கள்.

கர்த்தர் எவ்விடத்திலுமுள்ள நமது சனத்தை அடைக்கலத்தில் வைத்துக் காப்பாற்றுவாராக.

௲௮௱௭௰௩-௵ இப்படிக்கு
மெய்௴ ௰௫-௳ சவரிராயன்

[இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்கு வருவது.]

---

௰௬—௳ ஷை பிள்ளைகளுக்கு காயிதம் அனுப்பு.

௰௭—௳ பத்துமணிக்குமேல்ச் சின்னத்தம்பி சவரிராயன் வழவில்க் கிடந்து மேலீடு கண்டெடுத்தான். அவனுக்கு முன் சொன்னபடி ரூ௧-கொடுக்கவும் கோவிலுக்கு ரூ௧-ம் அன்னியரால் வந்தால் கொடுக்கவேணுமானதால் தன் பிள்ளையினாற் கிடைத்ததினால் அவனுக்கு ஒரு சுேக்கன் செய்து கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். தேவகிருபை யுண்டாக வேண்டும், ஆட்சரியமாயிருந்தது ஷை மேலீடு கிடைத்தது. ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

௰௮—௳ ஷை கோவிலுக்கு காணிக்கை ரூ௧-ஞ் செலுத்தினேன்.

௰௯—௳ சஞ்சீவிக்குக் காயிதம் எழுதினேன். நகை கண்டது என்று ௨௰-௳ தவ்வாலில் அனுப்பினேன். இன்னாசியம்மாள் பிள்ளைகள் கல்லம்மாள்புரத்துக்கு போனார்கள்.

௨௰௧—௳ தேவசகாயம்பிள்ளை காயிதம் வந்தது ஒரு பாட்டல் தயிலம் எனக்கு அனுப்பினதும். ஷை சஞ்சீவிப்பிள்ளை காயிதம் அவன் பள்ளிக்கூடத்து வரவு ரூ௰-ச் சேர்ந்ததுக்கு என்ன வகை செய்யலாமென்றது பதித்

உங்கள் மனம் எனக்கு சந்தோஷம், ஆடுதுக் தங்களுக்கு மனமானால் ஒரு பால்மாடு வாங்கிப் பால் சாப்பிடலாம், எப்படியாகிலும் உங்கள் மனம் என் மனப்படியாயிருக்கும் என்றெழுதினேன்.

௨௨—௳ ஐயர் தங்கட்சியைக் கூட்டிவர ஆற்றுவிட்டதினால் காலமே போனார் நல்லம்மாள்புரத்துக்கு. அங்கே செபத்தியாயி வந்திருக்கிறாளாம்.

௨௩—௳ உபதேசிமார் கூட்டம், ஷெ ஐயருக்குப் பல்வலியும் தலைவலியுமானதினாற் கூட்டத்துக்கு வரவில்லை. சஞ்சீவிக்கு ஆமணக்கெண்ணை கொஞ்ச மனுப்பினோம்.

௨௫—௳ கொழும்பு உபதேசியார் நல்லம்மாள்புரத்துக்குப் போனதாகக் கேள்வி. அவர் தமக்கு ஒரு பெண் விசாரித்துத் திரிகிறதாயுங் கேள்வி, யவர்குடியிருப்பு மெஞ்ஞானபுரத்துக்கடுத்த மதுரக்கரை யூராம்; தேவதாசனுப தேசி பரிமுகமாம்.

௨௬—௳ செபத்தியாயி மகனுக்கு வைசூரி வந்திருக்கிறதினால் மாமனார் வீட்டில்த்தானே யிருக்கிறதாகவும் அவன் மாப்பிள்ளை மாத்திரம் ஊருக்குப் போனதாகவுஞ் செய்தி.

௨௮—௳ தவ்வாலில் பிள்ளைகள் செய்தி யனுப்பவில்லை.

௩௰—௳ சம்பளக்கூட்டத்துக்கு ஐயர் வந்து உடனே இடையன்குடிக்குக் கனம் கார்வல் ஐயரவர்கள் சீர்மைக்குப் போகிறவர்களைக் கண்டனுப்பிக் கொள்ளப் போய் விட்டார். நமது காரியங்களொன்றும் அடிக்கையாயிருந்து பேசிக்கொள்ள வில்லை. மாடு விற்கவும் கடனுக்குக் கொடுக்கவும் தீர்மானித்தது.

௩௧—௳ சஞ்சீவி காயிதம் வந்தது, சுகசெய்திதான். கர்த்தர் இந்த மாதமுழுதுங் காப்பாற்றினவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக,



†

௲௮௱௭௰௩-ஆம் ஜூன் மீ ௧-௳ ஞாயிற்றுக்கிழமை முதல் சவரிராயன் அவிசேஷபுரம் உபதேசி நினைவு நிற்போறட்டு

௧—௳ பரிசுத்த ஆவியின் பண்டிகை, சபையாருக்கு நற்கருணை கனம் ஆற்கோட்டய்யரவர்கள் கொடுத்தார்கள். மூன்று நேரமும் ஆராதனையும் நடத்தினார்கள்.

௨—௳ தேவசகாயம்பிள்ளைக்குந் தருமசஞ்சீவிக்குங் காயித மெழுதினேன்.

௩—௳ பிச்சைமுத்துப்பிள்ளை மனைவி வந்திருந்தது. சாலமோன் நல்லம்மாள்புரத்திலிருந்து வந்தான்.

௪—௳ சஞ்சீவி காயிதம் ஒன்று வந்தது, மழை மம்மலாய் ஒரு நேரமும் வெயிலில்லை.

௬—௳ உபதேசிமார்கள்கூட்டம், நற்கருணையும் பெற்றோம். மதுரேந்திரஐயர் வந்து போனார். கொழும்பு உபதேசியாராயிருக்கிற மருதகனா தோமாசுப்பிள்ளைக்கு காலையிற் காப்பியும் மதியஞ் சாப்பாடுஞ் செய்தோம் அவரும் நல்லம்மாள்புரத்துக்குப் போனார். கொழும்பிலிருந்து வந்த மிக்கேல்ப்பிள்ளை ஷெ நல்லம்மாள்புரத்திற் போயிருந்து அவ்விடத்தில் கோவில்ப் பிரசங்கத் தொட்டியொன்று ௫௰-ற் செய்ய ஒப்பந்தம் பண்ணினதாக செய்தி. இது முன் அவரை நான் கண்டதில்லை, இன்று தான் அறிந்தேன்.

௭—௳ தவ்வாலில் தேவசகாயம்பிள்ளை தாய்க்கு மாத்து வஸ்திரம் ஒரு கறுப்பு இரட்டைவாணத்தார் சேலையனுப்பினது வந்தது. முனிசப்பிள்ளை மகள்க்கு ஒரு காயித மனுப்பினார். தாம் மகா நீதிமான் போலவும் தேவசகாயம்பிள்ளை யவர் வீட்டில் இருக்க இடங்கொடுக்காமல் அநியாயஞ் செய்கிறதாகவும் அவர் எழுத்திலேதானே தேவசகாயம்பிள்ளை சொல்வது நியாயந்தானென்று விளங்கிறது.

௮—௳ நல்லம்மான்புரத்திலிருந்து வந்த ஆட்டு ஒன்று. அவ்விடத்தில்ச் செலவுமட்டில்லாததினால் எனக்கு ஷெ ஐயர் பேரில் மனத்தாபம். இன்று திருத்துவத்தின் பண்டிகை; கனம் ஆற்கோட்டய்யரவர்கள் செபம் பிரசங்கம் மூன்று நேரமும் நடத்தினார்கள். யாக்கோவுப்பிள்ளையை ராதாபுரத்தில் ஒரு காரியமாக ௯-௳ விடியக்காலம் அனுப்பினார்கள். அவ்விடத்துக்குப் போய்த் திரும்பி ஆனைக்காரக்கு வந்து தங்கினானும். பரியசவரிமுத்

துப்பிள்ளைக்கு மேல வீட்டார் தரவேண்டிய ரூ க்கு நம்பர் வைக்கும்படிக்கு காயிதமெழுதினேன்.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையும் அறிய விரும்புகிறோம். இப்போது உமக்கிருக்கிற சுகசீரிப்படி யென்று எழுதும்.

உங்கள் தாயாருக்கு அநுப்பிய வஸ்திரம் வந்தது சந்தோஷம். இன்னாசியம்மாள் மகளுக்கு முனிசுப்பிள்ளை காயிதங்கள் அடிக்கடி வருகிறது. நாம் யோசித்தபடிக்கு பத்திரமும் வெண்கலபாத்திரமும் கைநிடத்தி லாகப் பண்ணவும். ஷெ யார் அடவு வைத்த கொடியும் காப்பும் வரப்பாத்தும் வந்ததாகக் காணவில்லை.

அவர்கள் கடன் தீர்ந்ததாகவும் நல்ல சாப்பாடு சாப்பிட்டிருக்கிறதாகவும் மகளுக்கு எழுதாமல்த் தாம் வெகு துன்பத்திலிருக்கிறதாகக் காட்டி எழுதுகிறார்கள்.

நமது கடன் இதுவரை தீர்ந்திருக்கவேண்டும். அது வெகு நாளாயிருப்பதினால் அதை அறிய விரும்புகிறேன். இப்போது அகவிலை மலிவு, என்னை இவ்விடத்தில் குடம் ரூ இ-க்கு, மழையினுக் கருப்புக்கட்டி சற்று குறைவு, ஆகினும் எல்லாஞ் சகாயம். வடக்குன்குள மிளகுவத்தல் என்னை யிப்போ சகாயமாயிருக்கும் நமது சம்பந்தக்காரர் நமக்கிருந்தும் ஒன்று மில்லாதது போலிருக்கிறது.

உங்கள் செலவுக்கு வந்தாலும் என்னையும் கொஞ்ச வாங்கினால் நல்லது. எனக்கு வரவு குறையினால் அன்றாடு அப்பம் கேட்கிறேன். நீர் மா தோறுங் கொடுக்கிறதென்றது பணம் பணமாய்த்தானிருக்கிறது. உமது மனதிரங்கி இவ்வளவென்று கொடுக்கிறதைப் பெற்றுக் கொள்ளுகிறது தன்றி எங்களுக்குச் சுவந்திர வளக்குண்டென்பது யில்லை. அப்படிக்கு உம்மைப் பெற்றும் வழர்த்தும் விடவில்லைக் கர்த்தர் தானும்மைப் படைத்து ரட்சித்து நடத்துகிறார். ஆகினும் உலக ஆஸ்தி மனவிக்கும் பிள்ளைக்கு மன்றி வேறில்லை. மேலும் புங்கள் மேல் அதிகாரம் மனவியைப் பெற்றவர்களுக்கே.

கனம் மதுரோந்திரஐயரவர்கள் வீட்டில் விருந்து வெகு சாக்கிரதியாய் நடக்கிறது. இன்னாசியம்மாளும் பிள்ளைகளும் செபத்தியாயி, புருசன், பிள்ளை



களும் பதிவு. மகள் மருமகன் பிள்ளைகள் மற்றும் வரத்துப் போக்காளுகளும். இதில் காப்பி சாப்பிடாதவர்களில்லை. வெகு மோடிதான். நான் பற்றிச் சாப்பிட்டும் விடுறதியே.

கிருபை பெற்ற மரியம்மாள் காரியம் இடையன்குடி வெள்ளமற்றுப் போயிற்று. இப்போது மதுரக்கரையிலுள்ள தோமாசுப்பிள்ளை யென்னொரு மனிதன் கொழும்பிலக் கிளாக்கு ஐயர்களுக்குள் உபதேசி வேலை பார்க்கிறவராம். இவ்விடத்தில் ஒரு பெண் பார்க்கவா வென்றுபோன ஆரோக்கியம்பிள்ளை, தேவதாசனுபதேசி, சாமுவேல் கொழு உபாத்தியாகிய மோசே உபதேசியார் தம்பி யிவர்கள் யாபுசளுவமாய் வந்திருக்கிறார். உங்களை யெல்லாம் அறிந்து இருக்கிறதாகவும் சொல்லுகிறார். ஷெ ஆள்களும் அறிந்தவர்களாய்த்தான் காரியங்கள் சொல்லுகிறார்கள்.

வெள்ளிக்கிழமை அவர் நல்லம்மாள்புரத்துக்குப் போயிருக்கிறார். செபத்தியாயி கொழுந்தன் மிக்கேல்ப்பிள்ளையும் அங்கே போயிருக்கிறார் வெகு காலமாய், அவ்விடத்தில் பிரசங்கப் புத்தகம் சு உ வி-க்குச் செய்ய ஒப்பந்தஞ் செய்திருக்கிறதாகவும்,

இதுகாரியங்களை யெல்லாம் பார்த்து நடத்துதல் தேவசித்தம்.

என்னிடத்தில் சிலர் ஷெ கொழும்பு உபதேசியானைப் பற்றிப் பேசினார்கள். ஐயர் மனம் என்றேன். உமது மனம் எப்படி.

கர்த்தர் தமதாவியைத் தந்தருளுவாராக.

௲அ௱எ௰௩ இப்படிக்கு
ஜுன் ௴ ௯ உ சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.)

——0——

பிரியமுள்ள தம்பி மரியசவரிமுத்துப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்திலுள்ள சேமாதி சயங்களையும் அறிய விரும்புகிறோம். இதுமுன் நான் எழுதியதுக்குச் சரியான உத்தரவு வராததினால் எழுதப்பிரியமில்லையாகிலும் எனக்கு அடிக்கடி சுகவீனம் நேரிடுகிறதினால் உமக்கு எழுதவது. உமக்கு விசாரத்தைக் கொடுக்கும் என்று நான் அடிக்கடி எழுதவில்லை. ஆகிலும் ஐயா சுகசீவியா யிருக்கிறீர்கள் என்று நினைத்திருக்கட்டு மென்று யிருந்தேன்.

அப்படியே நீரெங்களை நினைத்துத் தேடாதிருக்கிறீர். எங்களுக்குப் பெற்றவர்களென்று கனம் பண்ணுகிறீர். கனம் வார்த்தையிலே யன்றிச் செய்கையில் ஒன்றுமில்லை. அது இதுவரையும் நடக்கிறது. தகப்பனுக்குச் செய்வதை விட்டுத் தருமஞ் செய்கிறீர், விருந்துகளுஞ் செய்கிறீர், ஆனாலும் எங்கள் சவுக்கியத்துக்குத் தக்க தான செலவுக்கு விசாரிப்பாரில்லை. கனம் மதுரேந்திரஐயர் தவிர மற்றவர்கள் எங்களைப் புறந்தவர்களும் நன்மை பெற்றதுவுமில்லைப் போலிருக்கிறது. விசேஷமாய் நீர்தான். அதென்ன வென்றால்: நானுமக்கு எழுதின காரியங்களில் முதலாவது கோட்டுச் செலவு கணக்கும் மற்று தத்துவேஷ்களும் அனுப்ப எத்தனை தரமோ கேட்டுந் தரவில்லை.

இரண்டாவது சகாயம் உபதேசி கொண்டுபோனதை அனுப்பி வாங்கவும் அதுக்குண்டான செலவு பணம் நான் தருகிறேனென்றும் எழுதினதுக்கு இன்னமும் பதில் இல்லை. ஷை உபதேசியாருக்கு எழுதின காயிதமும் அனுப்பவும் தம்பூரும் புஸ்தகமும் வாங்கிறதாயும் காணோம்.

மூன்றாவது எங்களுக்குச் சாப்பாடாவது வஸ்திரமாவதுங் கொடுக்கத் தக்க மனம் வைக்கவில்லை, அது உம்முடைய மனம்.

இப்போது ஈ-ஸ்ரீ விசாரணை சவரிமுத்துப்பிள்ளை யவர்கள் மக்களால் வரவேண்டிய ௱ சக இ-மாகாணி பைசா இ-அது ஷை பிள்ளை யவர்களால் பற்று கூஉ-ரூ கூக-ரூ, பின்னவர்கள் மரணகாலச்செலவு கூச-ரூ இமட்டும் உள்ள கணக்குத் தகை வாங்காதிருந்ததுக்கு முகாந்திரமுண்டு. என்னவெனில் உமக்குக் கவடம் இல்லை, நமக்குத் துரோகஞ் செய்யார்கள் என்றதும் கூஉ-ரூ கூக-ரூ களில் ... ... எப்படி

யிருந்தாலும் காரியத்தில் கருத்தும் வியாதி தன்பமுள்ளவராயிருந்ததினால் நமக்கு வரவேண்டியதைப்பற்றி கவனத்தாட்சியா யிருந்தேன்.

கூச-ரூ அவர்கள் மரணகாலத்துக்குச் செலவு முதலானதுக்கு வியாகப்பபிள்ளைக்கு உதவியாகச் சிலரூபாய்கள் கொடுத்துக் கணக்கெழுதிச் சொல்லியிருந்து எல்லாம் நமது காரியமாக நடத்தி வந்ததினாலும் ஷை கடன்களை வஞ்சுவா வாங்கவில்லைப். பின்னும் ஷை வியாகப்பபிள்ளை முதலானவர்கள் இளையகுடியாளை விரோதித்துக் கெடுக்கச் செய்யப் பார்த்ததினால் அந்தத் துரோகத்துக்கு நாமொருவருஞ் சம்மதியில்லாமல் ஷை பிள்ளைகளுக்கு ஏதுப்பா இளையதாரத்தாருக்கு உதவியாயிருந்ததினாலப் பின்பு நமக்குள்ள கடன்களைப் பற்றிக் கவலை யில்லை.



ஷை யார்களுக்குப் பாகப்பிரிட்சலாகும்போது கனம் சாமுவேல்ஐயர் மதுரேந்திரஐயரும் பேசினவர்களுடன் நான் போகவில்லை. அவர்கள் வியாட்சியங்கள் தீர்த்து சமாதானமாயிருக்கும்போது ஷை கடனைப்பற்றி யன்னம்மை பாதிக்காரியானவளிடத்திற் கேட்டேன். அவள் சொரகப் பேசாமல் மற்றவர்களைச் சாக்கிட்டுப் பேசினதினால் நான் நம்பர் வைப்பேனென்றதை வியாகப்பபிள்ளைக்குச் சொல்ல அவரவளிடத்தில் ஷை யவர்கள் குமார் ஐயரிடத்தில் பொதுப்பணத்தில் ௱ரு-௫ கொடுத்திருக்கிறதென்றார் என்று எனக்குச் சொன்னதினால் நான் ஒத்துக்கொண்டிருந்து விட்டேன். அப்படி இரண்டுவருசஞ் சென்றபின் ஷை ஐயரிடத்தில் ஷை நமக்கு வரவேண்டிய ௱ சகஇ-மாகாணியும் ஷை ஐயரிடத்திற் கேட்டு ஷை காரியங்களைப் பற்றிப் பேசவே: அவரது என்னிடத்தில் வரவில்லை, வந்த ௱ரு-ம் யாக்கோவுக்குச் செல்லவேண்டியதுக்கு வகை வைத்துக்கொண்டார்கள், நமது கடனை யவர்களிடத்தில் கேட்டு வாங்குங்க ளென்றார். அதின் பின்பு ஷை யன்னம்மை யிடத்திற் கேட்டு வரவே அவள் கடத்துக்கையாய், வியாகப்பபிள்ளை முதலானவர்கள் பாதியைக் கொடுத்து நீயும் கொடு வென்றால் கொடுப்பே னென்றுப் பேசிக்கொண்டிருந்து; இந்த வருடத்தில் தன் மகன் பெரிய மனுஷனாய் இருக்கிறது போலவும், அவனிடத்தில் கடன் கேள்க்கவும் மற்றப்படி கிடைக்காது போலவும் மகன் ஷை வியாகப்பபிள்ளை யிடத்தில் யாக்கோவு ஷை காரியங்களைப்பற்றிப் பேசினதில் அவர் வாசலாய் போத்திக்குக் கொடுக்கவேண்டியது தான், பாதியில் என் பாகம் மூன்றில் ஒன்று நானுனக்குத் தந்து விடுகிறேன், நீயவர்களுக்குச் செலுத்தப் போடென்றாராம். அந்தப்படி பாதிக்கு ௱ உ௰ரு-அரைமாகாணியும் தையின் போத்திக்குத் தருகிறேன் என்று உங்கள் கனம் அன்னாட்சி முன்புக்குச் சொன்னான். இதுவரையும் தரவில்லை. இப்போது சொல்வது ஷை தகை முழுவதில் பாதிக்கு நான் ஏற்றதாகவும் அது தரவில்லையென்றும் யாக்கோவுப்பிள்ளை பேரில் நம்பர் வைக்கவும் உடனே நான் போய் ஷை தொகை முழுவது வாசலாய்ச் செல்லவேண்டும் பாதிக்காரன் தகை யிவ்வளவு போகப் பாதிக்கு நானே உத்தரவாதி யென்றும் வாக்குமூலமும் எழுதிவைத்து ஷை கடனுக்கு ஈடும் எழுதிவைக்கு வாயிதாவிற் கொடுத்து விடுவேன், அப்போது ஷை மரியவியாகப்பன் பேரில் வரவேண்டிய தகையும் விசாரணை யில்லாமல் வந்து போமென்றும், மற்றப்படி இது முடியாது வென்றும், யாகோவு சவரிராயன் போரால் நம்பர் வைக்கவும் என்

து சொல்லி இப்போது அம்மாளுக்கு எழுதி யவர்கள் போரல்த் தானே கோடு திறந்தவுடனே நம்பர் வைக்கச் சொல்லுங்கள் என்று உறுதியாய்ச் சொல்லி யிருக்கிறதினால் இந்தமீ எவ்விதமும் யாக்கோவு சவரிராயபிள்ளை பேரில் டூடமெறு-அமாவாசணிக்கும் நம்பர் வைக்கவேண்டியது. என்றால் இப்போது இரண்டு நாழிகை வழிநடக்கப் பெலமில்லை. பெலமாயிருக்குமானால் தாம் யோசித்து உமது போரல் நம்பர் வையும். அதுவன்றி நான் அவ்விடத்துக்கு வந்து நேரவென்றால் நம்பர் வைக்காமலிருப்பதே உத்தமம். எல்லா முமது காயிதத்தில் விபரம் வரக் காத்திருக்கிறேன். இதுகாரியத்திலும் அசாக்கிரதையா யிருக்கமாட்டீரென்றும் நம்புகிறேன்.

இந்த வருஷ மாசிலும் உமது பிள்ளைகளுக்கு விவாகம் நிறவேற வழியைக் காணவில்லை யென்பது எனக்குங் கவலை யதிகமாயிருக்கிறது. உம்முடைய தகப்பனுக்குத் தாய்க்கு பிலவீன மதிகமாயும் நயனத்துக்குக் குறைச்சலாயுமிருக்கிறது பெரிய துன்பம். எவ்விதத்திலுந் தேவன் வைத்தாலும் அதற் கடங்கி யிருக்கத் தக்கனுக்குத் தமதாவியைத் தந்தருளுவாராக. உங்களனைவோருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௰௩ (ஞூ) இப்படிக்கு
ஜுன்மீ ௯-உ சவரிராயன்

(இது:—அம்பாசமுத்திரம் உபதேசியாராகிய சவரிமுத்துப்பிள்ளைக்கு வருவது.)

---

[புறக்கடை:—குடும்ப சங்கமென்று மேலே பல இடங்களில் ஐயா எழுதி யிருக்கிறார்களே, அதென்ன வென்றால்—

மூத்த அண்ணாட்சி செய்த ஏற்பாடு. அவர்கள் தங்கள் கஷ்டம் செலவுடன் எவ்வளவு வருந்த யிருந்தாலும், குடும்பத்தில் எல்லாருக்குந் தாயுமானவர் என்று சொல்லத்தக்கவளாய் பிதா மாதாக்களையுஞ் சகோதரர் சகோதரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் அரவணைத்து ஆதரித்து வந்தார்கள், அது போலவே மற்றச் சகோதரர்களும் ஒரு பந்தக்கட்டாய் ஐயா அம்மைக்கும் ஒருவருக் கொருவரும் பொருள் விஷயத்தில் ஆதரவாயிருக்கவும், ஒரு திட்டப்படி மாசாமாசம் பணம் செலுத்தி ஒரு பண்டு சேர்க்கவும், அதிலிருந்து மாசந்தோறும் ஐயாவுக்குக் கொடுக்கவும், மீதமுள்ளதைத் தொகையாக்கி வைத்து பிள்ளைகள் படிப்பு கலியாண விஷயங்களுக்கு ஷெ பண்டிலிருந்து உதவி செய்யவும், இப்படியாகச் சகோதரர் ஒருமிப்பும் ஐக்கியமுமாய் எக்காரியத்திலும் ஒரு ஆலோசனையாய் சேர்ந்து நடப்பிக்கவும்



வேணுமென்ற ஆசையாய் மூத்த அண்ணாட்சி யவர்கள் சில ஒழுங்குகளைச் செய்தார்கள்.

[இதில் நாத்தக்குடிப் பெரியபிள்ளையும் வீட்டுக்கார ளானதால் ஒரு மெம்பர். தம்பி தருமராஜனுக்கு அலுவலாகாமலும் கலியாணமாகாமலு மிருந்ததினால் அவன் துவக்கத்தில் மேற்படி ஏற்பாட்டுக்கு உட்படுத்தப் படக் கூடாதவனா யிருந்தான். அண்ணாட்சி கு. ஞானப்பிரகாசம்பிள்ளை யவர்கள் பிதா மாதா குடும்பத்துக்கு உதவி செய்ய மிருந்த ஆவலுள்ளவர்கள், தங்கள் கஷ்டத்திலு மேதாவது செய்து மிருப்பார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த சொற்பச் சம்பளம் தங்களுக்கும் தங்கள் பெண்சாதி பிள்ளைகளுக்கும் சாப்பாட்டுக்குங் கூடக் கட்டாத நிலமையிலிருந்தது. அண்ணாட்சி மரிய சவரிமுத்துப்பிள்ளை யவர்கள் இயன்றாலும் இயலாவிட்டாலும் பொருளுதவி செய்ய வேண்டுமென்ற நிர்மாணம் அவர்களுக்கு வருகிறதில்லை. ஐயா அம்மை என் வீட்டில் வந்திருக்கட்டும், சாப்பாடு போடுகிறேன், என்பார்கள். ஆகையால் அவர்கள் இந்தக் குடும்ப சங்கத்துக்கு ஒரு பைசா வாவது கொடுத்ததில்லை. மற்றச் சகோதரரும் நாத்தக்குடிப்பெரியபிள்ளையும் கூடியமட்டுஞ் சிரமமாய்க் கொடுத்து வந்தோம்.

(பணம் கையிருப்பு என்வசம். இப்படிக் கொஞ்சப்பணம் எழுபது எண்பது கூடியிருக்கிறபோது வடக்கன்குளத்து நம்முடைய பனை வியாச்சியம் அம்பாசமுத்திரம் கோர்ட்டில் வந்தது. ஷெ அண்ணாட்சி மரியசவரிமுத்துப்பிள்ளை யவர்கள் அம்பாசமுத்திரத்தி லிருந்ததினால் வியாச்சியச் செலவுக்காக ஷெ அண்ணாட்சி கேட்டதற்கு (மூத்த அண்ணாட்சியும் ஐயாவும் குடும்ப சங்கத்திலப் பேசிச் செய்திருந்த நிர்மாணப்படிக்கு) நான் இங்கிருந்து அம்பாசமுத்திரத்துக்கு பணம் அனுப்பிக்கொண்டு வந்தேன். வியாச்சியம் முடிந்ததின் பேரில் ஷெ அண்ணாட்சி யிடத்தில்: பணம் வந்த தெவ்வளவு, செலவு விபரமென்ன, மீதமுண்டாவென்று நேரிலும் காயிதத்திலுமாக ஐயா கேட்ட கேள்விகளுக்குப் பதில் கிடையாது. இப்படியாக அந்தப் பணம் முடிந்தது.

(ஆனாலும் குடும்ப சங்கத்தை ஸ்திரமாய் நிலை நிறுத்த வேண்டுமென்று மூத்த அண்ணாட்சி பின்னும் மிகுந்த பிரயாசமும் யோசனையுமாய்ச் சகோதரர்களுக்குக் காகிதங்கள் சட்டங்களும் ஐயாவுடைய அனுமதியும் பெரும் வைத்து எழுதி யனுப்பினார்கள். ஷெ அண்ணாட்சி சவரிமுத்துப்பிள்ளை யவர்களிதைப் பலமாய் விரோதித்து அநேக ஆட்சேபனைகளும் தர்க்கங்களும் சொல்லி: இது சகோதரர் ஐக்கியமும் நிர்தேசமுமான சங்கமல்ல, சகோத

தாப்பிரிவினையும் பிணைவுமுண்டாக்குகிற ஏற்பாடு என்று சொல்லி ஷெ ஒழுங்குகளை ஒப்பவும் பணங் கொடுக்கவுமில்லை. ஆனாலும் மற்றவர்கள் பணஞ் செலுத்தி வந்ததில், செலவுகள் போக ரூ. [illegible]-க்குமேல் என் கையிருப்பு இருந்தது. இதற்குள் ஐயாவும் மரித்துப் போனார்கள்.

(தேயோசப்பிளுப்பிள்ளை பட்டணத்திலிருந்து பாளையங்கோட்டைக்கு வந்திருந்தார். அவருக்கு அம்பாசமுத்திரத்து அண்ணாட்சி மரிய சவரிமுத்துப்பிள்ளையவர்கள் இரண்டாவது மகள் மேரியன்னம்மாளைக் கலியாணம் பண்ணத் திட்டமாயிற்று. ஷெ அண்ணாட்சியவர்கள் என்னிடம் வந்து: உன் கையிலிருக்கிற குடும்ப சங்கப்பணத்தைக் கொடு, இப்பொழுது வேறு யாரிடத்திலும் வாங்கச் சமயமில்லை, உடனே அவசரமாய் வேண்டியிருக்கிறது, காரியம் உழம்பிப் போகாமல் முடியவேண்டும், இரண்டொரு மாசத்திற்குள் திரும்பப் பணத்தைக் கொடுத்து விடுகிறேன் என்று உறுதியாய்ச் சொன்னார்கள். திருநெல்வேலி இளைய அண்ணாட்சியும் கூட இருந்தார்கள். குமர் கரை யேறவேண்டிய காரியமாயிருக்கிறதே யென்று அவர்கள் ஆத்திரத்தை நிமித்தம் நானுங் கொடுத்து விட்டேன். குடும்பசங்கத்துக்குப் பேசித் தீர்மானியாமலும் மூத்த அண்ணாட்சிக்கு அறிவியாமலும் என்னிடத்தில் நம்பிக்கையாய் வைத்திருந்த பணத்தை நான் கொடுத்து விட்டேன். மூத்த அண்ணாட்சிக்குப் பின்பு தெரிந்த போது அவர்கள் ஏன் இல்லவென்று அதைக் குறித்து ஒரு வார்த்தையும் என்னிடத்தில் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை. மனதில் மிகவும் வருத்தப்பட்டிருப்பார்களென்று இப்போது நினைக்கிறேன். அந்தப் பணம் திரும்ப வந்ததில்லை. இரண்டாவது ஏற்படுத்திய குடும்ப சங்கமும் இப்படியாக முடிந்தது.

ஷெ சங்கதியில் நான் கவனித்ததும் அதிசயித்ததுமான காரியங்கள் மிகவும் மிகுதியானதினால் நம்முடைய ஓட்டைகள் அனந்தம் இருப்பதில் இந்த ஒன்றை வெளிப்படுத்தினேன். J. D. S. 3-5-1901.)

---

௰—உ செபத்தியாயியும் பிள்ளைகளுங் கொழுந்தனாரும் கூட மேரியன்னம்மாள், லீதியாளம்மாள் இரண்டு பிள்ளைகளும் டக்கர் கல்விச்சாலைக்குப் போகவுமாக இந்தப்பட்டணைக்கு வந்து, நம்முடைய ஐயர் பிள்ளைகளுக்கு கொழும்பிலிருந்து வந்தவர்கள் மருதூர்க்கரை தோமாசு ஏசுதாசபிள்ளை, வடக்கன்குளம் மிக்கேலப்பிள்ளை யிருவருக்கும் பெண் கேட்டதாயும், ஷெ மிக்கேலப்பிள்ளை யிப்போது வேதத்துக்கு வந்ததினால் கொஞ்சக் காலஞ் சென்று தான் பேசவேண்டியதென்றும், ஷெ தோமாசுப்பிள்ளைக்கு ஐயருடைய



சம்மதியும் கேட்டு ஷெ யவருமதிக்குக் கனம் ஐயர்மார் நற்சாட்சியும் விசாரித்துக் கலியாணம் நடப்பிக்கலாமென்றது போல செய்தி ஷெ செபத்தியாயி சொல்லி கனம் ஐயர் காயிதம் ஒன்று எனக்குத் தந்து உங்களுத்தரவு நாளைக்கு அனுப்புங்க ளென்றான். ஷெ காயிதத்தில் ஷெ மாப்பிள்ளைக்குப் பெண் கொடுக்கத் தங்கள் மனமானால் எழுதும்படி கேட்டிருந்தது. அந்தப் படிக்கு எங்க ளிருவருக்கும் ஷெ மாப்பிள்ளைக்குக் கலியாணஞ் செய்யச் சம்மதி யென்று ௰௧-உ எழுதினேன், பின்பு ௰௨-உ ஆள்வந்தவர்வசம் அனுப்பினேன்.

---

†

கர்த்தர் தமதாசியைத் தந்தருளுவாராகவும்.

நேற்றைத்தினம் வந்த காயிதம் பார்த்துச் சந்தோஷமானோம். ஷெ காரியங்கள் கர்த்தரால் வாய்க்கிற காரியம். ஷெ காரியத்தைப்பற்றிப் பேசின போது மாப்பிள்ளையைப் பற்றினதில் மூன்று காரிய மிருக்கவேண்டுமென்றீர்கள். அது மூன்றுங் கவனித்து விசாரித்தறிந்ததினால் ஒரு பெண் கொழும்பு தோமாசுப் பிள்ளைக்குக் கொடுக்கத் தடையில்லை, ஐயருடைய யோசனைப்படி யாகவேண்டும் நாமென்ன சொன்னாலும் மென்றிருந்தேன், இப்போது தங்கள் மனம் என் மனப்படி உத்தரவு கேட்டதினால் மிகவும் விருப்பமாய் நானும் உங்கள் தாயாரும் பூரண மனசாய் ஷெ தோமாசு ஏசுதாச பிள்ளைக்குப் பெண் கொடுக்கலாமென்று தேவகிருபையை முன்னிட்டுச் சொல்லுகிறோம். ஆண்டவர் சித்தம் அப்படி யிருக்கிறதினாலே தானே ஷெ மாப்பிள்ளையை சமீபத்தில் வரச் செய்தது என்று திடமனதாய் அவர் சித்தத்தின்படி யாகவேண்டு மென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

உங்க ளெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம். மற்ற விபரம் முகதாவிற் பேசத் தேவன் கிருபை செய்வாராக.

௲௮௱௭௰௩-௵ இப்படிக்கு
ஜூன்௴ ௰௧-உ சவரிராயன்

(இது:—கல்லம்மாள்புரத்தில் வாசமாயிருக்கிற கனம் பொருந்திய மதுரேந்திர ஐயரவர்களுக்கு வருவது.)

---

௰௩—உ பாடத்துக்கு உபதேசிமார் கூட்டத்துக்கு மதுரேந்திரஐயர் வந்தவிடத்தில் ஷெ காரியங்களையும் யோசித்துப் பேசிக்கொண்டதுமன்றி

2579



தி, இருவை பெற்ற மரியம்மாள் காரியங்களும் பேசினதில், ஷெ முன் பேசின தானியேல் அல்ல வேறு மாப்பிள்ளை யாகும் போலவும் யோசித்திருக்கிறதாகவும் சொன்னார். தேவசித்தம் எப்படி யாகுமோ அப்படி யென்று முடிந்தது. சாயந்திரம ஷெ ஐயர் ஆலங்கிணத்துக்குப் போனார் சங்கப்பனை வருவுச்சு.

௰௫—உ தோமாசுப்பிள்ளை மூலக்கரைப்பட்டிக்குப் போய் செபஞானம் உபதேசி மகனைக் கண்டு பேசி வந்தார். காலையில் ஆராதனை மோசே உபதேசியார் நடப்பித்தார். இரவில் ஷெ தோமாசுப்பிள்ளை நமது வீட்டிற் சாப்பிட்டார்.

௰௬—உ யும் நமது வீட்டிலிருந்தார். சாயுங்கால நல்லம்மாள்புரத்துக்குப் போயிருந்த இன்னாசியம்மாள் பிள்ளைகள் சவரிராயனும் அருளம்மாளும் வந்தது.

௰௭—உ காலையில் ஷெ தோமாசுப்பிள்ளை நல்லம்மாள்புரத்துக்குப் போனார். கனம் ஐயர் காயிதம் வந்தது: நாத்துக்குடி சவரிராயபிள்ளையின் காயிதம் வந்ததில், மரிய வியாகுலத்துக்குப் பெருகால மாசமும், அதில் மூடைக்குச் சுரமும், ஷெ யங்கிருக்கிற பிள்ளைகளுக்குஞ் சுரமும், ஷெ யாருக்கு உதவிக்குத் தற்காலத்தில் இருதய மென்பவள் உதவியாயிருக்கிற தாகவும், தனது ஆள் வேண்டியதுக்கு இன்னாசியம்மாள் வரக் கூடுமானால் சிக்கிறமனுப்பும் படிக்கும் எழுதியதினால், அதற்கு கனம் ஐயர் எனக்கு எழுதினார்கள், நான் ஷெ காயிதங்களையும் காரியங்களையும் யோசித்து; ஷெ இன்னாசியம்மாள் நாத்துக்குடிக்கு அநுப்பவேண்டியது தான், அவள் மனமும் கனம் ஐயர் மனமும் போலாக வேண்டியதென்று சொல்லி யனுப்பினேன் சாலமோனிடத்தில். பின்பு தோமாசு ஏசுதாசபிள்ளை தனது விவாக காரியத்துக்குக் கனம் ஸொர்க்கு ஐயரவர்கள் நற்சாட்சிக் காயிதம் வந்த உடனே நடக்குமென்று ஷெ ஐயருக்குக் காயிதமெழுதித் தவ்வாலில் போட வந்தார். கனம் ஆற்கோட்டையபரவர்கள் பள்ளிக்கூடத்தில் அருளம்மாளைச் சேர்த்துக் கொண்டார்கள்.

௰௮—உ ஷெ தோமாசுப்பிள்ளை இன்னமும் கண்டியிற் சில ஐயன்மார்களுக்குக் காயிதம் எழுதி யனுப்பினார். நமது பிள்ளைகள் போல நம்மிடத்திற் சாப்பாடும் நடந்தது. யாக்கோவுப்பிள்ளை நேத்து சாயந்திரம் ஐயரவர்கள் கூடக் கிளைச்சேகரத்துக்குப் போனார், வரவில்லை.

௰௯—உ வந்தான் காலையில் தோமாசுப்பிள்ளை அவரூருக்குப் போ



னார். பத்துநாளைக்குள் வருவேனென்றார். கனம் ஆற்கோட்டையபர் அம்மாளிருவரும் இடையன்குடிக்குப் போனார்களாம். அங்கே உபதேசிமாருக்கு வருடஞ் சோதனைக் கூட்டமாம்.

௨௰—உ இந்தவிடத்தில் வழக்கப்படி உபதேசி உவாத்திகள் வந்தது யாக்கோவு உத்தரவுப்படிக்கு இடையன்குடியில் கூடங்குளம் சுவாமியடியானுபதேசி தனக்கு வரவேண்டிய கடன் பிரிக்கப்போனான். கனம் மதுரேந்திரஐயர் வந்தார், நாத்துக்குடிக்குத் தங்கச்சி யின்னாசியம்மாளை யனுப்ப அவளுஞ் சாலமோனும் போக வண்டி யமத்திக் கருப்புகட்டியும்... வாங்கி யனுப்பவும் இருந்து, பலகாரியங்களும் பேசிக்கொண்டதில், ஷெஐயர் சுவலை மண்டை நிறம்பிப் பலத்த பாரமாயிருக்கிறதாகச் சொன்னார். ௨௧-உ ஷெ ஐயர்க்குப் பலதஞ் சொல்லி, மத்.௬-ம் அதிகாரம் சொல்லிய விஸ்தரிப்புஞ் சொன்னேன், விசுவாச நமக்குக் குறைவாய் இருக்கிறதென்று வெகுசாய்ப் புத்தி சொன்னேன். சாயந்திர ஐந்துமணிக்குள்ள ஷெ இன்னாசியம்மாளுங் கைப்பிள்ளையும் ஷெ சாலமோனும் புறப்பட்டுப் போனார்கள். ஆசீர்பாதபுரம் மட்டுந் தேவதாசனுபதேசியானத் துணைக்குக் கூட அநுப்பினேன்,

அவர் தங்கச்சிக்கு விவாகம் ௨௰-உ என்றுயித்தம் பண்ணி யிருக்கச் சிறியபலபுத்தூருச் சேகரத்திலிருந்து மாப்பிள்ளை வராமல் தாமிதப்பட்டது. ஷெ கனம் ஐயரிவ்விடத்தில் ராத்திரி யிருந்து

௨௨—உ விடியக்காலம் ஊருக்குப் போனார். ஓய்வுநாள் காலையில் கனம் ஆற்கோட்டையபரவர்கள் ஆராதனை முடித்து மதியம் மீனாட்சிநாதபுரத்துக்கு நற்கருணை கொடுக்கப் போனார்கள். இங்கே மோசே உபதேசியார் ஆராதனை நடத்தினார்.

௨௩—உ எனக்கு கூடாமையினால் காயிதங்கள் எழுத ஆகவில்லை.

௨௪—உ யும் அப்படி யிருந்தது. கனம் ஆற்கோட்டையபரவர்களும் மோசே உபதேசியாரும் மேல் திசைக்குப்போய் ஞானிகளுக்குப் போதிக்கப் போனதாயும் இரவில் செபம் பண்ண ஒருவரும் இல்லை, யதனால் யாக்கோவுப்பிள்ளை செபஞ் செய்ததாகவும் செய்தி.

௨௫—உ பத்து மாங்கன்னுக்கு நூவ-மாகாணி கொடுத்து ஒரு ஆள் விட்டு வாங்கி வைத்தேன் தோட்டத்தில். பாளையங்கோட்டையிலிருந்து சஞ்சீவியும் சவரிமுத்துப்பிள்ளையும் எழுதியது வந்தது. ஷெ சவரிமுத்துப்

பிள்ளை வீட்டில் மனைவியும் குழந்தைகளும் பட்ட உபத்திரவ துன்பஞ் சொல்லமுடியாத வேதனை: அதில் விவாகம்மை மேய்மீ உ௪-௳ சனிக்கிழமையில் எட்டுமணி வேளையில் ஆண் குழந்தை பெற்றதாகவும், மூத்தின குழந்தை ரெம்ப வியாதியினாலும் பால் கெதிப்பினாலும் வருத்தப்பட்டதினால் அந்தக் குழந்தைக்கும் பால் கொடுக்கிறதாகவும், வெகு பாதாவ நிலைமையாயிருக்கிறதாகவும் வந்து கண்டு நாங்கள் மிகவும் துக்கப்பட்டோம். இரக்கமுள்ள தேவன் முற்றிலுங் காப்பாற்றுவாராக. கிருபை பெற்ற மரியம்மாள் தன் பேத்தியாருடன் மனஸ்தாப பட்டுச் சாப்பிடாமல் வேலையில்லாமல் அழுதுகொண்டிருந்தது. சாயந்திரந் தகப்பனார் காயித மவனுக்கு வந்தது பார்த்தபின் எனக்குங் காண்பித்து அவர் கெட்ட நிலைமையைப் பார்த்து எங்களுடன் சமாதான மானாள்.

உ௬—௳ காலைச்செபம் விசாரணை உபதேசியார், இரவில் தூத்துக்குடிக்குப் போன சாலமோன் வந்தான். எல்லாருஞ் சுகமே யிருக்கிறார்கள், இங்கிருந்து வழியில் யாதொரு விக்கினமன்றி உ௩-௳ இரவில் சேர்ந்து உ௫-௳ சாயந்திரம் ஷெ சாலமோன் கூட வண்டியில் கொழும்பு மிக்கேல்பிள்ளையும் ஞானப்பிறகாசம்பிள்ளையும் முன் போயிருந்தவர்களுங் கூட வந்தார்கள். ஷெ யிரவில் சுகமில்லை யென்று மலையாளத்தான் வீட்டில் தங்கினார்கள்.

உ௭—௳ காலையில் போனார்கள். பின்பு கனம் ஐயர் உபதேசிமார் கூட்டத்துக்கு வந்தார், இரவில் தங்கினார். பிள்ளைகளுக்கு மாப்பிள்ளைமார்கள் செய்திகளும் மற்றுங் காரியங்களும் பேசிக் கொண்டோம். சம்பழம் வராததினால் சிலவுக்கு வெகு முட்டாயிருக்கிறது எல்லாருக்கும், பாளையங்கோட்டையில் சங்கத்துக்குப் போகவும் வருத்தந்தான்.

உ௮—௳ காலையில் ஷெ ஐயர் ஊருக்குப் போனார். தவ்வாலில் சஞ்சீவிக்குக் காயித மனுப்பினேன். இன்று பதில் வரும் என்றிருந்தேன், வரவில்லை முனிசு இராயப்பபிள்ளை யவர்கள் காயிதம் மகனுக்கும், மகளைப்பற்றித் தோமாசுப்பிள்ளைக்கு விருப்பமிருக்கிறது போலவும், அவர் ஈ: கிரி கவிராயர்க் கடுத்த சனம் என்றும் எனக் கெழுதினார்கள்.

உ௯—௳ ஓய்வு நாள் மூன்று ஆராதனை கனம் ஆர்கோட் ஐயரவர்கள் நடத்தினார்கள். இரவில் ஷெ தோமாசுப்பிள்ளை தம ஊரிலிருந்து வந்தார்

௩௰—௳ நல்லம்மாள்புரத்துக்குப் போக. காலையிற் போகவில்லை. பின்பு சாப்பிட்டுச் சாயுங்காலஞ் சாலமோன் வந்தவன் கூடப்போனார். இரவில்



மோசே உபதேசியார் பாளையங்கோட்டைக்கு கண்காணியாரவர்கள் சோதனைக்குப் போகிறதாகச் சொல்லிப்போனார். தேவசகாயம்பிள்ளை யிடத்தில் ஐயாவுக்கு ஸ்ரீ ௲௫-கொடுக்கச் சொன்னதாகச் சொல்லும் என்றேன். சிலவுக்கு ரெம்ப முட்டாயிருந்தது அறிந்து கனம் ஐயர் நாறூறும் அனுப்பினார். கர்த்தர் தமதடியார்களைக் காப்பாற்றி வந்தவருக்கு ஸ்தோத்திரம்.

ஜூலாய்மீ ௧-௳ செவ்வாய்க்கிழமை

௧—௳ காலை வி. சத்தியநாத உபதேசியார் செபம். பின்பு கனம் ஆரோக்கியம்பிள்ளைவந்தார்; தமக்கு இவ்விடத்தில் அலுவலில்லை யென்றதினால் மனதுக்கு ஒரு விதமாயிருந்ததினாற் பாளையங்கோட்டைக்குப் போய்க் கிட்டினபிள்ளை, முத்தயபிள்ளை, எட்வொட்டுப்பிள்ளை, இவர்களிடத்தில் யோசித்தேன், அவர்கள் ஸ்ரீ ௧-க்கு ௲௰௨-க்குக் குறையாமல் கிடைக்கும் படிக்குச் சாப்பில் உமக்குக் கிடைக்கும், சமுசாரத்துடன் இங்கு வாருமென் றுறுதி சொன்னார்கள், இவ்விடத்திலுள்ள குடித்தனத்துக் கடுத்த நிலங்களை வீடு முதலிய வற்றையும் விற்றுச் சேக்கிறம் அவ்விடத்துக்குப் போறேம் ன்று தீர்மானஞ் சொன்னார்.

... நல்லம்மாள்புரத்து மரியம்மாள் வந்தாள். முதல் நாளில் ஐயர் ...துப் போக தோமாசுப்பிள்ளையும் கூடப் போனார்கள் என்றாள். ...விவாகஞ் செய்யவேண்டியதுகளைப் பற்றிப் பேசிக்கொண்டோம். ...று நிலங்களை யாக்கோவு வற்றுக்கொண்டதாக ஷெ கணக்கு பிரம ...ன்னான். இவ்விடத்தில் கனம் ஐயரவர்கள் உவாத்தி உபதேசி ...யர் சங்கத்துக்குப் போயிருக்கிறார்கள்.

...பாளையங்கோட்டையிற் சங்கம் நல்லம்மாள்புரத்துக்கு மரியம் ...படி. ஆள் வந்தது, மதியத்துக்குமேல் போனான். விசையாரு ...ல்ப்பிள்ளையைக் கனம் ஆர்கோட் ஐயரவர்கள் சபை கிற்போ ...சற்கும்படிக்கு ஞானப்பிறகாசம்பிள்ளை மூலமாய்ச் சொல்லி யனுப்பி ...லி விட்டேன். ஷெ யான் இராத்திரி வந்திருந்தான் சாமுவேல் ...வீட்டில்.

...௪—௳ ஷெ ஞானப்பிறகாசம்பிள்ளையும் யாக்கோவும் காப்பி சாப்பிட்டு ...சயபாளையத்துக்கு தலையனூர், தம்பி ஆவுடையனுக்கு ஆரோக்கியம் ...பிள்ளை கூடப் போனாரும்.

௫—௳ காலை வந்தான் யாக்கோவு, கனம் ஐயரவர்கள் சங்கத்துக்குப் போனவர்களும் வந்தார்கள்: மதுரேக்கிராஜயர் வரவில்லை, ஏத்தவாரத்தில்

வருகிறதாகவும் உபதேசியாரிடத்திற் சொல்லி ஒரு ரொட்டியும் எனக்குக் கொடுக்கச் சொல்லி விட்டார்.

௬—உ ஓய்வுநாள், இங்கே பரிசுத்த நற்கருணை பரிமாறப்பட்டது சனம் சுருக்கம்.

௭—உ போன ௴ சம்பளங் கொடுத்தார்கள். சபை சங்கம் நாலுமாசமாகப் பிடிக்கிறதென்று நிர்மாணித்து, இந்த சம்பளத்தில் பிடித்தம் ௯-இலி-௩.

௮—உ கனம் ஐயரவர்கள் கீள்சேகரத்துப் பள்ளிக்கூடத்துச் சோதனைக்குப் போனார்கள். யாக்கோவுப்பிள்ளை யிடத்தில் ஆரோக்கியம்பிள்ளை கிருமக்கணக்கு ஒப்புக் கொடுக்க வென்று உத்தரவுப்படி கிருமங்களுக்குப் போனார்கள்.

௯—உ தவ்வாலில் சஞ்சீவி காயிதமும் ஏசுதாசபிள்ளை கொடுத்த தென்று ௯-ம்வந்தது. கனம் மதுரேந்திரஐயர் ௫-உ சனிக்கிழமை நாத்துக் குடிக்குப் போனாராம்.

௰—உ தோட்டத்தில் கிறயபல்கள் ௯ பெயர்கள் வாலைக்கண்டை பிடிங்கியும் பல கில்லனா பண்ணினவர்களை உவாத்திக்கு அறிவித்துத் டித்தது.

௰௧—உ கொழும்பு மிக்கேல்ப்பிள்ளை வந்தவர் கல்லம்மாள் போனார் வேதனாயக உவாத்தியுங்கூட.

௰௨—உ மதுரேந்திரஐயர் காயிதம் வந்தது: அதிலவர் ... இடங்களிற் பிள்ளைகள் சுகசீருஞ் சுகவீனமும், தமது வீட்டில் சாக்கு உவாத்தியார் வீட்டார்கள் அடங்கலும் வந்திருக்கிற தா... வீட்டில் நிற்கிற டோய்க்குட்டியை அநுப்பவும் எழுதினார், அந்... யனுப்பினேன்.

௰௩—உ ஓய்வுநாள் ஆராதனை கனம் ஆற்கோட் ஐயரவர்க... படிக்கு மூன்று நேரமும் நடத்தினார்கள். சாயந்திரம் கல்லம்மா... விருந்து ஆட்கேறி மதுரேந்திரம்பிள்ளை கொண்டுவந்தார்.

௰௪—உ காலை கல்லம்மாள்புரத்துக்குப் போய்ப் பிள்ளைகளை ப... வரவென்று என் சமுசாரத்தை யனுப்பினேன். பின்பு கனம் மதுரேந்... ஐயர் வந்து ஆலங்கிணத்தில் சிவசுப்பிரமணியத்தேவர் மகளுக்குக் கலியாண முடிக்கப் போனார். ஷ கலியாணத்துக்கு அவர்கள் பாக்குவைக்க வாயது யாச்சொக்கி உபசாரவார்த்தை யாவது எங்களுக்குத் தேவதாச உபதேசி



சொல்லாமல், யாக்கோவுப்பிள்ளையை மாத்திரம் வருந்தி அழைத்தார். பின்பு இடையங்குடிப் பாக்கியம்பிள்ளை வந்தார்: குத்தாலத்துக்கு போகிற உவாயட் ஐயர் குழந்தைகளைப் பார்த்தனுப்ப வந்தார். இரண்டு வேளைச் சாப்பாடு மமது வீட்டிற் சாப்பிட்டிருந்தார். ஷ என் சமுசாரம் உடனே வந்து விட்டாள்,

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை மென்மேலும் பெருக உண்டாவ தாகவும்.

இவ்விடத்தில் நாங்கள் யாவருஞ் சேமம் தேவரீரக்கத்தினாலே. அவ்விடத்துச் சேமாதி சயங்களையும் அறிய விரும்புகிறோம். முன்னாலே நான் எழுதிய காயிதத்துக்குச் சரியான பதில் எழுதாமல் மருதார்ப்பிள்ளையைப் பற்றி மாத்திரம் எழுதினீர்.

அல்லாமலும் நான் எழுதியகாயிதம் தமக்கு விசனத்தைக் கொடுத்தது போல உமதண்ணாட்சி யவர்களுக் கெழுதியும் நான் கேட்டுக்கொண்டபடிக்கு ௴ ௯-கொடுக்கிறது அல்லது இல்லை யென்பதைப்பற்றி யாவது ஒரு வார்த்தையும் பேசவில்லைத் தமது மனப்படி நடக்கவில்லை நான். அது நிற்க, நீர் ௴ இவ்வளவு அநுப்புகிறதென்று நான் அறிய அல்லது இல்லை யென்றுவது அறிய விரும்புகிறேன்.

௭-ஸ்ரீ முனிசப்பிள்ளை குழந்தைகள் இரண்டு பேரையும் போடீங் பள்ளிக்கூடத்திற் சேர்த்திருக்கிறது.

மற்றுங் காரியங்கள் யாவுக்கும் பின்னாலெழுதுவேன். வேறு விசேஷமில்லை. தமதிடத்திற் சொல்லியிருந்த பெட்டகம் இன்னமும் செய்தனுப்பவில்லை. உங்கள் தாயாருக்கு மாத்திரம் மாத்து வஸ்திர மனுப்பினீர்.

உங்க ளெல்லாருக்கும் வாழ்த்துதலும் குழந்தைகளுக்கு முத்தியும் இடுகிறேன்.

௲௮௱௭௰௩-ம் இப்படிக்கு
ஜுலாய் ௴ ௰௪-உ சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம் பிள்ளைக்கு வருவது.)

---

௰௫—உ கனம் ஆற்கோட்டையரவர்களிடத்திற் போய் ஒரு ... விருந்தைக் கேட்டேன். தயவாய்த் தந்தார்கள். ஷ இடையங்குடி

ஐயாவர்களுக்கு என்னை அறிமுக முண்டாகப் பேசினார்கள். சாயுங்காலம் காருயணிக்குக் குத்தாலத்துக்குப் புறப்பட்டார்கள். பேடைக்குப்பிள்ளைகள் க்கு விசிதலை யன்றுதான். அந்தப்பிள்ளைகள் வருங்காலத்தில் சின்னத்தம்பி சவரிராயனையும் ஷை பள்ளிக்கூடத்தில் வரும்படிக்கும் உத்தரவு. தேவசகா யம்பிள்ளைக்கு ஒரு காயிதம் எனக்கு ஸ்ரீ ௲-கேட்டதுக்குப் பதில் உண்டு இல்லை என்பதுக்கு எழுதச்சொல்லி யெழுதினேன். சஞ்சீவிக்கும் ஒரு கடித மெழுதினேன் சுகசெய்திக்கு.

௧௬—௳ காலையில் ஷை மதுரோந்திரஐயர் வந்தார் கலியாணவீட்டிலி ருந்து தானே வந்தார், ஷை கலியாணம் வெகு சிறப்பாக ஜனாளிகள் அதி சயப்படத்தக்க விதமாய் மேளதாளங்கள், கீர்த்தனைகள் பட்டணப்பிறவே ஷங்களெல்லாம் நடந்ததாகவும், மற்றும் ஷை கலியாணக்காரர் தங்கள் தனது காரியங்களில் ஐயனைக்குடும்பத்தில் பிரதானி போல வைத்து, நசக்குடவாத் தியார் சனங்களும் சிவசுப்பிரமணியத் தேவர் வகைச் சனங்களும் வைத்துப் பேசிக்கொண்டதாகவும் சந்தோஷமாய்ச் சொன்னார். இரவில் நாங்கள் தன து காரியங்களைப் பேசிக்கொண்டோம், விசேஷமாய் ஞானிஷ் சவரியம்மாள் காரியத்தையும் கலியாணக் காரியங்களையும் பேசிக்கொண்டோம், வெகு கவலையோடிருந்தோம். மருதூர் தோமாசுப்பிள்ளை வந்திருந்தார், அவரைப் பற்றி நம்பிக்கையான சந்தோசமில்லாதது போலப் பேசினார் ஐயர்.

௧௭—௳ ஷை ஐயரை யிருக்கக் கேட்டுக் கொண்டேன், இருந்தார், ஆத்தூர்க்குடிக் காயிதம் வந்தது: என் பேத்தி மரியலியாகுலம் நாலாவது பிள்ளையுண்டா யிருந்தவள் பெருகாலத்தில் பிலவீனப் பட்டிருந்ததில் ஷை குழந்தை செத்துப்பிறந்தது. வெகு வருத்தமாய்ப் பிழைத்தவள், மரு பிறப்பென் றெழுதிவந்தது, பாதாபப்பட்டு யிருந்தோம். அது நடந்தது ௧௪-௳, எழுதினது ௧௬-௳ எழுதியது ஒன்று வந்தது, சுகமாயிருக்கிற தா கவும், தனக்கு அவ்விடத்தில் ஷை அலுவல் இரண்டாவது றபிட்டாரகக் கா யமாய் உத்தாவாய் வேலை பார்க்கிறதாகவும் வந்தது.

௧௮—௳ விடியக்காலம் ஊருக்கு ஐயர் போனார். யாக்கோவு முதல்யாள் விசையாகாரயணத்துக்குத் தனது காரியமாய்ப் போனான். சாயந்திர மின்று வந்தான் ஆலங்கிணறு பவுல் ஏகதாசபிள்ளை வந்து பேசிக்கொண்டுபோனார்.

௧௯—௳ காலைச் செபத்துக்குபின்பு நல்லம்மாள்புரத்திலிருந்து மதுரோ த்திரம் வசமாய்க் கிருபை பெற்ற மரியம்மாளு சோர்ந்திருக்காய் வந்தது, அவ்



விசையாகாருயணத்துக்குப் போய் வந்து நேற்கருணைச்சாமான் கொண்டு போ னார். ஷை விசையாகாருயணத்திலிருந்த மிக்கேல்ப்பிள்ளைக்கு காயிதம் ஐயர் அனுப்பினார் பொற்பஞ் செய்கிற வேலைக்கு. ஷை மிச்சேல்ப்பிள்ளை முனகு மு ட்டில் உடப்பிறந்தானைப் பார்த்து வரப் போய் விட்டதாகவும் வந்தது.

௨௰—௳ ஓய்வுநாள் யோசே உபதேசியார் ஆராதனை பிரசங்கம்.

௨௧—௳ காலையில்த் திசையன்விளைக்கு முத்துக்கண்ணு செட்டியார் வீ ட்டுக்கு கலியாண மொய்க்கொடுக்கிறதுக்கு என்றால் நடக்கக் கூடாதிருனால் என் சமுசாரத்தை யனுப்பினேன் ௲ உ கொடுத்து. சாயுங்காலம் அம்பாசமுத் திரத்திலிருக்கிற பாப்பம்மாள் நல்லம்மாள்புரத்துக்கு வந்து இங்கே வந்தார் கள் தலசிப்பிள்ளையும் வண்டிக்காரனும். அவன் மாப்பிள்ளை வளிக்காரர் சவ் வாள்கள். அவர்களுக்குப் படியும் மாட்டுக்கு வைக்கோலுங் கொடுத்தேன். ஷை அம்மாள் நமது சொந்தச்சனமாய்ப் போனாள் சிறிஸ்து மார்க்கத்திருனால். ஷை யாள் என் மகன் சவரிமுத்துப்பிள்ளை வீட்டிற்சேர்ந்திருக்கிறாள். அவள் க்கமோடு சாப்பிட்டு வேற்றுமை அன்றி யிருக்கிறாள், நமது சனங்களைத் தன து சனமா யெண்ணினதினாற் பார்க்கப் புறப்பட்டு, கூடங்குளம், இடையன் குடி, நல்லம்மாள்புரம், சுவிசேஷபுரம், விசையகாருயணத்துக்கும் போனாள். பாளையங்கோட்டைக்கும் போய்ப் பார்த்தார்கள்.

௨௨—௳ என் சமுசாரம் வந்தாள். காலையில் வீட்டிலிருந்தவர்கள் யா வருஞ் சமையலாய்க் காலை காப்பியும் சாப்பாடுங் குறை வின்றி நடந்தது. மதி யத்துக்குமேல்ப் பயணப்பட்டு விசையகாருயணத்துக்குப் போனார்கள். நமது வீட்டில் இன்று விசேஷ மொன்று: இராவிற் சமையலுக்கு அமுதுபடிக் கிடை க்கவில்லை, யெப்படி யென்றால் இன்றுவரை அமுதுபடி யிருந்தது, முதல் நாள் யாக்கோவு நெல்லறுப்பாடு வருமென்று சொல்லி யிருந்தான், அதை நம்பி யிருந்து நாங்கள் நெல்லிலைக்கு வாங்காதிருந்தோம். அவன் நெல்லடித் துக் களத்தில் அம்பாரம்போட்டு எங்களுக்கு நெல் கொண்டு வாவில்லை யிருந்தான் வந்ததினால் வீட்டிலிருந்த அரிசி முதல்நாளே செலவாய்ப் போய் விட்டது. ௨௩-௳ காலையில் அவன்தானே அரிசிக்கடன் வாங்கிக் கொடு க்கும்படி செய்து விலை யரிசி வாங்கினதாம் இருக்கப் பேத்தியாள் வந்ததி னால் ஒன்றும் பாராமல் நெல்லு வருவியாமலிருந்து விட்டான். அதினா லரிசிக்கடன் கிடைக்க வகையில்லாமல் ஷை பேத்தியாள் சமையல் செய்ய வில்லை, எல்லாருஞ் சாப்பாடில்லாம லிருந்தோம். இராவில் ஷை யாக்கோபுப் பிள்ளை வந்து சாப்பாடு போடென்றான். சப்பாடு எங்கேருந்து வரும், அரிசி

யில்லை செல்லுமில்லை; ஆர்வீட்டிலிருக்கிறது அரிசிதா, அதுக்கிடமில்லை, என்
று உடனே பேசாமற் போய் விட்டு வந்து படுத்துக் கொண்டான். எல்லா
ரும் அப்படியே. என் கால மிதுவரையில் இப்படி நடந்ததில்லை.

உ௩—௳ யும் ஷெ யான் செல் வரவேண்டுமென்று நினைக்கவும் வரு
விக்கவும் இல்லை, அதினால் ஷெ பேத்தியாள் தக்கப்பட்டுக்கொண்டு உபதே
சியார் வீட்டில் அரிசிக்கடன் வாங்கி வந்து சமைத்துச்சாப்பிட்டோம். ஷெ
யான் பனிரண்டுமணிக்கு வந்து சாப்பிட்டுப் போனான். வேண்டியதெல்லா
மவன் பேத்தியாள் சொல்லியும் பேசாமற் போய்விட்டான். நான் விலைக்கு நெ
ல் வாங்கப் பணம் என்னிடத்திலிருக்கக்கூடும் ஷெ யான் கொண்டுவருகிறது
நிச்சயமென்று பழயகட்காரருக்கு கூலைச் செலுத்திப் போட்டதினால் பேச
க்கில்லை; பொழுது அடைகிற நேரத்தில் வண்டியில் ஷெ யான் செல் வந்த
து. பேத்தியாள் கூடப் பேசாதிருக்க அவன் பதினைந்துபடி செல்லெடுத்து
இரவில் அவித்துபோட்டான். சமையல் செய்த பின்பு ஷெயான் சாப்பிட்டுப்
போனான். உச-௳ காலையில் ஓலைக்குப் பணங்கொடுத்தமத்த குமாரன்விளை
உவாத்தி யிடத்திற் போனாராம். உரு-௳ இரவில் வந்து சாப்பிட்டான்.
ஒன்றும் பேசவில்லை.

உசா—௳ நமது வீடு முழுதும் பெருச்சாளிப்புடை வெட்டிச் சோதித்
துப் பிடித்தது ச. முழுநாளும் ஓராள் வேலை.

உஎ—௳ ஓய்வு நாள்காலை யாராதனை கனம் மதுரேந்திர ஐயர். பின்பு
அவர் மீனாட்சிசாத புரத்தில் நற்கருணை பரிமாறிவந்து இரவிற்சாப்பாடு.

உஅ—௳ காலையிலிருந்து சாயந்திரம் மழைவிட்டதின் பின்பு நல்லம்மா
ள்புரத்துக்குப் போனார். மற்றும் பெண்காரியங்களும் சுகமில்லாத நுவீ
க்கு மருந்து ஆகவேண்டியது சவதரித்துப்போனார்.

உகூ—௳ ஆலவாய்ப் பிள்ளைமகன் செபத்தியான் பிள்ளை வந்து தன் பி
ள்ளைக்கு சிரட்டினதுக்கு வேர் வாங்கிப் போனார். யாக்கோவு முதல்நாள்
விலைசபாரூபணத்துக்குப் போனவன் இரவில் இன்று வந்தான்.

௩௰—௳ ஷெ சொம்பாடி நரிசுடித்த பிள்ளைமகன் தன்பேரன் சுகத்தை
ப்பற்றிக் கேட்டுக்கொண்டாரவர் போனார் சொல்லாமல் மேலவீட்டுக்குப்
போனார்,

௩க—௳ சாயுங்காலம் யாக்கோவுப் பிள்ளை அணைக்கரைக்குப்போனான்.
இரவுவரவில்லை. பாளையங்கோட்டையில் ஷேடின பிள்ளையவர்கள் மகன்
கலியாணத்துக்குப் போயிருந்த கணக்கப் பிள்ளையவர்கள் வரத்தில் முனிசு



283

இராயப்ப பிள்ளை காயிதம் மகள் திருமணபெற்றோருக்கும் கனம் மதுரேந்திர
ஐயற்கும், சஞ்சீவி காயிதம் எனக்கும் வந்தது. அவ்விடத்தில் நமதுவீட்
டிற்போயிருந்த கணக்கபிள்ளை சமுசாரத்துடன் தேவசகாயம் பிள்ளை மனை
வி பேசாதிருந்து விட்டாளாம், புருஷனார் வாருங்களென்றதன்றித் தகப்பனார்
தாயார் முதலியவர்களை விசாரிக்கவாவது காயிதமாவது ஒன்று தாவுமில்லை
யென்றார். முனிசு ராயப்பபிள்ளை பிரிந்த வீட்டில் சமையல் செய்துகொ
ண்டிருக்கக் கண்டார்களாம். அவர் தன்மகளை மருதக்கரை வசுதாசபிள்ளைக்
குக் கொடுக்கலாம் போலப் பேசினாராம். சஞ்சீவியும் அப்படியும் எழு
தி அம்பாசமுத்திரத்து அண்ணாட்சி குழந்தைக்கு பின்னும் சுகமில்லாதிரு
க்கிறதாய்க் கேள்வி யென்றெழுதினான். இந்தவிதமாகச் சுகசெய்தி யறிந்த
தன்றித் தேவசகாயம் முதலானவர்கள் செலவுக்குப் பணம் ஒன்று மனுப்பவில்
லை. இந்தமாசங் கர்த்தர் சுகத்துடன் முடியச்செய்தவருக்கு ஸ்தோத்திரம்.

ஆகஸ்துமீ க-௳ வெள்ளிக்கிழமை.

காலையில் யாக்கோவு அணைக்கரையிலிருந்து வந்தான்: போனது இன்
னது யென்று சொல்லுகிறதில்லை, தன் காரியம். ஷெ மதுரேந்திர ஐயற்கு
வந்தகாயிதங்கள் அநுப்பாதிருக்கிறது. உ—௳ யும் ஆள்போகவில்லையதினால்.

௩—௳ காலைச் செபத்துக்குப் பின்பு கனம் மதுரேந்திர ஐயர்வந்து மதி
யத்துக்குமேல் பிரசங்கம், நாப்போசனமும் பரிமாறினார். ஈசாக்குப் பாய்த்தர்
பத்து நாளா யிங்கிருந்தவர் ஒன்றும் செய்யவில்லை, அசனூர்ச் சபையான் போ
யிருந்தார். சாயந்திரம் ஆலங்கிணாத்துச் சிவசுப்பிரமணியத் தேவற்கு வியா
தி வருத்தமாயிருக்கிறதாக மதுரேந்திர ஐயர் கேட்டுப்பார்க்கப்போய் வந்தார்
அந்த மனிதன் விசுவாசத்தில் உறுதியாய்க் கிறிஸ்துவினால் இரட்சிக்கப் பட்
டதாய் அறிக்கை யிட்டுத் தயிரியமாய் மரணத்துக்கு ஆயித்தமாயிருக்கக் கண்
டதாகச் சொன்னார், தேவபிரக்கந்தான்.

ச—௳ பரப்பாடி சபையிலிருந்துவந்த இரண்டு பேருக்கு ஞானஸ்நா
னம் கொடுத்தார். மூக்கிணாள் வேதனூபக உவாத்தி மகனுக்குக் கலியாண
ஓலையும் கூறினார்கள். சாயுங்காலம் ஊருக்குப்போனார். இரவில் எனக்குச்
சுகமாயிருக்கவில்லை.

ரு—௳ விடிய வாக்கியும் பேதியும் உண்டாயிற்று. அதிக உபத்திர
வமில்லை, தளர்ச்சியாயிருந்தது. யாக்கோவுப் பிள்ளை கிராமத்துக்குப் போ
யிருந்து, சா—௳ இரவில்வந்து, எ—௳ காலையில் மறுபடியும்போனான்.

சேமத்து நல்லதம்பியா பிள்ளை மகன் ஞானப்பிரகாசம் பிள்ளையும் அவன் மட்டினனும் சாயந்திரம் விசாரணைப் பிள்ளை யவர்கள் வீட்டுக்கு வந்திருந்தான். இரவில் நமது வீட்டில் வந்து சுகசெய்தி பேசிக்கொண்டோம். அவனுக்குக் கலியாணம் முடித்து ஒருபெண் குழந்தையும் பிறந்திருக்கிறதாம். இன்னாசியம்மாள் மகள் சேமத்து அருளானந்தம் பிள்ளை மகனுக்குக் கலியாணம் முடித்துப் பிள்ளை ஒரு ஆண் குழந்தை பெற்றாளாம். நாசரேத்தன்பு நூர்கனாயாளன் ஞானப் பிறகாசம் பிள்ளையும் அவன்தாயும் இறந்து போனார்கள் என்று முன்னால் கேட்டது பொய்யாயும், அவர்மாமிக்குத்தேசியம்மாள் மரித்தது மெய்யென்றுஞ் சொன்னார்கள். ஷை யாரிடத்தில் வேதத்தைக் குறித்துப் பேசும்போது ஷை ஞானப்பிறகாச உபதேசி ஒருசாணன் குண்டு, அடைக்கிற காயிதப் புஸ்தகங் கொண்டுவந்தா னென்றான், உடனே நான் அவனை ஏசி, மிசியோன் சோறுதின்றுவளர்ந்த நீ யப்படிச் சொல்லலாட்சா, உன் முகத்தில் முளிக்கப்படா தென்றும் விசனித்தேன். அவன் வெள்கிப் போனான், அவன் வந்தகாரியம் ஒன்றும் எனக்குச்சொல்லாமல் மேலவீட்டில்த் தன் சின்னய்யா மகள் அன்னம்மையிடத்திற் பேசினானோதெரியாது. வடக்கன் குளம் மாப்பிள்ளை சின்ன ஞானப்பிறகாசம்பிள்ளை எனக்கு ஒரு காயித மனுப்பினதில் ஷை யான் தங்கள் பிதாக்கள் மனையும் வீடும் விலையாகுகிறது போலவும், அதை யென்னைவாங்கச்சொல்லியும், வேண்டாம் என்றாலும் தமக்கு ஆ வாங்கித் தரவேண்டுமென்றும், அதற்கு அவனுக்கு இங்கே சொக்கார ரிருக்கிறதுபோலவும், அந்த யிடத்தை வேறொருவருக்கும் விடாமல் நமக்கே வாங்கவேண்டுமென்றும் என்னையும் அவர் அக்காளையும் பார்க்க ஆசையா யிருக்கிறதினால் வர வேண்டும் என்று எழுதினார். அந்தக் காயிதத்தினால் ஷை யானிவ்விடம் வந்தகாரியந் துலங்கிற்று. அவன் மருகாளுமிருந்தவன் நமது வீட்டுக்குவரவும் இல்லை, வந்தகாரியம் ஒருவருக்குந் தெரியாதிருந்து அணைக்கரைப் பாதைக்கு வந்தவழியாய் ௯—௳ காலையில் எங்களிடத்திற் போகிறதாகச் சொல்லிப் போய்விட்டார்கள்.

நல்லம்மாள்புரத்தில்த் துலாக்கலையற்று விழுந்து கை பிசகியிருந்த மதுரேந்திரம் பிள்ளை பூலுத்தேவனிடத்தில் வந்துபார்த்துக் கொண்டு போனார். யெனக்குச் சாப்பாடு ஒருத்தலாய் விருப்பமில்லாதிருக்கிறது இரண்டு மூன்று நாளாய்.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.



இவ்விடத்தில் யாவரும் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதி சயங்களையும் அறிய விரும்புகிறோம்.

நான் உமக்குப் போனமீ மூன்றும்மீ எழுதியதுகள் தமக்குத் தெறிந்ததினால் இப்போ தெழுதும் வகை யொன்றையுங் காணேன்.

ஆகினுஞ் சாதிக்காய்ப் பலகையில் ஒரு பெட்டி செய்தனுப்பக் கேட்டது இன்னமும் வரவில்லை. அருமைப் பேரன்மார்களைப் பார்க்க ஆசையுண்டு, அதற்கு அபாத்திரமாய் நடக்கப்பிலனில்லை. மேலு மடிக்கடி சுகவீனமும் சேரிகிறது, கண்ணிருளாகிறது, உமது தாயாருக்கும் அப்படித்தானிருக்கிறது.

அம்பாசமுத்திரத்திற் குழந்தைக்கு சுகமெப்படி, திருநெல்வேலித் தம்பியும் பிள்ளைகளும் மற்றவர்கள் சுகமுமெப்படியிருக்கிறது என்றறியவும் விருப்பமா யிருக்கிறோம். அம்பாசமுத்திரத்திலிருந்து பாப்பு அம்மாள் இவ்விடங்களுக்கு வந்து நம்மது சனங்களைப் பார்த்துப் போனார்கள். ஊர் சேர்ந்ததுக்குச் செய்தி வரவில்லை.

கர்த்தர் எல்லாரையும் தம தடைக்கலத்தில் வைத்துக் காற்றுக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

வேறு விசேஷமில்லை. உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறேன்.

௲அ௱௭௰(௩) — இப்படிக்கு

ஆகஸ்து மீ ௭-௳ — சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம் பிள்ளைக்கு வருவது.

---

௰—௳ காலையில் யாக்கோவுப்பிள்ளையும் கணக்கப்பிள்ளையும் வந்தார்கள். மதிய ஆராதனை விசாரணை உபதேசியார் நடப்பித்தார். தேவசகாயம் பிள்ளைக்கு அ-௳ யனுப்பிய காயிதத்துக்கும் பதில் வரவில்லை. சஞ்சீவி காயிதம் வந்தது. திருநெல்வேலி ஏசுதாசபிள்ளை மீ உ—க்கும் கூடு கொடுத்ததாகவும் எழுதினான்.

௰க—௳ ஷை சின்ன ஞானப்பிறகாசம் பிள்ளை யெனக்கு எழுதின காயிதத்தை நம மதுரேந்திர ஐயரு கனுப்பினேன். யாக்கோவுப் பிள்ளை கிராமத்துக்குப் போனான்.

௰உ—௳ ஷை சின்ன ஞானப்பிறகாசம் பிள்ளைக்கு தெய்வாயியாத்தாள் வீட்டைப் பற்றிய வியாட்டிய வளக்குகளை யெல்லாம் விபரமாயெழுதி, ஷை

285



வீடு நமக்கு வேண்டாம், உமக்கு ஷ வீட்டைப்பற்றின வளக்குப் பேசக் கூடுமோனால் வளக்காடி உங்களுக்கு ஆசப்பண்ணுங்கள், ஷ காமநாதித்தன் புதார் இன்னாசிமுத்துக் கணியானிடத்தில் அடமானம் வாங்கினது போலச் செப்புமென் றெழுதினேன். ஷ இன்னாசிமுத்துப்பிள்ளைக்கும்: அந்த வீட்டில் இருந்துகொண்டு ஷ கேமத்தானிடத்தில் எங்களுக்குத் தரவேண்டிய பணத்தைத் தந்து விட்டு ஆருக்காவது வித்துப் போடச்சொல்லும், மற்றப்படி நம்மால் வளக்குப் பேசவும் பணம் வாங்கவும் கிராணி யில்லையென் றெழுதி விட்டேன்.

௰௩-உ கல்லம்மான்புரத்திலிருந்து மதுரேந்திரப்பிள்ளை வந்து: மூளகுமூட்டுக்குப் போயிருக்கிற மிக்கேல்ப்பிள்ளையைக் கூட்டிவர உத்தரவு கேட்டுக்கொள்ளவும் வந்தேன், அக்காளும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் உங்களுக்குச் சொல்லச் சொன்னதாகவும், ஷ ஐயரவர்கள் அறியாமல் ஓடிப்போகிறேன், வந்த பின்பு கோவிப்பார்களதுக்கு நீங்கள் பேசிக்கொள்ளுங்கள் எவ்விதமும், அந்தமனிதனுக்கு வேலையிருக்கிறது, அதினால் இங்கு வந்த பின்பு மற்றதைப் பேசிக்கொள்ளலாம் என்றும் பேசிக்கொண்டதுப்பினேன்.

௰௪-உ காலையிற் கனம் ஆர்கோட்டையரவர்கள் குற்றாலத்திலிருந்து வந்தார்கள்.

௰௫-உ பொதுக்கூட்டம் உபதேசிமார், நற்கருணையுங் கொடுத்தார்கள் கனம் மதுரேந்திர ஐயருங் கூட.

௰௬-உ விடிக்காலம் போய்விட்டார். சாயுங்காலம் சாலமோன் வந்தான்: மதுரேந்திரஞ் சொல்லாமல் போய்விட்டான் வடக்குன்குளத்துக்குப் போய்வர உத்தரவு ஐயரவர்கள் கொடாததினால் யென்று நிர்யாணித்துத் தேடாதிருந்தார்களாம். ஷ சாலமோன் ரொட்டி வாங்கிப் போனான்,

---

†

மிகவும் பிரியமுள்ள தம்பி தேவசகாயம் பிள்ளைக்குத் தேவ கிருபையென்மேலும் பெருக உண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருங் கர்த்தருடைய இரக்கத்தினாலே சேமம். அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையு மறியவிருப்புகிறோம்.

தாமனுப்பிய காயிதம் வந்து பார்த்து சகல சமாசாரமுமறிந்து சந்தோஷமானோம். வடக்குன் குளத்திலிருந்து ஈ: மாப்பிள்ளை ஞானப்பிரகாசம் பிள்ளையவர்கள் ஆத்தாள்தோசைக்காரி வீட்டை யவள் பேரன் மகன் ஞானப்



பிரகாசம் விற்கவும் ஷ சொக்காரர் சுவிசேஷபுரத்திலிருக்கிறது போலவும் அந்த மனையும் வீடு நமக்கு வாங்கவேணும் அல்லவென்றால் நமக்குவாங்கித்தங்களுக்குத் தரவேண்டுமென்று எழுதி ஷ கேமத்தான் வசத்தில் எனக்கனுப்பினார்கள்.

ஷ காயிதங் கொண்டுவந்தவன் அணைக்கரைக்கு வந்து இங்கன்னம்மைவீட்டில் வந்திருந்து நமது வீட்டிலும்வந்து சுகசெய்தி பேசிப்போனான். வந்தவகையாவது ஷ வீட்டைப்பற்றி ஒன்றும் பேசாமல் போய்விட்டான். ஷ காரியங்களைப்பற்றி ஈ: மாப்பிள்ளை ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களுக்கு விபரமாய் அந்த வீட்டைப் பற்றிய வளக்குக்கணக்கு எல்லாம் எழுதி; ஷ வீடு எங்களுக்குத் தேவையில்லை, நீங்க வேண்டுமோனால் வளக்காடி ஷ வீட்டின்பேரில் என்கொழுந்தி தெய்வாயி மகள் இன்னாசியம்மாளுக்கு வரவேண்டிய பணத்துக்குத் தாங்கள் அடமானமாக வாங்கினதுபோலப் பேசி யவள் பணத்தைக் கொடுத்துவிட்டு தாங்களே எடுத்துக்கொள்ளலாமென் றெழுதினேன்.

அப்பால்த் தாமிவ்விடத்துக்கு வந்தால் மற்ற விபரங்களைப் பற்றியறிவீர். தாம் சரூசார சயிக்கமாய் வருவீர்களென்று சந்தோஷமாய் வழியாற்றிருக்கிறோம். வரும்போது நமக்குச் சமையல் செய்கிற குட்டடுப்பு உடைந்து போனதினால்ப் பதிலாக ஒரு பெரிய அடுப்பு வாங்கி வண்டியில் வைத்துக் கொண்டுவரவும். ஷ அதற்காக மிக்கேலருளம்மாளுக்குச் சொல்ல உங்கள் தாயார் முத்தம்மை வசமாய்ச் சொல்லியும் விட்டாளாம்.

தம்பி சஞ்சீவிக்கு மெழுதி உமக்குச் சொல்லவும் எழுதினேன், அவசரமான காரியம். உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௩-௵ இப்படிக்கு
ஆகஸ்து ௴ ௰௮-உ சவரிராயன்

(இது:— பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம் பிள்ளைக்கு வருவது.)

---

௰௭-உ ஆராதனை மோசே உபதேசியார் நடப்பித்தார். கனம் ஐயரவர்கள் சடையநேரியில் ராப்போசனங் கொடுக்கப் போனார்கள். இன்று முழு நாளும் எனக்குத் தளர்ச்சியாய்ச் சுகமில்லைச் சாப்பாடுஞ் செல்லவில்லை.

௰௮-உ யும் அப்படித்தான் நல்லசுகமில்லை, ஆகிலுந் தேவசகாயம் பிள்ளை, சஞ்சீவிக்கும் காயிதம் எழுதினேன் சுகசெய்திக்கு மாத்திரம். அவர்கள்

விடுமுறை நாளாயிருப்பதினால் இங்கேவரும்போது ஒரு குட்டிப்பும் சில வித்துகள் தோட்டத்திற் போடவுங் கொண்டுவரச் சொல்லி எழுதினேன். இரவில் சாலமோன் தவ்வாநுக்குக் காயிதம் அனுப்பவந்தான். ௰௯-௳ போனான்.

உ௰-௳ த. சஞ்சீவிகையிற் காயிதம் போகவில்லை, சாயந்திரம் புறப்பட்டு ரெட்டியார்பட்டியிற் தருமி உ௧-௳ வீட்டுக்கு வந்து சேர்ந்தான். தேவசகாயம் பிள்ளைவரவில்லை. இரண்டு மூன்று நாள் காப்பி யில்லை உ௨-௳-யும், சாயந்திரம் ஷை மதுரேந்திரம் பிள்ளை மூளகு மூட்டுக்குப் போயிருந்த மிக்கேல்ப் பிள்ளையைக் கூட்டிவரப் போனதாயும், அவர் அங்கிருந்து குளித்துறைக்கு சமீபமாயிருக்கிற யிடத்தில் வேலைக்குத் திட்டஞ் செய்து வேலைபார்க்கிறதினால் இரண்டு மீ களித்து வருவேனென்று சொன்னதாய் வந்தார். உ௩-௳ கல்லமாள் புரத்துக்குப் போனார். ஒருவருக்குஞ் சொல்லாமல் ஓடிப்போனதினால் ஐயரவர்கள் என்ன சொல்லுகிறாரோ வென்று பயந்தோடி போனார்.

உ௪-௳ ஓய்வுநாள்க் காலைச்செப முடிந்து கனம் ஐயர் மீனாட்சிநாதபுரத்துக்கு நற்கருணை பருமாறப்போனார்கள். மதியம் உபதேசியார் ஆராதனை.

உ௫-௳ கட்சேரி பங்களாப்பிரித்து ஓலைகட்டுகிறார்கள். கனம் ஒயிட்டையர் இடையன்குடியிலிருந்து இங்குவரும் வழியில் கடைகுளத்தான் சத்துரம் வழத்த நாய் வந்து குதிரைமேல் பாய்ந்து குலைக்க குதிரைகலைந்து தியாமல் ஓட, விசாரணைப் பிள்ளையவர்கள் வீட்டிற்போய், ஷை ஐயரவர்கள் கீழே விழுந்து அற்புதமாய்ச் சேதமின்றிக் காப்பாற்றப் பட்டது.

உ௬-௳ மேது ஆட்டுக்குட்டி பங்களாவுக்குப் போனதினால் பிடித்துக் கட்டப் பட்டதுக்கு அபராதம் பசாஉ-கொடுத்தது. கனம் ஐயரவர்கள் சாயுங்காலம் வடதிருநெல்வேலிச் சேகரத்து ஐயரவர்களிடத்துக்குப் போனார்கள், இம்முனிச் சாமுவேல்ப் பிள்ளை வண்டிக்குப் போனார்.

உ௭-௳ த. சஞ்சீவி கல்லம்மாள் புரத்துக்குப் போனான், இரவு யாக்கோவும் போனான். இங்கேயிரவில்ப் பிச்சைமுத்துப் பிள்ளை வென்னைப்பார்க்கவந்தார்; எனக்குண்டாகிய வியாதிக் குணங்களைக் கேட்டுச் சில தப்பழம் யாத்திரை மருந்தும் நடக்கவேண்டிய பாகங்களுஞ் சொன்னார், சாப்பிடாமலும் போனார் உடனே. மகளும் மருமகனும் திசையன்விளையிற் தன்மகள் பேறுகாலத்துக்கு வந்திருக்கிறதாகவும் அங்கே போய்த் தன் மருமகன்கூடப் போசனஞ் செய்யவென்று போய்விட்டார்.



௩௰-௳ காலை யாக்கோவுஞ் சாயந்திரஞ் சஞ்சீவியும் வந்தார்கள்.

௩௧-௳ ஓய்வுநாள் மோசே உபதேசியார் ஆராதனை நடப்பித்தார்.

செப்தெம்பர்மீ ௧-௳ திங்கள்கிழமை.

ஷை மோசே உபதேசியார் தேசாந்திரம் போதிக்கப் போனார். வி. சத்தியநாத உபதேசியார் செபம் நடப்பிக்கிறதாம்.

௨—௳ த. சஞ்சீவிப் பிள்ளை அட்சம்பாட்டுக்குப் போனான், வீமன் தரவேண்டிய தூயைக் கேட்கப் போனான். அந்தமனிதன் கள்ளத்தனவளக்குப் பேசினதாகவும் அதற்குச் சுப்பய்யனுடான் இசைந்துபேசி நம்முடைய உண்மையை மறந்து பேசினானும். அதினால் ஷை வழக்குமுடியாமல் வந்துவிட்டான். எனக்குப் பித்தத்தினால் உலாந்தியாய் ஆயாசப்பட்டிருந்தேன்.

௩—௳ கோவிலுக்குப்போக முதலாய்க் கூடாமலிருந்தேன். வீடுகட்ட ஓலைவருகிறது கல்லம்மாள் புரத்திலிருந்து.

௪—௳ சஞ்சீவிப் பிள்ளை சோதனைக்குப் படிக்கிறான்,

௫—௳ யாக்கோவுப் பிள்ளை சந்தைக்குப் போய்வந்தான் சாயந்திரம்.

௬—௳ சாயந்திரம் வடக்குன் குளத்தில் வந்திருந்த என்மகனும் மருமகளும் பிள்ளைகளும் வண்டியில் வந்தார்கள். வண்டிக்காரனுக்கு படிஅரிசி கறியெல்லாங் கொடுத்தோம். ஷை யான் வசத்தில் ஷை என் மகனைக்கொண்டோக்கிட்டர் தேவசகாயம் பிள்ளை வசத்தில் இருக்கிற என்விளை ஒட்டுவாலத்தை மிகியோன் குடியிருப்புச் சுவாமிதாசனுக்கு விட்டு விடும்படிக்கு எழுதியனுப்பினேன்.

௭—௳ காலைச்செபம் முடிந்தபின்பு கனம் மதுரேந்திரஐயர் வந்தார். மதியத்துக்குமேல் நற்கருணை பரிமாறப் பட்டது. இரவில்த் தங்கியிருந்தார்.

௮—௳ ஆலங்கிணத்துக்குப்போய்ச் சிவசுப்பிரமணியத் தேவனைப்போய்ப் பார்த்துவந்தார். அனைக்கரைத் திருநாளுக்குவந்த கடைவீட்டுச் சவரிமுத்துப் பிள்ளையும் ஈசுபுரத்து மணியாரப் பிள்ளை பெஞ்சாதி அன்னம்மையும் வந்தார்கள். இரவு சாப்பிட்டபின்பு கனம் ஐயர் கல்லம்மாள் புரத்திற்குப் போய்விட்டார்.

௯—௳ யாக்கோவுப் பிள்ளை ஒரு டாய் ரூ ௩௰-க்கு வாங்கியனுத்தது.

௰—௳ ஷை ஐயர் ஒரு கலியாணம் முடிக்க வருகிறதாய் இருந்தது. அந்தப் படிக்கு வந்திருந்து ௰௧-௳ இரவிற் போனார்.

௰௨—௳ வடக்குன்குளம் கடைவீட்டு சவரிமுத்துப்பிள்ளை கட்டுச்சாதமுங்கொண்டு ஊருக்குப் போனவர் திரும்பி மணப்பாட்டுக்குப் போறதாய்ச்

கேட்டோம். தேவசகாயம் பிள்ளையும் யாக்கோவுப் பிள்ளையுந் திஷசயன் விளை ஊருஞ் சந்தையும் பார்த்து வந்தார்கள். இஞ்சிப்பிள்ளை வேலை இரோனிபூஸ்பிள்ளையும் குதிரைக்காரனும் வந்து நமது வீட்டிற் தங்கிச் சாப்பிட்டு மறுநாள் ௰௩-வ சாயந்திரம் போனார். அவர் கருசற்பற்று நிலவிசாரணைக்கு வந்தது.

௰௪—வ ஓய்வு நாள் ஆராதனை காலையின் உபதேசியார், மதியம் விசாரணை உபதேசியார்.

௰௫—வ ஆள் ஒன்றுவிட்டு வேலியடைத்துப் பூசணியும்போட்டோம்

௰௬—வ தேவசகாயம் பிள்ளை தனையனார் வீட்டுக்கு நல்லம்மாள் புரத்துக்குப் போனார். யாக்கோவுப் பிள்ளை முகிலன்விளைக்குப் போனார்.

௰௭—வ வந்தார்கள். காலையில் ஆலங்கிணற்றுச் சிவசுப்பிரமணியத்தேவர் மரித்ததாகச் செய்திவந்தது. மேல வீட்டிலுஞ் செய்திக்கு ஷெ ஆள் வந்ததாகவும் கணக்குப் பிள்ளை, விசாரணை உபதேசியார், மோசே உபதேசி, முதலானவர்கள் ஷெ துட்டிக்குப் போய்வந்தார்கள். கனம் மதுரேந்திர ஐயரவ்விடத்துக்குப் போய்ச் செபஞ்செய்து சிறப்பாய் அடக்கஞ்செய்து இரவிலிங்கே வந்து, உடனே ஷெ நல்லம்மாள்புரத்துக்குப் போனார் கூட யாக்கோவுப்பிள்ளை ஞாத்துக்குடிக்கு சகோதரி மரியவியாகுலத்து வீட்டுக்குப்போகப் புறப்பட்டுப் போனான்.

௰௮—வ காலையில் என் மனைவியும், மலையாளத்தாள், நேமத்தாள், உபதேசி தாயும், ஷெ ஆலங்கிணத்துக்குப் போய், ஷெ தேவர்துட்டிகேட்டு வந்தார்கள். ஷெ தேவர் நல் விசுவாசத்துடன் மரித்ததினாற் கிறிஸ்தவர்களுக்கு சந்தோஷம்.

௰௯—வ சாயந்திரம் தேவசகாயம் பிள்ளை ஷெ ஊருக்குப் போய்த் தேவதாசனுபதேசியாரிடத்தில் கேட்டுவந்தான்.

௨௰—வ காலையில்ச் சஞ்சீவி நல்லம்மாள் புரத்துக்குப்போனான். சாயந்திரம் தேவசகாயம் பிள்ளை இடையங்குடிக்குப் பாக்கியம் பிள்ளை வீட்டுக்குப் போனான்.

௨௧—வ நற்கருணைச் சாமானுக்குச் சாலமோன்வந்து போனான். காலையில் கூனியூர் தம்பி ஞானப்பிறகாசம் பிள்ளை காயிதம் வந்தது, எல்லாருஞ் சுகம். மோசே உபதேசியார் ஆராதனை செய்தார்.

௨௨—வ சஞ்சீவி நல்லம்மாள் புரத்திலிருந்து வந்தான். கனம் ஐயரம்மாள் யாவரும் குத்தாலத்திலிருந்து வந்தார்கள் காலை எட்டுமணிக்கு



மேல். சாயந்திரம் ஷெ ஐயரவர்களையும் அம்மாளையுங் கண்டுவந்தேன்.

௨௪—வ ஆலங்கிணறு தேவதாசனுபதேசியாரும் மனைவிபிள்ளையுடன் சென்னபட்டினத்துக்குப் போகிறதாக வந்தனுப்பிக் கொண்டு போனார்கள். இரவில் ௮-மணிக்குமேல்த் தேவசகாயம் பிள்ளை சமுசாரங் குழந்தைகளுடன் சஞ்சீவிப் பிள்ளையும் பாளையங் கோட்டைக்கு புறப்பட்டுப் போனார்கள், எனக்குச் சுகவீனம் பெலவீனமாயும் இருக்கிறதினால் பிள்ளைகள் போகிறது மிகுந்த துக்கமாயிருந்தது. கூனியூர் தம்பிக்குக் கூடிய உதவி செய்ய வேண்டியதுயென்று ஒரு சீட்டுச் கூட்டிக் கடன்தீற்கச் சொல்லிப் பேசிக்கொண்டோம். கர்த்தர் உதவி செய்ய வேண்டுமென்று அவர் சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்தேன்.

௨௫—வ அவர்கள் வீட்டுக்குப் போயிருப்பார்கள். இங்கே மீந்திரக் கூட்டம், ஆறுமீ கணக்கும் முடிக்க உபதேசிமார்கள் வந்தார்கள். மதுரேந்திர ஐயர் சாயுங்காலம் வந்தார். ௨௬-ஆ சம்பழமுங் கொடுத்தார்கள். இன்னேசியம்மாள் பிள்ளைகளுக்குப் பீசப்பணம் பிடித்துக் கொண்டதுவும் மகனுக்கு சட்டைவிலைக்கும் ரூ அணாயேமாகாணி பத்து பிடித்ததுமுங்கூட. சாயந்திரம் ௯-மணிக்கு ஐயர் ஊருக்குப் போனார்.

௨௭—வ யாக்கோவுப் பிள்ளை பாளையங்கோட்டைக்கு வந்து மதியத்திற்குமேல் இங்கே வந்தது. சஞ்சீவி காயிதமும் ஒன்று வந்தது. சுகசெய்திதான். கூனியூர் மதினிக்கு வயிற்றளைச்சலாயிருக்கிறதென்றான்.

---

†

எனது பிரியமுள்ள தம்பி தேவசகாயம் பிள்ளைக்குத் தேவகிருபையுண்டாவதாகவும்

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம். எனது பெலவீனத்தினாலே சுருக்கமாய் எழுதுகிறேன். நீங்கள் இரவிற் புரப்பட்டதினால் எனக்கு மிகுந்த கிலேசமாயிற்று, ஆகிலுந் தேவன் விக்கினமின்றி நடத்திக்காப்பாரென்று எண்ணியும் இரவெல்லாம் நித்திரையில்லை. ஆண்டவர் கிருபையினாலே வீடு சேர்ந்த செய்தி கேட்டாறுதலானோம்.

தம்பி கூ. ஞானப்பிறகாசம் பிள்ளைக்குப் பதில் எழுதியிருக்கிறேன். தமதிடத்தில் யோசித்தபடிக்கு கனம் ஐயரவர்கள் கூடாது என்று பலபோக்குச் சொன்னதினால் நான் விசனப்பட்டேன், ஆகிலும் அவருக்கு க. சஞ்சே

விக்கொன்று நானே எவ்விதமும் உத்தரவாதி. யாக்கோவுப்பிள்ளை தமது சந்தோஷமாகத் தமக்குச் சீட்டிற் சேருகிறதாகவும் உமக்குஞ் சொன்ன தாகவும் க-சீட்டுக்குச் செலுத்துகிறே னென்றான், ஆகையால் ௩ சீட்டு இவ்விடத்தில். திருநெல்வேலித் தம்பிக்கு நானும் எழுதுகிறேன். ஷை ஞானப்பிறகாசம் பிள்ளையும் ௱: தெய்வசாயகம் பிள்ளையும் கேள்ப்பார்கள். இன்னமுமாராவது சேர்த்துக்கொண்டு சீட்டு அ-ம் இன்ன ௴ இத்தனாந் தெய்தியிற் பணம் வரவேண்டுமென்று முந்தி எழுதிவிடவும் வேண்டியது. அப்போது ௬-சீட்டுப் பணம் நான் அனுப்புவேன். கர்த்தர் துணைச்செய்வாராக

பால்சங்கு மரந்தும் பெட்டித் திறவுகோல் கொடாமல் மரந்தும் பின்பு தெறிந்தது. சங்கு அனுப்புகிறேன். ஷை திறவுகோலுமனுப்பும். ஞானப்பிறகாசம் பிள்ளைக்கு எழுதியதும் பார்த்தனுப்பும். தவ்வால் முத்தினைக் கிறையும் இலுமிட்சம்பழம் பத்துக்குங் கிறையும் என்கணக்கில் எழுதும்

இனிமேல் என்பேரால் ஒரு கணக்குத் திட்டஞ் செய்துகொண்டு வரவு சிலவு எழுதவும்.

இப்போது கணக்குத் திட்டமாய் இராதிருந்தால் யாபுகத்தப்பிறால் மனஸ்தாபத்துக் கிடமாகிறதாயிருக்கும்: திருட்டாந்தம் எப்படியென்றால், கனம் மதுரோக்கிர ஐயர் சவரிமுத்துப்பிள்ளை கொடுத்தது ௬௰ம் இல்லையென்றும், ஏசுதாசபிள்ளை நான் கொடுத்தது ௬௰-ம், வண்டி விலையில் ௱; ஞானப்பிறகாசம்பிள்ளை கொடுத்தது ௫௰-ம் நான் ஐயாவுக்குக் கொடுக்கவில்லை யென்றும், வந்திருக்கிறது.

ஷை ஐயர் கொடுத்தமரம் விலை ௬௬அ-சில்வானமும் எனக்குத் தாருமென்றுங் கண்டிப்பாயுங் கேள்க்கிறார். ஷை மரத்துக்கு நான் பனிரண்டு ௬ வாடகையும் கீர் ஷை ௬ அ-ம் ஆ௬ ௬௰அ-௬யுமாயிருக்கிறது. அதையிப்போது ஷை விற்றுப் பணமாகப் பண்ணவேண்டும், ௬டுத குறையிதென்றும் பார்க்க வேண்டாம். இதன்றியும் அநேக மரங்கள் நானுமதிடத்திற் கொடுத்ததுகளு முண்டு. சக்கடாவண்டி ஒன்று ஷை ஐயர் கொடுத்தாராம், அதுக்கும் பணம் வரவேணுமாம். இப்படிப்பட்டகாரியங்கள் அநேகமிருக்கிறதினால் அவரவர் பேரால் பணக்கணக்கு யிருக்க வேண்டும், கொடுத்தாலும் கொடாமலத் தின்று விட்டாலுங் கணக்கு இருக்கவேண்டுமென்பது தான் மனத்திருத்தியாம், இல்லையானாற் பணம் வந்த வகையும் சிலவான வகையும் தெரியாமலும் மலைப்பும் வெரிச்சலும் வரும், ஆனாலுமுடைய மனம் எப்படியோ அப்படிப்பாரும், நான் சொன்னது என் மனம்.

உஎ—௨ இடையன்குடிப் பாக்கியம்பிள்ளையும் பிட்சைமுத்துப்பிள்ளை



யும் இவ்விடத்தில் வந்தார்கள். நமது வீட்டிற் சாப்பிட்டுச் சாயுங்காலம் போனார்கள். ஷை எனக்கு மருந்து செய்யப் பழம் முந்திவரவும் பின்பு உன்னுக்கு மருந்து மவசியஞ் செய்ய ஷை பிட்சைமுத்துப்பிள்ளை சொல்லிப் போனார்.

இன்னம் எழுதவேண்டியதுகள் பின்பு எழுதவேன். இப்போது நல்ல சுகமில்லைத் துறத்தலுமிருக்கிறது, வேறு கண்புகைச்சல்தான்பிறதானம். கர்த்தர்கிருபை செய்து எல்லாரையுங் காப்பாராக.

ராமபுரத்து அன்னம்மைக்குத் துணி யான் கூட்டி யின்றனுப்பி விட்டோம்.

௲அ௱எ௬-௵ இப்படிக்கு
செப்தெம்பர்௴ உ௯-௳ சவரிராயன்
[இது:—தேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.]

---

†

பிரியமுள்ள குமாரன் சஞ்சீவிப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவரும் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையும் அறிய விரும்புகிறோம், நீங்கள் சுகத்துடன் சேரச்செய்த கர்த்தருக்குஸ்தோத்திரம். சீட்டுக்காரியத்துக்கு ரூ. ஞானப்பிறகாசம்பிள்ளை எழுதியதுக்கு இவ்விடத்திற் சீட்டுக்குத் திட்டஞ்செய்து எழுதினேன், அவ்விடத்திலும் ௫-சேர்த்துச் சீட்டை நிறவேற்றவேண்டியது திருநெல்வேலித்தம்பி யிடத்தில் எனக்குக்கொடுக்கிற உபகாரத்தை வாங்கியனுப்பு, மற்றவைகளைப் பின்பு னெழுதுவேன். எனக்குத்தந்த பெட்டிக்குச் சாவியும் இலுமிட்சம்பழம் பத்தும் அவசரமாய் வேண்டியது, உனதண்ணாட்சிக்கு நினைப்பூட்டவேணும்.

௲அ௱எ௬-௵ இப்படிக்கு
செப்தெம்பர்௴ உ௯-௳ சவரிராயன்
(இது:—முருகன்குறிச்சி வடக்குக்கல்விச்சாலையிற் சஞ்சீவிப்பிள்ளைக்கு வருவது.)

---

உஅ—௨ ஓய்வுநாள் கனம் ஐயரவர்கள் மீனாட்சிபுரத்துக்கும் மதுரோக்கிர ஐயர் அதிசயபுரத்துக்கு நற்கருணை பரிமாறப் போனார்களாம். உபதேசியாரிவ்விடத்தில் ஆராதனை பிரசங்கமும் நடத்தினார். ராமபுரம் அன்னம்மை பேதிக்குச் சாப்பிட்டாள்;

௨௮-டி ஊருக்குப்போக ஒருதுணைக்கு ஒரு பெண்பிள்ளைக்கு சாப்பாடு கொடுத்து அணாக்கால்௱ சம்பழுங் கொடுக்கத் தீர்மானித்து அனுப்பினோம். அவன் பிள்ளைகளுக்கு பலகாரத்துக்கு என்றும் ௱ அணாக்கால் கையிற் கொடுத்தேன். மேலவீட்டக்கம்மை ஒரு நாற்கடகம் புதுசுங் கொடுத்தாளவளுக்கு இவ்விதமாய் ஷை யாளுக்குச் சாப்பாடுங் கொடுத்தனுப்பி விட்டோம். அவளுங் கையாட்டி போல பஞ்சி பேசாதிருந்து போனாள். சாயுங்காலம் இடையங்குடி ஏசுதாசபிள்ளை விசையகாருயணத்து உவாத்தி வந்திருந்து பலகாரியங்களும் பேசிக் கொண்டோம். பள்ளிக்கூடச் சோதினை செய்கிற இஞ்சிப்பிட்டர் ஆறுமுகர்ஸ்டாண்டுப்பிள்ளை வந்தார்

௩௰-டி காலையிலவரிடத்திற் போய் சுசெய்திகளை விசாரித்துக் கொண்டேன்; அவரு மிவ்விடத்துக் காரியங்களையும் விசாரித்துப் பேசினார். கனம் ஆங்கோட்டய்யரவர்கள் மனைவைப் பணம் ஏற்படுத்தப் பேசினதுக்கு ஆரோக்கியம்பிள்ளையவர்களிடத்திற் பேசி ஷை வரி நிறுத்தினதாகச் செய்தி. ஷை அன்னம்மைக்குத் துணைக்குப் போன கன்னம்மை கால்கனைவளையுங் கூடப்போய்த் திரும்பி வந்தாள் காலை பத்துமணியில். ஷை அன்னம்மைக்கு அவ்விடத்திலிருந்து துணையாளோடு போனாளாம்.

௲௮௱௭௰௩-௵ அக்டோபர்௴ ௧-டி புதன்கிழமை

காலைச்செபத்துக்குப் போய் வந்தேன். இன்று தவ்வாலில் சின்னத்தம்பி சவரிராயனுக்குத் தகப்பனார் காயிதமும் பள்ளிக்கூடத்துக்குப் பீசுக்கு ௱ கவ-மனுப்பினது வந்தது. ஷை மதுரைக்கனைத் தோமாசு ஏசுதாசபிள்ளை எனக்கு எழுதினது வந்ததில்த்: தமக்கு பத்து௱ அலுவல் தற்காலத்துக்கு அமர்ந்திருக்கிறதாகவும், மிஷியோனில் அலுவலுக்குக் கனம் சார்சென்றய்யரவர்கள் வந்தால்த்தான் கிடைக்குமென்றது போலும் நமக்குள்ளவர் பெண் கட்ட நினைக்கிற காரணத்தையும் எழுதி யிருக்கிறார்.

௨-டி நமது வீடு பாதியைப் பிரித்து ஓலை புதுசாய்க் கட்டிற்று, மற்றதுக்கு ஓலை வந்துசேரவில்லை. சாயுங்காலம் யாக்கோவுபிள்ளை கல்லம்மாள்புரத்துக்கு மாமனாரிடத்திற்குப் போனான், ௩-டி காலையில் வந்தான். வீட்டுக்கு ஓலை கட்டு வரும்படி திட்டஞ் செய்தது சரியாய் வரவில்லை, அதினால் வீடு குறையாயிருந்தது

௪-டி ஒருபக்கத்துக் கூடங் கட்டினோம், தேவசகாயம் பிள்ளை காயிதமும், சஞ்சீவிகாயிதமும், மருந்துக்கு இலுமிச்சம் பழமும், ரொட்டியும் அனுப்பினார்கள். ஷை காயிதங்களில் மருதூர்க்கனை ஏசுதாசபிள்ளை செய்தியும்



அதிற் தேவசகாயம் பிள்ளையவரை விடப்படாதென்றதையும் எழுதியிருந்தது மன்றி சீட்டுச் சேர்ந்த வகைக்குத் தெய்வநாயகம் பிள்ளை சொன்னது பணம் வரத்தாமதிக்கப் படாதென்று மொன்றாய் எழுதினார்

௫-டி ஓய்வுநாளிங்கே இராப் போசனமும் ஆராதனையும் நடந்தது. முந்தின நாள்ச் சனிக்கிழமையன்று யாக்கோவுப் பிள்ளை ஒரு வண்டியும் மாடுஞ் சேர்த்து ௱ சருக்கு வாங்கினான், உடனே எருந்தைராசகோபால புரத்தில் பண்டாரப் பணிக்கன் வசத்திற் சேர்த்திருக்கிறார்.

௬-டி எனக்குத்தர வேண்டிய நெல்க் கோட்டை யொன்றும் வந்தது ஷை வண்டியில். மதியத்துக்குமேல் பாளையங்கோட்டைக்குப் பிள்ளைகள் காயிதத்துக்குப் பதில் எழுதினேன். ஒருமழையும் பெய்து அனைப்பதத்துக்கு.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்கு கர்த்தருடைய கிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதி சயங்களையு மறிய விரும்புகிறேன். என்னுடைய சுகசீர் நீங்கள் கண்டபடியே இருக்கிறது.

நானு முங்கள் தாயாரும் பிறதானமா யுமது பிள்ளைகளைப்பற்றிய கவலைதான். யேனென்றால் ரோட்டுப்பாதையும் தண்ணீர் ஓடுகிற வாருகாலும் வாசலி லிருக்கிறதும் பிள்ளைகள் புத்தியில்லாமலும் சொன்னது கேளாது முறண்டுமானதினாலும் நீங்கள் கவனத்தாட்சியாயிருந்தால் என்ன மோசமாயிருக்குமோ வென்று மனம் பதற்றங் கொடுக்கிறது. ஆனதால் நீரும் அம்மாளும் வெகு கவனமாயிருக்கவே விரும்புகிறோம். இலுமிச்சம்பழம் ௰௫ ரொட்டி யொன்று வந்தது. ௫-டியிற் சாப்பிட்டும் மருந்து செய்தது. மற்றங்காரியங்களுக்கு எழுதியதுக்கு நான் சரியானபதில் எழுதத் தீர்மானம் என்னாலில்லை, மற்றவர்கள் தீர்மானத்தின்படி யாகவேண்டும்.

சீட்டுக்கு இத்தனைநாளில் இந்தத்தெய்தியில் வரவேண்டு மென்றும் ள: தெய்வநாயகம்பிள்ளை எல்லாருக்கும் காயிதாத் தீர்மானித்து எழுதினால் நல்லது, அப்படியே எல்லாத்தீர்மானமும் ஆம், இது லகுவான காரியமல்லவே யென்று யாக்கோவுப்பிள்ளையும் சொல்லுகிறார். ஷை பிள்ளையவர்களுக்கும் எழுதுவான். அப்பால் நம்முடைய பணம் முந்தியனுப்ப ஆயித்தமாயிருக்கிறேன். யாக்கோவுப்பிள்ளை வாயிதாவில் அறுப்ப உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார்.

கணம் மதுரேந்திர ஐயரும் நீரும் நானும் மரவகையிற் செலுத்தவேண்டியதிலிருந்து முதற் சீட்டுக்குச் செலுத்த வேண்டுமென்று நினைத்திருக்கிறேன்.

மற்றுங்காரியங்களெல்லாத்துக்கும் பதில் ஷை ஐயரவர்களுக்கு நீங்கள் எழுதிய காயிதங்களை ஷை யாருக்கு அனுப்பிற்று வெள்ளிக்கிழமை வருவார் முகதாவிற் பேசியும் அறிந்தெழுதுவேன்.

மருதூர்ப்பிள்ளைக்கு என் வாழ்த்துதல் சொல்லி ஐயாவால் நடக்கிற காரியம் உமக்காகக் கூடியதல்ல ஆதலால் அவர்களுமக்குப்பதில் எழுதாதிருக்கிறதாகச் சொல்லச் சொன்னார்களென்றுஞ் சொல்லும்.

அம்பாசமுத்திரத்துப் பிள்ளையைப்பற்றியும் நினைப்பூட்டும்.

உமது தாயாரும் தமையனும் மனமாய்ப் பேசவில்லை. வேறுவிசேஷமில்லை.

உங்களெல்லாருக்கும் வாழ்த்துகிறோம்.

௲௮௱௭௩-ௗ இப்படிக்கு

அக்டோபர் ௬-௳ சவரிராயன்

வீடு ஓலை சரியாய் வராததினால் மழைக்குப்பயந்து வடக்கை பார்த்த வீடும் மேல் பக்கத்து கூடமுஞ் சனிக்கிழமை கட்டிற்று, இன்று கொஞ்ச மழையும் பெய்தது, மற்றது ஓலை வந்தவுடனே கட்டுவேன். இப்படிக்கு

சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்கு வருவது.]

---

௭—௳ தெக்குத்தொழு பழுது பார்த்து பழய ஓலையை கட்டிற்று.

௮—௳ காலையில் ஐயரவர்கள், தானியேல் விசாரணை உவாத்தி, யாக்கோவுப்பிள்ளையும் இன்சேகரம் கல்லம்மாள்புரத்துக்குப் போனார்கள். இன்புரத்துக் கூடத்தையும் கட்டினோம் வந்த ஓலையைக்கொண்டு. நமது வீட்டுக்கு மேல்புரத்துப் பனையைத் தறிக்க உத்தரவு யென்று வந்தவர்களை வீட்டுமேல் விழாமல் வெட்டப்பாருங்கள், ஷை ஐயரவர்களும் விசாரணை உவாத்தியாரும் வந்தால்த்தான் வெட்டலாம் யென்று தடுத்துப்போட்டேன்.

௯—௳ காலை எழுமணிக்குள் மரிய வியாகப்பன் குழந்தை இறந்து போயிற்று. பின் யாக்கோவும், மதுரேந்திரஐயரும் நல்லம்மாள்புரத்திலிருந்து வந்தார்கள். உபதேசிமார்கள் கூட்டத்துக்கு வந்து போனார்கள். சாயந்திரம் ஐந்து மணிக்கு முன் கனம் மதுரேந்திரஐயர் ஷை குழந்தையை அடக்கஞ்செய்யும்படி வந்தார், இரவு வரையும் ஷை ஐயரும் யாக்கோவும் சாப்பிடாதிருந்தார்கள். உபதேசிகள் ஷை துக்கவீட்டுக்கு ஒருவரும் வராமற் போய்விட்டார்கள். விசாரணை உபதேசியாரும் உள்ளூர் உபதேசியாரும் உவாத்தியாரும் ஊராருந்தான் அடக்கத்துக்கு வந்தது.



௰௧—௳ சாயுங்காலம் ஷை ஐயர் வந்து சாப்பிட்டு ஊருக்குப் புறப்பட்டார் சுகமில்லை யென்று சொன்னார். இருந்து பார்த்துக்காலையிற் போமென்றோம், காலை பிரசங்கமிருப்பதால் போவேன் என்று போய்விட்டார். எனக்கும் வயிற்றலைகிறது போலிருந்தது.

௰௨—௳ ஓய்வுநாள் வளக்கப்படி கூ-நேரமும் ஆராதனை கனம் ஆர்க்கோட்டையரவர்கள் நடப்பித்தார்கள்.

௰௩—௳ விடியக்காலம் கிறுமத்துக்குப் போனவர்கள் கூட யாக்கோவுப்பிள்ளையும் தானியேல் வி. உவாத்தியும் போயிரவில் வந்தார்கள்.

---

✝

பிரியமான தம்பி தேவசகாயம்பிள்ளைக்குக் கருத்தருடைய கிருபையுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதி சயங்களையும் அறிய விரும்புகிறோம். குழந்தைகளைப் பத்திரமாய்ப் பாரும்.

இப்போது சீட்டுக்காரியத்துக்கு ஒருவருந் தங்கள் வருமானத்திலிருந்து போடுகிற பணமல்ல வென்பது நமக்குத் தெரியுமே, அதையால்த் தன்னமையானவர்களானதினால்க் கூடிய தொகையும் அதிகம் காலமும் அதிகமானதால் இதுக்கு உத்தரவாதியாகவும் பொறுப்பாகவும் ரா: மாப்பிள்ளை தெய்வசகாயம்பிள்ளை யவர்களிருக்கவேண்டியது யென்று யோசித்து யாக்கோவுப்பிள்ளையைக் கொண்டெழுதினதுக்குச் சரியானபடிக்குப் பொறுப்பாக எழுதவில்லைச் சிலதுக்கு மாத்திரம் எழுதியும் தாம் பொருப்பாளியென்று புடி கொடாமல் எழுதினார்கள்.

அதினால் ஷை பிள்ளையவர்கள் தங்கள் மனதின்படி யாகவே நாமெல்லாரும் ஒப்பினோம். ஒப்பினவர்கள் யாவரும் சம்பத்துக்கவர்களல்லவா. யிப்படியிருக்க நான் தான் பொறுப்பென்று ஏற்றுக்கொண்டு தொகையை வாங்கிக்கொண்டு அடங்கவாமே. இந்த யீ கம-டக்குள்ளாகவே முதற் சீட்டு முடியவேண்டும், அதற்கு இவ்விடத்துப் பணம் சேர் ஆகிறது தனையில்லை.

ஷை காரியஞ் சேரதபின் தேவகிருபையினாலே யாவரும் இரண்டாஞ் சீட்டுக்கு ஆர் பேருக்கு வருமோ அவர்களிடத்திற் தருந்த சீட்டின்பேரில் நம்பிக்கையாய்க் கொடுக்கிறது. இதகாரியங்களைப்பற்றி யோசித்து முடித்துக் காயிதம் அனுப்புவார்களானு லவர்களிடத்தில் உடனே வரத்தடையில்லை. யிது விபரங்களாய்த் தம்பி ஞா. ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு எழுதி விட வேண்டியது.

நமது விளைக்காரியத்துக்கு யாக்கோவுப்பிள்ளை பல அலுவலினால் எழுதக்கூடவில்லை. ஷை டாக்கிட்டருக்கு நான் சொன்னதாக உமது பேரால் முன் போல எழுதும். இப்போது விதைப்புக்காலம் வருகிறதினால் தாமிதமில்லாமற் சாமிநாதன் வசம் விடவேண்டும். அல்லது மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள் வசத்திற் சிலவு காசு கொடுத்து விதைக்க வேண்டுமாகையால் ஷை டாக்கிட்டருக்கு எழுதி முன்னெழுதினதுக்கும் இப்போ தெழுதுவதுக்கும் பதில் என்ன வருகிறதென்றும் அறியவேண்டும்.

முன்னொருநாள் அறைப் பதத்துக்குப் பெய்து போயிற்று, இப்போது பெருங்காத்து காலுவாளாக. கேத்து நல்லம்மாள்புரத்தில் ராப்போசனம் கனம் ஐயர் சுரமாயிருந்துங் கொடுத்தாராம்.

அவரிங்கே யீ கூட்டத்துக்கு வந்திருந்து இரவு தங்கிப் பலதும் நமது தனது காரியங்களைப் பேசிக்கொண்டோம். அதில் மருதூர்க்கனாப் பிள்ளைக்கு இவ்விடத்தில் இடமில்லையானதாய்முடிந்தது. நல்லூர்த்தம்பிக்கு நான் சொல்லுகிறது அவருக்குச் சொல்லி உமக்குந் தம்பிக்கும் பிடித்தாற் பாருங்கள்.

௧௧-உ சாயந்திரம் ஐயர் புறப்பட்டபோது சுரம் வரும் போலச் சொல்லிப்போனார். ஷை யாருக்குக் காப்பி தவ்வாலிலாவது அனுப்பபடாதா, அதுதான் பறதாபமாய்ப் பேசினார்.

இன்று அவர் சுகந்தெரியாது, இந்த தவ்வாலில் காப்பி யனுப்ப வேண்டியது. எனக்கு ஒன்று போனால் ஒன்று வருகிறது; மூன்று நாளாய் அனைச்சல் போலிருக்கிறது. இன்று தான் தலைக்கு முன் சொன்ன தப்பழம் போட்டிருக்கிறது.

தம்பி சஞ்சீவிக்கும் மற்றக்காரியங்களை யறிவிக்கவும் நான் எழுதத் திறமையற்றிருப்பதினாற் சுருக்கமாய்ச் சிலதை எழுதினேன். வேறு விசேஷம் மரிய வியாகப்பபிள்ளை குழந்தை ௰-உ காலையில் மரித்தது.

உங்களெல்லாருக்குஞ் வாழ்த்தல் சொல்லுகிறேன்.



௲௮௱௭௰௩ ௵ — இப்படிக்கு
அக்டோபர்மீ ௧௩-உ — சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்கு வருவது.)

---

௯-உ சாயுங்காலம் நல்லம்மாள் புரத்திலிருந்து மரியம்மாளும் முத்துமரிய வியாகுலமும் மேல வீட்டில் தட்டிகேட்க வந்தார்கள். அங்கே யிரவிற் சாப்பிட்டு நமது வீட்டில் வந்து படுத்திருந்தார்கள். ஷை முத்துமரிய வியாகுலத்தின் புருசன் எங்களிடத்தி லிருக்கப்படாதென்று பெண்சாதியையும் பிள்ளையையும் வரச் சொன்னதுக்கு அவள் போகவில்லை. ஷை யான் வெறியினால் ஷை உறங்கின பிள்ளையைத் தூக்கிக்கொண்டு மேல வீட்டுக்குக் கொண்டுபோனானாம். ஷை மரியம்மாளிடத்திற் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ள யேதுவில்லை.

௰-உ விடியக்காலந் தாயும் பிள்ளைகளும் போய்விட்டார்கள். அவ்விடத்தில் ஐயருக்குச் சுகமில்லாதிருக்கிறதினால் தடையில்லாமல் போனாள். மதியத்துக்குமேல் தேவசகாயம்பிள்ளை யனுப்பின ரொட்டி ஒன்றும் வந்தது. ஷை காயிதமும் ஏசுதாசபிள்ளை காயிதமும் வந்தது. தெய்வநாயகம்பிள்ளையவர்கள் மூலமாய்ப் பூச்சீட்டுச் சேருகிறதைக்குறித்து முன் பேசினபடிக்கு ஷை தெய்வநாயகம்பிள்ளையே முதல்பிடியென்றுஞ் சொல்லியிருக்கிறது. தம்பி யேசுதாசபிள்ளை எனக்குப்பதிலனுப்பினது ஷை சீட்டில் அரைக்கு கூட செலுத்த மனதாயிருக்கிறானென்பதுவே. வேறு விசேஷமில்லை.

௰௧-உ யாக்கோவுப்பிள்ளை வண்டி யவர்தமையனாரும் மைத்துனர் வியாகப்பபிள்ளையுந் திருசெந்தூருக்குப் போக வாடகை பேசி மூன்று நாள் காத்திருந்தான். ஷை யவர் இரவில் வந்துசேர்ந்து புறப்பட எத்தனித்த போது, ஷை வேலையில்லாமற் காத்திருந்ததுக்குச் சிலவுகொடுக்க வில்லையானால் வண்டி வராதென்று சொன்னானை யவர்கள் சம்மதியாமற் போனதினால் வாங்கின வாடகைப்பணம் திரும்பக் கொடுத்துவிட்டான்.

௰௨-உ அவர்கள் போனார்களாம். தூத்துக்குடிச் சவரிராயபிள்ளைக்கு அவர் மாமனார் முனிசுப்பிள்ளை எழுதியகாயிதம் இவ்விடத்தாருக்கு அனுப்பிப் பார்வையிட்டு ஷை காயிதத்தை அனுப்பச்சொல்லி மகனுக்கு அனுப்பினதை வாசித்து, நல்ல பிரசங்கம் என்று சொன்னேன். அதில் கர்த்தர் அறிவாரென்று நினையாமலெழுதினார்.

௰௮—உ விசையநாருயனத்து உவாத்தி எசதாசபிள்ளையும் சாலமோ னு மவ்விடத்திருந்து இராத் தங்கினார்கள்

௰௯—உ காலம்பெற நல்லம்மாள்புரத்துக்குப் போனார்கள். சாயந்திர ம் ஷெ எசுதாசன் வந்து, யாக்கோவு மவனுஞ் சாப்பிட்டு, இராவில் விசையநா ருயனத்துக்குப் போனார்கள். ௩னம் ஐயரவர்கள் சடையனேரியில் இராப் போசனங் கொடுத்து

௨௰—உ பாப்பாடியிற் பள்ளிக்கூடச் சோதனைக்குப் போனார்களாம். விசாரணை உவாத்தியாரும் ஷெ யாக்கோவுப்பிள்ளையும் ௨௰-உ போனார்களா ம். நான் சுகசெய்திக்குத் தேவசகாயம்பிள்ளைக்கு காயிதம் எழுதினதில் நம து விளை ஒட்டுவாலத்தை நாமே பயிர்செய்யும்படிக்குத் தேவசகாயம்பிள்ளை யிடத்தில் விடாமல்ஞானப்பிறகாசம்பிள்ளை யிடத்திற் செலவுக்குப் பணங்கொ டுத்துவிடவும்: மருதூர்க்கனைப்பிள்ளைக்கு இவ்விடத்திற் பெண் கொடுக்கிற தில்லை, அம்பாசமுத்திரத்துப்பிள்ளையைக் கொடுக்க மனமானால் விசாரித்துச் செய்வது யென்றும் எழுதிவிட்டேன்.

௨௧—உ தவ்வாலிற்போகும்படிக்கு அநுப்பினேன்.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவ கிருபை யுண்டாவ தாகவும்,

இவ்விடத்தில் யாவருந் தேவகிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ் விடத்துச் சேமா திசயங்களை அறிய விரும்புகிறோம். எனக்குண்டாயிருந்த அலைச்சலும் உங்கள் அண்ணாட்சிக்குச் சாமும் வாசியாய் சுகமாயிருக்கிறோம்.

நமது விளைக்காரியம் எப்படியும் இந்த ௲ பிசானம் நாமே பயிர் செய் யவேண்டும், போன பிசானம் நமக்கு இறைக்கூட்டு ஒன்றும் இதுவரையும் வரவில்லை. பருத்தியாகிலும் எதாகிலும் டாக்கிட்டர் ஈ-கிரி தேவசகாயம்பிள் ளையும் அவர் மனவியும் வஞ்சகமில்லாமல் நமக்கு வைத்திருப்பார்கள். அவர் களுக்கு நீர் தாமே எழுதி யிந்த வருஷ பிசானத்து நமக்கு விளையைப் பயிர் செய்ய நாங் கேட்டுக்கொண்டதாகக் கேட்டு நமது செலவு செய்து கொள்ள வும். அதில்க் கர்த்தர் நமக்குத் தந்ததைப் பெற்றுக்கொள்வோம்.

நாம் போய்க் கண் பார்க்கக் கூடாது. மாப்பிள்ளை ஈ- சின்னஞானப் பிறகாசம்பிள்ளையை நான் கேட்டுக்கொண்டதாய் அவர்களுக்குச் சொல்லவும் ஷெ டாக்கிட்டர் பிள்ளை யவர்களுக்கு நான் எழுதச்சொல்லி எழுதினீரே; அத ற்கு பதிலுத்தரவு வரவில்லையே, அவர் இங்கே என்னைப் பார்க்க வருகிறதாகச்





செய்தி வந்தது, அப்பால் இதுவரையுங் காணேன், அவரும் நானுமுள்ளமட் டும் உண்டு, பின்பு ஒன்றாக்கொண்டு எங்கள் பிள்ளைகள் உறவா யிராதென்று இப்போதே நலங்கிறது, ஆகையால் ஷெ நமதுவிளையை நாமிப்போதே பயிர் செய்யவேண்டியது.

௲அ௱எ௰௩-௵ இப்படிக்கு
அகஸ்டோபர்௴ ௨௰-உ உங்கள் தகப்பன் சவரிராயபிள்ளை உப.

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு- தேவ சகாயம்பிள்ளைக்கு வருவது.)

---

†

ஷெ காயிதத்தை உமது காயிதத்துடன் ஷெ தேவசகாயம்பிள்ளைக்கு அநுப்ப மனமிருந்தாலும் இருக்குமென்று புடி யவருக்கு இல்லாமலும் மற்ற நமது காரிய மவருக்குத் தெறிப்படாது என்று எழுதினேன்.

இப்போது மருதூர் கனைப் பிள்ளையைப்பற்றி இவ்விடத்திற் பேசப் படாது. ஐயரும் உங்கள் தாயாரும் கிருபையும் யாக்கோவுங் கடுமையாய்ப் பேசுகிறார்கள். ஷெ தோமாசு எசுதாசபிள்ளையைக் குறித்து நீரெழுதினதுஞ் சஞ்சீவி வெகுசா யெழுதினதைப் பற்றி அம்பாசமுத்திரத்துப் பிள்ளையைப் பற்றி எனக்கு ௩னம் அவருக்கும் இவருக்குஞ் செய்தி யறிவித்துக் கொள் ளுங்கள்.

பெண் மாப்பிள்ளை காரியங்கள் நான் பேசுகிற வயசுங் காலமும் பல னும் எனக்கில்லை. ஆகையால் நான் சொல்லுகிறதை ஒப்புக்கொள்ளவும் மா ட்டார்கள்.

இதினால் எனக்குச் சொல்லுகிறதும் எழுதுகிறதும் விருதாவாயிருக் கும், கர்த்தரை முன்னிட்டு உங்கள் சகோதரருக்குள்ளேயே பேசிக் கொள் வதே நலமாயிருக்கிறது.

ரொட்டியும் வந்தது, திருநெல்வேலி தம்பி காயிதமும் அவர் கூடு-ம் வந்தது. தலைக்குத் தப்பழம் போட்டுத் தலைமுழுகிறேன். இன்னமும் பிட்சை முத்துப்பிள்ளை மருந்துஞ் சாப்பிடத் தீர்மானித்திருக்கிறது. எனக்குக்காயிதம் எழுதுகிறது வருத்தமாயிருக்கிறது, கர்த்தர் சுகங் கொடுக்கவேண்டும். பிள்ளை களைப் பத்திரமாப் பாருங்கள், உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லு கிறோம்.

௲அ௱எ௰௩-௵ இப்படிக்கு
அகஸ்டோபர்௴ ௨௰-உ சவரிராயன்

✝

பிரியமுள்ள குமாரன் சஞ்சீவிப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் எனக்கும் கனம் ஐயாவுக்கும் நல்லசுகந்தான். மற்ற யாவருஞ் சேமம். அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களுக்கும் உங்கள் மூன்று பேருடைய காயிதங்களினால் அறிந்தோம் முந்தின வாரத்தில் கேத்து உன்னுடைய காயிதமும் வந்தது. நீ யனுப்பியதோ, ஏசுதாசபிள்ளை யுன்னிடத்திற் கொடுத்ததோ, தேவசகாயம்பிள்ளையோ, ஆருடையதென்றுந் தெரியாமல் ஞானபுகம் முந்தின தவ்வாலில் ௩-௫-கொடுத்தான். மிக்கேல் அருளம்மான் கொடுத்ததாகவும் ரொட்டியொன்றுங் கூடதாக வந்தது. பின்பு ஏசுதாசபிள்ளை காயிதம் வந்ததில் உன்னிடத்தில் ௩-௫ கொடுத்ததாக எழுதினார். தேவசகாயம்பிள்ளை ரொட்டிமாத்திரம் அனுப்பினதாய் எழுதினார். நீ ௩-யைப்பற்றி இரண்டு காயிதத்திலுங் காணவில்லை.

இப்போ உனக்குத் தேவ யிரக்கத்தினால் தச்சநல்லூர்ப் பள்ளிக்கூடத்து வேலை கிட்டமானால் மெத்தப் பெரிய உபகாரம், அப்படியானால் மற்றக்காரியங்களைப்பற்றி யோசிக்கவேண்டிய தில்லைத், தேவ சித்தம் நமது பாக்கியமாவதாகவும். இப்போது வந்தசெய்தி எனக்கும் உன் தாயாருக்கும் மெத்த சந்தோஷம், யேனென்றால் மகா॥ துரையவர்களும் உங்க ளண்ணாட்சியார்களும் சம்மதித்ததுவும் முருகன்குறிச்சி ஆலயத்துக்கும் நமது வீட்டுக்கும் திருநெல்வேலித் தம்பி வீட்டுக்குஞ் சேர்ந்த இடமாயுமிருப்பதினால்த் தேவ யிரக்கத்தினால் வாய்த்தது என்று நினைத்துக் கொண்டோம். யாக்கோவுப்பிள்ளையும் அப்படியான வேலை நல்லதென்றார். உங்கள் மூத்த அண்ணாட்சியவர்களுந் தடை சொல்லார்கள். ஆகையால்த் தேவன் வாய்க்கச் செய்ய பிராத்திக்கிறேன்.

மருதூர்க் கனைப்பிள்ளையைப் பற்றி நீ எழுதியது முன்னமே உங்கள ண்ணாட்சி விசனமாய்ப் பேசினார். அதின் விபரஞ் சொல்லப்பிரியமில்லாமல்ச் சுருக்கம் எழுதினேன். இங்கள்க் கிளமை தேவசகாயம்பிள்ளைக்கும் எழுதிவிட்டேன்; மூத்த அண்ணாட்சி, உமது தாயார், யாக்கோவு, இருவை இவர்கள் அந்த மனுசன் பேட்டை எடுக்க அருவருக்கிறார்கள். அதினால் நானும் உங்கள் மூத்த மதினியாரும் பேசப் பயப்படுகிறோம். அது நிற்க, நீ யறிந்தபடிக்கு ஷெ ஆலவாய்ப்பிள்ளை மகன் ஒன்றாக்குச் சேர்வைகாரன் பட்டியான் ஒன்று: இடையன்குடித் தேவசகாயம்பிள்ளை மகன் ஒன்றும் கியயித்துக் கொண்டிருக்கிறார்கள்.



உங்கள் தாயாரும் நானும் அம்பாசமுத்திரத்துத் தம்பியானால் அவ்விடத்திலிருந்து பாளையங்கோட்டைக்கு வந்து ஷெ ஏசுதாசபிள்ளையின் காரியங்களை ஒவ்வொருதரிடத்திலும் விபரமாய் விசாரிப்பார், அப்போ தவருக்கு மனம்பிடித்தால் நமக்கும் மனம்பிடிக்கு மாகையால் அவருக்குச் சொல்ல நினைத்தது. அதினால் இங்குள்ளவர்கள் சம்மதி வேண்டாம். அம்மட்டில் விட்டுவிட வேண்டியது.

நமக்குச் சீட்டுக்கு ௩-௫-ம் ஆரப்பண்ணியாயிற்று. யாக்கோவுப்பிள்ளை இந்த சம்பழமுறைபி லாகப்பண்ணுவார். உங்கள் மூத்த அண்ணாட்சியும் அப்போ தாகப்பண்ணவேணும், அது தப்பினால்த் தம்பி தேவசகாயம்பிள்ளை தான் இந்த வதலிக்கு உதவி செய்ய வேண்டுமென்றிருக்கிறேன். நமது சின்னஆட்டை இரண்டேகால் ௩-க்கு விற்றுப்போட்டேன், கடாய் மாத்திரம் நிற்கிறது, அதைப்பற்றித் தொந்தரவில்லை.

பிட்சைமுத்துப்பிள்ளை சொன்ன தப்பழம் போட்டுத் தண்ணீர் விடுகிறேன், இன்னமு மவர் சொன்ன மருந்து சாப்பிட எத்தனிக்கிறேன் வருகிற வாரத்துக்குள்ளாக. மழை யின்னுமில்லை. நாளைக்கு உங்களண்ணாட்சி கூட்டத்துக்கு இங்கே வருகிறதாயிருக்கும், அப்போது பேசிக்கொள்ள நினைத்திருக்கிறேன். கேத்து ஒரு ரொட்டி வந்தது, எனக்குத்தானோ, ஆரனுப்பினதென்றுங் காயிதமில்லை. உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்

௲அ௱௭௰௩-ஞு இப்படிக்கு
அகஸ்டோபர்மீ ௨௩-௳ சவரிராயன்
(இது:—பிரியமுள்ள குமாரன் சஞ்சீவிப்பிள்ளைக்கு வருவது.)

---

௨௨—௳ சஞ்சீவி காயிதம் வந்தது, அவன், தட்சநல்லூரில்ச் சற்கார் பள்ளிக்கூடத்துக்கு ஒரு ஆள் வேண்டியதாகக் கேட்டதின்பேரில், அண்ணாட்சியாரிடத்திலும் ஈ- கெம்பர் துரையவர்களிடத்திலுஞ் சொன்னதின் பேரில் உத்தரவு கொடுத்தார்கள், நாளைக்கு பள்ளிக்கூடத்துக்குப் போய்ப்பார்த்து, வருகிற தவ்வாலில் எழுதவேணென்றான். யாக்கோவு விசையநாருயணத்துக்கு வியாகப்பபிள்ளை கூடப் போய் வந்தான்.

௨௨—௳ யிரவில் தூத்துக்குடிக்கு வண்டியனுப்பினேன். சாமுவேல்பிள்ளை வண்டிக்குப் போனது. கூட ஞானப்பிறகாசம்பிள்ளையும் ஒரு கட்டிஅங் கல்த்தொட்டி யொன்றுஞ் சவரிராயபிள்ளைக் கனுப்பு:

உச—உ உபதேசிமார் கூட்டம், மதுரேந்திர ஐயரும் வந்திருந்தார்

உரு—உ கால்நடையாய்ப் போனார், குதிரை வரவில்லை. எனக்குப் பிட்சைமுத்துப்பிள்ளை மருந்து சாப்பிட பத்தியத்துக் கென்று ஒரு கடாய் பிடித்தறுத்தது, ஷெ ஐயர் விருக்காமல் போனது கஸ்தி. சாயங்காலஞ் சாலமோன் வந்தவனிடத்தில் ஷெ ஐயாவுக்குத் தலைமுழுகப் பாலனுப்பினோம்.

உசு—உ ஓய்வுநாள் காலைச்செபத்துக்குப் போய்வந்தேன். பின்பு எனக்கு வாந்தியுண்டாயிருந்தது, மதியச்செபத்துக்குப் போகவில்லை.

உஎ—உ விசையநாருயணத்து உவாத்தி ஏசுதாசன் வந்து போனான். பிட்சைமுத்துப்பிள்ளை மகன் ஒருஆண்குழந்தை பெற்றதாய்ச் சொன்னான்.

உஅ—உ சனம் ஐயரவர்கள்கூட யாக்கோவுப்பிள்ளை மீனாட்சிநாதபுரத்துக்குப் பள்ளிக்கூடஞ் சோதனைக்குப் போய் வந்தான்.

உகூ—உ விடியக்காலம் நினையாத வேளையில் மழை வந்தது, எல்லாருஞ் சந்தோஷமாய் விதைக்கப் புறப்பட்டார்கள், நல்ல பதமென்று, தமிள் அற்பசி௴ யரு-உ. தேவசகாயம்பிள்ளை காயிதம் வந்ததில் வடக்குன்குளத்து விளைக்கு டாக்டர் தேவசகாயம்பிள்ளைக்குக் காயித மெழுதினதும், தம்பி சஞ்சீவிக்குத் தட்சகல்லூரில்ப்பள்ளிக்கூட வேலையகப்பட்டதும், வீட்டில்வந்து சாப்பிட்டு வேலைபார்த்து வருகிறதும் எழுதினார். ஷெ சஞ்சீவி காயிதமும் வந்தது ஷெ வேலைபார்க்கிறதாக.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருஞ் சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையு மறிய விரும்புகிறோம்.

வடக்குன்குளத்துக்கு அடிக்கடி சமையங்களில் எழுதி யுண்டு யில்லையென்று பார்க்கவும்.

தம்பிக்குக் கர்த்தர்இரக்கமாய் வேலைகொடுத்ததுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்: அவனுக்கு பரிட்சை வாய்க்கவும் சரீர சுகத்தையுங் கொடுக்கவும் கிருபைசெய்யப் பிரார்த்திப்போமாக. ஷெ யவன் காரியங்கள் உங்கள் காரியமாயிருப்பதினால் உமக்கும் பிரியமுள்ள மிக்கேல் அருளம்மாளுக்கும் நாங்கள் உபசாரமெழுதத் தேவையில்லை. அவனுக்கு அகப்பட்ட அலுவலைக் காத்துக்

294



கொள்ளும் வகையைப் படித்துக்கொடும், தேவ விரக்க முண்டாவதாகவும் வேணும்.

பள்ளை யாட்டுக்குட்டியை விற்றுக்கூடக் கொஞ்சம் ரூ இ- அணாக்கால் கூட்டி ஒரு கடாய்பிடித்து உணத்தியிருக்கிறது. பிட்சைமுத்துப்பிள்ளை மருந்து சாப்பிடப்போகிறேன், இப்போது சுகசீராயிருக்கிறேது, சாப்பாட்டில் வெறுப்பில்லை, ஷெ யார் மருந்து சாப்பிட்டபின் சுகமானால் எழுதுவேன். காப்பியும் பாலும்ரொட்டியும் காலையில் நடந்துவருகிறது. வேறு விசேஷமில்லை. உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

கஅஎங-௵ இப்படிக்கு
அக்ஸ்டோபர்௴ ஙய-உ சவரிராயன்

[ இது :— பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்கு வருவது ].

---

ஙக—உ தோட்டத்திற் காணம் பொடிவிதையாக விதைத்தது. க-உ வெள்ளிக்கிழமை சம்பழக்கூடுதல்; உபதேசிமார், உவாத்திமார், சனம் மதுரேந்திர ஐயரவர்களும் வந்தார்கள். ஷெ ஐயரிடத்தில் பேசிக்கொண்டோம் பலகாரியங்கள். இரக்கமுள்ள கர்த்தரிது வரையுஞ் சுகங்கொடுத்து இரட்சித்ததுக்கு ஸ்தோத்திரம்.

நவம்பர்௴ க-உ சனிக்கிழமை

காலையில் ஷெ ஐயர் நல்லம்மாள்புரத்துக்குப் போனார். பாளையங்கோட்டையிலிருந்து தவ்வால் வந்ததில் பிள்ளைகள் யாவருஞ் சுகமே யிருக்கிறதாகச் செய்தி வந்தது. இராவில் பத்துமணிக்குள்ளாகத் தூத்துக்குடிக்குப் போயிருந்த இன்னாசியம்மாளும் பிள்ளைகளும் வந்தார்கள். அங்கிருந்து அன்னம்மையையுங் கூடவந்தது. இங்கிருந்து யாக்கோவுப்பிள்ளை வண்டியனுப்பினார், சாமுவேல்ப்பிள்ளையுங் கூடப், பாளையங்கோட்டை மார்க்கமாய் வந்தார்களாம்; வேறு ஒருவர்கள் அறியாமல் நாங்குனேரிப் பாதைக்கு வண்டிப்பேட்டையில்த் தங்கி வந்தார்களாம்.

உ—உ ஓய்வு நாள், ஆராதனையும் இராப்போசனமும் நடந்தது.

ங—உ சங்கக்கூட்டத்துக்கு மதுரேந்திரஐயாவும் வந்தார், ஆலங்கிணரு ஏசுதாசபிள்ளையும் வந்தார். ஷெ யவர்கள் கூட்டம் முடிந்து சாயந்திரம் போய்விட்டார்கள். பின்பு ஆர்கோட்டையரவர்களும் யாக்கோவுப்பிள்ளையும் நல்லம்மாள்புரத்துக்குப் போனார்கள், பள்ளிக்கூடஞ்சோதனை

க்குப் போனார்கள்.

௩-உ ஷை யாக்கோபுபிள்ளைக்குச் சுகமில்லை யென்று சாயுங்காலம் வீட்டுக்கு வந்து மருந்து சாப்பிட்டான். ஷை ஐயாவர்கள் வரவில்லை. ௫-உ ஷை பானுக்குச் சுகமிருந்ததினால் விசையநாராயணத்துக்குச் சவரிப்பிள்ளையவர்களைக் கண்டுபேசி வந்தான்.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபையுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவபிரசாதத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம்.

இவ்விடத்தில் உங்கள் மூத்தஅண்ணாட்சி மாசாந்திரக்கூட்டத்துக்கு இரண்டுவிசை வந்திருந்தார். அப்போது என்னிடத்தில்: தம்பிக்கு எழுதிய காயிதங்களுக்கு சரியானபதில் உத்தரவு எழுதுகிறானில்லை என்றும், பணி செய்யச் சொல்லியபடி செய்தனுப்பவில்லையென்றும், சீட்டுக்காரியத்துக்கு இரண்டுசீட்டை ஒருசீட்டாகவும் இரண்டுபேர் ஒரு சீட்டிற் சேர்க்கவும் இப்படியானால் ஆறுவருஷமிருக்கிறது மூன்றுவருஷத்தில் முடியுமென்றும் யோசித்து எழுதினதுக்குப் பதில் வரவில்லை என்றும் மாத்திரம் சொன்னார். மற்றுங்காரியங்களுக்கும் நீர் அவருக்கு எழுதும். ஷை மணி வகைக்கு நான் யோசிக்கிறது, உள்ளதைக்கொண்டு நல்லதைச் செய்யென்று நான் சொல்லுகிறேன். அதிகத்திற் செல்லாமல் இருக்கதுக்குத் தக்கதாக அவசியஞ் செய்யவேண்டியது, இன்னமுஞ் செய்யவேண்டிய சிலது அவளைப்பற்றியிருக்கிறது. அதையும் தாட்சியேர்சியாமல்ச் சொல்லுகிறது வணக்கம்.

இப்போது தூத்துக்குடியிலிருந்து இன்னாசியம்மாளுங் குழந்தைகளும் வந்திருக்கிறார்கள் ஷை அன்னம்மை என்றதையும் பலயோசனையினால் இவ்விடத்துக்கு அநுப்பினார்களாம்.

மற்றுங்காரியங்களுக்கு பின்னாலே எழுதவேண, எனக்குத் தேகபெலனில்லை. சீட்டுகாரியத்தைத் தவக்கினதை விடாமல்ச் சீக்கிரத்தில் முடிக்கப் பாருங்கள்.

உங்களுக்கு வாழ்த்தல் சொல்லுகிறேன்.

௲அ௱௭௰௩ — இப்படிக்கு
நவம்பர் ௩-உ — சவரிராயன்



[இது:— பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முன்சிதேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது].

---

௬-உ இன்னாசியம்மாள் கைவலிக்குப் பூலுத்தேவன் வந்துபார்த்து மொழி பிசகியிருக்கிறதென்று, மணிகட்டை உலைத்து மருந்துசெய்தால் சுகமாமென்றார். நான் தேவசகாயம்பிள்ளைக்குக் காயிதம் எழுதினது, கிருபை பெற்றாளுக்கு மணிசெய்தனுப்பவும் சீட்டுக்கூட்டத்தை நடத்தவும் வேணுமென்றேன். எ-உ ஷை காயிதமனுப்பினேன். உபதேசிமார் உவாத்திமார் பாடத்துக்கு வந்தார்கள். கனம் மதுரோக்கிராஜுபரும் கூட வந்தார். இரவு தங்கினார். அ-உ காலையிற் போனார். தவ்வாலில் சஞ்சீவி காயிதம்வந்ததில் இன்னும் பரிட்சைக்கு ரூ. ௬ வேண்டுமென்றெழுதினான். அதற்கு, இங்கு கூடிவையாது, அவ்விடத்தில்த் தானே பார்த்துகொள்ளென்று ௯-உ எழுதியனுப்பிவிட்டேன்.

---

†

கர்த்தர் தமதாவியைத் தந்தருளுவாராக.

இவ்விடத்தில் யாவருஞ் சேமம், அப்படி யவ்விடத்துச் சேமத்தையறிய விரும்புகிறேன். எனக்கு மருந்து வரவில்லை. இன்னாசியம்மாளுக்கு இன்று என்னைச்சிலே கட்டியிருக்கிறது, சுகமாகும் என்கிறார்கள், தம்பி தேவசகாயம்பிள்ளை காயிதம் எனக்கு வந்தது சீட்டுக்காரியத்தைக் குறித்து, அதையும் உங்களுக்கனுப்பினேன், அதுகாரியத்துக்குத் திட்டமானபடிக்குப் பணஞ் செலுத்துதற்கு சாக்கிரதை செய்து இன்னபடி யென்று உத்தரவாக வேணும், வழுவழுப்பாய் நான்க் கடத்தாதையுங்கள், மற்றுங் காரியங்களுக்கும் அப்படியே செய்ய விரும்புகிறேன்.

கேத்து ஏசுதாசன் வந்தவன் தங்களிடத்திற் பேசினதுக்கு ஐயாவுக்குஞ் சொல்ல உத்தரவின்படி யோசித்துக் கொள்ளும்படியாய்ப் பேசினீர்களாம். அது காரியத்துக்குக் கனம் ஒயிட்டய்யாவர்களிடத்தில் ஷை மாப்பிள்ளையின் காரியத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு துரிதத்தில் எவ்விதமும் நடத்த வேண்டியது. மற்றப்ப காரியத்துக்கு உறுதி யாக்கிப் பேசிக்கொள்ள வேணுமென்பதினால்க் கடத்தக் கூடாது. ஷை யான் பேசினதில் உறுதியா யிருப்பதினால் விடப்படாது. இதையும் விட்டு விடாதபடி தேவசித்தத்துக்கு ஒப்புவித்து நடத்த வேணுமென்பதே என் விருப்பம்.

சஞ்சீவி: பின்னும் ஒருபரிட்சை கொடுக்க வேண்டு மென்றும், அதற்கும் ௲௫-கொடுக்க வேண்டுமென்றும், இன்னம் அவன் அநுவலில் சம்பளம் வாங்க வில்லை யென்றும், ௰௫-டைக்குள்ளாக அப்பிளிக்கேஷம் பண்ண வேண்டு மென்றும், யாக்கோவுப்பிள்ளையும் அந்தப்பரிட்சைக்கும் போகிறதாகவும் எழுதி யிருக்கிருன். மற்ற யாவரும் சுகமாயிருக்கிறதாகவும் செய்தி.

உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௰௩-(ஆ) இப்படிக்கு
நவம்பர்மீ ௰-உ சவரிராயன்

(இது:—நல்லம்மாள்புரத்தில் வாசமாயிருக்கிற கனம் பொருந்திய மதுரேந்திர ஐயரவர்களுக்கு வருவது.)

†

பிரியமுள்ள குமாரன் சஞ்சீவிப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாக.

இவ்விடத்தில் யாவருஞ் சேமம் தேவயிரக்கத்தினால், உங்கள் சுகசெய்திக்கும் தம்பி தேவசகாயம்பிள்ளை காயிதமும் வந்தது. அவர் சீட்டுப்பணம் அனுப்பவும் எழுதினார். நீ பரிட்சைக்கும் பணங் கேள்க்கிறது, ஆனாலும் முந்தின பரிட்சைக்குக் கொடுத்த பணமும் வரவில்லை. யிப்போதும் ௲௫-என்கிருந்து வரும், உங்களண்ணாட்சிமாரிடத்திற் கேட்டு ஆரிடத்திலாவது வாங்கித் தரச் சொல்லிச் சம்பளம் வாங்கினபின் செலுத்திப் போடவேண்டியது.

யாக்கோவுப்பிள்ளையும் பரிட்சைக்கு வருகிறதாகவும் பணம் வேண்டு மென்றுஞ் சொல்லுகிருன். இன்றுசிமையாளுக்கு வாக மொழி பிசகியிருந்ததுக்குக் வைகட்டி யிருக்கிறது, மூன்று நாளாயிற்று. சுகமாகு மென்கிறார்கள். பத்தியமா யிருக்கிறது அவளுக்கு. எனக்கு பிட்சைமுத்துப்பிள்ளை மருந்து வரவில்லை. நல்லம்மாள்புரத்திலும் யாவருஞ் சேமம், மற்றகாரியங்களுக்கு வருகிற தவ்வாலுக்கு எழுதவும் வேணும், மழைகாலமானதினால் சின்னப்பிள்ளைகளைப் பத்திரமாய்ப் பார்க்கவேண்டியது. உங்க ளெல்வாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறேன்.

௲௮௱௭௰௩-(ஆ) இப்படிக்கு
நவம்பர்மீ ௰-உ சவரிராயன்

தோட்டத்தில் துவரை விதைக்க ஞானமுதம் வசம் ௲௫ கடு-கொடுத்தேன், கிடையாதென்று சொல்லி விட்டான். அதத்திவிதை யகப்படுமோ,



னுந் கொஞ்சம் வாங்கி யனுப்பு.

௰௨—உ தேவசகாயம்பிள்ளை காயிதம் ஒன்று வந்ததில், வடக்குன்குளம் நமது விவையை டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை நமக்கு விலைதுக்கு மனஸ்தாபமாய் எழுதிய காயிதம் சின்ன ஞானப்பிரகாசம்பிள்ளையும் மருமகனுக்கு எழுதிய காயிதமும் வந்தது.

௰௩—உ மணியத்துக்குமேல் மதுரேந்திர ஐயர் வந்தார் கூட்டத்துக்கு. அதற்கு முன்னுனேரம் வரையும் வந்த பின்னும் மழை மிகுதியாயிருந்தது, யிராவிலுங் கன மழை பெய்தது.

௰௪—உ காலையில் ஷை ஐயர் ஊருக்குப் போனார். சாயுங்காலம் கனம் ஞர்க்கோட்டையரவர்கள் சடையநேரிக்கும் போனார்கள். மழையும் பெய்தது.

௰௫—உ ஓய்வுநாள் ஆராதனை வழக்கபடி மோசே உபதேசியார் நடப்பித்தார்.

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாக.

இவ்விடத்தில் யாவருங் கர்த்தர் கிருபையினாலே சேமம். அப்படியே அவ்விடத்துச் சேமத்தை யறிய விரும்புகிறோம்.

தாமனுப்பிய காயிதம் வந்து சகல சமாசாரமும் தெரிந்தது. நமது அருமை அந்தோணிமுத்துக்கு வந்த ஆவத்தில் தேவன் காப்பாற்றினதினாலவருக்கு ஸ்தோத்திரம். முற்றிலுங் காப்பாராக.

விலைக்காரியத்தில் டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை விட்டுவிட்டதேயல்லது, அவர் மனஸ்தாபம் பெரிதல்ல. அவர் செய்ததெல்லாம் நாம் மறந்து விட்டதுபோல அவரும் செய்வார்.

இப்போது அவரிடத்தில் வரவேண்டிய ௲௫ கஇஸ்—க்குத் தீர்வை ௲௫-ரூ கொடுத்ததாகவும் ஷை ௲௫ ரூஸ்— நமக்குத் தருகிறதாகவும் எழுதினரே. நமது தங்கட்சி பூவாயி தீர்வைப்பணம் கொடுத்துச் சீட்டுவாங்கினதாய் முன்னெழுதினாளே. நான் சவரிமுத்துப்பிள்ளைவசஞ் செலுத்தினதுக்கு பின்பு இரண்டு வருஷம் தீருவை செலுத்தினதுக்கு ரசீது வந்தால்ச் சரி, எப்படியானாலும் தேவசகாயம்பிள்ளையிடத்தில் ௲௫ ரூஸ்—யும் நமது மாப்பிள்ளையவர்கள் தானே அந்த ௲௫ ரூஸ்—யும் வாங்கித் தங்கள் ௲௫ ரூ-ஆம் எடுத்துக்கொள்ளவும் ௲௫ஸ்—க்கும் மிளகுவத்தல் வாங்கி உம்மிடம் வரும்படியும் ஷை விலையை மாப்பிள்ளைதானே பயிற்செய்யவும் எழுதவேண்டியது. இதுவரையும் அந்த விலைக்காணக்குத் தீர்த்து இனி எப்போது மாப்பிள்ளை பயிரிட்டுத் தந்ததை

வாங்கிக்கொள்ளும்.

தம்பி சஞ்சீவி பரிட்சைக்குப்போனதும் பணம் செலுத்ினதும் தெரிய வில்லை. ஷை யான் சீட்டுக்குப்பணம் ஆசிர், யாக்கோவுப்பிள்ளை மார்களிமீ கொடுக்கிறதாகச் சொல்லுகிறார். மற்றவர்கள் யாவருஞ் சேர்ந்து இத்தனை சீட்டுப்பணம் வந்ததென்றால் அல்லவா நாமுஞ்செலுத்தலாம், அதுவும் தெரியவேண்டும். உங்கள் மனம். ஷை தம்பிக்குப் புத்திசொல்லி அலுவலைக் காத்துக்கொள்ளுங்கள்.

இன்னாசியம்மாள் கைமொழிபிசகினதுக்குக் கைகட்டி யிப்போது குணமாகிவந்தது. அவள் மாப்பிள்ளை மகளுக்குக் காயிதங்களெழுதுகிறது வெகு நீதிமான் போல. அவர்கள் மீ ௫ ௩ அநுப்பவேண்டும், அப்படியில்லையானால் நமது வீட்டிலிராமல்த் துறத்தவேண்டும், அவர் குடியிருக்க வாடகை வீட்டில் யிருப்பார். பின்பு மற்றக் காரியங்களுக்கு முடிவு செய்யலாம்.

எனக்கு ரொட்டி ரண்டுவெதலி யனுப்பினீர், பின்பு வராத முகாந்திரந் தெரியவில்லை, ஞானபுதம் அவர்கள் தரவில்லை என்றான். வேறு விசேஷமில்லை. உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௰௩ இப்படிக்கு
நவம்பர்௴ ௰௯-உ சவரிராயன்

[இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவ சகாயம்பிள்ளைக்கு வருவது.

---

௰௮—உ நல்லம்மாள்புரத்திலிருந்து ஐயர் கத்தரி நாத்து அனுப்பினார். நான் கொஞ்சம் நட்டேன். மனையில்லைத் தன்னீரத்தில் கின்னி கட்டது. கிசையன்விளை சுப்பிரமணியன் செட்டியார் மனைவி நடசஞ்சலமா யிறந்தவள்க்கு தட்டி சொல்லி யான் வந்தது, குடிமகன், அவனுக்கு படி பசா ௫-கொடுத்து விட்டேன். அந்தத்தட்டி கேட்கும்படிக்கு என் மனைவி ௰அ-உ மழை தூத்தலோடு புறப்பட்டாள், நான் போக வேண்டாமென்று சொல்லியும் மீறிப்போனாள். யாக்கோவுப்பிள்ளை சாயந்திரம் நல்லம்மாள்புரத்துக்குப் போனான்.

௰௯—உ ஷை இரண்டுபேரும் காலையில் வந்தார்கள். சாயுங்காலம் சாலமோன்பிள்ளை, ஞானப்பிறகாசம்பிள்ளை இரண்டு பேரும் கோட்டாத்துக்குப் போகிறதாக வந்து தங்கி ௨௰-உ காலையிற் போனார்கள்.

௨௰—உ தேவசகாயம்பிள்ளைக்கு காயித மனுப்பியதில்: முனிசுப்பிள்ளைக்கு நமது வீட்டில் இடங் கொடுக்கிறதானால், முன்பேசினபடிக்குத் தம



து மனைவி பிள்ளைகளுக்கு மீ ௫ ௩ம் கொடுக்கவேண்டும், கொடாவிட்டால் நமது வீட்டிலிருக்கப்படாது, அவர் வேறு வாடகை வீட்டிற் போயிருக்கவேண்டும், அப்பால் வேறுவகை செய்யலாமென் றெழுதினேன்.

௨௧—உ உபதேசியார் கூட்டம், கனம் மதுரேந்திரஐயரும் வந்தார் இரவு தங்கி யிருந்தார். ஷை முனிசுப்பிள்ளை காரியம் பேசினதில், அவரும் நான் தேவசகாயம்பிள்ளைக் கெழுதியபடியே எழுதச் சொன்னார். அப்படி எழுதிவிட்டேன் என்று அவருக்குச் சொன்னேன். ௨௨-உ காலையில் ஊருக்குப் போனார்.

௨௩—உ ஓய்வுநாள் வழக்கப்படி மோசே உபதேசியார் ஆராதனை நடப்பித்தார். கனம் ஐயரவர்கள் மீனாட்சிநாதபுரத்திற்குப் போனார்.

௨௪—உ தேவசகாயம்பிள்ளைக்குத் தம்பிக்குங் காயிதம் எழுதினேன்.

௨௫—உ அநுப்பினேன். சாயந்திரம் தஞ்சாவூருக்குப் போயிருந்த சுந்தரியம்மாள் மேலவீட்டுக்கு வந்தாள்.

௨௬—உ சறவணை முக்கந்தன் மகள்க்குக் கலியாணமுடிந்தது, கோவிலுக்குப் போனேன்.

---

மிகவும் பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாக.

இவ்விடத்தில் யாவருஞ் சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமத்தையு மறிய விரும்புகிறேன். தவ்வால் தோரும் உமது காயிதம் வர விரும்புகிறேன், தம்பியின் காரியங்களும் உமதண்ணாட்சிமார் காரியங்களும் சுகத்லைதப்பற்றி எழுதும்.

உமதண்ணாட்சி கனம் மதுரேந்திர ஐயரவர்கள் தமது தம்பிமார்கள் சுகசெய்திக்காவது மீ ஒன்றுக்கு ஒரு காயிதமாவது எழுதுகிறதில்லை, நானெழுதினாலும் அததற்குப் பதில் எழுதாமலு மிருக்கிறார்கள், விசேஷமாக தம்பி தேவசகாயம்பிள்ளையு மென்று மனஸ்தாபப் பட்டார். அப்படியே நானுஞ் சொல்லவேண்டி யிருக்கிறது. யேனென்றால் அந்தந்தக் காரியங்களுக்கு எழுதி பதிலறிய விரும்புகிற காரியங்களுக்கு பதில் வருகிறதினால் மனதுக்கு ஆறுதலாம். அது பதில் அறிய விரும்புகிறதினால் மனதுக்கு வருத்தமாயிருக்கிறது.

நான் கிருபைபெற்றுள் மணிக்கு எழுதினதுக்கும் முனிசுப்பிள்ளைக்குச் செய்யவேண்டியதுக்கும் ஞ. ஞானப்பிறகாசம்பிள்ளை காரியத்துக்குஞ் சீட்டுச்

குக்சேர்ந்தவர்கள் இத்தனை பேர்களென்பதும் இவ்வளவு தகை சேருகிற தென்பதும் இந்த மீ இத்தனும்தெய்தியில் இன்னின்னார் பணம் ரூ; தெய்வ சகாயம்பிள்ளை யவர்களிடத்தில் வந்ததும் சேருகிறவர்களில் இன்னார் தகை வரவில்லை யென்பதையும் அறிந்து நான் ௸ பணம் ௸ யாருக்குச் செலுத்துவேன் யென்றதுக்குப்பதில் வரக்காத்திருக்கிறது. இப்போது சாலமோன் பிள்ளையும் ௸ ஞானப்பிரகாசம்பிள்ளையும் போன புதன்கிளமையிற் கோட்டாத்தில் சில வெண்கலப்பாத்திரங்கள் வாங்கவென்று போனார்கள், இன்னமும் வரவில்லை.

இங்கே மழையில்லை, குழங்களில்த் தண்ணீர்களில்லை. நமது வினை விதைக்கவில்லைத், தோட்டமுழுது முந்தின பதத்தில் விளைந்தது பயிராயிருக்கிறது. பூசணி சுரை பீக்கில் படருகிறது. எனக்கும் இப்போது சற்று சுகம் போலிருக்கிறது, வாய்வு விக்கல் கொட்டாவி அதிகமில்லை, சாப்பாடு வெறுப்பில்லை. அதிகஞ்செல்லாது. பிட்சைமுத்துப்பிள்ளை மருந்து செய்து தரவில்லை. ஒரு மீ மாயிற்று, தேவகிருபை நமக்கு வேண்டும். நம்முடைய பிள்ளைகளைப் பத்திரமாய்ப் பாருங்கள் மழை யீரங்களானதால்.

உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம். நமது வீட்டுச்சிலவு வகைக்கு யாக்கோவுப்பிள்ளை எறக்குறைய ரூ ஐந்து கொடுத்தார், ஆ அவர் வரவு ரூ ௧௩-ம். மற்றுங்காரியங்களுக்கும் அடிக்கடி எழுதிக் கொள்வோமாக.

௲அ௱எ௰௩ இப்படிக்கு
நவம்பர்மீ ௨௪-ல சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்கு வருவது.)

---

†

பிரியமுள்ள குமாரனாகிய சஞ்சீவிப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவரும் கர்த்தருடைய இரக்கத்தினாலே இதுவரையுஞ் சுகமே யிருக்கிறோம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையு மறிய விரும்புகிறோம்.

நானுனக்கு முன்னெழுதினதின் படிக்குச் சோதனைக்கு அங்கே பணம் நேப்பேறிற்று என்றறிய ஆவலாயிருந்தேன்; அதொன்றும் வரவில்லை. இரண்டு தவ்வாலில் தேவசகாயம்பிள்ளை காகிதங்கள் வந்தது. நான் போன தவ்வா



லில் நானவருக்கு எழுதினதுக்குப் பதில் முந்தின தவ்வாலில் வரவில்லை இப்போதிருக்கிற சுகத்துக்கும் மற்றுங் காரியத்துக்கும் எழுதவேண்டியது. மழையில்லை, வினை விதைக்கவில்லைப், பணம் இல்லை, தோட்டம் முழுதும் பயிராயிற்று. இன்னாசியம்மாளுக்கு மீ ௫-ரூ அவள் மாப்பிள்ளை முனிசப்பிள்ளை கொடாவிட்டால் நமது வீட்டிலிராமல் வேறிடம் போகவேண்டும் அப்பால் சங்கத்தோடு ஒரு முடிவு செய்யலாமென்று யோசனை யிருக்கிறது. கர்த்தர் கிருபை செய்வாராகவும் வேணும். அவளும் பிள்ளைகளும் வந்தாள் முதல் இதுவரை அவள் கைமொழி பிசகியிருந்தவளுக்கு பண்டிதமும் பத்தியமாயிருக்கிறது, பிள்ளைகள் சுகமாயிருக்கிறார்கள். அன்னம்மை படித்து வருகிறது. நமது சீட்டுக் கூட்டத்தை பற்றி ஒன்றும் பேட்சில்லையாயிருக்கிறது அது விப்படியாகிய காரணம் தெரியவில்லை. கு. ஞானப்பிரகாசம்பிள்ளையைப்பற்றிய கவலை எனக்கதிகமாயிருக்கிறது. இப்போதெனக்குச் சற்று சுகசீராயிருக்கிறது, பிட்சைமுத்துப்பிள்ளை எனக்கு மருந்து தரவில்லை. கர்த்தர்தான் சித்தமிரங்கவேணும். முன் பின்னாக எழுதினதும் அந்தந்தக் காரியங்களுக்குச் சரியானபதில் வந்தால்த்தான் மனதுக்கு ஆறுதலாம்.

ஆகிலுந்தேவயிரக்கம் உனக்கு ஆகவேண்டியதுக்கெல்லாந் துணைச்செய்யப் பிரார்த்திக்கிறேன். கிருபை செய்வாராக. உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲அ௱எ௰௩ இப்படிக்கு
நவம்பர்மீ ௨௪-ல சவரிராயன்

(இது:—முனிசு தேவசகாயம்பிள்ளை வீட்டில் சஞ்சீவிப்பிள்ளைக்கு வருவது.)

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை யென்றேனும் பெருக உண்டாவதாக.

இவ்விடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சுகசெய்திகளுக்கு நீரும் தம்பி சஞ்சீவியும் எழுதியதினால் அறிந்தேன், கர்த்தர் கிருபை செய்து முற்றிலுங் காப்பாராக.

முனிசப்பிள்ளை காரியம் இந்த மீ முடிவில்த் திட்டமாக வேண்டியது சொற்படிக்கு ரூ ௫-ம் வரவேணும், அல்லது வீடு விட்டுப்போக வேண்டும் இப்படியேயுங்கள் முத்துஅல்லாட்கியும் சொல்லுகிறார்கள். அவர் குறைந்தது

யெப்புக்குஞ் சறுவை செட்டியருக்கு இடங்கொடுக்கப்படாது. அவர் பிள்ளைகளுக்குப் பீசுப்பணம் ௴ க-க்கு ௲ ௯-ஆகையால் அவர் மகள் எழுதினதுக்கு ஒருவதவி ௲ ௯-ஒருவதவி ௲ ௨-ஆ ௲ ௯-அனுப்பினார் மூன்று ௴த்துக்கு. இன்னம் ௲ ௫-வரவேண்டும். இதைச் சஞ்சீவிக்குச் சொல்லி, இதுவொன்றும் வேண்டாம் ௴ ௲ ௬-யாத்திரங் கொடுத்துவிட அல்லது வீட்டைவிட்டுப் போகச்சொல்ல வேண்டியது. மற்றுங்காரியங்களைப் பற்றி பின்பு சுகத்துடனிருந்தால் எழுதுவேன்.

உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲அ௱எ௰௩-௵ இப்படிக்கு
நவம்பர் ௴ ௨௭-௳ சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு ா: தேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.)

---

௨௭—௳ திருநெல்வேலித் தம்பி ஏசுதாச பிள்ளைக்கும் தேவசகாயம் பிள்ளைக்குங் காயித மெழுதினேன்.

௨௮—௳ உபதேசிமார் கூடுதல். இராப்போசனம். மதுரேந்திர ஐயரும் வந்தார் சுகமில்லாதிருந்தும். இரவு தங்கியிருந்து ௨௯-௳ உதையத்தில் ஊருக்குப் போனார். சாயுங்காலங் கனம் ஆற்கோட்டையரவர்களைப்போய்க் கண்டேன். அவர்கள் முன் னெனக்குத் தருவோமென்றபடி செபபுஸ்தகம் பேரெழுதித் தந்தார்கள்.

௩௰—௳ ஒவ்வுநாள் ஆராதனைபவர்கள் வழக்கப்படி நடத்தினார்கள் டிஷம்பர் ௴ ௩-௳ புதன்கிளமையில் காலை மாலை விசேஷித்த ஆராதனை நடப்பிக்கிறதாக அறிவித்தார்கள். மலையாளத்துக்குப் போயிருந்த சாலமோனும் ஞானப்பிரகாசம் பிள்ளையும் விசயநாருயணத்து வியாகப்ப பிள்ளையும் விசயநாருயணத்துக்கு வந்து, டிஷம்பர் ௴ ௧-௳ நல்லம்மாள் புரத்துக்கு ஷை இரண்டு பேரும் போனதாகச் செய்தி வந்தது.

கர்த்தருடையகிருபையினால் நவம்பர் ௴ ௩௰-௳ தேதிவரை காப்பாற்றப்பட்டோம். அவருக்கு ஸ்தோத்திரம்.



௲அ௱எ௰௩-௵ டிசெம்பர் ௴ ௧-௳ திங்கள்கிளமை

௧—௳ சற்று சுகயீன மிருந்ததினால் விரகுக்கு ஒருவாதமடக்கி மரம் வெட்டி அர்க்கினேன்.

௩—௳ காலையிலும் மாலையிலும் சங்கத்தார்கள் சபையிலுள்ள சனங்களுக்கும் புறம்பான ஜாதிகள்க்கும் தேவ ஆவியின் அநுக்கிரகத்தினால்ச் சேர்திருத்தமுங் குணப்படுதலு முண்டாக ஆராதனைசெய்து பிரசங்கமும் கோவிலில் நடத்தினார்கள் கனம் ஆற்கோட்டையரவர்கள். இந்தச் சேகரத்திலுள்ள மற்றக் கோவில்களிலும் அப்படியே நடந்ததாம்.

௬—௳ தேவசகாயம் பிள்ளைக்குங் காயிதமெழுதினேன். சஞ்சீவிக்கும் ஒரு காயிதம் அவனுக்குப் புது வருஷத்தில் விவாகம் நடப்பிக்க யோசனையெனக்கிருக்கிறதாகவும் எழுதினேன்.

---

✝

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குக் கர்த்தருடைய கிருபையுண்டாக.

இவ்விடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையு மறிய விரும்புகிறோம்.

இவ்விடத்தில் இப்போதும் ஒரு பதமழை பெய்தது, பின்பு ஒன்றுமில்லை. அவ்விடத்திலு மப்படித்தானிருக்கும்.

இவ்விடத்தில் ௩-௳ புதன்கிளமை யிந்தச் சேகரத்தில் ஆராதனை இரண்டு வேளையும் நடந்தது. நல்லம்மாள்புரஞ் சேகரத்திலும் அப்படியே உத்தரவு.

ா: முனிசுப்பிள்ளை தமது மனவி பிள்ளைகளுக்கு ௲ ௬ ௴க்கோருங் கொடுப்பாரென்று நம்பவில்லை யாகையால் அவர் நமதிடத்தை விட்டு வெளியிற் போகவேண்டிய தவசியம். மிக்கேலம்மாளை மாயமாய் எய்த்து அங்கேயிருக்கப் பார்ப்பார், அதுக்கு இடங்கொடாதிருங்கள்.

எனக்கு சற்று பொருளமையாய் நடந்ததினால் சற்று நடமாடித்திரிகிறேன்.

இவ்விடத்திற் கூட்டம் அதிகம், வரவு குறையாகையால் இனி இன்றுஸிய்மாளைத் தாங்க முடியாதெனக்கு. அதற்கு முடிவுசெய்யவேண்டும். கிருபைபெற்றானுக்கு மணியனுப்பும். அதற்கும் ஒருவன் துரிதமாய்ப் பேசுகிறதாய்க் காணுகிறது.

விசைப்பாருவனத்தைச் செபத்தியாயிக்குச் சுகமில்லையென்று தண்ணீர் காட்டிக் கொடுக்க நாதமில்லையென்று ஞாது வக்கதின் பேரில் இன்றுவியம் மாள் மகள் இளையதை அனுப்பி யிருக்கிறாள்.

கடையில் உளுந்து விற்ருல் அல்லது திருநெல்வேலியிலாவது இரண்டு பணத்துக்கு உழுந்து வாங்கி யனுப்பினால் நலமாயிருக்கு மது வெனக்குத் தான் பிரியமாயிருக்கிறது.

இப்போது கறிக்குக் கடலிருந்து வருகிற தன்றி வேறொன்றுங் கிடையாது, அதுவும் மிகுதி விலைச் சிலவேளை யில்லாமலும் போகும்.

அவ்விடத்துக்குப் பிள்ளைகளுக் கென்ன அரப்பலாமென் றெண்ணுகிறான். தம்பி சஞ்சீவிப்பிள்ளையின் அலுவலை உண்மையாய்ப் பார்க்கவும் பரீட்சைக்குப் படிக்கவும் யேவிக் கொள்வீராக. வேறு விசேஷமில்லை.

கர்த்தர் எல்லாருக்கு இரக்கஞ் செய்து சரீரசுகத்தையும் ஆத்தும நன்மையையுந் தந்தருளுவாராக.

௲௮௱௭௰௩ ௵ இப்படிக்கு
டிஷம்பர் ௴ ௪-உ சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்கு வருவது.)

---

†

பிரியமுள்ள குமாரன் சஞ்சீவிப்பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம், அப்படியே அவ்விடச் சேமாதிசயங்களையு மறிய விரும்புகிறோம்.

இந்தத் தவ்வாலில் காயிதம் வருமென்று பார்த்திருந்தேன், அவ்விடத்திலிருந்து ஒருவரும் எழுதவில்லை. உன் காரியங்களுக்குக் கர்த்தரிரக்கமாய் யாவுஞ் சேமமாகுமென்று நம்புகிறேன், அப்படியே செய்வாராக.

இந்த வருஷம் முடிவு பருவம் வரையுந் தேவன் விக்கினமில்லாமல் காப்பாற்றிவந்தார், உனக்கும் ஒரு வேலையும் வாய்க்கச்செய்தார். ஆனதால் இப்போ துண்டாயிருக்கிற எண்ணம் துன்பம் இல்லாமலும் வருத்தமில்லாமல் ஒரு விதத்தில் சமாதானமான காலமாய்க் காண்கிறதினால் புது வருஷம் பிறந்து சங்கம் விடுமுறைகாலம் வரும்போ துனக்கு ஒரு வீடாக்க வேணுமென்கிறோம். உங்கள் மூத்த அண்ணாட்சியின் யோசனையும்,



உனக்கு மனம் எப்படி யிருக்கிறதென்று அறியாததுக்கு முன் ஒருவருக்குஞ் சொல்லப்படாதென்று என் மனது உன் மனதறிந்து வெளிவிடலாமென்று இதை எழுதுகிறேன். என்னையும் உன் தாயையும் வெகுகாலம் இருப்பார்கள் என்ற எண்ணம் உனக்கு எங்கள் பேரிலிருக்கிற அன்பினால் இருக்கிறது. அப்படி யிருந்தாலும் எங்கள் வயசையும் பலவீனத்தையும் வியாதியையுங் கவனித்து எங்கள் சுகத்திலே தமக்கு ஆகவேண்டிய காரியங்களைச் சேமமாய் முடித்துக் கொண்டால் உமக்கும் எங்களுக்கு மனச் சந்தோஷமும் ஆறுதலு முண்டாமென்றும் நினைக்கவேண்டியது. எப்படியானாலும் நாங்களிருவரும் புதுப் பிலன்கொண்டு உதவியாயிருப்போமென்று ஒருவரும் நினைக்கத்தக்கதில்லையே. இப்போதிருக்கிற சுகம் இனிமேலும் எங்களுக்கு யிருக்குமென்று எண்ணாமல் எங்களால் உனக்கும் ஆகவேண்டியதை நிறைவேற்றி வீடாக்கவே துரிதப்படுகிறோம். ஒரு நாள் பலவேட்டில் யாக்கோவுப்பிள்ளை பேட்டையம்மாளுக்குக் கலியாணத்துக்கு ௯ சவ-ம் கொண்டுபோனதுபோல இளைய அம்மாளுக்குங் கொண்டுபோக வேண்டிய தென்றான். அது என் மனதுக்குள்ளிருக்கிறதினால் ௸ ௯ சவ-ம் இப்போதே ஆசிராய் வைத்திருக்கிறேன். கர்த்தருக்குச் சித்தமானால் நீ யெழுதும் யோசனையைக் கண்டு ௸ காரியங்களை வியாஞ் சொல்வேன். பெண்காரியம் ஒன்றுதான் நீ தெரிந்து கொள்ளத் தேவகிருபை இரங்கி வாய்க்கச் செய்வாராக. உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

கர்த்தர் பண்டிகைக்கு விடுமுறைக்கு திருநெல்வேலி உனதண்ணாட்சிவர மனதா யெழுதியிருந்தார், அப்படியே அவர் வரக் காத்திருக்கிறதாகச் சொல்லவும். வேறு விசேஷமில்லை. கர்த்தர் கிருபை செய்யப் பிரார்த்திக்கிறோம்.

௲௮௱௭௰௩ ௵ இப்படிக்கு
டிஷம்பர் ௴ ௪-உ சவரிராயன்

(இது:—முனிசு தேவசகாயம்பிள்ளை தம்பி சஞ்சீவிப்பிள்ளைக்குக் கொடுப்பது.)

---

௫-உ சம்பழக்கூடுதல்க்கு எல்லாரும் கனம் மதுரோந்திரஐயரும் வந்திருந்தார்கள் நானும் போனேன் கோவில்க்கு. இடையங்குடியில் சாமுவேல் ஐயர் குமார மூத்தவனுக்குச் சாரும் களிச்சலு முண்டாய் வருத்தப்பட்டதாகவும் மதுரோந்திரஐயர் போய்ப்பார்த்து வந்ததாகவும் சொன்னார், அருளம்மாளும் அங்கிருக்கிறாளாம்,

௬—வ ஷை ஐயர் கல்லம்மாள்புரத்துக்குப் புறப்படும்போது அவர் காரியங்கள் சில மாறுதலாகக் கமிட்டியார்கள் பேசுகிறதாகவும், கனம் ஆர்க்கோட்டையர் ஒத்துக்கொள்வாரென்றதாகத் தோன்றுகிறதாகவும், விசாரமுற்றிருந்து என்னைச் செபம் பண்ணும்படி கேட்டுப்போனார். பின்னும் கைக்கடனாக ரூ-௯-அல்லது பத்து ஆரிடத்திலாவது வாங்கி யாக்கோவுப்பிள்ளைக்குக் கடனாகக்கொடுக்கவும் வேண்டுமென் றென்னைக் கேட்டார். அப்படி யாகட்டென்றனுப்பினேன். இப்படி யவர் காரியமிருக்கையிலவர் மருமகன் ஞானப்பிரகாசம்பிள்ளை தனது செலவுக்கு ரூ-௰-ம் கேட்டானும். அவன் முன் விளக்கும் பாத்திரமும் வாங்க ரூ-௧-கொண்டுபோய் வீண் செலவு செய்து வந்தவன் தன்னால் மாமனருக்குண்டான செலவைப்பற்றி எவ்வளவும் கவனமற்ற மூடன்.

௭—வ ஓய்வுநாள் வழக்கப்படி ஆராதனையும் நற்கருணையும் பரிமாறப்பட்டது.

௮—வ முதல் ஒரு வாரமும் உபதேசிமார்கள் அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கிக்க அசனூர்களுக்குப் போகும்படி கனம் ஆர்க்கோட்டையரவர்களுத்தரவுப்படிக்கு போகிறார்கள், இங்கிருந்து மோசேஉபதேசியார் போனார். வி. சத்தியநாத உபதேசியார் செபம், கனம் ஐயரவர்கள் விசையநாராயணத்துக்குப் போனார்கள். நான் ஏசுதாசபிள்ளைக்குந் தேவசகாயம்பிள்ளைக்குங் காயிதமெழுதினேன். கனம் மதுரேந்திரஐயர் காயிதமும் மசாலையும் வந்தது. ஷை காயிதத்தில் மிளகு மூட்டிற் போயிருந்த ஞானப்பிரகாசம்பிள்ளை வடக்குன்குளம் ஊளாக்குளத்துப்பிள்ளையிடத்தில் பேசியிருந்தது போலவும், வெண்கலமரவை ரூ. வகையிற் கணக்கு வைத்து ரூ-௪-க்கு கற்கண்டு வாங்கியண்டாப்பிள்ளை வசம் அநுப்பவும், ஷை மிளகு மூட்டுக்குப் போயிருக்கிற மிக்கேல்ப்பிள்ளையைக் கூட்டி வரும்படிக்கு அநுப்பினதாகவும் எழுதி வந்தது. உளவு உழுது மாடு குளிர்ப்பாட்ட ஊறணியில் விழுந்து யாக்கோவுப்பிள்ளை வண்டி மாடொன்று இறந்து போயிற்று.

---

✝

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்கு கர்த்தருடைய கிருபை யுண்டாகவும்.

இவ்விடத்தில் தேவகிருபைத்தினாலே யாவருஞ் சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையு மறிய விரும்புகிறோம்.



தாமனுப்பியது ௫௰-ம் ரொட்டி ௧-ம் வந்தது. ஷை ௫௰-ம் முனிசப்பிள்ளை கொடுத்ததாய் எழுதினீரே, அதின் விபரம் என்ன. மாசாமாசம் ௫௰-தமது மனைவிக்கும் பிள்ளைகளுக்கு கொடுவருவாரா. இப்போதென்ன விதமாய்ப் பேசிக் கொடுத்தது. இந்த டிசம்பர் மீ சம்பளம் வாங்கின உடனே ஷை ௫௰ ஒழுங்காய்க் கொடுக்க வேண்டும், இல்லையென்றால் முன் யோசித்தபடியவர் வேறிடத்தில் போகவும் வேணும். அப்போதவர் மனைவியும் பிள்ளைகளும் அங்கேயே சேரும்படி செய்வோமாக. இது நிச்சயமாயிருக்கும். அதுவன்றி எங்களால் தாங்காது.

உழுந்துபடி ஆறுணுக்குக் கிறையமென்ன. இயாக்கோவுப்பிள்ளை கொஞ்சமுழுந்து வாங்கவேணுமென்று கேட்டான். ௧-படி வந்தது, மற்ற இரண்டுபடியும் யிப்போ தனுப்பும்.

மிளகு வத்தல் இவ்விடத்திலதிகக் குறைச்சல், நாட்டுக்குப்பலம் அரைக்குள்ளாயிருக்கிறதினால் அவ்விடத்திலிருக்கிற வத்தலின் கொஞ்சமாவது அடக்கமாய்ச் சிலுப்பிலாவது காயிதத்திலாவது பந்தோவஸ்த்தாய்க் கட்டித் தவ்வால்க்காரனிடத்தில்க் கொடுத்தால் நலமாயிருக்கும். ஷை தவ்வால்க்காரனுக்கு உசாராய் உபகாரஞ் செய்திருக்கிறேன். இன்னமும் அவனுக்கு நம்மிடத்தில்க் காரியமிருப்பதினால்த் கொண்டு வருவான். அவனுக்குஞ் சொல்லுகிறேன் காரியத்துக்குத் தக்கது.

தம்பி சஞ்சீவிக்கும் என் சுகத்தைப்பற்றி அறிவிக்கிறதில் அவனுக்குச் சந்தோஷம் வரும்படி பேசுங்கள். இப்போதெனக்கு ஒரு கண்தான் மசகு, வேறு குறைவில்லை.

கர்த்தர் எல்லாரையுங் காப்பாற்றி ரட்சிப்பாராக. உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

கூனியூர்த்தம்பி காரியத்துக்கு உதவி செய்வீர்களாக முன் யோசித்தபடிக்கு.

௲௮௱௭௰௩<br>
டிசம்பர் மீ ௮-வ

இப்படிக்கு<br>
சவரிராயன்

(இது:- பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதுவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்கு வருவது.)

---

௯—வ தேவசகாயம்பிள்ளை காயிதம் வந்ததில்: ஷை பல்லாக்கு சங்கதிக்கு சாணார்பேரில் பிரியாது கொடுக்கவந்தவர்களில் டாக்கிட்டபிள்ளை மகன் ஞானியதாசப்பிள்ளைக்குக் காய்ச்சலினால் வருத்தமாயிருக்கதாகவும், அவர் மனைவியும் தகப்பனாரும் பாளையங்கோட்டையில் வந்திருக்கிறதாகவும்,

இவரும் போயிரண்டுகோள்ப் பார்த்ததாகவும் எழுதினான். ஷெ மாடு குளிற் பாட்டினவன் மாட்டுமேலேறி யாளத்தில்ச் சவாரியாகத் திவங்க அடித்ததினால் மூங்கித் தண்ணீரிலிறந்ததாமென்று ஷெ யாக்கோவுப்பிள்ளை கேட்டதினால் வடக்கு விசையநாருயணத்திற்குப் போய் பிரியாது செய்து தங்கியிருந்தாராம். அங்கிருந்த எட்டு பிள்ளையைப் பாளையங்கோட்டைக்குப் மாற்றினதாகவும் ஷெ செபத்தியாயி அம்மாளுஞ் சுகமாயிருக்கிறாளென்றும்

௰௧—௳ காலையில் வந்து சொன்னான். ஷெ யானுக்கு ஐயாவர்கள் காயிதம் வந்ததை நானுடைத்துப் பார்த்து பதிற்செய்தி சொன்னேனென்றதையவனுக்குச் சொன்னேன். கனம் ஐயரவர்களும் வந்தார்கள். அவர்கள் ஷெ யானிடத்தில் மாட்டு சங்கதி பேசினார்களாம்.

௰௨—௳ நான் தேவசகாயம்பிள்ளைக்குக் காயிதம் எழுதவென்றிருந்தேன், கூடாமல்த் தவ்வால்க்காரனை சுகசெய்தி விசாரித்துவரச்சொன்னேன்.

௰௩—௳ காலேச்செபத்துக்குப் போனேன். விசார உபதேசியார் நல்லம்மாள்புரத்துக்குப் போறதாகச் சொன்னார் அவ்விடத்தில் ஒருவன் மீறுதலாய்க் கலியாணஞ்செய்த சங்கதிக்கு. சாயுங்காலம் கனம் ஐயரவர்களும் போனார்கள்.

௰௪—௳ ஆண் பள்ளிப்பிள்ளைகள் இழுஞ்சுவை பார்க்கப் போனார்கள்.

௰௫—௳ ஓய்வுநாள் மோசே உபதேசியார் தேசாந்திரம் போதித்து வந்தவர் ஆராதனை மூன்றுதரம் நடப்பித்தார்: போன இடத்து விசேஷங்களையும் பிரசங்கித்த வகைகளு மறிவித்தார்.

௰௬—௳ காலையில் இழுஞ்சுனைக்குப் போனபிள்ளைகளுங் கனம் ஐயரவர்களும் வந்தார்கள். முதலாம் நாள் சாயந்திரம் பெண்பள்ளிப்பிள்ளைகள் உலாத்தப்போன இடத்தில் அருளம்மாளென்று பேருள்ள என் பேத்தியை ஆதனைக்காலை ஒரு பிள்ளை நின்கச்சொல்லித் தின்று பள்ளிக்கூடத்தில் வந்த பின்பு உபாந்தி கண்டு வெகுவருத்தப்பட்டுப் பிழைத்தது. ஷெ தேவசகாயம்பிள்ளை காயிதமும் சில சாமானும் இரண்டு கம்பிளிச் சட்டையு மெனக்கு வந்தது. முனிசுப்பிள்ளை சகோதரி மூத்தஅம்மாள் கொம்பாட்டியில் மரித்ததாகவும் செய்தி எழுதினார். ஷெ முனிசுப்பிள்ளையதைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை. யாக்கோவுப்பிள்ளைக்குத் தம்முடைய பெரிய சுப பிறசங்கம் மாத்திரம் எழுதினார், அவர் மனைவிக்கு ஷெ யாளிறந்து போனது பெரிய



302

துக்கமாயிருந்தது. அவள் ரொம்ப அழுதாள். அதற்குக் காரணம் ஏதுவாயிருந்தது. சாப்பிடமாட்டா திருந்தாள் பட்டினியாய். ஓய்வுநாள் கோவிலுக்கும் வரவில்லை.

௰௬—௳ தேவசகாயம்பிள்ளைக்குப் பதில்க் காயிதம் எழுதினேன் நல்லதம்பி வசம் அநுப்பு.

---

†

பிரியமுள்ள தம்பி தேவசகாயம்பிள்ளைக்குத் தேவகிருபை மென்மேலும் பெருக உண்டாவதாகவும்.

இவ்விடத்தில் யாவருங் கர்த்தருடைய கிருபையினாலே சேமம், அப்படியே அவ்விடத்துச் சேமாதி சயங்களுக்குத் நமெழுதின காயிதத்தினாலறிந்தோம், மென்மேலு மறிய விரும்புகிறோம்.

நாமனுப்பிய சாமான்கள் யாவும் வந்து சேர்ந்ததுகளில் எழுதியபடிக்கு நல்லம்மாள்புரத்துக்கு அநுப்பவேண்டியவைகளையும் ஷெ காளிச்சோணம் பிள்ளைகளுக்குப் பொதிட்டுச் சாப்பிடவும் கொடுத்து உம்முடைய காயிதத்தையும் கூட அநுப்பினேன் கேத்துச் சுமைகாரன் வந்தவுடன் போனான். எனக்கு நீர் அநுப்பிய சட்டை யனுப்பினதுக்காக சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டேன்.

முன்னவ்விடத்தில் எனக்குத் தந்த பழயசட்டையு மிருக்கிறது. மிக்கேல் அருளம்மாளும் பிள்ளைகளும் இருக்கிற சுகசேமப்பாற்க ஆசைப்படுகிற, எனக்கு வாய்வு இடுப்புக்குள் நடக்க வருத்தங் கொடுக்கிறது. மற்றப்படி எல்லா சற்று சுகமாயிருக்கிறது, கண்ணுக்குச் செய்த தப்பழும் ஒன்றும் பிரயோசனமில்லை, யப்படியே தானிருக்கிறது. பிட்சைமுத்துப்பிள்ளை மருந்து செய்து தரவில்லை, உப்புக் கண்டம் எல்லாரும் சாப்பிட்டதுதான் சுகம்.

முனிசுப்பிள்ளை யாக்கோவுப்பிள்ளைக்கு வெகு நீதியானக எழுதிக்காட்டினார், இரண்டு வதவி, பழய பஞ்சாங்கத்தான்.

அவர் கொடுத்த இந்தக்கூடுக்கதைப்பற்றி ஒரு வார்த்தையுங் காணவில்லை யதில் ஷெ யவர் சகோதரி மிரந்ததையும் அவர் அறியவில்லை என்று விளங்கிறது. வேறு ஒரு வாடகை வீடமர்த்துகிறேன், உங்கள் சித்தாயும் பிள்ளைகளு மவரு வந்திருப்பார்களா, கேட்டு எழுது மென்றும் எழுதியிருக்கிறார். அவர் உயிரோடு செத்த பிணமென்றே யிருக்கிறேன்,

எவ்விதமும் அவனை நமது வீடுவிட்டுப் போனபின் னவர் சமுசாரம் பிள்ளைகளை யனுப்பத் தீர்மானித்திருக்கிறது, நம்மால் தாங்க முடியாது.

அவர் மூத்த மகள் மைதிடத்திலிருந்துதான் கட்டிக்கொடுத்து விட வேண்டியது. மரியதாசு சுரமாயிருந்தவன் சுகமாய் ஊருக்குப் போயிருப்பானுக்கு மென்று நினைக்கிறேன். வேறு விசேஷமில்லை.

உங்களனைவோருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறேன்.

௲அ௱எ௰௩-(வரு) இப்படிக்கு
டிஷம்பர்ம௴ ௰௫-டீ சவரிராயன்

(இது:—பாளையங்கோட்டை அடைக்கலபுரம் புதவீடு முனிசு தேவசகாயம்பிள்ளைக்குக் கொடுப்பது.]

---

௧௬—டீ யாக்கோவுப்பிள்ளை விசையநாருயணத்துக்கு ஷை மாட்டுப்பிரியாதுக் காரியத்துக்குப் போனான்.

௧௭—டீ ௰-மணிக்கு மேல்வந்து கனம் ஐபரவர்க ளம்மாள் மெஞ்ஞானபுரத்துக்குப் போனவர்களைக் கூட்டிவர வண்டிகொண்டு சாத்தன்குளம் மட்டும் போயனுத்து வந்தான் ௧௮—டீ காலையில்.

௧௯—டீ உபதேசிமார் உவாத்திமார் கூடுதலுஞ் சம்பழமும். கனம் மதுரோந்திர ஐபரும் வந்திருந்தார், இரவு பல காரியமும் பேசினோம்.

௨௰—டீ காலையிலிருந்து காப்பி சாப்பிட்டுப் போனார். சாயுங்காலம் விசையநாருயணத்து வியாகப்பபிள்ளை டக்கர் கல்விச்சாலையிற் படிக்கப் போயிருந்த நமது பிள்ளைகள் தங்கட்சி யவர்கள் ஷை பள்ளிக்கூட விடுமுறைக்கு வீட்டுக்குக் கூட்டி வருகிறதுடன் கனம் மதுரோந்திரஐயர் பிள்ளைகள் மேரியன்னம்மாளையும் வீதியாளையுங் கூட்டி வந்துட னவர் கூட யிருக்கிற உவாத்தி ஏசுதாசபிள்ளையை நல்லம்மாள்புரத்துக்கு ஷை பிள்ளைகள் இரண்டையும் கூட்டிப்போய் விடச்சொன்னதாகவும், அவனும் ஷை பிள்ளைகளும் நமது வீட்டில் வந்து, இன்று நாளையிருந்து போகச்சொல்லியும் உடனே போகத்தான் வேண்டுமென்று போய்விட்டார்களாம். நானவர்களைக் காணவில்லை.

௨௧—டீ ஓய்வுநாள் ஆராதனையும் நடந்தது.

௨௨—டீ இஞ்சிப்பிட்டர் ஆறு மண்டான்டு நமது சமுசாரத்துடன் வந்திருந்தார் பள்ளிக்கூடச் சோதனைக்குக். கூட ஷை விசையநாருயணம் உவாத்தி ஏசுதாசபிள்ளையும் வந்து நமது வீட்டில் ௨௩-டீ இரண்டுவேளைச்





சாப்பாடுஞ் சாப்பிட்டான். ஷை பள்ளிக்கூட சோதனை முடிந்து ௨௪-டீ காலையிற் காப்பி சாப்பிட்டு இடையன்குடிக்குப் போனார்கள். நான் சுகமில்லாதிருந்ததினால் ஷை இஞ்சிப்பிட்டரைப் போய்ப் பார்க்கவில்லை.

இன்று கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முதல்நாள் ஒரு சந்தியானதால் ஒரு வேளை காலை பலகாரம் காப்பி சாப்பிட்டு சாயந்திரம் ஒரு வேளைச்சாப்பாடும் நடந்து முடிந்தது. பின்பு பாளையங்கோட்டை அடைக்கலபுரம் தேவசகாயம்பிள்ளையும் தம்பி சஞ்சீவியும் வந்தார்கள்.

---

†

கர்த்தர் தமதாவியைத் தந்தருளுவாராக. இந்த வருஷம் முடிய காப்பாற்றின தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

இவ்விடத்தில் யாவருந் தேவகிருபையினாலே க்ஷேமம், அப்படியே அவ்விடத்திலிருந்து வந்த காயிதம் பார்த்து சமாசாரம் அறிந்து கொண்டது இந்த வருஷப் பலனென்று கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செய்து உங்கள் தாயாருக்கும் மற்றப் பிள்ளைகளுக்கும் அறிவித்தேன்.

கர்த்தர் தமதிரக்கத்தினால் தூத்துக்குடிப் பிள்ளைகளையும் விசேஷமாய் மரியம்மாளென்ற சிறு குழந்தையையுங் காத்து ரட்சிப்பாரென்று நம்பியிருக்கிறேன், அப்படியே செய்வார்.

தூத்துக்குடிக்கு ஞானப்பிரகாசம்பிள்ளை போனதுடன் மதுரோந்திரம் பிள்ளையையும் அனுப்பினது நல்லது தானுமிதனுஞ் சொல்லியபடி வரவேண்டியது.

நமது ஆண்டவராகிய தேவன் போனவருஷ முதல் இந்த வருஷம் பிறப்பு ஆசரிப்பு நாள்வரையும் நம்மை ஆத்துமத்தின்படியும் சரீரத்தின்படியும் காத்து நமது சபைகள் யாவரையும் உயிரோடிருக்க செய்த பெரிய தயவை நினைத்து யினிவரும் வருசத்திலும் நன்மை செய்யப் பிரார்த்தித்து வருவோமாக.

எங்கும் நிறைந்த தேவன் எல்லாயிடங்களிலும் நமது பிள்ளைகளைத் தமது பிறப்பின் நாளைக் கொண்டாடக் கிருபை செய்திருப்பார் என்று உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

அன்புள்ள எனதய்யாவே: உமது தகப்பனுந் தாயும் தமதிடத்திலிருக்கிறது சந்தோஷமும் ஆறுதலுமாயிருக்கிறது நிச்சய அன்புதான் அனேகம் விசேஷநாள்க்களில் அவரவர் இருக்கிற யிடத்திலிருந்து தேவனைத் தோத்திரஞ் செய்கிறது நலமாயிருக்கும்.

இப்போது நானுந் தாயாரும் அங்கே வந்தால் இங்கே வந்து எங்களைச் சந்திக்க வருகிறவர்களுக்கு ஆறுதலாமா. இன்ருசியம்மாள் பிள்ளைகளும் வந்திருக்கிறார்கள், ஏசுதாசபிள்ளையும் சஞ்சீவிப்பிள்ளையு மிப்போது வருகிறார்களாம். மற்றும் ஆர் வருவார்களோ, இப்படி யிருக்கிறது மல்லாமல் இந்த விடத்தில் தேவாலயத்தையும் குருவின் பிரசங்கத்தையும் இந்த வருஷம் விட்டுப்போகிறது இவ்விடத்தில் என்னையும் சமுசாரம் பிள்ளைகளையும் நினைத்தவர்களுக்கு எல்லாரும் போனார்களென்று சொல்லுகிறது நல்ல தல்லவென்றும் நினைக்கிறேன். இன்னமும் விசேஷித்த நாள்களில் ஓரிடம் விட்டு ஓரிடத்துக்குப் போக வேண்டும் ஆனால் ஒண்டிக்காரரா யிருந்தாந் தன்னிடத்துக்கு வேறு பிள்ளைகளாவது மற்று மனிதர்கள் வருகிறதுக்காவதிடமில்லை என்றால்ப் போகிற இடத்துக்குப் போனால் ஆறுதலாயிருக்கும், கனமுமிருக்கும், ஐயாவே, நீங்கள் அறியாததில்லை. நாங்களிப்போது வருவதானால்த் தொல்லையாயிருக்கும், யாக்கோவுப்பிள்ளையை விட்டு வர வேண்டும்: மாடாடு கோழி வீடு பாராமரிப்புக்கும் இருக்கிறவர்களுக்குந் தொல்லையாம், எனக்குக் கால்வலிமுன்னிருந்ததுடன் இப்போது நேத்து முதல் வலதுபுரத்து மார்போடு மூச்சுவிட வலி யுண்டாயிருக்கிறது, இன்ருசியம்மாளுக்கு இரண்டு கையிலும் முந்தினவலி தீரவில்லை, மாட்டை யவ்விடத்துக்கு அனுப்ப ஆளில்லைப், பூலுத்தேவன் மகன் வழத்த ஆட்டைக் கொண்டுவந்து விட்டுப் போனான், அது படுத்தால்த் தானாக எழுந்திராது, தூக்கிவிடவும் வேணும்.

இப்படிப் பலதும் பார்த்து நாங்கள் அவ்விடத்துக்கு வரத் தாமதித்திருக்கிறோம். கர்த்தருக்குச் சித்தமானால் பின்பு வர மனதாய் இருக்கிறேன். கர்த்தர் கிருபை செய்வாராக.

உங்கள் எல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறோம்.

௲௮௱௭௰௩-௵ இப்படிக்கு

டிஷம்பர்௴ ௨௪-௳ சவரிராயன்

[இது:—நல்லம்மாள்புரத்தில் வாசமாயிருக்குங் கனம் பொருந்திய மதுரேக்திர ஐயரவர்களுக்கு வருவது.)

(நானும் சஞ்சீவியும் இன்று சாயங்காலம் வந்துசேர்ந்தோம்.

தேவசகாயம்.)

---

௨௫—௳ பிறந்ததிருநாள் ஆராதனை மூன்றுமணி யிரவில் நடந்தது. காலை ஆராதனை முடிந்து எட்டுமணிக்குப்பின்பு திருநெல்வேலி உபாத்தி



ஏசுதாசபிள்ளையும் வந்தார். மதியத்துக்குப் பின் ஈரண்டுமணிக்கு கோவிலில் கனம் ஐயரவர்கள் ராப்போசனம் நடப்பித்தார்கள், சனம் சுருக்கம். இரவில் ஆராதனையும் நடத்தினார்கள். இன்று இரவில் யாக்கோவுப்பிள்ளை பண்டிகைக்கு மாமமார்கள் வந்த சந்தோஷத்துக்காகக் கடாய் பிடித்து அறுத்தான்.

௨௬—௳ காலை சாயந்திரமும் எல்லாருந் தனது காரியங்களு மற்றுஞ் சந்தோஷமான காரியங்களும் பேசிக்கொண்டிருந்து கீர்த்தனைகளும் பாடிக்கொண்டிருந்தோம். சாயுங்காலத்தில்த் தேவசகாயம்பிள்ளை தமையனாரவர்கள் வீட்டுக்கு நல்லம்மாள்புரத்துக்குப் போனார். ஷை யிரவில் ௨௭-௳ நாகர்கோவிலுக்குக் கனம் ஆர்கோட்டு ஐயரவர்கள் போனார்கள்.

௨௭—௳ காலைச்செபம் மோசே உபதேசியார் வளக்கப்படி. நானும் போய் வந்தேன். பின்பு எட்டுமணிக்குமேல் திருநெல்வேலித் தம்பி ஏசுதாசபிள்ளை ஷை நல்லம்மாள்புரத்துக்குத் தமையனாரவர்கள் வீட்டுக்குப் போனார். பின்பு தம்பி ஷை தேவசகாயம்பிள்ளை வந்தார் வடக்குன்குளத்துக்குப் போய் மாமனாரவர்கள் வீட்டில் இரண்டு நாளிருந்து ஊருக்குத் தவ்வால் வண்டியில்ப் போகவென்று. சாயுங்காலம் மூன்று மணிக்கு மேல்த் தனிமையாய்ப் போனார். இரவில் ௯-மணிக்கு கனம் மதுரேக்திர ஐயரும் ஷை தம்பி யேசுதாசபிள்ளையும் வந்தார்கள். பழமுங் காயும் ஒரு ஆள்ச்சுமையில் வந்தது. சாமுவேல்ப்பிள்ளை வீட்டுக்கு ஒரு குலை வாழைக் காயுங் கொடுக்க ஷை ஐயருத்தரவுப்படி கொடுத்தோம். ஷை ஏசுதாசபிள்ளைக்குச் சுகமில்லாமல் வயிற்றுக்களிச்சலா யிருந்ததினால் சாப்பிடவில்லை. ஷை ஐயரவர்கள் சாப்பிட்ட பின்பு ஊருக்கு போனார் மறுநாள் ¦சவுக்கியபுரத்துக்குப் போக வேண்டியதற்காக.

௨௮—௳ ஓய்வுநாள் வழக்கப்படி மோசேஉபதேசியார் தான் ஆராதனை நடப்பித்தார். சாயந்திரந் தம்பி தருமதாசஞ்சீவி தமையனார் வீட்டுக்குப் போனான் நல்லம்மாள்புரத்துக்கு. ஷை யானுக்கு ஏசுதாசபிள்ளை சொனாந்தி பாக்கியத்தைக் கலியாணமுடிக்கலாமென்று யோசித்துப் பேசிக்கொண்டோம். கர்த்தருக்குச் சித்தமானால் நடக்கும்.

௨௯—௳ ஷை ஏசுதாசபிள்ளை நாங்குன்னேரிக்குப் போகவும் அவ்விடத்திலிருந்து தவ்வால் வண்டியில் ஊருக்குப் போகவென்று போனான். கூட இ. சாமுவேல்ப்பிள்ளையுங் கூடப்போனான், கள்ளிகுளஞ் சத்திரத்தில் பட்டைசயாபிள்ளை யென்ற சாவடிப்பிள்ளை யவர்களிடத்தில் சவரிராயபிள்ளை

காவிதங்கொண்டு போறதாகச் செய்தி. இராவில் நான் கோவிலுக்குப் போனேன்.

௩௰-உ காலக்ஷேபத்துக்குப் போய் வந்தேன். பின்பு கனம் பென் ஐயரவர்கள் விக்கட்டேரியாரானவர்களும் ஆற்கோட்டய்யரவர்களும் வந்தார்கள் நாகர்கோவிலிருந்து. விடுமுறைக்குப் போன பள்ளிப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்தது. பின்பு உபதேசிமார் உவாத்திமார் முக்கந்தன் மார்கள் எல்லாரும் கூடிவந்து மதியம் ஷை ஐயன்மார்களும் சுதேசச் சபை சங்கங் கூடினார்கள். கனம் மதுரேந்திர ஐயரும் பேசவேண்டியதுகளைப் பேசிக்கொண்டு ஷை ஐயர்மாருடன் சாப்பிட்டுச் சாயந்திரம் ஆறு மணியில் நமது வீட்டில் வந்திருந்து இராவில்த்தானே கல்லம்மாள்புரத்துக்குப் போனார். ஷை ஊருக்கு ஷை ஐயர்மார்கள் ௩௧-உ போய்ச் சபையையும் கோவிலையும் பார்க்கவென்று வருவார்களென்று சொல்லிப் போனார். இடையங்குடி ஏசுதாசன் இங்கு வந்திருந்தான் அவன் ஆள்வார்னேரிக்குப் போகவென்று. ஷை யான் கூட ௩௧-உ விடியக்காலம் தருமதாசனோடேயும் பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டான். இருவரும் போனார்கள். இராவில் கோவிலுக்குக் கனம் பென்னய்யரவர்களும் கனம் ஆர்க்கோட்டய்யரவர்களும் வந்து செபம் கனம் ஆற்கோட்டய்யரவர்கள் ஷை விக்கட்டேரியாரவர்கள். மலையாளத்தில் கோட்டயம் முதலான இடங்களிற் சபையுண்டானதும் தமது தகப்பனாரவர்கள் காலத்திலும் அங்கே ஒன்பதுவருஷமாய்ச் சபைக்குப் போதித்துப் போனது: இப்போது ஒரு கூட்டச்சபையில் விசேஷித்தவாம் பரிசுத்த ஆவியினுண்டாய் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் வேதம் வயிருக்கியமாய்ப் போதித்துஞ் செபக்கூட்டங்கள் வைத்து நடத்துகிறதாகவும், கனம் ஐயர் தானே கண்டு வந்ததாகவும், சனங்களிடத்திற் பேசிப் புத்திசொன்னார்கள். பின்பு சனங்கள் போனவுடனே நானின்றவிடத்திற் கவர்கள் வந்து, எனக்கு முன்னொருகாலத்தில் வந்தபோது சொன்னதை ஞாபகத்தில் வைத்திருந்து இப்பொழுது மப்படியே பட்சமாய்த் தங்கள் தகப்பனார் தாயார் இருவரு மிருக்கிறதாகவும், தகப்பனார்க்கு ௮௰௬ எண்பத்து ஆறு வயது சென்றும் ஒரு சபையில் ௫௱-சனத்துக் கதிகமானதுக்குப் பிறசங்கஞ் செய்கிறார்கள். என்றுந், தாயார் ௭௰-வயசுள்ளவர்களாய்ப் பெலத்துடனிருக்கிறதாயும், உமது பேரன் பேத்திகளையும் கல்லம்மாள்புரத்திலு மிங்கேயுங் கண்டேன், உமது சமுசாரமு மிருக்கிறதா வென்றும் பட்சமாய் வினவிப்பேசி, முன்னாளிற் சொன்ன ௧௨-சங்கீதத்தையுஞ் சொல்லிக் கடி





வாக்கியத்தையும் ஞாபகப் படுத்திப் போனார்கள். இராவில்த்தானே மெஞ்ஞானபுரத்துக்குப் போனார்கள். பின்பு பாதி ராத்திரியிற் சபைகூடி வரச் செய்து வருச முடிவுக்கு ௯௰-சங்கீதமும், துவக்கத்து ௭௪-௵த்துக்கு ௯௪-சங்கீதமும் வாசித்து கனம் ஆற்கோட்டய்யரவர்கள் முதலாவது பிரசங்கஞ் செய்து செபம். ஷை ஐயரவர்களும் மோசே உபதேசியாரும் விசாரணை சத்தியவாத உபதேசியாருஞ் செய்து முடித்து சனத்தை அனுப்பினார்கள். இவ்விதமாய் ௭௩-ம் ௵த்தை முடித்து ௭௪-ம் ௵ந் துவக்கச் செய்த யிரக்கமுள்ள திரியேக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

இது வரையும் என்னையும் சமுசாரத்தையும் என் பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளையும் சகல வித துன்ப துரிதங்களில் நின்று சரீரத்தின் படியும் ஆத்துமத்தின் படியும் இரட்சித்து, மரணமென்ற நில்லாமல் என் குடும்பத்தை யிரட்சித்த கர்த்தருக்கு என்றென்றைக்குந் தோத்திரமுண்டாவதாக. ௭௩-௵ முடிந்தது.

306

1874

## ௲௮௱௭௰-௵ சனுவரிமீ ௧-௨
## வியாளக்கிளமைமுதற்
## சுவிசேஷபுரம் பென்சன் உப.
## சவரிராயபிள்ளை நிற்பேர்றட்டு

௧—௨ பாதி ராத்திரி புதன்கிளமையில் ௬௯-௵த்தை முடித்து வியாளக்கிளமை விடிய பாதி ராத்திரியிற் செபத்தோடு துடங்கக் கிருபை செய்த திரியேக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

காலைச்செபத்துக்கு வழக்கப்படி போனே மேல் சமுசாரங் குழந்தைகளும், மோசே உபதேசியார் பிறசங்கஞ் செய்தும்.

மதியம் உபதேசிமார், உவாத்திமார், சபையார், முதலான யாவருங் கனம் ஐயரவர்களுக்கு சந்திப்பு, மாலைகளும் வைத்துக் கண்டார்கள். பின்பு நல்லம்மாள் புரத்துக்குக் கனம் மதுரேந்திரஐயரவர்களைச் சந்திக்கப் போனதாகவும் கேட்டேன். நானு மென் சமுசாரமுந் தனித்துங் கூட்டத்துடனும் போய்க்கண்டு கொள்ளக் கூடாமற் போயிற்று. இரவில் எனக்கு இருமலும் இளைப்பு முண்டாய் உறக்கமில்லா திருந்தது.

௨—௩ காலையிற் செபத்துக்குப் போய் வந்தேன். பின்பு காப்பிக்கு யாக்கோவுப்பிள்ளைக்கு வந்த கேக்கும் பழமும் எல்லாருஞ் சாப்பிட்டது. புதுக்குளத்துக்குப் போயிருந்து பண்டிகைக்கு வந்த கலமணியம்மாள் இன்று வந்தனுப்பிக்கொண்டு போனாள். அவர்கள் வீட்டார் ஒருவராகிலும் நமது வீட்டுக்கு வந்ததில்லை. அவள் மாமியாளுக்குச் சுகமில்லை. கோவிலுக்குங் கூடவரக் கூடாதிருக்கிறாள். மதியத்துப் பின்பு நல்லம்மாள்புரத்திலிருந்து கனம் ஐயர் ஒரு குலை வாழைப்பழமும் கல்க்கண்டு மெங்களுக்கனுப்பினார். தமது பிள்ளைகளாகிய மேரிஅன்னம்மாள், லீதியருளம்மாள் இரண்டு பேரையும் டக்கர் கல்விச்சாலைக்கு அநுப்பினார்கள். விசையநாராயணத்துக்குப் போய் அவ்விடத்து வியாகப்பிள்ளை மக்கள் கூடப்போகும்படிக்கு ஆள் கூட்டிப்போய்விட்டது. பின்பு யாக்கோவுப்பிள்ளை ஷேஐயர் மாமனாரை சந்திக்கப் போனான். கனம் ஆற்சோட்டையரவர்கள் மெஞ்ஞானபுரத்துக்குப் போனார்களாம். இரவு செபத்துக்குப் போய் வந்தேன். எனக்கு ௨-௩ ராத்திரியில் இருமலும் இளைப்புமுண்டாயிருக்கிறது, இரண்டொனாகப் பகலில் சுகமாயிருக்கிறேன்.

௩-உ விசையகாருயணத்தைச் செபத்தியாயி தமோசினதில் விழும் போது கையுணியிைதில் ஒரு விரல் முறிவு கண்டதாய்ச் செய்தி. நமக்குச் சிநேகமான சுடலைமுத்து மூப்பனுக்கு ௧-உ வியாழக்கிழமை காலையில் ஒரு பெண்குழந்தை பிறந்த செய்தி கேட்டேன். முனிசுப்பிள்ளை தமது குமாரன் சின்னத்தம்பி சவரிராயனுக்கு சீட்டு லேஞ்சி யனுப்பினார்.

௪-உ ஆராதனையும் ராப்போசனமும். கோவிலுக்குப் போகிறதற்கு வருத்த மிருந்தது. இரவில் ஷெ இருமல் விளைப்புச் சுகமாயிற்று. சஞ்சீவி காயிதம் அவ்விடஞ் சேர்ந்ததுக்கும் தமையன்மார்களும் மற்றவர்களுஞ் சுகமாயிருக்கிறதுக்கும் புது வருஷப் பிறப்புக் கண்டதுக்கு தேவனுக்கு ஸ்தோத்திரமுமாக எழுதினான்.

௫-உ கனம் மதுரேந்திரஐயர் வந்து சந்திக்கும்படி வந்தார், ஆர்க்கோட்டையரவர்கள் விருந்து செய்யவில்லைச், சாயந்திரம் ௪-மணிக்கு நமது வீட்டில் வந்து சாப்பிட்டார். பின்பு ஊருக்குடனே போய்விட்டார் இரவில்.

௬-உ காலைச்செபத்துக்குப் போய் வந்து நல்லம்மாள்புரத்துக்குப் போய் வரவேணுமென்று சாப்பிட்டு பதினொருமணிக்குத் துணையாள் கூடப் புறப்பட்டுப் போனேன். ஐயர் கிராமத்துக்குப் போய் வந்தார் இன்று மிருதியான காத்தும் மந்தாரமும். தேரியில் மூன்றிடத்தில் இருந்து இருந்தும் வந்தேன், நல்ல சுகமில்லை. வெளிப்படுத்தல் என்னுந் திருநாள் இரவில் ஆராதனை செய்து சாஸ்திரிகளைக் குறித்துப் பிரசங்கம் மதுரேந்திர ஐயர் செய்தார்.

௭-உ வாடையும் மந்தாரமும் வெகுவா யிருந்தது.

௮-உ கனம் ஆர்க்கோட்டையரவர்கள் மதியம் வந்தார்கள். நாட்டுச்சங்கமும்: நல்லம்மாள்புரஞ் சேகரத்தைப் பிரித்து மதுரேந்திரஐயர்க்கு ஒப்புவிக்கிறது என்று இந்தச்சேகரம் தருமகர்த்தாக்கள், சபை மூப்பர், பிரதானிகளானவர்கள், உபதேசிமார், உவாத்தியார், எல்லாரும் வந்து சங்கமாய்ப் பேசித் தீர்த்து ஷெ ஐயரவர்கள் போனார்கள். சாயுங்காலம் செபக்கூட்டம் கூட்டி உத்தரவுப்படியும் நடக்கிறது. வீட்டிலும் சங்கீத வியாக்கியானங்கள் வாசித்தும் செபம் நடக்கிறது காலை மாலையும்.

௯-உ நானும் ஐயாவும் அம்மாளும் வீட்டில் தனது பிள்ளைகள் காரியங்கள் மற்றுங் கலியாணம் செய்யவேண்டும் வகைகளைக் குறித்தும் பேசிக்கொண்டும் விசாரமாயுமிருந்தோம். மத்தியானத்தில் முளகுமூட்டிற் போயிருந்த மரிய மிக்கேல்பிள்ளை வந்தார். அது கொஞ்சம் மனதுக்கு ஆறுதலாயிற்று.





௰-உ பலகாரியங்களையும் யோசித்து, மேரிபிள்ளை மேரியம்மாளைச் சுவிசேஷபுரத்தில் நமது வீட்டிற் சிலகாலுக்கு வைத்திருக்கத் தீர்மானித்து ஷெ ஐயரிடத்திலும் அம்மாளிடத்திலுங் கேட்டேன். அய்யாவுக்கு மனம் இல்லை, ஆகிலும் என் எண்ணம் நிறைவேற வென்றிருந்தேன். ஷெ ஐயர் மிசியோன் காரியங்களாகச் சுவிசேஷபுரத்துக்குப் போய்க் கனம் ஐயரவர்களிடத்திற் பேசிக்கொண்டும் தமது தாயாரிடத்திலும் பேசிக்கொண்டுமிருந்து

௰௧-உ காலையில் வந்து ஓய்வுநாளானதால் ஆராதனை நடப்பித்து, மதியத்துக்குமேலும் ஆராதனையும் பரிசுத்தநற்கருணையும் நடந்தது. ஷெ மரியமிக்கேல்பிள்ளை நமது வேதத்தில் உறுதியும் உண்மையுமாய்க் காணுகிறது, நற்கருணைக்கு ஆயித்தமில்லாமல்ச் சேரப்படா தென்றிருந்து விட்டார்.

௰௨-உ பாளையங்கோட்டைக்குப்போக ஆயித்தப்பட்டார் ஐயர். முத்துமரியவியாகுலம் விசையகாருயணத்துக்குத் தனது காரியமாய்ப் போகிறதாகவும், மதுரேந்திரம்பிள்ளையும் கூலியாளொருவனும் முளகு மூட்டுக்குப் போய் ஷெ மிக்கேல்பிள்ளை தளவாடச் சாமான்க ளெடுத்துவரவும் என்றும் புறப்பட்டார்கள். ஷெ மேரியை ஷெ அக்காளுடன் சுவிசேஷபுரத்துக்கும் அநுப்பினோம். ஷெ ஐயாவுக்கு மனமில்லை யாகிலும் என் கட்டாயத்தினால்த்தான். என்னைத்தாம் பாளையங்கோட்டையிலிருந்து வருமளவும் வீட்டிலிருக்கச் சொல்லிப் போனார். ௰௩-உ முதல் சங்க கூட்டம் ௰௬-உ வரையும் என்று பேச்சு.

௰௪-உ திங்கள்க்கிளமை தமின் தைமீ ௧-உ உபதேசியார் தன்மகளைக் கொம்மட்டிக்கோட்டையில் மருமகன் வீட்டுக்குக் கொண்டுவிடப்போனார் ௰௯-உ மிக்கேல்பிள்ளைக்குச் சுருட்டில்லாமல் இடையன்குடிக்குப்போனார். அதில்லாமல்ச் செல்லாதவர் வழக்கம். காப்பியும் இரண்டு நேரம் வேண்டுமாம். ௰௪—உயும் சுருட்டுக்குக் களமேணிப் புகையிலை யாகிலும் வாங்கி வரச்சொல்லிச் சாலமோன் போனான் திசையன்விளைக்கு.

௰௫—உ மதியத்துக்குமேல் ஷெ யாரும் ஆசீர்பாத உபதேசியாரும் பங்களாவுக்குக் கதவுக்கு மரம் வாங்கும்படி குலசேகரம்பட்டணத்துக்குப் போனார்கள். நான் காலமே சுவிசேஷபுரத்துக்குப் போயிருந்து தெய்வநாயகம்பிள்ளைக்கு காயிதம் எழுதித் தருமகாதசஞ்சீவி சீட்டு ஒன்றுக்கு ௳ ௨-௫-ம் சேகரித்ததும், பின்னும் என் பிள்ளைகளில் சவரிமுத்து, தேவசகாயம், சஞ்சீவி, மூன்றுபேருக்கும் காயிதமெழுதித் தபாலில் ஞானயுதம்வசம் ஏற்பித்

தேன். ௰௬-௳ தவ்வாலிற் போரும்படி. ஷை தவ்வால்க்காரன் சொன்னது திருநெல்வேலியில் உவாத்தியா சேஷாசபிள்ளைக்கு இப்போது பிறந்த குழந்தை மரித்துப்போனதாகச் செய்தியென்றான். அது வெங்களெல்லாருக்குந் துக்கமாயிற்று.

---

†

பிரியமுள்ள குமாரன் தருமராத சஞ்சீவிப் பிள்ளைக்குத் தேவகிருபை யுண்டாவதாக.

இவ்விடத்தில் யாவரும் கர்த்தருடைய இரக்கத்தினாலே இதுவரையும் சுகமே யிருக்கிறோம். அப்படி அவ்விடத்திலும் மூர்த்தினை வருஷத்திலுந் தேவன் சுகத்துடன் காப்பாற்றி யிந்த வருஷத்தையும் காங் காணச் செய்தவருக்கு ஸ்தோத்திரம். நீ யெழுதிய கடிதம் வந்துசேர்ந்ததுக்குப் பதில் எழுதக் கூடாமல் நல்லம்மாள் புரத்துக்குப் போயிருந்தேன். அவ்விடத்திலிருந்து யிங்கே யின்றுவந்து எழுதுகிறேன். நாளைக்குப் போவேன் அங்கே ஐயர் வந்தனுப்பும்வரை யிருப்பேன். இந்தச் சங்கத்துக்கும் நான் வரக்கூடாதிருந்ததினால் பிள்ளைகளெல்லாரையும் பார்க்கவில்லை என்பது மிகவும் மனஸ்தாபம். ஆகிலுங் கர்த்தர் காப்பாற்றுவாராக.

நீங்களெல்லாரும் ஒருவருக் கொருவர் அன்பாயிருந்து தேவ கிருபையினாலே சகல காரியங்களையும் பேசிக்கொள்ளச் செய்வாரென்றும் நினைத்து ஆறுதலாயிருக்கிறேன். இந்தத் தவ்வாலில் ஞானயுதம் வசம் ௲ ௨௫-ம் ௱: அச்சுக்கூடத்து நயிட்டர் தெய்வசகாயம் பிள்ளையவர்களுக்கு காயிதம் எழுதி உன்பேருக்கு கிட்டுக்கு அனுப்பியிருக்கிறது. கர்த்தர் வழக்தோசச் செய்வாராக. மற்றுங் காரியங்களெல்லாம் உங்கள் மூத்த அண்ணாட்சி யவர்களால் தெரிந்து கொள்ளுகிறதா யிருக்குமே. ஆகையா லுங்களெல்லாருக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறோம். மற்றக் காரியங்களுக்குக் கர்த்தர் சுகங்கொடுத்திருந்தால் பின்பு எழுதலாமென்றிருக்கிறேன்.

௲௮௱௭௰௪ இப்படிக்கு
சனுவரி௴ ௰௪-௳ சவரிராயன்,

[இது:—தேவசகாயம் பிள்ளை தம்பி சஞ்சீவிப் பிள்ளைக்குக் கொடுப்பது]

309



௰௬-௳ காலையிற் புறப்பட்டு நல்லம்மாள் புரத்துக்கு வந்தேன் வீட்டில் நான் வருமட்டுமிரு மென்று ஐயா சொல்லியிருந்ததினால். ௰௭-௳ காலையில் மிக்கேல்ப் பிள்ளை வந்தார். மாங்கள் அமைதியிருக்கிற தென்றார். இரவில் மூனாகுமூட்டிற் சாமானெடுக்க போனவர்களிற் சும்மா வந்தவன் சொன்னது : ஷை மிக்கேல்ப்பிள்ளைக்குக் கடனிருக்கிறதாகவும், அந்த ௲ ௰௫-ம் வந்தால்த்தான் கொடுப்போமென்று ஷை யவர் தம்பியும் தம்பி பெண்சாதியும் சொல்லிவிட்டும், இரண்டு சானுத்திகளையும் எழுப்பிப்பேசினதாகவும், எப்படியும் கொடாமல் விட்டதாகவும், வந்தவன் சொன்னான். கூடப்போன மதுரேந்திரம் விசையகாருயணத்துக்குப் போனானென்றான். அது செய்தி ஷை மிக்கேல்ப்பிள்ளைக்கு மெங்களுக்கு மிகுந்த மனஸ்தாபமாயிற்று.

௰௮-௳ காலையில் சங்கத்துக்குப் போயிருந்த ஐயர் வந்தார். இன்று அதிசயபுரத்தில் பரிசுத்த நற்கருணைகொடுக்க இங்கு காலை யாராதனை முடித்துப் போனார்.

# யோர்தான் நதி.

ஐயாவுடைய காலாகமக் குறிப்பு ஷை சனுவரிமீ ௰அ‧ உ யோடு நிற்கிறது. இனிவரும் சங்கதியை எப்படித் துவக்கி என்ன ஒழுங்காய் எழுதி என்னவிதமாய் முடிப்பேனோ அறியேன். கூடஇருந்து எல்லாம் அறிந்த மூத்த அண்ணாட்சியில்லையே, நான் கூட இருக்கவில்லையே, ஆண்டவர் எனக்குத் துணைசெய்வாராக.

திருநெல்வேலி இளைய அண்ணாட்சி இயேசுதாச பிள்ளையவர்கள் ஐயா இறந்து ஒருவருஷத்துக்குள்ளாக எழுதிவைத்த சரித்திரக் குறிப்புகளும், போனதுபோக அகப்பட்ட கடிதங்களுந்தான் நான் காண்பிக்கக்கூடியது.

---

இக்காலத்தில் ஐயாவுடைய பிள்ளைகள் நாங்கள் எழுபேர் இருந்தோம் மூத்த மகன் நல்லம்மாள்புரத்தில். இரண்டாவது சவரிமுத்துப் பிள்ளை அம்பாசமுத்திரத்தில் உபதேசியார் மூன்றாவது இன்னாசியம்மாள் அக்காள் எக்காலமும் புருஷன் ஆதரவற்றவள். சுவிசேஷபுரத்தில் நம்முடைய வீட்டில் அவளும் பிள்ளைகளுமிருக்கிறார்கள். நாலாவது ஞா. ஞானப்பிரகாசம் பிள்ளை கூனியூரில் உபதேசியார், ஐந்தாவது இயேசுதாச பிள்ளை திருநெல்வேலியில் அவ்ட்டன்துரை பள்ளிக்கூடத்தில் வாத்தியார். ஆறாவது நான், அப்போதான் சிவகிரிக்கு ஜமீன் மானேஜராய்ப் புறப்பட்டுப் போயிருக்கிறேன். ஏழாவது என்தம்பி சஞ்சீவி, தச்சநல்லூரில் ஊரார் ஸ்தாபித்திருந்த ஒரு கிரான்ற் இன் எயிட் பள்ளிக்கூடத்துக்கு வாத்தியார். அவன் குடியிருப்பு பாளையங்கோட்டையில் அடைக்கலபுரத்தில் நம்முடைய வீட்டில்தான்.

வீட்டில் எல்லாக் காரியங்களையும் என் தம்பி தர்மதாசஞ்சிவிக்குச் சொல்லி ஒப்புவித்து மூத்தண்ணாட்சி வந்தால், சாமுவேல் ஐயாவர்கள் வந்தால் சாப்பாட்டுக் காரியங்களும் மற்றக் காரியங்களும் இன்னின்னபடி நடத்திக்கொள்ளவேணுமென்ற முறைகளைக் காயிதத்தில் எழுதிக் கொடுத்து திட்டஞ்செய்துவிட்டு குழந்தை பிறந்த மறுநாள் சிவகிரிக்கு ஒரு தவசிப் பிள்ளையுங் கூட்டிக்கொண்டு தனித்து வண்டியில் புறப்பட்டுப் போனேன்.

சிவகிரிக்கு நேரே தபால் கிடையாது, சங்கரநயினார்கோவிலுக்குவரும் அவ்விடத்துக்கு ஆள்விட்டு காகிதம் வாங்கவேண்டும். அதினால் காகிதம் கிடைக்கிறது தாமசப்படும்.

---

மூத்த அண்ணாட்சிக்கு நான் எழுதியது.

குருக்கள்பட்டி 13—1—74

செவ்வாய் காலை ௯ மணி

Revd. and dear Brother.

இவ்விடம் மட்டும் வந்துசேர்ந்தேன் சுகத்துடன். வியாகப்ப பிள்ளை இங்கேயிருக்கிறார் [ இவர் சாண்டையில் நமக்குத் தவசிப்பிள்ளையாயிருந்து பின்பு அண்ணாட்சி இவருக்கு வாத்திவேலை செய்துவைத்தார்கள் J. D. S.]

தாங்கள் இப்பொழுது பாளையங்கோட்டையில் வந்து சேர்ந்திருப்பீர்கள், நான் அவ்விடத்தில் இல்லை என்ற விசேஷம் கேட்டு மிகுந்த சஞ்சலப்படுவீர்கள் என்று நினைத்துத் துக்கப்படுகிறேன். எல்லா விபரமும் தம்பி மூலமாயும் திருநெல்வேலி அண்ணாட்சி மூலமாயும் அறிந்திருப்பீர்கள். மிகுந்த அவசரத்தோடு புறப்பட்டதினாலே காரியம் ஒன்றும் மனசுக்கு ஒழுங்காய் இல்லை. ஆனாலும் நான் புறப்படுமுன் மிக்கேலருளம்மாளுக்கு சுகமான பிரசவமானது ஆண்டவர்செய்த பெரிய இரக்கம். கூடன்குளம் கனம் ஐயாவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன். அவர்கள் வந்திருப்பார்களென்று நம்புகிறேன். விசேஷமாய் அவர்களையிட்டு இப்போது நான் புறப்பட்டு வந்தது பெரிய மனவருத்தம்.

என் பணிவான தோத்திரம்

ஊழியன், தேவசகாயம்.

---

நான் நடுவழித் தூரத்தில் இக் காகிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன். இங்கே பாளையங்கோட்டையில் என் பிறந்த குழந்தை மருத்துவச்சியைப் பிழையினால் செத்துக்கிடக்கிறது, [illegible] மணிக்குப்போல்

தோசைக்காரி நமது வீட்டிலிருந்தவள் தன் வீட்டுக்குத் தோசை சுடப்போகிறபோது பிள்ளைக்கு சேனை கொடுக்கவென்று அவளிடத்தில் மருத்துவச்சி ஒரு கெழுடி அருணாசலம் என்ற நாகவத்தி தீர்த்தண்ணீர் கேட்டாள். அவன் ஊற்றிக் கொடுத்துவிட்டுப் போனான். கெழுடி அதை ஆமணக்கெண்ணெயோடு கலந்து தூக்கவெறியில் விளக்கு வெளிச்சத்தில் குருட்டுக்கண்ணுவாக்கில் அளவு தெரியாமல் பச்சைமதலை வாயில் ஊற்றிவிட்டாள். குழந்தைக்குப் புரையேறிவிட்டது, செவ்வல் அம்மான் திண்ணைக்குவந்து படுத்திருந்தான், மிக்கேலருளம்மாளோடு பேசிக்கொண்டிருக்கிறான். பிள்ளை திக்குமுக்காடி வருகிறதைக்கண்ட மருத்துவச்சி: பிள்ளை பசியினால் இப்படி வருகிறது பால் கொடுக்கவென்று பிள்ளையை நீட்ட, தாய் வாங்க, சில நொடியில் பிள்ளை நீட்டி நிமிர்ந்து விறைத்துப்போய்விட்டது.

என் ஏழைத்தம்பி ஒருவனாய்ப் பட்டமரக்கடை என்னவென்று சொல்ல. இப்படிப்பட்ட ஆசைப்பிழை பத்தியப்பிழை பண்ணி மதினியையும் என்னமோசம் செய்துபோவோர்களோ என்று சித்தம் கலங்கிப் போனான் தச்சநல்லூருக்குப் பள்ளிக்கூடத்துக்கு ஓட்டமாய் ஓடி வேலையை முடித்துவிட்டு ஓட்டமாய் வீட்டுக்குவந்து தன் மதினிக்குப் பத்தியம் ஆகவேண்டியதெல்லாம் தானாய்ப் பார்ப்பான். இப்படிப்பட்ட வேளைகளில் அன்புள்ள உயிர்கள் துடிக்கிறதுடிப்பும் படுகிற கவலையும் கலக்கமும் பாடும் ஒரு நாள் மட்டுமென்றாலும் ஒருயுகத்து வாதையும் வேதனையும்போல அவ்வளவு கொடுமையும் துயரமுமாயிருக்கும். ஆனாலும் அந்த இருதயமும் உள்ளமும் உள்ளவர்கள்தான் என்தம்பியைப் போலொத்தவர்களுடைய பரிதாபத்தையும் பாட்டையும் அறியக்கூடும்.

குழந்தை இறந்ததைக்குறித்து என்தம்பி யெழுதின காயிதம் ௨௧-ம் தேதி என் கையில் கிடைத்தது. ௸ காயிதத்துக்குத் தேதியில்லை. திருநெல்வேலி இளைய அண்ணாட்சி சில ஆட்களுக்கு சமீனில் என்னிடத்தில் வேலைக்கு சிபாரிசு செய்திருந்ததில் அதில் ஒருமனுஷன் ஆறுமுகம் பிள்ளை என்பவன் வசமாய் ௨௮-௳ எழுதியனுப்பிய காகிதத்தோடு ௸ என் தம்பி காகிதமும் வந்தது.

---

Respected and dear Brother,

தாங்கள் குருக்கள்பட்டியிலிருந் தனுப்பிய கடிதமும், பின்பு செங்கிரியிலிருந்தனுப்பிய கடிதங்களும் வந்துசேர்ந்தது. இதுவரை தங்களையும் இவ்

பிடத்திலுள்ள நம்மவர்களையுங் கர்த்தர் தயவாக நடத்திவருகிற அன்புள்ள பிதாவுக்கு எக்காலமும் தோத்திரஞ் செய்வோமாக.

தாங்கள் போன அடுத்த நாள் காலை மூன்று மணிக்குப்போல இப்போது பிறந்திருந்த குழந்தைக்குச் சற்று மூச்சு திக்குத் திக்கென்று வருத்தமாப்போய் அழாமலிருந்தது. அதற்கு மருந்து கொடுத்தோம், திடீரென்று குழந்தை மயங்கி ஆபாசமாயிருந்தது. கர்த்தர் தமக்கு அந்தப் பிள்ளை வேண்டுமென்று தமது மடியில் வைத்துக் கொண்டார். எனது அன்புள்ள அண்ணாட்சியே, தாங்களிதைக் கேட்டுத் துக்கப் படுவீர்களோ. அப்படித் துக்கப் படுவது சரியேயானாலும் உங்களைப் பார்க்கிலும் அந்தக் குழந்தையை நேசிக்கிற நமது ஐயா வீட்டுக்குத் தானே போயிருக்கிறது, இந்த எண்ணத்தோடே நானும் மதினியும் மற்றும் நம்மெல்லோரும் ஆறுதலாயிருக்கிறோம் அப்படியே நீங்களும் சந்தோஷமாயிருக்க நாங்கள் ஒவ்வொருவரும் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குழந்தை மரிக்கும் இராத்திரி கூனியூரிலிருந்து தேவேத்தினமாய் அண்ணாட்சியவர்கள் வந்தார்கள். அவர்களும் உதவினார்கள் எனக்கு ஆறுதலாக முக்கியமாய். பெட்டி முதலானது செய்து தகுந்த விதமாய் தகுந்த இடத்திலடக்கம் செய்தோம். இவ்விடத்து நம்மவர்கள் ஆண்களும் பெண்களும் வந்திருந்தார்கள். கர்த்தருக்குத் தோத்திரம் சாயங்காலம் மூத்தஅண்ணாட்சியவர்கள், சாமுவேல் ஐயரவர்கள், வந்தார்கள். எங்களுக்கு மெத்தச் சந்தோஷமாயிருந்தது அவர்கள் வரவு.

பவுலுக்குக் கொஞ்சம் சுரம் அடித்தது. நேற்றிரவு முதல் வாசிதான்.

மதினியவர்கள் நல்ல சுகமாயிருக்கிறார்கள், சின்னவனும் அப்படியே

நேற்றுச் சாயங்காலம் மூத்தஅண்ணாச்சி, அம்பாசமுத்திரம், கூனியூர் அண்ணாட்சிமார் போனார்கள். இன்று விடியற்காலம் வடக்கன் குளத்திலிருந்து நமது அத்தையும் மதினியும் அண்ணாட்சியும் வந்தார்கள். அவர்களுக்குத் தாங்கள் not paid ஆய்ப் போட்ட கடிதம் மூன்றாம்நாள் சாயங்காலம் போய்ச்சேர்ந்ததாம். மதினிக்குக் காலமே வழக்கம்போல காப்பிகொடுத்து வருகிறதுதான். பின்னும் தாங்கள் நான் நடக்கவேண்டியதற்கு எழுதிய பிரகாரம் நடந்து வருகிறேன்.

கர்த்தாவின் சகாயத்தைக் கொண்டே தங்கள் அலுவலைச் சாக்கிரதையாய்ப் பார்த்துவருவீர்களென்று நாங்கள் நம்பி சந்தோஷப் படுகிறோம்.

முதலியாரவர்களிடத்தில் Revenue Code புத்தகத்துக்கு நினைவு மூட்டினேன். இன்னமுந் தரவில்லை சவதரித்து. தாங்கள் குறிப்பிவித்த Walking

stick ஐக் காணோம். ஆகையால் அனுப்பவில்லை. மற்றுங் காரியங்களுக்குப் பின்னால் எழுதி அனுப்புகிறேன்.

Yours most affectionately,
T. Sunjeevy.

---

இதற்கு சிலநாட்களுக்குப்பின் மிக்கேலருளம்மாள் கைப்பட எனக்கெழுதிய காயிதமும் வந்தது. அவள் எழுதியது: "என் அன்புநிறைந்த எசமான் காலைக் கட்டி முத்தஞ் செய்து எழுதிக்கொள்ளும் தாழ்மையான விண்ணப்பம். உங்களைவிட்டு பிரிந்துபோனதினாலும் பிள்ளை பிறந்துபோனதினாலும் கண்ணீர்விட்டு இந்தசனியம் கர்த்தரிப்படி வைத்தார் அவர்சித்தம் என்று ஆறுதலையாயிருக்கிறேன், தாங்கள்போய் இன்று ௰ நாளும் எனக்கு ௰ வருஷம்போல இருக்கிறது, தாங்கள் எப்போது வருவீர்களென்று காத்திருக்கிறேன்".

என் குழந்தை நான் கண்ணிற் காணாமல் இறந்த செய்தி, என்தம்பி எழுதின காகிதம் முற்றிலும் அன்னியமும் விபரீதமுமான தூரதொலையூரில் நான் தனித்திருக்கையில் வந்தது. நான் வாசித்துத் தனித்துத் துக்கித்து அழுது கொண்டிருந்தேன், நான் வாய்விட்டுப்பேச ஆர் உண்டு. நான் இருந்தது ஒரு மறக்குடி மச்சில். அது சமீன்தார் அரமனைக்குத் தென்புறமான கிழமேல் வீதியில் கிழக் கடைசியிலுள்ள வடக்கேபார்த்த வீடு.

எனக்கு ஜமீன் மானேஜர் வேலைகிடைத்தது என் ஏழை இளைய அண்ணாட்சி திருநெல்வேலியிலிருந்த இயேசுதாச பிள்ளையவர்களுக்குச் சந்தோஷம் சொல்லமுடியாது. தன் தம்பிக்கு ஜமீன் பட்டமும் சகல சாம்பிராச்சியமும் கிடைத்தது போலத்தான். அப்படியே என்தம்பிக்கும் என் மற்ற தமையன்மார்களுக்கும் இருந்தது. மூன்றாவது பெண்பிறந்த அதிஷ்டம் உடனே மேன்மையான உத்தியோகம் கிடைத்ததென்று ஊர்ச்சனங்கள் சொல்லவும் போயிற்று, ஆனாலும் இப்போது நான் தெற்குக் கல்விச்சாலை முனிஷியாய் முப்பது ரூபாய் சம்பளத்திலிருக்கிறேன். சார்சென்றய்யரவர்கள் சீமைக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் ஸ்தானத்திலிருந்த டிப்பையரவர்களும் என்னை அருமையாய்க் கனமாய் மதித்து நடத்தி வந்தார்கள்.

மனுஷ புத்திப்படிக்கு நான் பாளையங்கோட்டையில் அவசியம் இருந்து காரியங்கள் உதவிகள் நடப்பிக்க வேண்டிய இந்தத் தந்திரமான சமயத்தில் ஐயர் இருக்கிற ஊரிலிருந்து ௭௰ மயிலுக்கப்புறமான ஒரு ஊருக்கு ஆண்டவர் என்னை அனுப்பிவிட்டது அவருடைய சித்தம். அவர் நமக்கு எதிலும்

எக்காலத்திலும் கிருபையும் நன்மையுமே செய்துவந்திருக்கிறா ரென்று அனுபோகமாய் அறிவேன். உறுதியாய் விசுவாசிக்கிறேன். ஆனாலும் அந்தந்த ரகசியத்தை உடனுக் குடனே ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்துகிறதில்லை. நமக்கு விசுவாசம் பலப்படும்படியாகப் பிந்தி நமக்கு வெளிப் படுத்துகிறார்.

---

ஐயா இந்தக் காலத்தில் மிகுந்த எய்ப்பும் பலவீனமுமா யிருந்தார்கள். மூத்த அண்ணாட்சிக்கு இப்போது வயசு ஐம்பதுக்குமேல். ஆனாலும் ஒரு சிறு பிள்ளை தாய்தகப்பனை யெப்படி பற்றிக்கொண்டுதிரியுமோ, கொஞ்சநேரம் பிரிந்தால் எப்படிப் பாதவிக்குமோ அப்படி ஐயாவைப் பற்றிக்கொண்டு ஐயாவை விட்டுப்பிரிய மலைத்துக் கொண்டிருப்பார்கள். ஐயா எப்போதும் தங்களோடு இருக்கவேண்டும், ஐயாவோடு எப்போதும் பேசிக்கொண்டிருக்கவேண்டும், இவ்வுலகத்தில் அதுதான் அவர்களுக்கு மோட்சம். அப்படிப்பட்ட மகன் யாருக்குக் கிடைக்கும். ஐயா தங்களோடு சிலநாளிருக்கும்படியாக நல்லம்மாள்புரத்துக்கு வந்தது அண்ணாட்சிக்குக் கொண்டாட்டந்தான்.

அண்ணாட்சி தன் மூத்த மகன் தூத்துக்குடி பெரியபிள்ளைக்கு இதற்கு எட்டுநாளைக்கு முன் எழுதின காயிதத்தில்: "சுவிசேஷபுரத்திலிருந்து நம்முடைய ஐயா இந்தவாரம் செவ்வாய்க்கிழமை இங்கே வந்தார்கள். பெரிய சந்தோஷந்தான். பெலவீன மதிகமிருக்கிறது. நல்ல சாப்பாடு பரிசனை யிருக்கவேண்டும். இதுதான் அவர்கள் சுகபெலத்துக்கு விசேஷமாயிருக்க வேண்டியது" என்று எழுதியிருக்கிறார்கள்.

நல்லம்மாள்புரத்துக்கும் சுவிசேஷபுரத்துக்கும் 2.மயில், சற்றே கூட இருக்கலாம். ஆனால் வழி பெரிய தேரிக்காடு. ஐயாவை கிழமைதோறும் அண்ணாட்சி பாராமல் இரார்கள். அப்படியிருந்தாலும் அண்ணாச்சிக்குத் தகப்பன் பேரில் இந்தத் தேட்டம்.

---

ஐயா நல்லம்மாள்புரத்தில் மூத்த மகன் வீட்டிலிருக்கிறார்கள். (1874—சனுவரியு 18) ஞாயிற்றுக்கிழமை, மூத்த மகன் இராப்போசனங் கொடுக்க அதிசயபுரத்துக்குப் போயிருக்கிறார்கள். ஐயா பங்களா முன் பிராந்தாவில் சாயங்காலம் உட்கார்ந்திருந்துகொண்டு செபபுஸ்தகத்திலுள்ள வியாதியஸ்தரைச் சந்திக்கிற முறைமையையும் மரித்தோரை யடக்கம்பண்ணும் முறைமையையும் வாசித்துக்கொண்டிருந்தார்கள். மூத்த மருமகன் உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்து விட்டு, பின்பு வெளியேவந்தபோது உதட்டுச்

குள் சிரித்துக்கொண்டு: என்ன, இதை வாசிக்கிறீர்களென்றார்கள். ஐயா: நான் எனக்குத்தான் வாசிக்கிறேன் என்று ஒவ்வொரு வார்த்தையும் நிறுத்துச்சொல்லுகிறவர்கள்போல நிறுத்திச் சொன்னார்கள். இதற்குச் சில நேரத்துக்குப்பின் ஐந்தரை மணிக்குப்போல ஏதோ இரத்த நரம்பு தலையிலுள்ளது உடைந்து வலது நாசிவழியாய் இரத்தம் பீறிட்டது.

---

ஐயாவுடைய சரீரம் எக்காலமும் பலமுள்ள தல்ல, பழக்கத்தினாலும் நிரமையினாலும் சரீரப்பாடும் வேலையும் அவர்களுக்கு சீவகாலமெல்லாம் இருந்தது.

ஐயாவுடைய உடன்பிறந்தார் சுப்பிராயத்தில் இறந்து போனார்கள். தாயாரும் அப்படியே. தகப்பனார் மிக வயதில் இறந்துபோனார்கள். தன் தகப்பனாருக்கு மிஞ்சின வயசுக்குத் தானிருக்கமாட்டோமென்று ஐயாவுக்கு ஒருகாலத்தில் எண்ணமிருந்தது. தங்களை மரணத்துக்கு ஆயத்தம்பண்ணிக் கொள்ளுகிற சிந்தை ஐயாவுக்கு எக்காலமும் உண்டு. இராத்திரிதோறும் பண்ணுகிற செபம் அந்தவகையான சிந்தையோடிருக்கும். நல்மரணந் தவேணுமென்ற பாட்டு ஐயாவுக்கு பிரியமான பாட்டு. தான் சுவிசேஷபுரத்தில் முனிஷியாய் ஐயாவோடு இருந்தகாலத்தில் கிறிஸ்தவன் மரணத்தின்மேல் ஜெயிக்கும் ஜெபமென்ற புஸ்தகத்தை அதிகப் பிரியமாய் வாசித்தார்கள். எனக்கு: இதென்ன புஸ்தகம், இதில் என்ன இருக்கிறதென்று வெறுப்பாயிருந்தது. கல்லும் அல்லவே காயம் வல்லும் அல்லவே என்ற பாட்டு ஒருஒத்தைத்தாள் பிரதியாய் அச்சடிக்கப்பட்டது ஐயாவுக்குக்கிடைத்தது அதைக் கையில் வைத்துக்கொண்டு மத்தியானங்களில் வேளாவேளைகளில் படித்துக் கொண்டிருப்பார்கள். எனக்கு இது வேதனையாயிருக்கும், அந்த ராகங்கூட எனக்கு வெறுப்பாயிருக்கும்.

தங்கள் பிள்ளைகள் கொஞ்சவயசா யிருக்கும்போதே பிள்ளைகளோடு தனித்துப் பேச நேரிடும்போது அல்லது பிள்ளைகளோடு எங்கும் யாருக்குப் பிரயாணம்பண்ணுகையில் தங்கள் பழய சரித்திரங்களை, தங்கள் சகோதரர்கள் பெற்றோர்கள் மரணத்தைக்குறித்து சொல்லுவார்கள். தாங்கள் பிரிந்துபோகிறதற்கு தங்கள் பிள்ளைகள் மனதை ஆயத்தம் பண்ணும்படியாகவோ: தாய் தகப்பனை எண்ணாத விதமாய், தாய் தகப்பனுக்கு அன்பற்ற பிள்ளைகளாய், அடங்காத பிள்ளைகளாய், தாய்தகப்பனை மதியாதவிதமாய் நடந்து தாய் தகப்பனுக்கு மன நோவுண்டாக்கினால், அப்புறம் தாய் தகப்பன் மரணத்துக்குப் பின்பு: ஐயோ இப்படி நடந்தோமே யென்று நொந்தழுது

மாதவிக்கவேண்டியதா யிருக்குமே, அப்படி வராமல் இப்போதே நல்ல பிள்ளையாய் நடந்துகொள் என்ற கருத்தை மனதில்வைத்து இப்படியாகத் தங்கள் பெற்றோர்களைப் பற்றியும் தங்களைப் பற்றியும் வேளாவேளைகளில் சாடையான பேச்சாய்ப் பேசுவார்களோ; அல்லது அப்படிப்பட்ட நினைவு வையாமல் பிள்ளைகள் தங்கள் சரித்திரத்தையும் தங்கள் மனதில் ஓடுகிற எண்ணங்களையும் அறியும்படியாக இயல்பான பேச்சாய் பேசுவார்களோ, என்னவென்று சொல்ல அறியேன். நான் சிறுவனா யிருக்கிறபோதே ஐயா என்னிடத்தில் இப்படி தங்கள் சரித்திரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வேளைகளில் என் மனமெல்லாம் முருகிக் கரைந்து போகும். ஆனால் பிள்ளைகளான எங்களுடைய பயித்திய மென்னவென்றால்:—ஐயா எக்காலமும் நம்மோடேயிருப்பார்கள், ஒரு வியாதி வந்தால் எப்படியும் சுகமாகிப்போகும், ஐயாவுக்கொன்றென்றால் அப்புறம் நாம் எப்படி உயிரோடிருக்கப் போகிறோம்.

மூத்த அண்ணாட்சி; ஐயாவுடைய காலத்திலேயே நம்முடைய இரட்சகர் திரும்ப வருவார். நாமெல்லாரும் ஒன்றாய் நமது ஆண்டவரை சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் படுவோம் என்று தீர்மானமாயிருந்தார்கள் அப்படியே என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், நான் ஸ்ரீவில்லிபுத்தூரில்படித்துவந்த காலத்தில் எனக்கு பதினைந்து வயசிருக்கும், இராத்திரியில் படுக்கிறபோது ஐயா ஞாபகம் வரும், உடனே செபம் பண்ணுவேன். ஆண்டவரே, ஐயா இறந்துபோகக்கூடாது, ஐயா இறந்துபோனால் அப்புறம் எப்படி நானிருப்பேன். ஐயாவுக்கு முந்தி நான் இறந்துபோகவேண்டும் என்று இப்படி எத்தனை காலமோ செபம் பண்ணியிருக்கிறேன். எனக்கிந்தப் பயித்தியமானால் என் சகோதரருக்குக் கேட்பானேன்.

---

மனதுக்கு வருத்தமான சங்கதிகளைத் திடீரென்று அறிவிப்பது நமக்கு வழக்கமில்லை, ஐயாவுக்கு மோசமான வியாதியென்று கேட்டால் தம்பிமார் திடுக்கிட்டுப் புத்திகலங்கிப் போவார்களென்பது மூத்த அண்ணாட்சிக்குத் தெரியும். ஆகையால் ஐயாவுக்குச்சுகமில்லையென்று எனக்குத்தெரிவிக்குமுன் என் மனதைப் பக்குவப் படுத்தும்படியாக காயிதம் முதலில் ஐந்து பக்கத்துக்குப் பல சங்கதிகளும் சொல்லிச் சொல்லி அப்புறந்தான் ஐயாவுடைய வியாதியைக்குறித்து எழுதியிருக்கிறார்கள்.

Nallammalpuram
20th January 1874.

My dear Brother

இவ்விடம் யாவருந் தேவகிருபையாற் சுகம், அவ்விடஞ் சுகசெய்திக்கு
எழுதவும். உம் பட்சமுள்ள காகிதம் குருக்கள்பட்டியிலிருந் தனுப்பினது
நான் பாளையங்கோட்டையிலிருக்கும் போதே வந்து சேர்ந்தது, பார்த்துக்
கொண்டேன். வீட்டிற் குறித்துவைத்துப் போனதையும் பார்த்தேன்,
எல்லாம் நல்லது. சந்தோஷந்தான்.

நான் பாளையங்கோட்டை நாளது மீ ௧௩-உ செவ்வாய்க்கிழமை
சாயுங்காலம் போய்ச்சேர்ந்தேன். தாம் இல்லாததையும் வீட்டிற் சம்பவித்
ததுகளையும் உடனே அறிந்தேன். மனதுக்கு வருத்தந் தருங் காரியங்க
ளாயிருந்தபோதிலும் சகலத்தையும் தேவ நடத்துதலுக்கு ஒப்புவித்து அ
வர் செய்வதெல்லாம் ஞானமும் நன்மையுமாயிருக்குமென்று அவர் சித்த
த்துக்குச் சகலத்தையும் ஒப்புவித்து அமர்ந்திருந்தேன். தமக்குக் காகிதம்
எழுத யோசித்தும், மன ஆயாசத்தாற் சம்பவித்ததுகளை யெழுதவருமென்
று சங்கடத்தால் தாமிதப்பட்டேன். ஆனது விதவளாயு மிருந்து இப்போ
து எப்படியும் எழுதாமல் தீராதென்று எழுதுகிறேன். கருத்தர் நமக்கு
சந்தோஷத்தையும் துக்கத்தையும் கலந்துபோகிறார், நாம் அவருக்குள்ளான
சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படிக்குத் தான்.

நான் பாளையங்கோட்டை வீடு சேர்ந்தவுடனே தாம் சிலகிரிக்குப்போ
னதையும் குழந்தை பிறந்ததையும் கேட்டு ஒருவகையிற் சந்தோஷித்தேன்.
சந்தோஷம் மனதிலுண்டாகிப் பரவாமுன்னே பிள்ளை மரித்துப்போயிற்று
என்று கேட்டு அடுத்த சொல்லைக்கேட்க மனமாறித் துயரப்பட்டேன். மி
கேல் அருளம்மாள் சுகமெப்படி — உதவியார் என்று விசாரிக்க இதுகாரி
யமும் மனதுக்குக் கவலைக்கிடமாயிற்று—மற்றப்பிள்ளைகளை விசாரிக்க, ஐத்தர்
பாலய்யாவுக்குச் சாடையாய் அனந்த சுரம்இருக்கிறது என்றுங் கண்டேன்.
எல்லாம் மனதுக்குப் பெரிய பாரமான கவலையையும் விசாரத்தையும் தந்த
து. இருக்கிறமட்டுஞ் சுகம்வேறுங் காரியத்துக் குரிய முயற்சிக்கு வலிக்
கொள்ள. மனதைத்தேற்றிக்கொண்டு, மி. அருளம்மாளுக்கு ஆற்றல்சொல்
லி ஆகவேண்டியதுகளைச் செய்து பத்திரமாயிருக்கும்படி சொன்னேன், ஐத்
தர் பாலய்யாவுக்கு கைமருந்து கொடுத்தும் டாக்கிட்டர் பிள்ளையைக்கொண்
டு மருந்துகொடுக்கும்படி யோசித்தும் நாட்பட்டசுரமாவதால் பத்தியமாக

யிருந்தால் லேசாய்ப் போமென்று கவனித்துத் தம்பி சஞ்சீவிநாதபிள்ளை கரி சனையாயிருப்பதாலும் பயப்படத் தக்கதில்லை என்றுபார்த்து, குறித்தநாளில். சனிக்கிழமைச் சாயுங்காலம் (௯-௨) திரும்பி இராத்திரியிலேயே பிரயாண ஞ்செய்து ஞாயிறுகாலையில் நல்லம்மாள்புரஞ் சேர்ந்தேன், நான் அவ்விடம் வரும்போது நமது ஐயா அவர்கள் நல்லம்மாள்புரம் வந்திருந்தால் நான் திரும்பும் வரையும் இங்கே இருக்க விரும்பிக்கொண்டபடிக்கு நான் வந்து சேர அவர்களும் இருக்க எல்லாரையுஞ் சுகத்துடன் சந்தித்துக்கொண்டோம், நான் அங்கேயிருந்து புறப்படும்போது மி- அருளம்மாள் சுகமிருந்த மட்டும்; ஜத்தர் பாலய்யாவுக்கு ஸுகத்தான், பத்தியமாயிருந்தால் காய்ச்சல் மாறிமாறித் திரும்பாது, சுகமானவுடன் பெலவீனத்திலும் இங்கும் அங்கும்போகப் பார்க்கிறான், வெகு நல்ல பிள்ளை, பயமும் அன்புமுள்ளவன், கருத்தர் பிறந்த பிள்ளையை எடுத்துக்கொண்டது பெரியதுக்கமாயிருந்தபோதிலும் மி. அருளம்மாளையும் ஜந்தர் பாலய்யாவையும் (சுகந்தந்து) காப்பாற்றியிருக்கிறது பெரிய இரக்கம், இது நமக்குத் துக்கத்திலும் ஆறுதலான காரியம். இப்படியே தாமும் ஆறுதலாயிருக்கவும் அவர் கிருபை புரிவாராக. உம்மைத்தவிர மற்றத்தம்பிமார் ஒன்றித்திருந்து வீட்டில்செபஞ்செய்தோம், உம்மையும் நம்முடையவர்கள் எல்லாரையும் நினைத்துக்கொண்டோம், தம்பி ஏசுதாசபிள்ளையையும் அடிக்கடிவந்து பார்த்துக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறேன், கருத்தர் காத்து இரட்சிப்பார், பயமில்லை தாம் தலத்தி லில்லாமல் வேறிடத்துக்குப் போயிருக்குஞ் சமயத்தில் வீட்டில் சேரிட்டிருக்கும் காரியம் லேசாயிருந்தாலும் மனதுக்குப் பெரியகாரியமாய்த் தோன்றும், இப்படியிருக்க பிள்ளை மரித்ததையும் சிறுவனுக்குச் சுகமில்லை என்பதையும் கேட்கும்போது மிகுந்த சங்கடமிருக்கும், இந்தக்காலத்தில் நானும் மற்றத்தம்பிமாரும் இருந்தது மெத்தநல்லது, கனம் சாமுவேல் ஐயரவர்களுங்கூட வந்திருந்தார்கள், அவர்கள் நான் சேர்ந்த சாயுங்காலம் எனக்குச் சற்று நேரத்துக்குப்பிந்தி வந்து சேர்ந்தார்கள். தாம் திட்டப்படுத்தியும் எழுதியுமிருந்தபடிக்கு மற்றக் காரியங்கள் சரியாய்நடந்தது குறைச்சலில்லை, தாம் இல்லாக்குறைச்சல்தான், மற்றப்படியல்ல, மி- அருளம்மாள் வீட்டுக்குள்ளானதும் பிள்ளைபோனதும் சிறுவன் சுகவீனமாயிருந்தது மாத்திரமே விசேஷக்குறைச்சல். கருத்தர் சித்தம் நம் பாக்கியம், அவருக்கு ஸ்தோத்திரம்.

டவிபூர்த் தம்பி சுடலைக்குத் தெய்வநாயகம்பிள்ளை செட்டிக்குடிச் சரி

ப்படுத்திக் கொடுப்பது அசாத்தியமென்றறிந்து காரியத்தை வேறுவகையா
யொழுங்குசெய்து விட்டோம், இதைத் தாம் ஒப்புக்கொள்வதா யிருக்கும்;
விவரந் தனிப்பட இனி எழுதுகிறேன், இப்போது நேரமில்லை.

நான் இவ்விடஞ் சேர்ந்ததிலுள்ள விசேஷந் தெரிவிக்கிறேன், இதிலு
ம் நமதாண்டவர் நம்மெல்லாருக்கும் பெரிய இரக்கஞ்செய்திருக்கிறார்: அதா
வது, நான் ஞாயிறு விடியற்காலம் வந்து சேர்ந்து, பின்பு காப்பிசாப்பிட்டு
நமதய்யாவுடன் எல்லாரும் காலை ஆராதனைக்குப் போனோம், ஆராதனை
முடித்து வந்து வீட்டிலுஞ் சந்தோஷமாயிருந்து, 10-மணிக்கு மேல் எவ்
லாரையும் சுகத்துடன்விட்டு நான் அதிசயபுரத்துக்கு நற்கருணை ஆராதனைக்
குப் போயிருந்து விட்டு திரும்ப ஆறுமணி நேரம்போல வீட்டுக்குவந்தேன்,
நான் வருவதற்குச் சற்றுநேரத்துக்கு முன் சாயங்காலம் 5½-மணிபோல நமத
ய்யாவுக்கு வலதுநாசி வழியாய் இரத்தம் ஓட்டமுண்டாகி மறிபடாமற்
பீறிக்கொண்டிருந்தது, நான் வந்தவுடன் வயித்திய புஸ்தகத்திற் குறித்த
படிக்கு மருந்துகளையும் தண்ணீர்களையும் நாசியில் செலுத்தி யடித்தும் நில்
லாமல் கையும் மனமுஞ் சோர்ந்து ஆண்டவரை மன்றாடிக்கொண்டு நாலைந்
துவகை மருந்துகளை விடாமுயற்சியாய்ச் செய்துகொண்டிருந்தேன், உப
தேசியாரும் மிகேல்பிள்ளையும் உதவியாயிருந்தார்கள், காரியம் எப்படியா
மென்று மனதுக்குத் திட்டமில்லை, கலக்கந்தான், ௸ இராத்திரி 10-மணி
க்குமேல் ஐயாவுக்கு அதிக ஆயாசமும் தளர்ச்சியு முண்டாயிருந்தது, அப்
போதெல்லாம் என்புத்தியும் மனமும் எப்படியிருந்ததென்று சொல்லத் தெரி
யாது, செய்யக்கூடிய மருந்துகளை செய்வதில் கைதளரவில்லை, ௸ மணி
க்குப் பின் இரத்தஞ் சற்றுத்தணிந்துவரத் தேவகிருபையால் அசதியாய்ப்
படுத்திருக்க, அமைதலாயிருக்க விட்டுப் பக்கத்திலிருந்தோம், அந்த மட்டில்
நின்றது, வெளிப்பட்ட இரத்தங் கொஞ்சமல்ல; பெரிய சருவச்சட்டி
கொள்ளாது, நான் வந்தபின்பு கண்டது, ஞாயிற்றுக்கிழமை 11-மணிமுதல்
இதுவரையுந் தாவளையாயிருக்கிறது, இதினாலுண்டாயிருக்கும் பெலவீனங்
கொஞ்சமல்ல, இப்போது ஐயாவாலே நடக்கக்கூடாது, உயிர் அன்று
தப்பினது தேவாற்புதம், சரீரம் இரத்த தோற்றமற்று சருமம் வேறுவருணமா
ய்த் தோற்றுகிறது, கருத்தர் இந்த வகையிலுங் கிருபைசெய்தார், என்
மனதுக்குப் பெரிய ஆறுதல், இதுவரையில் நமது ஐயாவுக்கு நாசிவழியாய்
இரத்தம் உண்டாயிருப்பது மில்லை, இப்போது ஐயாவுக்கு இருதயபுறத்
தில் நோவு இருக்கிறதாம், கோழிவிடைக்குஞ்சுப் பிராத்துச்செய்து கொடு
த்துவருகிறோம், கொஞ்சம் உணவன் வருவிக்கவும் வேண்டியதிருக்கிறது

தம்பி ஏசுதாசனுக்குத்தான் எழுதவும் யோசித்திருக்கிறேன். நீ தலத்திலிருந்து உடனே வந்து சேரும். இது விஷயத்தில் ஆண்டவர் ஐயாவுக்குச் செய்த கிருபைக்காகவும் ஸ்தோத்திரஞ்செலுத்தவேண்டும். முழுவதுங் காப்பாற்று வாராக. இன்னமும் மிகுந்த கவலையாயிருக்கிறேன். அவர் சித்தம் நம் பாக்கியம். இந்தக் காரியங்களை யெல்லாம் எழுத என்மனதுக்குப் பெரிய வருத்தம் உம் மனசுக்குப் பெரிய சங்கடமாயிருக்கு மென்பதை நினைக்க. ஆனாலுங் காரியந் தெரியாதிருக்க மறைத்துவைக்கக்கூடாதென்று எல்லாந் தெரிவித்திருக்கிறேன். கருத்தருக்குள் திடமனதாயிருக்க அவர் வரந்தருவாராக, சுகபெலனுந் தருவாராக.

அவ்விடத்து வேலைக்காரியம் எப்படி நடக்கிறதோ, மனசுக்கு எப்படியோ, ஆட்கள் எப்படியோ, இடமெப்படியோ, சகலத்தையும் கருத்தருடைய சித்தத்துக்கு ஒப்புவித்து, தலைவர்கள் உத்திரவின் பிரகாரம் நடக்க, நடத்த, நடப்பிக்க வேண்டியதுதானே. இது தெரியுமே. பரிசுத்தர் யோசேப்பு, தானியேல் என்பவர்களின் பத்தன் உன்னோடிருப்பாராக.

மற்றக்காரியங்களைக் குறித்தும் இனியுள்ள செய்திகளுக்கும் இனிமேல் எழுதுவேன்.

அவ்விடத்துக்கு நான் போடுங் காகிதங்களுக்கு எப்படி மேல்விலாசம் எழுதியனுப்ப வேண்டுமென்றுங் குறித்தனுப்பவும்.

இவ்விடம் நாங்கள் எல்லாரும் தமக்கு அநேகவாழ்த்துதற் சொல்லி முடிக்கிறேன்.

Yours very sincerely,
M. Savarirayan.

P. S. எனக்கு மனவருத்தத்தால் இத்தனைநாளைக்குப் பின்பு நான் இதை யெழுத நேரிட்டது. இதற்குள்ளாக பாளையங்கோட்டையி லிருந்து தம்பிமார் காகிதம் வந்திருக்கலாம். நமதய்யா காரியம் மற்றவர்களுக்கு நான் இனித்தான் தெரிவிக்க அறிவார்கள். M. S.

---

[தூத்துக்குடி பெரியபிள்ளைக்கு அன்னாட்சி எழுதினது.]

Nallammalpuram.
21st January 1874.

My dear Son,

நான் பாளையங்கோட்டையி லிருக்கும்போதே உனது பட்சமுள்ள காகி

தம் வந்தது, மேரியம்மாளுக்குச் சுகமென்கிற சேதி சந்தோஷமுள்ளது. முழுவதுஞ் சுகமாயிருக்கவேண்டும்.

நான் பாளையங்கோட்டையில் ௰௩-உ சாயங்காலம் சேர்ந்தேன். தம்பி J. D. S. பிள்ளை சிவகிரிக்குப்போய்விட்டான். வீட்டில் மிகேல் அருளம்மாள் பிரசவித்து பிள்ளையும் மூன்றுநாள் கைப்பிழையால் மரித்துப்போயிற்று. சிறுவன் பவுலுக்குச் சுரம். இப்படித் துன்பமிருந்தது. மரித்துப்போன பிள்ளையைத் தவிர மற்றவர்களைச் சுகத்துடன் காப்பாற்ற வேண்டியது. நான் வரும்போது பூரண சுகமாயில்லை. தம்பி தருமசஞ்சீவிப் பிள்ளை தான் உதவியாயிருக்கிறான். நான் திரும்பி—சனிக்கிழமை சாயுங்காலம் ௰எ-உ புறப்பட்டு ௰அ-உ காலையில் இவ்விடஞ் சேர்ந்தேன். எல்லாருஞ் சுகமாயிருந்தார்கள். மதய்யாவுஞ் சுவிசேஷபுரத்தி லிருந்து வந்திருக்கிறார்கள். நான் பாளையங்கோட்டைக்குப் புறப்படுமுன்னே வந்தார்கள். மகேல்பிள்ளையும் வந்திருந்ததால் ஐயாவையும் இருக்கும்படி சொல்லிவிட்டுப் போனேன்.

*

நான் இவ்விடம் வந்து சேர்ந்த அன்று சாயுங்காலம் ௰அ-உ மாலை ௰௧-மணிக்கு மதய்யாவுக்கு நாசிவழியாய் வலதுபுறத்தில் இரத்தம் புறப்பட்டு பலவித மருந்துசெய்து மசிபடாமலத் தேவகிருபையினாலே இரவு 10 மணிக்குமேல் சற்று தணிந்து பிற்பாடு படிப்படியாய் நின்றது. பட்டசங்கடம் கொஞ்சமல்ல. இரத்தம் உத்தேசம் ஆறுபடியிருக்கும், பெலவீனம் அடாசம் அசதியாயிற்று, என்புத்தியும் மனமும் அப்போது எப்படியிருந்ததென்று சொல்ல எனக்கு இப்போது ஞாபகமில்லை. ஆனால் மருந்து செய்வதில் மாத்திரம் தளர்ந்துபோகவில்லை. உபதேசியாரும் மிகேல் பிள்ளையும் நல்ல உதவியாயிருந்தார்கள். மருந்தைச் செல்லவிடாமல் தண்ணீர்போல் இரத்தம் ஓட்டமாயிருந்தது. என்னவாய் முடியுமோவென்றுள்ள கலக்கம் கொஞ்சமல்ல, கருத்தர் இம்மட்டும் காப்பாற்றியிருக்கிறார், இப்போது நடக்கக்கூடாத பெலவீனமும் அதிகம். இரத்தம் ஊறவேணும். உயிர் தேறவும்வேணும், அவர் கிருபைவேண்டும், கோழிக்குஞ்சு பிராத்துப் போட்டுக்கொடுக்கிறோம், கொஞ்சம் கொஞ்சம் உணவன் கொடுக்கவேண்டும். எப்படி வருவிக்கலாமென்று யோசிக்கிறேன் தம்பி J. D. S. தலத்திலில்லை. ஆளனுப்பவுந் தனதாவில்லை. சாலொமோன், மிகேல் பிள்ளைகூட சேர்ந்துப் போயிருக்கிறான், ஷை யார் சாமான் எடுக்கும்படிக்கும் மரம் வாங்கிவரும்படிக்கும் யின [illegible]

மாப்பிள்ளை எழுதியபடிக்கு முத்துமரியவியாகுலம் இந்தவாரம் புறப்பட்டு வரவேண்டியது. நமதய்யாவுக்கு நேரிட்ட சுகவீனம் ஒரு தடங்கல். இன்னொரு காரியம் அவன் சீமைகலைக்காக விசாரணைத்துக்குப் போனதில் காரியஞ் சித்தியாகவும் இல்லை. எப்படியானாலும் உத்தரவுப்படி வந்து சேரவேண்டியது தான் காரியம். தங்கச்சி முத்து மரியவியாகுலமும் பிள்ளையும் வந்தால் மாப்பிள்ளை வருமானஞ் செலவுக்கு பத்துமா. இப்போ தென்னை கிடைக்கிறது. அவரால் உனக்கு வருத்தமும் உன்னால் அவருக்கு வருத்தமும் குறைவுமிராதபடிக்கு சகலத்திலும் நடந்துகொள்ளவும். சமாதானமும் அன்புமாயிருக்கவும் உதவியாயிருக்கவும் இருக்கவேண்டும். நேயமாய் நடந்துகொள்ள வேண்டும். நம்முடைய வீட்டில் இங்கே நம்மோடு இருக்கும்போது இருக்கிறது போலிருந்தால் நல்ல கனமாயிருக்கும். நல்ல குணம் திறமை கூர்மை யுண்டென்பதற்கு ஐயமில்லை. உனக்குத் தெரியுமே. தங்கச்சி வரவேண்டுமென்றால் எப்படியும் அனுப்பி விடுவோம். காகித (?) விருந்ததையும் விட்டுவிட்டது பெரியகுறைவு. அவர்கள் இஷ்டம். தங்கச்சி வருவதில் வீட்டில் உதவியும் வெளியிற் பிரயோசனமுமுண்டென்று எழுதியிருப்பதால் அனுப்பவேண்டியதுதான். உங்கள் யோசனை என்னவோ தெரியாது. இது நிற்க.

கூடுமானால் கொஞ்சம் உவைனும் பிராந்தியும் பாளையங்கோட்டை தபால்வண்டி மார்க்கமாய் தம்பி சஞ்சீவிப்பிள்ளைக்கு அனுப்பி சுவிசேஷபுரம் தபால் வழியாய் வரும்படிசெய்யவும். போத்திஐயாவுக்கு தற்சமயத்துக்குக் கொஞ்சம் உதவியாயிருக்கும். இப்போதும் படுத்திருக்கிறார்கள் நடு அறையில்,

இவ்விடத்து நாங்கள் உங்களுக்கு அநேகவாழ்த்துதற் சொல்லி பிள்ளைகளுக்கு முத்தி யனுப்புகிறோம்.

மதுர சஞ்சீவியின் செய்தியும் தெரிய விரும்புகிறேன்.

Yours very sincerely,
M. Savarirayan.

Palamcottah
23rd January 1874.

Reverend and dear Brother,

தங்களுடைய கடிதம் வந்தது. அன்புள்ள ஐயா அவர்களுக்கு சேரிட்ட கடுமையான ரோகத்தைக் குறித்து வாசித்தவுடன் திகில் பிடித்தது. கடுமையான காரியங்களுக்கு ஆண்டவர் விலக்கமாய்க் காப்பாற்றவேண்டுமென்று ஐயா அவர்கள் அடிக்கடி வேண்டுதல் செய்கிறது தங்களுக்குந் தெரிந்திருக்குமே. கர்த்தர் இந்தத் தடவையும் அவர்களுடைய வேண்டுதலை நினைவு கூர்ந்தார். அன்புள்ள நமது கர்த்தருக்கே ஸ்தோத்திர முண்டாவதாக. அவருடைய உண்மையையும் இரக்கத்தையும் பாவிகளிலும் பிரதான பாவியாகிய எனக்கும் நமது குடும்பத்தாருக்கும் இந்தத்தடவையும் காட்டின திருநாமத்துக்குச் சாஷ்டாங்க தோத்திரஞ் செலுத்துகிறேன். நீங்களும் நம்மனைவோரும் அப்படியே செய்வார்களாக: கடிதம் உங்களிடத்திலிருந்து வந்த உடனே நான் திருநெல்வேலிக்குப்போய் அண்ணாச்சியவர்களுக்கும் கடிதத்தைக் காண்பித்து பின்பு இரண்டுபேருமாய் திரசரவர்களிடம் போய் காகிதத்தை வாசித்துக் காண்பித்தோம். அவர்கள் பயமில்லை, அதிக இரத்தம் போச்சுது. அதைத்தான் நிறுத்தியிருக்க வேண்டியது, தருக்தபோஜனம் கொடுக்க வேணுமென்று சொன்னார்கள்: அண்ணாச்சியவர்கள் விபரம் எழுதியிருக்கிறதால் தெரியவரும்.

தாங்கள் இடையன்குடி திரசரைக் கண்டுபேசினீர்களானால் விபரமறிந்துகொள்ளலாம். அவரை வந்துபார்க்கச் சொல்லுங்கள். புத்தகங்களைப் பார்த்து அவர் உங்களுக்குச் சொல்லும் விபரத்தை நன்றாய் கிரகித்துக் கொள்ளுங்கள். நானும் ஒரு இங்கிலீஸ் வயித்திய சிறிய புத்தகத்தில் பார்த்தேன். அதில் மூக்கிலிருந் துண்டாகிற இரத்த ஓட்டமென்று ஒரு அதிகாரம் போட்டிருக்கிறது. ஐயா அவர்களுக்குப் பலவீனமும் அதிகப் பிராயமுமாயிருக்கிறதும் அதிகஇரத்தம் போனதுபத்தித்தான் கவலையாயிருக்க வேண்டியது. மற்றப்படி இரத்தம் போகிறது நல்லது, அநேக வியாதியைக் கெடுக்குமென்று அந்தப் புத்தகத்தில் கண்டிருக்கிறது.

சாப்பாடுதான் அடிக்கடி சென்றுவரவேணுமாம். ஜெரிக்கத் தக்கதாக கொஞ்சம் கொஞ்சமாய் ஐயா அவர்களுக்குப் பிரியமான அளவு ஒவ்வொரு வேளையாய்க் கொடுக்கவேண்டியது; நாலு ஐந்துதடவை கொடுக்கவேண்டும்,

உவயின் கொடுத்துக்கொண்டு பிற்பாடு கொடுக்கும் ஆகாரஞ் செல்லவேண்டுமாம், உவயின் ஒவ்வொரு நாளின் குளிர்ச்சியான வேளைகளில் குளிர்ந்த ஜலத்தோடு கொடுப்பது நல்லதென்று நினைக்கிறேன். நான் தூரத்திலிருக்கெழுதுவதால் நான் தெரிந்தவை யெல்லாம் யெழுதுகிறேன். தங்களுக்கு இது சரியென்று நாளடைவில் தோன்றுவதைத்தான் தாங்கள் செய்வது சரியாயிருக்கும், தலைக்கு அதிக உஷ்டணங் கொள்ளாதபடி பாருங்கள், அப்படியே குளிர்ச்சியும், முகம் கழுவுகிறதாவது விசேஷமாய் வெளிக்குப்போனபின் சுத்திசெய்வதாவது குளிர்ந்ததண்ணீரால்தான் செய்யவேண்டுமாம், உறைந்த இரத்தத்தைப் பிய்க்கவாவது மூக்கில் உள்ளாவது புறம்பாவது கை ஒருக்காலும் போடவாவது படாது. இரத்தப் பொறுக்குத் தன்னாலே தான் விழவேண்டியது. இங்கிலீஸ் வைத்தியமே இந்த வியாதியைக் குறித்துத் திட்டமாய்ச் சொல்லுவதால் திரசரிடத்திலும் கனம் ஆர்க்கோர்ட்டு ஐயரவர்களிடத்திலும் இந்தக் காரியங்களைக் குறித்துச் சகலமும் விசாரித்தறிந்து கொள்ளுங்கள்.

ஐயா அவர்களுக்கிருக்கிற சுகத்துக்கும் பலத்துக்கும் ஒவ்வொரு தபாலிலும் தப்பாமல் எனக்குக் கடிதம் அனுப்பினால் அன்னாட்சியவர்களுக்கும், அறிவிப்பேன். அப்படியே செய்யும்படி உங்களை ஆவலாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசீர்வாத உபதேசியாருக்கும் மிக்கேல் பிள்ளை யவர்களுக்கும் அவர்கள்செய்த உதவிக்காக நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறோம். கர்த்தர் அவர்களுக்குப் பதில் அளிப்பாராக.

ஒரு பாட்டில் போர்ட்டு உவயின் முதல்தரம் உரூ. ௨ விலையுள்ளது அன்னாட்சி யவர்கள் அனுப்பியதும் இரண்டு தோஸ்து ரொட்டியும் பச்சைரொட்டி ஒன்றும் கொஞ்சம் கோதுமை ரொய்யும் சவ்வரிசியும் பிஸ்கோத்தும் நான் அனுப்பியிருக்கிறேன்.

கோதும்பைரொய் நல்லது என்று திரசர்சொன்னார். சவ்வரிசி கோதும்பை ரொய் வேறு எதாவது வேண்டியதற்கு உடனே யெழுதப் பிரார்த்திக்கிறேன்.

ஆரணப் பெட்டியில் ஸதமு இந்தத் தினத்துக்குரிய தெய்வவாக்கியத்தில் சொல்லியபடி தெய்வீகமும் மனுஷீகமும் உடைய நமது இரட்சகர் நமது சகோதரரா யிருக்கிறதால் அவரிடத்திலே நாம் தாராளமாய்ச் சேர்ந்து நமக்கு வேண்டியதை விசுவாசமாய்க் கேட்போமாக.

நான் தங்களுக்கும் ஐயா அவர்களுக்கும் மதினிக்கும் தாழ்மையான தோத்திரமும் பிள்ளைகளுக்கு வாழ்த்துதலும் சொல்லுகிறேன்.

327

நான் சவுக்கியமாயிருக்கிறேன். பவுலுக்கு நேற்றுமுதல் பாசசல் விட்டிருக்கிறது, மதினியும் சுகந்தான்.

ஞாயிற்றுக் கிழமை காலை (௰) மணிக்கு வடக்கன்குளத்திலிருந்து அத்தையும் அவர்கள் மருமகனும் மகளும் வந்தார்கள். அத்தை யிருக்கிறார்கள், மகளும் மருமகனும் முந்தாம் நாள் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

Yours very affectionately

T. S. Sunjeevy.

தாங்கள் இவ்வளவு அவசரமான சாமான்களுக்கு எழுதும்போது காலணோலையாவது அண்டாப் பிள்ளையை யாவது அனுப்புவதே நலம். இந்த நீசனுடைய ஞானயுதத்தை நம்பி ஒருபொருள் கொடுக்க ஏதுவில்லையே. உவயின் பாட்டில்மாத்திரம் கொண்டுவருகிறதாக ஒப்புக்கொண்டதால் அதுமாத்திரம் அனுப்பியிருக்கிறது. அதுவும் வெகுகட்டாயத்தின்பேரில்.

---

[மிக்கேல் அருளம்மாள், தேவசகாயத்துக்கு]

எனக்கு அன்பும் பிரியமுமுள்ள எஜமானவர்களுக்கு தங்கள் மனைவி தோஸ்திரம் சொல்லி எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

இவ்விடத்தில் நானும் பிள்ளைகளும் தாயாரும் நாளது ௴ ௨௧-௨வரையில் சேமம். இதற்குமுன் இரண்டுகடிதமும் இன்றையத்தினம் ஒருகடிதமும் வந்து சேர்ந்தது. இதுவரையில் நான்வெளியே நடமாட்டமில்லாமல் வீட்டுக்குள் ளிருந்ததினாலே தங்களுக்குக் கடிதம் எழுதத் தடைப்பட்டேன். தாங்களிவ்விடம் விட்டுப்போன ஏழாம்நாள் அம்மையும் அக்காளும் அத்தானும் வந்துசேர்ந்தார்கள். பவுலுக்குச் சுரமடித்து ஏழெட்டுநாள் வரைக்கும் நல்ல சுகமில்லாமலிருந்தது. அம்மை வந்தபின்பு அதற்கு கைமருந்தாய் செய்துகொடுத்து நல்ல சுகமுண்டாயிருக்கிறது. இளையபிள்ளையும் நல்லசுகத்துடனிருக்கிறது. அக்காளும் அத்தானும் இவ்விடத்துக்கு வந்தமூன்றும் நாள் பிறப்பட்டுப் போய்விட்டார்கள். தாங்கள் எழுதியகடிதத்தில் அவ்விடம் தங்கள்தேகத்துக்குப் பிடித்துக்காண வில்லையென்றும் ஒருநாள்போகிறதென்று மெழுதினீர்கள். நீங்கள் இவ்விடத்தில் பிள்ளைகளோடேகூட இருந்துவிட்டு அவ்விடத்தில் தனிமையா யிருப்பதினாலும் ஒருவிடத்துக்கு ஒருவிடம் துவக்கத்தில் தேகத்துக்குப்பிடித்துக் கொள்ளாததுபோலிருக்கும். அதினிமித்தம் தேவனால் கொடுக்கப்பட்ட நல்லவேலையை விட்டு விடும்படியாக நினைக்கலாகாது. நாமாய்அப்படிப்பட்ட வேலையைத் தேடிப்போனால் கிடையாது. ஆகையால் கூடியமட்டும் அந்தவேலையைக் காப்பாற்றிக் கொண்டுவரு

வது நல்லது. எல்லாவற்றுக்கும் பின்பு நன்மையாய்க் காணப்படும். தாயார் ஊருக்குப் போகவேணுமென்று சொன்னதுக்கு நீங்கள் வருகிறவரையில் போகவேண்டாமென்று சொல்லி தடை செய்திருக்கிறேன்.

இவ்விடத்தில் நாங்களெல்லாரும் தேவகிருபையால் சேமம். அவ்விடத்தில் உங்களுடைய சேமத்தை யறிய ஆசையுள்ளவளாயிருக்கிறேன்.

௱-௱-வைக்கில் பந்துலுராயர் நாஸரோத்தூரிலிருந்து இவ்விடத்துக்கு ௨௧-௳ வந்து ௨௪-௳ இறந்துபோனார்.

செனுவரி ௴ }
௨௬ ௳ } இப்படிக்கு

(இந்தக் காகிதம் அத்தான் முனிசு ராயப்பபிள்ளையவர்கள் கை யெழுத்து.)

---

(மூத்த அண்ணாட்சி, சஞ்சீவிக்கு எழுதுகிறது—இந்தக் காகிதம் மிகவும் கிழிந்துபோய்விட்டது.)

மிகவும் பிரிய தம்பி,

நமதய்யாவுக்கு இன்னமும் நல்லசெச்சிதம் வரவில்லை. நீ யெழுதியதும் தம்பி J ஏசுதாசபிள்ளை எழுதியதுமான காயிதங்கள் வந்தன. உலையும் வந்தது. மூக்கிலிருந் தண்டாகும் இரத்தத்துக்குரிய மருந்துகள் இங்கிலிஷ் வயித்திய முறைப்படியே முன் செய்யப்பட்டது. இப்போது இரத்தமில்லை சரி......அதிக இரத்தம் குறைந்துபோனதால்ப் பெல......இரத்தம் ஊறவும் பெலனுண்டாகவும்வேண்டியது. கைப்பரிகாரமாய்த்தான் பார்த்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது. பால்க்கஞ்சியும் வைத்துக்கொடுக்கிறோம், நேற்றுக்காலமே நமதம்மையும் வந்தது பெரியவுதவி. கூடியமட்டும் பார்ப்போம். கருத்தர் கிருபையாயிருந்து பெலசுகந்தரவேணும்.

இப்போது சவ்வரிசி கோதுமை நொய்யரிசி ரொட்டி பிஸ்கோத்து கொஞ்சம்முந்திரிகைப்பழம் சீனி வாங்கியனுப்பவும், இப்போது இத்துடனே ஒரு ரூபாயும் அனுப்பி யிருக்கிறேன். இதற்கென்றே இந்த ஆள்வருகிறது.

சலவைக்குப்போட்ட துணிகள் வந்திருந்தால் கணக்குப் பார்த்துத் திட்டமாயனுப்பவும், வராவிட்டா லிருக்கட்டும், இனியாகட்டும்.

இப்போது சாமான் அவசரம். தபாற்காரனை நம்பத் தேவையில்லை. அவசரத்துக்குத் தக்கபடி ஆள் அனுப்புவதுதான் காரியம், மற்றப்படி முடியாது,

சிவனிலும் விசேஷமானதும் அய்யாவிலும் அருமையானதும் என்ன நமக்குண்டு, கருத்தர் நமக்குத்தந்த பெலத்துக்குத் தக்கபடி செய்யவேண்டியது

து கடமையல்லவா, தம்பி ஏசுதாசபிள்ளைக்குத் தெரிவிப்பாயென்று நம்புகிறேன்.

ரொட்டியிருக்கிறது. பாலுங் கொடுப்போம், உவைனுங்கொடுப்போம். அவ்விடத்திலிருந்து வரத்தக்கதுகளை யனுப்பு.

கொஞ்சம் உலர்ந்த வரங்கிபளுப்பக் கூடுமானாலும் நல்லது, அதினாலும் பிரியமுள்ளது செய்துகொடுக்கலாம் என்று நினைக்கிறோம். பசிதீவிரமும் சீரணமும் நன்றாயுண்டாயிருக்கவில்லை, எப்படியும் பெலனுண்டாயிருக்கப் பிரயாசப்பட்டுக் கொடுக்கிறோம். கருத்தர் கிருபைவேண்டும், இதுவரையும் கிருபைசெய்தவர் இன்னமுங் கிருபைசெய்வாரென்று நம்பி மன்றாடுகிறோம்.

சிவகிரிக்கு அனுப்பினகாகிதம்...சேர்ந்திருந்தால் பதில் அனுப்புவா......

மிகேல் அருளம்மாள் சுகமாயிருப்பது...பாலய்யாவுக்குச் சுரம்விட்டிருப்பதும்...பெரியஆறுதல், திரும்பச் சுரம்வரா......வெகு பத்திரமாயிருக்கவும் குயினைக் கொஞ்சம் சீனியில் கலந்து வேளை வேளை கொடுக்கவும், அத்தைவந்ததுமெத்தப்பெ...இதுமனதுக்கு ஒருதயிரியம்......வதும் இரட்சிப்பாராக.

சமதய்யா சுகவீனத்தைக்குறித்துத் தம்பிமாருக்குத் தெரிவித்துக்கொள்... இனிமேல் உனக்கு எழுதும் போது........றேன், கருத்தர் நம்மோடு......

1874 ஜனுவரி 26-உ

நல்லம்மாள்புரம் ............

---

[மூத்த் அண்ணாட்சி, தூத்துக்குடி பெரியபிள்ளைக்கு]

Nallammalpuram
28th January 1874.

My dear Son,

நேற்று இருட்டி $7\frac{1}{2}$ மணிக்கு நம்முடைய பிள்ளைகளும், மரிய வியாகுலமும், மாப்பிள்ளை ஞானப்பிரகாசம் பிள்ளையும் இவ்விடம் வந்து சேர்ந்தார்கள், உனது அன்புள்ள காகிதமும் இன்றுகாலையில் வந்து சேர்ந்தது, முந்தினகாகிதமும் முந்தநேற்று வந்து சேர்ந்தது, எல்லாம் எங்களுக்கு மிகுந்த சந்தோசத்தைத் தந்தது, ஆண்டவர் இம்மட்டுஞ் செய்த கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

மத-௱-௱-ஸ்ரீ அப்பா அவர்களுக்கு வர வரப் பெலன் வரவேண்டியது பலவிதமாய்ப் பெலத்துக்கும் இரத்த முண்டாவதற்கும் ஏற்ற வகைப்பரிகாரஞ் செய்து ஆகாரமுங் கொஞ்சங்கொஞ்சமாய்க் கொடுத்துவருகிறோம், நடமாட,

அதிகநேரமிருக்கப், பேசத், திராணியில்லை. உயிர்பிழைத்திருக்கிறது பெரியஅதிசயம். பிழைப்போமென்கிற நம்பிக்கை ஐயாவுக்கில்லாமல் அற்றுப்போயிருந்ததினாலும் இப்போது இவ்வளவுக்கு உயிரிருக்கத் தேவன் கிருபை செய்ததினாலும் நம்முடைய பிள்ளைகளை எல்லாங் கண்டபோது அவர்கள் வந்ததும் அவர்களைக் கண்டதும் ஐயாவுக்குப் பெரியஆச்சரியமும் ஆனந்தமுமாயிருந்ததால் மிகுந்த கண்ணீர் சொரிந்து பெலவீனத்திலுஞ் சந்தோஷத்தால் அதிர்ந்து நடுங்கினார்கள். கூடியமட்டும் பத்திரமாய்ப் பார்க்கிறோம். அம்மை தன் மாமனாரவர்களுக்கு வேண்டியதுகளைச் செய்து வருவதில் அதிக முயற்சியாயும் பிரியமாயுமிருக்கிறாள், இதிற்குறைவில்லை. சாப்பாடு நன்றாய்ச் செல்லவேணும். பாளையங்கோட்டைக்கு எழுதி ஒருபெட்டி உவைனும் வருவித்தேன், கோழிக்குஞ்சுப் பிருத்துஞ் செய்துகொடுக்கிறோம், ரொட்டி, பால் இதுகளும். கருத்தர் இந்தத்தடவையும் காப்பாற்றி யின்னமும் நீயும் ஏற்றவேளை கண்டுகொள்ளும்படிக்குச் செய்வாரென்றும் நம்புகிறேன். பேணிப் பார்த்தால் கருத்தர் இன்னமும் நமக்குச் சந்தோஷமுண்டாயிருக்கச் சேவனையும் சுகத்தையும் கொடுப்பார் என்றும் நம்புகிறேன். ஆந்தாளும் வந்தாள் போன ஞாயிற்றுக்கிழமை. இவ்விடத்தில் நான் காரியங்களை அதிகமாய் வெளிப் படுத்தவில்லை. ஆராமா யிருப்பவர்களுக்குத்தான் வெளிப்படுத்தினேன். மரிய வியாகுலம் வந்துவிட்டதினாலே உன் சாப்பாடும் தலைமுழுக்கும் சரியாய் நடக்க வகை செய்துகொள்ளவேணும், உன் காகிதப்போக்கு நீயும் உன் மனமுங் கூடயிருக்கிறதுபோலிருக்கிறது, முந்தின காகிதமும் என்மனதுக்கு ஒத்தபடியே கண்ணாடியிலே பார்த்துக் கண்டதுபோலிருக்கிறது. இதைக்குறித்து ஐயாவுக்குச் சொல்லிச் சந்தோஷித்தேன், பிறவி மன ஆவி சரியாய்த்தானே யிருக்கும் என்று சொல்லி அய்யாவுஞ் சந்தோஷப்பட்டார்கள். சகலத்தையும் ஆண்டவருக்கு ஒப்புவித்துக் காரியம் நேரிலேதுபோல நடப்பித்துக் கொள்ளுகிறது, நடந்து கொள்ளுகிறது. மற்றக் காரியங்களுக்கு இனித் தெரிவிப்பேன்.

கற்கண்டைக் குறித்தும் ஞாபகமாயிருப்பேன், நல்ல மலிவாய்ப் பார்த்து வாங்கி நீ யெழுதியபடியே செய்தனுப்பும்படி கருத்தாயிருப்பேன்.

இவ்விடத்து நாங்கள் உனக்கு அநேக வாழ்த்துதற் சொல்லுகிறோம்.

மேரியம்மாளுக்கு வந்ததுமுதல் ஒன்றும்விகற்பமாயில்லை. வந்தபோதிருந்த பெலவீனத்தின் படிதான், ஆனால் அவளுடைய முறண்டும் பிடிவாதமும்மெத்த, என்னிடத்தில் வரமாட்டாள். பார்ப்பாள் நான் பார்த்தபோது, நான் பார்க்கும்போது முகத்தைச் சாடையாய்த்திருப்பி வெகுண் போட்டுத்

கொள்வாள். மதுர சஞ்சீவிமாத்திரம் வெகுதாராளம், சந்தோஷம் பிரியம் இராத்திரி என்னோடேதான் அவன்படுக்கை. அன்போடும் அச்சத்தோடேந் திரிகிறான். அவனுடைய சின்னய்யா மைத்துனமார் இருவர் இவர்கள்கூட விளையாடிக்கொண்டிருக்கிறான். அவனைக் கண்டதும் மெத்தச் சந்தோஷம், ஆண்டவர் சுகத்தோடெங்கூட ஆசீர்வதிப்பாராக.

Yours sincerely
M. Savarirayan.

P. S. நான் பாளையங் கோட்டைக்கு சிலதுக்காக அனுப்பின ஆள் இன்று திரும்பிவந்தது, வண்டியிலிருந்து கொஞ்சக் கயிறும் அகப்பட்டது.

M. S.

---

நான் அந்தக்காலத்தில் எழுதின காகிதங்கள் அநேகமாய்த் தவறிப்போய்விட்டது. எக்காலமும் என்காயிதத்தை எல்லாரும் பிரியமாய்வாசிப்பார்கள். சவிசேஷபுரத்துக்கு ஐயாவுக்கு நான் எழுதுகிற காகிதங்களை ஐயா நல்லம்மாள் புரத்துக்கு அண்ணாட்சி வாசிக்கும்படி அனுப்புவார்கள். அண்ணாட்சி எந்தக் காகிதத்தையும் பத்திரமாய்ப் பேணி வைத்திருப்பார்கள். அப்படியிருக்க என் காயிதத்தையா தவற விடுவார்கள், விசேஷித்து அக்கறையாய் பேணிப் பார்த்துக் காப்பாற்றப் பார்க்கிற உயிரும் பொருளும் முக்கியமாய்த் தவறிப் போகிறது பூலோகத்தில் ஒருஇயல்பு, அப்படிப் போலத்தான் என் காகிதங்களும் தவறிப்போய்விட்டதாக்கும், அகப்பட்ட காகிதங்களை இங்கே அச்சடித்திருக்கிறது. ஐயாவுடைய சுகத்தப்பையறிந்தபோது, ஐயாவுக்கு ஒருகாகிதம் எழுதியிருக்கிறேன். அதை மூத்தஅண்ணாட்சி வாசித்துப்பார்த்து ஐயாவிடம் கொடுக்கும்படியாக அண்ணாட்சிக்கு 1—2—74 ல் ஒருசிறு காகிதம் அனுப்பியிருக்கிறேன். அண்ணாட்சிக்கு எழுதின இந்தச் சின்னக் காகிதம் இருக்கிறது. ஐயாவுக்கு எழுதின காகிதம் அகப்படவில்லை, ஐயோ! அதுதான் ஐயாவுக்குநேரே நான் எழுதின கடைசிக் காகிதமாயிருக்குமோ, அந்தக்காகிதம் காணோம். ஐயோ, இப்படித்தான் நான் இப்போ பார்க்க ஆசைப்படுகிற அநேக காகிதங்களைக் காணோம்.

---

(தேவசகாயம், மூத்த அன்னாட்டிக்கு)

செட்டிகுறிச்சி மடம், பகல் ௨ மணி, செவ்வாய்,
3rd February 1874

Revd. and dear Brother,

நான் பாளையங்கோட்டையிலிருந்து அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்திருக்குமே, நோத காரியமாய் நான் நேற்று ராத்திரி பாளையங்கோட்டையிலிருந்து திரும்பப் புறப்பட்டு லெவிஞ்சிக்குப் போகிறேன், அந்தவிபரம் எழுதினால் பெருகும், எழுதிப் பிரயோசனமில்லை, தாங்கள் சஞ்சீவிக்கு எழுதிய கடிதம் நேற்றுக் காலையில் வந்துசேர்ந்தது, அதைவாசித்து என்மனம் அடைந்த கஸ்தி சொல்ல முடியாது. நாங்கள் எல்லாரும் இருந்தும் தாங்கள் ஒன்றியாய் எல்லா வருத்தங்களையும் பிரயாசத்தையும் பாரத்தையும் சகிக்க வேண்டியதாய் எங்களால் யாதொரு உதவியும் இல்லாமல் இருக்கிறதும் என்மனதுக்கு சொல்லமுடியாத வியாகுலமாய் இருக்கிறது. எனக்கு அன்றுடச்செய்தி யனுப்பும்படியாக சஞ்சீவிக்குச் சொல்லியிருக்கிறேன், தாங்கள் அவனுக்கு அப்படியே செய்யனுப்பப் பிரார்த்திக்கிறேன். நாலைந்து தினத்தில் தெற்கே திரும்ப எண்ணியிருக்கிறேன், கர்த்தர் ஏழைப்பாவிக்கு இரங்குவார் என்ற நம்பிக்கையினால் கண்ணீரின் ஜெபத்தினால் எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புக் கொடுத்துப் புறப்பட்டு வந்திருக்கிறேன். ஆண்டவர் இரக்கமாய் ஐயாவுக்கு நல்லசுகம் அருளுவார் என்றும் சீக்கிரம் அவ்விடத்துக்கு வந்து சந்தோஷமாய் திரும்பலாமென்றும் கருத்தருக்குள் நம்பிக்கையாய் இருக்கிறேன், மூக்கிலிருந்து இரத்தம் வருகிறதற்குப் பரிகாரமான சில குறிப்புகளை ஒரு இங்கிலிஷ் வயித்தியப் புஸ்தகத்தைப் பார்த்து எழுதியனுப்பியிருக்கிறேன்.

என் பணிவான தோத்திரம்

ஊழியன், தேவசகாயம்

1 தேகத்தை சூடாக்கக்கூடாது,

2 பால் சவ்வரிசி முதலிய போசனம் நல்லது.

3 உமியினில் தண்ணீர் கலந்து கொஞ்சம் இலுமிச்சம் பழச்சாறு அல்லது சீமைக்காடி ஊற்றி கொஞ்சம் கொஞ்சம் கொடுத்து வரலாம்.

4 குவயினைன் முதல் தரமான மருந்து.

5 எப்போதும் கூடியவரை கொஞ்சம் தலைசாய்த்துக்கொண்டு நட்டமாகவே இருக்கும்படி பார்க்கவேண்டும். காலைப் புதுப்பால் அவ்வளவு சூடுள்ள தண்ணீரிலும், வசம்பு வெது வெதுப்பான தண்ணீரிலும் மூக்கிலைவைக்கவேண்டும்.

6 இளந் தலங்களைக் கொஞ்சநேரம் குளிர்ச்சியான தண்ணீரில் மூக்கி வைத்திருந்தால் மூக்கினின்று வருகிற இரத்தம் உடனே நின்றுபோம். இது தப்பாத கைகண்ட பரிகாரம்.

7 மூக்கில் உறைந்திருக்கும் இரத்தத்தை தோண்டியாவது தேய்க்கவாவது கிள்ளவாவது கூடாது. தானாய் விழுந்து போகுமட்டும் அப்படியே இருக்கவேண்டும்.

8 தலையை ஒருபோதும் குனியப்போடக் கூடாது.

இரத்தம் நின்றுபோன பிற்பாடும் அடிக்கடி காலை வெந்நீரால் கழுவித் துடைத்துவர வேண்டும்.

9 உவயினும் துவயினும் சூடில்லாத பலமான போசனமும் வழக்கமாய் சாப்பிட்டு வரவேண்டும்.

---

3rd February 1874
Palamcottah.

Rev. and dear Brother,

தாங்கள் போன மீ௴ ௨௧-௳ அனுப்பிய கடிதம் சேர்ந்து வந்துசேர்ந்தது இளைய அண்ணாச்சியவர்களும் திருநெல்வேலி அண்ணாச்சியவர்களும் பார்த்தார்கள். கர்த்தர் காப்பாற்ற அவரை முன்னிட்டுச் செய்யவேண்டியதை நாம் செய்தால் அவர் சுகம் தருவாரென்று நம்புகிறேன். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை, அவருக்குச் சித்தமுமுண்டே.

நோத அவசரமாயிருப்பதால் சிவகிரிக்கு இன்று விடிய அண்ணாச்சி போகிறார்கள், மற்றப்படி போகமாட்டார்கள், ஐந்து ஆறு நாளுக்குள் திரும்பிவிடுவார்கள். அடிக்கடி ஐயாவுக்கிருக்கும் சுகத்தை நான் தப்பாமல் எழுதி அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள்.

இரசலை வீட்டுக்கு வரவழைத்துப் பார்ப்பீர்களென்று நினைக்கிறேன் கர்த்தர் கேள்பார் என்று விசுவாசிக்கிறேன். வேண்டியதற்கு எழுதவும் மூக்கில் உறைந்த இரத்தத்தைப் பிய்த்துப்போடவே கூடாது, காய்ந்த இரத்தப்பொருக்குத் தன்னாலே விழவேணும். நான் இதைப் பற்றி முன்னும் எழுதியிருந்தேன்.

நானாவது திருநெல்வேலி அண்ணாச்சியாவது சீக்கிரம் அங்குவரப் போகிறோம்.

இரசர் பார்க்கிறதாச்சே, அவர் செய்கிறதென்ன, சொல்லுவதென்ன. அடிக்கடி கடிதம் எழுதப் பிரார்த்திக்கிறேன், நான் காலைக்கழித்து உங்களுக்

குத் திரும்பவும் யெழுதுவேன்.

கர்த்தர் நமக்குச் சந்தோஷங் கட்டளை யிடுவாராக.

நான் ஐயாவுக்கும் அம்மைக்கும் தங்கைகளுக்கும் மதினிக்கும் தாழ்மையாய்த் தோத்திரஞ் செய்கிறேன்.

அம்பாசமுத்திரத்து அண்ணாச்சியவர்களுக்கும் கூனியூர் அண்ணாச்சியவர்களுக்கும் திருநெல்வேலி அண்ணாச்சி இன்று தெரிவித்திருக்கிறார்கள்,

Yours obedient and affectionate

T. S. Sanjeevy.

P. S. ஏகநாதனுக்குக் கல்விச்சாலையில் வைசூரி கண்டிருக்கிறது, லேசுதான், மற்றயாவரும் இவ்விடத்தில் சேமம்.

(The Rev. M. Savariroyan, Nallammalpuram).

---

(மூத்த அண்ணாட்சி, தேவசகாயத்துக்கு)

1874 பெப்புருவரி 4-உ

நல்லம்மாள்புரம்

மிகவும் பிரிய தம்பி

நான் இதுமுன்னெழுதி யனுப்பின காகிதம் உனக்கு வந்துசேர்ந்ததுஞ் சேராததுந் தெரியவில்லை,

நேற்றுச் சாயுங்காலம் உனது பட்சமுள்ள காகிதம் வந்தது, நமதய்யா அவர்களுக்கு அனுப்பின காகிதத்தையும் வாசித்துக் காண்பித்தேன், அய்யா படுக்கையிலேதானிருக்கிறார்கள், வாசிக்கவும் பதில் எழுதவும் தற்சமயத்தில் ஏதுவில்லை. தேவசித்தம் நீ யெழுதியபடிக்கு வேலைக்காரியத்துக்கும் மிகேல் அருளம்மாளையிட்ட காரியத்துக்கும் உன் மனதுக்கு எது நலமென்று தோன்றுகிறதோ அந்தப்படி நடந்து கொள்ளுகிறது நலமென்றும் கருத்தர் எல்லாம் நலமாயிருக்கச் செய்வாரென்றும் உத்தரவு சொன்னார்கள், இப்படியே நானும்

இப்போது நமதய்யாவுக்குச் சுகவீனமும் பெலவீனமும் அதிகமாயிருக்கிறது. ஜனுவரி 18-ம் உ நாசியிலிருந்து அதிக இரத்தப் பாய்ச்சலுண்டானதினாலுண்டான பெலவீனங் கொஞ்சமல்ல, பெலனுஞ் சுகமும் வருவதற்காகப் பிரயாசப் பட்டுக்கொண் டிருக்கையில் மறுபடியும் ஜனுவரி 29-ம் உ நாசியின் வழியாய் இரத்தப்பாய்ச்சலுண்டாயிற்று, முன்னும் பின்னும் இரண்டுதடவை அதிக இரத்தம் போய்விட்டதினாலே முந்தின பெலவீனத்திலும்விட இப்போது அதிக பெலவீனங் காணப்பட்டு

ருக்கிறது, டாக்டருக்குத் தெரிவித்து மருந்து வாங்கிக்கொடுத்தும் அவரையும்
வருவித்துப் பார்த்துக்கொள்ளச் செய்து மிருக்கிறது, அவர்: மோசமில்லை,
பெலவீனம் நீங்கவேண்டியது என்று மருந்துங்கொடுத்து சாப்பாடுகாரியம்
இப்படி யிப்படி நடக்கச் செய்யவுஞ் சொல்லித் தந்திருக்கிறார், கருத்தர்
கிருபையாயிருந்து நமக்கு ஆறுதலுஞ் சந்தோஷமும் ஆதரவுமிருக்க ஐயாவுக்
குச் சுகந்தரப் பிரார்த்திக்க வேண்டியது, என் மனதுக்குப் பெரிய கவலையும்
பயமுமிருக்கிறது, நாளுக்குநாள் பெலன் வந்தால் என் மனதுக்குத் தயிரிய
மிருக்கும். சாப்பிடக் கொடுக்கும் பதார்த்தங்களைப் பிரியமாய்சாப்பிடவும் இரு
க்க எழுந்திருக்கவும ஏதுகரப்படவேண்டும். இதைக் குறித்துத் தம்பி தரும
ராதசஞ்சீவிக்கு எழுதியிருக்கிற காகிதத்தைப்பார்த்து விவரமறிந்து கொள்ள
வேண்டியது—அவசரம்,

நீ யெழுதியபடிக்கு ஒருநாளை வழிவந்து பார்த்துப்போனால் நல்லது
நேரே நல்லம்மாள்புரம் வந்து சேரவும். தேவசித்தந் தெரியவில்லை, ஐயாவு
க்கு எல்லாரையும் பார்க்கப் பிரியந்தான், எனக்கும் அப்படியே. மற்றக் கா
ரியங்களைப் பற்றி இப்போ தெழுத நேரமில்லை.

Yours sincerely,
M. Savarirayan.

P, S, மற்றத் தம்பிமாருக்கும காரியந் தெரிந்திருக்க வேண்டியதற்காக
இத்துடன் சுருக்கமாய் எழுதியிருக்கிற காகிதங்களை யனுப்பிவிடவும்,

M. S.

(M. R. R, J. D. Savariraya Pillay, Palamcottah).

---

Tinnevelly, 4th February 1874

My Dear Brother,

நமதய்யா அவர்களுக்குச் சற்று சுகவாயிருக்கிறதாகவும் ஆயாசமும்
பலவீனமுமிருக்கிறதாகவும் சாப்பாட்டில் அவ்வளவு பிரியந் தோன்றாதது
கவும், ஆனாலும் டாக்டர் நிரம்பத் தைரியஞ் சொல்லுகிறதாகவும் நேற்றுத் தபா
ல் ஞானமுத்தம் வசம் யாக்கோபுப்பிள்ளை காகிதம் வந்ததாய்ச் செய்தி கேட்
டேன். கருத்தர் இந்தத் தருணத்துக்குச் சுகமும் பெலனுங் கொடுக்கக் கிரு
பைகூர்ந்தருள நாம் பிரார்த்திக்கவேண்டியது. என் மனசுக்கு பிரமாயகம்
உன்னிடத்திலிருந்து காகிதங்கொணர்ந்தது முதல் அமரிக்கையில்லை. நாம்

முற்றுமுறுக்காமல் தெய்வசித்தத்துக்கு அடங்கியிருக்க வேண்டியதுதானே.

*   *   *   *   *

அவ்விடத்துக் காரியாதிகளை யெல்லாம் பதஷ்டமில்லாமல் அமரிக்கையாய் கருத்தருக்குள் தொடங்கி நடப்பிக்கிறதா யிருக்குமென்று யெண்ணுகிறேன், கருத்தர் தமதாவியைத் தந்து நடத்துவாராக,

சகலத்தையும் கிரமப்படுத்தி நடந்தேற மார்க்கத்தில் கொணர்ந்து அப்புறம் ஜாப் பெற்றுக்கொண்டு வந்துபோகவேண்டியது அவசியம்.

*   *   *   *   *

இப்படிக்கு

J. Savarirayan.

(M. R. Ry., J. D. Savariraya Pillay Avl., Manager, Sivaghiri, Sankaranainarcoil.)

---

௲௮௱௭௪—ஷூ பெப்புருவரி ௫—௨, நல்லம்மாள்புரம்

மிகவும் பிரியமுள்ள தம்பி M. சவரிமுத்துப்பிள்ளைக்கு நமதாண்டவருடைய ஆசீர்வாத முண்டாவதாகவும்,

இப்பவும் இவ்விடம் யாவரும் தேவகிருபையினாலே சுகமேயிருக்கிறோம். அவ்விடத்துச் சுகசெய்திக்குத் தெரிவிக்கவும் விரும்புகிறேன். இது நிற்க. மிகவும் பிரிய தம்பீ,

இப்போது இவ்விடத்தில் நமது அன்புள்ள ஐயா அவர்களுக்கு நல்ல சுகமில்லை, நாளடைவினுண்டாயிருந்த பெலவீனம் தெரியுமே, ஜனுவரியீ ௪-௨ இவ்விடம் நல்லம்மாள் புரத்துக்கு வந்தார்கள். நான் சங்கத்துக்கு வந்திருந்தபோது நமதய்யா இங்கேதானிருக்கிறார்கள், நான் திரும்பி வருமட்டும் இருக்கவுங் கேட்டிருந்தேன் அந்தப்படிக்கு ஐயா நான் இங்கே திரும்பி வரும்போது இருந்தார்கள். நான் சனிக்கிழமை இராத்திரியிலே பிரயாணம் பண்ணி விடிய நல்லம்மாள் புரத்துக்கு வந்து சுகத்துடன் எல்லாரையுங் கண்டு பின்பு அதிசயபுரத்துக்கு சற்குருவைக்காகப் போயிருந்துவிட்டு திரும்பி ஞாயிறு சாயுங்காலம் ஆறுமணிபோலுள்ள நேரத்தில் திரும்பிவந்தேன். வரும்போது நமதய்யாவுக்கு நாசியின் வலது பக்கத்து துவாரத்து வழியாய்ப் புண்ணுக்குடைந்தாற்போல இரத்தம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது, நான் வருவதற்குச் சற்றுமுன் 5½ மணிபோல இரத்தம் வெளிப்பட்டதாம். வந்தவுடனே காரியத்தைக் கேட்டுக் கண்டறிந்து, தெரிந்தபடிக்கு மருந்துகள் பிரயோகித்தோம், இரத்தம் தடையில்லாமல் அதிகமா யிழைவிடாமல் வ

ந்துகொண்டேயிருந்தது. கொஞ்சமல்ல அதிக இரத்தம்—நல்ல சுத்தமா
னது. கடைசியாகத் தேவகிருபையினாலே இருட்டி 9½ போல இரத்தம் ஒரு
மட்டு நின்றது. அந்த மட்டில் படுக்கையில் வைத்து செய்யத் தக்கதுகளைச்
செய்து கொண்டிருந்தோம், இம்மட்டில் மனதுக்கு ஒருவாறு ஆறுதலு
க்கு ஏதுவாயிற்று. ஆனால் பெலவீனம் மிகவும் அதிகமாயிருந்தது இந்
தப் பெலவீனத்துக்கு ஏற்ற பக்குவமாயுள்ள சாப்பாடுசெய்து வயித்திய
ருங் குறித்தபடிக்குக் கொடுத்துக்கொண்டு வந்தோம். படிப் படியாய்ச் சற்று
பெலன் வந்துகொண்டும் இரத்தம் சரீரத்திலூறிக் கொண்டுமிருந்தது. இப்ப
டியிருக்க, நாளது மீ ஜனுவரி மீ ௨௯-ல் ௯ மணிபோல காலையில் பத்திய
ஞ்சாப்பிட்டிருக்கையில் மறுபடியும் ஷெ நாசித்துவாரத்திலிருந்து இரத்த
ம் வெளிப்பட்டது. பின்னுஞ் செய்யவேண்டிய மருந்துகளைச் செய்தோம்
தேவகிருபையால் பகல் ஒருமணி நேரத்துக்குமேல் இரத்தம் நின்றது. அ
தில் இரத்தம் முன்னும் பின்னும் பெலவீனமான சரீரத்தினின்று போய்வி
ட்டதினாலே முந்தின பெலத் தாழ்ச்சியிலும்விட அதிகப் பெலத் தாழ்ச்சியு
ண்டாயிற்று, இதோடேகூட நெஞ்சப்புறத்திலும் மிகுந்தவலி. இந்த வலி ஒ
ருவாய்வுதான் இது பலவிடத்திலும் மாறி மாறி வருத்தஞ் செய்கிறதும், சாப்
பாடு பசிதீபனமில்லாமற் பண்ணுகிறதும், ஓங்கார முண்டாகிறதும், ஊடே
ஊடே விக்கலுண்டாகிறதும், தேகமெல்லாம் புண்போல நோகிறதும், இப்படி
யப்படி திரும்பிப் படுக்கு முன்னும் பின்னும் வருத்தமும், படபடப்பும், அதிக
த் தளர்ச்சியுமாயிருக்கிறது இடையன்குடி டாக்டரை வருவித்துப்பார்த்ததுக்கே
ட்டதில்; மோசம் வராது, பெலன் வரவேண்டியது, போஷிப்புக்குரியதுகளைப்
பக்குவமாய்த் திட்டப்படி நடத்தவேண்டும் என்றுஞ் சொல்லி மருந்துங் கொ
டுத்து வருகிறார் கர்த்தருடைய கிருபை இரக்கத்தினால் உடனே சுகமாம் அவ
ரை நம்பி வேண்டுகிறோம். என் மனதுக்குண்டாயிருக்கும் கவலையும், மலை
வும், ஏதினாலென்றால் வரவரப் பெலனுண்டாகாமலிருப்பதும் போஷிப்புக்
காரியங் குறைவுப் படுவதும், சரீரம் ஒடுங்குவதும், மேற்குறித்த வியாதி வரு
த்தமுமே. ஆண்டவர் இந்தச் சமையத்துக்கு இரங்கி விரட்சித்தால் நமக்கு
மிகுந்த சந்தோஷமும், ஆறுதலும் ஆதரவு முண்டாயிருக்கும். அவர் சித்தம்
நமது பாக்கியம். அவசரத்தில் முடிக்கிறேன்.

இப்படிக்கு

உமது பிரிய சகோதரன்

M. Savarirayan.

[ஏசுதாசபிள்ளை, மூத்த அண்ணாட்கிக்கு]

Tinnevelly
5th February 1874.

Revd. and dear brother,

சமதய்யா அவர்களுடைய சுகவீனக்குறித்தறிய மிகுந்த வாஞ்சையாயிருக்கிறேன். தேகம் முக்கியமாய்த் தலை உஷ்ணமாகாதபடிக்கு குளிர்ச்சியாயிருக்கும்படி பார்க்க வேண்டியது. Wine வெகுமட்டாய்க் கொடுக்க வேண்டியது. ஏனென்றால் அது சிரசை யுஷ்ணமாக்கும். டாக்டர் பார்த்து வருவது தான் எங்களுக்கு ஒரு தைரியம்.

தம்பி J. D. S. யும் ரம்பக் கவலையோடே தான்போயிருக்கிறான். சமீன்தாருக்குப் பட்டத்துக் குத்தரவு வந்து தம்பிகூட இருந்து சார்ஜ் வாங்கவேண்டியதாய் நேரிட்டது.

இங்கே மார்டன் துரை வந்திருக்கிறார். ஒரு வாரத்துக்குள் பரீட்சை முடிந்துபோம். அப்புறம் அகத்தியம் புறப்பட்டு வருவேன். ஆகும் காரியங்களுக்கு எழுதியனுப்ப உத்தரவாக வேண்டியது.

இவ்விடத்தில் கைக்குழந்தை தவிர மற்ற யாவருஞ் சேமம்.

இப்படிக்கு, ஊழியன், ஏசுதாசன்.

P. S. அம்பாசமுத்திரம் கூனியூர் அண்ணாவிமாருக்குஞ் சங்கதி தெரியும்படி யெழுதியிருக்கிறேன்.

J. S.

---

Edeyengoody,
February 5th 1874.

Respected and Dear Sir,

எனக்கும் டாக்டரவர்களுக்கும் தாங்க ளனுப்பிய காயிதங்கள் வந்து பார்த்தோம்.

போத்தி ஐயா அவர்களுக்கு இருக்கிற குணங்களுக்கு தாங்கள் எழுதியிருந்ததை வெகு கூர்மையாய்ப் பார்த்து கவனித்து ஏற்ற மருந்து காஜு கோத்தனுக்கு அனுப்பியிருக்கிறது. மருந்து அவ்விடம் வந்து சேர்ந்தவுடனே ஒரு தடவையும் காலை காலை மதியம் சாயங்காலம் மூன்று தடவையும் ஆக நாலுதடவையும் கொடுத்து காலைக்குப் பகல் இராத்திரி இருக்கிற குணங்களை நன்றாய்க் கவனித்து காலை [illegible] உதயத்தில்

விபரமாய் எழுதியனுப்ப வேணுமென்று டாசரவர்கள் சொல்லுகிறார்கள் இப்போதிருக்கிற குணங்கள் இந்த மருந்தால் சுகமாகுமென்றும் சொல்லுகிறார்கள். பிராந்து முதலானது விக்கல் சந்திப்பு முதலானது விடுமட்டும் கொடுக்கக்கூடாதென்றும் பழையபடி கஞ்சி பால் விட்டுக்காய்ச்சி நன்றாய் ஆறவைத்துக் கொடுத்து வரவேணுமென்றும் சொல்லுகிறார்கள். ஷை கஞ்சியில் (போர்ட்டு ஒயன்) விடலாம்.

தாயார் நாலு ஐந்து நாளாய்ப் புறப்பட்டு அவ்விடம்வந்து போத்தி ஐயா அவர்களைப் பார்க்கவேணுமென்று யோசித்தும் வியாதியினாலும் பெலவீனத்தினாலும் தடைப்பட்டு வண்டி கிடைக்குமட்டும் காத்திருந்தாள். ஆனால் இப்போதைக்கு வண்டி கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஆதலால் நாளைக் காலையில் புறப்படவோத் தீர்மானித்திருக்கிறாள்.

பரம தகப்பனே போத்தி ஐயாவுக்கு நல்ல சுகத்தையும் பெலத்தையுங்கொடுத்துக் காப்பாற்ற வேணுமென்று அன்றாடகம்பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

தங்களின்

In haste                    தா. பாக்கியம்

P S இவ்விடத்து ஒழியாத வேலைத்தொல்லையால் அவ்விடம் நான் வர அட்டிபட்டிருக்கிறேன். சாலோமோன் என்றி எல்லாம் சொல்லுவான் அம்மையும் வந்து அறிவிப்பாள். தாங்கள் ஆயாசப்படக்கூடாது? நான் இங்கிருந்தாலும் என் மனம் இரவும் பகலும அங்கேயே யிருக்கிறது.

(The Rev. M. Savarirayan, Nallammalpuram.)

---

[மூத்த அண்ணாட்சிக்கு சஞ்சீவி]

6th February 74.
Palamcottah.

Reverend and dear brother.

நான் செவ்வாய்க்கிழமை தபால்காரன் வசம் அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்திருக்கலாமென்று நினைக்கிறேன்.

ஐயா அவர்களுடைய சுகவீனாப்பற்றித்தான் மிகுந்த மனக்கலக்கமாயிருக்கிறது. தங்களுடைய கடிதம் வந்தபின் திருநெல்வேலி திரசரிடம் திரும்பவும் இரத்தம் புறப்படவேண்டிய தென்னவென்று கேட்டதற்கு தெறிவுபட்ட நாய்ப்பு சரியானபடி பொருந்தாததனாலென்று சொன்னார்

நான்முன் எழுதியபடி மூக்கின்மேலையாவது உள்ளேயாவது கையிடக் கூடாது, உறைந்த இரத்தத்தைக் கையால் தன்னாலே விழுமட்டும் பிய்க்கவுங் கூடாது. கால் அலம்புவது வெளிக்கிருந்தபின் குளிர்ந்த ஜலமாயிருக்கவேணும்: அப்படிக் குளிர்ந்த ஜலத்தால் வெளிக்கிருந்தபின்னும் மற்றும் வேளைகளிலும் காலலம்புவது இரத்தம் மறிபடக் கை கண்டதென்று ஒரு இங்கிலீசு வைத்தியரெழுதுகிறார்.

தாங்கள் வேண்டியதற்கு உடனே தபாலில் கடிதமனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஒன்றும் ஐபாவுக்கு வேண்டியதாயில்லையா.

இயாக்கோபுப்பிள்ளை கடிதம் வந்தது செவ்வாய்க்கிழமை அன்று அதில் ஐபா அவர்களுக்கு அரோசிப்பும், பசித்தாகமுமில்லை யென்று யெழுதியிருந்தார். இப்போது எப்படியிருக்கிறது. குளிர்ந்த ஜலந்தானே கும்ப்பதற்கும் கொடுப்பது நல்லது யென்று நினைக்கிறேன். சுடுதண்ணீரைப் பார்க்கிலும் வாந்திக்கு நல்லது ஆனால் ஐபாவுடைய பலவீனம் யெப்படியிருக்கிறதோ. தூரத்திலிருப்பதால் நிச்சய அறிவில்லை. கலக்கமாயுமிருக்கிறது.

மாடன்துரை வந்திருக்கிறார். மற்றப்படி ஐபாவைப் பார்க்க வந்திருப்பேன். சீக்கிரத்தில் எப்படியும் வருவேன். கர்த்தரே சந்தோஷத்தைக் கட்டளையிடும்.

இன்று தபால்காரனிடத்தில் ஐபாவுடைய சுகசெய்தியைப் பற்றி விசாரித்தேன். சற்று சுகம் யென்று இயாக்கோவுப்பிள்ளை யவர்கள் சொன்னார்கள் யென்றான், நல்லமான்புரம் அவர்கள் போயிருந்தார்களென்றான்.

இவ்விடத்தி லிருக்கும் ஒருவயித்தியப் பொஸ்தகத்தில் (Peruvian bark) பெருவியன் பட்டைத்தூளைக் கொடுக்கலாமென்று சொல்லுகிறான் (quinine) கொயினைப்பொடி அந்தப் பட்டையிலிருந்து எடுக்கிற பொடி ஆவதால் அதைக்கொடுக்கலாமென்று இளைய அண்ணாட்சியவர்கள் சொன்னார்கள். எப்படியும் நிசர் அவ்விடத்திலிருப்பதால் காரியம் தங்களுக்குத் திட்டமாய்த் தெரியலாகும். தாங்கள் இதற்கு முன் யெழுதிக்கொண்டது போலவே இன்னமும் யெழுதப் பிரார்த்திக்கிறேன்.

இயேசுதாசனுக்கு வைசூரி சமித்திருக்கிறது யாவருஞ்சேமம் நான் ஐபா அவர்களுக்கும் அம்மைக்கும், தங்களுக்கும் மதினியாரவர்களுக்கும் தாழ்மையாய்த் தோத்திரம் செய்கிறேன்.

Yours obedient and affectionate

T. S. Sanjeevy.

501

[மூத்த அண்ணாட்சிக்கு, சஞ்சீவி]

7th February 1874
Palamcottah

Revd: and Dear Brother,

இன்று தங்களுடைய கடிதம் வந்தது 5-உ யெழுதியது, பார்த்துக்கொண்டு திருநெல்வேலி அண்ணாச்சியவர்களுக் கனுப்பி அங்கிருந்து சிவகிரிக்கு அனுப்பப் போகிறேன். மாடன்துரை வந்திருக்கிறதாலும் என் பள்ளிக்கூடமேனேஜர் குணங்கெட்டவராயிருப்பதாலும் உடனே புறப்பட்டுவர வருத்தமாயிருக்கிறது.

எப்படியும் அடுத்த வாரம் வர நினைக்கிறேன் — மக-ள-ஸ்ரீ திருநெல்வேலி அண்ணாச்சியவர்களும் அப்போது மூந்த அல்லது பிந்திவருவார்களென்று நினைக்கிறேன்.

வேண்டிய சாமான்களுக்கு ஆள் அனுப்பவும், உடனே நான் வாங்கி அனுப்புகிறேன்.

நேற்று நான் எழுதியதில் உவையின்,நோய் முதலியவைகளுக்குக் குறித்திருந்தேன் என்று எழுதியிருக்கிறீர்கள், எனக்கு நேற்று மூந்தாம்நாள் ஒரு கடிதமும் வரவில்லை. இந்த திங்கள் கிழமை தான் ஒரு கடிதம் தங்களுடையது வந்தது சிவகிரி அண்ணாச்சி யிவ்விடத்தி லிருக்கும்பொழுது; குளோரிடையின் தேவை, கொஞ்சம் கொடுத்தால் வயிற்றுப்போக்கு அதிகப்படாமலிருக்குமென்பது போல யெழுதியிருக்கிறீர்களே. ஐயாவுக்கு வயிற்றுப் போக்கும் அதிகமிருக்கிறதோ.

வாந்தி, ஓங்கரிப்பு என்று எழுதியிருக்கிறீர்களே. ஐயாவும் பலவீனமாயிருக்கிறார்களோ, ஆயாசமும் படபடப்பு மிருக்கிறதாமே, அப்படியானால் லாடனம் கொடுக்கப்படாது. குளோரிடையினும் அப்படியே. எப்படியும் நிசரோடு யோசித்து தங்களுக்குப் பிடித்தமானால் வெகு சொற்பமாய்க்கொடுக்கவேணும்.

மருந்துவேண்டுமானால் செய்தியனுப்புங்கள். நான் வாங்கியனுப்புகிறேன். ஸீசாவும் அனுப்பினால் நலம். இந்தக் கடிதம் கண்டவுடன் சாமான்கள் அவசரமானால் ஆளனுப்பவும்.

கர்த்தர் நமக்கு மருந்தாயிருந்து ஐயாவுக்குப் பலன் தரக்கடவர்— என் தாழ்மையான தோத்திரம்.—நேற்று ஞானவுதம் வசம் கடிதம் அனுப்பியிருக்கிறேன்.—என் பணிவான தோத்திரம்

Yours very affectionately, — T. S. Sanjeevy.

மூத்த அண்ணாட்சிக்கு

Edeyengoouy
7th February 1874.

Respected and Dear Sir,

காயிதம் வந்து பார்த்துக்கொண்டோம்.

போத்தி ஐயா அவர்களுக்கு இம்மட்டும் தேவகிருபையால் கொஞ்சம் சுகத்துக்கு வந்தது பெரிய சந்தோஷம். இன்னமும் நம்முடைய பரம தகப்பன் போத்தி ஐயாவுக்கு பூரண சுகத்தையும் பெலத்தையும் கட்டளையிடுவாராக.

இப்போது ஐந்துகோத்து மருந்து அனுப்பியிருக்கிறது மதியம ஒரு தடவை, சாயந்திரம ஒருதடவை, நாளைக்கு மூன்று தடவை கொடுக்கவும பத்தியம முன்போல் தான், தேவையானதைச் சாப்பிடலாம திங்கள் அதிகாலையில் மருந்துக்கு ஆள் அனுப்பவேண்டியது.

நாளைச்சாயந்தரம் நான் வந்து போத்தி ஐயாவை பார்த்துத் திரும்பலாமென்று எண்ணியிருக்கிறேன்.

எல்லாருக்கும தோத்திரம்.
அவசரத்தில் எழுதுகிறேன்

தங்களின்
D. Pakyam.

---

Tinnevelly
8th February 1874.

Revd. Brother,

தாங்கள் தம்பி சஞ்சீவிபேருக் கனுப்பிய 5-ம் 7-ம் தேதி காகிதங்களைப் பார்த்துக் கொண்டேன். ஜெபத்தைக் கேட்கிற நமதாண்டவர் தோத்திரப் பிதாவுக் கநுக்கிரகித்த கிருபையை நமது அய்யா அவர்களுக்குங் கட்டளையிட க்ஷிமிஷந்தோறும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். எப்போ கொஞ்சம் இவ்விடத்தில் வெளி காணுதோ உடனே புறப்பட்டு வருவோம் மார்ட்டின் துரை சோதனை வியாழன் வெள்ளியிருக்கும், வெள்ளிக்கிழமை சாயங்காலமே புறப்படத் தயாராயிருக்கிறேன். வேண்டுங் காரியங்களுக்குடனே கூலியாள் அனுப்புவது தானுத்தமம். கருத்தர் நமக்கிரங்குவாராக.

இன்ன எழுதுவதென்று எனக்குத் தோன்றவில்லை வகைக்குழுக்களுக்கும்

நல்ல சுகமில்லை. கருத்தர் நம்மெல்லாரையும் காப்பாற்றித் தமது தயவுள்ள சித்தத்தின்படி நடத்துவாராக.

ஊழியன்

ஏசுதாசன்.

தாங்கள் 5-டேயும் 7-டேயும் எழுதியனுப்பிய கடிதங்கள் வந்தன. விபரமாய் ஐயாவுடைய சுகவீனைப்பற்றி அறிந்தேன். இப்போது திருநெல்வேலிக்குவந்த அண்ணாச்சி யவர்களுக்கும் கடிதங்களைக் காண்பித்து செலவிற்க்கும் அனுப்பப் போகிறோம்.

கர்த்தர் கிருபை செய்வாராக.

நான் திடீரென்று வருவேன். நேற்று நான் எழுதிய கடிதம் இன்று வந்திருக்குமென்று நினைக்கிறேன். ஆளனுப்பவும் சாமான்களுக்குச் சாபிதாக் குறித்து உடனே அனுப்புவேன். லட்டணம் கொடுக்கக் கூடாதென்று அண்ணாச்சி யவர்களும் நினைக்கிறார்கள். குளோரிலைடயின் வாங்கியனுப்பலாம், உவயினும் அப்படியே. குளோரிலைடயினை வெகு சொற்பமாய்த்தான் கொடுக்கவேணும். உவயினும் அதிக அளவாகக் கொடுத்திருக்கக் கூடாதென்று அண்ணாச்சி யவர்கள் கிரசிடம் அறிந்தபடி சொல்லுகிறார்கள். உஷ்டணம் அதிகரித்துக் கொஞ்சமாய்த் தேகத்திலிருக்கும் இரத்தத்தைக் கொதிக்கச்செய்து பழையபடி இரத்தத் தோற்றத்திற்கு இடமாகுமாம். போஜனமும் அதோடே உவயினும் கொடுப்பது நலம்; அதிக உஷ்டண பெலவீன கோத்தில் கொண்டுதான் வார்த்தி ஓங்கசிப்பிருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.

ஐயாவுக்கு எந்த போஜனம் பிரியம், எந்த மருந்து நலம் போல தோணுதென்று அவர்களுடைய விருப்பத்தையும் அறிந்து செய்ய வேண்டியது. இவ்விடம் நாங்கள் ஐயாவைப் பார்க்க ஒவ்வொருவராய் வர ஏது விருக்கும் போல நினைக்கிறேன். அது ஒரு வகைக்கு நல்லது. கர்த்தர் மாத்திரம் நமக்கு இரங்கி ஐயாவுக்கு நல்ல திடன், நம்பிக்கை, சுகம், பலம் தர வேண்டியது. அம்பாசமுத்திரம், கூனியூர் அண்ணாச்சிக்கும் இன்று அண்ணாச்சியவர்கள் கடிதமனுப்பியிருக்கிறார்கள்.

தாங்கள் தங்களுக்கும் ஐயா அவர்கள், தாயாரவர்கள் மதினியவர்களுக்கும் தாழ்மையான தோத்திரம் செலுத்துகிறோம்

Yours very affectionately,

T. S. Sanjeevy.

Tinnevelly.

1874—ம் வருஷம் பெப்ருவரியீ 8-ல்

மகா-ா-ஸ்ரீ அண்ணாசுவி

நாளது முன் தபால்வண்டி ஆபீஸ்மூலமா யனுப்புவித்த காயிதம்வந்திருக்குமென்றும் கூனியூரண்ணாசுவிக்குந் தெரியப்படுத்தி யிருப்பீர்களென்றும் நம்புகிறேன். நமதய்யா அவர்களுக்கு-வரவர பெலவீனமும் சுகவீனமும் அதிகரிப்பதால் நம்மெல்லாரையும் பார்த்துக்கொள்ள விரும்புகிறார்கள், ஆவதால் உடனே புறப்பட்டு நல்லம்மாள்புரம் வந்துசேரப் பிரார்த்திக்கிறேன். கூனியூரில் அண்ணாசுவிக்கும் இவ்விதம் தெரிவித்திருக்கிறது.

இப்படிக்கு, ஊழியன், ஏகதாசன்,

நானும் தாங்கள் உடனே நல்லம்மாள்புரத்தில் ஐயாவைப் பார்க்கவரப் பிரார்த்திக்கிறேன், விபரம் எழுத இதுசமயமில்லை.

சஞ்சீவி,

[அவசரம்,

அம்பாசமுத்திரம் பெரியகுளந்தெரு உபதேசியார் மகா-ா-ஸ்ரீ அண்ணாசுவி சவரிமுத்துப்பிள்ளையவர்களுக்கு வருவது,

அவசர சமாசாரம்,

உடனே காகிதத்தைப் பார்க்கவும்.]

---

மிகவும் பிரிய தம்பி,

நமதய்யாவுக்கு நேற்றும் இன்று இந்நேரமட்டுந் தேவகிருபையினாலே இலகுவாயிருக்கிறது, வாய்வு, எதிர்ப்பு, ஓங்காரம், சத்திப்பு, விக்கலின்றிருக்கிறது. பெலவீனம் மாத்திர மிஞ்சினவிதமாயிருக்கிறது, இதுவும் நீங்கத் தேவன் அருள் செய்யவேண்டியது, இம்மட்டிலிருந்து படிப்படியாய்ப் பெலனுஞ் சுகமுமுண்டாகவும், இனி நாசியிலிருந்து இரத்தம் புறப்படாதிருக்கவும் நாம் ஆண்டவரை மன்றாடுவோமாக. இப்படியானால் இன்னமும் ஐயா நம்முடனே இவ்வுலகத்தில் சிலகால மிருப்பார்களென்று நம்பிக்கையாயிருக்கலாம், அவர் கிருபை செய்வாராக, இம்மட்டும் இரக்கமாய்க் காப்பாற்றினதுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

நாளைக்கு சாமானுக்காக ஆள் அனுப்புவேன்.

இப்போது உன்பட்சமுள்ள காகிதமும் வந்தது நேற்று எழுதினது. அதில் நான் J. D. S. தம்பி காகிதத்துக்குள் உனக்கு வைத்தனுப்பின காகிதஞ் சேரவில்லைப் போலிருக்கிறது. அதில் சாயன்களைக் குறித்து எழுதி

யிருந்தேன். இப்போது டிரசர் மருந்துங்கொடுக்கப்பட்டு வருகிறது. வைகாவலுக்காக நான் அந்த மருந்தைப்பற்றி எழுதினேன். கனம் H. ஐயர் சொன்னார்கள். இவ்விடம் வந்தபோது அவர்கள் கொஞ்சங் கொடுத்தார்கள். அது ஐயா அவர்களுக்கு நல்லது போலிருந்தது, பெரியகாரியமில்லை. நான் இடையன்குடிக்கு உடனேக்குடனே இருக்குஞ் சேருக்கு எழுதி மருந்து வருவித்துக்கொடுத்துக் கொண்டுவருகிறேனே.

விஜயநாராயணத்தார், கவிசேஷபுரத்தார், இடையன்குடியார் பின்னும் மற்றவர்கள் வந்து பார்த்துக்கொண்டும் போய்க்கொண்டும் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது முக்கினபடிக்கு ஐயாவைப்பற்றி சடுதியாயுள்ள பயமில்லை, கருத்தருடைய கிருபை. இதைமற்றத் தம்பிமாருக்குந்தெரிவிக்கலாம், பார்க்க விருப்பமுள்ளவர்கள் வரத்தடையில்லை, பார்ப்பது ஐயாவுக்கு ஒரு ஆறுதல்.

1874 பெப்ருவரி 8-ம்உ

நல்லம்மாள்புரம் பகல் மணி 11

Yours sincerely
M. Savarirayan.

---

Nallammalpuram
9th February 1874.

My dear son, /

நமதய்யா அவர்களுக்கு திரும்பவும் நேரிட்ட சுகவீனத்தைக் குறித்தும் பெலவீனத்தைக்குறித்தும் இதற்குள்ளாக மாப்பிள்ளை ஞானப்பிரகாசம் பிள்ளை வந்து தெரிவித்திருப்பார், அவர் அவ்விடம் வந்துசேர்ந்திருக்கிறாரென்பதை கேட்டு மரியவியாகுலம் அம்மாளுக்கு வந்த காகிதத்தினாலும் அறிந்துகொண்டோம். ஐயாவுக்கு வாய்வு, எதிர்ப்பு, வாந்தி, விக்கல் முதலிய உபத்திரவங்களுங் கூடயிருந்தது. இது பெலவீனத்தினாலுஞ் சுகத் தப்பினாலும் சடுதியில் மோசத்துக்கு ஏதுவாயிருக்குமே என்று பயந்திருந்தேன். இதுவுந் தேவகிருபையினாலே முந்த நேற்றும் நேற்றும் இன்றுந் தாவிளையாயிருப்பதுந் தவிர மனத்தெளிவுஞ் செச்சிதமுமிருக்கிறதாகக் காணப்படுகிறது. பசியுஞ் சீரணிப்பு பொசிப்புஞ் சரியாயிருந்தால் ஆண்டவர் இன்னமுங் கொஞ்சகாலத்துக்கு சுகசுக்தருவாரென்றும், தந்திருக்கிறாரென்றும் நம்பித் துதித்து மன்றாடவேண்டியது. வீடுமட்டும், படுக்கையிலிருந்தாவது செலேஞ்சிருந்தாற் போதும். அவர் கிருபைசெய்வாராக.

346



மரியவியாகுலமும் பிள்ளைகளுஞ் சுகந்தான். மதுர சஞ்சீவி நன்றாயுஞ்
சந்தோஷமாயுமிருக்கிறான், பகைக்கை என்னிடத்தில்தான். யாதொரு தொந்
திரவு இல்லை. அன்பும் பயமுமுள்ளவனாயும் என்மட்டுக்கு யோக்கியமாயும்
நடந்து வருகிறான். நான் அறியக் கேட்க ஒரு கெட்டவார்த்தையும் அவன்
வாயிலிருந்து புறப்பட்டது மில்லை. அவன் சிலகாலம் இங்கே யிருக்கவா
மென்று விரும்புகிறேன். பத்திரமாய்ப் பார்த்துக் கொள்வோம். உன் தா
யாரும் பிள்ளைகள் பேரில் மிகுந்த பிரியமாயிருக்கிறாள். இதுவுமல்லாமல்
மேரியம்மாள் இவ்விடத்துக்கு வந்ததுமுதல் படிப்படியாய்ச் சுகமும் பெல
னும் அடைந்து வருகிறாள். இந்தப்பிரயாணம் விசேஷமாய் அவளுடைய
சுகத்துக்கும் அநுகூலமாயிருக்கிறதென்று சொல்லவேண்டும். புத்திக்கூர்
மையும் அறப்படிப்பும் அதிகம். வியாதியிலும் பெலவீனத்திலும் அவள்
தன் பொசிப்பு விஷயத்தால் பிழைத்திருக்கிறாளென்று புறம்பான வித
மாய் சொல்லலாம். ஆண்டவர் அவளை இம்மட்டும் காப்பாற்றினவர் முழு
வதுங் காப்பாற்றுவாரென்றும், அவள் திரும்பத் தூத்துக்குடிக்கு வரும்
போது நன்றாயிருப்பாளென்றும் நம்புகிறேன். கருத்தர் கிருபைசெய்வா
ராக.

இந்தச் சந்தியில், நீயும் ஒருநாளைவழி யிவ்விடத்துக்கு வந்து எல்லா
ரையும் விசேஷமாய் நமது ஐயாவையும் பார்த்துக்கொண்டு போனால் நல்ல
தென்று ஆசையாயிருக்கிறேன். ஐயாவுக்கு உன்னையும் பார்க்கமிருந்த ஆவ
லுண்டு, நமதுபிள்ளையைக் கண்டது மெத்த சந்தோஷம். நீ சீக்கிரத்தில் வரு
வாயானால், நமது மரியவியாகுலம் புறப்பட்டு வரவேண்டியதைக்குறித்தும்,
மற்றுங்காரியங்களைக்குறித்தும் கலந்து கொள்ளலாம். மாப்பிள்ளை ஞானப்
பிரகாசம்பிள்ளை வீட்டைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுவார். தங்கச்சி
முத்துமரியவியாகுலத்தை வருவித்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிற அவ
ருடைய விருப்பத்தைக்குறித்துஞ் சரியான விதமாய்க் கலந்துகொள்ளலாம்.
அவளைத் தூத்துக்குடியில் வைத்துவிட்டு நீவந்து திரும்பிப்போவதற்கு நல்
லது செய்யலாம். காரியத்துக்குச் சரியாய் யோசித்துக்கொள்ளவும்.

சேருவை காரன்பட்டி பாக்கியம்பிள்ளை இவ்விடம் வந்து மறுநாள்ச்
சாயுங்காலந் திரும்பிப்போனார். போத்திக்குச் சுகமில்லை யென்று கேட்டு
தூத்துக்குடியிலிருந்து அக்காளும் அத்தானும் போத்தியைப்பார்க்க வந்தி
ருக்கிறதாகச் செய்தி அறிந்து வந்ததாக என்னிடத்திற் சொன்னார். வந்த
பின்பு தன் காரியமாய் நம்முடைய மரியவியாகுலத்துடனே தனித்துப் பே
சிக்கொண்டுபோனார். இதின் விவரம் மரியவியாகுலம் அறிவிப்பாள். நீ

யெப்படி தீர்மானிப்பாயோ அப்படி நடப்பிக்கிறது என் விருப்பம். மரிய வியாகுலந் தன் சம்பந்திமார் விஷயத்தில் கருத்துங் கவனமுமாயிருக்கிறது எனக்கும் பெரிய சந்தோஷம். மாமியும் மருமகளுந்தான் பலதுங்கலந்து பேசிக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. எனக்குப்பேசவும் சாவகாசமில்லை. சந்தியும் அப்படி. உன்னோடே கலந்துகொள்ளாமலும் ஒரு தீர்மானஞ் சொல்ல மனமும் ஓடவில்லை. காரியங்களை எல்லாவற்றைக் குறித்தும் நீ யோசித்திருப்பாய். மிக்கேல்பிள்ளை வந்திருந்து வீட்டுச்சுருக்க தல வேலை தொடங்கியிருக்கிறார். நேற்று இவ்விடத்தில் பரி: நற்கருணை பரிமாறப்பட்டது. இதற்கு அவருஞ் சேர்ந்தார். விஜயநாராயணம் வேதகப்ப பிள்ளையும் வந்திருந்தார். நேற்றுச் சாயுங்காலம் திரும்பிப் போனார். மனைக் காரியத்தை விட்டு அடிக்கடி நினைப்பூட்டுகிறார். டோனவூரார் வாயிதாப்படி பணங் கொடாததினாலேதான் தாமதமென் றறிவித்தேன்.

நேற்று மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை மரிய வியாகுலத்துக்கு எழுதினதிலும், மற்ற விதமாயும் நீ யின்று நாளை பாளையங்கோட்டையில் வந்திருப்பாயென்று இந்தக் காகிதத்தை பாளையங்கோட்டை மூலமாயனுப்புகிறேன்.

நமதய்யாவுக்காகச் சிலசாமானுக்காக இன்று சாயுங்காலம் கூலியாள் அனுப்புகிறேன். அவன் நாளைக்கு அவ்விடஞ் சேருவான். நீ யவ்விடமிருந்தால் அவன் வசமாய்ச் செய்தி எழுதியனுப்பலாம்.

நேற்று சாயுங்காலம் மாப்பிள்ளை யாக்கோபு பிள்ளை இவ்விடம் வந்து விடியற்காலம் போனான். மரியவியாகுலம் சிலநாளைக்குப் பின்பு சவிசேஷபுரத்துக்குப் போய் மேலவீட்டு அன்னம்மையைப் பார்த்துக்கொள்ளவும் விரும்புகிறாள். இது சரிதான், பார்க்கவேண்டியதுதான். ஒன்று மாத்திரம் இங்கும் அங்கும் போவதில் நமது பிள்ளை மேரியம்மாளுக்கு சுகத்தப்புண்டாகக் கூடாது என்பதுதான் யோசனையாயிருக்கிறது. இந்தவூர் பிள்ளைகளுக்கு நல்லசுகத்துக்கு ஏதுவுள்ளது. கருத்தர் எவ்விதத்திலும் காப்பாற்றுவாராக.

நமதய்யாவுக்குள்ள சுகத்தால் நான் இப்போது சாவகாசத்துடன் இந்தக் காகிதம் எழுத வாய்த்தது. இதற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை புறப்பட்ட அன்றுதானே எழுத விரும்பினேன். அதுக்கு இதுவரையும் கூடாமல் தாமதப்பட்டது. ஆனால் தம்பிமார் விரும்பிக் கேட்டுக்கொண்டபடிக்கு ஐயாவுடைய சுகவீனம்பற்றி மாத்திரம் எழுதியிருக்கிறேன். இப்போது என் மனதுக்கு ஐயாவுடைய விஷ

348

வத்தில் ஆறுதலுண்டு. ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

இவ்விடத்து நாங்கள் உனக்கு அநேக வாழ்த்துதற்சொல்லுகிறதோடே முடிக்கிறேன்.

Yours sincerely,

M. Savarirayan.

---

74—2—9

மிகவும் பிரிய தம்பீ,

நான் தவால் மூலமாயனுப்பக்குறித்த காகிதமும் இதுடனேதான் வருகிறது. தவாலிற்போட உடனே ஆள்க்கிடைக்கத் தாமிதமானதால் இனிப்போடுகிறதிற் காரியமில்லை. கூலியாள் வருவதற்கு முன் அங்கே வந்து சேராது என்று நினைத்து இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

கூலியாள் வருகிறது, உவைன், ரொட்டி, பிஸ்கோத்து, கொய்யரிசிமா, சவ்வரிசி, சீனி இதுகள் வாங்கியனுப்பவும். திருநெல்வேலித் தம்பிக்குச் சொல்லி ஆரச்செய்தனுப்பவும். என்னுடைய உடுப்புத் துணிகளையும் கணக்குப்பார்த்துத் தப்பாமல் அனுப்பினால் நல்லது.

நீ சுவிசேஷபுரம் தவால்மூலமாய்ச் சனிக்கிழமை அனுப்பின காகிதமும் வந்தது.

நமதய்யாவுக்குப் பெலவீனம் அதிகம், இப்போது பசியெழும்புகிறது, அடிக்கடி ஏதாவது கொடுத்துவரவேண்டியதிருக்கிறது. அதிகமாய்ச் சாப்பிடுகிறதுமில்லை. கொஞ்சங் கொஞ்சமாய்த்தான்.

மருந்தும் வாங்கிக்கொடுத்து வருகிறோம், அடிக்கடி தும்மல் அதிகமாயிருக்கிறது. நேற்றுச் சாயுங்காலமுதல் நாசிவழியாய்த் தண்ணீர்போலச் சளியுண்டாகிக் கொண்டிருக்கிறது. முன் இரத்தமுண்டான வலது நாசித்துவாரத்து வழியா யதிகம். இதைப்பற்றிக் காலையில் இடையன்குடிக்குச் செய்தியனுப்பி நாசியில் வைக்க மருந்துங் குறிக்கப்பட்டு வந்து வைத்திருக்கிறது. பெலவீனத்தில் தும்மலுண்டாவதில் சரீரத்தில் அதிக அசைவும் குலுக்கமும் ஆயாசமுமுண்டாகிறது, தும்மல் சகிக்கப் பெலனில்லை. தும்மலிப்படி அடிக்கடி உண்டாவதும் நீர் கொண்டதுபோல நாசி வழியாய் சளித்தண்ணீருண்டாவதும் என்ன விதமென்று தெரியவில்லை. தலைநரம்பு மூளை நரம்புக்குப் பெலவீனமும் மற்ற நரம்புகளுக்கு அசைவுமுண்டாகத்தக்கதாய்த் தும்மலுண்டாகிறது என்மனதுக்குப் பயமாயிருக்கிறது. மறுபடியும் இரத்தம்வந்து விடலாகாதே. இனி இரத்தம் வந்தால் உயிருக்குமோசமாயிருக்

கும்- ஏனென்றால் முன்போன இரத்தம் அதிகம்- இதினால் பெலவீன மதிகம். இதையிட்டுத்தான் பயம்- கருத்தர் கிருபையாயிருந்து விக்கினமின்றி இரட்சித்துக் காப்பாற்றுவாராக.

சிவகிரிக்குப்போன தம்பி காகிதம் வந்தது, நீ காகிதம் அனுப்பினதுண்டா- திருநெல்வேலித் தம்பிக்குக் காரியஞ் சொல்லி அம்பாசமுத்திரம் கூனியூர் தம்பிமாருக்கு இப்போது ஐயாவுக்குச் சற்று இலகுவிருக்கிறதென்று தெரிவிக்கச் செய்யவும்- ௸ தம்பிமார் மிகுந்த கலக்கமாயிருப்பார்கள். நான் எழுதியனுப்பின காகிதம் இதற்குள்ளாக அவர்களுக்குச் சேர்ந்திருக்கும்- அவர்கள் எவ்விதமும் பார்க்க வருவார்கள் என்று நினைக்கிறேன், வந்துபோகட்டும், ஐயாவுக்கும் எல்லாரையும் பார்க்க ஆசையிருக்கும்- மாடன்துரை வந்த காரியம் உன்னுடைய பள்ளிக்கூடக் காரியம் எப்படியென்று தெரியவிரும்புகிறேன்-

மரியசுந்தரி மாப்பிள்ளை ஏசுதாசமாசில்லாமணியாபிள்ளை காகிதம் ஒன்று சனிக்கிழமைத் தவால் சுவிசேஷபுரத்து வழியாய்வந்து சேர்ந்தது- முன்னொருகாகிதம் மதுரையிலிருந்து எனக்கு எழுதியனுப்பினது போலதான் கொஞ்சங் குறைய- இதைத் தம்பி ஏசுதாசபிள்ளைக்குத் திருநெல்வேலிக்குத் தெரிவி, ௸ தம்பி வீட்டிற்குத் திருநெல்வேலி மரியசுந்தரியை அனுப்புவதாகவும் அவ்விடத்திலிருந்து நாம் இவ்விடத்துக்கு நல்லம்மாள்புரத்துக்கு வருவித்துக்கொள்ளவேண்டுமென்பதாகவும் கடைசியாக எழுதியிருக்குது சரிதான்- ௸ மரியசுந்தரி மாப்பிள்ளை தமது வருமானத்திலிருந்து பாதித்தொகையை ௸யார் சமுசாரம் பிள்ளைகளுக்காக அனுப்பும்படிக்குக் கேட்டு அப்படியானால் இவ்விடம் அனுப்பச்செய்யவும் என்று ௸ தம்பி ஏசுதாசபிள்ளை ௸ மாசில்லாமணியாபிள்ளைக்கு எழுதும்படிக்குஞ் சொல்லவும்- மற்றப்படி சரியல்ல. எனக்கு ௸ மாசில்லாமணியாபிள்ளை எழுதியிருக்கிறமாதிரி வெகு கேவலமானது- மற்றப்படி நான் செலவுகேட்டு எழுதக்கொள்வேனென்று சொல்லத்தக்கதில்லை; இதை நமது தம்பிக்கு உடனே தெரிவி.

நானொரு காகிதம் ௸ மாசில்லாமணியாபிள்ளைக்கு எழுதலாமென்று நினைக்கிறேன்- மேல்விலாசம் எப்படிப்போட்டால் சேருமென்று தெரியவில்லை-

இதற்குள்ளாக ஒருவேளை மரியசுந்தரி தம்பி ஏசுதாசபிள்ளைவீட்டில் வந்திருப்பாளோ- என்னவோ- வந்திருந்தாலும் வந்திராவிட்டாலும் எழுதட்டும் வருமானத்தில் பாதி தந்தனுப்பட்டும் ஏ ா. ஒருவேளை தம்பிக்கும் எழுதியிருக்கலாம் ௸யார்.

மரியசுந்தரி எரியமாய் ஷெ மாப்பிள்ளை தம்மோடே விளையாடத் தேவையில்லை. ஷெ மரியசுந்தரி அவன் மாப்பிள்ளைக்கு அன்பமாயும், ஷெயார் அவளுக்குத் அன்பமாயுமிருக்கவேண்டாம். செலவு கொடுத்து சமாதானமாய்ச் சிலகாலத்துக்கு இருக்கவேண்டுமோனால் பிரிந்திருக்கட்டும். இதை தம்பியுடன் மாத்திரங் கலந்து தம்பி யோசனைக்கு விடவும். எனக்கு அனுப்பின காகிதத்தை தம்பிக்கு இப்போ தனுப்ப மனமில்லை. முகதாவில் இங்கே வரும்போது காட்டுவேன். இவ்விடம் மற்ற யாவருந் தேவகிருபையாற் சுகம். அவ்விடம் எல்லார் சுகசெய்திக்கும் விசேஷமாய் மிகேல் அருணம்மாள், அத்தர் பாலய்யா சுகசெய்திக்கும் லெவிறித் தம்பி சுகசெய்திக்கும் எழுதவும்.

அவசரம்

1874—ம் ஹு பெபுருவரி மீ 9-உ

கல்வம்மாள்புரம்

Yours sincerely,
M. Savarirayan.

[ மிகவும் பிரிய தம்பி, தரும-சஞ்சீவிநாதபிள்ளைக்கு வருவது ]

---

9—2—74

RESPECTED AND DEAR SIR,

ஐந்து கோத்து மருந்து......அனுப்பியிருக்கிறது, முறைப்படி கொடுத்து வரவும். காதியில் சளி வடிகிறதற்கு முந்தின நாள் காதியில் விடும்படி ஒரு லைகைத்தண்ணீர் அனுப்பியிருந்ததே, அதை ஒரு பஞ்சிலாவது மெலிசுத் துணியிலாவது கனைத்து ஷெ காதியில் பத்துநிமிஷம் வைத்துப் பின்பு எடுத்து, இப்படி ஒரு நாளில் மூன்றுதடவை பத்து பத்து நிமிஷம் வைக்க டிரசர் சொல்லுகிறார்.

காப்பி போத்தி ஐயா அவர்களுக்குப் பிரியமாயிருப்பதால் நல்ல பாலும் சீனியும் போட்டு தேவையானபோது கொடுக்கலாமென்றும் சொல்லுகிறார்.

போத்தி ஐயாவுக்கு இவ்வளவு சுகத்தையும் நல்ல பசியையும் கொடுத்த பரமதேவனுக்கு நன்றியறிந்த தோத்திரம் சொல்லுகிறோம். இன்னமும் பூரணசுகத்தையும் பெலத்தையும் கொடுப்பாரென்று பூரண நம்பிக்கையாயிருக்கிறோம்.

என்னுடைய வேலைத்தொல்லையினால் ஒரு கிபிஷமாவது பிரியக்கூடாமலிருக்கிறேன், கோபித்துக் கொள்ளவேண்டாம்,

நாங்களெல்லாரும் தோத்திரமும் முத்தியும் அனுப்புகிறோம்.
அவசரத்திலெழுதினேன்.                    தங்களின்

D. Pakyam.

(Rev. M. Savarirayen.

In haste                    Nallamalpuram)

---

Tinnevelly, 11th February 1874.

My Dear Brother,

யாவருஞ் சேமம். அய்யா அவர்களுஞ் சற்று லகுவாயிருக்கிறதாக வந்த நிருபத்தை யித்துடன் அனுப்பியிருக்கிறேன்

நீ புறப்பட்டது எப்போ, மூந்தாம் நாள் தபால் மார்க்கமாய் நான் அனுப்புவித்த காயிதங்கள் வந்து சேர்ந்ததுண்டா

ஊருக்கு நீ எப்போது புறப்பட யோசித்திருக்கிறாய்.

Yours truly

J. Savarirayan.

(I shall come down there this evening

J. S.

M. R. Ry., J. D. Savariraya Pillay, Palamcottah).

---

(J. D. Savariraya Pillai to the Zemindar of Shivagiri).

? —2—74, Suviseshapuram.

Respected Sir,

I arrived at Palamcottah on the morning of the 11th instant; and immediately on my arrival I heard that my father was very seriously ill. So I and my family were obliged to go in great haste to Suviseshapuram 30 miles south-east of Palamcottah where my father now is,

I and my family arrived safe here yesterday: and thank God, I found my father a little better; still he is very very weak. I shall start from here next week and hope to come straight to Shivagiri with my family: and I beg you to order the southern bungalow to be got ready for us.

---

[J. D. Savariraya Pillai to the Revd. Ashton Dibb, Palamcottah].

Nallammalpuram, 7—2—74.

Revd. and dear Sir,

As the one month's leave which you had most kindly granted me expired on the 10th instant, I arrived at Palamcottah on the morning of the 11th Instant with a view to offer my resignation of my work in the Institution. But on my arrival at P., I heard that my father was dangerously ill at Suviseshapuram, and consequently I and my family set out for S. in great haste. As you were not then at Palamcottah I was unable to see you.

All my six brothers are here.

The Lord has been very very merciful to us, and we think that our dear father is now out of danger, and trust that He will spare him for us for some time more.

I shall return to P. I shall be at Palamcottah D. V. in three or four days when with your kind permission I think of resigning my post.

---

ஐயாவுக்கு வியாதி ஆரம்பித்தது ஜனுவரி ௴ அ-ஷ. அதுமுதல் பன்னிரண்டிரவு மூத்த அண்ணாச்சியினுடைய பாடும் பிரயாசமும் யாரால் அளவிடக்கூடும். ஊரில் வியாதிப்படுகிற எப்படிப்பட்ட ஏழையானாலும் உயிரைக் கொடுத்து உயிரைக் காப்பாற்றப் பார்ப்பார்களே. அப்படிப்பட்டவர்கள் பெத்த தகப்பனுக்காக என்ன பாடுபடமாட்டார்கள். அவர்களுடைய செபமும் போராட்டமும் கண்ணுறக்கம் களிப்பு அலுப்பு என்பது இன்னதென்றறியாமல் இராப்பகல் இடைவிடாது செய்த பக்குவங்களும் பலன் பெற்றதாக ஆறுதலடைந்து கொண்டிருக்கையில், முன் இரத்தவோட்டம் உண்டான பன்னிரண்டாம் நாளாகிய உகூஉ வியாழக்கிழமை யன்று திரும்பவும் அதே நாசி வழியாய் இரத்தம் பிறிட்டது. அண்ணாச்சியுடைய மனம் என்னவிதமாய்த்தான் தத்தளித்துப் பதை பதைத்திராது. சகோதரர்களெல்லாரும் ஐயாவைப்பார்க்க சாவகாசம் நேரிட்டபடிக்கு எப்போது வந்தாலும் சரிதானென்று எண்ணியிருந்தவர்கள் இப்போது உடனே வந்து சேரவேணுமென்று விரும்பினார்கள். ஆறுமணி உகூஉ நேரிட்ட ஆபத்தைக் குறித்து அவர்கள் எனக்கு விபரமாய் எழுதியனுப்ப மனப்பெலன் அற்றுப் போயிற்று.

ஐயாவைப்பார்க்கும்படியாக நான் சிவகாசியிலிருந்து புறப்பட்டுவந்தேன். குழந்தை பிறந்த செய்தி என் காகிதத்தின் மூலமாய் அறிந்து மாமனார் மாமியார் பிள்ளைகளுடன் பாளையங்கோட்டையில் வந்திருந்தார்கள். அப்போது அவர்கள் சாரூடைய சபையில் இருக்கிறார்கள். அவர்களெல்லாரும் நானும் மிக்கேலருளம்மாள் பிள்ளைகளுடன் ஐயாவைப்பார்க்கப் புறப்பட்டோம். அன்று ராத்திரி இருட்டி நேரமானபின் தெற்குவிசையகாருயணத்தில் ஒரு பிராமணக்குடி முன்பகத்தில் இராத்தங்கினோம். அந்தவீட்டின் முன் இரண்டு பிராமணப்பெண்பிள்ளைகளிருந்தார்கள். இருட்டி நேரமானதால் வேறுமனுஷ ரொருவரையுங் காணவில்லை. விளக்கில்லாமலிருந்ததினாலும் அந்தப்பெண்பிள்ளைகள் வாய்திறந்து ஒரு பேச்சும் பேசாமலும் ஒரு உதவியும் செய்யாததினால் எங்களுக்கு விசனமும் வருத்தமுமாயிருந்தது. என் மாமனாருடைய பிரயாசத்தினால் தீப்பத்தவைத்து ஏதோ சாப்பிட்டோம்.

விடியுமுன்னமே சோமிருக்க சுவிசேஷபுரத்துக்குப் புறப்பட்டோம். நான் வண்டிக்கு முன்னே வெகுதூரத்தில் நடந்து போனேன். அந்தவழி நெடுக என் மனதின் நிர்ப்பாக்கியத்தையும் பரதாபத்தையும் யார் அறியக் கூடும். சுவிசேஷபுரத்தில் போய்ச்சேர்ந்தவுடனே என்னசெய்தி சொல்வார்

ளோ என்று நினைக்கிறேன். விடியற்காலம் கிழக்கு வெளுக்கிற வெளிச்சம். கிழக்கே முகமாய்த் தனித்துப் போகிறேன். என் கை ஆண்டவருக்கு நேராக விரித்து உயர்த்திக்கொண்டும் கும்பிட்டுக்கொண்டும் போனேன். என் ஏங்கலும் பாதவிப்பும் கண்ணீரும் மன்றாட்டும் ஆண்டவர் ஒருவர்தான் அறியக் கூடியவர். சுவிசேஷபுரம்போய்ச் சேர்ந்தோம்; வித்தியாசமில்லை, ஐயா சுகமேயிருக்கிறார்களென்ற செய்தி கேட்டோம். அங்கிருந்து சாயங்காலம் நல்லம்மாள்புரத்துக்குப் போனோம்.

பல விடங்களிலுமிருந்த சகோதரரெல்லாரும் ஐயாவைப்பார்க்கும்படியாய் முன்பின்னாய்ப் புறப்பட்டு வந்தாலும், எல்லாரும் ஐயா சமுகத்தை ஒன்றாய்க் கூடித்தரிசிக்க ஆண்டவர் எங்களுக்கு ஆசீர்வாதம் அருளினார். ஐயாவுக்கு எத்தனை ஆறுதலாயிருக்கும், விரும்புவதிலும் பெறத்தக்கதிலும் அதிகமான கிருபையை நமக்கு ஆண்டவர் எப்போதான் அருளிச்செய்யவில்லை. பிள்ளைகளைக் கண்டவுடனே ஐயா இருதயத்தில் என்ன பூரிப்பாய்த்தான் ஆண்டவரை ஸ்தோத்தரித்திருப்பார்கள், பிள்ளைகளைக் காணுவதும் பிள்ளைகளோடிருப்பதும் பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருப்பதும் இந்தப்பாக்கியம் ஒன்றே பாக்கியமென்று எக்காலமும் எண்ணிவந்தவர்கள். இந்தலோகத்தில் வேறொன்றை அவர்கள் மனம் நாடினதில்லை, தேடினதில்லை.

இந்தக்கடைசி நாட்களில் தங்கள் மூத்தகுமாரன் வீட்டில் தங்களுக்கு முன் எல்லாப்பிள்ளைகளும் பேரன் பேத்தி பூட்டன் பூட்டிகளுமாக கூடிவந்திருக்கிற போது அவர்கள் உள்ளம் மிகவும் அதிர்ச்சியடைந்திருந்தது. மக்கள் தங்களுடைய சுகத்தைவிட்டு கலங்கி மயங்குகிறார்களே யென்ற ஒரே மனவருத்தந்தான் ஐயாவுக்கு. எங்கள் தகப்பனார் எங்களை யறிவார்கள், நாங்கள் எங்கள் தகப்பனாரை யறிவோம். இந்த ஆறுதலும் நம்பிக்கையும் ஐயாவுக்கு உண்டு, எங்களுக்கும் இன்றுவரையில் இதுவே ஆறுதல்.

ஐயா அம்மையை நினைக்கிறபோதெல்லாம் இப்படிப்பட்ட பிதா மாதாவை தேவன் எங்களுக்குத் தந்ததே நாங்கள் எங்கள் சீவகாலமுழுதும் எங்கள் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கிற முதல் ஸ்தோத்திரம்.

ஐயா இயல்பாகவே அதிகம் பேசமாட்டார்கள், அடக்கமாயிருப்பார்கள் ஆகையால் இந்தக்காலத்தில் அந்தந்தப் பிள்ளைகளுக்கு அவரவர்களுக்குத் தக்கதாக அப்போ தப்போது வெகு பொருளமைந்த சில சில வார்த்தைகள் மாத்திரம் சொல்லுவார்கள்.

ஐயா கூட உட்கார்ந்திருந்து ஐயாவோடு சாப்பிடும் பாக்கியம் ஒன்றுதான் நாங்கள் எல்லாரும் கூடியிருந்தும் இந்நாட்களில் எங்களுக்கு இல்லாமல் போயிற்று. ஐயா நடு அறையில் மேல்பக்கத்தில் கட்டிலில் இருப்பார்கள். மூத்த மதினி முன்னே நாற்காலியில் உட்கார்ந்து பத்திய சாப்பாடு மத்தியானம் ஐயா கையில் உருட்டி வைப்பார்கள்.

பிள்ளைகளோடு கூடவிருந்து சாப்பிடுவது ஐயா மனதுக்கு எப்போதும் ஆறுதல். எதாவது விசேஷித்தநாட்களில் ஐயா கூடவிருந்து சாப்பிடுகிறதற்கு ஒரு பிள்ளைகளுமில்லை யென்றால் ஐயாவுக்கு மிகுந்த மனச்சோர்வும் ஆயாசமும் அடைவார்கள். பிள்ளைகள் வீட்டிலிருந்தால் தங்கள் சௌகரிய மெப்படியிருந்தாலும் பிள்ளைகள் வரட்டும் என்று அவர்களுடைய நேரஞ் சமையத்துக்குக் காத்திருப்பார்கள். ஐயாவுக்குள்ள இந்த ஆசை அகாலை காண்பிக்கிற குறிப்புகள் ஐயாவுடைய ஜர்னலில் அநேகம் காணலாம். பிள்ளைகளை ஒரே இலையிற் கூடவைத்துச் சாப்பிடுகிறதுமுண்டு. சிறுபிள்ளையில் எனக்கு ஐயா கூட ஒரே இலையிற் சாப்பிட ஆசையிருக்கும். சிலவேளை சாப்பிடுவேன் குளித்துத் தலைமுழுகித் துப்பரவாயிருந்தால். ஆனால் நான் எப்போதும் துப்பரவு கெட்டவன். என் தம்பியோ மகா துப்பரவாயிருப்பான்; கையில் காலில் இவ்வளவு அழுக்கு ஒட்ட சம்மதிக்க மாட்டான்.

இப்படி சிறுபிள்ளைகளை மாத்திரமல்ல, பெரிய மக்களையும் கூடவைத்துச் சாப்பிட்டதுண்டு. இந்த அருமைக்கு நான் பிறக்குமுன்னே யுள்ள ஒரு திருஷ்டாந்தம் ஐயாவுடைய சரித்திரப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது (கையெழுத்துப் புஸ்தகம் ௨-வது வாலியம் ௰௧-ம் பக்கம்) [illegible] டிசம்பர்மீ ஐயாவை சாப்பிட்டப்பரவர்கள் பண்றிகுளத்துக்கு மாற்றினவுடனே சுவிசேஷபுரத்தில் தனித்துக் குடியிருந்த அம்மை பிள்ளைகளை பண்றிகுளத்துக்குக் கூட்டிக்கொண்டு போகும்படியாக ஐயா சுவிசேஷபுரத்துக்கு வந்தார்கள். அக்காள் நிறைகெர்ப்பிணி. இரண்டாவது மகள் ஞானப்பிரகாசத்தை யுண்டாயிருக்கிறாள்; மகளைவிட்டுப்பிரிந்து புறப்படுமுன் அக்காளை இலையில் முன்வைத்து ஐயாவும் அக்காளும் ஒன்றாய்ச் சாப்பிட்டார்கள்.

இப்படிப்பட்ட எளிமைக்குணங்கள் அநேகமுண்டு. எக்காலமும் ஏழைமனசு படைத்த ஏழைத்தகப்பன். எங்கள் தாயோ, அவள் ஏழைத்தனம் பெரிதோ; ஐயாவுடைய ஏழைத்தனம் பெரிதோ என்று சொல்லமுடியாது.

Nallammalpuram,
14th February 1874.

My dear son,

இப்போது நமதய்யாவுக்குச் சற்று இலகுப்போலத்தோன்றினாலும் பெலவீனமும் அடிக்கடி நேரத்துக்கு நேரம் அசதியாயாசமும் உண்டாகிறது. நடமாடக்கூடியதற்கும, எழுந்திருக்கவும், சாப்பிடுவதற்கும் ஏற்ற ஸ்திரமாயிருக்கவும் தேவகிருபை செய்யவேணும். என் மனதுக்குச் சந்தேகமிருக்கிறது. தேவசித்தம எப்படியோ தெரியாது. அம்பாசமுத்திரம் தம்பி, கூனியூர்த்தம்பி, சிவகிரித்தம்பி, தம்பி தரும-சஞ்சீவி, மிகேல் அருளம்மாள், பிள்ளைகள், டிெ தாயார் தகப்பனார், இடையன்குடி அருளம்மாள் பிள்ளைகள், மாமியார் பெரியம்மாள் இவர்களெல்லாரும் ஐயாவைப் பார்த்துப் போக வந்திருக்கிறார்கள். திருநெல்வேலித்தம்பியும் சமுசாரம் பிள்ளைகளும் இன்று வருவதாகச்சேதி. கனம் சாமுவேல் ஐயரவர்கள் வருகிற வாரம் வந்து பார்ப்பதாகச் சேதி யனுப்பியிருக்கிறார்கள்.

நீயும் மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளையும் பாளையங்கோட்டைக்குப் பிரயாணப்பட்டு வந்தபோது வழியில் டிெ ஞானப்பிரகாசம்பிள்ளை மிகுந்த வருத்தப்பட்டுச் சுகப்பட்டதாகச் சேதி கேட்டு மிகவும் துக்கப்பட்டோம். கர்த்தர் இரக்கமாய்க் காப்பாற்றி யிரட்சித்தது பெரிய கிருபை. அவருக்கு ஸ்தோத்திரம். நீ மிகுந்தவருத்தமும் பிரயாசமும்பட்டு நல்லஉதவி செய்தா யென்றும் அறிந்தேன். துன்பத்துக்குத் துன்பத்துடனேதான் உதவி செய்ய நேரிடும். இப்படி உதவி செய்வதில் நீ நல்லமனமும் பிரயாசமுமுள்ளவனா யிருப்பது உனக்குப் பெரிய ஆசீர்வாதமாயிருக்கும்.

உங்கள் சாப்பாடு தலைமுழுக்கு சரியாயிருக்கப் பார்த்துக் கொள்வீர்களென்று நம்புகிறேன் நல்ல சுகத்துக்கு ஏதுவாய்.

இவ்விடத்துக் காரியங்களுக்கும் அவ்விடத்துக் காரியங்களுக்கும் இன்னும் எழுதிக்கொள்வோம். ஆண்டவர் துணைசெய்வாராக.

நமது பிள்ளைகள் சுகமேயிருக்கிறார்கள். நாளுக்கு நாள் மேரியம்மாள் சுகந்தான், திடந்தான். மற்ற எல்லாருஞ் சுகம்.

உன்னையும் பார்க்க ஐயாவுக்கு விருப்பமுண்டு. ஆண்டவர் ஏற்றவேளையிற் காணும்படிக்கு நல்ல சமயங் கட்டளை யிடுவாராக.

உனக்கும் உன் அத்தானுக்கும் அநேக வாழ்த்துதற் சொல்லுகிறோம்.

Yours sincerely,
M. Savarirayan.

Tinnevelly.
20th February 1874.

Revd. and dear Brother,

நேற்று நாங்கள் சுகத்துடன் தேவ கிருபையாலிவ்விடம் வந்துசேர்ந்தோம். இவ்விடம் யாவருஞ் சேமம். ஐயா அவர்களுடைய சுகவீனைக் குறித்துமாத்திரம் கவலை.

சிவகிரி அண்ணாச்சியவர்கள் காலம்பரன் இவ்விடம் வந்துசேர்ந்தார்கள் ஐயாஅவர்களைப் பார்க்கும்படிக்கு. இவ்விடம் வந்தபின் கலியாணங்கள் சீக்கிரத்திலிருப்பதால் இப்போதும் வந்து பின்பும் வரவும் ஐயாவோடு சற்று நீண்டகாலமிருக்கவும் வருத்தமான காரியமென்று திரும்பவும் நேற்றிரவு சிவகிரிக்குப் போகிறார்கள். இது நிற்க.

நேற்றிவ்விடம் கலியாணங்களைக் குறித்தும் செலவு முதலிய காரியங்களைக்குறித்தும் நாங்கள் மூவரும் பேசிக்கொண்டதில் பாளையங்கோட்டையிலிருக்கிற கலியாணத்தை நல்லம்மாள்புரத்திலேயே வைத்துக்கொள்வது அநுகூலமாயிருக்கும் என்று நினைத்து அப்படி நடக்கும்படி தங்களுடைய சம்மதத்துக்கு இப்போது அண்ணாச்சி (J. S.) அவர்களும் எழுதுகிற கடிதம் வருகிறது. எனது யோசனை இதைப்பற்றி யென்னவென்றால்; நான் தங்களுடன் முன்பேசியபடி ஐயா, அம்மை பார்வையில் கலியாணம் நடக்கவேண்டியது. ஐயாஅவர்கள் மனத் திர்ப்திக்காகவே இவ்வளவு அவசரப் படுகிறது தங்களுக்குத் தெரிந்தது.

இப்போதும் நமது பிள்ளைகளுடைய மாப்பிள்ளைமார் செலவும் அரிசிச் செலவும் நமது பெண்களுக்காக வேண்டிய செலவும் நம்மைப் பொறுத்ததாகவே யிருக்கிறது மல்லாமல் பாளையங்கோட்டையில், எனது கலியாணம் நடக்கிறதானால், பாதிச்செலவும் நாம் கொடுக்கவேண்டியதிருக்கிறது. அரிசிக்காகவே இப்போது ரூ 75 கொடுத்திருக்கிறார்கள். ஆக ரூ 25 மாத்திரம்தானே இருக்கிறது. தாங்கள் கொடுத்த (ரூ 100) ரூ தாரில் சவளிக்கும் மசாலாமற்றும் ஆகவேண்டியதுக்கும் தான். அண்ணாச்சியவர்கள் என்னசெய்வார்கள். அவர்கள் சொல்வது அனேகம் ஞாயமாகவே இருக்கிறது.

தங்களுக்கும் கலியாணச் செலவு செய்கிற காரியத்துக்குக் கையில் பணமும் வேண்டியதுண்டே. யோசிக்க யோசிக்க மெத்தவருத்தமாய்த் தானிருக்கிறது. இவ்விடத்தில் அண்ணாச்சியவர்களும் சிவகிரியில் அண்ணாச்சியவர்களும் செய்கிற உதவி ஒத்தாசை இருக்கும். நாம் அவர்களை பாரப் படுத்த வேண்டியதில்லை.

என் கடிதத்தையும் அன்ரூச்சியவர்கள் கடிதத்தையும் தங்கள் கையில் கொடுக்கும்படி ஆச்சிக்குக் கொடுத்திருக்கிறோம். சாயுங்காலம் (௪-மணி) இப்போது. நாளைக்காலை (௰) மணிக்கு அவ்விடம் வந்து சேரும்படி சொல்லியிருக்கிறது.

வாசித்துக்கொண்டு உடனே இடையன்குடிக்கு ஆளனுப்பி விடுங்கள்.

ஐயா அவர்களுக்குப் பத்தியத்துக்காக இரண்டுபடி அரிசி அனுப்பு.

நாளைச் சாலமோன் வருவான், நான் சவரி வாங்கினபின் வருவேன். சவிசப்பேத்தும் கூட வருகிறதா யிருக்கும். ஆத்தி மெத்தச் சேட்டை பண்ணுகிறான் புறப்படுகிறதுக்கு. மற்றுங்காரியங்களும் பின் எழுதுவேன்.

Yours very affectionately

S. சஞ்சீவி.

வடக்கன்குளத்துக்கு மிளகாய் வற்றல் வாங்க அனுப்பப் படுகிறவன் வசம் கலியாண அழைப்பும் J. D S அன்ரூச்சியவர்களிப்போர்த்து அனுப்பிய கடிதத்தையும் அனுப்பப் பிரார்த்திக்கிறேன்.

S. சஞ்சீவி.

[Reverend M. Savarirayan, Nallammalpuram.]

---

[தேவசகாயத்துக்கு]

நல்லம்மாள்புரம்

22—2—74

மிகவும் பிரிய தம்பி,

நாளது மீ உ௰-உ போட்டனுப்பின உனது பட்சமுள்ள காகிதம் இன்று காலையில் வந்துசேர்ந்தது. நீங்கள் எல்லாருஞ் சுகத்துடன் சேர்ந்ததுக்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

அம்பாசமுத்திரத்துத் தம்பி அங்கேவந்தால் கனியூர்த் தம்பி தனிமையாய்த்தான் போயிருப்பான். பிள்ளைகள் விடுமுறை நாள் உள ம வ யாலும் தம்பிக்கு வேறு அலைச்சல்தான். நான் பிள்ளைகளுக்காக ஆளனுப்பவில்லை, விசுவாசபாராயணத்துப்பிள்ளைகளுடன் வரும்படிக்கு வியாகப்பபிள்ளைக்கு எழுதினேன். விடுமுறை பிந்தியிருப்பதால் அவரும் என்ன யோசனை செய்வாரோ தெரியாது. எப்படியும் அவர் தம் பிள்ளைகளைக் கூட்டிக்கொள்ளும்படிக்கு வருவார். அதோடே நம்முடைய பிள்ளைகளையும் கூட்டிவரத் திட்டஞ் செய்யவேண்டியதிருக்கிறது.

நமதய்யா அவர்களுக்கு நீங்கள் புறப்பட்ட நாளுக்கு முந்தின இராத்
திரியில் எப்படியிருந்ததோ அப்படியே தான் இராத்திரி தோறு மிருக்கிற
விதம்: இது தம்பி ஏசுதாசபிள்ளைக்கு அந்த இராத்திரி விழித்திருந்து பார்த்த
தினாலே நன்றாய்த் தெரியும். டிாசர் மருந்து கொடுத்து வருகிறது. தேகத்
தில் வீக்கமுண்டாயிருக்கிறதும் அடிக்கடி அசதியுண்டா......நீங்கும்படிக்
கும மருந்துக்காக டிாசருக்கு எழுதி...........................................
......இப்போதும் மருந்தனுப்பினார். ஆண்டவர் திரு... வீக்கமும் அசதியும்
நீங்கி போசனமும் ... ...............னமுமுண்டாகி எழுந்திருக்கப் படுக்கத்
தானுமிருக்கக் கூடியதுக்குரிய பெலன் வருமானால் மிகுந்த சந்தோஷமிருக்
கும். இப்போது வீக்கமும் அசதியும் இருப்பதுதான் என்மனதுக்கு மிகு
ந்த கவலையும் பயமுமிருக்கிறது. இதுவெல்லாம் நிவிர்த்தியானால் மனதுக்
குத் தயிரியமுண்டு. இப்போதிருக்குஞ் சீர் மனதுக்கு அதிகவருத்தத்தையும்
மிகுந்த யோசனையையும் கொடுக்கிறது. நீங்கள் எல்லாரும் வந்திருந்த போ
திருந்த திடன் உதவி யிப்போதில்லாதது எனக்குச் சங்கடந்தான். தம்பி
தரும-சஞ்சீவியும் வருகிறான்: நீங்கள் போனபின்பு அவனிருந்தது மிகுந்த
உதவி. எப்போதும் பக்கத்தில் ஒருவரிருக்கவேண்டியது. இது ஐயாவுக்
கும் பிரியம், என்ன செய்யலாம், ஆண்டவர்தான் துணை, அவர் இரங்க
வேண்டும். வியாதி துன்பத்தோடேகூட பஞ்சமும். இந்தச்சமயத்துக்கு
ஐயாவுக்குச் சுகமுண்டானால் பெரிய சந்தோஷமாயிருக்கும். தேவசித்தந்
தெரியவில்லை. அவர் சித்தம் நமது பாக்கியம். இப்படியுள்ள சமயத்தில்
த்தனிமையா யிருப்பது மகா சஞ்சலம். ஆண்டவருடைய நடத்துதலுக்கு
என்னசெய்கிறது, அடங்கி யிருக்கவேண்டியது. நமக்கு இந்த விசுவாச
மிருந்தாலும் திடனில்லை. நேற்று சாயுங்காலம் அருளம்மாள் புறப்பட்டுப்
போனாள். ......சனம் சாமுவேலய்பரவர்கள் வருவார்கள். ...............
பிள்ளை ........ யவ்விதமும் பார்க்க வரவேண்டுமென்றிருக்கிறு...........
தாமிதமாம்.

மரியசுந்தரியைக்குறித்து மரியசுந்தரிமாப்பிள்ளை காகிதம் இன்றும் ஒன்
று சுருக்கமாய் வந்தது. தவால்வண்டி மூலமாய் மரியசுந்தரியையும் பிள்ளை
களையும் 5-ம்உ அனுப்பியிருக்கிறதாகவும் அண்டாப்பிள்ளையை அனுப்பி நல்
லம்மாள்புரத்துக்கு வருவித்துக் கொள்ளவேண்டுமென்பதாகவும் காட்டி
யிருக்கிறது. இதோடே காகிதம் மூன்று, ஒன்றுக்கும் பதில் அனுப்பவில்லை.
இதற்கு என்ன பதில் அனுப்ப என்றும் எனக்குத் தெரியவில்லை. புறநூ

னுக்கும் மனைவிக்கும் மனஸ்தாபம் என்பதில் நாம் எப்படி ஏற்றுக்கொள்ளுகிறது. சமாதான முறையாயில்லை. அப்போ இயல்பு வரலாம் போகலாம். இப்போது எப்படி நாம் அவர்களை சுமக்கிறது. நம்முடைய பிள்ளை அவர்கள் மட்டுக்கும் பொல்லாத பிள்ளையாய்ப் போனது ஆச்சரியந்தான். இதுவும் ஒரு துன்பம்.

கனம் Lash ஐயரவர்கள் நம்முடைய பிள்ளைகள் பீஸ் பணத்துக்காக எழுதினார்கள். போன ஜூலையீ முதல் நாளதுமீ வரை மாசம் 8-க்கு விடுமுறைமாசம் போக 6½-7-மாசத்துக்குச் செலுத்தவேண்டியது. 16-4-0 அல்லது 17-8-0 ரூ செலுத்தவேண்டியதுண்டு. இதைக்குறித்து ஷை ஐயரவர்கள் முகதாவிற் பேசி எவ்வளவு என்று கேட்டுத் தீர்க்கவேண்டியது. அவர்கள் என்ன தொகை சொல்வார்களோ, போன 73-ஜூலையீ சங்கத்துக்கு வந்திருந்த போது ஒரு சாயந்திரம் ஷை ஐயரவர்கள் உலாத்திவிட்டுத் திரும்புகையில் பங்களாவுக்கு............பணத்தைக்கொடுத்து விட்டு வந்தேன் ............நான் கொடுக்கவில்லை. இது எனக்குத் திட்ட............முத்து மரியவியாகுலம் வகைக்காக விஷயகாராயணம் வியாகப்பபிள்ளை தந்த பில்லையும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். இதைக்குறித்துத் தம்பி தரும-சஞ்ஜீவிக்குச் சொல்லி யிருக்கிறேன். இப்போது வேறு பணமில்லாததால் இந்தப்பணத்திலிருந்து ஷை லாஷ் ஐயரவர்கள் கணக்கைத் தீர்க்கவேண்டியது அவசரமாயிருக்கிறது. மற்ற விவரங்களைத் தம்பி சொல்லுவான்.

தம்பி ஏசுதாசபிள்ளைக்குச் சமாசாரந் தெரிவித்துக்கொள்ளவும். தம்பியையும் நன்றாய்ப் பராமரித்துக் கொள்ளும்படி சொல்லவும். இவ்விடத்துக்கு வேண்டியசாமானுக்கு எழுத தலத்தில் ஆளில்லாததும் ஒரு சங்கடம். திருநெல்வேலித் தம்பிக்கு எழுதுவதில் அவனுக்கு வருத்த மிருக்கப்படாதென்பதென் கருத்து. தற்காலத்துப்பாடு இப்படியாய் நேரிட்டிருக்கிறது.

இவ்விடத்து நாங்கள் உங்களுக்கு அநேக வாழ்த்துதற் சொல்லுகிறோம். எப்போது நீங்கள் புறப்படுவீர்களோ தெரியாது. கர்த்தர் நம்மனைவரோடுங்கூட யிருப்பாராக.

Yours sincerely,
M. Savarirayan.

22-2-74

அம்பாசமுத்திரம்.

மகாகனம்பொருந்திய சங்: அன்றூஸ்றியவர்க ளன்புள்ள சன்னிதானத்துக்கு அடியேன் ம. சவரிமுத்து மிகுந்த வணக்கமாய்த் தோத்திரஞ் செய்தறிவித்துக் கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

நாங்கள் நாளது பிப்பிரவரிமீ 18-உ புதன்கிழமை தாங்கள் சங். அய்யா முதலிய எல்லாரையும் அனுப்பி விடைபெற்று நல்லம்மாள்புரத்தை விட்டு சுவிசேஷபுரம் வந்து சேர்ந்து சாயுங்காலம் புறப்பட்டு 6-மணிக்கு விசயநாருயணத்துக்கு வந்து சேர்ந்தோம். 19-உ வியாழன்காலை புறப்பட்டு செண்பகராமன் நல்லூர் வரையும் வந்து அதிலிருந்து தம்பி கூனியூருக்குப் பிரிந்தான். நான் ஆள்வார்சேரி போய்ச் சேர்ந்தேன். 20-உ வெள்ளி மதியம் பிள்ளைகளையும் ஷை வாத்திமாரையும் கண்டதில் 27-உ வெள்ளிக்கிழமை விடுமுறை யென்று சொல்லிப்போட்டதால் தங்களுக்குத் தம்பி J. தேவசகாயத்தைக்கொண்டு தெரிவித்தேன்.

ஷை 20-உ இரவு ஈ. சண்முகநாத கவிராயரைக்கண்டு பேசிக்கொள்ளப்போனேன். அவர்களைக்கண்டு நானும் கூனியூர் தம்பியும் பேசிக்கொண்ட தீர்மானத்தையும் அப்பால் மற்ற இரண்டு தம்பிமாருக்கும் அறிவித்து அவர்கள் சம்மதப்படி ஒப்புக்கொண்டபிரகாரம் கவிராயரவர்களுக்கு அறிவித்தேன். அதாவது, மருதூர்க்கரைப்பிள்ளை தமக்கு வாழ்க்கைப்படும் பெண்பேரால் தம்முடைய பாகத்துக்குள்ள பிரிசலான பூர்வீகபிதாவின் சொத்தையும் தம்முடைய கைவசமாயிருக்கும் கூ.ரூ-500 யும் ஒயில்ச்செய்து ரிஜிஸ்தர் செய்துகொடுப்பாராகில் அவருடைய முதல் எண்ணக்கோரிக்கைப்படி நம்முடைய கிருபைபெற்றுளைக் கட்டிக்கொடுப்போமென்று சொன்னேன். அவர்கள் மருதூர்க்கரைப்பிள்ளை சம்மதத்தை யறிந்து அவரையும் இணங்கச்செய்து ஒத்துக்கொண்டார்கள். ஒயில்ப் பத்திரத்துடன் பாகப்பிரிசல் ரிஜிஸ்தர் பத்திரம் பணத்துக்குரிய ஆதரவு இவ்வளவும் நீங்கள் பொறுப்பாயிருந்து வாங்கித்தந்தால் சம்மதந்தானென்று தீர்மானமாகச் சொல்லியிருக்கிறேன். அதைக்குறித்து தம்பி J. தேவசகாயம் பிள்ளையைக் கண்டு பேசி அவனையும் தங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னேன். அப்படி முடியுமாகில் முன்னும் பின்னும் எவ்வளவும் இயோசிக்க வேண்டியதில்லை. ஒயில்ப்பத்திர நக்கலை நான் அறிய எனக்கு ஒரு பிரதி அனுப்பச் சொல்லியிருக்கிறேன்.

21-ஆ காலை திருநெல்வேலிக்கு வந்து சாயுங்காலம் புறப்பட்டு அரிய நாயகிபுரம் இரவில் தங்கி உஉ-ஆ காலை ஊர்வந்துசேர்ந்தேன், கர்த்தருடைய கிருபையால், எல்லாரையும் கண்டேன், சவுக்கியமாயிருக்கிறார்கள். மழை யிங்கே மிகுதி. கல்லிடைக்குறிச்சிப் பாலத்தில் கமானுக்கு அதாவது கமான் உச்சிவளைவுக்கு ஒரு சாணுக்குத்தான் வெளி கிடந்ததாம். பாலம் இடிந்த முந்தின வெள்ளத்துக்கு இது இரண்டாவதென்று திருநெல்வேலிக்காரர் சொன்னார்கள். நான் அதை நம்பவில்லை. ஏனென்றால் மழை அவ்விடத்தில் அவ்வளவு இலேசா யிருந்தது, இங்கே மிகுதி, சிலவாரத்துக்கு முந்தி பெய்தால் மெத்தச் சேமமாயிருக்கும், தெய்வசித்தம் இவ்வளவாவது கிருபை செய்தார். ஆனால் அவ்வளவுக்கு முதலாய் நன்மையைப் பெறப் பாத்திர ரல்ல.

திருநெல்வேலியின் மரியசுந்தரி, எலிசப்பேத்து, பிள்ளைகளையும் பார்த்தேன். மதுரை ஏசுதாசபிள்ளை வன்கண்மையையும் உணர்ந்தேன். ஈ. டேஞூர்ப்பிள்ளை யவர்கள் எலிசபேத்து மாப்பிள்ளைக்குப் பதிலெழுதிய நிஷ்டூர வார்த்தையைக் கேட்டு விசேசப்பட்டு ஆர்தான் பெருமூச்சு விடமாட்டார்கள். இதெல்லாம் இந்த உபவாச நாள்க்களில் நேரிடவேண்டியகஸ்திதான். ஏசுநாதரே சொன்னாரே "எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார். நம்முடைய பாவத்துக்காக அழவேண்டியதுதான். அவள் எழுதிய கொடூரவார்த்தைகளை எழுத மனமில்லாதபடியால் விட்டிருக்கிறேன். நமக்குப்பாரத்தைக் கொடுக்க வேணுமென்பது தகப்பனுருக்கும் மகனுக்குமுண்டான தீர்மானம்." கர்த்தர் பார்த்துக் கொள்வார்".

நமது சங். அய்யா அவர்களுக்குக் கர்த்தர் பெலனையும் சுகத்தையும் நீண்ட ஆயிசையும் கொடுக்கப் பிரார்த்தித்து வருகிறோம். அப்படி நம்பிக்கையா யிருக்கிறோம். கர்த்தர் காளதுவனையும் நம்மை வெள்க்கத்துக்குள்ப்படச் செய்யவில்லை, இன்னமும் செய்யமாட்டார். அவர்களுக்குப் பணிவாய்த் தோத்திரஞ் சொல்லுகிறேன்.

தருமனுதசஞ்சீவி கலியாணக்காரியம் இன்னமும் நிர்க்கிரசாகவில்லையென்று கேட்டேன். அவன் மனபாகந் தெரியவில்லை. கிருபை காரியத்துக்கு மேலேகண்டபடியே; மற்றப்பிள்ளைகள் காரியத்துக்கும் அப்படி யப்படியே வகைபார்க்க வேண்டியதாயிருக்கிறது. வீரகேரளம்புதூர் கிஷ்ணபிள்ளை கட்டியங்கூறி பிரார்த்திக்கும் வாசகப்படி நடக்க நமக்கு ஒருபோதும் கிரணியில்லை, (மாப்பிள்ளைமார் எண்ணமும் பெற்றார் சகோதரர்களுடைய எண்ணமும் ஷெ. வாசகப்படியிருக்கிறது: அப்படிப்பெருத்துக்குளாம் பெருகி

மறுகால் போகவில்லை. தங்களுடைய சித்தத்துக்குத் தீர்மானமாகத் தெரிந்த காரியமே. ஆகையால் ஒன்றைப்பற்றியும் தீர்மானமாகச் சொல்லமாட்டீர்கள்.

இதுவரையும் சம்மந்தவிஷயமாய்ப் பட்டபாடு போதும். தங்கள் தீர்மானப்படி ஆற அமரப்பார்க்கவேண்டியது. இதெல்லாம் பேசினாலும் என் வெட்கம் என்னை மூடுகிறது.

சங். அய்யா அவர்களுடைய பெலன் என்ன, எப்படி என்பது கவலை. பெண்பிள்ளை, பிள்ளைகள் பார்க்க ஆசைப்படுகிறார்கள். கர்த்தர் வாய்க்கச் செய்வார். தங்களுடையவும் சங். மதினியவர்களுடைய பிரயாசத்தையும் கர்த்தர் பார்த்துக்கொள்வார். நீங்கள் முந்தினவர்களானதால் நமது அய்யா அவர்களுக்குச் செய்யும் பணிவிடையிலும் முந்தினவர்களாயிருந்து பாக்கியவான்களென்றும் பேர்பெற்றுக் கொண்டீர்கள். சகல கிருபைவரங்கள் கன்னைகளில் முந்தியிருக்க முழுமனதோடே பிரார்த்தித்து வருகிறோம். தங்களுக்கு கர்த்தர் நல்ல பெலத்தையும் சுகத்தையும் நீண்ட ஆயிசையும் கொடுக்கக் கடவர். நான் நடந்துகொள்ள வேண்டியதுக்கு நிருபம் உத்தரவாகவேண்டியது.

சில வார்த்தைகள் மற்றவர்களுடைய பார்வைக்கு நன்றாயிருக்கமாட்டாது. ஆனதால் இதைப் பரிகரிக்கவேண்டியது. கும்மாப் போட்டிருக்கிறதற்குள் அடங்கினதுபோல சிலது இருக்கும். மருதூர்ப்பிள்ளை சங்கதி இப்படிப்பட்டது.

சங்கை நமது அய்யா அவர்களுக்கும் அம்மை அவர்களுக்கும் தங்களுக்கும் மதினி யவர்களுக்கும் எங்களுடைய பணிவானதோத்திரம். தங்கச்சி, தங்கச்சி பிள்ளைகளைப்பற்றியும் நமது அய்யா அவர்களுக்கு அடிக்கடி நினைப்புண்டாகி விசாரமாயும்: அதைக்குறித்து எவ்வளவும் கவலை வைக்கத் தேவையில்லை, நாங்கள் பார்த்துக்கொள்ளுவோமென்று தீர்மானமாகவும் தெளிவாகவும் தெரிவிக்க வேண்டுகிறேன். நமது பிள்ளைகளுக்கு முத்தி கொடுக்கிறோம். நமது பிள்ளை எட்டுக்கும் சவரிமுத்து மரியம்மாளுக்கும் அப்படியே முத்தி கொடுக்கிறேன்.

தங்களுடைய தாழ்மையுள்ள தம்பி ம. சவரிமுத்து

நான் சிலவேளை பேசுவது மனதின்படி பேசினதல்ல, அதுமேலெழுச்சி. கர்த்தர் எனக்கு அவ்வளவு மெத்தனத்தைக் கொடாவிட்டால் நமக்கு இருக்கிற பாரத்துக்கு வியாகுலத்தினால்ச் செத்துப்போகவேண்டியது வரும்,

Tinnevelly,
24th February 1874.

Revd. and Dear Brother.

யாவருந் தேவகிருபையாற் சேமம்- அவ்விடம் சேமாதிசயங்களுக்குத் தாங்கள் தம்பி J. D. S. பிள்ளைக்கனுப்பிய காயிதத்தைப் பார்த்துக்கொண்டோம். தம்பி சஞ்சீவி நேற்று பாளையங்கோட்டை வந்து சேர்ந்தான்- தம்பி J. D. S. பிள்ளையும் சமுசாரங் குழந்தைகளும் இன்று விடியப் புறப்பட்டு சிவகிரிக்குப் போகிறார்கள்.

நமதய்யா அவர்களுடைய சுகவீனாயிட்டுத்தான் மனதுக்கு வருத்தமாயிருக்கிறது. கப உபத்திரவ மதிகமாயிருக்கிறது- கப யிளகும்படி மருந்திலொன்று சேர்த்திருக்கிறது- இருமலுக்காக அது கொடுத்த அவிழ்தம்- வேர்வையுண்டானால் வீக்கம் வற்றும். அதற்கு வெந்நீர்ப் பிரயோகஞ் செய்யவேண்டியது- கட்டிலில் உட்காரவைத்துக்கொண்டோதானே முழங்காலுக்குக் கீழ் வெந்நீர் விடலாம்- மற்றப்பாகங்களுக்கு துணியை முக்கிப்பிழிந்து அதைக்கொண்டு நன்றாய்த் துடைக்கவேண்டியது- இப்படி தேகசுத்தி செய்த பின்பு காற்றுத் தேகத்தில் படாதபடி மாத்திரம் பார்த்துக்கொள்ள வேண்டியது. தெய்வசித்தத்துக்கு நாம் அடங்கியிருக்கத்தானே வேணும்.

மரியசுந்தரியை சமாதான மேனாயா யெழுதி யனுப்பியிருந்தால் நாமேற்றுக் கொள்வது சரியாயிருக்கும். இவ்விடம் சாமுவேல்பிள்ளை, தகப்பனாருக்குத் தமையனார் செய்கை தமக்குப் பிடியாததாக எழுதியகடிதத்துக்குத் தகப்பனார் எழுதிய பதில் தன் மூத்தமகன் காயிதத்தைப் பார்க்க வெத்தக் கொடுமையுள்ளதென்று கேள்விப்பட்டேன். டோனாவூரிலிருந்தும் மதுரையிலிருந்தும் நடக்கிற காஸ்பாண்டென்ஸ் எல்லாம் அச்சுக்கூடத்துப் பிள்ளையை மேவியும் மெப்பித்தும் நடக்கிறதாகவும் காணாது. டோனாவூரிலிருந்து வண்டியனுப்பி மரியசுந்தரியைச் சிலநாளுக்கு ஷெ. யூரில் வைத்திருந்து அப்புறம் நல்லம்மான்புரத்துக் கனுப்பிவிடுவதாக ஷெ. தகப்பனார் எழுதியிருக்கிற சமாசாரமுங் கேள்விப்பட்டேன். இளையமகன் மாசிலாமணி யிடத்திலும் அப்புறம் சீனிவாசகம்பிள்ளை, ஞானப்பிரகாசம்பிள்ளை முகதாவில் சாமுவேல்பிள்ளை யிடத்திலும் கிரமமா யனுப்பிவித்தால் ஏற்றுக்கொள்வோம். பிரிந்திருக்குஞ் சுகத்துக்காக அனுப்புகிறபக்ஷத்தில் செலவுக்குக் கொடுத்தனுப்பிவித்தால் ஏற்றுக்கொள்ளுவோம், இல்லையென்றால் ஐயன்மார், கோர்ட்டார் அறிய ஏற்றுக்கொள்வோமே தவிர மற்றப்படி

எந்த வண்டியி லனுப்புவிப்பீர்களோ அந்த வண்டியிலேயே திரும்ப அனுப்பி விடுவோமென்று இடச்சாக்ஷியாய்ச் சொல்லியிருக்கிறேன்.

விசனங் கோபங் காட்டிப்பார்த்தார். குளிர்ந்து நியாயத்தை எடுத்துச் சொன்னேன். மனசுக்கு உளைச்சல்தான். தாங்களிதில் அலைமலைக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு நான் சொல்லியபடிக்குத் தாங்கள் நிறைவேற்ற மாத்திரம் மனதைக் கடினப்படுத்தவேண்டியது. ஏழைமனதா லிக்கோலமானது போதும் போதும். இன்று மரியசுந்தரியைக் கூட்டிக்கொண்டுபோக பாக்கியம்பிள்ளை வண்டி கொண்டு வந்திருக்கிறார், வேறுவிசேஷமில்லை.

இப்படிக்கு
ஊழியன்
ஏசுதாசன்

தம்பி சஞ்சீவிப்பிள்ளை விவாக காரியத்தை யிட்டுத்தாங்கள் தீர்மானமா யெழுதினதுக்குமேல்தான் மனுவேல்பிள்ளையிடத்தில் கோய்ப் பேசலா மென்றிருக்கிறேன்

[Revd. M. Savarirayan, Nallammalpuram.]

---

Nallammalpuram,
25—2—1874.

My DEAR SON,

இவ்விடம் மற்றயாவருந் தேவகிருபையாற் சுகம். நமதய்யா அவர்களும் தேவகிருபையினாலே சுகவீனத்திலும் பலவீனத்திலும் இன்னமுஞ் சீவனோடிருக்கிறார்கள். இது பெரிய கிருபைதான். மற்றப்படியல்ல. இவ்வளவுக்குங் கருத்தருடைய சித்தம். உயிருக்கு இச்சீவனில் இடமுண்டென்று நம்பக் கூடியதாயிருக்கவில்லை. நினைத்ததற்கும் அதிகமாய் கிருபை செய்திருக்கிறார். இன்னமும் முழுவதுங் காப்பாற்ற வேண்டும். இப்போதிருக்குஞ் சுகசீர்: பலவீனம், அசதி, தேகத்தில் வீக்கம், பசியின்மை, பொசிப்புத் தாழ்வு, இருக்க எழுந்திருக்கத் தன்னிலே கூடாமை, தும்மல், இருமல், சிலவேளை விக்கல் இப்படிப் பலவிதமாயிருக்கிறது. திரும்பவும் டாக்டர்வந்து பார்த்து மருந்து அனுப்புகிறார். கொடுத்து வருகிறோம். அவர் உயிருக்கு மோசம் வருமென்று சந்தேகிக்கத் தக்கதாயுள்ள குறிப்பு இல்லை என்று சொன்னார். ஆனாலும் எனக்கொரு சந்தேகம்: வீக்கமும் அசதிபோலுள்ள தூக்க மயக்கமுந் தீர்ந்தால்தான் சுகம், மற்றப்படியல்ல வென்பது. கருத்தர் கிருபைகூர்ந்

தான் அவருடைய வல்லமைக்கு இதுமிஞ்சின காரியமல்ல. தற்காலத்திலின்னமும் அவருடைய கிருபைக்காகப் பிரார்த்திக்கவேண்டியது நமது கடமை. இதற்கு மிஞ்சி அவர் செயலுக்கு நாம் என்ன செய்யலாம். இம்மட்டுங் காப்பாற்றினவர் இன்னமுங் காப்பாற்ற வேண்டியது.

போனவாரத்தில் நீ யனுப்பின அன்புள்ள உனது காகிதம் வந்தது. ஞானமுள்ளதாயிருந்தது. நீ யெழுதினதெல்லாஞ் சரி. அந்தப்படிக்கு வந்திருந்த நம்முடையவர்களெல்லாரும் முன்னும் பின்னுமாய் வந்து பார்த்துக்கொண்டு போனார்கள். அம்பாசமுத்திரந் தம்பி, கூனியூர்த்தம்பி, திருநெல்வேலித்தம்பி, ஷை சமுசாரம் பிள்ளைகள், பாளையங்கோட்டைத் தம்பி, ஷை சமுசாரம் பிள்ளைகள், இடையன்குடி பாக்கியம்பிள்ளை, ஷை பிள்ளைகள், பெரியம்மாள், கூடங்குளம் அருளம்மாள், பிள்ளைகள், வடக்கன்குளம் அம்மாள் ஞானப்பிரகாசம்பிள்ளை, ஷை அம்மாள், தங்கச்சி இன்னாசியம்மாள், பிள்ளைகள், விஜயநாராயணம் வியாகப்பபிள்ளை, ஷை செபத்தியாயி அம்மாள், பிள்ளைகள் முதலியவர்கள் எல்லாரும் வந்து பார்த்துக்கொண்டு போனார்கள். இப்போது அவரவர் தந்தம்மிடத்திற் சேர்ந்திருக்கிறார்கள். தருமசஞ்சீவிநாதபிள்ளை திங்கள் முந்தாநாள் புறப்பட்டுப் போனான்.

கூடங்குளம் சாமுவேல் ஐயரவர்கள் இத்தவாரம் வருவதாகச் செய்தி. இவ்விதமாய் நம்முடைய சொந்தமானவர்களெல்லாரும் ஐயாவை வந்து பார்த்துக்கொண்டார்கள். இது ஐயாவுக்குப் பெரிய ஆறுதல். உன்னைக்குறித்து அதிகப்பிரியம் பார்க்க. நீ குடும்பத்திற்கு முதற் பேரன் என்பதும் விசேஷம். எல்லாருக்கும் முந்த வந்தது நம்முடைய மரியவியாகுலமும் S. மதுரசஞ்சீவியும் மேரியம்மாளும் முதல் முதல் வந்தது, இது ஒரு பெரிய சலாக்கியம். இது எனக்குப் பெரிய சந்தோஷம். நீ யெழுதியபடியே நீ மாத்திரம் வாராதது மனதுக்குத் திருப்தி எனக்குப் பூரணமாயில்லை. ஆண்டவர் எப்படியும் உன்னையும் பார்க்க கிருபை புரிவாராக.

மரியவியாகுலம் நீ யெழுதியபடிக்கு இரண்டு மூன்று வாரத்துக்குள்ளே புறப்பட்டு வரும்படி திட்டஞ்செய்கிறோம். யாக்கோபு சவரிராயபிள்ளைக்குஞ் சமாசாரந் தெரிவித்தேன். மரியவியாகுலத்துக்கு நடப்பிலே ஒரு மருந்து சாப்பிட்டு வரும்படி இட்டமொழி வயித்தியனும் யாக்கோபு வயித்தியனும் யோசித்து செய்யக் குறித்திருக்கிறது. இது முகாந்திரமாய்ப் பிரயாணத்தைத் தடைப்படுத்தமாட்டோம். மதுர சஞ்சீவியை நிறுத்தி வைத்திருக்க மிகுந்த பிரியம். எப்படியும் அவனை விட்டுக்கொள்வோம். மரியவியாகுலஞ்

சுவிசேஷபுரத்துக்குப்போய்த் திரும்பி வந்து விட்டான். போனவாரம் மூன்று நாள் அவ்விடத்தில் தாமிதம். இது மிச்சம் சரிதான். அன்னம்மைக்குப் பலவீன மதிகம்.

மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை சுகமானவுடனே மறுபடியும் அதிக அலைச்சலுக்கு இடமாய் நேரிட்டது மனஸ்தாபம். இதற்குள்ளாக நூத்துக்குடிக்கு வந்து சேர்ந்திருக்கவேண்டியது. சுகமுஞ் சீவனார்த்தமுஞ் சரியாயிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டியது. கருத்தர் கிருபை செய்வாராக.

அவ்விடத்துச் சாப்பாடு தலைமுழுக்கு மற்றுங் காரியங்களெப்படி நடக்கிறதோ, கூடியளவு சரியாயிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டியது. அகவிலை குறைச்சல் அங்கும் அதிகமாயிருக்கும், வரவுக்கு மிஞ்சி செலவு நமக்குண்டாவது இயல்பாயிருக்கிறது. இவ்விடத்திலும் நமக்குத் தெரியாமல் நினையாமல் நேரிட்ட செலவு தற்சமயத்தில் அதிகத்திலும் அகவிலைத்தாழ்வு கூடச்சேர்ந்தது. தேவகிருபை யுண்டாயிருந்தாற் போதும் எல்லாம் சேமமாயிருக்கும். நம்மால் ஒன்றுமில்லை. M. மிகேல்பிள்ளை சுகத்துடனிருக்கிறார். குணக்குறையில்லை, நல்ல மனுஷனாகவும் அன்பனாகவும் தோன்றுகிறார்.

இவ்விடத்து நாங்கள் உனக்கும் மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளைக்கும் அனேக வாழ்த்துதற் சொல்லுகிறோம்.

Yours sincerely,
M. Savarirayan.

---

திருநெல்வேலிக்கு வடக்கே
எட்டுமெயில்த்தூரத்தில் எழுதினது.

அடியேன் தேவசகாயம் பணிவாய்த் தோத்திரஞ்செய்து எழுதிக்கொண்ட தாழ்மையான விண்ணப்பம்.

கருத்தருடைய இரக்கத்தை முன்னிட்டு இன்று உதயத்தில் பாளையங்கோட்டையிலிருந்து நானும் மி. அருளம்மாளும் பிள்ளைகளும் புறப்பட்டோம். உதவிக்கு கண்ணுபிள்ளை மனைவியைக் கூட்டிக்கொண்டு போகிறோம். மூடக்கன்குளம் (சகல) அண்ணாச்சி வெ. சவரிமுத்துப்பிள்ளையும் துணைக்கு வருகிறார். வண்டி கிடையாத முகாந்தரத்தினால் நேற்றுப் புறப்பட ஏதுப்படாமற் போயிற்று. சனிக்கிழமை டிப் ஐயரவர்களைக் கண்டு பேசி முடித்துக்கொண்டேன். நல்லசாட்சிக் காகிதம் ஒன்றும் தந்தார்கள். ஐட்சுதனாவையும் கண்டேன். அவர்கள் சகோதரியையும் மகனையும் காட்டிய படம் ஒன்று தந்தார்கள் சேமையிலிருந்து அந்த அம்மாள் என் பேர்

எழுதி எனக்கு அனுப்பியது. வீட்டை ரூ. ௧௫-க்கு தாவீதுபிள்ளைக்கு வாடகைக்கு விட்டிருக்கிறேன். மிழவிராந்தாவும் அதைச்சேர்ந்த அறையும் நமது வசத்தில் இருக்கிறது. அத்தான் பழய இடத்தில் பழயபடிதான் இருக்கிறார்கள்.

நேற்று இரவு எழுமணிக்குமேல் சஞ்சீவிப்பிள்ளையும் தானியேலும் வந்து சேர்ந்தார்கள். திருநெல்வேலி அண்ணாச்சியவர்களும் வந்திருந்தார்கள். ஐயா அவர்களுடைய சுகத்துக்காக கருத்தாய் நோக்கி மன்றாடிக் கொண்டே இருக்கிறோம். தங்களுடைய அன்பான கடிதத்தையும் வாசித்துப் பார்த்துக் கொண்டேன். சஞ்சீவிப்பிள்ளை இன்னும் அவ்விடம் வந்திருந்து திரும்ப இடம் உண்டாகும் என்று நினைக்கிறேன். ஐயாவுடைய வேலை வெற்றியினால் நடக்கவேண்டும். ஆண்டவர் நமக்கிரங்குவார் என்று உறுதியாய் நம்பியிருக்கிறேன். திருநெல்வேலி அண்ணாச்சி யவர்களும் சஞ்சீவிப்பிள்ளையும் எழுதும் கடிதத்தால் பாளையங்கோட்டைச் செய்திகள் தெரியவரும்.

மருதூர்க்கனிப்பிள்ளை ஷாப்பில் போட்டிருக்கிற பணத்தையும் நிலச் சொத்தையும் தாம் கொள்ளும் பெண்ணுக்கு ஒயில் பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்து கொடுக்கும் விஷயத்தில் நாம் பெண் கொடுக்கத் தடையில்லை யென்று அம்பாசமுத்திரம் அண்ணாச்சி யவர்களும் நானும் பேசினதில் தனிமையாயும் கவிராயர் முன்னிலையிலும் ஒப்புக்கொண்டார். அப்படி அவர் செய்வாரானால் நாம் ஒருபோதும் அவரை விடக்கூடாது. இதைக்குறித்து திருநெல்வேலி அண்ணாச்சியவர்கள் கூடிய முயற்சி செய்யச்சொல்லியிருக்கிறேன். மரியசுந்தரியைக்குறித்து நடந்திருக்கிறதெல்லாம் ஆபிரகாம் பிள்ளை யுடைய துர்ப்புத்தியினால் நடந்ததே யன்றி வேறல்ல. இதிலே நாம் தாக்ஷண்யம் காண்பிக்கிறது நமக்கு நஷ்டமே யன்றி ஒரு விதத்திலும் அநுகூலமில்லை. தகப்பனுக்காவது மகளுக்காவது நன்றி என்பது எள்ளளவும் கிடையாது. அவர்களுடைய நன்றிக் கேட்டின் அகோரம் இவ்வளவென்று தங்களுக்குத் தெரியவே தெரியாது. இன்னொரு தடவை அதைக் குறித்து எழுதுகிறேன். கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடார்.

திருநெல்வேலி அண்ணாச்சி யவர்கள் மேற்படி காரியத்தை விட்டு ஆபிரகாம்பிள்ளை வகையறாக்களுக்கு நன்றாய்ச் சொல்லியிருக்கிறார்கள். தங்களுடைய கருத்தை அவர்களுக்குத் தெரிவித்துப்போட வேண்டியது. அவர்கள் சகல பேச்சு நடபடிக்கைகள் எல்லாம் பார்த்துக்கொள்ளுவார்கள். தாங்கள் நேருக்கு நேரே மேற்படி வகையறாக்களோடே………………

இக்காரியத்தைக் குறித்துப் பேசுவதும் எழுதுவதும் நன்றுயில்லை. இந்த விஷயத்திலும் நான் இப்போது பாளையங்கோட்டையில் இல்லாதது மனஸ்தாபமான காரியம்.

காகிதம் எழுதி முடிக்க நேரம் இல்லை. J. D. S. சங்கரநயினார் கோவில் 25-2-74.

---

(தேவசகாயத்துக்கு மூத்த அண்ணாட்சி எழுதியது.)

(Recd-11-3-74)

Nallammalpuram,
2nd March 1874

My dear Brother.

சங்கரநயினார் கோவிலிருந்து பெபுருவரி௴ 25-ம் ௳ போட்டனுப்பின காகிதம் 27-ம் ௳ வந்து சேர்ந்தது. அதிலுள்ள சமாசாரந் தெரிந்துகொண்டேன். இவ்வளவு மட்டும் ஆண்டவர் உங்களைச் சுகத்துடன் நடத்தின கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம், அப்பாலுள்ள விசேஷந் தெரிய விரும்புகிறேன். இன்னமும் நல்ல செய்தி கட்டளையிடுவாராக.

நமதருமைப் பிதாவின் சுகசீர் பெலவீனம் முன்னுள்ளபடியே தான், தேகத்திற் கண்டிருந்த வீக்கஞ் சற்று வற்றி சருமஞ் சுருக்குப்பட்டு வருகிறது, தேகமெல்லாம் தினவுபோல ஊருதலுண்டாயிருக்கிறது. முந்தின ௨௬-௳ வியாழக்கிழமை டாசர் ரசாப்பெற்றுப் போவதால் புதிதாய் வந்த டாசருடன் வந்து பார்த்துக் காரிய விவரந் தெரிவித்து அனுப்பிக்கொண்டு போனார், மருந்துங்கொடுத்திருக்கிறார். அவர்பற்று 7-நு உபசாரணையானது: இது பெரிதல்ல, ஐயாவுடைய சுகம் பெரிது. ஐயாவுக்குப் படிப்படியாய்ப் பெலமுஞ் சுகமும் வந்து சற்று வீசமட்டும் நடமாடித் திரிந்தாற் போதும். இருக்கிறசீரைப் பார்க்கும்போது அதிகக் காலம் பெலன் செல்லாதென்று நினைக்கத்தக்கது. வல்லமையுங் கிருபையுமுள்ள சித்தமானால் அதிககாலம் பெலமுண்டு நமக்குந் தயிரியமுஞ் சந்தோஷமுமுண்டு, அவர் சித்தந் தெரியாது, எப்படியானாலும் அவர் சித்தம் நமது பாக்கியம் என்று சொல்லவேண்டியது. இந்தக் காலத்தில் என் மனதுக்குண்டாயிருக்குஞ் சஞ்சலங் கொஞ்சமல்ல, அவர் சகாயங் கட்டளையிடுவாராக.

தம்பி சஞ்சீவிப்பிள்ளையும் கடைசியாகப் புறப்பட்டு வந்து விட்டான். அவன் போனபின்பு ஒரு காகிதம் வந்தது, நம்முடைய பிள்ளைகளும் விடு

முறை விட்டு 23-ம் ௳ இவ்விடம் வந்து சேர்ந்தார்கள். ஏஜுப்பிள்ளை மரியசுந்தரி வர்த்தமானமும் அறிந்து கொண்டேன். தம்பி ஏசுதாசபிள்ளை பேசினபடியே இருக்கட்டும். ௨௪-ம் ௳ டோனாவூரிலிருந்து வண்டி வந்ததாம், 25-ம் ௳ அவ்விடத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்ச் சிலநாள் கழித்து இவ்விடம் நல்லம்மாள்புரத்துக்கு அனுப்பிவிட என்பது யோசனையாம், வந்ததுபோலப் பார்த்துக் கொள்ளுகிறது, நேரிடுகிறதுக் கெல்லாம் உள்ளாயிருக்க வேண்டியது. ஆண்டவர் சித்தம் போலாகட்டும்.

மருதூர்க்கனைப்பிள்ளையைப்பற்றி எழுதியது சரிதான். புதுயோசனையோ பழய யோசனையோ, புதுயோசனையானாற் சரி, மற்றப்படி வாக்குக்கும் மனதுக்கும் விரோதமாய் நடக்கவும் மாறவும் கூடாது. அம்பாசமுத்திரந் தம்பி எழுதியதில் கிருபைபெற்றாளைப்பற்றி எழுதியிருந்தது. இது முன் பேசி முடிந்தது, இப்படியே நம்முடைய நல்லம்மாள்புரத்துப்பிள்ளைகள் ஆசிரியத்துக்கும். மேலும் கிருபை பெற்றாளுக்கு மனமில்லையென்று அம்மை மூலமாய்த் திட்டமாயறிந்தேன். நான் கயிலாசபுரத்து தாவீதுப் பிள்ளைக்குச் சொல்லியவாக்கும் நாமாகத்தானே மாறவும் ஒண்ணாது, இதுகாரியமிப்படி. பாளையங்கோட்டைக்குத் தென்திசையில் நோக்காமல் அவளைவிட்டு விடப்படாதென்றிருந்தால் மனமானால் அம்பாசமுத்திரந் தம்பி பிள்ளையைத் திட்டஞ்செய்து கொள்ளப்பார்க்கவும். அம்பாசமுத்திரந் தம்பிக்கும் ஷை பிள்ளைக்கும் மனம் எப்படியாமோ அப்படி, இதற்கு நான் ஆட்சேபனை சொல்லுகிறதில்லை. இது புது யோசனை புதுப்பேச்சு, முந்தினதுக்கு நான் ஒரு போதும் மனஞ்சாயக் கூடாதபடிக்கு என் மனம் வெகு தூரமாயிருக்கிறது. மொத்தமாய்ச் சொன்னால் இலட்சமானாலும் அந்தமனுஷன் பேரில் எனக்கு மனஞ்சாயாது, உங்களெல்லாருடைய சம்மதமும் பிரியமுமிருந்தால் அம்பாசமுத்திரம் பிள்ளையைப்பற்றி யோசியுங்கள், பழய பேச்சு முடிந்தது. உன் காகிதத்தில் இன்ன பிள்ளை என்று காட்டப்படாததினாலேயும் அந்தமனுஷனை (இன்னின்னபடி ஒழுங்கு செய்தால்) விடப்படாதென்பதினாலேயும் புதுயோசனையாக அம்பாசமுத்திரம் பிள்ளையைப்பற்றிச் சொன்னேன். ஷை தம்பியும் அதே ஆளைக்குறித்தும் மற்றப் பிள்ளையைக்குறித்தும் எழுதினதினாலேதான். நீ தயவுசெய்து ஷை தம்பிக்கு எழுதிக்கேட்டு தம்பி ஏசுதாசனுக்குந் தெரிவித்து மருதூர்க்கனாப்பிள்ளையை விசாரித்து கவிராயருக்குந் தெரிவித்துச் சகலத்தையும் சரிப்படுத்துங்கள், மேலெழுதியதற்கு மிஞ்சி என் யோசனை கேட்கத் தேவையில்லை. இது அவசரமாயறியவேண்டியது. மற்றப்படி அந்த மருதூர்க்கனாப்பிள்ளை நம்மைப் புறட்ட வென்று சொ

ல்ல நேரிடும். கயிலாசபுரத்தாலும் என்னைப் புறட்டன் என்பான். தானாக மாறினால் நமக்கொன்றும் இல்லை. கருத்தர் வேறுவழி திறப்பார்.

கனம் சாமுவேல் ஐயரவர்கள் போனவாரம் மதயம் ௨௭-ம் ௳ வந்து ௨௮-ம் ௳ இராத்திரி புறப்பட்டுப் போனார்கள், அருளம்மாள் கூடங்குளஞ் சேர்ந்த பின்புதான் புறப்பட்டு வந்தார்கள், சுகசெய்திதான். இன்று நமதய்யாவுக்கு பசி தோற்றமில்லை. விடியற்காலம் 4-மணிக்கு ரொய் அல்லது சவ்வரிசி அல்லது அரூட்மா கஞ்சி வைத்துக்கொடுக்கிறது, காலை 7-மணிக்குப் பாலுடன் கொடுக்கிறது, ௰-மணிக்கு கொஞ்சஞ் சோறு குளம்புடன் சாயுங்காலம் 5-மணிக்கு நீ தண்ணீர், இராத்திரி 9-மணி போல கொஞ்சஞ் சோறு, இப்படிச் சிலநாட்களாய் நடந்து வருகிறதுந் தவிர ஒரு நாள்விட்டு ஒரு நாள் கோழிக்குஞ்சு சாறு. ஆனால் இன்று விடியற்காலம் பசியில்லை என்றதால் 7-மணி மாத்திரங் கொடுக்கப்பட்டது. மருந்துங் கொடுத்திருக்கிறது. ஆனமட்டும் ஆண்டவனைமுன்னிட்டுப் பார்க்கிறது சலிப்பில்லை, அவர் கிருபை வேண்டியதுக்குத்தான் பிரார்த்தனை.

இவ்விடத்து மற்றெல்லாருஞ் சுகம். மரியயியாளும் இரண்டு வாரத்துக்குள்ளாகத் தூத்துக்குடிக்குப் புறப்பட்டுப் போவாள். ஞானப்பிரகாசம் பிள்ளை பாளையங்கோட்டைக்கு வந்தவழியா யிங்கே புதன்கிழமை வந்தார் நாளைக்குத் திரும்பிப் போவார்.

கனம் சாமுவேல் ஐயரவர்கள் நீயும் மிசேல் அருளம்மாளும் பிள்ளைகளும் சிவகிரிக்குப் போயிருக்கிற செய்திகேட்டு நமக்குப் பாளையங்கோட்டையில் தனது மனுஷரில்லையே என்று அங்கலாயித்துக்கொண்டார்கள். இனியங்கே போனால் எங்கே யிருக்கலாமென்றுங் கேட்டார்கள். வீட்டிலே போயிருக்கலாம் நம்முடைய மனுஷனைக்கொண்டு காரியம் பார்த்துக் கொள்ளலாம் வீடுவாடகையி லிருந்தபோதிலும் நமக்குப் பின்னும் இடமிருக்கிறது என்று சொன்னேன். நல்ல அன்பன், மானமுள்ள அன்பன், நமக்கு இந்தக்காலத்தில் இவ்விடத்தில் அவர்கள் குடும்பந்தான் நமக்கு அதிகப் பட்சமுந் துணையுமா யிருக்கிறவர்கள், நாமும் அவர்களுக்கு அப்படியே.

இவ்விடத்து நாங்கள் உங்களெல்லாருக்கும் அநேக வாழ்த்துதற் சொல்லுகிறோம். பிள்ளைகளை மிகுந்த பத்திரமாய்ப் பார்க்கவும், உதவிக்கு ஆளைக்கொண்டு காரியம் நடக்கிறதோ, முன் யோசித்த கண்ணுபிள்ளை அம்மாள் தானோ, இப்படியானால் இருந்தமட்டுந் தாவிளை, அறிந்த ஆள். கருத்தர் நம்மோடிருப்பாராக.

Yours very sincerely,

M. Savarirayan,

மகாராஜ ராஜமானியஸ்ரீ சங்கிக்கப்படத்தக்க மகாகனம்பொருந்திய அண்ணாசுவாமியவர்கள் சமூகத்திற்கு.

அடியேன் J. ஞானப்பிரகாசம் தாழ்மையாய் வணங்கி யெழுதிக்கொள்ளும் விண்ணப்பம். தங்களிடத்திலிருந்து புறப்பட்ட மறுநாள் இருட்டுமுன் இவ்விடம் வந்து சேர்ந்த நாளது வரையும் எல்லாருடன் சுகமேயிருக்கிறேன். மகாராஜ சங்கிக்கப்படத்தக்க நமது அய்யா அவர்களுடைய சுகபெலன் வளர்ந்தேறி வருகிறவிபரம் அறிய விருப்பமாயிருக்கிறேன். தங்களெல்லார் சுகக்ஷேமத்தையு மறியக் காத்து எல்லாவற்றிற்கும் உத்தரவாகப்பிரார்த்திக்கிறேன். கனம் அய்யா அவர்களுக்காக தாங்கள் எடுத்துக்கொள்ளும் எல்லாப் பிரயாசத்தையும் கர்த்தர் இரக்கமாய் வாய்க்கச்செய்து அவருடைய சற்பனைப்படியே தங்களுக்கு நீடித்த ஆயிசையும் நல்ல சுகத்தையும் காரிய வாய்ப்பையும் வாய்க்கச்செய்து தங்களை ஆசீர்வதிக்கவும் எங்களுக்கு நன்மாதிரியாயிருக்கவும் கட்டளையிடவேணுமென்று நம்பி அவரைப் பிரார்த்தித்தும் வருகிறோம் நித்தியமும் நீடித்த கிருபையும் உள்ளவர் அப்படிச் செய்தருளுவாராக. அவருக்கு எந்நாளும் தோத்திரமுண்டாவதாக.

கர்த்தர் தமது நாமத்துக்கு மகிமையாக அய்யாவையும் அம்மையையும் காப்பாற்றி இரட்சிக்க அவர் சித்தமாக வேணும்.

நானும் அண்ணாசுவாமியவர்களும் அவ்விடம் வந்து பார்த்து இவ்விடம் வரும்போது பலவகையாய்ப் பேசி யோசித்து வந்தோம். இவ்விடம் வந்த போதோ ஒருவழியும் காணாததினால் ரொம்பவும் திகைப்பும் மனவருத்தமுமாயிருக்கிறது. ஆண்டவர் கிருபைசெய்து இரங்குவாராக.

அம்பாசமுத்திரம் மக-ா-ஸ்ரீ அண்ணாசுவாமியவர்களுக்கு சிலவைகளைப்பற்றியெழுதியிருந்ததாகச் சொன்னார்கள். அவைகளைத்தள்ளாமலும் இருக்கிறதை நீக்காமலும் தங்கள் சித்தம்போல் சிலபோது பார்த்து தீர்மானத்துக்குக்கொண்டுவருவது நலம் முதலில்க்கண்ட வெறுப்பும் விருப்பும் எப்போதும் சரியாயிருக்கிறதில்லை. காரியம் ஆகுமுன்னிருக்கிற குணம்போல அனேகருக்குப் பின்னிருக்கிறதில்லை. அண்ணனைப்போல தம்பி யிருப்பானென்பதும் தவறிப்போகிறது. பழய கிறிஸ்தவனிலும் சிலவேளை புதுக்கிறிஸ்தவன் தாவிளை. காலத்தை அதிகப்படுத்துவது சரியல்லாததினாலே கர்த்தரை முன்னிட்டு சீக்கிரம் பேச்சுவார்த்தை முதலியவைகளுக் கிடங்கொடுத்து எப்படியும் ஒருவழிகண்டு தெரிந்து நடப்பிப்பது குணம். அவ்விடம் மூத்தபிள்ளைக்குக் குறித்திருக்கிறது இன்னும் மனதுக்கு திர்ப்தியாயிருக்கிறதில்லை. தற்காலத்தை நோக்குகிறது போலிருக்கிறது. தேவசித்தம் போல.

வடலிவிளை சகாயபுரம் அத்தான் முத்துசாமியாபிள்ளையவர்கள் சமுசாரத்தை வீரவநல்லூரிற் கண்டேன்; தங்கள் மகன் சீக்கிரம் வரவிருக்கிறதாகவும், அண்ணாட்சியவர்கள் மனமாயிருப்பார்களா, விருப்பமாயிருக்கிறோம் என்று அந்த அக்காள் சொன்னாள். நல்ல சனங்கள், பின்னும் இடமுண்டு.

அய்யா அவர்களுடைய சுகபெலத்தை யறிந்துகொண்டபின் மற்ற விபரங்களை எழுதியனுப்பக் காத்திருக்கிறேன்.

மரியசுந்தரி பிள்ளைகள் டோனாவூருக்கு வருகிறதாகப் பிரஸ்தாபம், அடுத்தவாரம் அங்கே நான் போக ஏதுவாகலாம். யானைக்கொப்பன் நெல் எ- அளைக்கால்தூபாக யிருக்கிறது, வேறுவிசேஷமில்லை.

நாங்கள் அய்யா அவர்களுக்கும் சங். தாயாரவர்களுக்கும் கனம் மதினியவர்களுக்கும் அக்காளுக்கும் பணிந்து வணக்கஞ் சொல்லுகிறோம். பிள்ளைகளை வாழ்த்துகிறோம். தங்களெல்லாரையும் அடிக்கடி கண்டு கொள்ள ஆசையாயிருக்கிறது. தூரமும் பணமில்லாமையுந்தான் தடையாயிருக்கிறது. எப்படியும் வேளைவேளையாய் சுகத்துடன் காணச்செய்வது தேவ இரக்கம்.

௲ஆளச-மார்ச்சுமீ உ-வ இப்படி
கூனியூர் தங்களுழியன்
அடியேன் ஞானப்பிரகாசம்

---

Recd. by J. D. S.
11—3—74

Tinnevelly,
4th March 1874,

My Dear Brother,

இவ்விடம் யாவருந் தேவகிருபையாற் சேமம். அவ்விடத்து சேமனா யங்களுக்கு ௯-௨ யெழுதியனுப்பிய காயிதம் நேற்று வந்து சேர்ந்தது. அனை வண்டிக்காரியத்தை மறக்கவில்லை. கிரயமாயாவது இரவலாகவாவது ஒரு வண்டி பார்த்தனுப்பப் பிரயாசப்படுகிறேன்.

மைதய்யா அவர்களுக்குச் சுகமென்று வாய்ச் சமாசாரம். மைதன்னூகஷியவர்கள் காயிதம் வாராதது ஆச்சரியம். வந்தவுடனே யெழுதியனுப்புகிறேன். தம்பி சஞ்சீவிப்பிள்ளை அலுவல்காரியம் முன்போலதான், மாறுதல் தோன்றவில்லை. Grant Bill இப்போதான் Counter-sign ஆகிவந்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஈசாக்கு வாத்தியாருக்கும் எழுதியிருக்கிறேன். தேவோப்பிதுப்பிள்ளை வர மனுயில்லாதவராய் யெழுதியிருக்கிறாராம்.

சிவகிரி ஜமீன் கடனுக்காக சொல்பத்தொகைக்கு கோட்டில் ஏலமாகி விட்டதா யொருவதந்தி பிறந்து மனதுக்கு வெகு அமரிக்கை புண்பெண்ணிற்று. ஆனாலும் ஸ்ரீ Carr துரையவர்கள் Record-keeper வேலையையும் கொடாமல் தம்பி யனுவலை யுறதிப்படுத்திப் பேசினகாரியம் மனதுக்கோர் ஊன்றுகோல். அப்புறம் விசாரித்ததில் பாக்கிதார் கடன்கொடுத்த பேர்களின் வைக்கில் கிரிஷ்ணசாமிஐயர் ஜமீனை பிற்று பிற்றுவாகப் பிரித்து ஏலம் போட வேண்டுமென்று கேட்டதாகவும் அப்படிக்கு கோர்ட்டார் சம்மதியாததால் மொத்தமாய் ஜமீனை (மாசி ஜமீன்தாருடைய பாத்தியதையை) ஏலம் போட்டதாகவும் 12500-ரூக்கு கடன்கொடுத்த யாவருக்காகவும் ஒருவனேற்பட்டு எடுத்ததாகவும் தெரியவந்தது. Calcutta government ஆர் Native Nobility யை conservo பண்ணவேணுமென்றும் கடன் முதலிய ஆபத்து சேரிட்டால் துரைத்தனத்தார் மேல்வாங்கி நடத்திக்காப்பாற்ற வேண்டுமென்றும் தீர்மானஞ் செய்திருப்பதாய் Mr. Huffton துரையவர்கள் சொன்னார்கள். ஈ: Carr துரையவர்கள் சீமைக்குப் போகிறதாகவும் கூ-மீ ரஜாவுக்கெழுதியிருக்கிறதாகவும் கேள்வி, இதுவு மோர் மகிமை.

நாளது ஜமீன்தார்ரவர்களுக்கு கலி இளமையில் வந்துவிட்டதால் முதுமையில் சுகானுபோகராய் வாழ்வார்களென்பது துணிவுக்குரிய காரியம்.

Mr. Marden's report on the result of the examination is very satisfactory-but he objects our school having the present standard and consequently recommends to cut short the establishment. என்னையும் சாமுவேல் பிள்ளையையும் கடைசி வாத்தியாரையும் தவிர மற்றப்பேரை யெல்லாம் நீக்கிவிட்டு ரூ௱௰-இல் ஒருF. A. யை Head Master ஆக வைக்க வேண்டுமென்று Directorக்கு எழுதியிருப்பதின் பேரில் கமிற்றிமார் இதற்கு ஒரு முடிவான தீர்மானஞ்செய்கிறவரையில் School grant ஐ நிறுத்தல் செய்திருப்பதாய் Proceedings கமிற்றிமாருக்குப் போயிருக்கிறது. அவர்கள் பள்ளிக்கூடவிஷயத்தில் அபிமானம் வைத்து வேண்டிய Defence information remark எழுதியனுப்ப Mr. H. க்கு எழுதி பதிலும் போயிருக்கிறது. அடுத்த வாரங் கமிற்றிக்கூடுதலின்பேரில் சங்கதிதெரிய வரும்.

தெய்வசித்தம் நமது பாக்கியம். மற்றும் விசேஷங்களுக்கு பின்னாலெழுதுவேன். கருத்தருன்னோடிருப்பாராக.

Yours affectionately
J. Savarirayan

---

Recd. by J. D. S.
11—3—74

5th March 1874
Tinnevelly.

My dear Brother,

இவ்விடம் க்ஷேமம். நேற்று கல்லம்மான்புரத்திலிருந்து கனம் அன்ஞேச்சியவர்கள் கடிதம் வந்தது: ஐயா அவர்களுக்குத் தேகத்திலிருந்த வீக்கம் வற்றியிருக்கிறதாம், மெத்தப் பலவீனம் தானிருக்கிறதாம், இதுவரை கிருபை செய்தவர் இன்னமும் இரங்கவேணும்.

அவ்விடத்தில் தங்களுடையவும் மதினியார் சுகத்தையும் விசேஷமாய்ப் பிள்ளைகள் சுகத்தையும் அறியவிரும்புகிறேன்.

தாங்கள் போனபின் ஒருவாரம் கடிதம் வராததால் மெத்தக் கலக்கமாயிருந்தது.

முருகன்குறிச்சி நமது வீட்டில் தாவீதுப்பிள்ளை சனிக்கிழமை வந்துவிட்டார்கள். வீடு உள்புறம் வெள்ளையடித்திருக்கிறது. மரத்தொட்டியும் பெரிய மரப்பெட்டியும் சின்ன அறையிலும் விராந்தாவிலிருந்த பெட்டியும் மற்றும் சாமான்களும் அங்குவீட்டிலிலும் வைத்திருக்கிறார்கள், விராந்தாவில் மெத்த அடைப்பாயிருக்கிற தென்பதாக.

நமது சாமான்கள் வைத்திருக்கிற கிளக்கடைசி அறையைப் புதுப்பூட்டுப்போட்டுப் பூட்டியிருக்கிறது.

நான் இவ்விடத்தில் சவுக்கியமாயிருக்கிறேன். வெயில் மெத்தக் கடினமாயிருப்பதால் ஜலதோஷம் கொண்டாப்போல் தேகம் காந்திக்கொண்டிருக்கிறது. அவ்விடம் பசவின்நெய் சகாயமாய்க் கிடைக்குமென்று நினைக்கிறேன். கொஞ்சம் நெய் ஆள்வருமாகில் எனக்கு அனுப்புங்கள் கூடியதானால்.

சிரீவலிபுத்தூரிலிருக்கிறதாகச் சொன்ன அலுவலுக்குத் தேவோப்பிளுப் பிள்ளை வரவில்லையாம். அதன்பேரில் இவ்விடத்திலிருந்து ஈசாக்கு உபாத்தியாருக்கு ஒரு கடிதம் அன்ஞேச்சியவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். Ignatius துரையவர்கள் இஷ்டத்திலிருக்கிற அலுவல் அவர்களே பொறுப்பாம். கனம் Huffton துரையவர்கள் ஒரு certificate கொடுப்பேன் னென்று அன்ஞேச்சியவர்கள் அவரிடம் பேசினபோது சொன்னாராம். கெம்பர்துரையவர்களும்

வேண்டுமோவில் பொரிச செய்வார்களென்று நம்புகிறேன். தாங்களும் ஈசாக்கு உபாத்தியாருக்கு ஒரு கடிதமெழுதுங்கள். சம்பளம் ரூ ௧௬-கொடுக்கப்படுமாம். நிலையான பள்ளிக்கூடமாயிருக்கக் கூடிய இடத்திலுள்ள அநுவலென்பதே விசேஷம். எப்படியானாலுஞ்சரியே.

அந்த இடம் பிடிக்குமட்டும் மெத்தப் பத்திரமாயிருக்கவேணும். அடிக்கடி அனுப்புவீர்களென்று நம்பி அப்படிச்செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாளையங்கோட்டையிலிருந்தால் அநேககாரியங்கள் தெரியவரும். இந்த ஊரில் ஒன்றும் தெரியுதில்லை. மற்றவைகளுக்கு இனிமேல் எழுதி யனுப்புவேன்.

நான் தங்களுக்கும் மதினியாரவர்களுக்கும் பணிவாய் ஸ்தோத்திரமும் பவுல்ராதருக்கும் E. T. ஞானப்பிரகாசத்துக்கு முத்தியும் செய்து முடிக்கிறேன்.

Yours very affectionately
T. S. Sanjeevy.

---

Tinnevelly
6th March 1874

Revd. and dear brother,

இவ்விடம் யாவருந் தேவகிருபையாற் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமங்களுக்கு கிருபங் கட்டளையிட உத்தரவாகவேண்டியது.

தாங்கள் ௨-௳ யெழுதியனுப்பிய காயிதம் மூந்தாம்நாள் வந்துசேர்ந்தது. நான் ௸ ௨-௳ தானே யெழுதியனுப்பிய காயிதம் அவ்விடத்துக்கு இதற்குள் வந்து சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன்.

சிவகிரித்தம்பி காயிதமும் வந்து சேர்ந்தது, பதிலனுப்பி யிருக்கிறேன். நாளைத்தினமும் ஒரு காயிதமனுப்பப் போகிறேன்.

அம்பாசமுத்திரம் மதினியும் சேலத்தம்மாளும் இவ்விடத்தில் நம்முடைய வீட்டில் வந்திருக்கிறார்கள். கைப்பிள்ளைக்கு முந்தினதக்கு நெற்றியிலொரு காயம், வாசியாகி வருகிறது. அத்தோடே இருமலுபத்திரவம் அதிகம். பஞ்சாமிர்தங் கூடிய மட்டுஞ் சுகமாயிருக்கிறாள். தம்பி சஞ்சீவி யிங்கே தானிருக்கிறான். அவன் காயித மித்துடன் வருகிறது.

* * *

நமதப்பா அவர்களுக்கு வீக்கம் வற்றினதுக்காக ஆண்டவருக்குத் தோத்திரம் இன்னும் பெலப்படுகிறதான குணந் தோன்றுகிறது தான் மனதுக்கு ஆயாசம்.

இவ்விடம் பள்ளிக்கூடங் கல்விச்சாலைகளில் பெரியமாறுதல் நடக்கும் போலும். லாஷ் ஐயரவர்கள் சென்னை பட்டணத்துக்கு ஆலோசனைச் சங்கத்துக்கு அழைக்கப்பட்டு இன்று புறப்பட்டுப் போகிறார்கள். அந்த மார்க்கமாய்த்தான் சீமைக்கும். கனம் சார்ஜென்றையரவர்கள் அடுத்த சனிக்கிழமை வருவதாகவும் 5-சேகரங்களை மேற் பார்ப்பதாகவும் லாஷையரவர்கள் மூலமாய்க் கேள்வி.

மனுவேல் தெய்வநாயகம்பிள்ளையின் இளைய சகோதரியினுடைய பேர் எலிசப்பேத்து பாக்கியம்.

நேற்று ஷெ பிள்ளையைக்கண்டு பேசிக்கொண்டதில் ரூ ௨௱-க்குக் குறையாமல் அதற்குமேல் கைக்குகேட்ட மட்டுக்கும் நகை போடுவதாய்ச் சொன்னார்.

கலியாணத்துக்கு ஆத்திரப்பட்டால் நகை குறைந்து போகலாகாது. ஆவதால் நகைகளெல்லாஞ் சரிவர ஆகப்பண்ணிக்கொண்டு கலியாணத்தை வைக்க வேணும். விஷயமுந்திச் செய்து கொள்ளவேண்டியது. கலியாணமான பிறகுசெய்வது அப்படி அப்படித்தான். ஆவதால் கலியாணத்தை மாத்திரம் உறுதி செய்து வைத்துக்கொண்டு அப்புறம் இருக்கிற சாவகாசத்துக்கும் வசதிக்குந் தக்கதாய்க் கலியாணத்தை வைத்துக்கொள்வது, அதற்குள் ஐயா அவர்களுக்கும் பெலன் வரலாமென்பது தங்கள் கொழுந்தியின் அபிப்பிராயம்.

தங்களுக்கும் பெரியோர்க்கும் வந்தனமும் மற்றவர்களுக்கு வாழ்த்துதலுஞ் சொல்லுகிறோம்.

இப்படிக்கு
தாழ்மையுள்ள ஊழியன்
ஏசுதாசன்

---

Recd. by J. D. S. 11—3—74

Tinnevelly, 7th March 1874

My dear Brother,

தேவகிருபையால் யாவருஞ்சேமம். அவ்விடஞ் சேமலாபங்களைக் குறித்தறிய வாஞ்சிக்கிறோம். நான் ௬-டெ அனுப்பிய காயிதம் வந்து சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன். மூத்த அண்ணாவியவர்கள் ௨-டெ எழுதிய காயிதம் ௬-டெ சாயங்காலம் வந்து சேர்ந்தது

"நமதய்யா அவர்கள் சுகசீர் முன்பார்த்துப் போனபடிதான் பெலவீன மற்றது. ஆனால் தேவகிருபையினாலே தேகத்தில் கண்ட வீக்கம் வற்றி வருகிறது. மருந்துஞ் செய்யப்பட்டு வருகிறது. டிரசர் திரும்பவும் இப்போது வந்திருக்கிற புது டிரசருடன் காரியஞ் சொல்லிக்காட்டி ௨-மாசத்து ராஜாவின் பேரில் அனுப்பிக்கொண்டு போனார். மூன்று தடவை வந்தார். அவருக்கு உபசாரணையாக 7-ரூ பீஸ் செலுத்தலாச்சுது. இது பெரிதல்ல, நமதய்யாவின் சுகமே" என்றும்" நீங்களெல்லாரும் நமதய்யாவைப்பார்க்க வந்திருந்தது மனதுக்கு மெத்த ஆறுதல், நல்ல உதவியுமாயிருந்தது. நீ இராத்திரியும் விழித்திருந்தாய். தம்பி சஞ்சீவி இருந்தபோதும் எனக்கு மெத்த உதவியாயிருந்தது. கருத்தனை முன்னிட்டுக் கூடினளவு விழிப்பாயிருந்து பார்க்கிறேன். கருத்தர் கிருபையாயிருந்து சுகந்தருவாராக. பிரயாசம் பெரிதல்ல, வருத்தமுமல்ல" என்றுங் கண்டிருக்கிறது.

உனக்குங் காயிதம் வந்திருக்கலாம். கருத்தர் நமதன்னையாகிய அவர்களுக்கு நீடிய ஆயுளையும் இரட்டிப்பான வரப்பிரசாதங்களையும் கட்டளையிடுவாரென்று உறுதியாய் நம்புகிறேன்.

அனாவண்டி விசாரித்துக்கொண்டிருக்கிறேன். ஜமீன் ஸ்திதி மற்றும் அவ்விடம் சீரு மெவ்விதமாயிருக்கிற தென்றறிய விரும்புகிறேன்.

நாங்கள் உங்களிருவருக்கும் வாழ்த்துதலும் பிள்ளைகளுக்கு முத்தியும் செய்கிறோம்.

Yours very affectionately
J. Savarirayan

---

Nallammalpuram,
10th March 1874

My DEAR SON,

இவ்விடம யாவருந் தேவகிருபையாற் சுகம். அவ்விடத்துச் சுகசெய்திக்கு எழுதவும். நமதய்யாவுக்கு முன்னுக்கு இப்போது தாவிளை. கால் வீக்கமாத்திரங் கொஞ்சமிருக்கிறது. சாப்பாடு சுருக்கம், சீரணித்தல் அதிகமில்லை. கருத்தர் படிப்படியாய்ச் சுகந்தருவார், இம்மட்டுங் காத்தவர் இன்னமுங் காப்பார். நாளது மீ" ௨-௨ போட்டனுப்பின உனது பட்சமுள்ள காகிதம் வந்தது. இதின் மத்தியில் நான் எழுதியகாகிதம் வந்திருக்கவேண்டியது. மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை போனவாரந் திங்கள்கிழமைச் சாயுங்காலம் நாளது மீ" ௨-௨ புறப்பட்டு பாளையங்கோட்டைக்குப் போவதாயும் அதே

மார்க்கமாய் அவ்விடத்துக்கு வருவதாயும் வந்தார். ஆனால் இப்போது நாம் கேட்டபடி சுவிசேஷபுரத்திலிருந்து நேற்று இராத்திரி இன்று விடிப்புறப் பட்டுப் போகிறதாகச் செய்தி இதைக் கவனித்துக் கொள்ள வேண்டியது. பிழைக்கவேணும், உருப்படவேணும், மதிக்கப்படவேணும் என்கிற புத்தியிருந்தால், இப்படி யிருக்கத்தக்கதில்லை என்று நினைக்கிறேன். சுவிசேஷபுரத்தில் தாமிசப்படத் தக்க அவசரம் ஒன்றுமில்லை.

சேருவை—பாக்கியம்பிள்ளை இங்கே வந்து நேற்றுக்காலமே திரும்பிப் போனார். வரும்போது கனம்.........ஐயரவர்களிடத்திலிருந்து ஓலைகூட காகிதம் கனம்.........ர்ட் ஐயரவர்கள் பேருக்கு வாங்கிவந்தார். நமக்குத் தெரிவியாமலும் கேளாமலுஞ் செய்தார் வகை தெரியாது. ஷெ ஐயரவர்களோடே கலந்து பேசிக்கொண்டு தீர்மானிப்போம் என்று சொல்லியிருக்கிறேன். கருத்தருக்குச் சித்தமானால் உயிர்த்தெழுந்த திருநாளோடே அவனை திரும்பி வரச்சொல்லி யனுப்பி யிருக்கிறது.

மாசத்தில் நிறைவேறச் செய்கிறது என்று நம்முடைய தன் யோசனை, இதற்குள்ளாக இதோடே மற்றக் கலியாணத்துக்குஞ் சரிபண்ணிக் கொள்ளலா மென்பது நோக்கம். இது காரியங்களைப்பற்றி யெல்லாம் உன்னோடே கலந்து கொண்டு தீர்மானிக்க வேண்டு மென்பது என் கருத்து. நீ ஷெ பாக்கியம்பிள்ளையிடத்தில் ஐயாவிடத்திற்கு அங்கேதான் சகலத்தையும் பேசி முடித்துக்கொள்ள வேண்டிய தென்று சொல்லி விட்டதாகச் செய்தி. நீ யனுப்பின காகிதத்திலும் அந்தப்படியே குறிப்புக் காட்டியிருக்கிறது. அந்தப்படிக்கு காரியத்தை நிறை வேற்றத் தேவகிருபை காரியஞ்சரியாய் நடக்கக் கருதியிருக்கிறேன். தற்சமயத்தில் நினையாமல் நேரிட்ட ஐயாவுடைய சுகத்தப்பாலுண்டான செலவு வருத்தத்தோடே நாளது கோரிக்கைக்குரிய செலவுக்கு நடக்கப் பார்க்க வேண்டியதிருக்கிறது. பாக்கியம்பிள்ளைக்கு உயிர்த்தெழுந்த திருநாட் சந்தியோடே குறித்த தொகைவந்து சேரச் செய்யட்டு மென்றுந் தெரிவித்திருக்கிறது. கருத்தர் காரியம் நன்றாய் நடக்கச்செய்ய வேண்டுகிறேன்.

ம.மிக்கேல்பிள்ளை நேற்று விஷயநாராயணத்துக்குத் தலைமையனைக் கண்டு பேசிக் கூட்டிவரப் போனார். நாளைக்குத் தலைமையனர் வருவதாயின்று திரும்பி வந்து சொன்னார். அவர் வந்த பின்புள்ள செய்திக்குத் தெரிவிப்பேன். எப்படியும் காரியமாகச்செய்யவேண்டியதுதான். விஷயநாராயணம் வியாகப்பபிள்ளை மனைக்காரியத்தை யிட்டு அடிக்கடி எனக்கு எழுது

கிறார்; நான்பதில் வாட்டேம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்; பணமாகா தது தான் தாமிதமென்றும்.

டோனாவூருக்கு மரியசுந்தரி போனதின்பின்பு செய்தி ஒன்றுந் தெரிய வில்லை. பிள்ளை மிகுந்த துன்பத்திலிருப்பாள்: சுவாமி பார்த்துக்கொள்ளட்டும். அவர் நல்லவர், நம்மால் என்னசெய்யலாம்.

இவ்விடத்து நாங்கள் உனக்கு அநேக வந்தன வாழ்த்துதற் சொல்லு கிறோம்.

இப்படிக்கு
Yours sincerely
M. Savarirayan.

P. S. சிறு மேரியம்மாள் வந்ததற்கு இப்போது வேறு ஆளாயிருக் கிறாள், இது பெரிய சந்தோஷம், மதுரஞ்சேவி பக்கை என்றோடே கூடதான்.
M. S.

---

[To, F. C. Carr Esquire]

Sivagiri
10th March 1874

Most honoured Sir,

My wife and children are now with me at Sivagiri and I am thankful to inform your honour that I am getting on very well here. I have got a house not for from the palace, which after some necessary repairs would, I hope, be very comfortable. I trust I understand the Zemin business perfectly well, though there are still a few things that I could learn only after a time.

The Zemindar attends office an hour a day. He keeps up his English studies also. I am very pleased with his conduct in all matters. I cannot speak too highly of his private character. If he would preserve his present character, and pursue this course, and not listen to evil counsellors, I am sure he will prove the best Zemindar in Tinnevelly. All I am anxious about is that he should

act in all matters boldly according to his own independent judgment, and not allow himself to be led astray by intriguing women and evil counsellors, some of whom are his nearest relatives, who are ready to advise him to adopt illegal and unjust methods in the management of the estate. I always advise him to keep English gentlemen and English Government as his model, and to hold his word sacred. He has not yet clearly defined my work and authority in the Zemindary. He has now gone to Palamcottah. When he returns, I am going to ask him to give me in writing the portion of my work and the limit of my authority in the Zemindary. I am sorry to inform your honour that considerable anxiety prevails here with regard to the auction sale of the right, title and interest possessed by the late Zemindar in the Zemin.

I am very sorry to hear that your honour is going to England on leave for a few months. I will not fail to come and pay my respects personally to your honour before your honour leaves Palamcottah.

With my humble respects

I remain

Your honours most grateful, most obedient servant

John. D. Savarirayan.

---

Tinnevelly

11th March 1874.

My Dear Brother,

நானிது முன்னனுப்பிய இரண்டு காயிதங்களும் வந்து சேருவதில் தாமசமுற்றிருக்குமென்பதாய் விசனப்படுகிறேன். ஒரு பெரிய ஜமீனில் நித்தியம் ஒரு ஆள் சங்கரநயினார்கோயிலுக்குப் போய் காயிதம் வாங்கி வரப்

போட ஏற்பாடு செய்யக் கூடாதிருப்பதை விட்டு ஆச்சரியப்படுகிறேன். திரு மஞ்சனக்குடத்தி லித்தனை விருலாஞல் தெப்பக்குளத்தில் எத்தனை விருலோ.

தம்பி சவரிமுத்துப்பிள்ளையும் ஆளும் இன்று வந்து சேரச் சமாசாரம் யாவும் தெரிந்து கொண்டேன். குறிப்பாயித்தான், பணமும் வந்து சேர்ந்தது.

அவ்விடம் ஜமீன்தாரவர்கள் இவ்விடத்துக்கு வந்திருக்கிறதாய்க் கேள்விப் பட்டேன், அவர்களைப் போய்க் கண்டுகொள்ள யோசித்திருக்கிறேன்

கனம் சார்ஜென்ஹறபரவர்கள் இன்று காலையில் வந்து சேர்ந்தார்கள் பகல் முழுவதும் கண்டுகொள்ள வந்தபேர்களுக்கு பேட்டி கொடுப்பதில்த் தான் செலவழித்தது- D. D. பட்டம் பெற்று வந்திருப்பதாய்ப் பிரஸ்தாபம்.

வெள்ளிக்கிழமைப் பகல் பத்துமணிக்குமேல் கோவிலில் meeting உம் அங்கேதானே பேட்டியும் இருப்பதாய் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

Judge துரையவர்கள் புறப்படுகிற கால நிச்சயந் தெரிந்தெழுதி யனுப்புகிறேன்.

ஜமீன் ஏலத்தைக்குறித்து விசாரித்ததில் The right, title and interest of the deceased defendant (the late Zemindar) என்று ஏலம் கூறி விடப்பட்டிருப்பதாகவும் கடன் காரர் யாவருக்கும் பொதுவாய் ஒருவர் சிவசுப்பிரமணியபிள்ளை யென்பவர் ஏலத்தி லெடுத்திருப்பதாய்க் கேள்வி மற்றும் விசேஷங்களைத் தம்பி யெழுதியிருப்பான்.

நாங்க ளனைவருந் தேவகிருபையாற் சேமம், அவ்விடம் சகல க்ஷேம லாபங்களுக்கும் எழுதியனுப்பவும்.

நாங்க ளுங்க ளிருவருக்கும் வாழ்த்துதலும் பிள்ளைகளுக்கு முத்தியும் சொல்லுகிறோம்.

இப்படிக்கு
ஏசுதாசன்

P. S. Things must not be allowed to go on at this rate. What is the use of professing to have a manager? Try to effect a reconciliation between the Zemindar and his aunt; this is indeed very desirable.

J. S.

Give my love to our Vedhanayaga Tevar, I hope he is getting on well.

J. S.

12th, 7 A. M.

இப்போதான் மூத்த அண்ணாவியவர்கள் காயிதம் வந்தது "நதையப்பா அவர்கள் சுகசீர் முன்னுக்கு இப்போது தாவிலை, பெலவீனமதிகம்- போஜனப்பிரியமும் சீரணமாகுவதும் தாழ்வு, வீக்கம் வற்றியிருக்கிறது, காலிலே தான் இன்னமுங் கொஞ்சமிருக்கிறது" என்று கண்டிருக்கிறது-

யாவரும் சேமம் J. S.

அவ்விடத்து ஆள்வசம் ரொட்டி-3, காப்பிக்கொட்டைப்படி-வ it is very dear) காயிதம் லக்கோடா 1- 12th காலை 8-மணிக்கு ஏற்பித்து அனுப்பியிருக்கிறது--எப்போதங்கே வந்து சேருவானோ தெரியாது-

J. S.

---

மகா-ள-ள-ஸ்ரீ சங்கிக்கப்படத்தக்க மகாகனம்பொருந்திய அண்ணாவியவர்கள் சமூகத்திற்கு.

அடியேன் J- ஞானப்பிரகாசம் மிகவும் பணிந்து எழுதிக்கொண்ட தாழ்மையான விண்ணப்பம்.

நான் உ-வ தபாவிலனுப்பிய விண்ணப்பம் இது முன்வந்து சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன்.

மகா:—அய்யா அவர்களுடைய சுகவிசேஷத்தையும் தங்களெல்லாருடைய சுகக்ஷேமத்தையும் அறியத்தாபமாயிருக்கிறேன். தங்களிடத்திலிருந்து வந்த பின் அய்யா அவர்களுடைய சுகத்தைப்பற்றித் தெரியவராதிருக்கிறதினால் இருக்கிற மனவருத்தங் கொஞ்சமல்ல; எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிறேன்.

* * *

வடலிவிளை அத்தான் முத்துசாமியாபிள்ளையவர்கள் தங்கள் மகளை தம்பிக்குக் கலியாணஞ் செய்கிறதாயிருந்தால் அவ்விடத்தில் ஒரு பெண்ணைக் கலியாணஞ்செய்து கொள்ளுகிறதில் ரொம்பவும் சந்தோஷமென்று பக்கவழியா யறிவித்தார்கள்.

தேவசித்தம்போல. பிள்ளை கூடியவரை மற்ற அவர்கள் பிள்ளைகளுக்கு இலட்சணம்: ஆனால் தம்பிமாருடைய பிரியத்திற்குள் நடக்கிறதுதான் முதல்காரியம்.

இன்றுகாலே தங்கள் அடியான் ஏ. சவரிராயன் இவ்விடம் வந்ததால் அய்யா அவர்களுடைய சுகம் குறிப்பாய்த் தெரிந்தது. ஆண்டவர் கிருபை-

அய்யா அம்மை மதினியவர்களுக்குப் பணிவான வந்தனம்.

1874-ம் ௵ } இப்படிக்கு தாழ்மையுள்ள ஊழியன்
மார்ச்சு ௴ } ஞானப்பிரகாசம்.
11-ௗ கூனியூர்.

[தேவசகாயத்துக்கு தருமராதசஞ்சீவி]

Tinnevelly
11th March 1874

My dear brother,

இன்று காலையில் அண்ணாச்சி சவரிமுத்துப்பிள்ளையவர்கள் தச்சநல்லூர் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். சுகமாய் அவர்கள் வந்ததால் தங்களெல்லாருடைய சுகசெய்திக்கும் அறிய ஏதுவாச்சுது. இன்று சாயங்காலம் இவ்விடத்திலிருந்து தபால்வண்டி மார்க்கமாய் வடக்கன்குளம் போகிறார்கள்.

கல்லம்மாள்புரத்திலிருந்து போனவாரம் அண்ணாச்சியவர்கள் கடிதம் வந்தது. ஐயா அவர்களுக்குத் தேகவீக்கம் வற்றியிருக்கிறதாகவும் மெத்தப்பலவீனமாயிருக்கிறதாகவும் எழுதியிருந்தது. கர்த்தர் முற்றிலும் சுகங்கொடுக்கப் பிரார்த்திப்போமாக.

நானும் அண்ணாச்சியவர்களும் முன்னெழுதிய கடிதம் தங்கள் கையில் வந்து சேருவதற்கு ஏதுவில்லாதிருப்பது பற்றி விசனப்படுகிறோம். இப்போது வருகிறவன் வசம் (அங்கிருந்து வந்தவன்) மூன்று ரொட்டியும் (௩) படி காப்பியும் கொஞ்சம் பிஸ்கோத்தும் அண்ணாச்சி சவரிமுத்துப்பிள்ளையவர்கள் வாங்கியனுப்பியிருக்கிறார்கள்.

நான் முன் அனுப்பியிருக்கிற கடிதத்தில் சிரீவல்லிபுத்தூர் அலுவலைக் குறித்துச் சுருக்கமாய் எழுதியிருந்தேன். இவ்விடத்திலிருந்து அண்ணாச்சியவர்கள் (மக) நாளுக்குமுன் ஈசாக்கு உபாத்தியாருக்கு அனுப்பிய கடிதத்துக்கு இன்னமும் பதில் வரவில்லை. அவர் தமது சுயசாதியாரில் யாரையாகிலும் வைக்கலாமென்கிற அபிப்பிராயங் கொண்டிருக்கிறதாக நினைக்கத்தக்கதாயிருக்கிறது. பட்டணத்திலிருக்கும் தேயோப்பிலுப்பிள்ளைக்கு D. A. P. பிள்ளை அந்த அலுவலுக்கு வர எழுதினதின்பேரில் அவர் வருகிறதில்லை என்ற கடிதம் வந்தது. வேதநாயகம் ஐயர் சிபாரிசு செய்வதாவுமிருந்தது. தாங்கள் ஈசாக்கு வாத்தியாருக்கு எழுதியாவது அல்லது Ignatio துரைக்காவது எழுதுங்கள். Mr. Ignatio ஈசாக்குவாத்தியாருடைய பேச்சின்பேரில் நடக்கிறதாகச் செய்தி. Meadows ஐயரவர்களுக்கு எழுதிப்பார்க்கலாமென்று தாங்கள் நினைத்தால் அப்படிச் செய்யலாம். அவர்கள் எட்டியாபுரத்திற்குச் சமீபமாய்க் குதிரையிலிருந்து விழுந்து காரையெலும்பு முறிந்துபோனதாகவும் மதுரையிலிருந்து Dr. Palmer வந்து கட்டிச் சவுக்கியமாயிருக்கிறதாக Kember துரையவர் [illegible] நான் நேற்று இரவு கண்டபோது

சொன்னார்கள். எனக்குத் தச்சநல்லூருப் பள்ளிக்கூடத்திலிருக்கச் சற்றும் மனமில்லை. grant-in-aid சிறதாரப்பள்ளிக்கூடங்களை எடுத்துப் போடுகிற தாக ஒருபேச்சு மிருக்கிறது. நேற்றுத்தான் நிலுவையிலிருந்த grant வாங்கினேன். கூடியமட்டிலும் அந்தஅலுவலாகக் கூடியதற்குப் பாருங்கள் அப்பால் நம்முடைய சித்தப்படியல்ல, அந்தஅலுவல் நிலையானதும் மிஷனில் இருப்பதுமே விசேஷம், சம்பளம் ௭௬-ரூ

Kember துரையவர்கள் தங்களுடைய சுகசெய்தி யெப்படி, வீடு நல்ல வீடு யிருக்கிறதா, மேல்விலாசம் எழுதுவது யெப்படி யென்றும் விசாரித்தார்கள். இன்று இளஞ்சனைக்குப் போகிறார்கள். ரஜா நேற்று முதல்.

தாங்கள் ஆள் இவ்விடம் அனுப்பும்போது வேண்டியதற்கு விபரமாய் எழுதியனுப்பினால் வாங்கி யனுப்ப ஆயித்தமாயிருக்கிறேன். பிள்ளைகளைப் பார்க்கத்தான் மெத்த ஆசையாயிருக்கிறேன். முக்கியமாய்த் தங்களுடையவும் மதினி பிள்ளைகளுடைய சுகத்தைப்பற்றி எச்சரிக்கையா யிருப்பதும் அலுவலில் முயற்சியா யிருப்பதுமே கருத்தாயிருக்கப் பிராத்திக்கிறேன்.

வந்த மனுஷனுக்கு வடக்கன்குளம் அண்ணாச்சியவர்கள் (௳)ரூ கொடுத்திருக்கிறார்கள்.

மற்றவைகளுக்குத் தாங்கள் எழுதுங்கள். தங்களுக்கும் மதினிக்கும் பணிவான தோத்திரம், பிள்ளைகளுக்கு முத்தி.

அன்பும் பணிவுமான
த. ச. சஞ்சீவி

---

Tinnevelly,
13th March 1874,

Revd. and Dear Brother.

தங்களுடைய கடிதம் சாலமோன் வசம் பெற்றுக்கொண்டேன். ஐயா அவர்களுக்கு இதுவரைக்கும் இவ்வளவு சுகங் கட்டளையிட்ட ஆண்டவருக்குத் தாழ்மையாய்த் தோத்திரஞ் செலுத்தி இன்னமும் முற்றிலும் கிருபை கூரப் பிராத்திக்கிறேன்.

கெம்பர்துரையவர்கள் கூட விடுமுறைக்கு அவ்விடம் வந்த மோசே உபதேசியார் மருமகன் சாமுவேல் மாணாக்கன் வசம் ரூ 10-0-0 இயாக்கோபுப் பிள்ளை யிடம் சேரவும். அவ்விடத்திலிருந்து தங்களிடம் அனுப்பப்படவும், ஷை சாமுவேலுக்குச் சொல்லிப் பணமுங் கொடுத்திருந்தேன். அது

தங்களிடம் வந்து சேர்ந்ததுக்கு எழுதியனுப்பி விக்கப் பிரார்த்திக்கிறேன். ஞாயிற்றுக்கிழமை யன்று பாளையங்கோட்டை தேவாலயத்தில் ஓலைகூறினதாகக் கேள்விப்பட்டோம். ஈ: ஞானப்பிரகாசம்பிள்ளை யவர்கள் வந்த பிற்பாடு அது உண்மையென்று அறிந்தோம்.

ஆமீஸ் அம்மாளுக்கு ஓலை கூறியிருக்க மாட்டாதென்கிற அபிப்பிராயங் கொண்டிருக்கிறேன். இவ்விடத்திலும் மற்றவர்கள் அதைக்குறித்து முந்தின பிள்ளைக்கும் ஓலைகூறி யிருக்கிறதோ என்னவோ என்கிற பேச்சும் பேசிக் கொள்ளுகிறார்கள்.'

நம்முடைய மனதுக்கும் திருப்தி யில்லைத்தானே. ஓலை முந்திப் பிந்தி எப்படிக்கூறினாலும் ஆமீசுக்கும் மேரிக்கும் கலியாணம் ஒருதருணத்தி லிருப்பதே காரியத்துக்கும் கனத்துக்குக்கும் சரியாயிருக்கும், ஆவதால் காலம் கொஞ்சம் பிந்தினாலும் இரண்டு கலியாணமும் ஒன்றாயிருப்பதே நல்லது.

இன்னமும் ஒருகாரியம்: மரியசுந்தரி அம்மாள் டோனாவூர் சேர்ந்தது தங்களுக்குத் தெரியும். ஆபிரகாம்பிள்ளை யவர்கள் இவ்விடம் தமது மகன் சாமுவேல்பிள்ளை யவர்களுக்கு எழுதிய கடிதத்தில் நல்லம்மாள்புரத்தில் ஐயரவர்களுக்கு மரியசுந்தரியை அனுப்புவிக்கும்படி அவர்களுக்குக் கடிதம் யெழுதியனுப்ப வேண்டும், மரியசுந்தரி வரட்டுமென்று கடிதம் வருமானால் அனுப்புவிக்கிறது, இல்லாவிட்டால் நான்தானே சங்கடப்படவேண்டியது யென்று கடிதத்தில் கண்டிருந்தார்களாம். இதைக்கவனித்துக்கொண்டு தாங்கள் சாவதானமாய் நடந்து கொள்ளும்படி கேட்கிறேன்.

மற்றுங்காரியங்களுக்கு அண்ணாச்சியவர்களால் தெரியவரும். இன்று சாமான்கள் சில வாங்கிக் கொடுக்க ஏதுவில்லாது போச்சுது. இலாஞ் ஐயரவர்கள் சீர்மைக்குப் போன சமாசாரம் தெரிந்திருக்கலாம்.

நாங்கள் பணிவான தோத்திரஞ் செய்கிறோம்.

இப்படிக்கு

ஊழி—த. ச. சஞ்சீவி.

---

13th March 1874

Tinnevelly.

Revd. and Dear Brother.

யாவரும் தேவகிருபையால் சேமம். தாங்களனுப்பிய லட்டர் மரிய மிக்கேல்பிள்ளை யிடம் வாங்கிக்கொண்டேன்.

தாங்கள் 10-௳ யிட்டுத் தம்பி சஞ்சீவிக்கனுப்பித்த காயிதம் நேற்று உதயத்தில் வந்து சேர்ந்ததால் நானுந் தம்பியும் 6-௳ எழுதியகாயிதம் வந்து சேரவில்லை யென்று நினைத்துக்கொண்டோம். அதில் கண்டிருந்தபடிக்கு அய்யா அவர்களுக்குள்ள சுகசெய்தியை சிவகிரித்தம்பிக்கு எழுதியனுப்பி யிருக்கிறேன். மூந்தாம்நாள் சிவகிரியிலிருந்து இங்கிருந்து கூடப்போயிருந்த தம்பியின் சகலப்பிள்ளையும் கூலியாளும் வந்தார்கள். கூலியாள் வசங் காயிதமெழுதி யனுப்பிப் போட்டேன். சவரிமுத்துப்பிள்ளை வடக்குன்குளத்துக்குப் போய்விட்டார்.

என்னுடைய 6-௳ காயிதம் வந்து சேர்ந்த விபரத்தைத் தங்களின் 11-௳ திருபத்தா லறிந்து கொண்டேன்.

அம்பாசமுத்திர மதினியும் பிள்ளைகளும் செவ்வாய்க்கிழமை யிரவு தபால்வண்டி மார்க்கமாய் ஊருக்குப் போய்விட்டார்கள். குழந்தைக்குக் காயம் வாசி.

மகாகனம் பொருந்திய சார்ஜென்றையரவர்கள் மூந்தாம்நாள் காலையில் வந்து சேர்ந்தார்கள். சௌக்கியமாக இருக்கிறார்கள்.

இன்றைக்கு பாளையங்கோட்டை, ஆள்வார்நேரிச் சேகரச் சபைக்குக் கோவிலில் சந்திப்பு, நானும் போயிருந்தேன்.

மிசியோன் வகைக்கு ஒருவருஷத்திற்கு மிது முன்னில்லாத வருமான முண்டாயிருக்கிறதாகவும், சுதேச சபை தன்காரியத்தைக் கூடியமட்டுந் தானே விசாரித்து நடத்தும்படியான வழியில் கொணர்ந்துவிட்டு விடும்படியான நோக்கமாய் அவர்களை யனுப்பியிருக்கிறதாகவும், மற்றும் ஐரோப்பிய ஐயன்மார்களுக்கு சிலர் கல்வி விஷயத்துக்கும் சிலர் தேசாந்திரத்துக்குமாக ஏற்படுத்தப் படுவார்களென்றும் சொன்னார்கள்.

திருநெல்வேலிச் சபைகளுக்குக் கண்காணிமார்க தங்களையும் கால்ட்வேலையரவர்களையும் குறித்து அறிக்கை கூறினதில் யாவரும் ஒப்புக்கொண்டார்கள், ஆனால் பங்காளங் கண்காணியாரவர்கள் செய்கிற ஏற்பாடு ஒருமூலைக்கென்றிராமல் எவ்விடத்துக்கும் பொருந்துவதாகச் செய்யவேணுமென்று தெரியப்படுத்தினதின்பேரில், இந்தியாவுக்கு ஒரு உத்தேசம் 8-10 பேர் கண்காணியாராக ஏற்படுத்துவது அவசியமென்று அதற்கென்று சீமையில் கமிற்றியார் கோரிக்கை நடக்கிறது: இதுகாரியம் ஒரு தீர்மானத்துக்கும் ஒழுங்குக்கும் வரக் காலஞ்செல்லும், ஆவதால் அதுவரையில் காத்துக்கொண்டிருப்பது மனதுக்கு ரம்மியப்படவில்லை: கமிட்டியாரு மிது சரிதானென்று ஒப்புக்கொண்டு என்னை யனுப்பினார்கள்; ஆனாலும் நீங்கள் சீக்கிரத்

தக்குள் ஒரு வகைக்கென்று திரும்ப வரவேண்டியதிருக்கும்: அதற்குள் முன் தீர்மானப்படிக்கு கண்காணியாராய் எந்தெந்தச் சபைகளை யென்னென்னமாதிரியாய் விசாரித்து வருவதாகுமோ அந்தப்படிக்கு ஏற்பாடு செய்யப்படுமென்று கமிட்டிமார் சொன்னார்களென்றும்: டோனாவூர், சாண்டை கல்லூர், பன்றிகுளம், பண்ணைவிளை, பாளையங்கோட்டை யிவ்வளவு விசாரணையும் நம்மைச் சேர்ந்ததாகுமென்றுஞ் சொன்னார்கள்.

கனம் ஐயரவர்களின் பேச்சுக்குறிப்பால் எனக்குத் தோன்றுவது—மெஞ்ஞானபுரம், சுவிசேஷபுரம் இவைகளைக் கால்ட் வேலையரவர்கள் விசாரணைக்கு ஒப்புவிப்பார்கள் போலிருக்கிறது.

நாளடைவில் மற்றுங்காரியங்களைச் சமயத்துக்குத் தக்கதாய் வெளியிடுவதாகவும் சொல்லி யிருக்கிறார்கள். நானின்னமும் அவர்களைத் தனித்துக் கண்டுகொள்ள வில்லை. மற்றும் விவரங்களுக்குப் பின்னாலெழுதுகிறேன்.

சவ்வரிசி சீனி தேயிலை வாங்கியனுப்பி யிருக்கிறது. தங்களுக்கும் நமதய்யா அவர்களுக்கும் அம்மைக்கும் மதினியாரவர்களுக்கும் தோத்திரமும் பிள்ளைகளுக்கு வாழ்த்தலுஞ் சொல்லுகிறோம்.

இப்படிக்கு
தாழ்மையுள்ள ஊழியன்
ஏகதாசன்.

---

Nallammalpuram,
18th March 1874.

My dear Brother,

நாளது மீ 12-உ போட்டனுப்பின உனது பட்சமுள்ள காகிதம் இன்று வந்து சேர்ந்தது.—அதினால் அவிடத்துச் சுகசெய்தி யறிந்தோம் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். இவ்விடம் எல்லாருந் தேவகிருபையாற் சுகமேயிருக்கிறோம். நமதய்யாவுக்குக் காலில் இன்னமும் வீக்கம் இருக்கிறது காலையிற் சற்று வற்றினது போல சருமஞ் சற்று திரைந்து சுருங்கித் தோன்றுகிறது சாயுங்காலம் வேறுவிதமாய் வீங்கி உதைப்பாய்த் தோன்றுகிறது. எந்தப் பெலவீனமாயிருந்தாலும் உயிரோடிருந்தாற் போதுமென்கிற பிரார்த்தனையே விசேஷமுள்ளது. அவர் கிருபை செய்ய வேண்டும் எனக்கு வீக்கம் காலில் வற்றாமலிருப்பது மனதுக்கு ஐயமாயிருக்கிறது மனதுக்கு ஆயாசமுஞ் சோர்புமாயிருக்கிறது டாக்டருக்கு அடிக்கடி காகிதம்

எழுதி மருந்துங் கொடுக்கப்படுகிறது. மற்றப்படிப் பெலவீனத்தைப் பற்றிக் காரியமில்லை. பெலவீனம் பக்குவமுறையாய் வர வர நீங்கும். முன்னுக்கு இப்போ தெவ்வளவோ செச்சிதமுண்டு. எழுந்திருந்து இருக்க எழுந்திருந்து நிற்கக் கூடும். கால் வீக்கமாத்திரம் வற்றினால் அதிகச் செச்சிதமிருக்குமென்று நினைக்கிறேன். இதைப்பற்றி இப்போது செபம். இதையும் விசேஷித்து நினைக்கவும் மன்றாடவும்.

கனம் Dr. Sargent. ஐயரவர்கள் பாளையங்கோட்டை வந்து போன வாரஞ் சேர்ந்தார்களாம். நான் இந்த வாரம் போய்ப் பார்த்து வரவேண்டுமென்றிருக்கிறேன். கமதய்யாவைச் சிலநாள் விட்டுப்பிரிய வேண்டியதிருப்பது மனதுக்கு வருத்தம். அதிகநாள்க்கடந்து பார்க்கப்போவது நன்றாயிராது. ஆனதால் வியாழன் வெள்ளியில்ப்போய் அவர்களைப் பார்க்க விரும்புகிறேன். இப்படியே நீயும் ஒருநாளை வழிவந்து பார்த்துப் போவது நல்லது. இந்தப்படி செய்வாயென்று நம்புகிறேன். ஜமீன்தார் இறசெல்வேலிக்கு வந்திருக்கும் இந்தச்சந்தியிலே வந்து போனாலும் நல்லது தானே.

மருதூர்க்கரைப் பிள்ளையைப்பற்றி: என் விருப்பம் ஒன்றுமில்லை, அந்த மனுஷன் காரியம் என்மனதுக்குப் பிடிப்பாகவில்லை. அம்பாசமுத்திரந் தம்பிக்கு மனம் எப்படியோ அப்படிச் செய்யட்டும், நான் விரும்புகிறதுமில்லை, அட்டி பண்ணுவதுமில்லை. இஷ்டம்போலாகட்டும். இதுவுந் தவிர தாபி தருமசஞ்சீவிநாதபிள்ளை காரியத்துக்கு இவ்விடத்தில் நாம் முகதாவிற் பேசிக்கொண்டபடிக்கு மனுவேல்பிள்ளைக்கு எழுதிக்கேட்டதில் அவர் சம்மதிக்குப் பதிற் காகிதமும் வந்திருக்கிறது. இனிக்காரியத்துக்கு ஒழுங்கும் காலமுங்குறித்து நடத்தப் பார்க்க வேண்டியது.

ஆயிஸ் காரியத்துக்கு மிசேல்பிள்ளை தமையனார் வியாகப்பபிள்ளை வருவதாய்ச் சொல்லியனுப்பினவர் இன்னமும் வரவில்லை. சேறவை பாக்கியம்பிள்ளை மேரி காரியத்துக்குக் காகிதமும் வாங்கிக்கொண்டு வந்து உறுதி பண்ணிப் போயிருக்கிறார். அவருடைய பக்கத்துக்கு பாளையங்கோட்டையில் ஓலை கூறினதாகவும் செய்தி வந்தது. இங்கே பாடுபட்ட வாரம் முடிந்து தான் ஓலை கூறப்படும். அதற்குமுன் மற்றக்காரியமுஞ் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். இருவை பெற்றாருக்கு கயிலாசபுரத்து தாவீதப்பிள்ளை வகையறாக் காலத்தைப்பற்றி 10-நாளைக்குள்ளே பதிற் சொல்வதாய்த் தெரிவித்திருக்கிறார்கள்.

சகலத்துக்கும் பணந்தான் காரியம் நடக்கவேண்டியதுக்கு அவசியமா

யிருக்கிறது. இதுவும் பெரிய கவலை. எல்லாவற்றிற்கும் மேலாகத் தேவ கிருபை முன்னிடவேண்டும், அவர்தாம் நமது தஞ்சம்.

அவ்விடத்தில் நெல்விலை எப்படி, அரிசிவிலை எப்படி, வாடகை அவ்விடத்திலிருந்து எவ்வளவு அடங்கும், இதைப்பற்றி யெழுதவும் கூடுமானால் பார்க்கிறது. ஏப்பிரல் மாசத்துக்குள்ளாக காரியம் நடந்தேற வேண்டியதுக்குச் சரிபண்ணவேண்டும். தற்சமைய வருத்தத்தில் இதுகாரியமு மிப்படியாக நேரிட்டிருக்கிறது மனதுக்கு ஒன்றும் ஓடவில்லை.

மரியசுந்தரியைக்குறித்த கவலையும் ஒரு பக்கத்தில் வாதிக்கிறது. ஆண்டவர் சித்தம் நமது பாக்கியம்.

அவ்விடத்துக்கு கண்ணுபிள்ளை மனைவி வந்திருப்பது நல்லது. பிள்ளைகள் சற்று வளரட்டும், பள்ளிக்கூடத்துக்கு இப்போது அவசரமில்லை. ஆனாலும் ஊரில் ஒரு நல்ல பள்ளிக்கூடமிருக்க வேண்டியது. அவ்விடத்து வேலைக்காரியம் நன்றாய் நடந்து வரத் தேவன் ஞானமுங் கிருபையும் தருவாராக.

இவ்விடத்து நாங்கள் உங்களிருவருக்கு வாழ்த்துதலும் பிள்ளைகளுக்கு முத்தியும் செய்கிறோம்.

Yours sincerely
M. Savarirayan.

---

Palamcottah
20th March 1874

மிகவும் பிரியதம்பீ,

நான் கல்லம்மாள்புரத்திலிருந்து நேற்றுக் காலையிற் புறப்பட்டு வழியில் வெயிலுக்கு இருந்து இருட்டி எட்டுமணிக்கு இவ்விடம் பாளையங்கோட்டை சேர்ந்தேன். இன்று காலை எட்டுமணிக்கு கனம் Dr. Sargent ஐயரவர்களைக் காணப்போனேன். போன சமையத்தில் ஐயரவர்கள் வெளியே போயிருந்தார்கள். சற்று காத்திருந்தேன் வந்தார்கள். சுருக்கமாய்ச் சுகசெய்தி கேட்டுப் பிற்பாடு 12-மணிபோல வரலாமென்று சொன்னார்கள். அந்தப்படிக்குப் போனேன். ஒருமணிநேரம் போல பலதும் பேசிக்கொண்டார்கள். நன்றாயிருக்கிறார்கள். உன்னைப்பற்றியுஞ் சிலது சொன்னார்கள். இது மிகவும் விசேஷமாயுள்ளதுங் கவனிக்கப் படத்தக்கதும்- என்னவெனில்,“ உம்முடைய சகோதரனை யிங்கே கல்விச்சாலையில் முனுஷியா

யிருந்தவர் இப்போது எங்கே போயிருக்கிறார். இன்னின்னபடி சிவகிரிக்கு
ஜமீன் மானேசராகப் போயிருக்கிறார் என- நான் வருமுன் எனக்குஞ் சொல்
லாமலிப்படி யேன் போனார், நான் அவனை எனக்கு உதவியா யிருப்பாரெ
ன்று மனதில் வைத்துக்கொண்டு வந்தேனே, கமிற்றியார் என்பேரில் அ
னேக பாரத்தைச் சுமத்தி யிருக்கிறார்களே, அவருக்கு இப்போது சம்பள
மென்ன தெரியுமா என- தெரியாதென- அவர் இங்கே வருவாரா என- தங்க
ளைப்பார்க்க வருவாரென்றும் தங்களைக்குறித்து வந்திருக்கிறீர்களென்றும்
பார்க்கப் போகிறேனென்றும் இந்தச்சந்தியில் வந்தால் ஏகமாய்க் கண்டு
கொள்ளலாமென்றும் எழுதி விட்டு வந்திருக்கிறேன், அவரும் எவ்வித
முந் தாமாக தங்களைக் காணவருவாரென்று நம்புகிறேன் என- எவ்வித
மும் அவர் சீக்கிரமாய் வந்து என்னைக் கண்டுகொண்டால் நல்லதுவென்
றும் சார்ஜென்றத்தனையும் மலைக்குப் போகிறார், கல்விச்சாலைக் காரியங்
களும் மற்றுஞ் சேகரக்காரியங்களும் கணக்குகளும் என்பேரிற் பொறுத்
திருக்கிறது, அவனை மனதிலெண்ணி யிங்கேவந்து விசாரிக்க அவர்
இல்லை என்று ஆயிருக்கிறது, நான் வருமட்டு மிருந்தாரில்லையாவென-
நான் தாங்கள் பிஷோப்பாய் வருவீர்களென்றுங் கல்விச்சாலைகள் எடுக்கப்
பட்டுப் போமென்றும் இப்படிப் பலபேச்சுக்களுண்டாயிருந்ததினாலே
யும் சார்ஜென்றத்தனையவர்களும் சட்சுத்தனையவர்களும் பண்ணின சிபா
ரிசுவினாலே இந்தச் சமையத்தில் தேவசெயலால் நேரிடுகிற காரிய
மென்று இவ்விடத்து வேலையைவிட்டுப் போகும்படி சம்மதித்தது, மற்
றப்படியல்ல வென்றேன். நான் அவருக்கு—ஐம்பதுரூபாய் கொடுத்து
எனக்கு உதவியாயிருக்க வைத்துக்கொள்வேனே- அவர் இந்த யிடத்தி
லிருக்கப் பிரியமில்லையா- மத்தியான இடமாச்சுதே என்றார்கள். இது
எங்களெல்லாருக்கும் பிரிய முள்ள காரியந்தான்- தங்களிடத்தி லிருப்
பது அதிலும் பிரியந்தான், தற்சமையத்தில் நேரிட்ட பயத்தினாலே
அநுவலையிட்டுள்ள சந்தேகத்தால் விட்டுவிடலான காரியம் என- எப்படி
யும் அவர் வந்து என்னைக் கண்டுகொள்ள வரட்டும், வருகிற வெள்ளி-
சனி- 27-ம்- உ-அ-ம்டைக்குள்ளாக வந்து சேரட்டும், வருகிற திங்கள்
செவ்வாய்- புதன்- வியாழனுக்குள்ளாக இரண்டொரு விடங்களுக்கு மற்றச்
சேகரத்துக்கும் போய்த் திரும்பி வருவேன். ஆனதால் மேற்குறித்த வெ
ள்ளி- சனியில் வந்தாற் கண்டு கொள்ளலாம், ஞாயிறு 29-உ நடந்து திங்
கள் செவ்வாயில் சென்னபட்டணத்துக்குப் போய்வர யெத்தனமாயிருக்
கிறேன், நான் அவசரமாய்ப் போகவும் கமிற்றியாரையுங் கண்காணியாரையுஞ்

கண்டு பேசவும் வேண்டியதிருக்கிறது என்றார்கள். இந்தப்படிக்கு உடனே எழுதித் தங்களைக் கண்டுகொள்ளும் படிக்குத் தெரிவிக்கிறேன் என்று சொல்லி அனுப்பிக்கொண்டு வந்து இப்போதே இதை எழுதினேன். இதை யோசித்துக் கொள்ளவும்.

மேற்குறித்த விஷயத்தில் உன் மனவிருப்பம் எப்படி யிருந்தாலும் அவர்களைக் கண்டுகொள்ள வேண்டியதற்காக எவ்விதமும் உடனே புறப்பட்டு வரவும். இது அகத்தியம். அவர்கள் பேசினவகை, உன்னைப் பற்றிக் கொண்ட எண்ணத்துக்குரிய வார்த்தை, முகத்தோற்றம் மெத்த உயர்வும் உருக்க பட்சமுங் கொண்டதாயிருந்தது. மொத்தமாய்ச் சொன்னால் தான் நம்பின பொருள் கைவிட்டுப் போனதுபோல் அவர்கள் சொன்னமாதிரி. இதுவும் தேவகிருபைதான். அவருக்கு ஸ்தோத்திரம்.

எப்படியும் உடனே வந்து அவர்களைக்கண்டுகொள்ளுகிறது. அவர்கள் சொல்லுகிறகாரியமும் நீ தலையிட்ட காரியமும் பெரிது. மிகவும் யோசனையோடு உத்திரவு சொல்லக்கூடியது. மக;ா;ஸ்ரீ சட்சுத்துரையோடும் யோசிக்கவேண்டியது. என் பிரியம் மிஸியோன் வகையில் கனம் சார்ஜென்றைப்பரவர்களோடே யிருக்கிறது. உன்பிரியமெப்படியோ. சட்சுத்துரையென்னயோசனை யிதற்குச் சொல்லுவார்களோ. நீ ஐயரவர்களைக் கண்டு பதில் அவர்கள் உனக்கு என்ன சொல்வார்களோ, அது உன் மனதுக்கு எப்படிப்படுமோ, ஆண்டவர் நடத்தல் எப்படியோ அவருக்குத் தெரியும்.

காரியத்துக்கு இம்மட்டும் எழுதினது போதுமென்று நிறுத்தி வேறு காரியம் துவக்குகிறேன். ஒன்று மாத்திரம்- 'அன்புக்கும் நன்றி யறிதலுக்கும் சந்தோஷத்துக்கும் அடையாளமாக அவர்களை யுடனே வந்து கண்டுகொள்ள வேண்டியது. இது நிற்க.

நான் நல்லம்மாள்புரத்திலிருந்து 18-ம்உ போட்டனுப்பின காகிதம் நேற்று இடையன்குடி தவால் மூலமாய் இன்று காலை யுன்வசஞ் சேரும். அதிலுள்ள காரியந் தெரியும்.

இன்று சாயுங்காலம் நான் இவ்விடம் விட்டுப் புறப்பட யெத்தனம். நமதய்யா நிமித்தம் உடனே திரும்ப விருக்கிறேன். உனக்காக எதிர் பார்ப்பார்கள். வருத்தத்தோடே பிரிந்து வந்தேன். திருநெல்வேலித் தம்பிக்குச் செய்தி யனுப்பினேன் வந்து போக, கண்டு பேச. இன்னமும் வரவில்லை. மணி உ-ஆகிற்று, வராவிட்டாலும் புறப்படுவேன். இராத்திரியே போனாலும் நாளைக்கு ஊர் சேர்வேன். நான் இப்போது இங்கே நம்முடைய வீட்டிலிருந்து இதை எழுதுகிறேன். தாவீதுபிள்ளை யிருக்கிறார். யட்சு

மாய்ப் பேசிக்கொண்டோம். சாலோமோன் கூட வந்தான். அத்தான் விருதியிற் சாப்பாடு நீங்கள் இங்கே யில்லாதது எனக்கு வெறுமைபோலி ருக்கிறது. ஆண்டவர் நம்மை எந்தவிதமாய் நடத்தச் சித்தமோ அப்படி நடத்தட்டும். அதுவே நமக்குப் பாக்கியம்.

நமதய்யாவுக்குக் கால் வீக்கம் வாங்க வேண்டுதற் செய்யவும். தேவசகா யிருந்தாற் போதும். கிருபை பெற்றோருக்குச் செய்த மாணிக்கிரயம் கூலி வெவ்வளவு.

மற்றக்காரியங்களுக்கு ஊருக்குப்போய் எழுதுவேன். அவ்விடஞ் செய்திக்கும். பின்னும் நீ யிவ்விடம் பாளையங்கோட்டைக்கு வந்து கனம் ஐயரவர்களைக் கண்டு கொண்ட விசேஷத்துக்கும் எழுதிவும்.

கனம் ஐயரவர்கள் ஆற்றூழ சேகரம் விசாரிக்கும்படியா யிருக்கும் என்பது குறிப்பு. சற்றுப் பொறுத்து பிரேதப்பு மாவார்கள். இது விபரம் நீ பாளையங்கோட்டையில் வந்தவுடன் அல்லது ஐயரவர்களைக் கண்டவுடன் வெளிப்படும். அநேகவாழ்த்துதற் சொல்லி முடிக்கிறேன்.

Yours sincerely,
M. Savarirayan

---

(தேவசகாயத்துக்கு மூத்தஅண்ணனுட்டு)

Nallammalpuram,
23rd March 1874.

My dear Brother,

நான் இதுமுன்னெழுதிய காகிதம் வந்துசேர்ந்திருந்தால் அது விசேஷந் தெரிந்திருக்கும். நான் அதில் எழுதியபடிக்கு வெள்ளிக்கிழமைச் சாயுங் காலம் நாலுமணிக்குப் புறப்பட யோசித்திருந்து திருநெல்வேலிக்கு ஆள் விட்டிருக்க தம்பிமார் உடனே வராமல் ஐந்துமணிபோல வந்தார்கள். கூப்பிடப்போனவனும் தாமிதப்பட ஏதுவாயிருந்தான். பிற்பாடு கண்டு பேசிக்கொண்டேன். கூனியூர்த்தம்பியும் இராமலிங்கம்பிள்ளை நம்பர் மூகாந் திரமாய் வந்திருந்தான். இதினாலே நான் தாமிதப்பட்டு சனிக்கிழமை விடியற்காலம் நாலுமணிக்குப் புறப்பட்டு பகல் வெயிலுக்கு வழியிலிருந்து சாப்பிட்டு வெயில்தாழ வழி கூடி இருட்டி நல்லம்மாள்புரம் வந்து சேர்ந் தேன்.

நமதய்யாவுக்கு நான் போகும்போதுள்ளபடியே சுகமேயிருக்கிறது. கால் வீக்கம் ஏற்றமும் வற்றாமலிருக்கிறது. ஆண்டவர் சுகந் தரவேணும்.

நான் பாளையங்கோட்டையிலிருக்கும்போது தானே புறப்படுஞ் சந்தியில் அந்த இராத்திரியில் செவிரியிலிருந்து அனுப்பினது ௰௩-ம் வந்து சேர்ந்தது. இந்தச்சமயத்துக்கு இது பெரிய உதவி. முன்னும் பின்னும் நீ செய்த உபகாரத்துக்காக மிகவும் நன்றியறிந்திருக்கிறேன்.

நான் பாளையங்கோட்டையிலிருந்து எழுதிய காகிதத்தில் கனம் Dr. Sargent ஐயரவர்கள் உன்னைப்பற்றிப் பேசினதுகளை எழுதிக்காட்டியிருந்தேனே. அந்தப்படிக்கு எவ்விதமும் ௨௭-௳ வெள்ளிக்கிழமை விடியற்காலத்துக்குள்ளாகச் சேர்ந்து கனம் ஐயரவர்களைக் கண்டுகொள்வது நல்லது. ௩௰-௳ திங்கள்ச் சாயுங்காலம் ஐயரவர்கள் சென்னபட்டணத்துக்குப் புறப்படுவார்கள். திருநெல்வேலிஜில்லா முழுக்கச் சபைப்பொறுப்புதாரும் பணக்கணக்குதாரும் ஆக ஐயரவர்கள் காரியமாவதால் அவர்களிடத்தில் காகித எழுத்துப் பணக்கணக்கு அதிகமிருக்கும். பாஷையிலும் கணக்கிலுந் தேர்ச்சிக்கான வேலையிருக்கும். கனம் ஐயரவர்கள் இப்போதிருக்கிற வேலையில் சம்பளம் எவ்வளவு என்று என்னிடத்திற் கேட்டது போல உன்னிடத்திலுங் கேட்பார்கள். சம்பளத்தை மாத்திரமல்ல மற்றவகையிலுள்ள சகாயவு, வெளியே போனால் அதிலுள்ள செலவு, வண்டிச்சவாரி, விசேஷமாய் உதவியிதுகளை யோசித்துச் சொல்லிக் கொள்ளலாம். பின்னும் புறமோஷனாகிறதற்கும் இடமுண்டு என்றுஞ் சொல்லிக்கொள்ளலாம். என்னிடத்தில் உனக்கு ஐம்பதுரூபாய் கொடுப்பதாய்ச் சொன்னவர் ஒரு வேலைக் கூட்டியுந் தா மனமானால் இப்படியும் செய்யலாம். மகா: ா: ஸ்ரீ சர்ச்சுதுரையவர்களோடே யோசித்து அவர்கள் சம்மதமுங்கேட்டு அநுகூலத்துக்கு ஏதுவாக அவர்களைக்கொண்டும் ஐயரவர்களுக்குச் சமாசாரஞ் சொல்லும்படிக்கும் பார்த்துக்கொள்ளவும். இனி வருமென்று எதிர் பார்க்கிறதிலும் இப்போது கனம் Dr. S. ஐயரவர்களிடத்தில் வேலைபார்க்க வாய்ப்பது அதிக நல்லதென்று நினைக்கிறேன். என் விருப்பமிப்படி, தேவசித்தம் சேரிகிறபடிக்கு உன் மனவிருப்பமு மிருந்தால் அப்படியாம். பின்னும் ஐயரவர்கள் சீக்கிரத்தில் கண்காணியாவதும் திருநெல்வேலி மொத்த விசாரணை அவர்களுக்குள்ளாவதும் நிச்சயமாயிருப்பதால் பின்னுக்கும் அவர்களால் ஆண்டவருக்குச் சித்தமானால் அநுகூலத்துக்கு இடமாகுமென்று நினைக்கத்தக்கது. அவர்கள் சொல்லிய குறிப்பினால் நான் இருக்கிற பக்கமும் சகல வட்டமும் அவர்களுக்குள்ளாம் என்று விளங்குகிறது. ஆண்டவர் உன்னை நடத்து வகையை அவர் தெரிந்திருப்பார். ஞானமுங் கிருபையுமுள்ள சத்தி

யான விடத்திலும் வீட்டிலும் நம் காரியந் தெரிந்தவர் கையின் கீழிலிருந்து வேலை பார்க்க நேரிடுவது மெத்த நல்லது என்று நினைக்கிறேன். நீ சம்மதியா பட்சத்திலேதான் ஐயரவர்கள் வேறு ஆள் யோசிப்பார்கள் போலிருக்கிறது. அவர்களுடைய விருப்பத்தின்படியே நான் முன்னும் இப்போதும் எழுதுகிறேன். அதினாலே தான் நானும் இப்படி விரும்பி எழுதலானேன். வலிய வந்த காரியம். தேவசித்தம், ஐயரவர்கள் தயவு. அவருக்கு ஸ்தோத்திரம் இம்மட்டேக்கும்.

இவ்விடம் யாவருந் தேவகிருபையால் சுகம். அவ்விடத்துச் சுகசெய்திக்கும் இது முதலிய காரியங்களுக்கும் எழுதவும். உங்களிருவருக்கும் எங்கள் வாழ்த்துதல், பிள்ளைகளுக்கு முத்தி.

இப்படிக்கு

Yours sincerely

M. Savarirayan

---

(தூத்துக்குடி பெரியபிள்ளைக்கு)

23rd March 1874

Nallammalpuram

My dear Son,

இவ்விடம் யாவருந் தேவகிருபையினாலே சுகமேயிருக்கிறோம். அவ்விடஞ்சுகசெய்திக்கு எழுதவும்.

நான் பாளையங்கோட்டைக்கு வியாழக்கிழமை இருட்டி 8-மணிக்குப் போய்ச்சேர்ந்து மறுநாள் வெள்ளிக்கிழமை பகலில் கனம் Dr. சார்ஜென் ஐயரவர்களைக்கண்டு மறுநாள் சனிக்கிழமை விடியற்காலம் 4-மணிக்கு புறப்பட்டு பகல் வெயிலுக்கு வழியிலிருந்து இருட்டி நல்லம்மாள்புரஞ் சேர்ந்தேன். டிெ ஐயரவர்கள் தூத்துக்குடியிலிறங்கி வந்ததில் நீ அவர்களைக் கண்டதுங் காணாததுந் தெரியாது.

ஐயருக்கு கால்வீக்கந்தவிர மற்றப்படி தாவிலை. மருந்து டிரசர் அனுப்புகிறார். கலியாணவிஷயத்துக்கு பணத்தட்டுப்பாடுதான் யோசனை. மிகேல் பிள்ளை காரியத்துக்கு டிெ யார் தமையன் வியாகப்பபிள்ளை ஒன்றுஞ் செய்யவே மாட்டார். நாம் போட்டுக் கட்டவேண்டியதா யிருக்கிறது. இது மனதுக்கும் சரீரத்துக்கும் வருத்தமாயிருக்கிறது.

பாக்கியம்பிள்ளைக்கு பாளையங்கோட்டையில் ஓலை கூடியாயிற்று. மற்றுங் காரியங்களுக்கு இனிமே லெழுதுவேன்.

Yours sincerely
M. Savarirayan.

P. S. மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை போனவியாழக்கிழமை 19-உ இராத்திரி புறப்பட்டு இவ்விடம் வந்திருக்கிறார். புதன்கிழமை வர தனை உத்தரவாம். இப்படி யலைந்து திரிவது பிரியமாக்கும். எப்படியும் பிழைக்கும் வகை நடந்தாற் சரிதான்.

M. S.

---

Nallammalpuram
28th March 1874

My dear Son,

இவ்விடம் யாவருந் தேவகிருபையினாலே சுகமேயிருக்கிறோம். அவ்விடஞ் சுகசெய்திக்கு எழுதியனுப்புவிக்கவும். நமதய்யாவுடைய சுகம் முன்னெழுதியபடி தானிருக்கிறது.

பாக்கியம்பிள்ளை காரியத்துக்குத் தாமசமில்லை. மிகேல் பிள்ளை காரியத்துக்குச் சரிப்படுத்திக் கொண்டு இரண்டு ஓலையும் ஒன்றாய்க்கூடிக் கலியாணத்தை ஒன்றாய் முடித்துப் போடவேண்டுமென்பதுதான். மிகேல்பிள்ளை காரியத்துக்கு ஷை தமையனார் வியாகப்பபிள்ளை பணமில்லாமலுஞ் சம்மதமில்லாமலு மல்ல அவரவர்பாடு அவரவருக்கு என்பதுதான் கருத்து. செபத்தியாகி மாப்பிள்ளையைத்தான் முழுவதுமாய் ஒப்புவித்து விட்டோமே. எல்லாம் அவர்கள் தாம் (அதாவது நாம்) பார்த்துக்கொள்ள வேண்டியது போற் சொன்னாளாம். அவள் கருத்து பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடையாமற் புகலில்லாதிருந்தது போதுமென்ற எண்ணம். நீ யெழுதிய படியே நான் ஷை மிகேல்பிள்ளை தாலி சீலை துணியில் 30,35-கலியாணச் செலவு 50-குறையாமல் தரவும் வேண்டியது. மற்றவகையில் அவருக்கு நாம் அசலுக்கு ஒப்பம் பாக்கியம்பிள்ளைக்குச் செய்யும் மரியாதை போல நடப்பிப்போ மென்று சொல்லி இதுவும் சீக்கிரத்தில் ஒழுங்காகவேணும். அல்லவென்றால் பிந்தி மிகேல்ப்பிள்ளை காரியத்தை நடத்த வேண்டும்; பாக்கியம்பிள்ளை காரியம் முந்தி நடக்கவேண்டுமென்று சொன்னேன், மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை வந்திருந்த போனவாரந் திங்கள்கிழமையில். இதின்பேரில் மிகேல்பிள்ளை எங்கேயாவது பணம் ஆகப்பண்ணிக்கொள்ள வேண்டுமென்கிற கருத்தாய் விஜயநாராயணத்துக்குப் போகாமல் இடை

398



யன்குடிக்குப் போகிறவிதமாய் நமக்குத் தோற்றங் காட்டி எங்கேயோ போயிருக்கிறார். அவர்போன மறுநாள் தற்செயலாய் ஷை வியாகப்பபிள்ளை இங்கே வந்தார். காரியத்தை மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை மூலமாயறிந்து கொண்டு உடனே அவளைக்கூட்டிவரப் போயிருக்கிறார். அவருடைய பெரிய ஐயா மகளைக் கலியாணஞ்செய்தவர் அதிகப்பணக்காரராம், அவரிடத்துக்குப் போயிருப்பார், இதுதான் அவர் யோசிப்பு என்கிறார். வியாகப்பபிள்ளைக்கும் அவருக்கும் ஐக்கியக்குறைவு. அவளைத் தமக்கு உதவி செய்யக் கேளாமலும் உதவி செய்ய மாட்டாரென்றும் அவர் உதவி தமக்குப் பிரியமில்லையென்றும் அவர் சிலவேளை காட்டிய குறிப்பினால் விளங்கியிருக்கது. ஆனால் இப்போது ஷை வியாகப்பபிள்ளை தம்மைக்கடந்து போனதை யிட்டு மானப்பட்டு மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வியாழன் காலை யிவ்விடத்திலிருந்து திரும்பிப்போனார். அவருடைய தகப்பனார் மகளை கூட்டிவர திருவனந்தபுரத்திலி................மற்றப்படி நாத்துக்குடிக்கு வந்தால் உனக்குத் தெரிந்திருக்கும். மற்றச்சாமான் துணியெல்லாம் இங்கே வைத்துவிட்டுத்தான் போயிருக்கிறார். திங்கள்கிழமைக்கு காரியந் தெரியும். பண்டிகை நாளோடே கூட ஓலைகூற யோசனை யென்பதுந் தெரியும். இது காரிய மிப்படி. இனி யுள்ள செய்திக்குப் பின்னெழுதுவேன்.

பின்னும் நீ காரியத்துக்குச்சரியாய் பாரித்தனமாயும் யோசனையாயும் எழுதினதைப்பற்றி மிகவுஞ் சந்தோஷிக்கிறேன். அப்படியே செய்யப் பிரயாசப் படுவேன். (24-ம்,25-ம்உ போட்டனுப்பின உனது பட்சமுள்ள காகிதம் முந்தாநாள் வந்தது. அதிற்கண்டிருந்த யோசனை எல்லாம் மெத்த நல்லது-)

பாக்கியம்பிள்ளை சாடை நிதானமில்லை. வகையுந் தெரியவில்லை. நாம் ஒருவார்த்தை சொல்லி மறுப்போமா. பேசினபேச்சுக்கு விரோதமாய் நடப்போமா. இதுஅவருக்குத் தெரியாதாக்கும். அவர் கடைசியாய் தீர்மானித்துப் போனபடிக்கு பண்டிகையோடே பணத்துடன் வரவேண்டியது. 50-ரூபாயில் குறைந்தால் ஒத்துக்கொள்ள மாட்டேன். எலிசபெத் மரியம்மாள் கலியாணச்செலவு காரியந்தான் அந்தமனுசனுக்கு என்ன தெரியும், ஒன்றுந் தெரியாது. இதற்காக நாம் விசனப்படத் தேவையில்லை. தேவசித்தம் எப்படியோ அவர் நேரிடச் செய்கிறபடி நடப்போம். நாம் அருமையான பிள்ளைகளை உலகவழக்கப்படி அந்நியர் கையில் ஒப்புவிக்கிறதே மகா சங்கடமான காரியம். இப்படியாகவே நடக்கவேண்டியதுக்கு நாம் சம்மதித்திருக்கிற

82

விஷயந் தேவசித்தத்துக்கு அடங்கிச் செய்கிறகாரியம். இதை யோசியாமல் திடீரென்று இப்படி யப்படி யென்று சொல்லுகிறதும் மாறுகிறதும் நமக்குப் பயமுள்ளதாயிருக்கிறது. எவ்விதமுந் தேவனுக்குச் சித்தமானால் எப்பிரல் மாசத்துக்குள்ளே நடக்கவேண்டியதுக்குப் பிரயெத்தனஞ் செய்யவேண்டியது. தற்சமையத்தி லுண்டாயிருக்கும் வருத்தத்திலப் பணம் தயார் செய்யவேண்டியதுக்குத்தான்... ... ... ... ...
என்று யோசனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆண்டவர் எந்தவகையாய்க் காரியம் நடக்கச் செய்யத் திருவுளமோ இன்னந் தெரியவில்லை. அவரை வேண்டிக்கொண்டிருக்கிறேன். உனது புத்தியுள்ள வார்த்தைகளும் எனக்கு மிருந்த ஆறுதல் உள்ளது. அவ்விடத்தில் உன் பழைய வேலையாயிருக்குமானால் நல்ல உதவிக்கு இடமிருக்கும். கடன்வாங்கினவர்களும் சமையத்துக்குக் கொடுப்பதாயில்லை. இதினாலேயும் நான் உன்னைக் கேட்கவும் வருத்தமாயிருக்கிறேன். மேலும் நான் கேட்கவேண்டியதுமில்லை. நீ தானாகவே யோசிக்கத் தக்கவன். இப்போதுள்ள உன் யோசனையும் அவ்விடத்துக் காரியமும் என்னவோ என்பதுங் கவலை. உன்னாவியு மிங்கே யிருக்கிறது, என்னாவியும் உன்னோடிருக்கிறது. இதுவும் பெரிய ஆறுதல். இதற்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

மரியவியாகுலம் வரவேண்டியதுக்கு இங்கு வேறு யோசனை ஒன்று மில்லை. கலியாணஞ் சீக்கிரத்தில் நடக்கிறதானால் அதுவரையு மிருந்து போவது தாவிளையே- மற்றப்படி திரும்ப அலைச்சலுஞ் செலவுந் தானே வந்து இதுவரையும் தாமிசப்பட்டு மாயிற்று. காரியம் முடியுமட்டு மிருந்து திரப்திகரத்துடன் ஒருவாரம் சந்தோஷத்துடன் திரும்பினால் நலமாயிருக்குமே. சகலத்துக்கும் நீயும் அவளுந்தானே பொறுப்புதாரும் விசேஷமானவர்களு மென்பதுதான் யோசனை. மற்றப்படி இதற்குள்ளாக அனுப்பி யிருப்போம், அவளும் வந்திருப்பாள். அவளுக்கு அடிக்கடி புறப்படவேண்டு மென்பது தான் விருப்பமும் அவ்விடத்து உன் சாப்பாடு மற்றும் விஷயங்களை யிட்டுங் கவலையுந்தான். எங்கள் தாமிதக்காரியத்தின் பேரிலுள்ள கவலையுந்தான். நம்முடைய பிள்ளைகளை யிட்டும் நடக்கவேண்டிய காரியத்தை யிட்டும் அதிகக் கவலை அவளுக்கு யிருக்கிறது. அவள் தான் எங்களை விசேஷமாய்த் துரிதப்படுத்துகிறாள். எங்களுக்கும் அவள் வந்திருக்கிறதோடே முடித்துப்போட வேண்டுமென்பதுதான் நோக்கம். எப்படியும் காரியத்துக்குச் சீக்கிரத்தில் ஒரு தீர்மானம் பண்ணிக்கொண்டு

நாளுங் குறித்து விவரம் உனக்கு துரிதமாய்த் தெரிவிப்பேன். நீயும் எவ்வித மும் சமையத்துக்கு வந்து போகக் கருத்தாயிருக்கவும் வேண்டியது. மிகேல்பிள்ளை காரியந்தான் ஒழுங்குப்படவேண்டும். இவ்விடத்து நாங்கள் உனக்கு அநேக வாழ்த்துதற் சொல்லுகிறோம், பிள்ளைகள் எல்லாருஞ் சுகம், மரியம்மாள் நன்றாயிருக்கிறாள், மலம் போகாத வுடனே சற்று ருணங்குவதுதான் இயல்பு. வேறு விசேஷமில்லை.

இந்த நமது சேகரம் கனம் சார்ஜென்றையாவர்களுடன் சேரப்போகிறதாகவும் செய்தி, ஜெமமா யிருக்கும். தம்பி J. D. S. பிள்ளையை மறுபடியும் வந்தாற் சேர்த்துக் கொள்ளவும் 50-ரூ கொடுக்கவும் சித்தம்.

Yours sincerely
M. Savarirayan.
(stamped)

M. R. R.
M. Savariraya Pillai
Meloor,
Tuticorin

---

Nallammalpuram,
31st March 1874.

My dear Son,

நாளது மீ 28-உ போட்டனுப்பின காகிதம் இன்று காலையில் என் கையில் வந்து சேர்ந்தது. பார்த்துச் சமாசார மறிந்து கொண்டேன். மாப்பிள்ளை யாக்கோபு சவரிராயபிள்ளையைப் பற்றிய காரியத்துக்கு நாம் இருவரும் அநேகத்தை முகதாவிற் கலந்து பேசிக்கொள்ளவேண்டியதிருக்கிறது. மற்றப்படி காரியந் துலங்காது. இப்போது நான் எழுதினால் என் கருத்து விளங்கும். ஆனாலும் முன் பின் நடபடிக்கை தெரியாததினால் விபரீதமாய்த் தோன்றும். நீ எனக்கெழுதியபடிக்கு நான் ஒருவருக்கும் வெளிப்படுத்தேன். யாக்கோபு பிள்ளை நம்முடைய மரியவியாகுலத்துடன் தன்னெண்ணங்களை வெளிப்படுத்திப் பேசித்தான் உனக்கெழுதி யிருக்க வேண்டும். மரியவியாகுலமோ ஒருவார்த்தையும் எனக்குச் சொன்னதில்லை. இப்படி

யிருக்க இது எப்படி எனக்குத்தெரியும். ஒரு வார்த்தையிலும் அநுமானமா யறிந்தேன். இப்போது உன் காகிதம் வந்த பின்பு மரியவியாகுலத்தி னிடத்தில் யாக்கோபு பெரியபிள்ளைக்குத் தன்காரியமா யேதாவது எழுதியிருப்பானோ வென்று ஒரு கேள்வி கேட்டேன். சாடையாய்க் குறுஞ்சிரிப்புடன் எழுதி யிருப்பானென்றான். நான் பெரியபிள்ளை காகிதம் வந்ததில் அந்தக் குறிப்பிருந்ததென்று மாத்திரஞ் சொல்லி வேறொன்றும் சொல்லாமல் இம்மட்டில் நிறுத்தி விட்டேன். அவன் நம்முடைய புறத்தானாயிருக்க அவன் தம்பி புறத்தான்போல் நமக்கு ஒன்றுஞ் சொல்லாததினாலே எனக்குச் சற்று ஆயாசமுண்டு. இதினாலே என் மனதை யவனுக்குஞ் சொல்லவில்லை. உன் அம்மையும் அவளும் ஒருவேளை பேசி யிருப்பார்களோ என்னவோ அது தெரியாது. மாமி மருமகளுடைய ஐக்கியத்துக்குக் குறைச்சலில்லை. ஆனதால் என் மனதை யிப்போது ஒருவருக்கும் இங்கே வெளிப்படுத்துவதில் ஒன்றுமில்லை. சகலத்தையும் நான் உனக்கு வெளிப்படுத்திய பின்பு உன்னுடைய இஷ்டத்துக்கு விட்டு விடுவேன் என் விருப்பம் இப்போது ஒன்றுமில்லை. உன் விருப்பத்துக்கு விரோதமாயுஞ் செய்ய மாட்டேன். என்மனதிலுள்ள ஆயாசத்தை நான் உனக்கு முகதாவில் தனித்துச் சொல்லி அப்பால் நீ சொல்வதைக் கேட்டுக்கொள்வேன். இப்போது உன்னுடைய விருப்பத்தின்படி பதிற் சொல்லி லை. பின்னாலே நிறைவான பதிற் சரியானபடிக்கு ஐயாவைக் கேட்டுப் பதிற் சொல்லுவேனென்று தெரிவித்துக் கொள்வது சமயத்துக்கு ஏற்றிருக்கும். இது நிற்க. இப்போது உனக்கு யாக்கோபு பிள்ளை எழுதியதிலுஞ் சிலது என்மனதுக்கு ஆயாசத்தைக் கொடுக்கத் தக்கது. அதிலுஞ்சிலது யோசிக்கத் தக்கது. இது பெரிய காரியமில்லை. நாம் பெண்கொடுக்கச் சம்மதமானால் இதற்காக நீ ஆயாசமாயிருக்கவேண்டாம். நீ சகலத்தையும் வந்தபடிக்கு கோவையுந் தெளிவாயும் எழுதி யிருக்கிறாய். உன்னைப்பற்றி யுள்ள சந்தோஷம் எனக்கு மிகுந்த ஆறுதலுள்ளது. நானும் உனக்குச் சந்தோஷமுண்டாயிருக்கத் தக்கதாய் நடந்து கொள்ளப் பார்ப்பேன். மேலும் இனிமேல் முகதாவிற் பேசிக்கொள்வது பிரியமில்லை. இப்போது தானே எழுத்தின் மூலமாய்த் தெரிவிக்க வேண்டு மென்று விரும்பினதும் அந்தப்படி விவரஞ் சாவகாசத்தில் எழுதுவேன். எழுதுவதில் எல்லாம் எழுதவும் தலங்கவு மாட்டாது என்பதுதான் கருத்து. மனதுக்கும் ஒருவகையில் வருத்தம் உனக்குச் சொல்வதில் அல்ல, காரியத்தை விட்டேத்தான். மற்றவர்களுடைய அபிப்பிராயங்களும் என்னைத்

களும் வேறே. என்னெண்ணமும் அபிப்பிராயமும் வேறே.

மிகேல்பிள்ளை திருவனந்தபுரத்துக்குப் போயிருக்கிறார். அவர் போன நோக்கத்தையும் தாம் சொல்லாமற் போன குற்றத்துக்கு மன்னிப்புச் செய்ய வேண்டுமென்பதையும் தாம் சில துணி மங்கிலியஞ் செய்துவருவதையும் ஓலை கூறவேண்டியதையும் பற்றி எழுதிய காகிதம் வந்தது. அவர் போன பின்பு இரண்டு காகிதம் ஒருவாரத்திற்குள் வந்திருக்கிறது. பெரியவெள்ளிக் கிழமை அல்லது உயிர்த்தெழுந்த பண்டிகைக்குள் வருவாராம். இரண்டாவது காகிதம் இன்று வந்தது. தம் தமையனாருடைய ஒட்டுறவு வேண்டியது இல்லாதது போலவும் அவனைக் கேட்கவும் அவரிடத்தில் தம்மைப் பற்றிய காரியத்துக்குப் பேசவும் வேண்டியதில்லை என்பதாகவும் காட்டியிருக்கிறார். அவர் சொல்லாமற் போனது எனக்கும் பெரிய ஆயாசம். ஆளைப்பற்றிச் சமுசயம். தற்சமயத்தில் சேர்வை பாக்கியம்பிள்ளை காரியம் நெருங்கியிருப்பதால்த்தான் யோசனை. மூத்தபிள்ளையை வைத்துவிட்டு இளையதுக்கு முர்திச்செய்வது எப்படி என்பது.

இன்று மரியவியாகுலம் சொல்வதில் ஞானப்பிரகாசம்பிள்ளை மிகேல் பிள்ளை யிருக்கிற யிடத்துக்குப் போயிருக்கிறதாக நேற்று இங்கு வந்து போன யாக்கோபுபிள்ளை சொன்னாரென்று வெளியாகிறது. என்னிடத்தில் யாக்கோபுபிள்ளை சொல்லவுமில்லை, நான் ஷை சங்கதிகளைப்பற்றிப் பேசவுமில்லை.

இது முன் அனுப்பின காகிதம் இதற்குள்ளாக உனக்கு வந்து சேர்ந்திருக்கவேண்டியது. உனக்கு அநேக வாழ்த்துதற் சொல்லுகிறோம்.

Yours sincorely
M. Savarirayan.

பழய விளக்கு ஒரு கோப்பிருக்கிறதாமே. அதை வாங்கியனுப்பக் கூடுமானால் நல்லது. இங்கே இன்னமும் ஒன்றும் எத்தனிக்கவில்லை. மிகுந்த யோசனைதான்.

நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான் என்று வேதஞ் சொல்லுகிறது. இது ஞானக்கருத்தாய்க் கொள்வது போலவே இயற்கையிலும் காணப்படுகிறது. என் தாயாரைப்பற்றிக் கண்கண்டகாரியம்; என்பது வயசு காலத்தில் நமது வீட்டுப்பக்கத்திலிருக்கிற அடைக்கலபுரம் கோவிலுக்கு நமது வீட்டிலிருந்து தினம் போய்வருகிறது தப்பாது. கண் பற்றுததால் போய்வருகிற வழியில் சிலதரம் விழுந்து அவஸ்தைப்பட்டிருக்கிறாள். அப்படி விழுந்ததில் ஒரு தடவை இரண்டு மாசம் வரை கட்டில் கிடையாய்க் கிடந்தாள். பின்னும் காலூன்றி எழுந்து நின்று கோவிலுக்குப் போய் வந்து கொண்டிருக்கும்படி ஆண்டவர் கிருபை செய்தார்.

ஐயாவுடைய சீவகால சரித்திரத்தைப் பார்க்கும்போது அவர்களுடைய ஆயுசு நாட்கள் அவர்களுடைய பிதாக்களுடைய ஆயுசு நாட்களுக் கதிகமானாலும், அவைகள் வருத்தமும் சஞ்சலமுமாய்க் கடந்ததென்று காணலாம். ஆண்டவர் பேரில் திட நம்பிக்கையும் விசுவாசப் பற்றும் உடையவர்களாய் சகல கவலைகளையும் அவர் திருப்பாதத்தில் ஒப்புவித்து விட்டுத் தனக்கு ஒத்தாசை வரும் பருவத்தை நோக்கின கண்ணாய் நடந்து வந்தபடியினால் சகல கவலை விசாரம் கலக்கத்துக்கிடையிலும் உற்சாகமான ஆவி அவர்களைத் தாங்கிற்று.

தங்களுக்கு சடுதியில் ஒரு சுகத்தப்பு வருத்தமென்றால் பிள்ளைகளெல்லாரும் வந்து தன் கடைசி நேரத்தில் கூடவிருக்க வேண்டும் என்பது முன் நாட்களில் ஐயா எப்போதும் ஆசையாய் நினைத்து வருவார்கள். இந்த ஆசை நமது தேசத்து சனங்கள் எல்லாருக்கும் இயற்கையாயுள்ளது.

ஐயாவுக்கு விசேஷமாயிந்த ஆசையுண்டு. ஆகையால் பிள்ளைகளை விட்டுப்பிரிவதில், தூரதலைக்குப் பிள்ளைகளை அனுப்புகிறதில் உள்ள வருத்தத்தில் இந்த நினைவுங் கூட இருக்கும். இப்பொழுது (பெப்ருவரி மத்தியில்) பிள்ளைகளெல்லாரும் ஒன்றாய் வந்து கூடியிருக்கிறதைக் கண்டது ஐயாவுக்கு திடனும் பெலனும் உண்டாக்கிற்று. இப்போது பிள்ளைகள் தங்கள் தங்கள் ஊர் ஊருக்குப் போய்விட்டாலும் இளையமகனுக்கும் பேத்திமார்களுக்கும் சீக்கிரத்தில் நடக்கப்போகிற கலியாணத்துக்கு திரும்பவும் எல்லாரும் கூடிவருவார்களென்பதும் ஐயாவுக்கு அதிக உற்சாகத்தை யுண்டாக்கியிருக்கக் கூடியது.

தம்பி சஞ்சீவியுடைய கலியாணத்தைக்குறித்து ஐயா ஒழுங்கு செய்ய விரும்பியது முந்தின டிசம்பர் மாசத்து சர்னல், காகிதத்தில் காணலாம்.

ஐயாவுடைய மகள் பிள்ளை பேத்தியாகிய இருளைபெற்ற மரியம்மாள் பிறந்தது முதல் ஐயா அம்மை பிடத்தில் தம்முடைய வீட்டில் நின்று வளர்ந்ததே யன்றித் தன் தகப்பன் வீடு அறியாது. அவளுடைய தாய், அக்காள் இன்னாசியம்மாள்) எவ்வகையிலும் அன்பமே யன்றி வேறு அறிந்தவளல்ல, அந்த ஏழைத்தாயின் பிள்ளையாகிய இவள் பிறந்தது முதல் ஐயாவும் அம்மையும் தங்கள் மகளிலும் விசேஷித்த அருமையாய் இந்தப்பிள்ளையை வளர்த்தார்கள். இப்போது இவளுக்கு இருபது வயசுக்கு மேலாகிறது. மூத்த அண்ணாட்சி மகள் ஞானியிக்கும் அப்படியே வயசு. அதற்கிளைய பிள்ளை மேரியும் வயசாகி யிருக்கிறது. இந்தப் பிள்ளைகளையிட்ட கவலை ஐயாவுக்கும் அம்மைக்கும் மூத்த மதினிக்கும் சொல்லமுடியாது. மூத்த மதினி ஐயாவோடே இவைவேளைகளில் பரதாபப்பட்டுச் சொல்லுவார்கள். ஐயாவுக்கு இயல்பாயிருக்கிற பரதாபத்தோடு மதினி சொல்லுகிறதையும் கேட்கிறபோது உண்டாகும் மனவருத்தம் அதிகந்தான். மூத்த அண்ணாட்சி பிடத்தில் ஐயா அடிக்கடி கோபித்துப் பேசுவார்கள். மூத்த அண்ணாட்சிக்கு கவலையும் பாரமும் உறைக்கவில்லை யென்றல்ல, இப்படிப்பட்ட விவாக காரியங்களில் பெண் மாப்பிள்ளை ஒழுங்கு திட்டம்பண்ணி இணைத்து ஒப்பேற்றிக் கட்டி முடித்து விடுகிற சாமர்த்தியமுள்ளவர்கள் உண்டு. மூத்த அண்ணாட்சிக்கு இந்த சாமர்த்தியமில்லை, மைக்கு லோககாரியம் எதிலேதான் சாமர்த்தியம் திறமையுண்டு. அண்ணாட்சி வேறொரு மனுஷனை மனதில்வைத்துக் கொண்டு எனக்கு மாட்டுவியாபாரி தரகுத்தொழில் தெரியாதே யென்பார்கள். மேலும் காணுசனங்கள் பந்துக்கள் இருக்கப்பட்ட இடங்கள் அதற்குச் சமீபித்த இடங்களிலிருந்தால் ஆள்கள் குணங்களையறியவும் பழக்கத்துக்கு இடமாகவும் ஏதுவுண்டு. அப்படிக்கும் வழியில்லாமல் அநியாயத்தேரிக்காட்டு மூலை முடங்கில் ஒதுங்கிக்கொண்டால் கை காரியம் சப்பைத்தட்டாய்ப் போகிறதுக்குக் கேள்வி யென்ன.

ஐயாவுக்கு இப்படி கவலை பெலவீனமானபடியால் கலியாணத்தை நெருக்கினார்கள். தம்பி சஞ்சீவிக்கு அண்ணாட்சி ஞானப்பிள்ளையவர்களுடைய மனைவியின் தங்கச்சி பாக்கியம் லீசபெத்தம்மாளைத் தீர்மானமாயிற்று. மூத்த அண்ணாட்சி மகள் ஞானியின் சவரியம்மாளுக்கு மூத்த அக்காள் மகன் செபத்தியாயி புருஷன் வியாகப்பபிள்ளை யுடைய தம்பி மரியமிக்கேல் பிள்ளையைத் திட்டமாயிற்று. ஜெ. ஞானசுக்கு இளையவள் மேரிக்குச் சேர்வைகாரன்பட்டி பாக்கியம்பிள்ளையைத் திட்டமாயிற்று. ஞானி

குடி பெரியபிள்ளை. மரியவியாகுலமூலமாய் ஷை பாக்கியம்பிள்ளை வந்து சேர்ந்தவர். இந்த மாப்பிள்ளைகளுக்குப் போக்குப் புகல் முட்டிப்போய்த்தான் கட்டிக்கொடுக்க ஏற்பாடாயிற்று. மற்றப்படி மனதுக்கு வெகு வருத்தம். மிக்கேல்பிள்ளையை ஒப்பினதுதான் முழுமோசம்.

ஆனாலும் ஐயாவுக்கு இது காரியம் எப்படியும் ஒழுங்காகித் தீர்ந்தது ஆறுதலாயிற்று. ஐயாவுக்கு சரீரத்துக்கு சுகம்போலும் கண்டது. ஐயா திரும்பவும் தங்கள் சர்னல் எட்டில் ஞாபகக்குறிப்பு எழுத ஆரம்பித்தார்கள். ஐயாவுக்குக் காகித எழுத்தானால் மிகவும் கை வருத்தப்படுவார்கள். இதில் அவர்களுக்கு பிரயாசமும் கோச்செலவும் மிகுதி யுண்டு.

ஐயாவுடைய சர்னல் முதல் வாலியம் 181-ம்பக்கத்தில் நான் எழுதியிருக்கிற குறிப்பைப் பார்க்க, பிள்ளைகளின் பேரிலுள்ள அளவு ஆசையானது விஸ்தாரமான ஆற்றுக்கணக்கான காகிதங்களைப் பிள்ளைகளுக்கு எழுதியனுப்ப அவர்களுக்குக் கையையும் சமயத்தையும் கொடுத்தது. ஆனால் ஓலையில் எழுதுவதோ ஐயாவுக்கு வெகு இலகு.

J. D. S.

ஐயாவுடைய சர்னல்

௰௧—௳ தருமகாத சஞ்சீவிக்கு மனுவேல் பிள்ளை சகோதரியை விவாகத்துக்குக் கேட்டு மதுரேந்திரஐயர் என்பேரால் எழுதச்சொல்லி நான் கையெழுத்து வைத்து மிக்கேல்பிள்ளையும் சாலமோனும் பாளையங்கோட்டைக்கு வாளசம் வாங்கப் போகிறவர்கள் வசம் அனுப்பினேம். ௰௨-௳ போனவர்கள் ௰௪-௳ இரவில் வந்தார்கள். ஏசுதாசன் தலையனுருக்குக் காயிதம் ஒன்று, குலசமரியான் காயிதமும் வந்தது. குலசமரியான் சகலன் ஆபிரகாம்பிள்ளை வீட்டில் மரியசுந்தரி போய்ச் சேர்ந்திருக்கிறதாக எழுதினான்.

௰௫—௳ ஐயர் அதிசயபுரத்துக்கு நற்கருணைகொடுக்கப் போனார். எனக்கு வழக்கப்படி பலவீனமாய்த்தான் கோவிலுக்குப் போகவில்லை.

௰௭—௳ மனுவேல்ப்பிள்ளை காயிதம் வந்தது மனுவேல்ப்பிள்ளை சம்மதியாய். கனம் சார்சென்றய்யரவர்கள் சீர்மைக்குப் போய்வந்த செய்தி கேள்வி. ஆர்க்கோட்டய்யரவர்கள் ௰௯-௳ ஷை ஐயரவர்களைச் சந்தித்துப் போய் வரப் போறார்களாம். பள்ளிப்பிள்ளைகளெல்லாரும் அம்மாளும் இழஞ்சுனைக்கு கடல்வாடைக்குப் போனார்கள். எனக்கு முட்டுக்கு கீழே வீக்கமுண்டானது வத்ததனும் வீக்கமும்.

௰௮—௳ ஐயர் காயிதங்களெழுதி தவ்வாலில் தம்பிமாருக்கனுப்பினார்.

௰௯—௳ விடியக்காலம் ஷை கனம் சார்சென்றய்யரை சந்திக்க பேச சந்திக்க புறப்பட்டார், சாலமோனும் குதிரைக்காரனுங் கூடப்போனார்கள். முதல் நாள் ௰௮-௳ இங்கே மாமி மருமகள் பேத்தி முதலியவர்களுக்கு பெருத்த சண்டை யுண்டானதினால் ஷை ஐயர் போகிறது எனக்குப் பிரியமில்லை. ஆகிலும் நேரதென்று போகவேண்டியதினால் எனக்குண்டான கவலை சொல்லமுடியாது. பூட்டுக்காட்டுக் கிராமமுனிசுத்தேவரும் நாலாந் துலாத் தலைமை முத்தயத்தேவரும் வந்து என் சுகசெய்தி வந்து விசாரித்துப் போனார்கள். கனம் ஆர்க்கோட்டய்யரவர்கள் இழஞ்சுனைக்குப் போனார்கள் காலை என்று கேள்வி.

௨௰—௳ காலையில் விசாரிணை சத்தியநாத உபதேசியார் வந்து என்னை வந்து பார்த்துப்போனார். என் வீட்டார், மரியம்மாள், மருமகள் மரியவியாகுலமும் எங்களுடன் பேசாதிருக்கிறார்கள். உபதேசியார் வந்து விசாரித்துக் கொள்ளுகிறார். யிரவில் ஞானப்பிரகாசம்பிள்ளை நாத்தூர்குடி முதலான இடங்களுக்குப் போய் வந்தான். ஐயர் பாளையங்கோட்டையிலிருக்கிறார்களென்றான். அம்பாசமுத்திரத்தில் யாவருஞ் சுகமாயிருக்கிறதாகவும் செய்தி வந்தது.

உக—ட மதியம் சற்கருணைச் சாமான் வந்தது தவ்வாலில். இரவில் மதுரேந்திர ஐயர் வந்தார்: பலகாரம் ரொட்டியும் சேலைகளும் வாங்கி வந்தார், இருவைக்கொரு சேலையும் கொடுத்தார்.

உஉ—ட ஓய்வுநாளில் ஓலைகூறிப் பிள்ளைகளுக்கு கலியாணஞ் செய்ய நான் ஐயருக்குச் சொல்ல அவர் சம்மதிக்காததினால் மனஸ்தாபமாயிற்று. பின்பு உயிர்த்த பண்டிகைக்குப் பின்பு ஓலைகூறிக் கலியாணம் பண்ணலாமென்று ஐயர் சொன்னார். மிக்கேல்ப்பிள்ளைக்கு ஞானப்பிரகாசம் சவரியம்மாள், பாக்கியம்பிள்ளைக்கு மேரியாமென்று நிர்மாணித்தது. பாக்கியம்பிள்ளைக்குப் பாளையங்கோட்டையில் ஓலை கூறியாயிற்று. மதியஞ் சவுக்கியபுரத்துக்கு ஐயர் சற்கருணை கொடுக்கப் போனார்.

உங—ட ஞானப்பிரகாசம்பிள்ளை இடத்திலவர் பேத்தியாள் சடங்கு. மனைவிவிளைச் சண்முகமாசாரி வந்து வேலை செய்கிறான். முத்துமரியவியாகுலத்து முனைாயும் சண்டைபண்ணி சாப்பாடும் நடந்தது. உச—ட சாப்பிட்டு முடிந்தபின் ஞானப்பிரகாசம்பிள்ளை போனான். ஷை காலை விடிய மிக்கேல்ப்பிள்ளை ஒருவரிடத்திலுஞ் சொல்லாமல் போய்விட்டார், இரவும் வரவில்லை.

உரு—ட காலையில் எனக்கு வெருந் தண்ணீர் விட்டது.

உசு—ட கண்டிக்குப்போன தாணியேல்ப்பிள்ளைவந்து இடையங்குடி அத்தான் பாக்கியம்பிள்ளை யிடத்தில் மதுரேந்திர ஐயருக்குக் காயிதமுங் கொண்டுவந்தான்; ஷை மிக்கேல்ப்பிள்ளை யிடையங்குடிக்குப் போய் வீட்டிற் சொல்லாமல் வந்து விட்டேனென்று சொல்லித் திரும்பி எங்கேயோ போனார். அவர் தமையனும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் விசயநாராயணத்திலிருந்து வந்தார்கள்.

உஎ—ட ஐயர் இழுஞ்சுலைக்கு சனம் ஆர்க்கோட்டய்யரிடத்துக்கும் ஷை வியாகப்பபிள்ளை, ஞானப்பிரகாசம்பிள்ளை, ஷை தாணியேல்ப்பிள்ளையும் போய்விட்டார்கள். நான் தனித்திருக்கேன் வீட்டில். மதியம் சமதுவீட்டிலிருந்து பலபாட்டுச் சுவடிகளனுப்பினார்கள்.

உஎ—ட சம்பழக்கூடுதல்: உபதேசி, உவாத்தி, வாத்திட்டிகள் வந்து போனார்கள். எனக்கு வெருந்தண்ணீர் விட்டிருக்கிறது, சுகயில்லை.

உஅ—ட தாணியேலென்ற வேலைக்காரன் பெண்சாதிக்கு சன்னிபோலிருந்ததுக்கு ஐயரும் உபதேசியாரும் மருந்து செய்தார்கள்.

உகூ—ட இடையங்குடித் திரேசருக்குக் காயிதம் அனுப்பினார். சாலமோன் சுவிசேஷபுரத்துக்குப் போய் வந்தான்.

408

## நல்லம்மாள்புரத்தில் நான் வியாதிப்பட்டபோது வந்தவர்கள்.

ஆத்தூக்குடி மரியவியாகுலம் டிெ யாள் குழந்தைகள் உ
அவன் தமையன் ஞானப்பிரகாசம்பிள்ளையும் அவன் மனவி பிள்ளைகள் ௩
விசையநாருயணம் வியாகப்பபிள்ளையும் மனவியும் பிள்ளைகள் ௧-ம்
சுவிசேஷபுரம் சாமுவேல்பிள்ளையும் தாயும் மனவியும்
மரியவியாகப்பபிள்ளையும் பேத்தியாள் சுவாமியடியாளும்
சத்தியநாதஉபதேசியார்
யாக்கோவு பிள்ளை- சாமுவேல் உவாத்தி தாய் ௩
விசாரணை உவாத்தியார் நெல் ஞானக்கண்ணு, ஆபிரகாம், சாமுவேல், ஞானயுதம், நேசக்கண்ணன், வெ நல்லமுத்து
சுடலைமுத்து மூப்பன்
மதுரேந்திரஐயர் அடைக்கஞ்சனம் ௰உ-என்சமுசாரம்- இன்னாசியம்மாள் பிள்ளைகள் ௫
சஞ்சீவி
தேவசகாயம்பிள்ளை சமுசாரத்துடன் ௬. மாமனார், மாமியார், மச்சினன்
திருநெல்வேலி வேதநாசபிள்ளை, சமுசாரத்துடன் ௬
ம்பாசமுத்திரம் சவரிமுத்து
வியூர் ஞானப்பிரகாசம்
ரமணியபுரம் உவாத்தி
ீதப்பிள்ளை
டயங்குடி பாக்கியம்பிள்ளை, தாயார் அன்பாயி
கட ரசபுரம் பாக்கியம், டிெ மகன் சாமுவேல்
கை சாமுவேல்ஐயர், டிெ சமுசாரம் குழந்தைகளுடன் ௰
திரோ ர் வந்தும் மருந்து செய்தது
பூட்டு ராடு திருமருணிக அருணாசலத்தேவர்
நாலாங், லா முத்தையத்தேவர்
வேதநாச- ள்ளை வரவு அமுதுபடி ௫-மரக்கால் சிலபிள்ளைகள் பல சில்லறையும்
தேவசகாயம்பிள்ளை வரவுக்கு ௰௫
சஞ்சீவிப்பிள்ளை வரவுக்கு ௰

இந்த 1874-ம் ௵த்தில் லெந்து என்னும் உபவாச வாரங்கள் பெப்ரவரி ௴ 13-உ புதன்கிழமை ஆரம்பித்தது. ஏப்ரல் ௴ 3-உ பெரிய வெள்ளிக்கிழமை. வருஷந்தோறும் இந்த உபவாச வாரங்களை மிகுந்த பக்தி வினயமாய் ஐயா ஆசரிப்பார்கள். இதைக்குறித்து ஐயாவுடைய சரித்திரபுஸ்தகம் 95-ம்பக்கமுதல் எழுதி அச்சடித்திருக்கிறேன். அதை இந்தவிடத்தில் வாசிக்கவேண்டியது.

பெண்கள் கூடினால் பெருத்த சண்டையே- என்று ஒருபாட்டில் வரும். இப்போது அன்னாச்சிவீட்டில் பெண்பிள்ளைகளுடைய கூட்டத்தில் பொறுமை, அடக்கம், சகிப்பு இல்லாக்குணத்தினால் அடிக்கடி மனஸ்தாபங்களும் மனவருத்தங்களும் நேரிட்டதுண்டு. நன்மைக்கும் ஆசீர்வாதத்துக்கும் எங்கே தேவ ஆவியின் கிரியை மிகுதியாய் நடந்து வரக்கூடுமோ அங்கே சாத்தானும் தன்தொழிலைக் காண்பிப்பான்.

ஐயா இருக்கிற அறையில் எப்போதும் வாசிப்பும் செபமும் தியானமும் வருகிறவர்கள் போகிறவர்களுக்கு புத்தி போதனை நல்மொழியும், நல்லபாட்டுகளும், கீர்த்தனையுமாயிருக்கும். அவ்விடத்து உபதேசியார் ஒருவர் ஒருநாள் ஆவியில் ஆனந்த பரவசம் அடைந்து, ஐயா இருக்கிற அறையில் போயிருந்தால் மோட்சவாசலில் போயிருக்கிறது போல இருக்கிறது என்றார்.

ஐயா தாங்களாய் வாசித்துக்கொண்டிருப்பதற்கு வியாதி பெலவீனம் தடைக்கலாயிருந்த படியினால், பிள்ளைகள் பேரன் பேத்திமார்கள், தங்களைப் பார்க்க வருகிறவர்களைக் கொண்டு, சுவிசேஷங்கள் நிருபங்களையும் விசேஷமாய் சங்கீதத்தையும் எப்போதும் வாசிக்கக் கேட்பது மல்லாமல் பாமெட்ட தியானபுஸ்தகமும் வாசிக்கப்படும். ஒருநாள் திருநெல்வேலி இளைய அன்னாச்சி இயேசுதாசபிள்ளையவர்கள்: மரித்த கிறிஸ்தின் ஆவியும், என்ற ஞானப்பாட்டை வாசிக்க ஆரம்பித்தபோது, ஐயா அந்தப்பாட்டு முழுவதும் மனப்பாடமாய்ச் சொன்னார்கள். இந்த அருமையான பாட்டின் அருமை எனக்கு அன்றுதான் தெரிந்தது என்று ௸ அன்னாச்சி எழுதி வைத்திருக்கிறார்கள்.

பெரியவியாழக்கிழமை யன்று செபமும் வாசிப்புமாய்த் தியானித்துக் கொண்டிருக்கையில் முந்தின வருஷங்களின் வழக்கப்படி கிறிஸ்துவின் பாடுகளைக்குறித்த எட்டுத் தாழிசைகளை ஐயா பாட ஆரம்பித்தார்கள். இந்த விபரம் ௸ சரித்திரப்புஸ்தகம் 96-ம்பக்கத்தில் காண்க. ஐயாவுக்குப் பக்கவாதம் அன்று இராத்திரியே உண்டாயிற்று.

இதின்பேரில் கும்பிடக்கையில்லையே, முழங்காலூன்றக் காலில்லையே, என்ற ஒரே கிலேசந்தான் ஐயாவுக்கு.

ஐயா எக்காலமும் எவ்விடத்தி லிருந்தாலும் காலைமாலை கோவில் செபத்துக்குப் போவது தப்பினதில்லை. இந்தக்காலத்திலிருந்த மிகுந்த பலவீனத்திலுங் கூட காலூன்றி நடக்க அவகாசப்பட்ட சிலநாட்களில் அபூர்வமாயிரண்டொருதரம் கோவிலுக்குப்போய் வந்திருக்கிறார்கள். ஆனால் நல்லமான்புரத்தில் வீட்டுக்கும் கோவிலுக்கும் தூரம் முப்பது எட்டுக்குள்ந்தானிருக்கும். ஒருநாள் இப்படிக் கோவிலுக்குப்போய் வந்தபோது மூத்த அண்ணாச்சி ஐயாவைப்பார்த்து: மிகுந்தவாதையும் பலவீனமுமா யிருக்கிறதே, வீட்டிலிருந்து செபம்பண்ணிக்கொண்டிருக்கலாமே, உங்கள் மன நிர்ணயம் ஆண்டவருக்குத் தெரியாதா வென்றார்கள். அதற்கு, சபையோடு கூடி ஸ்தோத்திரிக்கிறது எத்தனை பாக்கியம், நடக்கக் காலும் கும்பிடக்கையும் தந்தாரே என்றார்கள்.

இப்படிப் பக்ஷவாதம் உண்டானதின்பேரில் இடையன்குடியிருப்பு திரசர் வந்து பார்த்தவர், பக்ஷவாதம் நேரிட்ட காரணத்தையும் இருக்கிற நிலைமையும் பார்த்து: நீங்கள் ஆண்டவரை ஸ்தோத்தரித்த பிரயாசத்தில் நேரிட்ட இதை ஆண்டவர்தான் நிவிர்த்தியாக்க வேண்டும் என்று சொல்லிப்போய் விட்டார். (அவர் ஒரு இறிஸ்தவன்)

ஐயாவுக்குக் கைகுவித்து முழங்கால்படியிட்டு செபம்பண்ணுவதே எக்காலமும் வழக்கமானதால் அவ்விதமாய் செபம் பண்ண இயலாமலிருப்பது அவர்களுக்கு மிகுந்த பாரமான துன்பமாயிருந்தது. ஆகையால் இந்தப்பக்ஷவாதத்தை நீக்கி, கும்பிடக்கையும் முழங்கால்படியிடக் காலும் தரவேண்டுமென்று ஆசையாய் பாதத்தை நோக்கியிருந்தார்கள்.

இந்த ஸ்திதியில் அவர்களை வந்து பார்த்த இளைய அண்ணாச்சி திருநெல்வேலி இயேசுதாசபிள்ளையவர்கள் இதற்கடுத்த மேமாதம் வந்து பார்த்தபோது பக்ஷவாதம் நீங்கி இரண்டு கையும் காலும் வழங்கத் தக்கதானதைக் கண்டு, தன்னை அடக்கிக்கொள்ளக்கூடாத சந்தோஷப்பிரமிப்போடு: ஐயா, பக்ஷவாதம் மிகுந்த பலவீனத்தில் விருத்தாப்பியத்தில் வந்தது தீராதென்று சொன்னார்களே, நானும் தீராதென்றெண்ணியல்லவா போனேன், நீங்களும் கும்பிடக்கையில்லையே என்று செபம்பண்ணினீர்களே யென்றார்கள். அதற்கு, ஐயா; அவர் கேட்ட வரம் தருவார், எனக்குக் கேட்ட வரந்தந்தார், பாவிமன்றாட்டை எப்போதான் அவர் கேட்கவில்லை என்று நன்றியறிதலாய்ச்சொன்னார்கள்.





மூத்தஅண்ணாச்சி ஐயாவுக்கு வேளாவேளைகளில் வீட்டில் நற்கருணை பரிமாறி வந்தார்கள். J. D. S.

---

(தேவசகாயத்துக்கு இயேசுதாசபிள்ளையவர்கள்)

Tinnevelly, 2nd April 1874

My dear Brother,

இம்மட்டுஞ் சேஷமுஞ் சுகமுந் தந்து நம்மெல்லாரையும் காப்பாற்றி வந்திருக்கிற ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். நம்மை யிதுவரையும் ஆச்சரியமாய் நடத்திவந்த ஆண்டவர் என்னதீர்மானத்தைத் திருவுளத்தில் வைத்திருக்கிறாரோ தெரியுதில்லை. ஜமீன்தாரவர்கள் அவ்விடத்துக்கு வந்தபின்பு அகத்தியம் Memorialக்கு fair எழுதிக்கொடுத்து ஜமீன் காரியத்தைச் சீருக்குக்கொண்டுவரவேண்டியது. மாசி ஜமீன்தார் கடன்கள் ஜமீன்தாருக்கு எவ்வளவு தூரம் பற்று மென்பதை ஒரு நிஷயத்துக்குக் கொண்டு வந்ததான் மற்றக்காரியம் பார்க்கவேண்டியது. சர்வஜாக்கிரதையும் விழிப்புமாயிருக்கவேண்டியது. பாம்பைப் போல விவேகமும் புறாவைப்போல கபடமில்லாமலிரு வென்று நமதய்யா அவர்கள் சொன்னது இச்சமயத்துக்கும் எச்சமயத்துக்கும் பொருந்தத் தக்கது.

Dr. சார்ஜனறையரவர்கள் காரியமிருக்கிறதுந் தவிர Sub Court இல் Record keeper வேலை இன்னமுங் காலியாகத்தானிருக்கிறது. ஆவதா விது காரியத்துக்கும் பிரயத்தனம் பண்ணவேண்டியது.

தெய்வசித்தமிருந்தால் முன்னுக்கு வருவதற்கு இதை யின்றினது வேறொன்றுமில்லை. ஜட்ஜுரையவர்களுக்கும் எழுது. புறப்படுமுன்னுக்கு வந்து பேசு. Sub Judge இடத்தில் பேசலாமா வென்றும் அபிப்பிராயங் கேட்கலாமே. தம்பி எவ்விதமும் இன்னமும் ஒருவதலி ஜட்ஜுரையவர்கள் புறப்படுவதற்கு முன் வந்து போவது சர்வஉத்தமம். அவ்விடத்தில் மாதந்தோறும் சம்பளத்தை வஷ்ணிசாய்ப் பற்றிக்கொள்ளவேண்டியது. பாக்கிநிறுத்தப்படாது. Scale எப்படி முறுகுமோ தெரியாது. ஆனாலும் நிலையென்று பாவித்துத்தான் காரியங்களைச் சீர்ப்படுத்த வேண்டியது. Record keeper வேலை தம்பிக்கு ஆனாலும் Manager வேலை நமக்குள் ளொருவருக்குதவு மென்று நடபடிக்கை நடத்தவேண்டியது. தம்பிக்கு Record keeper வேலையிற பக்ஷத்தில் ஜமீன்தார் தம்பியின் சிபார்சைப் பெரிசாயெண்ணத்தக்கதாயிருக்கும். Judge துரையவர்கள் தய்வு மேலாவில் பூ

காலாயிருக்கவேண்டியதுதான். அணைக்குத்தண்ணீர் திருப்புவது முதலிய கல்வல் மற்றது நடக்கத் தக்க இடமாயுள்ள அலுவலுக்குத் தம்பி Personal -ஆசப்போகப்படாது. ஆட்களைவிட்டு அதெல்லாம் பார்க்கவேண்டுமே தவிரக் கையாட்செச் செய்யப்படாது. இதை முபுகாரில் சொல்ல எண்ணியும் மறதியாய்ப் போய்விட்டது.

உயிர் நிலையாயுள்ள Certificate வகையாக்களை மறதியாய் D. A. Peter பிள்ளை வீட்டில் போட்டுவிட்ட சங்கதியை சீனிவாசகம்பிள்ளையால் தெரிந்து வாலசுப்பையைக்கொண்டு கேட்டு வாங்கி இத்துடன் அனுப்பியிருக்கிறேன், சரிபார்த்துக் கொள்ளவும்.

நமதண்ணாவியவர்கள் காகிதம் இதை யெழுதிக்கொண் டிருக்கையில் வந்தது. "நமதய்யா அவர்களுக்கு இருந்தமட்டுஞ் சுகந்தான். கால் வீக்க மாத்திரம் வற்றவும் ஏற்றவும் முழங்காலுக்குக் கீழிருக்கிறது. அதிகப்படுதவில்லை. பசியீனம் லேசாயிருக்கிறது. கருத்தர் இம்மட்டும் காத்தபடி யின்னமுங் காப்பாராக." "வெகசிரியிலிருந்து தம்பி காகிதம் வரவில்லை. நான் அங்கிருந்தும்" (i. e. fromPalamcotta) "இங்கு வந்தும் இரண்டுகாகிதம் அனுப்பினேன். ஷை தம்பி பாளையங்கோட்டைக்கு வந்த சமயம் Dr. சார்ஜென்டையவர்களைக் கண்டு கொண்டதும் அல்லது காணவில்லையென்பதுந் தெரியவில்லை. நீ ஷை தம்பிக்கெழுதினதுண்டோ இல்லையோ, இது விபரந் தெரிய விரும்புகிறேன்."

"கருத்தருக்குச் சித்தமானால் ஏப்பிரல்மீ மாகிய நாளது மீ 15-உக்குள்ளாக அரிசி மற்றச் சாமான்களிவ்விடம் வந்து சேரத் தக்கதாயிருக்கவேண்டும், விருந்தவாரம் ஓலை கூறும்படியாகத் திட்டஞ்செய்ய வேண்டியதிருக்கிறது. இதின் விவரங்களுக்கெல்லாம் இனிமேலெழுதவேன்." என்றும் ஷை காகிதத்தில் கண்டிருக்கிறது. தம்பியின் விருப்பப்படிக்கு நான் அவ்விடத்துக்கு வர மிகுந்த இஷ்டமுள்ளவனா யிருந்தாலும் நமதண்ணாவியவர்கள் உத்தரவை நிறைவேற்றும் பொருட்டு இவ்விடத்தில் நானிருக்கவேண்டிய அகத்தியம் நேரிட்டிருக்கிறது. நான் உ-வது page ல் காட்டியிருப்பன வற்றைத் தம்பி நன்றாய்க் கவனிக்க விரும்புகிறேன். Record keeper வேலைக்கு சர்வ பிரயத்தனஞ் செய்யவேண்டியது. தம்பி முன் பேசின சமயத்தில் இந்தவேலை காலியாயிருப்பது Judge துரைக்கு ஞாபகத்திலிருந்திருக்கமாட்டாது. தம்பியும் இன்னதென்று சுட்டிச்சொல்லவும் இல்லை, Sub Court இன்ன அலுவலானதால் ஞாபகத்தில் முன்னிலைக்கு வரமாட்டாது.



சுபகோர்ட்டிலானால் நோக்குமுன் ஞாபகத்துக்கு வரக்கூடியது. காரியங்களைத் தம்பி நீ ஆலோசித்துத் தெய்வசகாயத்தைத் தேடி இந்தக்காரியத்துக்கு முயற்சி செய்யவேண்டும். பிந்திப்போகாதபடிக்கு முந்தவேண்டியது. Judge துரையவர்களுக்குத்தானும் நேரே எழுதித் தெரிந்து கொள்வது அவசியமானால் அப்படியே செய்யவேண்டியது. ஜமீன்தாரின் கேட்கே கொள்ளுதலை நிறைவேற்றுவதும் Judge துரையவர்களுக்கு தவரக்கூடாத காரியமென்றிருக்குமானால் என்னைத் தம்பிக்குப் பதிலாகக் குறிப்பிக்கலாமே யென்று எனக்குத்தோன்றுவது: தம்பி பாக்கியமாய்ச் சகலத்தையும் தெளிவாய்க்காட்டி Record-Keeper வேலையில் (பெரியவான் தயவும் தெய்வசகாயமுமிருந்தால்) இருக்கிற prospects களையும் Manager வேலையில் promotion இல்லாதிருப்பதையும் காட்டி ஒருமனு ஒன்றை முந்தி ஆயத்தப்படுத்தி அனுப்பி கோடு பர்தாகிறதற்குள் தம்பி வந்து கண்டு ஒரு வைசலைத் தேட வேண்டியது." "துணிவின்செய்கையாலன்றி ஒன்றும் எய்தவ தன்று" Judge துரையவர்களுடைய தயவிருக்குஞ் சங்கதி Sub Judge க்குத் தெரிகிற பக்ஷத்தில் அவருக்கு வேறு சிபார்சு வேண்டியதில்லை. (இந்தக் காகிதத்தின் ஐந்தாம் பக்கத்தைக் காணோம். J. D. S.)

---

Tinnevelly. 3rd April 1874.

Revd. and Dear Brother.

தாங்களனுப்பிய ஆறுங் காயிதமும் நேற்றிரவு 7-மணிக்கு வந்து சேர்ச் சகலசமாசாரமுந் தெரிந்து கொண்டேன்.

நமதய்யா அவர்களுக்கு இம்மட்டுந் தலைமையும் சுகமுந் தந்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். கெவசித்தம்பிக்கு நாம் தபால் மார்க்கமா யெழுதிய காயிதங்கள் போய்ச்சேருமுன் ஆள்வசமனுப்பிய காயிதஞ் சேர்ந்தவுடனே புறப்பட்டு வெள்ளிக்கிழமை விடிய வந்து சேர்ந்து செவ்வாய்க்கிழமை விடியற்காலம் புறப்பட்டுப் போயிருக்கிறான்.

வெள்ளிக்கிழமை சார்ஜென்று துரையையும் அம்மாளையும் பண்ணைவிளையிலிருந்து மறுநாளும் வந்த ஐயாவர்களை சனிக்கிழமையும் கண்டு பேசிக்கொண்டான். தங்களிடத்தில் விட்டுப் பேசினபடி தம்பி வீட்டில் பேசாமல் சுருக்கமாய்த்தான் பேசியிருக்கிறார்கள். ஜட்ஜ்துரையவர்கள் விட்டும் போகவில்லை பிரியத்துக்குப் பங்கமன்னியில் காரியத்தை நடத்துவதை வெளிப்படுத்தான். சகலத்துக்கும் பட்டணம் போய் வந்த பின்புதான்

யாயும் உறுதியாயும் பேசுவார்கள் போலும். தம்பிக்கும் வலியவந்தவே ழியே யென்ற சம்மந்தமாகப் படாதென்பது கருத்து. ஐயரவர்கள் சம்பளந் தாமிப்புச் சொல்லாமல், முன் கல்விச்சாலையில் வாங்கி வந்தது முப்பது தா னே யென்பதுபோல பேசினதால் சிவகிரிக்குப் போகாதபக்ஷத்தில் அவர்கள் கொடுக்க நினைத்திருந்தது குறைவாகத்தா னிருந்திருக்கு மென்று தம்பிக்கு அபிப்பிராயம். 50-என்ற பேச்சே பேசவில்லை. (இங்கே துரையென்பது சார்ஜென்றதுரை J D S)

துரையிடத்தில் தம்பி என்னைக்குறித்தும் தன்னைக்குறித்தும் விஸ் தாரமாயும் சாவடையாயும் பேசியிருக்கிறான். துரை யாதொருவார்க்குச் சொ ல்லாவிட்டாலும் கேரிவெதற்குத் தக்கதாய் நமக்கனுகூலமாய்ப் பேசுவா ரென்பது உறுதிதான். அவரும் ஐயரவர்களோடு பட்டணம் வரைக்கும் போய் அங்கிருந்து சொச்சிக்குப் போவதாய்த் தீர்மானம்.

இவ்வட்கிழமை காலையில் நானும் தம்பியும் ஜட்ஜுதுரை யவர்களைக் கண்டோம், பக்ஷமாய் விசாரித்துக் கொண்டார்கள். சங்கதியை விட்டுச் சொல்லாமல், "நான் கல்விச்சாலையைவிட்டுப் போய்விட்டது ஐயரவர்களுக் குத் துக்கம். எனக்கு இப்போதும் ஒரு நல்ல அலுவல் கொடுப்பது அவர்க ளுக்கு எண்ணமாயிருக்கிறதென்று" பேச்சோடே தம்பி சொன்னான். இவ் வளவு நடபடிக்கைதான் இப்போ நடந்திருக்கிறது. இன்னமும் இருக்கிற சந்திக்கும் சமயத்துக்குத் தக்கதாய் வேண்டிய பிரயத்தனங்கள் செய்து கொண்டிருப்போம். தெய்வசித்தம்போ லாகக்கடவது. சதர் அமின் கோர்ட் டில் Record-keeper வேலையொன்று காலியாயிருக்கிறது. ரூ 30-சம்பளம். பெரியோர் தயவும் தெய்வகடாக்ஷமு மிருக்குமானால் முன்னுக்கு வர இது நல்லவழி. இதற்கும் வேண்டிய பிரயத்தனஞ் செய்யும்படி தம்பிக்கு எழுதி யிருக்கிறேன். ரூ 6-ம்வந்து சேர்ந்தது.

| | |
|---|---|
| அரிசி சேர்ப்படி 51 | ரூ 4—8—0 |
| மெழுகுபத்தி கட்டு 1-க்கு உரு 6 | ரூ 0—6—0 |
| தேயிலை பெட்டணம் 1-க்கு | ரூ 0—5—0 |
| சீனிபலம் 8-க்கு | ரூ 0—3—4 |
| | ரூ 5—6—4 |
| தானிவேல்பற்று | ரூ 0—2—4 |
| ஆகப்பற்று | ரூ 5—8—8 |
| வரவு | ரூ 6—0—0 |
| ஆகச்சேஅதிகவரவு | ரூ 0—7—4 க்கு |
| சாம்பிராணித்திரி | ரூ 0—1—0 |
| | ரூ 0—6—4 |

அதிக வரவு அணா-6-பைசா-4



நாகுகோட்டை அரிசி வேயத்துக்கு வாங்குவதிலும் 8-கோட்டை நெல்வாங்கிக் குத்தவிடுவதில் அதிக லாபமிருக்கும். நிசையன்விளையில் வா ங்கி அங்கேதானே குத்துக்காரியிடத்தில் குத்தவிடலாம். அதற்கு இசைவு டாவிட்டால் ரூ 50-இவ்விடத்துக்கு அனுப்பினால் நெல் பார்த்து வாங்கிக் குத்தவிட்டு அரிசி அனுப்பலாம். தங்களுத்தரவுப்படி நடந்து கொள்ளு கிறேன்.

இவ்விடம் யாவரும் தேவரீருடையாத் சேமம். சின்னக் குழந்தைகள் இரண்டுக்கு மாத்திரம் குத்திருமல் போல. நாங்கள் தங்களுக்கும் அய்யா அவர்களுக்கும் அம்மைக்கும் மதினிக்கும் பணிவாய் ஸ்தோத்திரமும் பிள்ளைகளுக்கு வாழ்த்துதலுஞ் சொல்லுகிறோம்.

இப்படிக்கு

தாழ்மையுள்ள ஊழியன்

வசுதாசன்

---

மிகவும் பிரியகுமாரன் M. சவரிராயபிள்ளைக்குத் தேவாசீர்வாத முண் டாவதாகவும்.

உனது பட்சமுள்ளகாகிதம் வந்தது. சமாசார மறிந்தேன். நீ யெழுதிய தெல்லாம் மிகுந்த ஞானமுள்ளது. உனது யோசனைப்படியே செய்கிறது. என்னெண்ணத்தை வெளியிட்டுக் காரியத்தைத் தீர்மானிக்கத் தேவையில்லை. காரியங் காரியம்போல காலத்தைப் பிந்தி வைப்போம். இப்போது பாக்கியம் பிள்ளை நீ யெழுதிய நடபடிப்படிக்கு வந்து சேர்ந்தார். மூந்தின பேச்சுக்கு விரோதமாய் மாறிப்பேசினால் முடியாதென்று மரியவியாகுலம் அழுத்தமா ய்ச் சொன்னதின் பேரில் குறித்த 50-ம் கொடுத்து விட்டார். ஒரு அரிசித் தழுப்பனும் ஒரு சரிவும், கொண்டுவந்திருக்கிறார். வெள்ளிக்கிழமை வந்தார். வருகிற ஞாயிற்றுக்கிழமையில் ஓலை கூறப்படும். மிகேல்பிள்ளை இந்தவாரம் வந்து சேரவேண்டியது. அவசிமித்தம் தான் தாமிதம். எப்படியானாலும் இனிச் சேருவை-பாக்கியம்பிள்ளை காரியத்துக்கு அட்டியில்லை. கருத்தர் எல்லாக்காரியத்தைத் தாமிதமின்றி ஒன்றித்து நடக்கக் கிருபை செய்வாராக. அவரைப் பிரார்த்திப்போமாக. இது நிற்க.

இப்போது நமதய்யாவுக்குச் சற்று சுகவீனம் உண்டாயிருக்கிறது. மூர்ச் சின வியாதியல்ல, வேறுவிதம். நாக்குத் தமொர்றம்,இடதுகால் கை யுணர்ச் சிக்கேடு. மூஙவாத சன்னிபோல பக்கவாத சேஷ்டை போலிருக்கிறது. டா க்டரை வருவித்துப் பார்த்ததில் மோசமில்லை என்று மருந்து கொடுத்து வருகி

று. எனக்குங் கலக்கந்தான். புறப்படும் ஒருவித வெப்பமுங் கண்ணீரோட்டமு மிருக்கிறது. கருத்தர் இன்னமும் கொஞ்சநாளைக்குச் சுகசீவன் தந்திரட்சிக்கவேணும். நம்முடைய காரியங்கள் தெரியுமே. ஐயாவுக்கு இந்தக் கலியாணங்கள் நிறைவேறு மட்டும் ஆண்டவர் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தனை. எல்லாருக்கும் இப்படியே விருப்பம். தேவசித்தந் தெரியாது அவர் கிருபை கூர்ந்தருள நீயு மன்றாடு. எல்லாக்காரியத்துக்கும் அவர் கிருபை செய்யவேண்டும். அளவற்ற கிருபை யுடையவர் நமக்கு இரங்குவாராக. இதுவரையும் நன்மை செய்தவர் இன்னமும் செய்வார். கலை விளையாத்தில் நாம் நிதானித்ததுக்குள் நிதானமாயாவது செய்யவேண்டியதுண்டு. தற்சமயத்துக்குரிய செலவும் நடக்கவேண்டியதிருக்கிறது- வீண்செலவு அல்லது அவசர மற்ற செலவு வேண்டாம்- சொப்பு இராசநாயகம்பிள்ளைமனைவி யிட்டதிலிருக்கிறதாம்- இவ்விடம் யாவருந் தேவகிருபையினாலே சுகம்- ஐயா சுகப்படவேண்டும்- அவ்விடஞ் சுகசெய்திக்கு எழுதவும்.

1874 ஏப்பிரல் மீ ௬-உ நல்லம்மாள்புரம்

Your's sincerely
M. Savarirayan.

P. S. யாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை மிளகுமூடு மட்டும் போய் விட்டுத்திரும்பி வந்திருக்கிறார். மிகேல்பிள்ளைக்குக் காகிதம் அங்கிருந்தும் போயிருக்கிறது.

M. S.

---

(தேவசகாயத்துக்கு)

Tinnevelly. 8th April 1874

My Dear Brother,

இப்போதான் நல்லம்மாள்புரம் அண்ணாவியவர்கள் காயிதம் வந்தது- நமதய்யா அவர்களுக்கு பெரியவியாழக்கிழமை afte-noon க்குப் பின்பு காலிலிருந்த வீக்கம் வற்றிப்போயிற்று. இடதுகாலுங் கையும் சுவாதீனமில்லாமலும் ஆட்ட அசைக்கக் கூடாமலும் இடது புறத்து முகத்தப்புறஞ் சற்று கோணியும் முகவாதக் குணக்குறிபோலும், பக்கவாதம் போலுமிருக்கிறது. யோசனை புத்தி தெளிவிருந்தாலும் மனக்கலக்கம் வெப்பங் கிலேசம் கண்ணீர் அடிக்கடி நேற்றுமுதல் (5-உ முதல்) உண்டாயிருக்கிறது என்பதாய்க் கண்டிருக்கிறது. நானுந் தம்பியும் உடனே புறப்பட்டுப் போகிறோம். நாளிது முன்னனுப்பிய காயிதம் வந்திருக்கலாம்.

இப்படிக்கு
ஏகதாசன்



[சார்ஜென்றையரவர்கள் சீமையில் டாக்டர் பட்டம் பெற்று பிஷப் பட்டமும் பெறப்போகிறவர்களானதால் அவர்களுக்கு இன்னமரியாதை வக்கணை வைத்து இக்கடிதம் எழுதுகிறதென்று தெரியாமல் முழித்தேன். அதினால் அவர்களுக்கு உதவியாயிருந்த அவர்கள் குமாரருக்கும் பின்வருங் காகிதத்தை எழுதினேன். Master என்பது லெ. ஐயாவர்களை J. D. S.)

Sivagiri, 11th April 1874.

Respeoted and Dear Sir,

I have thought much about what master said regarding the work which he so very kindly intended to have given me. I am most obliged to master for his good intentions towards me. I have made amicable, arrangements here, so that in case master is still willing to grant me the situation he mentioned to me, I shall accept it most gratefully. It is unnecessary for me to say anything regarding myself, as master and you know me so well. I humbly beg to request you kindly to inform the contents of this letter to master, and to condescend to write me a line, if master is pleased to take me into his service, so that I might begin to close my accounts &c at once, which would, I think, take a few days.

With my humble respects,

I remain

Your most obedient servant
J. D. Savarirayan

P. S. I beg to add that my circumstances are such that I would not be just to myself were I to take it up at a less pay than what I get at present.

I and all my brothers always consider it a privilege and pleasure to serve under master.

---

(தேவசகாயத்துக்கு இயேசுதாச பிள்ளை)

Tinnevelly, 16th April 1874.

My dear Brother,

நீ யனுப்பித்த காயிதங்கள் நான் ஊருக்குப்போயிருந்த சமயத்தில் வந்து சேர்ந்திருந்தன. வந்தவுடனே பதிற்கண்டிருந்தபடி இந்த உத்தியத்தில் Carr துரையவர்களுக்கண்டு காயிதங்கொடுத்தேன்.

"I cannot give him the appointment.

This will provoke my people and I cannot do anything to provoke my people. This appointment is not an easy one-liable to make mistakes every day. Let him try his best in the work. I have already told him the nature of his work" என்பதாகச் சொன்னார்கள்.

அப்போது, "Those people are not able to appreciate my brother's value. It is a matter of difficulty to pull on with heathens என்பதாகச்சொன்னேன்; அதற்கு I cannot give him the appointment. If he does not like the post let him give it up. Let him do according to his இஷ்டம்" என்று சொல்லி முடித்துப்போட்டார். உடனே வந்ததும் Sargent துரைக்குக் காயிதத்தை யனுப்பிப்போட்டேன். இதுகாரிய மிப்படியாச்சுது.

நமதய்யா அவர்கள் வெகு வருத்தப்பட்டுச் சற்று சுகுவடைந்திருக்கிறார்கள். ஆனால் இடதுபக்க முழுவதும் paralysed ஆவதால் வைடப்பிணியாய் வந்து சேர்ந்தது. என்ன செய்யலாம், தெய்வசித்தம். ஞாபக சக்தி, புத்தித் தெளிவு, உறுதியான விசுவாசம், தியானம், இவைகளுக்குக் குறைச்சலில்லை. ஆனால் தம்பி சஞ்சீவி, கிருபைபெற்றான் இவர்களுடைய விவாகத்தை விட்டு வேறுவேறுதலான சமாசாரத்தைக் காதாரக் கேட்கவும், பார்க்கவும், அப்படியே அண்ணாசுவியவர்களுடைய பெண்குழந்தைகளைப் பற்றிய கவலையும் ஆவதால் இப்போ வேற கலியாணகாரியங்களை யெல்லாம் விசுவாயித்து ஞானஸ்நா ன 12-th இல்முதல் ஓலை கூறியாச்சுது. தம்பிக்கு 19-th கூறப்படும். பிள்ளைகளுக்குக் கலியாணம் 29-th. தம்பிக்கு அடுத்தமே 6-th

இப்படிக்கலியாணங்கள் அடுத்திருக்கிற காரியத்தில் கையில் ஐவேசுகள் போதுமானபடி யில்லாதது பரமசங்கடத்து வழி யிருக்கிறது; அந்த





ணாசுவியவர்கள் மற்ற யாவருக்கும் உள்ளச்சரும் கொஞ்ச கஞ்ச கல்யா வீட்டில் நடப்பும் செலவும் அதிகந்தான். அய்யா அவர்களை யிட்டு மாத்திரம் (அதாவது மொத்தவகையாய் பார்க்க வருபவர்களையும் சேர்த்து) உத்தேசம் நாளொன்றுக்கு ரூ 1-க்கு ஜாஸ்திதான். இந்த சந்தியில் அண்ணாசுவியவர்கள் தங்கள் பிள்ளைகள் வகைக்காக நம்மிடத்தில் கேளாமல் தம்பி வகைக்கும் கிருபை வகைக்கும் நான் கொடுக்கும்படி விரும்புகிறார்கள். நமது கையில் ஐவேசில்லாவிட்டாலும் சந்தர்ப்ப மிருக்கிற வகையானது நாம் என்ன கடனை பண்ணியாவது முன்னைக்கூட்டியே தொகையைச் சரிபண்ணிப் போடவேண்டியது. சவளி ஜல்தியில் வாங்கவேண்டியதிருக்கிறது. ஒருவாரம் பிந்தினால் இந்துக்களுடைய முகூர்த்தகாலம் கிட்டிவிடும். ஆவதால் நாமிருவரும் 50, 50 க்குக் குறையாமல் இந்தவகைக்குக் கொடுப்பது அவசியமாயிருக்கிறது. ஆவதால் தம்பியினுடைய உதவிக் கெதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவ்விடத்தில் தம்பி கைமாற்றாய் வாங்குவது அயுக்தமானால் தம்பி வகைக்கும் சேர்த்து நான் இவ்விடத்தில் கடன்வாங்கவேண்டிய வகைக்கு அத்தியம் காயித மனுப்பவேண்டியது.

ஆக வேண்டிய காரியங்கள் சரிபண்ணும்படிக்கே நான் திருநெல்வேலிக்கு வந்திருக்கிறேன். ஏனென்றால் நான் புறப்படுவது நமதய்யா அவர்களுக்கு சம்மதமில்லாதிருந்தது.

Besides this, Father wanted us to buy a silk cloth for our eldest sister-in-law. What do you think? For how much we must buy this? How much do you intend giving? Because we both only will have to pay for it.

சகல காரியங்களுக்குந்தம்பியின் பதில் விசேஷத்தோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அவ்விடங்களில் நெய் (கல்லதாய்க்கிடைக்கிறபக்ஷத்தில்) ஒரு குடம் நெய் ஆகப்பண்ணவேண்டியது.

---

Tinnevelly.
17th April 1874

Revd. and Dear Brother,

நானிது முன்னனுப்பிய காயிதம் வந்துசேர்ந்திருக்குமே. அப்புறம் ... சுகிர்திக்குத் திட்டம்பண்ணியாச்சுது. திங்கட்கிழமை மதியத்துக்குமேல் ...

லோமோன்வந்து சேரவேண்டியது. மசாலை மற்றதும்வாங்க எனைமும் வர வேண்டியது. கைலாசபுரத்துப்பிள்ளை சாபிதாவை ஒப்புக்கொண்டாரா. அவர் பணமாவது வருகிறதாயிருந்தால் ரொம்ப ஒத்தாசையாயிருக்குமே. இப்போது மூன்றுகலியாணச்சவளியும்சாமானும் வாங்கவேண்டியதிருக்கிறதே. தாங்கள் தந்தது ரூ 100, சஞ்சீவி ரூ 20 ஆக ரூ 120-க்கு பவுன் ரூ $10\frac{7}{8}$ போக ஒரு 110-ரூ போவிருப்பதில் அரிசிக்கு மாத்திரம் 3-கோட்டைக்கும் ரூ 50-க்குமேல் வேண்டியது. ஆக 4 கோட்டை அரிசி ஆவதில் ரூ 70-க்கு மேல் போம். மசாலையும் சவளியும், மனுவேல்பிள்ளைக்குக் கலியாணச் செலவு தொகை வகையும் இருக்கிறது. இப்படியெல்லாம் ஆலோசனைப் பட்டுக்கொண்டு எழுதிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் தம்பியும் சிவகிரியிலிருந்து வந்து சேர்ந்தான். காரியங்களை யெவ்விதமு முற்றுப்பெறச் செய்யவேண்டிய வழியைத் தேடிக்கொண்டிருக்கிறோம். மற்றும் விபரங்களுக்குப் பின்றெழுதுவேன்.

நமதய்யா அவர்களுக்கும் மற்றும் பெரியோருக்கும் வந்தனம். மற்றவர்களுக்கு வாழ்த்துதல்.

இப்படிக்கு ஊழியன்

ஏகதாசன்.

P. S. எலிசப்பேத்து மாப்பிள்ளை மதுரையிலிருந்து வந்து விட்டார்கள். எலிசப்பேத்து சொன்னதில் மதுரைப்பிள்ளை (y. M) தங்களுக்கு எழுதின கடைசிக் காயிதத்துக்கு மூகாந்திரம் நமது பெரியபிள்ளை இந்த வாயிதாவில் நெருக்காதபடி சற்று பொறுத்து வாங்கிக்கொள்ளுபடி தாங்கள் பெரியபிள்ளைக்கு எழுதக்கேட்டுக் கொள்ளும் காரியந்தான். J. S.

---

Tinnevelly.
18th April 1874.

Revd. and Dear Brother,

தாங்கள் 16-உ இட்டனுப்பிய காயிதம் வந்து சேர்ந்தது. நான் நேற்றுத் தபாலிலும் அதற்குமுன் அம்பாசமுத்திரம் அண்ணாவியவர்கள் வசத்திலும் அனுப்பித்த காயிதங்கள் வந்து சேர்ந்திருக்கும்.

நேற்றைத்தினம் நானும் மனுவேல்பிள்ளையும் கனம் ஏகதாச அய்யரவர்களுக்குத் தங்கள் காயிதத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தோம். நாங்கள் பாளையங்கோட்டைக் கோவிலில் அறிக்கை கூறப்படும்.





சவளி வகைக்குக் குறித்த சாபிதா உத்தேசக்கிரயம் போட்டது: அவ்விடத்தில் தங்கள் Writing காயிதமடிக்குள்ளிருக்கிறது. விரும்பியபடி ஜாபிதாவைத் திரும்ப அனுப்புகிறேன்.

தாங்கள் 6-கோட்டை அரிசிக்கு எழுதி யிருப்பதற்கு 14-கோட்டை நெல்வேண்டியது. நெல்விலை நாள்தோறும் படிவைத்தேறினமாதிரியா யேறுகிறது. இப்போ பேசி அமத்தியிருக்கிறது வெள்ளை ரூ 7இ அரைக்கால் — ஆக 14- கோட்டைக்கும் ரூ 106௵-ஆகும்.

4-கோட்டை அரிசிக்குப் பலசம்பார வகையார ரூ 30-ஆக 6-கோட்டை அரிசிக்கு ——————டி—————— ரூ 45-ஆகும். சவளி முன்குறித்த விவரப்படிக்கு உத்தேசம் ரூ 120- தாங்களின்னமும் கூட்டுகிற விலைசுபத்தில் ஒருவேளை $137\frac{1}{2}$-ஆகும். மனுவேல்பிள்ளைக்கும் செலவுக்குக் கொடுப்பது ரூ 50 ஆகவே

உத்தேசம்

| | | |
|---|---|---|
| 6-கோட்டை அரிசிக்கு | ரூ 107—0—0 | 107—0—0 |
| பலசம்பாரம் } சக்தணம்பன்னீர் } | ரூ 37—8—0 | 45—0—0 |
| சவளி | ரூ 137—8—0 | 137—8—0 |
| பெண்வீட்டுக்குப் பாதிச்செலவுக்கு | ரூ 50—0—0 | 50—0—0 |
| ஆகரூ | ரூ 332—0—0 | 339—8—0 |

இப்படிப் பெருமிதமா யொரொமட்டாய் வாங்குவது தம்பி J. D. S. பிள்ளைக்கும் எனக்கும் சரியாய்த் தோணவில்லை. அந்தந்த காலத்து வரும் பிள்ளைக்கும் அந்தந்தக் காலத்துக்குப் போதும், பின்னுக்கு சங்கடத்துக்குள் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது.

இப்போது 9-கோட்டை நெல்லுக்குத் திட்டஞ்செய்திருக்கிறது சவளி பருப்புச்சேலை 3-அக்காளுக்கு 1 முத்தம்மாளியவியாருவத்துக்கு 1 ஆக 5-சேலை ரூ 21-க்குள்ளாகத் திட்டஞ்செய்திருக்கிறது. பட்டுகளும் ரூ 60-க்கு மேல் போகப்படாது. மசாலைவகையராவும் ரூ 30-க்கு வேண்டியது. ஆகவகை நாளுக்கும் உடனே ரொக்கங்கட்ட வேண்டியது ரூ 180-

| | |
|---|---|
| இதற்கு வரவு பவுனு கிரயம்போக | ரூ 89—0—0 |
| தம்பி J. D. S. வரவு | ரூ 20—0—0 |
| | ரூ 109—0—0 |

நாடியவிப்படி விருப்பதால் அவ்விடத்திலிருந்து விவரமான உத்தரவுத்

குக் காத்திருக்கிறேன். இவ்விடத்தில் சமாளிக்கக் கூடியமட்டும் பார்ப்பே ன். சித்திரைக்கரந்தை என்பது தங்களுக்குத் தெரியுமே, மாப்பிள்ளைமார் தங்களைப் பொறுத்ததுக்குச் சரிபண்ணுவார்களானால் அது வருத்தமில்லாத படிக்குச் சமாளித்துக் கொள்ளலாம். தம்பியும் இதைப்பார்வையிட்டார். அவசரத்தில் முடிக்கிறேன்.

இப்படிக்கு
ஊழியன்
ஏகதாசன்
என்பணிவானதோத்திரம்
ஊழியன்
தேவசகாயம்

திருநெல்வேலி

---

Tinnevelly
20th April 1874.

Reverend and Dear Brother

தாங்களனுப்பிய காயிதம் வந்து சேர்ந்தது. தம்பியும் மற்றும் பேரும் வந்து சேர்ந்தார்கள்.

தம்பி J. D. S. இன்று விடியற்காலம் புறப்பட்டு சிவகிரிக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறான். சார்ஜென்றையாவர்கள் பதில் வந்ததின் பேரில் அவ்விடத்துக்காரியங்களுக்கு ஒத்துக்குமானஞ்செய்து புறப்படுவது தம்பியின் நோக்கம்.

தாங்கள் என்னை உத்தரவு வாங்கிக்கொண்டு வரச்சொன்னதுக்கு இவ்விடத்தில் பள்ளிக்கூடத்துக்கு ரஜாக்கொடுத்து இப்போதான் ஒருவாரமாகிறது. ஒரு வகுப்புக்கு வாத்தியா ரில்லாததால் அந்த வகுப்பெல்லா வாத்திமாருக்கும் பொதுவாயிருக்கிறது. ஞானவுயிர்ப்பிள்ளை யவர்கள் குமாரன் ஆசீர்வாதம்பிள்ளைக்கு ஒருநாளுத்தரவு கொடுக்க செம்ப ஆலோசனை பண்ணினார் அனா. கலியாணங்கள் 2 வாரமாகிறதால் என்னவழியென்று துலங்குகிறதில்லை.

கலியாணங்கள் ஏககாலத்தில் ஏகஇடத்தில் இல்லாமலும் தூரகாலத்தி லில்லாமல் தூரஇடத்தி லிருப்பதாலும் வாறபோற ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டத்துக்கும் வண்டிவாடகையில் நஷ்டத்துக்கும் இடமாகிறது.

நேற்றைத்தினம் தம்பிமாரும் நானும் தீர ஆலோசனை செய்ததில் தம்பி சஞ்சீவி கலியாண மிவ்விடத்தில் வைப்பதில் கமதய்யாவும் அம்மையும் கண்ணால் பார்க்கிறதற்கிடமில்லா திருக்கிறதுந் தவிரத் தாங்கள் அநே



கமா இருந்து சிறப்பிக்கிறதற்கு மிடமில்லாதிருக்கிறது. ஆவதால் நமது முக்கிய நோக்கம் பூராவாய் நிறைவேற இடமில்லாமலும் கமதய்யா அவர்களுக்கும் சந்தோஷம் பூரணதிருப்திக்கு வர இடமில்லாமலு மிருக்கிறதே யென்று யோசித்து எல்லாக்கலியாணங்களையும் ஒன்றாய் வருகிறமீ ௬ உ வைத்தால் நலமென்றெண்ணி மாப்பிள்ளை மனுவேல்பிள்ளைக்குத் தெரிவித்ததில் அவரும் வந்து யோசித்து அப்படியே செய்து கொள்ளுகிறதென்று சொல்லுகிறார்கள். ஆவதால் தாங்கள் இதற்குச் சரிசெய்து அந்தந்த இடங்களுக்குக் காயித மெழுதுவதிலும் ௨௯-௳ தேதி மாற்றி ௯-௳ ஆய் மாற்றுவது சர்வ உத்தமமா யிருக்கிறது. இவ்விடங்களில் நாணயம் கைக்குவரவில்லை. இன்று அன்று வென்று இருக்கிறது, ஆவதால் சவளி இன்னமும் வாங்கவில்லை, ௯-௳ ஆனால் சகலத்துக்கும் சௌரியமா யிருக்கும். பாக்கியம்பிள்ளை காரியத்துக்கு தங்கள் காயிதம் வந்ததின்பேரில் நான் மக்னியர் துரையைப் போய்க்கண்டு சமாதானம் பண்ணி உத்தரவுக்கு வழிபண்ணுகிறேன். நாளை ௭-மணிக்குள் ஆத்தி வந்து சேருவான், உடனே பதிலெழுதி அன்றைத்தபாலில் வரக்காயித மனுப்பிப்போட்டால் கலெக்சமுத்து இவ்விடத்துக்குப் பதில் வந்து சேரும். மற்றும் விசேஷங்களைப் பின்னாலெழுதுகிறேன்.

இப்படிக்கு
ஊழியன்
ஏகதாசன்

அனுப்பு சாயங்காலம் ௬-மணி திங்கள்

---

Tinnevelly 21st April 1874.
இரவு-7 மணி

Revd and Dear Brother,

அவ்விடத்தில் குறித்த ஜாபிதாவுக்கு அசல்பிரதி தாங்கள் காயிதங்கள் வைத்திருக்கும் காயிதமடிக்குள் பிளாட்டின் பேப்பருக்குள்ளிருந்தது. அப்புறம் அவ்விடங் காயிதம் வந்ததின்பேரில் இவ்விடத்தில் மருவெட்டாய்க் குறித்த அவ்விடம் நகலைப்பார்த்து ஒன்று குறித்தனுப்பினேன்.

கூடியமட்டும் அவ்விடத்து உத்தரவுப்படி நடந்துகொள்வதே யென் முழு வாஞ்சையாயிருக்கிறது, ஆனால் மனபாகம் பூராவாய் எழுத்தினால் வெளியாகக் கூடாதிருப்பது தான் சஞ்சலம்.

சாலோமோன் வசம் அரிசிமரக்கால்41-படி 1-மற்றுஞ் சாமான்களும் அனுப்பியிருக்கிறது. எலுமிச்சங்காய் கிடைப்பது பிரயாசை. மூலைக்கு மூலை விசாரிக்கிறேன். குறிப்பித்த மற்றுஞ் சாமான்கள் அடுத்த நடையில் வந்து சேரும். அனுப்பியிருக்கிற சாமானுக்கு ஜாபிதா இத்துடன் வருகிறது. யாவருஞ் சேமம்,

இப்படிக்கு ஊழியன்

ஏசுதாசன்

P. S. நமதய்யா அவர்களுடைய சேர்ாதம் முத்தி செய்கிறேன். சிவகிரித்தம்பி அனுப்பிய தேன்சாடி 1 சாடி திரும்ப வேண்டியதாம்.

வாடகை நடுகவ-அனைக்காலுக்கு வண்டிக்காரன் பற்று நடுஉவ-அனைக்கால் போகப்பாக்கி ரூ-௯ அவ்விடத்தில் கொடுக்க உத்தரவாகவேண்டியது.

---

Tinnevelly, 22nd April 1874.

Revd. and Dear Brother,

இன்று விடியற்காலை மூன்றுமணிக்கு சாலோமோன் வண்டியுடன் புறப்பட்டிருக்கிறான். ஆத்தி சரியானசமயத்தில் காயிதங்கொண்டு வராமல் மோசம்பண்ணிப் போட்டதாய்த் துலங்குகிறது. இன்றுதபாலில் தங்கள் காயிதம் தப்பாமல் வந்து சேர்ந்திருக்கு மென்று நம்பிப்போய் விசாரித்ததில் வரவில்லை.

இன்று காலை ௰-மணிக்கு பாக்கியம்பிள்ளை வந்து சேர்ந்தார். சகல சமாசாரத்தையும் சுருக்கி இப்போ மேயீ ௬-உ வைக்கும்படி திட்டம்பண்ணியிருக்கிறதென்று சொன்னேன். இதைக்குறித்து அண்ணாவி யவர்களுக்கு எழுதியிருக்கிறது, பதிலின்று வந்து சேருமென்றுஞ் சொன்னேன். பதில் வராதது விதை யவனா வைத்துக்கொண்டே யெழுதுகிறேன். அவரே யிதை Post இல் போடுகிறார். மேயீ ௬-உ வைத்துக்கொள்வது அவருக்குஞ் சம்மதந்தான். இத்தவாயிதாவும் எங்கே பிந்திப்போகுதோ என்பது தான் அவருக்கு மலைவே தவிர இப்படி நாம் வைத்துக்கொள்ளுகிற பக்ஷத்தில் ரம்யத் திருப்திதான். அவசரத்தில் முடிக்கிறேன்.

இப்படிக்கு

தாழ்மையுள்ள ஊழியன்

ஏசுதாசன்

P. S. ஷை பாக்கியம்பிள்ளை தங்களுக்கனுப்பிய காயிதங்களுக்குப் பதில் பெறவில்லை யென்று மனசுக்குக் கொஞ்ச வாயாசமென்று தோன்றுகிறது. வேறு வித்தியாசமில்லை.

J. S.

---

417 ~~418~~



(இந்தக்காகிதம் மிகவும் சோர்ந்து கிழிந்திருக்கிறது.)

Nallammalpuram.

24th April 1874.

My dear son,

இவ்விடம் யாவருந் தேவகிருபையினாலே சுகமே யிருக்கிறோம். அவ்விடஞ் சுகசெய்திக்கு எழுதவும்.

நமதய்யா அவர்கள் சுகம் அம்மட்டி லிருக்கிறது. தேவகிருபையினாலே இடதுகையுங் காலும் மாத்திர முணர்ச்சிக்கு வரவேண்டும். ஆண்டவர் கிருபை செய்வாராக. இம்மட்டுஞ் சிவன் தந்தவருக்கு ஸ்தோத்திரம்.

கலியாணகாரியம் ஒருவாறு தீர்மானமாகி ஓலையும் கூறியாயிருக்கிறது. ......கிழமையோடே மூன்றோலையும் சரி. நாளது மீ 26-உ குறித்திருந்தது. இப்போது தம்பி சஞ்சீவிப்பிள்ளை கலியாணமும் இவ்விடத்தில் வந்து நடக்கத் தீர்மானமாயிருப்பதால் மேயீ 6-உ புதன்கிழமை என்று நிச்சயித்து இந்தப்படிக்கு நடக்கக் கோரிக்கையாகிறது. சேருவை பாக்கியம்பிள்ளைக்கும் இந்தப்படிக்குத் தேதி குறித்துக்காட்டி எழுதனுப்பி யிருக்கிறேன். கூடுமானால் நீயும் அவருக்கு மேயீ ௬-உ யன்று கலியாணம் நடக்கும்படி வந்து சேரவேண்டுமென்று தெரிவிக்கவும். கருத்தருக்குச் சித்தமானால் மேயீ ௬-உ நூவின்க்கும் மிகேல்ப்பிள்ளைக்கும், மேரிக்கும் பாக்கியம்பிள்ளைக்கும், ஒருவைக்கும் தாவீதுப்பிள்ளைக்கும், தருமசஞ்சீவிக்கும் எலிசபேத் பாக்கியத்துக்கும் ஆக நாலு கலியாணம் நடக்கும். அவர் சகலத்தையும் நன்மையாக நடத்துவாராக. இதுகாரியத்துக்கு எவ்விதமும் நீயும் ஒருவாரத்துக்கு உத்தரவு பெற்று வந்து சேரும்படிக்கு எத்தனப்படவும். கலியாணம் நிறைவேறினவுடனே தாமதமின்றி மரியலியாளுடன் புறப்பட்டு வருவான். அவளுடைய கடமை கலியாணவிஷயத்தில் அதிகம்.

உனது பட்சமுள்ள காகிதங்கள் அந்தந்தச் சமயத்தில் வந்து சேர்ந்திருக்கிறது. கிஷ்டணபிள்ளை மகளுக்கும் சண்முகசுந்தரம் பிள்ளைக்கும் கலியாணம் நடக்கிறது தெரிந்ததுதான். இதைப்பற்றிக்காகிதம் வந்ததில்லை. சரிதான். குடும்பத்தார் அதிக இஷ்டாள் மாத்திரம் ஒரு கலியாணத்துக்கு வந்தாற் சரிதானே. நாம் போகிறது சரியா.

மாப்பிள்ளை யாக்கோபு சவரிராயபிள்ளை நம்முடைய கலியாணங்களுக்கு வரப் பிரியமில்லாததுபோற் சொல்லிக்கொண்டார். இது அவருடைய இஷ்டம். நாமும் அவனைப்போலிருக்கிறதானால் ஒருவரும் நமக்கிரார்கள். இப்படியாகில் நமக்கு செலவில்லை: இந்தப்புத்தி நமக்கு வரமாட்டுதில்லை.

இனியுள்ள காலம் வெகு மாறுதலுள்ளதா யிருக்கு மென்று இதினாலும் நிதானிக்கலாம். இம்மட்டு முன்னதிலும் பல கவனிக்கத் தக்கதுகளுண்டு. மேற்படி வகைப்படி தானிருக்கும். அன்பு குறைந்தால் எல்லாங்குறையும்.

* நான் கலியாணகாரியத்தைப்பற்றி இதமுன்னெழுதி யனுப்பின காகிதஞ் சேர்ந்திருக்கு மென்று நம்புகிறேன். சாமான்களுக்கும் அரிசி முதலியதுகளுக்கும் பாக்கியம்பிள்ளை திருநெல்வேலியிலிருந்து வாங்கி வரும்படி திட்டஞ்செய்திருக்கிறது.

கலியாணத்துக்கு வரவேண்டியவர்களுக்கு எழுதியனுப்பும்படி தீர்மானித்திருக்கிறது. இனிமேல்தான் காகிதங்கள் போகும்.

இவ்விடத்து நாங்கள் உனக்கு வாழ்த்துதற் சொல்லுகிறோம்.

இப்படிக்கு

Yours sincerely

M. Savarirayan

P. S. மாப்பிள்ளை யாக்கோபு சவரிராயபிள்ளை இன்று காலமே இவிடம் வந்தார். சுகம். M. S.

---

கலியாண அழைப்பு

தேவகிருபையை முன்னிட்டு காளது ௵மெய்௴ 6-ௗ புதன்கிழமை காலை 9-மணிக்கு கல்லம்மாள்புரத்தில் என் சகோதரன் தருமராத சஞ்சீவிப்பிள்ளையவர்களுக்கும் ஈ:ஸ்ரீ தெய்வசாயகம்பிள்ளை யவர்கள் குமாரத்தி எ. பாக்கியம் அம்மாளுக்கும், என்குமாரத்தி ஞாயிஸ் அம்மாளுக்கும் M. மிக்கேல்ப்பிள்ளை யவர்களுக்கும், என் குமாரத்தி மேரிஅம்மாளுக்கும் வி. பாக்கியம் பிள்ளை அவர்களுக்கும், என் சகோதரி மகள் கிருபை பெற்ற மரியம்மாளுக்கும் தே. தாவீது பிள்ளையவர்களுக்கும் விவாகம் நடக்கப்போகிறதினாலே நீங்களனைவரும் வந்து சிறப்பிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

25—4—74

இப்படிக்கு

கல்லம்மாள்புரம்

மதுரேந்திரஞ் சவரிராயன்

[இடி காகிதம் சகல இடங்களிலுமுள்ள பந்துக்கள் இஷ்டர்கள் சகலருக்கும் அனுப்பிற்று. J. D. S.]

---

(தேவசகாயத்துக்கு)

Tinnevelly

25th April 1874.

My Dear Brother,

இவ்விடம் யாவருஞ் சேமம். அவ்விடம் சேமலாபங்களுக்கு எழுதியனுப்பவும்.

ஊரில் நமதய்யா அவர்கள் சுகசீர் பழயபடிதான். ஆகாரஞ்சென்று வருவதுதான் மனதுக்குத் திருப்தியான காரியம்.

எல்லாக் கலியாணங்களையும் மேய் ௴ 6-ௗ என்று நிச்சயித்துக் காகிதமும் வந்து விட்டது. சகலமும் தயாராகிறது. மி. அருளம்மாள் மேய்௴ 2.nd க்குள் இவ்விடம் வந்துசேர்ந்தால் இங்கிருந்து பெண்ணழைத்துக்கொண்டு போவதற்கு யிசைவா யிருக்கும்.

Mr. Carr has left the place

சார்ஜென்றையாவர்கள் 26-th இல் வருவதென்ற பேச்சு 28-th இல் என்று மாறியிருக்கிறது. வந்தவுடனே தம்பி விரும்பியபடி கூலியாள்வசம் இருக்கிற சமாசாரத்துக்கு எழுதி விடுகிறேன். வேறுவிசேஷமில்லை.

Yours affectionately

J. Savarirayan.

P. S. தம்பி யிவ்விடத்திலிருந்து கடலை முடிந்து கொண்டு போன சிட்டுத்துண்டு வாலசுப்புடையது. இல்லாமல் சஞ்சலப்படுகிறான். அனுப்பவும்.

---

Tinnevelly. 25th April 1874.

Revd. and Dear Brother.

தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது. அன்னுச்சி (அம்பாசமுத்திரம்) அவர்கள் வந்ததாலும் சமாசாரங்கள் அறிந்து கொண்டோம். ஐயா அவர்கள் சவுக்கியமே பெரிதும் விசேஷித்ததுமான எண்ணம். சாலேரமோன் செவ்வாய்க்கிழமை இரவு புதன் விடிய 3-மணிக்கு அரிசி மசலாக்களுடன் புறப்பட்டு வந்தான். இதற்குள் வந்துசேர்ந்திருப்பானென்று நினைக்கிறேன். இன்றைக்குள்ளாகச் சவளிகள் வாங்கித்தீரும்.

எலிசப்பேத்து மரியம்மாளுடன் திங்கள் கிழமை புறப்பட்டு வருவேன் எவ்விதமும். ஐயா அவர்களை விட்டிருப்பது மனதுக்கு அடிக்கடி கவக்கமாகிறது. கர்த்தர் மனமிரங்கவேணும்.

மற்றும் ஆகவேண்டிய காரியங்கள் வாங்கி ஆகிறது. அரிமோத்திரம் ஏதிக யிருக்கவேண்டியது வென்று அண்ணாச்சியவர்களுக்குத் தெரியும். நான் சீக்கிரம் வருவதால் மற்றபாவையும் முகதாவில் பேசிக்கொள்ளுகிறதென்று நிறுத்துறேன்.

Yours most obedient & affectionate,
T. S. Savarirayan.

---

(தேவசகாயத்துக்கு)

Tinnevelly. 27—4—74

My Dear Brother,

இதுவரைக்கும் நான் நாமதிக்க நேரிட்டது. இன்று சாயங்காலம் ஊருக்குப்போகிறேன்.

தங்களுடைய கடிதம் வந்ததால் அவ்விடத்துச் சேமத்துக் கறியலாச்சுது. ஐயா அவர்களை இதுபரியந்தரும் கர்த்தர் காப்பாற்றியிருக்கிறதற்காக அவருக்குத் தோத்திரம். அடிக்கடி மூத்தஅண்ணாட்சியவர்கள் கடிதம் வருகிறது. அம்பாசமுத்திரம் அண்ணாட்சியவர்கள் நாலாம்நாள் கல்லம்மாள்புரத்திலிருந்து இவ்விடம் வந்து திரும்ப ஊருக்குப் போகிறார்கள்.

கலியாணம் அடுத்தமாதம் 6-உ வென்றும் நல்லம்மாள்புரத்திலேதான் என்றும் திட்டமாயிருப்பதால் (நாம்முன்பேசிக்கொண்ட விருப்பத்தின்படி) தங்களையும் மதினி பிள்ளைகளையும் பார்ப்பேனென்று சந்தோஷப்படுகிறேன்.

கனம்பொருந்திய Dr. சார்ஜென்று ஐயாவர்கள் செவ்வாய்க்கிழமை இவ்விடம் வந்துசேருகிறதாகச் செய்தி. மற்றவைகளுக்கு இவ்விடத்தில் அண்ணாச்சியவர்கள் தங்களுக்கு எழுதுவதால் தெரியவரும்.

இவ்விடத்தில் சிவகிரி சமுகம் வந்திருந்ததாக சண்முகம் சொல்லத்தான் தெரியும்.

நான் தங்களுக்கும் மதினிக்கும் பணிவாய்த்தோத்திரமும் பிள்ளைகளுக்கு முத்தியும் செய்கிறேன்.

Yours ever affectionate,
T. S. Sanjeevy.

P. S. I wish- especially now a days- I wish you to have me by my side to advise me and sympathize with me;



I find in you only the same feeling and almost the same nature of which, I am conscious, I possess; so, my dear brother, you are congenial to my heart. It is a great grief to me that our father is unwell and unable to do anything, and that you should be far off. Let us hope, however, all for the best and gladly submit to the will of God whose ways are not ours.

I comfort myself with the hope that I shall soon see my brother. T. S. S.

---

(தேவசகாயத்துக்கு)

Tinnevelly, 27th April 1874

My Dear Brother,

சண்முகவச மனுப்பித்த காகிதம் வந்தது.

சார்ஜென்றையரவர்கள் இன்னமும் வரவில்லை. நாளைக் காலையி லிங்கிருப்பார்கள். சாயங்காலம் அவர்களைப் பார்ப்பேன். காகிதம் புதன்கிழமைக் காலையில்த்தா னனுப்ப நேரிடும்.

கலியாணங்கள் May 6th உறுதியாச்சுது. மி. அருணம்மாள் May 2nd இல் இங்கிருந்தால் ஞாயறுக்கிருந்து திங்கட்கிழமை பெண்ணையும் அழைச்சுக் கொண்டு போகச் சரியாயிருக்கும். ஆவதால் சண்முகத்தை உடனே அனுப்பிக்கிறேன்.

இவ்விடம் ராமகிஷ்ண அய்யருடைய District Court Dy. Writer வேலை இராமலிங்கம்பிள்ளைக்கு ஆகி யிருந்ததே, அந்த இராமலிங்கம்பிள்ளைக்கு மதுரைக்கோர்ட்டில் 70-ரூ சம்பளவேலை ஆகிவிட்டது. Dy. Writer வேலை காலி......

Judge துரையவர்களிடத்தில்...விருப்பம் நமக்குப் பிரதிகூலமாயிருக்கிறது. தெய்வசித்தம்போலாவதாக. இவ்விடம் யாவருஞ்சேமம்.

Yours affectionately
J. Savarirayan.

P. S. குளத்தூர் ஆறுமுகம்பிள்ளை......கூட அனுப்பவும்.
கடலை முடிந்துகொண்டு போன கிட்டுத்தண்டு வாலகப்புடையது. J. S.

Tinnevelly.
29th April 1874

Revd. and Dear Brother,

இவ்விடம் யாவருந் தேவகிருபையாற் சேமம். அவ்விடத்திலிருந்து யாதொரு காகிதமும் வராததை யிட்டு மெத்தவும் அலைமலைவோடிருக்கிறேன்.

கலியாணக்காகிதங்கள் தயாரான விவரந் தெரியவில்லை, நாளுமாச்சுது. தெரிவிக்கவேண்டியவர்களுக்கு எற்கனவே அனுப்பித்தால் உத்தமம். வேளையடுக்கக் காகிதம் வந்தால் சரிப்படாது. காகிதம் வந்ததின்பேரில் புறப்படுவதைக் குறித்து யோசனையுள்ளவர்களு முண்டு. ஆவலாதிக் கிடமில்லாதபடிக்கு கூடியமட்டும் பார்க்கவேண்டியதிருக்கிறது. டீ கலியாண அறிக்கை அழைப்புக்காகிதங்களைக் குறித்து தங்களுக்கு நானெழுதிய காகிதங்கள் வந்து சேர்ந்திருக்கலாம்.

நேற்றுச்சாயங்காலம் அழகிவிளை மாட்டுக்காரர் வசம் இரண்டு கோட்டை அரிசி வருகிறது. நல்ல அளவு, காய்ந்தஅரிசி, சரிபார்த்துக்கொள்ள வேண்டியது.

இன்று விடிய 2, 3 மணிக்குத் தம்பியும் எலிசப்பேத்தும் வண்டிமார்க்கமாய் வருகிறார்கள். அரிசி 33-மூ 4-படி அனுப்பிச்சிருக்கிறது. ஆக13-கோட்டை நெல்லாச்சுது. மற்றச்சாமான்களுந் தயாராச்சுது. தங்கள் காகித வருகைபார்த்து ஜோக்கெட்க வேண்டியதுதான். கனம் சார்ஜென்டையரவர்கள் நேற்றிரவு வந்துசேர்ந்தார்கள். வேறுவிசேஷமில்லை.

இப்படிக்கு
ஊழியன்
ஏசுதாசன்.

---

(திருநெல்வேலி அன்னாட்சி இயேசுதாசபிள்ளை யவர்களுக்கு தம்பி சஞ்சீவி எழுதினது. இந்தக்காகிதத்தின் இரண்டாந்தாளைக் காணோம். J. D. S.)

2nd May 1874
Nallammalpuram

My dear Brother

நான் முன்னெழுதின கடிதம் வந்திருக்குமென்று நம்புகிறேன்.



சவளிவாங்கின வகைகளைக்குறித்து நான் அன்னாகுட்டியவர்களிடம் பேசினேன். நான் முன் சொல்லியபடியே அவர்களும் பெண்பிள்ளைகளுக்குள் பட்டையிட்டு மனஸ்தாபம் வரும் என்றபடி அன்னாச்சியவர்களும் நினைத்து மனஸ்தாபப் படுகிறார்கள். நமது பிள்ளைகளே ஏற்றத்தாழ்ச்சியைக்குறித்து மனக்குறைவு படக்கூடியதுதானே. ஒரே இடத்தில் ஒரேகாலத்தில் நடக்கும் கலியாண வஸ்திரமாவது மற்றவைகளாவது ஒன்று போலிருப்பது தான்சரி. தாங்கள் சவளிவாங்கும்போதே நான் மனத்திருப்தி யில்லாத சாடை தங்களுக்குத் தோன்றியிருக்கலாம், இதைக்குறித்தே அப்படியிருந்தேன். நாமே எல்லாருக்கும் பணங்கொடுத்து வாங்குவதாலும் எல்லாம் ஒன்றுபோலிருக்கவேண்டியது. காரியம் Too late ஆய்போய்விட்டதென்று பயப்படுகிறேன். முகிர்த்த வேஷ்டிகளை மாற்றி ஒரேமாதிரியாக்கக் கூடுமென்றாலும் பட்டைப் பற்றி யென்னசெய்கிறதென்பது சங்கடம். மதினியாரவர்களுக்கு இப்போ தெடுத்த பட்டுகளில் ஒன்றை வைத்துக்கொண்டு இன்னொன்று வாங்கிச் சரிப்படுத்தக்கூடுமானால் நலந்தான். வாங்கியிருக்கிற தாட்டுப்பத்திரிப்பட்டு மூத்தமதினியாரவர்களுக்குக் கொடுத்து விட்டால் இன்னொரு காந்திப்பட்டெடுக்க வேணும். காந்திப்பட்டு மதினிக்குக் கொடுத்துவிடுகிறதானால் இன்னொரு தாட்டுப்பத்திரி எடுக்கவேணும். அப்படி யிருந்தாலும் பட்டுகள் எல்லாம் ஒன்றுபோலிருக்க மாட்டாது. விலையும் அப்படியே யிருக்கும். ஆனதால் தாங்கள் வாங்கியிருக்கிற தாட்டுப்பத்திரியை மூத்தமதினியாரவர்களுக்குக் கொடுத்துவிட்டு வேறு காந்திப்பட்டு எடுப்பது எனது யோசனையும் விருப்பமுமா யிருக்கிறது. தாங்களும் யோசித்தால் இது நல்ல யோசனையாய்த் தோணும். ஆனால் தங்கள் விருப்ப மெப்படியோ.

*

(தூத்துக்குடி பெரியபிள்ளைக்கு.)

My dear Son

சென்ற ௴ 30-உ போட்டனுப்பின உனதன்புள்ள காகிதம் வந்தது. பார்த்துக் கொண்டேன். அதில் கலியாணத்தின் காலில் நீ யிங்கே இருக்க மாட்டாயோ வென்கிற சந்தேகம் என் மனதுக்குப் பெரிய வருத்த முள்ளது.

நம்முடைய விருப்பம் நமது ஆண்டவருடைய சித்தப்படியானாலுஞ் சந்தோஷம். இப்படி யுள்ள நம்முடைய காரியங்களில் நீ யில்லாமலிருப்பது வலது கண், வலது கை, வலது கால் இல்லாதது போலுள்ள சங்கடம் எனக்குண்டு. இப்படியே எனக்கிருக்குமென்று உனக்குத் தெரியும். ஆனதால் கர்த்தருடைய கிருபையை வேண்டிக்கொண்டு எவ்விதமும் வந்து சேரும்படிக்கு அவர் கிருபைக்காக வேண்டிக்கொள். நானும் வேண்டிக்கொள்வேன். அவர் சித்தம் நமது பாக்கியம். இந்தச் சந்நியோடே கூட வெகுகால வியாதியிலும் பெலவீனத்திலு மிருக்கிற நமது ஐயாவையும் பார்த்துக்கொள்ளவும் ஏதுவிருக்கும். எப்படியானாலும் காரியத்துக்குச் சரியாய் நடந்து கொள்வா யென்று நம்புகிறேன். இதற்கதிகஞ் சொல்லத் தேவையில்லை. தேவகிருபையைமுன்னிட்டு [illegible]-டை புதன் காலை 9-மணிக்குக் கலியாணம் நடப்பிக்கத் தீர்மானித்திருக்கிறது. அவர் கிருபையும் ஆசீர்வாதமு முண்டாயிருக்கவும், காரியம் நன்றாய் நடந்தேறவும் அருள்புரிவாராக.

சேரு. பாக்கியம்பிள்ளை பாளையங்கோட்டையி லிருக்கிறார். என் காகிதம் அவருக்குச் சேர்ந்திருக்கிறது. தம்பி ஏசுதாசபிள்ளையும் கண்டு பேசியிருக்கிறான். 4-டை இவ்விடம் வந்து சேருவார். 5-டைக் குள்ளாக நம்முடையவர்களெல்லாரும் வந்திருப்பார்கள். எலிசபேத் மரியம்மாளும் பிள்ளைகளும் நம்முடைய தம்பி சஞ்சீவிப்பிள்ளை கூட மூன்றாநாள் இவ்விடம் வந்து சேர்ந்தார்கள். இப்போது எனக்கு இவ்விடத்தில் பிரியாத வேலையுண்டு, கவலையுமுண்டு. ஆண்டவர் கிருபையும் உண்டு. அவர் இன்னமுங் கிருபை செய்வாராக. அப்படியே செய்வாரென்று விசுவாசத்துடனே இருக்கிறேன்.

இதுடன் வருகிற காகிதங்களை அவ்விடத்திலுள்ள நம்முடையவர்களுக்கு உடனே சேரச் செய்யவும்.

இவ்விடத்தில் பெரியவர்கள் சிறியவர்கள் எல்லாருந் தேவகிருபையினால் சுகமேயிருக்கிறோம். உனக்கு அனேகம் வாழ்த்துதல்.

Yours sincerely

M. Savarirayan.

---



இப்படியாக நாலு கலியாணம் ஒரே நேரத்தில் ஒரேயிடத்தில் நடக்கும்படியாக நேரிட்டது. ஐயா கண்ணுள்ளபோதே காரியம் ஒழுங்காகி முடிந்தால் ஐயா மனதுக்கு ஆறுதலிருக்கும் என்ற ஒரே கருத்தைக்கொண்டு தான் இவ்விதமாய்த் திட்டஞ்செய்தது.

நல்லம்மாள்புரத்தில் இயல்பாயுள்ள தாராளமான செலவு மல்லாமல் இந்தக்காலத்தில் ஐயாவுக்குரிய பத்தியச்செலவும் வைத்தியச்செலவும் இருந்ததோடு ஐயாவைப்பார்க்கவருகிற ஆட்கள் கூட்டங்களும் ஓய்வில்லாமலிருந்தது. எப்போதுமிருக்கிற நம்முடையவர்கள் கூட்டமும் வாத்தாட்கள் கூட்டமுமாய் தினம் திரள் கூட்டத்திற்கு சமையலுஞ் சாப்பாடும் பண்ணிவைப்பது பெரியபாரமும் வருத்தமும் வேலையுமாயிருக்கும். செலவு சொல்லமுடியாது. பெண்கள் நகை வகைகளுக்கு பெரியபிள்ளை உதவியுண்டு, என்னுடைய உதவியுமுண்டு; மற்றுஞ்செலவுகளுக்காகவும் என்னால் அனுப்பக்கூடிய பணமெல்லாம் அனுப்பிக்கொண்டிருந்தேன். இந்த வகைக்கும் சவளி முதலிய வகைக்கும் திருநெல்வேலி இளைய அண்ணாட்சி இயேசுதாசபிள்ளை யவர்களும் வேண்டிய உதவி செய்தார்கள். சிவகிரியிலிருந்து மூடையி அரிசியும் கொண்டு போனேன்.

சிவகிரியிலிருந்து நானும் சமுசாரம் குழந்தைகளிரண்டும் பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்து, தம்பி சஞ்சீவிக்குப் பேசியிருந்த பெண் பாக்கியத்தை அழைத்துக்கொண்டு புறப்பட்டோம். திருநெல்வேலி இளைய அண்ணாட்சி யவர்களும் மதினியும் பிள்ளைகளும் பெண்ணுடைய சகோதரர் சகோதரிகள் வீட்டார் வகையராக்களோடு வழக்கமாயுள்ள நேர்பாதை பருத்திப்பாடு திருமலாபுரம் பாதையாய் சுப்பிரமணியபுரத்துக்கு இருட்டிப்போய்ச் சேர்ந்து அங்கிருந்து நேரே நல்லம்மாள்புரத்துக்கு ராத்திரியே போய்ச் சேர்ந்தோம். அப்போது நாங்குனேரி தினசவண்டி ரோட்டு கிடையாது. கூடவந்தவர்கள் சுப்பிரமணியபுரத்தில் ஒரு தெருப்பக்கத்தில் சமையல்செய்து சாப்பிட்டுப் போவோமென்று உலை வைத்தார்கள். நான் கூடாதென்று கோபமாய்த் தடுத்து நேரே ஊருக்குப்போய் விடுவோமென்று அப்படியே புறப்படச் செய்தேன். ஐயாவை யெப்போ போய்ப் பார்ப்போமென்ற ஆவல்தான் விசேஷகாரணம். நமது குடும்பத்தில் அந்தக் காலத்தில் என்னுடைய வாலிப அதிகாரம் கடுமுடுக்கித்தனம் ரொம்ப உண்டு. என் அதிகாரத்தின்படியே நடந்தும் வந்தது.

எல்லாக்கூட்டமும் நல்லம்மாள்புரம் போய்ச்சேர்ந்தோம். நல்லம்மாள்புரம் பங்களாவில் நடுஅறையில் ஐயா கட்டிலில் உட்கார்ந்திருந்து

ளர்கள். ராத்திரி கூ மணியிருக்கலாம். ஐயாவைக் கும்பிட்டேன். பக்கத்தில் தம்பி நின்றான். அவனைக்கண்ணாற்பார்த்த நிமிஷத்தில் என்னையறியாமல் என்னுள்ளம் திடீரென்று பொங்கிற்று. அதேபிரகாரம் அவனுள்ளமும் பொங்கிற்று. தன் நினைவற்றவர்களாய் ஒருவரையொருவர் ஆவிச் சேர்த்துக்கட்டி வாய்விட்டழுதோம். இதுமுன் ஒருக்காலும் இப்படி எங்களில் நேரிட்டதில்லை. தம்பிக்குப் பெண்ணழைத்துக்கொண்டு வந்தவன் தம்பியாகிய மாப்பிள்ளையை இப்படிக் கட்டி யழுவானென்று கூடவந்த கூட்டத்தாருக்கு வெகு விபரீதமும் மனவருத்தமுமாயிருந்திருக்கும். அம்மையும் அவன் பிள்ளைகளாகிய நாங்களெல்லாரும் அழுகுணிக் கூட்டமென்று பட்டப்பேர் சொல்லுவாருமுண்டு. அழுகிறதினாலும் தெய்வ ஆறுதலும் மனசமாதானமும் அன்பத்தைச் சகித்துக்கொள்ளும்படியான பலமும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கிடைக்கக்கூடியதுமுண்டு. அழுகிறவர்கள்தான் தேவ ஆட்டுக்குட்டியானவரால் கண்ணீர் துடைக்கப் பெறும் பாக்கியத்தை யடைவார்கள். ஆனால் எவ்வகையான அழுகை?—ஐயா தங்கள் ஏழு மக்களுடைய கலியாண அலுவல்களைத் தாங்களே சரீரப்பிரயாசப்பட்டு மேல்பார்த்து இதுவரையும் எல்லாம் நடத்தி வந்திருக்க, இந்தக்கடைசி மகன் கலியாணத்தில் மட்டும் அவர்கள் ஒன்றும் செய்ய இயலாமல் காலூன்றி நிற்கவும் இயலாமல் இருந்தது. இது ஒன்றே எங்கள் உள்ளம் பொங்குகிறதற்குப் போதுமானது.

பகல் முன்னேரத்தில் நாலு கலியாணமும் ஒன்றாய் நிறைவேறியது. ஐயாவை ஒரு நாற்காலியில் வைத்து நாலும் என் சகோதரருமாக நாங்களே கோவிலுக்குத் தூக்கிக்கொண்டு போனோம். அந்தவேளையில் ஐயாவுடைய மனம் என்ன சிந்தையாயிருந்ததோ தெரியாது. நாங்கள் தூக்கிக்கொண்டு போவதை என் மூத்தமகன் பவுல் (அவனுக்கப்போது நாலு வயசும் மூன்றுமாசமும்) கவனித்துப் பார்த்திருக்கிறான். ஐயாவுடைய காலத்துச் சங்கதியில் ஐயாவை நாற்காலியில் வைத்துத் தூக்கிக்கொண்டு போன இந்த ஒரே சங்கதி தவிர வேறொன்றும் அவனுக்கு நினைவில்லை. ஆர்க்கோட்டைய்யரவர்கள் கலியாணம் நடப்பித்தார்கள், மூத்த அண்ணாட்சியவர்களுங்கூட.

சாமுவேலய்யரவர்கள் வந்தார்களில்லை. அவர்களுடைய இடையன்குடியிருப்பு, கூடங்குளம் சேகரத்தில் மிஷியோன் உத்தியோகஸ்தர்களுடைய ஓய்வில்லாத தொல்லை கஷ்டி உபத்திரவங்களும் சபையார் யாவருடைய வழக்கு வியாச்சியம் முதலிய சல்லியங்களும் இப்படி அவர்கள் அயர்ந்திருக்க





நேரமிராது. அதுவுமல்லாமல் தலைமுழுக்கு சாப்பாட்டு விஷயத்தில் வெகு வெகு மணிக்கணக்காய்த் துல்லியமாய் நடந்து இசைந்த போசனம் செய்பவர்களானதால், நம்முடைய கலியாணங்களுக்கு வருகிறதற்கு அதுவும் அவர்களுக்கு விசேஷ வருத்தமாயிருக்கும்.

அம்பாசமுத்திரத்திலிருந்து அண்ணாட்சியவர்களும் மதினி, பிள்ளைகளும் வரவில்லை. அவர்கள் மூத்தமகள் மரியம்மாள் பெரியபெண்ணாயிருந்ததால் அதைக்கூட்டிக்கொண்டு எப்படி வருகிறதென்பது யோசனை. அந்தப் பெண்ணை சிறுவயசுமுதலே முறைமாப்பிள்ளை யாக்கோபுப்பிள்ளைக்குக் கலியாணம்பண்ணவேணுமென்ற எண்ணம் எல்லாருக்கும் இருந்தது, ஆனால் காலஇல் தூத்துக்குடி மரியவியாகுலம் தன் தம்பியாகிய மேற்படி யாக்கோபுப்பிள்ளைக்கு இன்னொரு முறைப்பெண்ணாகிய மூத்த அண்ணாச்சி மகள் மேரி அன்னம்மாளைக் கட்டவேணுமென்று திருக்குப் பண்ணிக்கொண்டிருந்தாள். இந்தஆபாசத்தினால்தான் மேற்படி அம்பாசமுத்திரத்தண்ணாட்சியவர்கள் கலியாணத்துக்கு வரவில்லையென்று நினைக்கிறேன்.

ஐயாவுடைய வம்சத்தார் சகலரும் வந்திருந்தார்கள், இன்னும் ஒருவர் தவிர. அவர் ஐயாவுடைய மூத்தமகளுடைய மூத்தமகன், நெடுங்காலம் பொல்லாப்பில் பிரியப்படுகிறவராயிருந்ததுமல்லாமல் இதற்கு ஆறுவருஷத்துக்குமுன் ரோமான் மார்க்கத்துக்குப்போய்விட்டதாக நடந்துகொண்டார். இப்படி இந்த ஆறு வருஷங்களாய், மரணபரியந்தம், அவர் கண்ணிலாவது அவர் பெண்சாதி பிள்ளைகள் கண்ணிலாவது ஐயா விழித்ததில்லை. சத்திய சுவிசேஷ மார்க்கத்திலிருந்து மறுதலித்துப்போனவர்கள் எவர்களானாலும் சரி, அவர்களை எதிட்டுப்பார்ப்பது ஐயாவுக்கு ஜென்ம அருவருப்பு.

கலியாணத்துக்கு வந்தவர்களெல்லாரும் சிலநாளிருந்துதான் புறப்பட்டோம். ஆள்க்கூட்டம் சந்தடியில் சில பெண்பிள்ளைகளுக்குள் சிலமனஸ்தாபங்களும் சில வாலிபர்களுடைய குறும்புகளும் இருந்தது. கிருபைபெற்றாருடைய மாப்பிள்ளை தாவீதுப்பிள்ளை அப்பாவி ஆனதால் பெரியபிள்ளையும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் மச்சினனும் மச்சினனும் பின்னும் இரண்டொருவருஞ் சேர்ந்து அவனைப்பரிகாசம்பண்ணினதும் அவர் வேஷ்டியை ஒழித்து வைத்துக்கொண்டதும் பெரியோர்களுக்கு விசனத்தையும் துக்கத்தையுமுண்டாக்கிற்று.

பெண்பிள்ளைகள், பிள்ளைகளுக்குள் குறை குற்றஞ்சொல்லி துவலாதி மனஸ்தாபங்கள் சண்டைகள் நேரிட்டால் யார்பேரில் குற்றம் யார்பேரில் குற்றமில்லையென்று அம்மை யோசிக்கிறதே கிடையாது. எந்தக்கை தாழ்ந்த தன்னாடு

யிருக்கிறது என்று ஒன்றையே பார்த்து, தளர்ந்து, அயர்ந்திருக்கிறதாக நினைக்கிற ஆளோடு சேர்ந்துகொண்டு சண்டைக்குப்போவாள். மூத்த அண்ணாட்டி வாசகப்பிரகாரம், அம்மை எல்லாரையும் சமரசப்படுத்த வேண்டுமென்று பார்ப்பாள். ஆனால் அதினாலேதான் அதிக மனஸ்தாபமும் சத்தமும் உண்டாகிறது.

ஒரு ராத்திரி அம்மை தன் பேரன் ஞானப்பிரகாசம் பிள்ளையோடேயோ யாரோடேயோ மனஸ்தாபமாய் சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறபோது யார் அமர்த்தியும் கேட்கவில்லை. நான் ஒரு யோசனைபண்ணி பாட்டுப்பாட ஆரம்பித்தேன். நான் வெளியரங்கமாய்ப் பாட்டுப் படிக்கிறதில்லை. எனக்குப்படிக்கிறது வெட்கம். நான் 14 வயசாயிருக்கும்போது வியாகப்ப பிள்ளை என் ராகத்துக்கு மிகவும் பரியாசம்பண்ணினதினால் அதுமுதல் வெட்கப்பட்டு நான் பாட்டுப் படிக்கிறதேயில்லை. இப்போது என்மனம் உடைந்து போயிருந்ததினால் ஐயாவுடைய சமுகத்தில் ஆண்டவரை நினைத்து மன்றாடி ஸ்தோத்தரித்துப் பாடுகிறதற்கு மனுஷரை நினைத்து வெட்கப்படுவானேனென்று உரத்துப்பாடினேன். இந்தச் சத்தத்தைக் கேட்டு அம்மைதன் சத்தத்தை மெதுவாய் நிறுத்திவிட்டாள்.

ஐயா இந்தக்காலத்தில் ஒருவகையாய்ச் சுகமாகத்தானிருந்தார்கள் என்று சொல்லலாம். தாங்கள் மிஷியோனில் ஊழியஞ்செய்த இடங்களைக் குறித்தும் தங்களை மேல்ப் பார்த்து வந்த ஐயன் மார்களைக்குறித்தும் தங்கள் பழய சரித்திரத்தை ஒருநாள் என்னிடத்தில் சொன்னார்கள்.

ஐயாவுக்கு எப்போதும் தங்களுடைய பிள்ளைகளைக்குறித்து நல்ல நம்பிக்கையுண்டு. தங்கள் பிள்ளைகளைக் கர்த்தர் இதுவரையும் நன்மைக்கென்று நடத்தி வந்திருக்கிறார், இன்னும் அப்படியே நடத்தி வருவாரென்ற விசுவாசம் ஐயாவுக்குத் தீர்க்கமாயுண்டு.

தங்கள் தகப்பனார் தாயாரை நினைத்துப்பேசி அவர்கள் மரணமாகிறபோது தானிருந்த நிலைமையையும் தங்கள் பிள்ளைகளுக்கு இக்காலத்தில் அருளியிருக்கிற கிருபைகளையும் எடுத்துச்சொன்னார்கள்.

ஐயாவைவிட்டுப் பிரிந்து புறப்படவேண்டிய நேரம் வந்தது. ஐயா நடு அறையின் தென்கீழ் மூலைப்பக்கத்தில் மேற்கே பார்க்க உட்கார்ந்திருந்தார்கள். என் இருதயம் உடைந்து உருகுகிறது ஐயாவுக்கு நன்றாய்த்தெரிந்தது. சுருக்கமாய் இரண்டொரு தைரிய வார்த்தைகளைச் சொல்லி நமக்கு எத்தெந்தவிடத்தில் என்னென்ன ஊழியம் ஆண்டவர் கட்டளையிட்டிருக்கிறாரோ அங்கேபோய் நாம் நம்முடைய வேலையை உண்மையாய் பார்க்க





வேண்டும் என்று இப்படி தைரியம் சொன்னார்கள். "புருஷராயிருங்கள்" என்ற வேத வாக்கியத்தை இரண்டு மூன்று தரம் திரும்பத் திரும்பச்சொன்னார்கள். ஐயாவைவிட்டுப் பிரிகிற வருத்தம் எங்களுக்கு எப்படியோ, அதேபிரகாரமாகவும் அதற்கு அதிகமாகவும் ஐயாவுக்கும் உண்டு.

பாளையங்கோட்டைக்கு வந்து அப்புறம் சிவகிரிக்குப்போய்ச்சேர்ந்தேன். சிறுவயதுமுதலுள்ள என்னுடைய பழக்கத்துக்கும் படிப்புக்கும் சுபாவத்துக்கும் பிரியத்துக்கும் முற்றும் ஒவ்வாதவேலை ஒன்று உண்டானால் அது நான் நேமிக்கப்பட்டிருந்த சிவகிரிவேலைதான். இதற்கு 4 வருஷத்துக்கு முன் அரியநாயகிபுரத்தில் முற்றும் இந்துக்களானவர்களுக்குள் நான் குடியிருக்க நேரிட்டது போலவே இந்த சிவகிரி உத்தியோகமும் நேரிட்டது. ஆண்டவர் என்னை நடத்திவந்த கிருபை எத்தனை ஆச்சரியம். நேரிட்டத்த அலுவல்கள் எனக்கு ஆண்டவர் இனிக்கொடுக்கப்போகிற நிலையான அலுவலுக்கு ஆயத்தப்படுத்துகிற நல்ல பள்ளிக்கூடமாயிருந்தது.

நான் சிவகிரிக்குப் போய்ச் சேர்ந்த உடனே பின்வரும் காகிதம் என் கையில் கிடைத்தது. ஆண்டவர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்துவேன். J. D. S.

John Devasigayam,

The present Dy. Writer of the Court, M. R. Ramakrishna Iyer B. A. and B. L. has been given a sunnud as pleader. I had given his appointment to Ramalingam Pillai, but he has been appointed Nazir at Madura.

I therefore offer you the post. It is Rs. 35 a month. It will be vacant about the beginning of July. You will have to do the fair copying of letters and decrees, translating and abstracting and *acting as interpreter in Court* at Sessions. If you accept this you should join as soon as the Zemindar can give you leave and before the expiration of the recess in order that you may learn from the Head Writer and Sheristadar what are your immediate duties.

It would also be well if you could hear Ramakrishnier interpreting in the Sessions Court a few days.

Send me a telegram to Madras Club, saying if you accept this, as, if not, I must make other arrangements.

Trichy
23—4—74

Yours truly
F. C. Carr.

(இந்தக்காகிதம் ஷெ. துரையவர்கள் சீமைக்கு ஆறுமாச லீவில் போகிறபோது எழுதி யனுப்பினது. வெகுநாட்சென்றுதான் என்கையில் கிடைத்தது. [மெய்யீ மந்திரியில்] கோர்ட்டு எட்டயிற்றர் சுப்பிரமணிய பிள்ளை எனக்கு ஒரு காகிதம் எழுதி அதனுடன் செல்லப்பெருமாள் என்ற ஒரு சேவகன் என்னிடத்திற்குக் கொண்டுவந்து கொடுத்தான். ஆகையால் ஷெ. துரையவர்களுக்குப் பதில் செய்தியனுப்ப ஏதுப்படாமல் போயிற்று

(J. D. S.)

---

Palamcottah
17th May 1874

Revd. and Dear Brother

இவ்விடம் யாவருஞ்சேமம். அவ்விடத்திலிருந்து கேத்திரவு டி-மணிக்குப்போல் எல்லாரும் சேமமாய் வந்து சேர்ந்தார்கள். பிந்திப்போனது கொஞ்சம் கஷ்டத்துக்கும் அசந்தர்ப்பத்துக்கு மிடமான போதிலும் காரியங்கள் சிறப்பாய் நடந்து வருகிறது.

ஆயிசையும் மாப்பிள்ளையையும் சிலநாள் திருநெல்வேலியில் வந்திருக் கனுப்ப விருப்பமாயிருக்கிறேன். கனம் சார்ஜெண்ட்டையரவர்கள் புதன்கிழமை யவ்விடத்துக்கு வருவார்கள். வண்டிக்காரனுக்கு இவ்விடத்தில் ரூ. 3-கொடுத்திருக்கிறேன்.

மாப்பிள்ளை மனுவேல்பிள்ளை பெண்ணழைப்பின் வாடகை ரூ-4½ கொடுத்திருப்பதா லிப்போம் நாந்தான் கொடுக்கவேண்டியதாயிற்று. வேறு விசேஷமில்லை.

இப்படிக்கு
ஊழியன்
சகதாசன்

---

424



கவிசேஷபுரம்
20—5—1874

"இயேசுவே இரட்சியும்"

தங்கள் ஊழியக்காரியாகிய மரியவியாகுலம் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளும் விண்ணப்பமாவது,

நானும் பிள்ளைகளும் யாவரும் சுகமே யிருக்கிறோம். ராசாவுக்கு குண்டியில் ஒரு செலந்தி புண்போலுண்டாகி நல்லம்மாள்புரத்திலிருந்து வரும்போதே கனைக்கொண்டு போயிருந்தது. அவனுக்கு நடக்கக் கூடாமல் போச்சுது. நான் கவிசேஷபுரத்திற்கு வந்த பிறகு கனம் அம்மாளவர்களிடத்தில் உத்தரவு கேட்டு கூட்டிக்கொண்டு வீட்டில் வைத்து எழுநாள் மட்டும் மருந்து போட்டுப் பிறகு உடைந்து சற்று சௌக்கியமானவுடனே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப்போட்டேன். இப்பவும் காலையும் மாலையும் போய்ப் பார்த்து வருகிறேன். புதன்கிழமை காலை [எ௰] மணிக்கு பள்ளிக்கூடத்துக்கு ராசாவுக்கு பால் பஞ்சு கொண்டு போனேன்.

கனம் சார்செண்றய்யாவர்களும் ஆர்கோட்டு ஐயரும் முந்திவே போய் பள்ளிக்கூடத்து மேலவிராந்தாவில் நின்று பேசிக்கொண்டு யிருந்திருக்கிறார்கள். அது எனக்குத் தெரியாது. நான் தற்செயலாய்ப் போனேன். அவர்களைக் காணவில்லை. நான் கீழவிராந்தாவில் கால் வைத்தவுடனே கனம் சார்செண்றய்யரவர்கள் என்னைக் கண்டுகொண்டு அம்மா, அம்மா, அம்மா, என்று சொல்லிக்கூப்பிட்டுக்கொண்டு நடு அரைக்குள் கிட்டவந்து சேர்ந்தார்கள். நான் யாரோ என்று கிட்டப்பார்த்து பின்பு என்னைப்பெத்த ஐயாவா, என்று உடனே சலாஞ்செய்து அவர்கள் கையைப்பிடித்து என் நெத்தியிலே வைத்துக்கொண்டிருந்தேன். நான் முகம் சுத்தம்பண்ணாததினால் அவர்கள் கையை முத்தம் செய்யவில்லை. நெத்தியிலே வைத்துக் கொண்டேன்.

பிற்பாடு ஐயா இங்கே வந்திருக்கிறார்களோ என்று கேட்டார்கள். நான் சொன்னது: ஐயா வரவில்லை, நான் சற்று பலவீனப்பட்டு யிருந்ததினால் மனதுக்குச் சற்று ஆறுதலுண்டாகட்டும் என்று சிலநாளைக்கு இங்கே வந்திருக்கும்படி ஐயா அனுப்புவித்தார்கள். ஐயாவுக்கும் சகலகாரியமும் பார்த்துக் கொள்ள அங்கே ஆளிருக்கிறதினாலே நான் வீட்டை வந்து பார்த்துக் கொண்டு போகும்படியாக வந்தேன் என்று சொன்னேன். பிற்பாடு ஐயாவர்கள்: ஐயாவுக்கு இப்போது யிருக்கிற சுகம் என்னவென்று கேட்டார்கள். நான் சொன்னது: கனம் ஆர்க்கோட்டையரவர்கள் சொன்ன நிர்க்கத் தநீ

சனம் போல சேர்ச்ச வாசல் கெட்டப்போனவர்களை முகத்தை திருப்பி வைத்திருக்கிறது என்று சொன்னது மாத்திரமல்ல, தேவன் அவர்களை அற்புதமாய் காப்பாற்றினார். இன்னம் நல்ல சுகத்தைக்கொடுத்து நடமாடத் திரிய தேவன் கிருபைசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறேனென்று சொன்னேன்.

இன்னாசியம்மாளுக்கு முகம் வீக்கத்துக்கு: மிளகையும் உப்பையும் மட்டைப்போல பொடிசெய்து சுடுசோற்றில் நல்லெண்ணெயை விட்டு பொடியையும் தூற்றிச் சாப்பிட்டால் சுகமாகும் என்பதாய் நாசரேத்தூரில் ஒரு வைத்தியன் சொன்னானாம். அப்படியே நாசரேத்தூரில் இன்னாசியம்மாளுக்கு முகம் வீங்கி கண்டபோது அப்படி சாப்பிட்டு சுகமானதாக அன்னம்மை சொன்னாள். அப்படி சாப்பிடும்படியாக சொல்லுங்கள். ராசாவுடைய சொளுப்பு வேட்டி அங்கே போட்டுவிட்டு வந்தானாம், இப்போது உடுமாத்துக்கு வேறே இல்லாமல் சங்கடப்படுகிறான். அந்த வேட்டிக்கு பேர் போட்டிருக்குமாம். பார்த்து எடுத்து அனுப்புங்கள். நாங்கள் யாவரும் சுகமேயிருக்கிறோம். நீங்கள் மனதில் கவலை வையாமலும் ஆயாசப்படாமலும் சந்தோஷத்தோடேயும் ஆறுதலோடேயும் இருங்கள். இவ்விடத்திற்கு வந்தால் உதவிக்கு வேறே ஆளில்லை. நாமும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து சங்கடப்படுகிறதற் கேதுவாயிருக்கும். ஆகையால் அவ்விடத்தில் தானே இருங்கள். சாப்பாட்டுப் பருவங்களைக்குறித்துக் கவலையில்லை. அது தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பாக்கியத்தைக்கொண்டு உங்களுக்கு பிரியமானபடி நடத்திக்கொள்ளலாம். அதைக்குறித்து நான் கவலைப்படவில்லை. நம்முடைய பிள்ளைகளிருக்கிற இடத்தில் நீங்களிருக்கவேண்டும். தனிமையாயிருக்கக் கூடாது என்பதுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது. இந்தக்காயிதத்திற்குத் தங்களுடைய பதில் வரக்காத்திருக்கிறேன்.

இப்படிக்குத் தங்களுடைய ஊழியக்காரிச்சி மரியலியாகுலம். வருகிற ஆள்வசமாய் ஏதாகிலும் கொஞ்சம் விறகு கட்டிக் கொடுத்தனுப்பவும் வருகிற ஆள்வசம் உடனே பதில் அகத்தியம் அனுப்புங்கள்.

அன்னம்மைக்கு நல்லசுகமில்லை, கழுத்து வலித்துக்கொண்டிருக்கிறது, சுக்கு அரைத்து பூசியிருக்கிறது.

யாக்கோபுபிள்ளை வியாழன் சாயுங்காலம் நாத்தக்குடிக்கு போகிறார்.

[தேவனுடைய தாசனாயிருக்கிற பிரியமுள்ள ஐயா மேல்விலாசம் பார்வை விட்டுக்கொண்டு உங்கள் ஐயா அவர்களுக்கு வாசித்துக் காட்டவேண்டியது.]

 425

Tinnevelly.
21—5—74

Respected and Dear Brother,

நான் 15-உ வெள்ளி இரவு சிவகிரிக்கு சுகத்துடன் போய்ச்சேர்ந்தேன். ஜட்ஜ் துரையவர்கள் கோர்ட்டில் காலியாயிருக்கிற 35-ரூபாய் சம்பளமுள்ள டிப்டிரயிற்றர் வேலையை எனக்குத்தர இஷ்டமாய் இருப்பதாய் அவர்கள் சீமைக்குப் போகிற வழியில் திருச்சிராப்பள்ளியிலிருந்து எழுதிய கடிதம் சிவகிரியில் எனக்கு வந்திருந்தது. ஜில்லாக்கோர்ட்டில் எடுத்த கையில் மேற்படி சம்பளமுள்ளதும் சீக்கிரம் முன்னுக்கு வரக்கூடியதுமான அந்த வேலை துரையவர்கள் தருகிறது மகா பெரிய தயவு. துரையவர்களுக்குப் பதிலாய் ஆக்டிங் வேலைபார்க்கிற சப் ஜட்ஜ் இடத்திலிருந்து சன்னது பெற்றுக் கொள்ளும்படியாக இவ்விடம் வந்திருக்கிறேன். சப் ஜட்ஜ் தலத்தில் இல்லாததால் அவர்கள் போயிருக்கிற புதுச்சேரிக்கு சன்னதை எட்ரயிற்றர் கையெழுத்துக்காக இன்று அனுப்புவிக்கிறார். அது கையெழுத்தாகிவர எட்டுப்பத்துநாள் செல்லும். அதற்கிடையில் தபால்வண்டி ஏறி பனகுடி வழியாய், வடக்கன்குளத்துக்கும் அங்கிருந்து நல்லம்மாள்புரத்துக்கும் போய் திரும்ப திருநெல்வேலிக்கு வந்து சன்னது பெற்றுக்கொண்டு சிவகிரிக்குப்போய் சகல காரியங்களையும் ஒழுங்கு செய்துகொண்டு ஜட்ஜ் துரையவர்கள் எனக்கு எழுதியிருக்கிற கடிதத்தில் கண்ட உத்தரவுப்பிரகாரம் கோர்ட்டு திறக்கிறதற்கு இரண்டு மூன்று நாளுக்குமுன் இவ்விடம் வந்து சேர எண்ணியிருக்கிறேன். ஜட்ஜ்துரையவர்கள் நமக்கு இவ்வளவு தயவு பாராட்டுகிறது ஆண்டவர் நமக்குச் செய்துவருகிற சொல்லமுடியாத இரக்கங்களில் ஒன்று, அவருக்கே ஸ்தோத்திரம்.

ஊழியன்
தேவசகாயம்

---

Tinnevelly
21-5-74

Revd. and Dear Brother,

இவ்விடம் ஜில்லாக்கோர்ட்டில் 35-ரூபாய் சம்பளமுள்ளதும் சீக்கிர முன்னுக்கு வரக்கூடியதுமான டிப்டி ரயிற்றர் வேலையை ஜட்ஜ் துரையவர்கள் எனக்குத் தர இஷ்டமாயிருக்கிறார்கள், அதற்கு உத்தரவு பெற்றுக்

கொள்ள சிவகிரியிலிருந்து நேற்று மதியம் இவ்விடம் வந்து சேர்ந்தேன். வாய்ந்த நாளில் வடக்கன்குளம் மார்க்கமாய் அவ்விடத்துக்கு வந்து சகல விபரங்களையும் முகதாவில் தெரிவிப்பேன். என்பணிவான தோத்திரம்

ஊழியன்

தேவசகாயம்

---

Tinnevelly, 21st May 1874.

Revd. and Dear Brother,

இதுவரையிலுந் தேவகிருபையால் நாங்கள் யாவரும் சேமமாயிருக்கிறோம். தங்களுக்கு வந்த உடனே எழுதத் தவறிப்போனதற்காக மனஸ்தாபப்படுகிறேன். ஐயா அவர்களும், இதுமட்டும் போய்ச்சேர்ந்ததுக்கும் எழுதினானில்லையே, என்பார்கள். ஐயா, நீங்கள் எங்கள்பேரில் சிந்தனையுங் கவலையுமாயிருக்கிற பிரகாரம் நாங்க ளுங்கள்பேரில் கவலையாயிருக்கிறதில்லையென்பது நிச்சயமாயிருக்கிறது போலவே யிருக்கிறது. கனம் சார்ஜென்ற ஐயரவர்கள் அவ்விடம் புதன்கிழமை வந்திருப்பார்கள்.

இந்தக்கடிதம் எங்கள் சுகசெய்தியைத் தெரிவிக்கும்படியாக எழுதிக்கொண்டேன். மறுவீடு முதலிய காரியங்களைக்குறித்து விபரமாய் ஒருகடிதம் அடுத்தாப்போல் அனுப்புவிக்கிறேன். நான் தங்களுக்கும் ஐயா அவர்களுக்கும் சுவிசேஷபுரத்தில் அம்மைக்கும் மதினி, அக்காளுக்கும் தாழ்மையாய்த் தோத்திரஞ் செய்கிறேன்.

I am yours
Truly and affectionately
T. S. Sanjeevy.

---

Suviseshapuram
22 May 74.

இயேசுவே இரட்சியும்.

தாங்கள் ஊழியக்காரிச்சியாகிய மரியவியாகுலம் தாழ்மையாய் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம். தாங்கள் எழுதிய காயிதம் வந்து சேர்ந்தது. வாசித்து அறிந்து கொண்டேன். தாங்கள் சொல்லுகிறதை சரிதானென்று ஒத்துக்கொண்டாலும் என்னுடைய பிள்ளையுடைய வீட்டில் எல்லாம் என் சொந்தக்காரியமென்று பார்த்துக்கொண்டே யிருந்தேன். அது அங்குள்ள மற்றவர்களுக்கு என்னாலே கஷ்டமும் சேதமும் உண்டாகிறதாகப் பாவித்துக்



426

க்கொண்டு குதம் வினையமுமாக யிருக்கிறது என் மனதுக்கு வேதனையாயிருக்கிறது. பயறு முளப்போட்ட அன்று நான் சுகமில்லாமல் தாங்கள் படுத்திருக்கிற அறையில் பாய் போட்டுப்படுத்திருந்தேன். அப்போது ஐயர் அம்மாளைக்கோபித்து முத்தும்பயறும் ஒன்றாய் என் கலந்து போட்டிருக்கிறதென்பதாய்க் கேட்ட போது என்னை அடைப்பாம்பு உள்ளே கிடக்கிறது என்றும் இதெல்லாம் இந்தக்கிழவியாலே நடக்கிறதென்றும் சொன்னவள் முகத்தில் திரும்பவும் விழிக்கிறது என்மனதுக்கு மெத்த வருத்தமாயிருக்கிறது. ஆகிலும் தாங்கள் வரச்சொல்லி எழுதியிருந்தினாலே நான் மாட்டேனென்று சொல்லுகிறது நியாயமாயிருக்க மாட்டாது. சவுங்கத்தனமாய்த்தான் வரவேண்டியதிருக்கிறது. சம்பளம் போட்டவுடனே வருகிறேன். சண்டைபோட்டு கூடிய தொழுத எறச்சியை விட சமாதானத்தோடு கூடிய இலைக்கறியாகிலும். சமாதானமே மோக்ஷ வாசலுக்கு பெரிது. சமாதான தப்பாயிருப்பது நரகவாசலுக்குச் சமானம். கனம் ஆர்க்கோட்டையரவர்களிடத்தில் போய் அன்னம்மைக்கு சுகமில்லையென்று கூட்டிக்கொண்டு போய் காண்பித்ததில் ஒரு மருந்து கொடுத்து சாயுங்காலம் கொடுக்கும்படியாகச் சொல்லியிருக்கிறார். நான் ஐயரவர்களிடத்தில் மருந்து வாங்கிக்கொடுத்துக் கொள்ளுவேன், நீங்கள் அன்னம்மையைக் குறித்துக் கவலைப்படவேண்டியதில்லை. நீங்களனுப்பின விறகு வந்துசேர்ந்தது.

இன்னுசி அம்மாளுக்கு நான் சொல்லுகிறது என்ன வென்றால், நீ ஐயாவை நான் பார்க்கிறது போல நன்றாயும் கவலையாயும் பார்க்கவேண்டும், அவர்களுக்குப்பிரியமானபடி செய்வாயென்று நம்பிக்கொண்டிருக்கிறேன். யாக்கோபுபிள்ளை தமது நெல்லை விற்கிறார், கோட்டை ௯(9-4)ரூபாய் விக்கிறார். நானும் இ-கோட்டை நெல் வாங்கியிருக்கிறேன். இன்னுசியம்மாளிடத்தில் சொல்லி ௩-ரூபாயும் (3) பணமும் வேறே ஆள்வசம் கொடுத்தனுப்பும்படி சொல்லுங்கள்.

நெல்லுக்குப்பணம் இந்தமாசத்துக்குள்ளாக கொடுத்துத் தீர்க்கவேண்டியது.

நான் தங்களுக்குத் தாழ்மையாய் தோத்திரம் செலுத்துகிறேன்,

இப்படிக்கு

தங்களின் தாழ்மையான ஊழியக்காரி

மரியவியாகுலம்

[இது:— பிரியமுள்ள ஐயர் மேல்விலாசம் பார்வையிட்டுக்கொண்டு ஐயர் அவர்களுக்கு வாசித்துக் காட்டவேண்டியது.]

23rd May 1874
Tinnevelly

Revd. and Dear Brother.

நான் சுருக்கமாய்ச் சுகசெய்திக் கெழுதி யனுப்பிய கடிதம் வந்து சேர்ந்திருக்கு மென்று நம்புகிறேன். ஐயா அவர்களுடைய சுகசெய்திக்கு விசேஷமாய் அடிக்கடி எழுதியனுப்பு விக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஐயா அவர்கள் நானிவ்விடம் வரும்போது மறுவீட்டுக் காரியங்கள் எப்படி நடக்குமோ வென்றும் அதை யறிய விருப்பப்பட்டது போலவும் தோன்றினதினால் மறுவீட்டுக் கடுத்ததாய்ச் சிலதுகளை யெழுதுகிறேன். தாங்களிதை ஐயா அவர்களுக்கு வாசித்துக் காண்பிப்பீர்களென்றும் நம்புகிறேன். நாங்கள் வீடு வந்துசேர்ந்தவுடனே வழக்கம்போல பாலும் பழமும் கொடுத்தார்கள். பிற்பாடு சாப்பாடு நடந்தது. அடுத்தநாள் ஊர்விருந்து நடந்தது. இரண்டு மூன்றுபேர் தவிர மற்ற யாவரும் வந்தார்கள். பந்தல் போட்டு மாற்றுக்கட்டி யிருந்தது. திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் நெருங்கின உறவின் முறையாருக்குச் சாப்பாடு நடந்தது. புதன்கிழமை, நாங்களிவ்விடத்துக்கு திரும்பினோம், ஜாயிஸ் அம்மாள், கூனியூர் மதினி, பிள்ளைகளும் கூடவே. திருநெல்வேலி அண்ணாட்சியும் மதினியும் செவ்வாயிரவு இவ்விடம் வந்தார்கள்.

மனுவேல் பிள்ளையவர்கள் நாங்கள் வரும்போது இராயப்பபிள்ளையைக் கூட்டி வந்து சேவுஞ் செய்வித்து அனுப்பினார்கள். அவர்கள் ஒருசோடு வெள்ளி கூசா-அரைக்கால், ஒரு இலெஞ்சி கூகூ-அரைக்கால், ஒரு செப்புக்குடம், குத்துவிளக்கு, கைவிளக்கு, சருவச்சட்டி, செம்பு, எண்ணெய்வால் கிண்ணம், ஒரு பட்டுப்பாய், தலை அணை, அரிசி, வடசம் முதலிய சாமான்களும் கொடுத்தார்கள்.

சுருளுக்கு ௫௰-ரூ கொடுக்கிறேன், பணமாய் வேண்டுமா, நான் ஒரு மோதிரம் பண்ணிப்போடவேண்டுமென்று நினைக்கிறேன், பணமானால் செலவழிந்துபோ மென்றார்கள், நான் அதுபோல வென்று சொன்னதின்பேரில் அடுத்தநாள் திருநெல்வேலிக்குவந்து தங்கம் வாங்கிப் போயிருக்கிறார்கள். பலகாரத்துக்கு மூன்று ரூ- கொடுக்கிறேன் வென்று அவாள் சொன்ன ஞாபகமிருக்கிறது. அது என்னிடம் தரவில்லை. அந்தப்பணத்தை புதுமோதிரம் செய்கிற பணத்தோடு சேர்த்து செய்கிறார்களோ என்னவோ தெரியாது. அதைப்பற்றிப் பின்னால் அறிந்து எழுதுகிறேன். இவைகளை



யெழுத எனக்கு மனமில்லை யென்றாலும் ஐயா அவர்கள் அறிய விரும்புவார்களென்று மாத்திரம் யெண்ணி யெழுதுகிறேன். தங்களுக்கு இக்காலம் பல நெருக்கமுள்ள காலமென்று அறிவேன். நான் யென்ன செய்வேன். சிலநாளைக்கு முன்னே சொப்பனத்திலோ அல்லது விழித்திருக்கும் பொழுதோ தாங்கள் ரொம்ப மெலிந்து வெளுத்துப்போனதாக என் மனதுக்கு தோற்றமிருந்தது. அது முதல் தங்களைப்பற்றியும் கவலையிருக்கிறது.

ஐயா அவர்களை தாங்கள் பார்த்து பேணுவதோடு உங்களையும் சற்று பார்த்துக்கொள்ள உங்களையே கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றக்காரியங்களை மிக்கேல்பிள்ளை யவர்களும் ஜாயிஸ் அம்மாளும் தெரிவிப்பதால் நான் எழுத அவசியமில்லை.

நான் தங்களுக்கும் ஐயாவுக்கும் அம்மைக்கும் மதினிக்கும் மற்றவர்களுக்கும் தாழ்மையாய்த் தோத்திரஞ் செய்கிறேன்.

I am yours
Ever affectionate
T. S. Savarirayan.

---

Nallammalpuram.
23rd May 1874.

My dear son,

நீ ஸ்ரீ 15-ம்டை போட்டனுப்பின உனது அன்புள்ள காகிதம் 18-ம்டை இவிடம் வந்து சேர்ந்தது. நீங்கள் சுகத்துடன் சேரச்செய்த ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

இந்த விசை நீ வந்ததும் போனதும் சொற்பனத்தில் கண்டது போலவும் சந்தைக்கூட்டத்தில் முகத்தைக் கண்டதுபோலவும் இருந்தது. மிகவும் பிரியமுள்ள மரியவியாகுலம் வந்ததில் நாலுகலியாணத்தை நடத்தும் காரியத்தை பார்த்துப் போனானென்கிறதைத் தவிர மற்றப்படி ஆறுதலுக்கு ஏதுவாயிருந்தது மெத்த சொற்பம். இதையெல்லாம் விவரஞ் சொல்ல வேண்டியதில்லை. ஆனாலும் அவன் வந்து எல்லாரையும் பார்த்தும் அவன் விருப்பத்தின்படி தேவகிருபையினாலே கலியாணங்கள் நிறைவேறினதுமே பெரியகாரியம். அவன் கவலையும் பிரயாசமும் அதிகமாயிருந்தது. இதைவிட்டு அவனுக்கு அநேகவாழ்த்துதற் சொல்லவேண்டியது ஒன்று. அவன் சொந்தமானவனானால் அவனுக்குரிய காரிய காரியம் என்றும் பொறுப்பு

தாவொன்றுஞ் சொல்லத்தக்கது முண்டு. சகலத்துக்கும் அன்பே காரணம். ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. பிள்ளைகளிருவரும் இருந்தது மெத்த சந்தோஷம். அவர்கள் போனது வீடும் எங்கள் மனமும் வெறுமைப்பட்டது போலிருக்கிறது. நாம் கலந்து ஆற அமர விருந்து பேசிக்கொள்ள வாயாதது பெரிய சங்கடம். ஆனால் நாம் கண்டதும் இந்தச்சமயத்தில் நீ வந்ததும் பெரிய சந்தோஷம். மிகுந்த நிறைவு. மற்றப்படி என் மனதுக்குப் பெரிய ஆயாசம் இருக்கும். இம்மட்டும் வந்ததும் கண்டதும் பெரிய சந்தோஷம் இது நிற்க.

உன் காகிதம் வந்து சேரவே உன் அத்தானும் வந்தார். கலியாணத்துக்கு வந்தவர்களெல்லாரும் அவரவர் இடம் போய்ச் சேர்ந்தார்கள். 15-உ போடே கூட்டஞ் சரி. ஞானம்மாளும் மிக்கேல்பிள்ளையும் தம்பி சஞ்சீவிப்பிள்ளை மறுவீட்டு விசேஷமாய் கூடப்போயிருக்கிறார்கள். அடுத்தவாரம் வந்து சேர்வார்கள். மரியசுந்தரி மாப்பிள்ளையும் புதன்காலையில் வந்து வெள்ளிக்கிழமை மறுவீட்டுக் காரருடன் மரியசுந்தரி பிள்ளைகளுடன் புறப்பட்டுப் போனார்கள். சுகமில்லை என்பதின் முகாந்திரமாய் உத்தரவு பெற்று நாசரேத்தூருக்குப் போய் மருந்து சாப்பிடப் போகிறதாயும் சொன்னார்கள். பிற்பாடு பாளையங்கோட்டைக்குப் போய்ச் சேர்ந்து மரியசுந்தரியையும் பிள்ளைகளையும் திருநெல்வேலிக்கு அனுப்பிவிட்டு டோனாவூருக்குப் போய் அங்கிருந்து எனக்கொரு காகிதம் அனுப்பினார்கள். அந்தக்காகிதத்தை யிதுடனே அனுப்பியிருக்கிறேன். பார்வையிட்டுக் கொள்ளவும். இதற்கு நான் பணவிஷயத்தில் எனக்குச் சம்மந்தமில்லை என்பது போலவும் உங்கள் கொடுக்கல் வாங்கற் காரியம், அதின் ஏற்பாடு ஒழுங்குகள் என்னவோ எனக்குத்தெரியாதென்றும் பின்னும் இப்படிச் சிலது சொல்லி யெழுதினேன். மொத்தம் என்காரியமல்ல, உன் காரியமென்பது. இப்போது மாப்பிள்ளை ஏசுதாச மாசிலாமணியாபிள்ளை யவர்கள் காகிதம் பார்ப்பதில் காரியம் படுமோசமல்லது. டோனாவூர் பிள்ளை யவாளுடன் பண்ணிக்கொண்ட ஒழுங்கும் அவாளுக்கு நீ யெழுதிக்கொண்டுவந்த விதமும் எப்படியோ அதற்கும் உன் காரியத்துக்கும் குறைவின்றி நடக்கவேண்டியதுமுண்டே, டோனாவூர்பிள்ளை யவாளுக்கு மாசந்தோறும் 20-நு மதுரையிலிருந்து மகன் அனுப்பிக்கொண்டிருந்ததாகவுஞ் செய்தி யுண்டே, இப்படி எல்லா மிருக்க பணம் வந்து சேராதிருக்கிறதும் இப்போது டோனாவூரில் தகப்பனாரிடத்திலிருந்து மகன் எழுதியிருக்கிறதும் என்னவாயிருக்கிறது. இதுவும் என்மனதுக்குப் பெரிய துன்பம். ஷெ. இயேசு. மாசில்லாமணியாபிள்ளை அவ்விடம்



வந்தால், மரியாதை யுபசாரஞ் சரியாயிருக்கவேண்டியது. பணக்கணக்கு காரியங் காரியம்போலவும் நியாயம்போலவும் பேசிக்கொள்ளவேண்டியது. வார்த்தை வித்தியாசம், மனஸ்தாபம் வேண்டாம். முந்தின ஒழுங்கை விட்டு மாற்றி புது ஒழுங்கு செய்கிறதாயிருந்தாலும் முந்தினபடி தகப்பனாரையும் விடாமல் அவாளுங்கூடயிருந்துதான் செய்யவேண்டியதுண்டு. இது வகை யுனக்குத் தெரியும். இது உன்னிஷ்டம். நான் என்ன சொல்ல என்பது தெரியவில்லை. இயேசுதாச மாசிலாமணியாபிள்ளை காகிதம் எனக்கு எழுதவேண்டியது மில்லை, எனக்குத் துன்பமுண்டாக்குகிற காரியமாயிருக்கிறது. இயேசு. மாசில்லாமணியாபிள்ளை யவர்கள் தகப்பனார் மகன் மாசந்தோறும் அனுப்பின பணத்தைக் கிரமமாய்ச் செலுத்தினாலும் காரியஞ் சரியாயிருக்கும், ஒரு வேளை மகன் அனுப்பவில்லையோ, இது ஒன்றும் விளங்கவும் இல்லை. யோசித்துக்கொள்ளவும்.

Yours sincerely
M. Savarirayan.

---

Nallammalpuram.
30th May 1874,

My dear son,

தேவகிருபையா லிவ்விடம் யாவருஞ் சுகம். அவ்விடஞ் சுகசெய்திக்கு எழுதவும்.

காலதாமத 26-உ போட்டனுப்பின உனதன்புள்ள காகிதம் 28-உ என்னிடம் வந்து சேர்ந்தது கிராமத்தில். காரியமறிந்தேன். மாப்பிள்ளை ஏ. மாசில்லாமணியாபிள்ளை யவர்கள் காரியத்துக்கு நீ யெழுதியிருக்கும் சவளிப்பு சரிதான். அவாள் தகப்பனார் இப்போது தங்களை கேட்டு மகனைப்பிரித்துத் தனியே விடுவது ஏற்பாட்டுக்குங் காரியத்துக்குஞ் சமயத்துக்குங் குறைவான காரியந்தான். மேலும் ஷெ. காரியம் என்னைச்சேர்ந்ததல்ல. சம்மந்தகாரரோடுள்ள கொடுக்கல் வாங்கற் காரியமாயிருப்பது மாத்திரம் மனதுக்குச் சங்கடமாயும், மற்றும் பிறருக்கு எண்ணைத்தாழ்வு மிருப்பதுதான் பெரிய மனஸ்தாபம். இனிக்காரியம் மிஞ்சிப்போயிருக்கும்போது யோசித்துக் கொள்வதில் ஒன்றுமில்லை. இருக்கட்டும், காரியம்போல நடக்கட்டும். இது தவிர, மரியசுந்தரியுடன் நாசரேத்தூருக்கு ஷெ. மாப்பிள்ளை மருந்து சாப்பிடப் போகிறதாகச் செய்தி. ஒருவேளை இதற்குள்ளாக அவ்விடம் வந்தி

ருக்க வேண்டியது. எனக்கெழுதின காரியத்திட்டத்தின் படிக்கு அப்படி யினைக்கிறேன்.

மனாசஞ்சீவி மேரியம்மாளும் இப்போ தெப்படி யிருக்கிறார்களோ தெரியவில்லை, மனாசஞ்சீவி சட்டையங்கே யிருக்கிறது, பெட்டியிற்போட்டது துணிகளுடன்.

இப்போது சங்கப்பணக் கணக்குக்காகக் கிராமங்களுக்குப் போகிறேன். இது ஒரு பெரிய வேலை. இதை முடித்ததும் பாடச்சோதனை நடப்பிக்க வேண்டும்.

சிவகிரி தம்பி J. D. S. பிள்ளை செவ்வாய்க்கிழமை இவ்விடம் வந்தான் இன்று மதியத்துக்கு மேற் புறப்பட்டுப் போவான். சிவகிரி வேலையை விட்டுவிட்டு பாளையங்கோட்டையில்-செசன் கோறட்டில் டிப்டி இரயிட்டர் வேலைக்கு சட்டத்துரையவர்கள் அனுமதி தயவால் உத்தரவு பெற்றுப் போகிறான். தற்சமயத்தில் சம்பளம் 35-ரூ. ஷை வேலைக்கு ஏற்பாடாம். கருத்தர் கிருபை யிருந்தால் இன்னும் வரவர க்ஷேம மிருக்கும்.

இவ்விடத்து நாங்கள் உனக்கும் மரியவியாகுலத்துக்கும் பிள்ளைகளுக்கும் அனேக வாழ்த்துதலும் முத்தியும் அனுப்புகிறோம்.

Yours sincerely
M. Savarirayan.

P, S. மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை திங்கள்கிழமை காலையிலே இவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார். அவ்விடம் வந்து சேர்ந்தாரோ என்னவோ? தெரியாது. M. S.

---

6th June 1874.
Tinnevelly.

Revd. and Dear Brother,

இவ்விடத்தில் யாவரும் தேவகிருபையாற் சேமம். அவ்விடத்தே சேமாதிசயங்களுக்கும் ஐயா அவர்கள் சுக சேர்க்கும் திருமுகக்கடிதமிட உத்தரவாக வேண்டியது.

சிவகிரிக்குத் தம்பி யின்று விடியற்காலம் புறப்பட்டுப் போகிறான். புது நட்டணையும் பார்த்துக்கொண்டான். சீக்கிரத்தில் வந்து வேலை பார்க்கவேண்டியதிருப்பதால் ஒரு வாரத்துக்குள் திரும்பி விடுவதாகச் சொல்லிப் போயிருக்கிறான்.

மரியசுந்தரி மாப்பிள்ளை தூத்துக்குடிக்குப் போய்வந்து அப்புறம் தாயார், மரியசுந்தரிகூட நாசரேத்தூருக்குப் போயிருக்கிறார்கள்.

கூனியூர் ஞானசுமி பிள்ளைகளில் லாசரு மாசிலாமணியையும், மதுரோந்திரம் ஆபிரகாமையும் கனம் அய்யாவர்கள் இவ்விடம் Boarding பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கிறார்கள்.

மாப்பிள்ளை மனுவேல்பிள்ளை தமக்கனுப்பித்த வாழைக்காய் இலை விவரத்துக்குக் கிரயந்தெரிய விரும்புகிறார். நாங்கள் முன்னெழுதிய படிக்கு மிஞ்சத்தக்கதா யிராமல் ஷை மாப்பிள்ளை வகைக்கே பற்றாமலிருந்தது. இலைகாய்க்குரிய கிரயத்தை நான் அவ்விடத்தில் இரண்டாந்தடவை தந்த ரூ. 3-இல் கழித்து சொச்சத்தை-கணக்கில் வரவு ரூ. 10 ஒடே சேர்த்து வரவு வைத்துக்கொள்ள வேண்டியதுந்தவிர கணக்கில் பின்னும் எழுதவேண்டியதுகள்:

| | ரூ. அ. பை |
|---|---|
| கோர்ட்டு அண்ட் செற்று 3-க்கு தையற்கூலி ரூ. 2-இ அணாக்கால் அல்ல ரூ. 3 ஆவதால் அதிகங்குறிக்க வேண்டியது. ... ... ... | 0—6—0 |
| தலையணை 3-க்கு பஞ்சு. ... ... | 0—14—6 |
| ஷை தையற்கூலி, ... ... | 0—6—0 |
| தலைப்பாகை 2-க்கு விழிப்பு 3 தைக்க. ... | 0—8—0 |
| பெண்ணழைப்பு வண்டி வாடகைக்குப் பதிலாக, அவ்விடத்திலிருந்து மறுவீடுவந்த வண்டி வாடகை வகையில் இவ்விடங்கொடுத்தது ... | 3—0—0 |
| காப்பிக்கொட்டை பவுண்டு 3-க்கு. ... | 1—5—0 |
| ஆக ரூ. | 6—7—6 |

இவ்விடத்தில் பணத்துக்கிருக்கிற தட்டுப்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அதினால் படுகிற கஷ்டமும் அப்படியே. யாதொரு வகையிலும் வகையாயும் பணங்கிட்ட மாட்டுதில்லை. மெத்தச் சங்கடம். பள்ளிக்கூடத்து ரூபாயை எடுத்துச் சமையத்துக்கு சமாளித்தேன். இப்போ அதைச் சரிசெய்ய வேண்டியதாயிருக்கிறது. துரை கனதுரை 10-டைக்குள்ளாக வழி செய்யச் சொல்லியிருக்கிறார். முழித்துக் கொண்டிருக்கிறேன். அவ்விடத்தில் மாப்பிள்ளைமார்களாலாகும் எதாவது வரவுக்கிடமில்லையா. அவாளை யிட்ட செலவில்லாவிட்டால் நம்முடைய வகை தன்னைக்கட்டி நிற்குமே;

நாவீதப்பிள்ளை வேஞ்சி வகையைவிட்டு விசாரித்ததில் மெது பிள்ளைகளுக்கு எதார்த்தமாகவே ஒன்றுந்தெரியாது. மூதலாவது எடுத்துக் கொடுத்துவிட்டதை மறுபடியும் ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள் எடுத்து பெரியபிள்ளையிடத்தில் வைத்து வைத்ததுபோல ஒரு சாடை தலங்குகிறது. ஆனால் வேஞ்சிச்சங்கதி ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள், பெரியபிள்ளை, யாக்கோபுபிள்ளை இவர்களுக்குத் தெரியாததல்ல.

மெதய்யா அவர்களுக்கும் கனெக்கிலேர் பிரதி பார்க்க விருப்பமென்று கேள்வி. ஒன்று அனுப்புவேன். வேறு விசேஷமில்லை.

மெதய்யா அவர்களுக்கும் தங்களுக்கும் மதினிக்கும் பணிவாய்த் தோத்திரமும் மற்றவர்களுக்கு வாழ்த்துதலுஞ் சொல்லுகிறோம்.

இப்படிக்கு
ஊழியன்
சகோதரன்

---

Sivagiri, Tinnevelly.
6th June 1874.

Most honored sir,

I humbly beg to inform your honor that I received your honor's most kind letter dated April 23rd on May 16th, the letter having been so long delayed at the Taluq post.

Words fail me to express how glad and thankful it made me. My only grief was that it came to my hands after so long a time in consequence of which I could not send a telegram to your honor informing that I most thankfully accept the post which has been granted me by your honor's generous condescension and liberality.

(Immediately on receipt of your honor's letter I went to Tinnevelly and saw the Head Writer and told him that I accept the post most thankfully. He at once prepared a sunnud and has forwarded to the Sub Judge in charge for his signature.

I went to the Court- House also to pay my respects to Mr. Comyn, the Acting Judge and showed him your honor's letter. He told me to follow strictly your honor's orders.

The Zemindar is doing well. He is gone to the villages to distribute puttahs.)

I intend leaving this place in a week so that I may be at Palamcottah four or five days before the expiration of the recess.

I humbly beg your honor to accept my heartfelt thanks for the great favor which your honor has bestowed on me.

(இத்தக்காகிதம் சிமைக்கு சார்தலையவர்களுக்கு நான் எழுதி யனுப்பினது. Immediately என்றவார்த்தை முதல் puttahs என்ற வார்த்தை வரைக்கும் என்னிடத்திலிருக்கிற நகலில் சேரியிருப்பதினால் அவைகள் நான் அனுப்பிய காகிதத்திலே ஒருவேளை எழுதப்பட்டிராது என்றாலும் சங்கதி தெரியும்படியாக அந்தப்பாகத்தையும் இங்கே சேர்த்துக் கொண்டேன். J. D. S.)

---

Nallammalpuram
17th June 1874

My Dear Son,

உனது பட்சமுள்ள காகிதம் வந்தது, 9-ம் தேதி என்று போட்டது. என் கப்பணம் பள்ளிக்கூடச் சோதனை, சபைப்பாடம் இந்தக்காரியம் அடிக்கடி வெளியே திருப்பத் திரும்பப் போக நேரிட்டிருந்திருப்பதால் உடனே பதில் அனுப்பத் தாமதப்பட்டது.

தேவகிருபையினாலே எல்லாருஞ் சுகமேயிருக்கிறது பெரியசந்தோஷம். மரியசுந்தரி மாப்பிள்ளை வந்ததில் நீ டெத்தினையாதிரி மெத்த கல்லது. கடைசியாக அவாள் சொல்லிக்கொண்டதும் நீ அதற்குச் சொல்லிய பதிலும்

அப்பால் நீ யெழுதியதுஞ் சரிதான். அதற்கு உனக்குப் பதில் அவர்கள் தகப்பனாவர்களுடைய சம்மத உத்தரவின்பேரில் வந்து சேரும். ஷையார் காகிதம் எனக்கு உன் காகிதம்வந்த அன்றுதான் வந்தது, சனவரி 12 ம்டை. அதில் அப்படி எழுதியிருந்தது. நான் நினைக்கிறது வீடு மனைக்கிரயத்தைப்பற்றி அல்லது விற்பனைப்பற்றி என்னயோசனை பண்ணுவார்களோ வென்று சந்தேகிக்கிறேன். நீங்கள் இருவரும் பேசி ஒப்புக்கொண்டது சரிதான். எவ்விதமும் அவர்கள் கொடுக்கல் வாங்கற் காரியம் முடிந்தால் மெத்த நலம். நீ யெழுதிய 500-தொகை மாத்திரமோ வட்டியும் கூடவோ எப்படியும் சட்டப்படிக்குள்ள பேச்சுங் காரியங்களும் ஒழுங்கான பின்பு வட்டியில்லாமல் அல்லது வேறு விதமாய் இனம் முறையாகவாவது எதாவது சகாயஞ் செய்யப் பார்க்கவும். இப்படியாக அவர்களுடைய மனதைக் குளிரப்பண்ண வேண்டியது. இதுவிஷயத்தில் உனது பிரியம் எப்படியோ அப்படிச்செய்யவும். பின்னும் மரியசுந்தரி மாப்பிள்ளை காசேத்துருக்கு மருந்து சாப்பிடப் போனதில் வியாதி சுகப்படுமென்று டாக்டர் பார்த்துச் சொல்லி மருந்துங் கொடுத்தார்களாம். ஆனால் ஷை டாக்டர் சென்னபட்டணத்துக்கு சீக்கிரத்திலேயாக உடனே போகிறதால் ஷை யார் காசேத்துரை விட்டுப் பாளையங்கோட்டைக்கும் கல்லம்மாள்புரத்துக்கும் போனூருக்குத் திரும்பி மதுரைக்குஞ் சீக்கிரத்திலே புறப்படுவதாகவும் எழுதினார்கள். மரியசுந்தரியும் பிள்ளையும் கொஞ்சநாளைக்கு கல்லம்மாள்புரத்துக்கு வரவிருப்புதனால் வருவதாகவும் காட்டி யிருந்தது. மாப்பிள்ளை யாக்கோபுப்பிள்ளையைப் பற்றி எழுதி யிருந்தது சரியே. அவர் காரியத்துக்குச் சரிதான். நம்முடைய காரியத்துக்குச் சற்று யோசிக்கவேண்டியதன்றி காலத்தைக்குறித்து. மேலும் மரியவியாகுலம் தனக்கு உதவிக்கென்று விசேஷித்து மேரியன்னம்மாளை அவசரப்பட்டுக் கூட்டிக்கொண்டு வருவதாய்ச் சொல்லி யிருந்திருக்க, இப்போது வேறுவிதமாய்த் தூரித வார்த்தை வந்திருப்பது சற்று விபரீதம். இவ்விடத்தில் விசேஷமாய் சுவிசேஷபுரத்தில் தந்தித் தபாற் கம்பெனிகளுண்டே. அந்தவகையில் மேரியன்னம்மாளை யாக்கோபுபிள்ளைக்குக் கலியாணஞ் செய்யக் கூட்டிக்கொண்டு போயிருக்கிறார்க ளென்றும் ஆவணி மாசங் கலியாணமா மென்றும் நீங்கள் சுவிசேஷபுரத்திலிருந்து புறப்பட்டுப் போன வாரத்திலே இந்தப்பேச்சு வர நான் ஆச்சரியப்பட்டு உண்டாக்கின பேச்சென்றேன். என்பேரில் சம்பூதனுள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்கு ஷை பேச்சு விசம்போலவே. இப்போது நீ யெழுதிய வார்த்தை வந்த பே





யை நிச்சயப்படுத்தவது போலிருக்கிறது. ஆனதால் உன் வார்த்தைகளை ஒருவருக்குஞ் சொல்லாமல் என் மட்டில் வைத்திருக்கிறேன். மற்றக்காரியங்களுக்கு இனி யெழுதுவேன். இவ்விடம் யாவருஞ் சுகம். ஐயா அவர்களுக்கு கால் வீக்கமும் வற்றலும் மற்றப்பலவீனங்களுங் கூட விருக்கிறது. இனிப் பூரணசுகம் வருவது வருத்தம். எவ்விதமும் உயிரோடிருந்தாற் போதும். இதுவே பெரியபாக்கியம். சமுவேல்மதுரசஞ்சீவி, மரியம்மாள் எப்படி யிருக்கிறார்களோ, அவர்கள் இவ்விடத்திலிருந்தபோதுள்ள வடிவு தோற்றம் கண்ணிற்கு முன்னிருந்தது போல மனதுக்கு இருக்கிறது. உங்களுக்கு அநேக வாழ்த்துதற் சொல்லி முடிக்கிறேன்.

Yours sincerely
M. Savarirayan

---

Palamcottah
19th June 1874

My dear Savarirayan

நான் காகிதம் எழுதாதிருந்தும் உங்களெல்லாரையும் குறித்து வெகுவாய் நினைத்திருக்கிறேன். ஓர்வகையாய் மனதுக்குக் கவலையும் உண்டாயிருக்கிறது. எப்படியெனில், நான் சிலவேளைகளில் மாத்திரம் அவ்விடம் வரக்கூடியதால் அங்குள்ள உத்தியோகஸ்தர் சரியானபடி மனச்சாட்சி அறிய வேலை செய்வார்களா. செய்யவேண்டிய சிலபெரிய காரியங்களைச் செய்தாலும் தேவனை முன்னிட்டு சின்னக்காரியம் போன்றவைகளையும் செய்வார்களா. கடமையாய்ச் செய்கிறது போலசெய்யாமல் மன ரம்மியமாய் உச்சாகமாய்ச் செய்கிறார்களா. இப்படிப்பட்ட எண்ணங்கள் அடிக்கடி என்மனதில் எழும்புகிறதுண்டு. ஆகையால் நீர் சபைகள், தோறும்போய் எனக்கு மனதிலிருக்கிற கவலையைத் தெரியப்படுத்த வேண்டும், விசேஷமாய் நீர் விசாரிக்க வேண்டியது: வியாதிப்பட்டவர்கள் போக மற்றவர்களெல்லாரும் எவ்விதத்திலும் ஓய்வுநாள் ஆராதனைக்கு வருகிறார்களா. வாசிக்கத் தெரிந்தவர்கள் தங்கள் வீடுகளில் வேதவசனத்தை வாசிக்கிறார்களா. குடும்பச்செபம் வைக்கிறார்களா. சபையாருக்கும் உபதேசிமாருக்கும் அன்பும் பிரியமுமுண்டா. பிள்ளைகளை ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்துக்கு, விடுகிறார்களா. உபாத்தியாயர் கிரமமாய் திறமையாய்ப் படித்துக்கொடுக்கிறார்களா. தேவஊழியக்கார ரென்று சொல்லிய நிலைமையில் உள்ளவர்களாகிய உபதேசியார் உபாத்தியாராயவர்கள் கடைவியாபாரம் விவசாயம் ஆகிய உலகத்தொழில்களில் பிரவே

பொமல் நீங்கள் அவனுக்கு ஏற்றவைகளையே செய்கிறீர்கள். சுதேச சங்கம் வளர்ந்தேறுவதற்கேதுவாய் சபையாரெல்லாரும் அவரவர் நிராணிக்குத் தக்கதாகக் கொடுத்து வருகிறார்கள். இதுகளையெல்லாம் நீர் திட்டமாய்க் கவனித்திருந்து புத்திசொல்லவேண்டிய இடத்தில் புத்தி சொல்லவும், உச்சாகப்படுத்தவேண்டிய இடத்தில் உச்சாகப்படுத்தவும் வேண்டும். ஒவ்வொன்றையும் குறித்து உம்முடைய அபிப்பிராயத்தையும் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். விசேஷமாய் நல்லம்மாள்புரத்து முக்கியமார் முதலானவர்கள் மற்ற இடங்களிலுள்ள சபையார் எல்லாருக்கும் நல்லமாதிரிகளாய் விளங்குவார்களென்று கர்த்தரை முன்னிட்டு நம்புகிறேன். நான் அவர்களை தலைச்சன் பிள்ளைகளாகப் பாவித்து அவர்களால் நம்முடைய மிஷியோன் காரியம் பெலப்படவேண்டுமென்று விரும்புகிறேன். அந்தப் பிரதேசங்களிலிருக்கிற நம்முடைய சான்றார் ஜனங்களெல்லாரும் மெய்வேதத்தை யறிந்து இன்னமுணரப்படாதிருக்கிறது எனக்கு ஆச்சரியந்தான். ஒருவேளை அவர்களைக் குறிப்பாய் அழைக்காததினாலேயாக்கும். ஆகையால் இனிமேல் நீர் போகிற இடத்திலெல்லாம் அஞ்ஞானிகளுக்கு என்னுடைய மன ஆசையைத் தெரியப்பண்ணி இரட்சகருடைய திருமுகத்தைப்பார்த்து நீங்களெல்லாரும் குணப்படவேண்டும், வேதத்திலே வரவேண்டும் என்று ஐயரவர்கள் தேவனுடைய திருநாமத்தை முன்னிட்டு உங்களை அழைக்கச் சொன்னார்கள் என்று சொல்லுங்கள். இந்த பாணம் அவர்கள் மனதில் தைத்து பலன் செய்யாவிட்டால் வேறே வகையான பாணத்தை இனிமேல் சோதிப்போம். கர்த்தர் உங்களெல்லாரையும் ஆசீர்வதிப்பாராக. உம்முடைய தகப்பனுக்கு இப்போதிருக்கிற விருத்தாப்பியத்திலே கர்த்தர் அவருடைய ஆத்துமாவுக்கு அதிகம் அதிகமாய் இரட்சகருடைய அருமையை விளங்கப்பண்ணவும் அவருடைய தேகத்துக்கு இருக்கிற பெலவீனத்துக்குத் தக்கதாக காரியத்தை லேசுவாக நடத்தவும் முடிக்கவும் வேண்டுமென்று நாம் பிரார்த்திக்கிறதாகச் சொல்லும்,

Yours affectionately
Edward Sargent

---

நல்லம்மாள்புரம். 74-ம் ௵ ஜூன் ௴ 22-உ

மிகவும் பிரியமுள்ள பிள்ளைகளாகிய ஏசுதாசபிள்ளைக்கும் தேவசகாயம் பிள்ளைக்கும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பெருக உண்டாகவும்,



இப்பவும் இவ்விடத்தில் யாவரும் சுகம். அப்படியே அவ்விடத்தில் உங்களெல்லாருடைய சுகத்தையும் பற்றியறிய ஆசையுள்ளவனாயிருக்கிறேன். உங்கள் ஐயாவுக்கு மறுபடியும் சுகக்கேடு நேரிட்டது. இப்போ டாக்டர் வந்து பார்த்து மருந்து கொடுத்து கொஞ்சம் சவுக்கியமாயிருக்கிறது. கோழிப்பிலாத்துக்கு 8-காசுக்கு 1-ரூ செல்லும். பத்தியத்துக்கு 1-மாசத்துக்கு இப்படி செய்வாங்கவேணும். மெய்யலம்மாளும் பிள்ளைகளும் வந்தார்கள். சவுக்கியமாயிருக்கிறார்கள். எலிசப்பேத்து அம்மாளும் பிள்ளைகளும் சுகமாயிருக்கிறார்கள். சஞ்சலியும் எலிசப்பேத்து பாக்கியமுஞ் சேமமாயிருக்கிற செய்தியைப்பற்றி யறிய வாஞ்சையாயிருக்கிறேன். நீங்கள் ரண்டு பேரும் அனுக்கு ஐந்தைந்து கூட அனுப்பினீர்களானால் மெத்த உதவியாயிருக்கும். உங்களெல்லாருக்கும் வாழ்த்தல் சொல்லுகிறேன். அன்னம்மாளும் பிள்ளைகளும் சுகமாயிருக்கிறார்கள்.

இப்படிக்கு உங்கள் பட்சமுள்ள தாயார் மரியவியாகுலம்.

உங்களுடைய செலவெல்லா மெனக்கு தெரியும்.

(இவை: திருநெல்வேலி மக-௱-௱-ஸ்ரீ சங்கைக்குரிய ஏசுதாசபிள்ளையவர்களுக்கு கொடுப்பது.)

---

22nd June 1874.
Tinnevelly.

Revd. and Dear Brother,

தாங்கள் கனதயரி 16-உ எழுதியனுப்பிய காயிதம் வந்து சேர்ந்தது. சிவகிரித்தம்பி போனவாரத்திலேயே வந்து சேர்ந்தான். பாளையங்கோட்டையில்த்தானிருக்கிறான். இடையில் சுரப்பிணுல் கொஞ்சம் சுகம் போலவும் கண்ணுவலியாயு மிருந்தது. இப்போது சுகந்தான். ஷை தம்பி அவ்விடத்திலிருந்து வந்திருந்தபோது, மறுவீட்டுவிஷயமாய் வேண்டிய சவரிணையப்பற்றிச் சொன்னான். முன் கடன் செல்லாமல் கிடக்கிறபோதும் கையில் வகையில்லாமலிருக்கிறபோதும் இப்படிப்பட்ட செலவு செய்து அதிகக்கடன் பண்ணிக் கொள்வதற்கு நீராத அவசர காரியமல்லவே யென்று யோசித்துக்கொண்டோம்.

பட்டணக்கரையில் கனாவீசேளும் நெஞ்சைநிலங்களு மிருப்பதால் தாங்களிவ்விடங்களைச் சலாக்கியமா யெண்ணிக்கொள்ளுவதா யிருக்கிறது. ஆனால் இவ்விடத்திலேயோ சனங்களுக்குள் ஈனையமும் கராவும் அற்றப்

போனதால் கொடுக்கல் வாங்கல் காரியம் நின்று போச்சுதென்று சொல்ல வேண்டிய தீரிவிருக்கிறது. சவரிக்கடையிலேயோ கூனியூரன்றனதி யவர்கள் பற்றுவரவு செய்தகாரியமாய் நமக்கெல்லாம் கடன் கொடுப்பதுக் குக் கள்ளப்பட்டுப் போயிருக்கிறார்கள்.

முன் கலியாண காரியத்துக்குத் தீராதென்று சரிசெய்யப்பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தவகையாய் சேரிட்டிருக்கிற கடன் லேசான தன்மையுள்ளதல்ல. சரிசெய்து தீராத விஷயத்தில் தலையவர்கள் அதை மனதிக் கவனித்து சமிட்டிக்கெழுதவதா யிருந்தால் அறுவருக்கு மோசமென் பதற்கு சந்தேகமில்லை. இனிவந்ததெல்லாம் வரட்டுமென்றிருக்க வேண் டியதாச்சுது. எனக்கு மிது தவிர வேறு செல்லுக்கவில்லை யென்பதல்ல. அவரவர் வருத்தத்தினுடைய கூரானது பிறருடைய வருத்தத்தைக் கவனிக்க ஆவது இரக்கஆவது ஒட்டுகிறதில்லை. இதுவும் பாக்கியர்தான், கண்ணை மூடி சுகத்திலிறக்கும் தன்மையாய் நம்முடைய வகைகள் ஆகியிருக்கிற தீர்தான் ஆச்சரியமாயிருக்கிறது.

தம்பி சஞ்சீவிப்பிள்ளை யின்னமும் இவ்விடத்தில் தானிருக்கிறார். நச்ச கல்லூரில் வீடமைகிறது போலிருக்கிறது. அறுவல் காரியமும் மனசுக்கு திருப்தியாயில்லை. இதினால் நான் கேற்றுப்போய் அவ்விடத்தில் சிலரைக் கண்டு பேசிச் சரிசெய்ய நேரிட்டது.

மதய்யா அவர்களுடைய சுகவீனக்குறித்துத் தாங்கள் நம்பிக்கெழுதிய தைப் பார்த்துக்கொண்டேன்.

இவ்விடத்தில் யாவருக் தேவகிருபையாற் சேமம்.

இப்படிக்கு
யாழிடன்
யேசுதாசன்

---

Palamcottah.
23rd June 1874.

Revd. and Dear Brother.

தேவ இரக்கத்தினாலே இவ்விடத்தில் நாங்கள் யாவருஞ் சுகமே யிருக் கிறோம். நான் சிவகிரியிலிருந்து போன சனிக்கிழமை (13-உ) திருநெல் வேலி வந்து மறுநாள் இவ்விடம் வீடு வந்துசேர்ந்தேன். அருளம்மாளும் பிள்ளைகளும் அதற்கு ஐந்து நாளுக்கு முந்தியே இவ்விடம் வந்திருந்தார்கள்,



நான் வந்த மறுநாள் தாவீதுப்பிள்ளை வேறுவீட்டுக்குப் போய் விட்டார். ஜூலைமீ தலக்கமுதல் கோர்ட்டில் உத்தியோகம் தாக்கல். அதுவரையும் ஊ டே ஊடே போய் அலுவலின் தன்மையை அறிந்துசொள்ளும்படியாக கோர்ட்டுக்குப் போய் வருகிறேன். சிவகிரியிலிருந்து வந்தது முதல் மிகுந்த அலைச்சல் அலுப்பினாலும் காற்றினாலும் கொஞ்சம் காய்ச்சலினாலும் அதிக கண்வலியினாலும் சங்கடப்பட்டேன். அதினாலேதான் நான் வந்து பத்து நாளாகியும் தங்களுக்குக் கடிதம் எழுத ஏதுப்படவில்லை. இப்போது சுகந் தான். அண்டாப்பிள்ளை வடக்கன்குளம் முதலான இடங்களில் திரிந்து திருநெல்வேலி பாளையங்கோட்டையிலும் நாலைந்து நாள் அலைந்து நேற்று சாயங்காலம் நம்முடைய வீட்டில் வந்து நுழைந்தார். கரிசல்காடு ஊற்றுக் குடிக்குப் போகிறாராம். சாப்பாடு விசாரிக்கவில்லை.

பள்ளிக்கூடத்திலிருந்து வீதி அருளம்மாளுடைய கடிதம் வந்ததை அனுப்பி யிருக்கிறேன்.

அவ்விடத்துச் சுகசெய்திகளுக்கு கிருபன் கட்டளையிடப் பிரார்த்திக்கி றேன். தங்களுக்கும் ஐயா அவர்களுக்கும் அம்மைக்கும் மதினிக்கும் அக் காளுக்கும் என்பணிவான தோத்திரம்.

ஊழியன்
தேவசகாயம்

---

தச்சநல்லூர்.
25th June 1874.

Revd. and Dear Brother,

தாங்கள் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. நான் கடிதம் யெழுத வேணுமென்று நினைத்தும் (முன்னும்பின்னுமாக) கூடாதே போச்சுது.

நேற்று எறக்குறைய (அ-மணிக்கு) இருட்டி கூனியூரிலிருந்து அண்ணா ச்சியவர்கள் கடிதம் வந்தது. மதினிக்கு வயிற்றளைச்சலாயிருந்து, அதோடு ஐந்துமாதக்கர்ப்பம் விழுந்து மகா வருத்தமா யிருக்கிறதாம். வயிற்றளைச்சல் முடக்கமுமில்லையாம். அன்ன ஆகாரம் விருப்பமு மில்லையாம். குடித்த தண்ணீருக்கதிகமாய் வயற்றாலேயும் போகிறதாம். இப்படி யிருப்பதால் எந்த வியாதிக்கு மருந்து கொடுப்பது யென்பதும் சங்கடத்தி லிருக்கிறதாம். அம்பாசமுத்திரத்து அண்ணாச்சி யவர்கள் அவ்விடத்தி லிருக்கிறார்களாம். அவர்கள் தானிந்த விபர மெழுதினது. முத்துசுவாமி ஐயரவர்களும் வீரவ நல்லூர் மாசில்லாமணி பிள்ளையும் அங்கேதானும். பாப்பம்மாள்தான் உதவி

செய்கிறார்களாம். அச்சுக்கூடத்துப் பிள்ளையவர்களுக்கு இளைய அண்ணாச்சியும் ஷெ ஐயாவர்களும் கடிதமெழுதியிருக்கிறார்கள். பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவரும்படி திருநெல்வேலி அண்ணாச்சியவர்களுக்குக் கடிதம் வந்தது. இன்று மதியத்துக்குள் இவ்விடத்திலிருந்து அண்ணாச்சியவர்கள் கூனியூருக்குப் பிள்ளைகளுடன் போவார்கள். கர்த்தர் இரங்க வேணும். நாம் அவர் இரக்கத்துக்கும் பொறுமைக்கும் காத்திருந்து வேண்டிக்கொள்ளத்தக்கவர்களாயிருக்கிறோம்.

ஐயாவும் அம்மையும் இந்தச்சங்கதி கேள்விப்பட்டால் மெத்த சங்கடப்படுவார்களே. ஐயா அவர்களுடைய பலவீன நிலைமையும் பலவகைத்துன்பங்களும் நமது குடும்பத்தை நெருக்குகிறதாயிருப்பது அவர் சித்தமே சித்தம். கர்த்தர் நம்மெல்லாருக்கும் இரங்கவேணும்.

தானியேல் இப்போது வருகிறான். மற்றும் காரியங்களை பின்னாலே தபாலில் எழுதுவேன். இரண்டாம் தெய்தி சங்கமென்று கேள்வி. நான் தச்சநல்லூருக்கு இன்னம் வரவில்லை லீவு கிடைக்காததால்.

நான் தங்களுக்கும் ஐயா, அம்மை, மதினி, அக்காளுக்கும் தாழ்மையாய்த் தோத்திரஞ் செய்து முடிக்கிறேன்.

Yours very affectionate
T. S. Sanjeevy.

ஐயாவுக்கு கொஞ்சம் இஞ்சியும் சவ்வரிசியும் வாங்கி அனுப்பியிருக்கிறேன். தேயிலைக்கும் சொப்பரிசிக்கும் அத்தானிடம் பணங் கொடுத்திருக்கிறேன். கூனியூருக்கு அண்ணாச்சி பிள்ளைகளுடன் போகிறார்கள்.

---

Tinnevelly.
25th June 1874

Revd. and Dear Brother,

காணிது முன்தபாலில் அனுப்பிய காகிதம் வந்து சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன். அப்படியிருந்தும் ஆள் வந்ததைப் பார்க்கப் பிரமிப்பாச்சுது. மறு வீட்டாளையும் வீட்டில் கூட்டிக்கொண்டு வைத்தபிற்பாடு என்ன பண்ணுகிறது. இவ்விடத்து வருத்தம் அவ்விடத்துக்கு தெரிந்தாலிப்படியாக மாட்டாது. இப்போது ஒருமாச வாயிதாப்பேசி இவ்வளவு சாக்கும் வாங்கி அனுப்பியிருக்கிறது. முன் வரவேண்டியதுகளும் இந்தத்தொகையும் சீக்கிரம் வரும்படி தயவு செய்தால் பெரிய உபகாரமாயிருக்கும். என்றால் கஷ்டம் அனுபவித்து முடியுதில்லை. முன்னால் கா-நூ கட்டுரை அம்பாசமுத்திரம்போய்ச் சேர்ந்தேன். அது நிவிர்த்தியாகி வருகிற சந்தியில் இப்போது மறுபடியும் உடம்பு கூட கடனுச்சுது. நான் பட்டி தொட்டிகளிலிருந்தால் இந்தக் கஷ்டம் நேரிடாது. வியாயத்துக்கும் சவளி விவரத்துக்கும் இத்துடன் சீட்டனுப்பியிருக்கிறது. விவரித்தெழுத நேரமில்லை. கூனியூர் மதினியாரவர்கள் மரண அவஸ்தையிலிருப்பதாய் ஆள்வசம் காயிதம் வந்தது. பார்க்கப்போகிறேன். வயிற்றளைச்சல்கண்டு 5 மீ கற்பம் அல்லாமல் போனது காரணம்.

வேறு விசேஷமில்லை.
இப்படிக்கு.
எசுதாசன்

---

[இந்தக் காகிதம் மூத்தஅண்ணாச்சி சனம் சார்ஜென்டையரவர்களுக்கு எழுதிய காகிதத்துக்கு நகல். எனக்குவேண்டிய அருமையான கடைசிப் பாகம் கொந்து கிழிந்துபோயிருக்கிறது. J. D. S.]

Nallammalpuram.
26th June 1874.

Revd. and dear Sir,

தங்களின் அருமையான கிருபத்துக்குத் திருப்திகரமான பதிலெழுதக் கூடாமையால் இவ்வளவு தாமிதமாயிதை எழுத நேரிட்டதுக்காக மனஸ்தாபப் படுகிறேன். தாங்கள் ஆத்துமாக்களைக் குறித்தகவலையோடும் உட்கருத்தான சிரத்தையோடும் எழுதியதைப் பார்க்கவே அதைத் திரும்பத் திரும்ப வாசிப்பதற் கேற்ற ஆவலும் அதிலுள்ள கேள்விகளுக்கு நிறைவான பதில் அதிகமாய்ச் சொல்ல ஏதுவில்லையேயென்கிறதினுள்ள ஆயாசமும் மிகுதியாகவே இருக்கிறது. ஆனாலுந் தேவகிருபையினாலே கொஞ்ச மீதியுண்டென்பதில் ஆறுதலுமுண்டு. தாங்கள் தூரத்திலிருந்து கவலையுற்றுணர்வது எவ்வளவு அதிகமோ அவ்வளவாய்க் கிட்டியிருந்து இந்தச்சனங்களின் குறைவுகளை யறிந்து நடப்பதில் எவ்வளவோ வருத்தமுண்டு. இவர்களுக்காகவென்றே என்னை ஏற்படுத்தி யிவ்விடத்தி லிருக்கக் கட்டளையிட்டிருக்கிறவருடைய கிருபையைத் தேடிக்கொண்டு அவர் எனக்குத் தந்திருக்கிற பெலத்தின்படி இவர்களுக்காகப் பிரயாசப்படுவதில் இழக்கரித்துப் போகாமல் முயற்சிப்படுகிறேன்.

கர்த்தருக்குள்ளான தகப்பனே, தாங்கள் இவ்விடம் வந்து போன

தின் பின்பு ஒவ்வொருவாரத்தில் இரண்டொருநாளைத் தவிர மற்ற நாட்களிலெல்லாம் சங்கப்பணங்களுக்காகவும் சபைப்பாடச் சோதனைகளுக்காகவும் பள்ளிக்கூடச் சோதனைக்காகவும் (விசாரணை உபாத்தியாருடன்) நற்கருணைக்காகவும் இங்கும் அங்கும் போயிருக்கிறேன். இதின்மத்தியில் அஞ்ஞானிகளுடனேயுஞ் சம்பாஷித்திருக்கிறேன். இதுகாரியங்களைப்பற்றி என் வார்த்தைகளை அதிகமாய்ச் சொல்லாமல் தாங்கள் கேட்டுங் கேள்விகளுக்குமாத்திரம் உத்தரவு சொல்வதிற் காரியத்தை வெளிப்படுத்துகிறேன்.

1. மிஷியோன் உத்தியோகஸ்தரைப்பற்றி மனச்சாட்சியின்படி வேலை செய்வார்களா என்பது, அனேகரைப்பற்றி சிலவற்றில்த் திர்ப்தியா முண்டாயிருந்தாலுஞ் சிலவேளைகளிற் சிலரைப்பற்றி சந்தேகிக்க இடமுண்டாகிறதைப் பார்க்கும்போது மனதை மறிய வருத்தமாயிருப்பதால் உறுதியாய்ச் சொல்ல அசாத்தியமான காரியமாயிருக்கிறது.

2. செய்யவேண்டிய சில பெரியகாரியங்களைச் செய்தாலுஞ் சின்னக் காரியம் போன்றவைகளையுஞ் செய்வார்களா என்பது, இதில் அனேகர் அனேகத்தில்த் தவறிப்போவதுண்டு. சிலவேளை பத்தியும் நல்ல மனச்சாட்சியுமுள்ளவர்களுங் கூடத்தானென்று சொல்லவேண்டும்.

3. கட்டாயமாய்ச் செய்கிறதுபோலச் செய்யாமல் மனப்பிரியமாய் உச்சாகமாய்ச் செய்கிறார்களா என்பது, சிலரைக்குறித்து அனேகத்திலிப்படியே என்று சொல்லக்கூடும். அனேகரைக்குறித்துச் சிலவேளைகளில் இப்படி என்று சொல்லலாம். இப்படியுள்ள காரியங்கள் மனதுக்குப் படும்போது எரிச்சலும் விசனமும் உண்டாகிறதுந்தவிர மனதுக்குப் பெரியசோதனையும் நேரிடுகிறது, துன்பமுமாயிருக்கிறது. இப்படியாக எனக்குப் பலவிதத்திலும்விட ஆத்துமாக்களைக்குறித்த விசாரத்தில் வெகுகாலம் மனமுபத்திரப்பட்டவர்களும் நெடுங்கால அப்பியாசியுமாகிய தங்களுக்கு அதிகமாய்ப்பட்டிருக்கும்.

4. ஒப்புரவு ஆராதனைக்கு வியாதியஸ்தர் போக மற்றவர்களெல்லாரும் வருகிறார்களா, இவ்விஷயத்தில் அனேகர் ஒழுங்கில்லை. வேலை, அசட்டை, சோம்பல், அறிவீனம் இப்படிப்பட்ட முகாந்திரந்தவிர மொத்தமாய்ச் சொன்னால் தேவகற்பனையென்கிற பயபத்தியில்லை. சிலரைப்பற்றி மாத்திரம் பலசபையிலும் இங்கும் அங்கும் ஆண்பிள்ளைகளிலும் பெண்களிலும் பிள்ளைகளிலும் நல்லொழுங்குள்ளவர்களுண்டென்று சொல்லக்கூடும். என்றாலும் பெரும்பாலும் ஒப்புரவுக்காரியத்தில் வெகு குறைவுண்டென்று வெகு துக்கத்தோடே முறையிடவேண்டியதாயிருக்கிறது.

5. வாசிக்கத்தெரிந்தவர்கள் தங்கள்வீடுகளில் வேதவசனத்தை வாசிக்-

435



கிறார்களா என்பது, ஏவி எழுப்பி விட்டமட்டும் சிலவேளை வாசிக்கிறது தவிர கிரமமாய் வாசிக்கிறவர்கள் அதிகப்பேரில்லை.

6. குடும்பச்செபம் வைக்கிறதிலும் அப்படியே.

7. சபையாருக்கும் உபதேசிமாருக்கும் அன்பும் பிரியமுமுண்டா என்பது. இதுகாரியத்தில் விசேஷமாயிந்தக்காலத்தில் சபையாரைப் பிரியப்படுத்தவும் அன்பு காட்டவும் உபதேசியார் முதலிய மிஷியோன் ஆட்கள் அதிகமாய் முயற்சிப்படுகிறார்களென்று சொல்லவேண்டும். சிலவேளைகளில் உபதேசிமார் சபையாரில் அதிக ஒழுங்கீனமும் முரட்டாட்டமுள்ளவர்களை நயம் பயமாய் எச்சரித்துக் கண்டிக்க நேரிடுகிறதிற் சபையாருடைய விசனம் உபதேசிமார் பேரில் மூளுகிறது. இது முகாந்திரமாய் அன்பும் பிரியமுங் கெட்டுப்போகிறதற்கு இடமாகிறது. மற்றவகையிலுண்டாகும் விகற்பங் தற்காலத்தில்வெகு சொற்பமென்று சொல்லவேண்டியது. அங்கங்கே ஒழுங்கும் பத்தியுமுள்ள சபையாருக்கும் உபதேசிமாருக்கும் அன்புக்கும் பிரியத்துக்குங் குறைச்சலில்லை.

8. பிள்ளைகளை ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்துக்கு விடுகிறார்களா என்பது. சிலர் தவிர அனேகர் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காய் விடுகிறதில்லை. இதிற் பெரிய வருத்தமுண்டு. படிப்பில் ஆசையில்லை. வேலையும், சிலருக்கு தரித்திரமும், சிலருக்குப் பொருளாசையும் முகாந்திரமாய்க் கொண்டு என்ன சொன்னாலுஞ் சமையத்துக்கு ஆமென்று ஒத்துக்கொண்டு சிலநாள் விட்டுச் சிலநேரத்துக்கு மாத்திரம் விட்டும் இப்படி ஒழுங்கையும் படிப்பையுங் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இதினாலே பிள்ளைகள் சரியானபடி தேர்ச்சிக்கு வராமற் போகிறார்கள். இதினிமித்தம் பிள்ளைகளுக்காக அதிகப் பிரயாசம் எடுக்கவேண்டியதிருக்கிறது. உபாத்தியார் பிரயாசத்தையும் ஒழுங்கையும் சரியாய்க் கையாடாமல் பள்ளிக்கூடம் நடக்கமாட்டாது.

9. உபாத்தியார் கிரமமாய்த் திறமையாய்ப் படித்துக்கொடுக்கிறார்களா என்பது. சிலரைக்குறித்து நன்றாய்ச் சொல்லலாம். சிலரைக்குறித்து இடத்து முகாந்திரமாய் பிள்ளைகளுடைய குறைவினாலே இப்படிச்சொல்ல இடமில்லை என்றுஞ் சொல்லலாம். இரண்டொரு உபாத்தியாரைக்குறித்து திறமையும் கிரமமும் போதாதென்று சொல்லவேண்டியது.

10. தேவ ஊழியக்காரரென்று சன்னிய நிலமையிலுள்ளவர்களாகிய உபதேசிமார், உபாத்தியாரானவர்கள் நடைவியாபாரம் விவசாயம் ஆகிய உலகத்தொழில்களிற் பிரவேசியாமல் தங்கள் அலுவலுக்கேற்ற வேலைகளை செய்கிறார்களா என்பது. இப்படிப்பட்ட வேலைகளில் தலையிடுகிறவர்கள் இந்-

கே வெகு சொற்பம். இரண்டொருவருக்கு நிலவகையில் விபசாயமுண்டென்று பக்கமாய்ப் பேச்சுண்டா யிருந்திருக்கிறது தாங்கள் வந்து எச்சரித்துப்போனதில் தங்கள் வேலையிற் கிரணமாயிருக்கிறார்கள்.

11. சுதேச சங்கம் வளர்ந்தேறுவதற்கு ஏதுவாய்ச் சபையார் எல்லாரும் அவரவர் திராணிக்குத் தக்கதாகக் கொடுத்து வருகிறார்களா என்பது. சிலரைக்குறித்துத் திராணிக்குத் தக்கதாய்க் கொடுக்கிறார்களென்று சொன்னாலும் எல்லாரையும்பற்றி இப்படிச்சொல்ல ஏதுவில்லை. - ஏனெனில் அவர்கள் திராணிக்குத் தக்கபடி கொடுக்கிறது போல தகுதியுள்ளவர்களுங் கொடுப்பார்களானால் சங்கப்பணம் அதிகமாய் வளர்ந்தேறுவதற்கு இடமுண்டு. சனங்களுக்குக்காரியம் படாமையினாலே சங்கப்பணம் எழுதப்படுவதிலும் வாங்கப்படுவதிலும் வெகு கஷ்டங்களுண்டு. வேத எழுத்துக்களையும் புஸ்தகங்களைக் கொண்டு வேண்டியதுகளைச் சொன்னாலுஞ் சிலருக்கு எழுப்புதலாய் * * அநேகருக்கு * * சிலர் இந்த தேவகாரியத்துக் குரிய விசேஷமாயென்றுமல் தர்க்கஞ் சொல்லுகிறவர்களும் பின்னுஞ் சிலர் மிஷியோன் கிராமத்தை விற்றுப்போட்ட பின்பு சங்கப்பணம் இனி வேறு என்கிறவர்களுமுண்டு. சிலர் கல்மனசோடுஞ் சிலர் கொடுக்க வேண்டியது கடமைதான் என்று கொடுக்கிறவர் களுமுண்டு. தாங்கள் சொல்லியபடிக்கு சனங்களுக்கு எழுப்புதலாய்ப் புத்தி சொல்லி உற்சாகப்படுத்தினால் வர வர அறிவும் பக்தியும் உண்டாகிச் சரியாய்க் கொடுக்க ஏவப்படுவார்களென்று நம்புகிறேன்.

12. கல்லம்மான்புரம் முக்கந்தன்மார்களைக் குறித்து தாங்கள் விசேஷித்துச் சொல்லிய அன்புள்ள வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லி எழுப்புதற் செய்திருக்கிறேன். தாங்கள் விரும்பிச்சொல்லியபடி நடப்பார்களானால் மிகுந்த நன்மை. அவர்களா லுண்டாயிருக்கும் என்று நம்புகிறேன். தாங்கள் "அவர்களைத் தலைச்சன் பிள்ளைகளாகப் பாவித்து அவர்களால் நம்முடைய மிஷியோன் காரியம் மேற்படவேண்டுமென்று விரும்புகிறேன்," என்றும் மற்றுஞ் சொல்லிய வார்த்தைகளை அவர்கள் கேட்க வெகுவாய்க் கவனித்து முகமலர்ச்சியுள்ளவர்களா யிருந்துகொண்டு, அதில் ஒருவர் சொன்னது: அவர்கள் தகப்பன் தான், நாங்கள் அவர்கள் விருப்பம்போல் நடந்து கொள்ளும்படிக்கு சுவாமி கிருபைசெய்ய வேண்டும் என்றார். இப்படியாக கல்லம்மான்புரம் முக்கந்தன்மார்களுக்குத் தங்களையிட்டே கனமா யெண்ணிக்கையும் தாங்கள் இவ்விடம் வந்துபோனதின் அதிக எழுப்புதலு



முண்டென்று நினைக்கிறேன்.

13. இவ்விடங்களிலுள்ள அஞ்ஞானிகளைப்பற்றி என்ன செய்யவேணுமென்று மனதிலே மிகுந்த பாரமான எண்ணமும் கவலையும் கிரியை செய்து கொண்டே யிருக்கிறது. அடிக்கடி அவர்களைக்கண்டு பேசுகிறதில் அவர்கள் எதிர்த்து விரோதித்துக் காட்டுகிற ஒன்றுஞ் சொல்லுகிறதில்லை. சொல்லுகிறபோது ஒத்துக்கொள்வது போல மாத்திரஞ் சாடைகாட்டுகிறது. வார்த்தையை யங்கிகரித்ததற்கு ஏற்ற குறிப்புக்காட்டுகிறது மில்லை. சில புதல்களைச் சொல்லுகிறதும், வாசிக்கத்தெரிந்தவர்கள் புஸ்தகங்களை வாங்குகிறது முன்னின்று வாசிக்கிறது, சிலர் ஒன்றுஞ் சொல்லாமலிருந்து கேட்கிறது, சிலர் கேட்டிருக்கிறது தான் என்று சும்மாபார்த்துக்கொண்டு போய்விடுகிறது. அநேகருக்கு அறிவில்லை, கேட்க காதில்லை, ஆராய்ச்சிக்குரிய ஆசையில்லை. ஒருவித அசதி, வீண்பக்தி பேய்ப் பயம் அஞ்ஞானத்தில் முற்றிப்போய்

போராட்ட செபத்தோடே

பிரயாசப்பட்டுப் போதிக்கவேண்டியதாயிருக்கிறது. இப்போது தாங்கள் அவர்களைக்குறித்துச் சொல்லிய வார்த்தைகளையுந் தங்களுடைய நாமத்தினாலேயுஞ் சொல்லி போதிக்கவும் பிரயாசப்படுவேன், இப்படியே உபதேசியார் முதலியவர்களுக்குஞ் சொல்லித் தெரிவிப்பேன். எல்லாவற்றிற்கும் மேலாக தேவகிருபை எங்களோடிருந்து கிரியை நடப்பிக்கவேண்டும். இதற்காகவும் பின்னும்

தந்தருளவும் வேண்டுகிறேன்.

கருத்தருக்குள்ளான அன்புள்ள ஐயாவே, கடைசியாக தாங்கள் என் தகப்பனாரவர்களைப்பற்றி எழுதிய அன்பு நிறைந்த வார்த்தைகளுக்காகவும் மிகவும் நன்றி யறிதலுள்ளவனாயிருந்து அநேக வந்தனஞ் சொல்லுகிறேன். தங்களின் அருமையான அமிர்தமொழிகளை யென் தகப்பனாரவர்கள் கேட்டு தேவபக்தியுள்ள சிந்தையோடும் அன்பும் நன்றியறிதலுமுள்ள மனதோடும் இருகையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து தேவதுதி சொல்லிக்கொண்டு தங்களுக்குத் தாழ்மையோடு அநேக வந்தனஞ் சொன்னதாகச்சொல்லி எழுதவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டார்கள். இப்போது சிலநாட்களாக இந்தக்காற்று அதிகப்பட்டது முதல் அவர்களுக்கு நல்லாயில்லை தாங்கள் விரும்பியபடிக்கு கருத்தர் அவர்களை வெகுவாய் நடத்துவாராக. அடுத்தவாரத்தில் நான் பாளையங்கோட்டை

வேண்டியதிருக்கு மென்பதில் அவ்விடத்தில் அவர்களுக்குச் சற்று சுகம் அப்படியே இருக்கிறது. தொண்டைப்பு இழுப்புவேலை வேலையாயிருக்கிறது வேர்வை (பசி) இல்லாமை ருசியின்மை ஆயாசம் படபடப்பு யிருக்கிறது. இரட்சகரின் மேலுள்ள விசுவாசம் மாத்திரம் ஐயாவிடம் வெகுபலமாயிருக்கிறது. இதுதான் பெரிய ஆறுதல், அவருக்கு ஸ்தோத்திரம். இவ்விடத்து நாங்கள் தங்களுக்கும் சம்பந்தப்பட்ட அம்மாளவர்களுக்கும் தாழ்மையோடு அநேகவந்தனஞ் சொல்லுகிறோம்.

---

மிகவும் பிரிய தம்பி

திருநெல்வேலியிலிருந்து நமது தம்பிமார் காகிதம் நேற்று வந்ததில்: அன்னம்மாளுக்கு அதிகச் சுகத்தப்பென்றும் தம்பி ஏசுதாசபிள்ளை பிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு அவ்விடத்துக்கு வருவதாகவுங் கண்டிருந்தது. இந்தச்செய்தி யிவ்விடத்து எங்கள் எல்லாருக்கும் மிகுந்த கவலையையுங் கலக்கத்தையும் ஆயாசத்தையுங் கொடுத்துக்கொண்டிருக்கிறது. நாங்கள் ஆண்டவரைப் பார்த்து மிகுந்த கண்ணீரோடுஞ் சுகத்துக்காக விருப்பத்தோடும் மன்றாடிக்கொண்டிருக்கிறோம். அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்தவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாகவு முள்ளது. இதுமட்டும் நாம் கேட்ட மன்றாட்டுகளுக்கு இரக்கஞ்செய்திருக்கிறார், இனிமேலும் அப்படியே இரங்குவார். இரங்கவே வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். இப்போதுள்ள சுகமெப்படி யென்று தெரியவில்லை. மனதுக்குண்டாயிருக்கும் வருத்தங் கொஞ்சமல்ல. விசுவாசத்துடனே ஆண்டவரிடத்திற் கேட்பதில் மாத்திரம் மனஞ்செலுத்தி அவரையே நோக்கிக்கொண்டிருக்கிறோம். அவர் ம்முநம்பிக்கையை வெட்கப்படுத்தார் என்றுள்ள நம்பிக்கையுண்டாயிருந்த போதிலும் மாமிச பெலவீனம் மிகுந்த தத்தளிப்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அவருடைய சித்தமான நித்தம் நல்ல செய்தி கேட்க அருள் செய்வதாக. அவரே நமது தஞ்சம்.

இவ்விடத்து காரியங்களைப்பற்றி இப்போது ஒன்றுஞ் சொல்லத் தேவையில்லை. சுகசெய்திதான். நமதய்யாவுடைய சுகந்தான் இப்போது நிலவரமாய் நன்றாயில்லை. கருத்தர் இம்மட்டுஞ் சீவன் தந்திருக்கிறதுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

இந்தச்சமயத்தில் அவ்விடத்துச்செய்தி நமதய்யாவுக்கு பெலவீனத்திலும் சுகவீனத்திலும் அதிகவருத்தங் கொடுக்கிறதாயிருக்கிறது. ஆகையினால்,



இப்போது அன்னம்மாளுடைய சுகம் எப்படி யென்று திட்டமாய் சுருக்கத்திலாவது தெரிவிக்கவும். அவசரத்தில் முடிக்கிறேன்.

1874-ம் வருஷம் ஜுன்மீ உ௫-உ — இப்படிக்கு
செல்லம்மாள்புரம் — மிகவும் பிரியதம்பி
உனது நன்மையை விரும்புகிற
M. Savarirayan

[சேர்மாதேவிக்கடுத்த கூனியூரிலிருக்கும் உபதேசியார் ஈ-ஈ-ஸ்ரீ J. ஞானப்பிரகாசம்பிள்ளை யவர்களுக்கு வருவது.]

---

இதற்கு இருபத்தைந்து வருஷத்துக்கு முன் அதாவது 1849-ம் வருஷத்தில் மூத்த அக்காள் இருபத்தெட்டு வயசில் ஆறு குழந்தைகளை விட்டு மரணமானாள். ஐயா 1836-ம் வருஷம் சுவிசேஷமார்க்கத்தைச் சேர்ந்த பின்பு அக்காளிறந்த இந்தத்துக்கம்போல பெரியதுக்கம் வேறில்லை. பின் எக்காலமும் இது ஐயாவுக்கு நினைவிலும் கனவிலும் ஆறாத் துயரமாயிருந்தது. அக்காள் பிள்ளைகள் பின் நடபடிக்கைகளும் அத்தான் வீட்டு நடபடிக்கைகளும் இந்தத்துயரத்தை பெருப்பித்துக்கொண்டே வந்தது. ஆனாலும் இந்த ஒரே ஒரு மரணந்தவிர இந்த 74-ம் வருஷம் வரை ஐயாவுடைய குடும்பத்தை யாதொரு விக்கினமின்றி ஆண்டவர் காப்பாற்றி வந்தார். மாகில்லாக் குழந்தைகள் சிலது இரண்டொன்று அங்கங்கே கர்த்தரெடுத்துக்கொண்டது தவிர மரண மென்பதில்லை.

தங்களைவிட்டுப் பலவிடங்களில் பிரிந்து போயிருந்த தங்கள் மக்கள் மருமக்கள் பேரன் பேத்திகளைக் குறித்து ஓயாத விசாரமும் என்னமுமாய் ஆண்டவரை நோக்கிக் கெஞ்சிக்கொண்டிருப்பார்கள். ஒரு சின்ன வியாதி யென்று கேட்டாலும் அம்மையினுடைய புலம்பலுஞ் சொல்ல முடியாது. ஐயாவுக்கு இயல்பாகவே எந்தமனுஷனானாலும் எந்த உயிரானாலும் இரக்கமும் உருக்கமும் பட்சமு மிகுதியுமுண்டு. அப்படியானால் தங்கள் வயிற்றுப்பிள்ளைகளைக் குறித்துக் கேட்பானேன். பிள்ளைகள் மக்கள் மருமக்களுக்கு என்னவியாதி வந்தாலும் சொல்லமுடியாத கவலையும் பிரயாசமுமாய் எந்தக்கஷ்டத்திலும் எந்தக்கடன் பட்டும் பார்த்து உயிரைக்காப் பாற்றப் பார்ப்பார்கள். அவர்கள் மன்றாட்டுகளை ஆண்டவர் இரங்கிக் கேட்டு வந்தார்.

இன்பமானாலும் துன்பமானாலும் சரி: எதிலும் தெய்வத்தை மறந்தவர்களல்ல. எப்போதும் எதிலும் கர்த்தரை முன் வைத்து நடந்தவர்கள். சகலத்தி

நம் தெய்வசித்தமென்றும் கர்த்தர் சகலத்தையும் நன்மைக்கென்று செய்வாரென்றுஞ் சொல்லி, அவரின் நடத்துதலுக்குத் தன்னை ஒப்புவித்து நடந்தவர்கள். "வல்லவா உமது சித்தம்" என்பது அவர்கள் வாயில் வருகிற வார்த்தைகளிலொன்று. சந்தோஷமான காலங்களில் தன்னை மறந்து களிப்புக்கொண்டதுமில்லை. துன்பமானகாலத்தில் சலிப்படைந்து தளர்ந்து போனதுமில்லை. தங்கள் மக்களெல்லாருக்கும் வயசு வந்த தங்கள் பேரன் பேத்திகளெல்லாருக்கும் அவரவர்களுக்குத் தங்கள் கடமையின்படி செய்யவேண்டியதெல்லாம் செய்தாயிற்று, அவர்களெல்லாரும் வீடுங்குடியுமானார்களென்பதாய் ஆறுதலாயிருக்கத் தகும் இந்த அந்தியகோத்தில், துன்பத்தைத் தாங்கிக் கொள்ளக் கூடாத இந்த மிகுந்த பெலவீன சமயத்தில், ஜீவகாலமெல்லாம் அனேக துன்பத்தை யனுபவித்த இவர்களை, இன்றொரு கடைசிப் புடம்போட ஆண்டவர் சித்தமானார்.

ஐயாவின் இந்தக்கடைசி நாட்களில் ஆண்டவருக்கு முன்பாக விரிக்கப்பட்டிருந்த அவர்களுடைய கை அயர்ந்து போயிற்று- உயர்த்தப்பட்டிருந்த அவர்களுடைய கை தளர்ந்து போயிற்று- அவர்களுடைய மன்றாட்டுச் செல்லுங்காலம் இதுவரை தானென்று ஆண்டவர் தவணை குறித்திருந்தாரோ.

கூனியூரில் மதினிக்கு மிகுந்த வருத்தமென்று செய்திவந்தது ஐயாவுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. கூனியூரில் அன்றுடசிக்கும் சௌக்கியத்தப்பென்று சொல்லப்பட்டிருந்தது. ஜூன் 28-உ சனிக்கிழமை சாயங்காலம் 4½-மணிக்கு மதினி மரணமானார்கள். ஞாயிறு விடியுமுன் அடக்கம். 35-வயசு, ஐந்து குழந்தைகள். அந்த செய்தி வந்தபோது மிகுந்த பிரயாசத்தோடு அதை ஐயாவுக்கு சிலநாளாய் மறைத்து வைத்தார்கள். அழுகையும் துக்கங் கொண்டாடுதலும் ஐயாவுக்குக் கேட்கப்படாதென்று மறைவாய் நடந்தது. யாரோ வந்த சனம் தெரியாத்தனமாய் ஒருநாள் ஐயாவிடத்தில் போய் துட்டி கேட்டதில் ஐயா அறிந்து கொண்டார்கள். ஐயா பிரம்பை ஊணிக்கொண்டு எழுந்து போய் அம்மையிடத்தில் போய்: கூனியூர் அன்னம்மை இறந்து போனாளாமே யென்றார்களாம். [அந்தப் பிரம்பு இப்போது என்னிடத்தி லிருக்கிறது. 16-2-1902. J. D. S.] பின்னும்: யார் யார் பிள்ளைகளை யெல்லாம் வளர்த்தோமே, என் பிள்ளைகள் எப்படி இருக்குதோ என்றார்கள். அப்புறம் தங்கள் கட்டிலுக்கு வந்தார்கள். இந்தச்செய்தியினுண்டான துக்கமும் அதிர்ச்சியும் அவர்கள் உயிரும் உடலும் பொருந்தியிருக்கக்கூடிய நாட்களைச் சீக்கிரமாய் குறைத்துவிட்டது. இருதயத்தை





ஆண்டவரிடத்தில் ஏறெடுத்து ஒப்புவித்து விட்டு அவருடைய வருகைக்கு அமர்ந்து காத்திருந்தார்கள். சந்திக்கும் காலம் சமீபமாயிற்று.

---

Nallammalpuram
17th July 1874

My dear Son,

இவிடம் யாவருந் தேவகிருபையால் சுகம். எனக்குத்தாவிலை. சேற்றும் வெறுந்தண்ணீர் விட்டிருக்கிறது. ஐயா அவர்களுக்கு இருக்கிறபடியே யிருக்கிறது. ஒருநாள் இளக்கு, ஒருநாள் வருத்தம், காலை ஒரு மாதிரி, இராத்திரி ஒரு மாதிரி, இப்படிப் பலவிதமாயிருக்கிறது. சுகமுஞ் சுகத்தப்புந்தான். கருத்தர் குறித்தநேரமட்டும் இப்படியே இருக்கும். கூனியூர்த்தம்பியுடைய சரீர சுகந்தெரியவில்லை. நானும் வந்தபின்பு இதுவரையும் எழுதவில்லை. மனச்சுகமுஞ் சரீரசுகமும் எனக்கு யில்லை. இது நிற்க.

உன்தாயார் ஜூலையி சங்கம் முடிந்தவுடனே தூத்துக்குடிக்கு வரும்படி மரியவியாகுலத்துடன் பலதும் பேசிக்கொண்டதில்ச் சொல்லியிருந்தாளாம். இப்போது உன் தாயார் புறப்பட்டு வரவேண்டுமென்றிருக்கிறாள். மரியவியாகுலத்துடைய சுகசீர், நாசமின்மைதென்று தெரியவில்லை. எப்படியும் புறப்பட்டு வரவேண்டியது தான். பாளையங்கோட்டை மார்க்கமாய் வந்து தவால்வண்டி வழியாய் வரலாமா என்பது ஒரு யோசனை. நேர்வழியாயிந்த மார்க்கமாய் வரலாம். ஆனாலும் கூனியூர்த்தம்பி திருநெல்வேலியி லிருப்பதினாலே அவனையும் பார்த்துக்கொண்டு வரலாமா என்பது கருத்து. எவ்விதமும் துரிதமாய்ப் புறப்பட்டு வருவாள். எட்வார்ட் ஐயா கூடவரவேண்டு மென்கிறான். நான் வேண்டாம், படித்துக்கொண்டிருக்கட்டும் என்கிறேன். உன் தாயாருக்குத் துணைக்கு சாமுவேல்ப் பிள்ளையைக் கூட அனுப்பலா மென்று யோசனை. இது காரியங்களுக்கும் பின்னும் ஆகவேண்டிய காரியங்களுக்கும் எழுதி யனுப்பிவிக்கவும். வருகிற வாரம் புறப்பட யோசித்திருக்கிறது.

இவ்விடத்து நாங்கள் உங்களிருவருக்கும் அனேக வாழ்த்துதலும் பிள்ளைகளுக்கு முத்தியும் அனுப்புகிறோம். மதுர சஞ்சீவி, மரியம்மாள் எங்களை நினைக்கிறார்களா, என்ன சொல்லுவார்கள். கண்டமட்டுந்தானே. முத்தமரியவியாகுலஞ் சுவிசேஷபுரத்துக்கு மாப்பிள்ளையின் வரவழைப்பாற் போயிருக்கிறாள். இதின் விவரம் மாப்பிள்ளை யாக்கோபுபிள்ளை மூலமாய் விசாரித்துக்கொள்ளவும்.

யோசேப்பிள்ளை திருவனந்தபுரத்தில் ஏதோ ஒரு வேலையிருக்கிற தென்று போக யோசித்திருக்கிறார். அவர் இஷ்டம்போலாகட்டுமென்று சொல்லி விட்டேன். எங்கேயாவது போய்ச் சேமமாய்ப் பிழைத்தால் நல்லது தான். என் மனதுக்கு ஒன்றும் நன்றாய்ப் படவில்லை. பார்ப்போம்.

Yours sincerely
M. Savarirayan.

---

Tinnevelly.
25th July 1874

Revd. and Dear Brother,

யாவருக் தேவகிருபையாற் சேமம். அவ்விடத்தில் கதய்யா அவர்கள் முதலிய யாவருடைய சுகக்ஷேமத்தைக்குறித்து அறிய வாஞ்சிக்கிறோம். இவ்விடத்தில் காற்றின் தன்மையால் சனங்களுக்குக் கண்வலி காமுதலிய உபத்திரவங்கள். இங்கே நம்முடையவீட்டில் தாவீதுக்குச் சுரம், எலிசபேத்து வீட்டில் கைக்குழந்தைக்குக் கண்வலி.

இந்தவாரத்தில் கொழும்பிலிருந்து கனம் ரோலண்ட்ஸ் ஐயர் வந்தவருக்கு ஆண் பெண் போர்டிங் பள்ளிக்கூடங்களுக்குத் தகுந்த 2-ஆளும் கொழும்பிலிருக்குஞ் சுதேச சபைக்கு ஒரு பாஸ்டரும் வேண்டியது.

ஆண் போர்டிங் பள்ளிக்கூடத்துக்கு நம்முடைய எலிசபேத்து மாப்பிள்ளை சம்மதித்திருக்கிறார்கள், சம்பளம் ரூ 40, வீடுஞ்சும்மா.

பாஸ்டர் வேலைக்கு என்னைக்கூப்பிட்டுப் பேசியிருக்கிறார். சம்மதமானால் ஆகஸ்டு 1- 2- தேதிக்குள் தமக்குக் காயிதமனுப்பச் சொல்லியிருக்கிறார். கனம் சார்ஜென்றையரவர்கள் இவ்விடத்தில் ரூ 30-கிடைக்கிறதே, அவ்விடத்தில் ரூ 50-க்கு அதிகங் கிடையாது, ஆவதால் நன்றாயோசித்துக்கொள் ளென்று சொல்லிவிட்டுக் குற்றாலத்துக்குப் போயிருக்கிறார்கள் சம்மதமில்லாதது போல. தம்பி தேவசகாயம் ரூ 60-ம் வீடும் கொடுத்தால் சம்மதிக்கலாமென்று சொல்லுகிறான்.

கொழும்பு உள்ளூரில்த்தான் அலுவல். றெ. ரோலண்ஸ் ஐயர் கொழும்புக்கு ஏற்பட்ட சம்பளம் ரூ 50- கண்டிக்குத்தான் ரூ 60- என்றும் உன் விலைபத்துக்கு வேணுமானால் ரூ 50- ஒரு வீட்டு வாடகையும் கொடுக்கலாம்படிச் சர்ச் கவுன்சில் இல் பேசுகிறேன், இவ்வளவுதான் செய்யத்தக்க தென்பதாகச் சொல்லுகிறார். பாஸ்டர்களுக்கு ரூ 50- தானும், வீடு அவர்களைப் போறுத்ததுதானும். காரியமிப்படி யிருக்கிறதால் என்னயோசனை செய்கிறது, என்ன





மதில் எழுதுகிறதென்று சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கிறேன். தங்கள் ஆலோசனைக்குப் பிரார்த்திக்கிறேன். காரியங்களிப்படி யிருப்பதால் இவ்விடத்துக் கணக்குகளை முக்கியமாய் பள்ளிக்கூடத்துச் சம்பளக்கணக்கை வள்ளிசாய் முடித்துத் தீரவேண்டியதா யிருப்பதால் தாங்கள் தயவுசெய்து பணமனுப்பக் கூடுமானால் பெரிய உபகாரமாயிருக்கும். பதிலுக்கு ஆவலாய் மன்றுகிறேன்.

இப்படிக்கு
ஊழியன்
ஏசுதாசன்

---

மக-ா-ா மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள் சமுகத்துக்கு அடியேன் J. ஞானப்பிரகாசம் ஆண்டவருக்குத் தோத்திரஞ் செய்தெழுதிக் கொண்ட தாழ்மையான விண்ணப்பம்.

கர்த்தருடைய இரக்கத்தினால் இருக்கிறேன். பிள்ளைகள் சுகமே யிருக்கிறார்கள். தங்களுக்கு அடிக்கடி நல்ல சுகமில்லாதிருக்கிறது கேள்விப்பட்டேன். ஞானமும் இரக்கமு முள்ள தேவன் இன்னும் நல்ல சுகத்தைத் தங்களுக்குத் தந்தருள விரும்பி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் இப்போது தம்பி தேவசகாயம்பிள்ளை வீட்டிலிருக்கிறேன். நான் இந்தவாரத்தில் மேற்கே மார்வளையும் போய்ச் சிலநாளிருந்துவிட்டு கனம் அய்யரவர்களுக்குக் காயிதம் எழுதிப்போட்டு அப்புறம் நல்லம்மாள்புரம் வரையும் வந்து பார்க்கக் கர்த்தருக்குள் விருப்பமாயிருக்கிறேன். நான் இப்போது அவ்விடத்துக்கு அவ்வளவு தூரம் வர சரியான சுகமும் பெலனுமில்லை. முந்தி இருந்ததுக்கு இப்போது சுகம், ஆகையால் இன்னும் கர்த்தர் வேண்டிய சுகத்தைத் தருவாரென்று நம்பி யிருக்கிறேன். நான் அபாத்திரனாய்ப் போகாதபடிக்கும் கர்த்தருடைய கிருபையை நன்றாய்ப் பிரயோகிக்கும் படிக்கும் பாவியாகிய என்மேல் அவர் கிருபையுள்ளவரா யிருக்கிறது எனக்குத் தெரியும். அதற்காக அவருக்குத் தோத்திரஞ் செலுத்துகிறதற்குக் கடன்பட்டிருக்கிறேன்.

கர்த்தர் பெணக்குச் சுகத்தையும் மனத்தயிரியத்தையும் தங்களுக்கும் தாயாரவர்களுக்கும் சகோதரருக்கும் பிள்ளைகளுக்கும் மதினியார் கொழுந்திகளுக்கும் நல்லசுகத்தையும் ஆயுசையும் தந்தருளவேண்டும் என்பதுதான் என் ஆசை. அது எனக்கு ஆறுதலாயிருக்கும், நான் இப்போது மனக்காயப் பட்டவனா யிருக்கிறேன். என்னையும் எல்லாவற்றையும் அவர் அறிவார்.

நான் தேவகிருபையை அதிகமாய் பெற்றுக்கொள்ள தங்களுடைய செபத்தில் வேண்டிக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

கர்த்தர் என்னை நன்மையான வழியில் நடத்த அவர் சித்தத்துக்கு அடங்கி என் காரியங்களை அவருக்கே ஒப்புவித்திருக்கிறேன்.

அன்னம்மாள் கர்த்தருடைய இராட்சியத்தில் சுகமே யிருக்கிறாள்.

அம்மைக்கும் கனம் அன்னாட்சியவர்களுக்கும் பணிவான தோத்திரம்.

1874-ஜிலாய் 28-உ

இப்படிக்குத் தங்களின் பிள்ளை ஊழியன்
ஞானப்பிரகாசம்

(தேவசகாயத்துக்கு)

நல்லம்மாள்புரம்
28th July 1874.

மிகவும் பிரிய தம்பி

அவ்விடம் விட்டு வந்தபின்புள்ள செய்திகள் ஒன்றுந் தெரியாது. எனக்குச் சுகமில்லாதிருந்தது தாவிலை. மதய்யா அவர்களுக்கு உடனே புதன் இரவில் நேரிட்ட ஆபத்துந் தேவ செயலால் மரணமில்லாமல் தீர்ந்தது. பெரிய அற்புதம். அவருக்கு ஸ்தோத்திரம். இதின் விபரம் உங்கள் மதினியிடத்திற் கேட்கத் தலங்கும்.

உங்கள் மதினி நேற்றுப் புறப்பட்டு வருகிறாள். திருநெல்வேலிக்குப் போய் இன்று அல்லது நாளை உங்களிடம் வருவாள், அப்பால் நாத்தக்குடிக்குப் போவாள், வழியில் ஆற்றில் பத்திரமாய்ப் போய்ச்சேரும்படி ஞாபகப்படுத்தவும். எனக்கு அந்தந்த ஆட்கள் குறித்தவிடத்திற் சேரும் வரையும் பயந்தான். கருத்தர் காப்பாற்றுவாராக. கூனியூர்த்தம்பி திருநெல்வேலியிலிருக்கிறானோ, என்னவோ. இவ்விடம் வரையும் வந்த ஐயாவையும் அம்மையையும் பார்த்துப் போகலாம், நான் சொல்லியிருந்தும் வந்தானில்லை.

உனக்கு நீந்தத்தெரியுமா. ஆறுகளில் குளிக்க முழுகப்போனால் வெகு பத்திரமாயிருக்கவும். கச்சேரிக்குப் போவதில் மதியம் தாகத்துக்குச் சாப்பிட ஆற்றுக்குப் போவதிலும் பத்திரமாயிருக்கவும் ஆற்றிலிறங்குவதில்.

மற்றக்காரியங்களுக்கு இனிமேல் எழுதுவேன். இவ்விடத்து நாங்கள் உனக்கும் மிக்கேல் அருளம்மாளுக்கும் அநேக வாழ்த்துதல். பிள்ளைகளுக்கு முத்தி அனுப்புகிறோம்.

Yours sincerely
M. Savarirayan



440

Palamcottah.
29th July 1874.

Revd. and Dear Brother,

ஆண்டவர் இதுவரைக்கும் இவ்விடத்தில் யாவருக்கும் சீவனையும் சுகத்தையும் அருளியிருக்கிறார். சுகத்துடன் மதினியும் எட்வார்டும் மூந்தாம் நாள் இரவு 9-மணிக்கு இவ்விடம் பாளையங்கோட்டைவந்து சேர்ந்தார்கள் நேற்று திருநெல்வேலிக்குப் போனார்கள். இன்று திரும்பி வருவார்கள். கூனியூர் அன்னாட்சியவர்கள் இங்கே பாளையங்கோட்டையில் இருக்கிறார்கள். தங்களுக்கு இதுவரையில் காகிதம் எழுத தவறிப்போய் விட்டது. எழுத விசேஷமும் இல்லை, அதிக சாவகாசமும் இல்லை. கூனியூரில் விளங்கிய தெய்வசித்தத்தினால் மனமும் ஒத்துவராமல் போயிற்று.

சார்ஜென்ட்ஐயரவர்கள் குற்றாலத்துக்குப் போயிருக்கிறார்கள். திரும்பி வர இன்னும் மூன்று வாரம் செல்லும். என்னுடைய அலுவல் நடந்து வருகிறது. ஐயா அவர்களுடைய சுக சவுக்கியத்தை யறிய விரும்புகிறேன். என் பணிவான ஸ்தோத்திரம்.

ஊழியன்
1874-ஜுலை 29-உ
தேவசகாயம்

Tinnevelly, 31st July 1874.

Revd. and Dear Brother.

27-உ அனுப்பிய தங்களின் அன்பான கிருபம் வந்து சேர்ந்தது. சகலத்தையும் கவனித்துக் கொண்டேன். என்னை பொருந்திய மதினியாரவர்கள் 27-உ இரவு பாளையங்கோட்டை வந்துசேர்ந்து மறுநாள் மதியத்துக்கு மேல் இவ்விடம் வந்து உடனே இரவு பாளையங்கோட்டைக்கு திரும்பிப் போயிருக்கிறார்கள். இன்று காலையில் புறப்பட்டு நாத்தக்குடிக்குப் போக யோசித்திருக்கிறார்கள். எச்சரிக்கையாய்ப் போகும்படி சொல்லியிருக்கிறேன். சாந்திச்சேலை ரூ (டுவ-அரைக்கால்) க்கு வாங்கிக் கொடுத்திருக்கிறது. ஆகச் சவளி பாக்கி ரூ ௫டு-க்கு கிட்ட ஆகிறது. கலியாணச்செலவு வாங்கின பாக்கியும்கூட வந்து சேர்வது பிரயாசையாயிருக்கிறது. இனி யென்ன செய்யலாம். என்னுடைய வருத்தத்தினால் காவிதாக் கணக்காய் யோசித்து மனதைத் திடம்பண்ணித் தங்களுக்கும் வருத்தங் கொடுக்கத் துணிந்தேனன்றி தங்கள் வருத்தமும் அவ்விடத்து முட்டுப்பாடும் உணராமல் செய்து

தல்ல. இந்தகாலமுதல் எனக்குச் சென்று சங்கடமு மிருக்கிற நிலைமையாகி விட்டாலும் மற்றும் நம்முடைய வர்களுக்கு இலகுவாகிற காலம் வருவதால் ஆறுதலடைகிறேன்.

நான் கொழும்புக்குப்போக என்னினை முகாந்தரங்களிலொன்று: இவ்விடத்து வருமான மானது இவ்விடத்துச் செலவோடே இருக்கிற கடனை நிவர்த்திக்கப் போதுமானதா யிராததால் கடன் தீரும்படி எத்தேயலது பறக்கவேணு மென்பதுதான். கொழும்புக்குப்போகிற பக்ஷத்திலும் நான் முந்தி யொண்டியாய்ப்போய் இவ்விடத்துக் கடன் யாவையும் தீர்த்த பிற்பாடு தான் பெண்பிள்ளைகளை வரவழைக்கிற தென்கிற நிய்யமம். கொழும்புக்காரி யத்தில் இடமும் அநுவது மாறுகிற தல்லாமல் நிலைமையும் பூரணமாய் மாறுகிறதால்த்தான் மனதுக்கு மிகுந்த அமைவைக் கொடுக்கிறது. வேறு புகலில்லாவிட்டா லிஃதான் தெய்வ அமைப்பென்று போக வேண்டியதிருக்கிறது.

சென்னபட்டணத்துக் கடுத்த பூனைமலைச் சேகரத்தில் கனம் சாமற்றரய்யரவர்களுக்குள் ஒரு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்து வாத்திமை யுழுவல் இருக்கிற தாகவும் அதற்குச் சம்பளம் ரூ 50-போல வென்றுங் கேள்விப்பட்டு இன்று ஒரு காயிதம் அவர்களுக்கு எழுதுகிறேன். தாங்களும் கெ. ஐயரவர்களுக்கு எழுதும்படி பிரார்த்திக்கிறேன். கூனியூரன்றுகூலியவர்கள் ஸேகரமாய் பாளையங்கோட்டையிற் போயிருக்கிறார்கள். தங்கள் காயித்தைக் கொண்டு போய்க் காண்பித்தேன். கனம் ஐயரவர்களிடத்தில் ஒரு விதமாய் முன் சொல்லிப் போட்டதால் இந்த ஞாயிற்றுக்கிழமைக்கு அவ்விடம் கூனியூருக்குப் போய் ஆராதனை நடத்த வேணுமென்றிருக்கிறார்கள். அவர்கள் மனம்போல விடவேண்டியதாயிருக்கிறது. வேறு விசேஷங்களில்லை. யாவருங் க்ஷேமம். மதப்யா அவர்கள் சுகத்தைப்பற்றித்தான் மிகுந்த அலைச்சலும் கவலையுமாயிருக்கிறது. இனித் தெய்வசித்தம் போலாவதாக வென்று நாங் கருத்தருக்குள் தைரியமாயிருக்க அவர்தான் கிருபையும் வசீமும் அநுக்கிரகிக்க வேண்டியது.

இப்படிக்கு
ஊழியன்
ஞேதாசன்

441 ~~442~~



கூனியூர் மதினி இறந்தசெய்தி தெரிந்தது முதல் ஐயாவுடைய சரீரம் க்ஷணத்தில் பலவீனப்பட்டது. குளிர் உடலில் மிகுந்த எய்ப்புண்டாயிற்று. சடுதியாக மூச்சடைப்பு வந்தது. கிலேற்றுமக் கட்டுண்டாகி கபம் தொண்டைப்புறத்தில் நின்றகொண்ட, சுவாசம்விட கொஞ்சமும் கூடாமல் நிட்டு முட்டாகி தேக ஆயாசமும் குறுக்கமும் அதிர்ச்சியு முண்டாய்க் கண்ணும் நிலைக்குத்தி, இப்போதோ இன்னும் சில நிமிஷத்திலோ மரணம் என்று தத்தளிப்புண்டாயிற்று. ஆனாலும் ஐயாவுக்கு அறிவு மயக்கம், புத்தி தடுமாட்டம் இருக்கவில்லை. மூத்த அன்னாச்சியுடைய மறக்கடி சொல்ல முடியாது. ஆனால் ஒருவரும் ஐயாவுக்குமுன் கோழைத்தனம் காண்பியாமல் வெகு தைரியமாய் திடச்சித்தமாய் செய்யவேண்டிய உதவி பக்குவங்கள் எல்லாம் செய்ததுமல்லாமல், அம்மா ஓய்வில்லாமல் ஐயாவைத் தைரியப்படுத்தக் கூடியதும், ஆறுதல்ப்படுத்தக் கூடியதும், விசுவாசத்தை ஸ்திரப்படுத்தக்கூடியதும், கிறிஸ்துவின் கிருபை பாடுகளின் புண்ணியத்தை, கிறிஸ்துவின் அன்பை, கிறிஸ்துவின் இரக்கத்தை நினைப்பூட்டக் கூடியதும் இருதயத்தைக் கர்த்தாவண்டைக்கு சந்தோஷமாய் உயர்த்தக்கூடியதும், மோட்ச மகிமையை விசுவாசக்கண்ணால் தரிசிக்கும்படியாக தூண்டிவிடக் கூடியதுமான சிறு சிறு செபங்கள் மன்றாட்டுகளையும் புத்தி வார்த்தைகளையும் தன் யுத்தியாயும் செபபுஸ்தகத்தில் உள்ள வைகளையும் வேதவாக்கியங்களையும் ஆத்துமத்தைப் பரவசப்படுத்துகிற உருக்கமான மொழிகளை ஐயாவுக்கு ஐயா கேட்டு கவனிக்கும்படி தெளிவாய் திருத்தி திருத்தி சொல்லிக்கொண்டே வந்தாள். வெளியே தூரப்போய் இருதயம் கரைந்துடைந்து அழுது என்னை ஆண்டவர் தாலியும் கழுத்துமாய்ப்போக வைத்தாரில்லையே என்று கலங்கிப் பெருமூச்சு விட்டு மிகுந்த வியாகுலமாய்ப் பாதவித்தாலும் ஐயா முன் வந்த உடனே பேச்சும் தைரியமும் வேறே.

மூத்த அன்னாட்சியுடைய மறக்கடியைப்பார்த்து அவர்களை தனித்து கன்றுப் கோபிப்பாள். இந்தத் தக்கத்திலும் தன் மகன் சகமும் ஆயிசம் எங்கே மோசப்பட்டுப் போமோ வென்று அம்மைக்குப் பயம். அம்மை சொன்ன வார்த்தைகளின் சுருக்கம்: இப்படி நீர் ஆண்டவரோடு போராட்டம் பண்ணிக்கொண்டு ஆண்டவருடைய சித்தத்துக்கு தடைபண்ணுவது போல இருக்கிறது சரியல்ல வென்று அர்க்கோட்டையாரும் கூடச் சொன்னாரே. உம்முடைய சித்தத்தின்படி ஆகட்டும் என்று நாம் ஒப்புக்கொடுக்க வேண்டாமா. ஆண்டவரோடே நாம் போராடக் கூடாது. நீர் மூத்தபிள்ளையா

யிருந்து எல்லாருக்கும் தைரியமும் தேறுதலும் சொல்லவேண்டியதிருக்க இந்தப் பயித்தியகாரப்புத்தி கொண்டிருக்கிறீர். உம்முடைய காரியத்தைப் பார்த்தால் தங்கச்சி தம்பிமார் எல்லாரும் செத்துப்போவார்கள். நீரல்லவா அவர்களுக்கு உயிர் கொடுக்கவேண்டியது. உதட்டுக்கு மன்றாடிப்போய் உன்னை யிருக்கிற பல்லும் போச்சுது என்று ஆவோ. தந்தையைத் தாரும் கர்த்தாவே, கன்னையை தாய் கொண்டுபோகாமல் என்று காத்திருக்கவேண்டியது. இத்தனை நாளும் ஆண்டவர் உமக்கு ஐயாவையும் அம்மாவையும் கொடுத்து வைத்திருந்திருக்கிறாரே. இப்படி எத்தனைபேருக்குண்டு. நீர் சின்னப் பிள்ளையா. உங்கள் போத்தி சாகிறபோது உங்கள் ஐயாவுக்கு வயசென்ன, அவர்களுக்கு அப்போது உலகம் தெரியாதே. ஆண்டவருக்கு நீர் எத்தனை நன்றி யறிதலுள்ளவரா யிருக்கவேண்டும். நீங்கள் பேரன் பேத்தி யெடுத்தாயிற்று. இன்னும் ஐயா ஐயா வென்று சின்னப்பிள்ளை போல கையைப் பிடித்துக்கொண் டிருக்கலாமா. அவர்கள் அனுபவித்த கஷ்டமுந் தீமையும் போதும். அவர்களுடைய பாடுந் துன்பமும் தீரட்டும். ஆண்டவரிடத்தில் அவர்கள் இனி இளைப்பாறப் போகவேண்டும். ஆண்டவரிடத்தில் ஒப்புக் கொடும். ஆண்டவரே உமது சித்தம் என்று சொல்லும். சந்தோஷமாய் ஒப்புக் கொடும். சந்தோஷமாய் ஒப்புக்கொடுக்கிறே னென்று சொல்லும். என்று இப்படி மகனுக்குச் சொன்ன கண்டிப்பும் புத்தி போதனைகளும் அளவு சங்கையில்லை.

கிறிஸ்தவனுடைய பிள்ளைகள் தரிசித்து நடக்கிறவர்களல்ல, விசுவாசித்து நடக்கிறவர்கள். தரிசித்து நடக்கையிலும் மெய்விசுவாசநடக்கை ஆயிரமடங்கு பெலமுள்ளது. அம்மை மகா இளக்கநெஞ்சம். எதற்கும் வெகு இரக்கப்பட்டு உருகுவாள். மக்கள் மனுஷர் யாருக்கும் ஒரு வியாதி நோவென்றால் சரீரப்பிரயாசம் மனவருத்தம் சொல்லமுடியாது. பாடு பார்க்கிறதற்கு அம்மை மாத்திரம் இருப்பாளானால் ஒரு பிள்ளையும் சாகமாட்டாதென்று என்னெண்ணமாயிருந்ததுண்டு. ஆதலால் யாருக்காவது வியாதியென்றால் அம்மையை வரும்படி சொல்லியனுப்புவது வழக்கம். (பவுனுக்கு வியாதியாயிருந்தபோது அப்படியே நான் சொல்லியனுப்பினேன். இளையமதினிக்கு வியாதியாயிருக்கிற போது அன்றுக்கு ஏகதாச பிள்ளையவர்கள் அப்படியே சொல்லியனுப்பி அம்மையை வரவழைத்தார்கள்.)

காரியம் மீறிப் போயிற்றென்று கண்டாளானால் கோழையும் கலக்கமுமான அம்மையினுடைய விசுவாசமும் அறிவும் தைரியமும் அப்போதான்



வெளுவாய் காணும். இவ்வுலகத்தின் துன்பம் எந்த வியாகுலத்தில் முடிகிறதோ அந்த வியாகுலத்திலேயே மெய் விசுவாசிகளின் அனந்த பாக்கியம் ஆரம்பிக்கிறது என்பது அம்மைக்கு கண்கண்ட சத்தியத்திலும் அதிகம். ஆகையால் அதற்கு ஆயத்தமாய் இருதயம் அங்கே நோக்கும்படியாக, சாத்தான் சோதனையை வெல்லும்படியாக, அம்மையுடைய பேச்சும் பிரயாசமும் அந்தக்கடைசி நேரங்களில் இருக்கும். மரண சமயத்தில் சாத்தானுடைய கடுமையான கடைசிச் சோதனை யுண்டாகுமென்று அம்மை சொல்லுவாள். அம்மை ஐயா பக்கத்திலிருந்து சொன்ன செப மொழிகளும் விசுவாச வசனங்களும் தைரிய வார்த்தைகளும் ஐயாவுக்கு சொல்லமுடியாத ஆறுதலை உண்டாக்கிற்று. இந்த நாளிலும் மரணத்தினின்று உயிர் தப்பினது மகா அற்புதம். களைப்பும் மயக்கமும் தணிந்து வாய் திறந்து பேசக்கூடிய நிலைமைக்கு வந்த பின்பு ஐயா முதல் முதலாகச் சொன்ன வார்த்தை அம்மையைப் பார்த்து: என் அவஸ்தை நேரத்தில் நல்லவார்த்தை கேட்க ஆசையிருந்தது. இந்த அவஸ்தையில் யாராவது சொல்லமாட்டார்களா என்று நினைத்தேன். நீ சொல்லுவாயென்று நினைத்தேன். நீயும் உடனே சொன்னாய். என் மனசுக்கு ஆறுதலாயிருக்கிறது என்றார்கள்.

கனம் ஆர்க்கோட்டையப்பரவர்கள் செய்தி கேட்டபோது: தகப்பனார் மோட்ச வாசலில் போயிருந்தவரை மதுரேந்திரம் ஐயர் திரும்பவும் இழுத்துக்கொண்டு வந்து வைத்திருக்கிறார் என்று சொன்னார்களாம்.

---

ஐயா இப்போ எழுமாசமாய் வியாதிப்படுக்கையி லிருக்கிறார்கள். இதில் நாலு தடவைகளில் இப்போதான் மரணமென்று நினைக்கும்படியாக மிகுந்த ஆபத்து நேரிட்டது.

1-வது ஜனவரிமீ 18-உ,
2-வது ஜனவரிமீ 29-உ,
3-வது ஏப்பிரல்மீ 2-உ,
4-வது ஜூலைமீ 22-உ,

இந்த ஒவ்வொரு தரத்தினின்றும் இரட்சித்து பின்னும் உயிரோடே வைத்தார் ஆண்டவர். ஏன். ஐயாவுக்காக வல்ல, அவர்கள் பிள்ளைகள் பேரில் வைத்த இரக்கத்தினால் தான். மக்கள் பக்குவப்படவும் ஆறுதல்ப் படவும் அவர்களுக்கு சமயமும் காரணமும் இருக்கும்படியாகவே இவ்வளவு நாளும் கிருபை பாராட்டி வந்தார்.

லோகப்பிரகாரமாய் ஏழைகளாய் கஷ்டமாய் கவலையாய்த் துன்பமாய் இந்த வருத்தமான லோகத்தில் ஜீவனம் பண்ணிவந்தாலும் ஐயாவையும் அம்மாவையும் அவர்கள் பிள்ளைகளையும் நினைக்கும்போது, மோசே இஸ்ரவேலைப்பார்த்துச் சொன்னது போல:— இஸ்ரவேலே, நீ பாக்கியவான். கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார். உனக்கு சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே- என்று ஆண்டவரை ஸ்தோத்தரிக்கும் புத்தி எனக்கு சிலவேளை வருகிறதுண்டு.

முன்னொரு இடத்தில் சொல்லியிருக்கிறது போல ஐயாவுடைய தகப்பனார் வம்சத்திலாவது தாயார் வம்சத்திலாவது ஐயாவுடைய வயசுக்கு இருந்தவர்கள் இரண்டு அல்லது மூன்று பேரிருக்கலாம். மற்றவர்கள் அநேகர் மத்தியப்பிராயத்தில் இறந்து போயிருக்கிறார்கள். ஐயாவும் சுகதேகியு மல்ல. பலதேகியு மல்ல ஆனாலும் அதினிமித்தம் அவர்கள் தங்கள் பாடும் பிரயாசமும் குறைத்ததில்லை.

ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்த ஒரு விசேஷித்த சிறப்பு வரமாவது கிரமம் என்பது. எதெதில் கிரமம், என்னென்ன வகைக் கிரமம் என்று எழுத ஆரம்பித்தால் முடியாது. எல்லாங் கிரமம்.

ஐயாவுடைய கிரமமான ஒழுங்கு ஏற்பாட்டுக்கு இந்த வியாதிக்காலத்தில் எங்களுக்கு வெளிப்பட்ட ஒரு திருஷ்டாந்தம் இங்கே சொல்லத்தகும்.

ஐயா ஜெபத்தில் தரித்திருக்கிறவர்களென்பது எங்களுக்குத் தெரியும். ஆனாலும் திரிகால ஜெபமென்று ஏற்பாடு ஒன்று வைத்திருந்தார்களென்பது எங்களுக்குத் தெரியாதிருந்தது. வியாதியாய்க் கிடையாய் இருக்கிற இக்காலத்தில் சிலநாட்களில் பொழுதடைந்து விட்டதா- இப்போது மணியாயிருக்குமா- என்று விசாரிப்பார்கள். ரோமான் மார்க்கத்தில் பலபலவென்று விடிகிறபோது ஜனங்கள் எங்கேயிருக்கிறவர்களும் எழுந்து தனிச்செபம் பண்ணும்படியாக மணியடிக்கப்படும். அப்படியே மத்தியானம் பதினொரு நாழிகையிலும் அப்புறம் பொழுதடைந்து மாலை மயங்குகிற போதும் மணியடிக்கப்படும்- மணிச்சத்தம் கேட்கிற ஜனங்கள் எங்கேயிருந்தாலும் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும் உடனே தாங்கள் படித்த மந்திரத்தைச் சொல்லுவார்கள். அத்தேனர் அறியப்படாத தேவனென்று வணங்கின கதை போல இந்தப்பேதை ஜனங்கள் தங்களைக் கிறிஸ்தவர்களென்றாலும் கிறிஸ்துவினாலுண்டான சம்பூரண இரட்சிப்பை அறியார்கள். ஷெ திரிகாலசெபத்தை, மற்றும் அவர்கள் விசேஷ ஜெபங்களை யெல்லாம் சிருஷ்டிகளுக்கல்ல,



சிருஷ்டிகளாகிய வானசேனைகளுக்கும் மோட்ச வாசிகளுக்கும் ஒப்புக்கொடுக்கிறார்கள். ஐயா சுவிசேஷமார்க்கத்தில் சேர்ந்து கிறிஸ்துவின் வசனத்தினால் பிரகாசிக்கப்பட்ட பின்பு அந்த ஜெப ஏற்பாட்டை தங்கள் ஒன்றான மீட்பரும் ஒன்றான மத்தியஸ்தருமாகிய கிறிஸ்து இயேசுவுக்கு திரிகாலந் தவறாமல் ஒப்புவித்து வந்தார்கள். இந்தக்காரியம் எங்களுக்கு இந்தக்கடைசிக் காலத்தில் தான் தெரிந்தது.

ஆத்தும விஷயங்களில், அலுவல் விஷயங்களில் எப்படியோ, அப்படியே சரீர காரியங்களிலும் எல்லாம் கிரமமா யிருக்கும்.

ஐயா முதல் முதல் மிஷியோனில் உபதேசி யானபோது காலரூபாய் சம்பளம், தான் சிறுபிள்ளையாயிருக்கையில் அதிந்தகாலத்தில் ரூ 5-8-0-சம்பளம். அந்தச்சங்கம் இந்தச்சங்கம் நற்போதகம் என்று பிடித்தம் போக ரூபாய் ஐந்துபோல ஐயா கையில் கிடைக்கும். பெரிய சமுசாரத்தில் இதைக் கொண்டு என்ன மேன்மையான திருப்திகரமான சாப்பாடு கிடைக்கக் கூடியது. காலமே கோவிலுக்குப்போய் வந்த பின்பு கிணற்றுக்குப்போய் வேட்டி துவைத்து ஸ்நானஞ்செய்து வீட்டுக்கு வருவார்கள். அப்புறம் பழயது சாப்பிடுவார்கள். துவையலாவது சுண்டக்கறியாவது மறுமாத்தி யிருக்கும். அம்மை வைத்திருக்கிற பழயது திவ்வியமான மணமாயிருக்கும். அந்த கட்டிப் பழயதின் அழகு என்ன சொல்ல. சனிக்கிழமை தலைமுழுக்கன்றைக் குமாத்திரம் ஐயாவுக்கு வெந்நீர் ஸ்நானம். மத்தியானம் தாகத்துக்கு ஏதாவது சாப்பிடுகிறது அபூர்வம். அப்புறம் இருட்டிக் கோவிலுக்குப் போய் வந்த பின் சுபோசனம். இதுதான் ஏற்பாடு. இப்படியே மற்றும் சரீரத்தைக் குறித்த காரியங்களிலும் எல்லாம் கிரமமாய்த் திட்டவட்டமா யிருக்கும். பசித்துப் பட்டினியாயிருந்து சாப்பிட்டவர்களா யிருக்குமே யன்றி திருப்தி மேல் திருப்திக்கு சாப்பிட்டவர்களா யிருந்திருக்க மாட்டார்கள். ஒரு தடவை நன்னெறியற்ற சீமானொருவர் ஒருவரிடத்தில் ஒரு ரூபாய்- கடன் கேட்டார்கள். அந்த சீமான் ஐயாவைப்பார்த்துப் பரியாசமாய்; உங்கள் தரித்திரம் எந்த ரூ என்ன மீ எந்தத்தேதியில் தீருமென்று சொல்வீர்களானால் தருகிறேன் என்றார். அதற்கு ஐயா, எனக்கு ஆண்டவர் தரித்திரத்தைக் கொடாதிருந்தாரானால் நன்மார்க்கத்தைக் கெட்டுப்போயிருப்பேன் என்று அந்தச் சீமானுக்குத் தைக்கும்படியாகச் சொன்னார்கள். (கானக் காண்க.) இப்படிப்பட்ட கிரமமான நடத்தையை அருளிய கர்த்தர் அதின் மூலமாய் இவ்வளவு காலம் அவர்களுக்கு ஆயுசையும் கட்டளையிட்டார்;

சடுதியான மரணம் நல்ல தல்ல வென்பது எமது திருச்சபையின் அபிப்பிராயம். ஐயாவுக்கு இந்த எண்ணம் பலமாயுண்டு. இதைப்பற்றி ஐயா எங்களிடம் பேசியிருப்பது மல்லாமல் அவர்கள் விசேஷித்து செபிக்கிறது முண்டு. லித்தானியாவில் அவர்கள் உவந்து செபிக்கிற செபங்களில் இது ஒன்று. நல்ல மரணம் தரவேண்டும் என்ற பாட்டு ஐயா அடிக்கடி படிப்பார்கள். இந்தப்பாட்டு ஐயாவுடைய சரித்திரப் புஸ்தகத்தில் அச்சடித்திருக்கிறேன். தன்பாவத்தி னிமித்தந்தான் தனக்குத் தண்டனையாக தன் கண்ணிற் காணாமல் தன் தகப்பனை பேதியினால் சுவாமி சடுதியில் எடுத்துக் கொண்டார் என்பதாக ஒரு இடத்தில் ஐயா எழுதி வைத்திருக்கிறார்கள். பேதி முதலிய அசுப்பான வியாதியினின்று காப்பாற்றப்பட வேண்டுமென்பது ஐயாவுடைய பிரார்த்தனை. ஐயாவுடைய தகப்பனார் தாயார் சகோதரர் சகோதரிகள் எல்லாரும் பேதியினாலேதான் மரணமானார்கள். சடுதி மரணத்தி னின்று இரட்சிக்க வேணுமென்ற ஐயாவுடைய முக்கிய விண்ணப்பத்தின் படியே: போதும், போதும், ஆண்டவரே, உமது இரட்சிப்பை என் கண்கள் கண்டது, இப்போது உமது அடியானை சமாதானத்தோடு அனுப்பி விடும் என்று சொல்லுமட்டுக்கும் ஆண்டவர் அவர்களுக்கு ஆயுசைக் கொடுத்து வைத்தார்,

ஐயாவுடைய பிள்ளைகளாகிய எங்களுக்கு ஆண்டவர் பாராட்டிய கிருபை எல்லாவற்றிலும் மேலானது. ஐயாவுக்கு சவுக்கியத்தப்பு நேரிட்டது. இரண்டொருநாள் வருத்தமா யிருந்தார்கள். இறந்து போனார்கள் என்ற செய்தி எங்களுக்கு வருமானால், எங்கள் உயிர் எங்களிடத்தில் இருக்குமா. அப்புறம் எங்களுக்கு நினைவேது தப்பேது. எங்கள் துக்கம் எப்படி யாறும், எப்படி யாறும். இப்படி எழுமாசமாய்ப் போட்டுப்பார்த்தும் ஐயா இறந்த போது மண்டையை அல்ல இருதயத்தை உடைத்ததும் உயிரைவிட்டு இழவு கொண்டாடினதும் அப்போது கண்டவர்களுக்குத்தான் தெரியலாம். அடக்கத்துக்குமுன் வந்து சேரக்கூடாமல் பிந்தி வந்த அம்பாசமுத்திரத் தன்னாச்சி யவர்களும் கூனியூரன்னாச்சி யவர்களும் நேரே வீட்டுக்கு வராமல் கல்லறை மண்ணிற்போய் விழுந்து புரண்டு மயங்கிக் கிடந்தவர்களை கண்டு பிடித்து இழுத்து வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். தகப்பனற்ற பிள்ளையாய்ப் போனேனே யென்று எழுத்திலும் பேச்சிலும் மூத்த அன்னாச்சியுடைய புலப்பம் நெஞ்சிற் பாய்கிறதா யிருந்தது. இவர்கள் கொஞ்சவயசுக் காரரா, அறி வற்றவர்களா. குருக்களும் போதகர்களும் பிரசங்கிகளுமானவர்கள். இப்போது அனேக வருஷங்களானபோதிலும்



மக்கள் தங்கள் ஆயுசுபரியந்தமும் ஐயாவைக்குறித்து நினையாத பேசாத நேரமும் நாளும் உண்டா. ஒரு நன்மை ஒரு ஆறுதலான சங்கதி நேரிடும் போது, ஒரு ஆலோசனை ஒரு தைரியம் வேண்டியிருக்கும்போது, ஐயா இப்போ இருந்தார்களில்லையே யென்று இன்றைக்கும் மனம் உடைகிறது. இப்படிப்பட்ட பயித்தியங்கொண்ட பிள்ளைகளுடைய பேதமைக்கு ஆண்டவர் இரங்கி; பாருங்கள், உங்கள் தகப்பனை கண்டுயப் பாருங்கள், உங்கள், ஆசைதீரப் பாருங்கள், உங்களாலான பக்குவங்களெல்லாம் செய்யுங்கள் உங்கள் ஆறுதலுக்கு வேண்டியதெல்லாம் நான் உங்களுக்கு செய்கிறேன் என்று ஆண்டவர் எழுமாசமாய் எங்களைப் பக்குவப்படுத்தினார்.

---

× ஜூலை 7-உ வரைக்கும் ஐயாவுக்கு சுகம் போலிருந்தது.

8-உ சனிக்கிழமை யன்று மறுநாள் கர்த்தருடைய இராப்போசனமானதால் கோவிலுக்குப் போக விரும்பினார்கள். சவரப்பண்ணிக் கொண்டார்கள். ஸ்நானம் பண்ணியு மிருக்கலாம். அன்றையத்தினம் மத்தியானத்துக்குமேல் இடதுகை பாரமாகத் தோன்றிற்று. இரவில் வாடை அதிகமா யிருந்தது. இன்று மரண நிழலின் பள்ளத்தாக்குக்கு வந்து சேர்ந்தார்கள்.

9-உ ஞாயிறு காலையில் இடதுகையும் காலும் இடதுபக்கம் முழுவதும் கனத்து பழுவாய்க்கண்டது. ஆவதால் காலை ஆராதனைக்கு நான் வர ஏதுவில்லை. மதியம் இராப்போசன வேளைக்குப் பார்த்துக்கொள்ளலா மென்று சொன்னார்கள். மதியமாகியும் வெயிலெரித்தும் இடது புற வருத்தம் நீங்கவில்லை. இராப்போசனவேளைக்காவது வர இயலுமோ வென்று விசாரித்த தங்கள் மூத்தகுமாரனிடத்தில் வரத் தீராதென்று சொன்னது மல்லாமல் நான் வீட்டிலிருந்து ஆவியின்படி நற்கருணை அனுபவித்துக் கொள்ளுகிறேன் என்றார்கள். கோவில் கூடினபின்பு வீட்டில் ஐயாவுக்கு இராப்போசனம் கொடுத்தார்கள். இதற்கு முன்னும் வீட்டில் ஐயாவுக்கு இராப்போசனம் பரிமாறின துண்டு.

௰௧-உ செவ்வாய்க்கிழமை கால் கை அதிகமாய் விழுந்து போனதினால் தங்கள் மூத்தகுமாரனை அழைத்து லோகசம்பந்தமான தங்கள் காரியங்கள் சிலவற்றைச் சொல்லி லோக காரியக் கணக்கைக் கடைசியாய் முடித்து விடுகிற பேச்சாய்ப் பேசினார்கள். அதற்கு மகன்: இப்போது என் ஐயா சொல்ல வேண்டும், முன்போலத்திரும்பவும் கர்த்தர் சுகத்தைக் கட்டளையிட மாட்டாரா என்றார்கள். அப்படிக் கல்ல, கர்த்தர் சந்திக்கிறவேளை யிதுவாயிருக்கும், அப்புறம் ஒன்றும் சொல்லக்கூடாமல் போனாலும் போகுமென்றார்கள்.

× [illegible] J.D.S.

௰௨-௳ புதன் வியாதிக்காரரைச் சந்திக்கும் முறைமையை வாசிக்கக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதில் மரண ஆபத்தமாகச் செய்யவேண்டிய மரண சாதன முதலிய வைகளைச் செய்து கொள்ள வேண்டுமென்பதாயுள்ள குறிப்பை வாசிக்கக் கேட்டுத் தங்கள் மூத்தகுமாரனைப் பார்த்துக் கர்த்தர் எசேக்கியா விடத்தில் நீ உன் வீட்டுக்காரியங்களைத் திட்டம்பண்ணு என்று சொன்னாரல்லவா, அதுபோல இந்த ஒழுங்கிலுங் கண்டிருக்கிறது. அது தான் நான் சொல்லவேண்டியதை முந்தின நாளில் உமக்குச் சொன்னது என்றார்கள். ஐயா சொன்னது, புருஷனாக வற்ற தங்கள் ஏழை மகள், அவள் பிள்ளைகள் சம்பந்தமாயுள்ள வார்த்தைகள், ஐயாவுக்கு யாதொரு ஆஸ்தியுங் கிடையாது. புஸ்தகமும் ஏடும் எழுத்தாணியும் தவிர லோகத்தில் வேறு ஆஸ்தி பொருள் ஒன்றும் அவர்களுக்கில்லை. இக்காலத்தில் அவர்களுக்குக் கடனு மிருக்கவில்லை. கர்த்தரே அவர்கள் பங்கும் அவர்கள் பிள்ளைகளுக்கு வைத்துப்போன சுதந்தர வீதமுமானவர்.

தங்கள் குமாரர் தூர இடத்திலிருந்தவர்களைக் குறித்து அவர்கள் வரவேண்டுமென்று ஒன்றுஞ் சொல்லவில்லை. சமீபமாய் சுவிசேஷபுரத்திலிருந்த தங்கள் மகனை மாத்திரம் வரும்படிக்கு ஆளனுப்பச் சொன்னார்கள்.

இன்றைக்குத்தான் ஐயா கடைசியாக தங்கள் ரோமா னினத்தாரைக் குறித்துப் பேசினது. தங்களுடைய இனத்தார் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யறிந்து இரட்சிக்கப்பட வேண்டுமென்ற அசாவும் ஆசையும் பவுல் அப்போஸ்தலனைப்போல அவ்வளவு வைராக்கியமாய் ஐயா உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. இதைக்குறித்து வேறு இடத்தில் சொல்லியிருக்கிறேன்.

வடக்கன் குளத்தாருக்குச் சுவிசேஷ வெளிச்சம் ஏற்றப்பட்டது. ஆனால் அவர்கள் மனதாரத் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். ஒளியிலும் இருளையே விரும்பினார்கள். தங்களினத்தாரைக்குறித்த இந்தத் துக்கம் ஐயாவுக்கு எப்போதும் மனதில் பொங்கிக்கொண்டிருந்தது. இந்த விஷயத்தில் அம்மையுடைய எண்ணம் ஐயாவுக்கு நேரெதிரா யிருந்தது. வடக்கன்குளத்தாருக்கு யூதரைப்போல கடினமான மனது. அவர்களுக்குப் போதிக்கிறது வெட்டுக்கிடாய்க்கு வேதம் ஓதினது போல (வீண்): காட்டு மாட்டுக் (பின்புறத்தில்) ராசமேளஞ் செவித்தாப்போல என்பாள். தங்கள் இனத்தார் நினைவு இந்தச் சமயத்திலும் ஐயாவுக்கு வந்த தினால் அவர்களுக்காகத் தங்களுக்கிருக்கிற துக்கத்தைச் சொல்லி வடக்கன்குளத்தில் இப்போது காலேந்து வருஷமாய் நமது சபையைச் சேர்ந்திருந்த தங்கள் சம்பந்தகாரர் சின்ன ஞானப்பிரகாசம்பிள்ளை யவர்கள் வீட்டாரைக்

445 446



குறித்து: அவர்களாவது நமது மார்க்கத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டுமென்று அங்கலாய்ப்பாய்ப் பேசினார்கள். ஏனென்றால் மூன்றாட்களில் அவர்களை ஐயா சந்திக்க நேரிட்டகாலத்தில் அவர்கள் வெளியரங்கமாய்த் தங்களூரில் நமது கோவிலுக்குப் போகாமலும் இராப்போசனம் சேராமலும் இருபுத்தியா யிருக்கிறார்களென்று அவர்கள் பேரில் மனஸ்தாயப்பட்டது ஐயாவுடைய ஜர்னலில் காணலாம்.

இது வெல்லாம் அன்று புதன்கிழமை மத்தியானத்துக்கு முந்தி நடந்த காரியங்கள். அன்று மதியத்துக்குமேல் சன்னித்தோற்றமும் மேல் மூச்சும் ஆரம்பமாயிற்று. இன்று இரவெல்லாம் மிகுந்த அசதியும் அமைதியுமாயிருந்தது. வாய்ப்புலப்பமும் இருந்தது, இன்ன சொன்னது என்று அறியக்கூடாதிருந்தது. தங்கள் கடைவீட்டு மைத்துனன்மாரைப் பேர் சொல்லி அழைத்தது போல் ஒரு பேச்சு தெரிந்தது. குதிரைகொண்டுவரச் சொன்னது போலவோ, குதிரை போகிறது என்று சொன்னது போலவோ சில பேச்சுமாத்திரம் தெரிந்தது. இந்த மைத்துனன்மார் ஐயா சுவிசேஷ மார்க்கத்தில் சேர்ந்தபின்பும் ஐயாபேரில் பட்சமும் விசுவாசமுமாய் இருந்தார்களே யன்றி ஐயாவைப் பகைத்துத் துரோகஞ்செய்தவர்களல்ல.

௰௩-௳ வியாழக்கிழமை காலையில் ஐயா கண்மூடினபடியே படுத்திருக்கிறார்கள். ௭-மணிபோல ஆனதினால் மூத்தகுமாரர்: ஐயா, இன்னம் முழிக்கவில்லையா, நேரமாச்சே என்றார்கள். நான் அப்போதே முழித்துவிட்டேன் என்றார்கள். ஐயா, நாங்கள் கவனிக்கவில்லையே என்க- நான் பரலோகத்துக்குப் போயிருந்து திரும்பி வந்தேன் என்றார்கள். அப்போது சுகம்போல தெளிச்சலாய் முகச்செழிப்பாய் காணப்பட்டது. கொஞ்சம் தேத்தண்ணீர் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டார்கள். பின்பு யாதொரு பேச்சுமில்லாமல் அமைதலாய்ப் படுத்திருந்தார்கள். ௯-மணிக்குமேல் கண்விழித்து தங்கள் மூத்தமகனைப் பார்த்து: தேவதூதர்கள் வந்தார்கள், அழைத்துக்கொண்டு போக வருவோமென்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள் என்றார்கள்.

எப்போதும் காலையில் சுகம்போலிருக்கிறதும் மதியம் திரும்பினதுக்குமேல் தான் வியாதி மும்முறங்காட்டுகிறதுமா யிருந்தது, அப்படியே இந்தத் தினத்திலும் விசேஷமாய் ஐயா தேகத்தில் மிகுந்த நோவுண்டாயிற்று. ஐயா சரீரத்தில் அனுபவிக்கிற கொடிய வேதனையைக் கண்ட போது, மூத்தகுமாரர்: ஐயா, இரட்சகரை நினைக்கிறீர்களா, அவர் பாடுகளை நினையுங்கள், அவர் சிந்தின இரத்தத்தால் நமக்கு இரட்சிப்பு, நமக்கு பாக்கியம், அவரையே நினையுங்கள் என்றார்கள். உடனே: அவர்தான் என் நினைவு என்றார்கள்:

94

சிலநேரஞ் சென்றபின்பு: முன்முடிச்சிரமே மூங்கிற் கோற் சரமே என்று சொன்னார்கள். (இந்த வார்த்தைகள் ஏதோ ஒரு கவியில் உள்ள வார்த்தையா யிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறபடியால் அந்த மேற்கோள் எது வென்று எங்கும் விசாரித்ததிலும் ஏடுகளைப் பரிசோதித்ததிலும் இதுவரையும் தெரியவில்லை.)

அப்புறம் யாதொரு பேச்சுமில்லாமல் அமரியா யிருந்தார்கள். தீப சமையத்துக்கு மூத்தமகன் காதுகிட்ட வந்து கூப்பிட்டு: ஐயா, என்ன, எப்படியிருக்கிறது என்று கேட்க:

எல்லாம் நல்ல காரியம் என்று மாத்திரம் சொன்னார்கள்.

௰௪-டை வெள்ளிக்கிழமை காலையில் தேகத்தில் வியாதி மிகுந்த பலஞ் செய்கிறதையும் சரீரத்தில் படுகிற வேதனையையும் சன்னி தோஷமா யிருக்கிறதையும் கவனித்து: மூத்தமகன் ஐயா, வருத்தமாயிருக்கிறதோ என்று கேட்டதற்கு: ஆம் என்று சொன்னதுபோலிருந்தது. மரண நிழலின் பள்ளத்தாக்கை கடந்தாயிற்று. யோர்தான்நதியில் இறங்க ஆரம்பித்தாயிற்று. அவர்கள் நதியில் இறங்கி அக்கரை சேரும்படியாய்ப் போகப் போக இக்கரையிலிருந்தவர்களுக்கு அவர்களுடைய காட்சி தெரியக்கூடாத தாயிற்று.

---

ஷை நல்லம்மாள்புரத்துச் சங்கதிகள் ஒன்றும் இவ்விடம் பாளையங்கோட்டையில் எங்களுக்குத் தெரியாது. எல்லாம் முன்போன்ற இயல்பாய்த்தானிருக்குமென்று பின் வருங்காகிதத்தை நான் ஷை வியாழக்கிழமை யன்று மூத்தஅண்ணாட்சிக்கு எழுதினேன்.

"தேவ இரக்கத்தினாலே இவ்விடத்தில் நாங்கள் யாவருஞ் சுகமேயிருக்கிறோம். மதினி இவ்விடம் வந்திருந்தபோது நான் எழுதியனுப்பிய காகிதம் வந்து சேர்ந்திருக்கு மென்று நம்புகிறேன். அப்புறமுள்ள அவ்விடத்துச் சுகசெய்தி தெரியவில்லை. சார்ஜென்றையரவர்கள் நாளது ௰௮-டை இவ்விடம் வருகிறதாகச் செய்தி.

"கூனியூரிலிருந்து அண்ணாட்சி யுடைய கடிதம் வந்தது.

"அம்பாசமுத்திரத்து அண்ணாட்சி யவர்களும் பத்து நாளைக்கு முன் இவ்விடம் வந்து போனார்கள். அவர்கள் கூடத்தான் கூனியூர் அண்ணாட்சி யவர்களும் போனார்கள். வீடு முறைக்கு லீவி அருளம்மாள் இவ்விடத்தில் தான் இருப்பாள்.

உன் பணிவான தோத்திரம்."



அதே ஷை தெய்தியில் மூத்த அண்ணாட்சி எனக்குப் பின் வருங்காகிதம் எழுதியனுப்பினார்கள்:—

"மிகவும் பிரிய தம்பி

"நமதருமையுள்ள ஐயா அவர்களுக்கு உண்டாயிருந்த சுகவீனம் பலவீனந் தெரியுமே. இப்போது சிலவாரமாய் அதிகச் சுகத்தப்பும் இடையிடையே சற்று லகுவுமாயிருந்தது. இந்த வாரத்தில் (சனிக்கிழமைப் பின்னேரமுதல்) குணங்கினதில் முன் போலத் தெளிவும் லகுவுங்காணாமல் நேற்று மதியத்துக்கு மேல் சன்னித்தோற்றம்போலச் சற்று மறதியும் புலப்பமுங் கண்டு வருத்தமாயிருக்கிறது. இதுதான் ஐயாவுக்கு உலகத்தின் கடைசி நாளாயிருக்குமோ நாளைக்குத்தானோ என்பது சந்தேகமாயிருக்கிறது. தேவசித்தப்படி யாம். அவர் சித்தம் நமது பாக்கியம். பேச்சு இல்லை, கேள்விக்கு மறுமொழி யில்லை. அசதியும் மயக்கமும் இழுப்பு மிருக்கிறது. இடது காலுங் கையுஞ் சாணையும் அசைவுமில்லை. காரிய மிப்படியிருக்கிறது. இது காரியத்தை நமது மற்றச்சகோதரருக்கு உடனே தெரிவிக்கவும். அவசரம். மற்றவர்களுக்கு எழுதச் சமையமில்லை.

"கருத்தர் நமக்குஞ் சகாயங் கட்டளை யிடுவாராக. நமதய்யாவுடைய விசுவாச நம்பிக்கை மாத்திரம் ஆறுதலுக்கு ஏதுவாயிருக்கத் தக்கது."

---

ஷை காகிதம் எனக்கு வெள்ளிக்கிழமை கிடைத்தது. நான் ஷை காகிதத்தின் முக்கிய பாகத்தை யெழுதி அம்பாசமுத்திரம் அண்ணாட்சிக்கு ஒரு பச்சை லக்கோட்டாவில் சர்க்கார் போஸ்ற் மூலமா யனுப்பினேன். அம்பாசமுத்திரம் தபால் சேவகனுடைய மோசத்தினால் ௰௭-டை திங்கட்கிழமை சாயந்திரந்தான் அண்ணாட்சி கையில் காகிதம் கிடைத்தது. அவர்கள் அந்தக்காகிதத்தைக் கூனியூரண்ணாட்சிக்கு ௰௮-டை யனுப்பி, அதில்: "நாங்கள் எல்லாரும் புறப்பட்டு பற்பசேரி பாதை மார்க்கமாய்ப் புறப்படுகிறோம். நீ யெந்தவழியாய் வர மனமாயிருக்கிறது. உன் சுகம் எப்படியோ. கர்த்தர் நமது அய்யா அவர்களைக் காணக் கிருபைசெய்தால் நலமாயிருக்கும். அவர் சித்தம்" என்று எழுதி யனுப்பினார்கள்.

மூத்த அண்ணாட்சி யெனக்கு எழுதியகாகிதத்தின் வசனங்களைப்பார்க்கிலும் தெளிவாய் வேறு எப்படியெழுதக்கூடும். இவ்வளவு தெளிவாய் எழுதியிருந்தும் இன்னும் எனக்கு புத்தியில் உறைக்கவில்லை. முன் வியாதி வருத்தமாயிருந்து சுகமாகவில்லையா, சுகமாயிருக்கிறார்களென்று பின்னால் காகிதம்

வருமென்று எண்ணிக் கொண்டேன். ஆனாலும் ஐயாவைப் போய்ப்பார்த்தல்ல வேணுமென்றும் எண்ணிக்கொண்டேன். உள்ளுக்குள் மிகுந்த பயமும் சந்தேகமும் உண்டாகிக்கொண்டி யிருந்தது. அப்போதான் புதிதாய் கோரட்டில் அலுவலானபடியால் ரஜாவாங்கக்கூடிய விபரமும் எனக்குத் தெரியாது. கோரட்டில் எனக்கு அநுசாரிகளாய் உள்ளவர்களுமில்லை. நான் போனால் இன்தர்பிரிட் பண்ணவும் ஆள் கிடையாது, கோர்ட்டில் செஷன் நடக்கிறது. இப்படி பலவித பயித்தியாரத்தனமாய் சனிக்கிழமை சாயந்திரம் வரை தாமதித்து விட்டேன். சனிக்கிழமை சாயங்காலம் பயத்தோடே ஜட்ஜ் சாயின் துரையிடத்தில் வீட்டுக்குப்போய் காரியத்தைச் சொல்லி ரஜாவாங்கிக் கொண்டேன்.

நான், திருநெல்வேலி இளைய அண்ணாட்சி ஏசுதாச பிள்ளையவர்கள், மாப்பிள்ளை திருநெல்வேலி வாத்தியார் சாமுவேல் பிள்ளையவர்கள், என்தம்பி சஞ்சீவியுமாகப் புறப்பட்டோம், எப்படிப் போனோமென்று ஞாபகமில்லை. இட்டம்புளிச்சாலையில் போய்ச் சேரும்போது ஞாயிறுகாலை வெயிலேறி விட்டது. காலில் செருப்புமில்லை. ஓலைச் செருப்புச் செய்து போட்டுக்கொண்டுபோனதுபோல் ஞாபகமிருக்கிறது. கடுத்தேரி வழியாய் நடந்துபோய் நல்லம்மான்புரம் போய்ச்சேர்ந்தோம். சேருகிறபோது ஞாயிற்றுக் கிழமை பகல் பன்னிரண்டுமணியோ எத்தனைமணியோ ஒன்றும் நினைவில்லை.

ஐயா ஒரு தாழ்ந்த நார்க் கட்டிலில் நடு அறையில் வடக்கு வாசலுக்கு மேல் புறமாய் சுவர் ஓரத்தில் கிழக்கே தலையும் மேற்கே காலுமாய் மல்லாக்கப் படுத்திருந்தார்கள். தொண்டை கபம் கதகதப்பான சத்தமும் இழுப்பும் கொஞ்சம் தலைகுனுக்கமும் இருந்தது. ஐயாவை பார்த்தவுடனே யென் தம்பி வெகுவாய் ஏங்கி கலங்கி மயங்கினான். அம்மை எங்களைக் கோபித்தாள் "என்ன, அப்பா, ஐயாவுக்கு இப்போ என்ன வந்துவிட்டது, இந்த ஏக்கம் ஆகாது" என்றாள். மற்ற நாங்களும் அப்படியே கலங்கினோம். ஆனாலும் ஐயா உயிரோடிருக்கிறதினால் சுகத்துக்குக் கொண்டுவந்து விடலாமென்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன். ஐயா விடத்தில் கிட்டப்போய்: ஐயா, ஐயா என்று கூப்பிட்டேன், என் சத்தத்தை கேட்டதுபோலவும் ஏதோ பதில் சத்தம் காண்பித்ததுபோலவும் என்மனதில் தோற்றம் பண்ணிக்கொண்டேன். இன்றைக்கு ஐயாவுக்கு மருந்து ஏதாவது கொடுத்திருக்கிறதா, ஆகாரம் ஏதாவது கொடுத்திருக்கிறதா என்றுகேட்டேன். மூத்த அண்ணாட்சி: இல்லையென்பதாகத் தலை அசைத்தார்கள். எனக்கிருந்த துக்கமும் விசனமுமாயிற்று, மாப்பிள்ளை ஞானப் பிரகாசம் பிள்ளையவர்கள் "போத்தி சரீரம் வெகு



சிரமத்துக்குள்ளானது, கொஞ்சம் ஆகாரமாத்திரம் இறங்குமானால் மெள்ள சுகத்துக்குக் கொண்டுவந்து விடலாம் என்று என்புத்திக்கிசையச் சொன்னார்கள். [ஐயா இப்போது யோர்தானின் மத்தியில் இருக்கிறார்களென்பது எனக்குத் தெரியாதிருந்தது போல ஷை மாப்பிள்ளைக்குந் தெரியாதிருந்த தாக்கும்] கொஞ்சம் பால் கொண்டுவந்து கரண்டியில் வாயில் கொடுத்தேன். கடைவாய் வழியாய் வடிந்து விட்டது. தம்பி பிரியம்போல், அவன் ஆசை தீரட்டும் என்றது போல மூத்த அண்ணாட்சி பேசாதிருந்தார்கள். அம்மை இப்போது ஏதாவது வாயில் விடுகிறது உடனே திக்கு முக்காடி மோசத்துக்கு இடமாகுமென்பதாக சாடையாய் என்னை எச்சரித்தாள். ஐயா யோர்தான் நதியில் வெகுதூரம் இறங்கிப் போயிருக்கிறார்கள் என்றும் அக்கரை சேருகிற நேரத்துக்காக காத்திருக்க வேண்டியது என்றும் அப்புறந்தான் எனக்கு கொஞ்சம் அறிவு தோற்றமாயிற்று. எல்லாரும் அமைதியாய் உட்கார்ந்திருந்தோம். ஐயாவுடைய நிலைமை அன்று ஞாயிற்றுக் கிழமை இராத்திரி முழுவதும் அப்படியே தொண்டையில் சத்தமும் இழுப்புமா யிருந்தது.

வீட்டிலிருந்தவர்கள்:—மூத்த அண்ணாட்சி. மாப்பிள்ளை ஞானப் பிரகாசம்பிள்ளை. மூத்தமரியவியாகுலம். மரியமிக்கேல்பிள்ளை. லூயிஸ். மேரி அன்னம்மாள். சவரிமுத்து மரியம்மாள். அக்காள் இன்னாசி அம்மாளும் அவள் பிள்ளைகளும். மாப்பிள்ளை யாக்கோவுப் பிள்ளையும்.

மூத்த மதினி தூத்துக்குடிக்கு மருமகளுக்கு பேறுகாலம் பார்க்கப் போயிருந்தார்கள். ஐயாவுடைய பிள்ளைகளில், அம்பாசமுத்திரம் அண்ணாட்சியும், கூனியூர் அண்ணாட்சியும் இப்போ வருவார்கள், அப்போ வருவார்கள் என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

திங்கள் கிழமை பகலும் ஐயாவுடைய வருத்தம் அப்படியே யிருந்தது. நாங்கள் எல்லாரும் பேசாமல் அமர்ந்திருந்தோம். நாங்கள் பொதுச் செபம் பண்ணினது இரண்டொருதடவைதானு மிருக்குமோ வென்பது சந்தேகமாயிருக்கிறது. எங்களுடைய நிலைமையும் உள்ளமும் பொதுச் செபம் பண்ணக் கூடிய நிலைமையைத் தாண்டியிருந்தது.

நாங்கள் ஒருவரோடு ஒருவர் வாய்விட்டுப் பேசவும் எங்களால் முடியாத காரியம். வாய் திறந்தால் அதுகாரணமாக நாக்கு தடுமாற்றமும் வெப்பமும் எங்களை அமிழ்த்தி விடுகிறதாயிருந்தது. ஆனாலும் எங்கள் ஆத்துமா கர்த்தரிடத்தில் உயர்த்தப் பட்டே யிருந்தது. எங்கள் இருதயத்தின் ஏங்கல் அவருக்கு முன்பாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

ஐயாவுக்கிருந்த இழுப்பும் தொண்டைசத்தமும் நேரத்துக்கு நேரம் மாறியது, நேரம் போகப் போக- குறைந்து- குறைந்து- விட்டு- விட்டு- இருந்தது,கடைசியில் எல்லாம் நின்றது. ௲௮௱௭௰௯ ஆகஸ்து மீ ௨௭-௳ திங்கட்கிழமை இராத்திரி ௯-மணி.

பரலோகத்திலிருந்து ஒரு சத்தம்உண்டாகக் கேட்டேன். கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது: அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள் என்று ஆவியானவர் திருவுளம் பற்றுகிறார்.

வானம் திறக்கப்படும், ஐயா மகிமையில் பிரவேசிக்கிற மோட்ச காட்சி யென் கண்ணுக்குக் காணப்படுமென்று அண்ணாந்து உயரப்பார்த்தேன். திரும்பவும் திரும்பவும் உயர உயரப் பார்த்த வண்ணமாயிருந்தேன். பாவியின் பாவக்கண்ணுக்கு இந்தப் பரம காட்சி காணப்படுமென்று நினைக்கிறது எத்தனை மதியீனம். எத்தனை பயித்தியம். பரிசுத்த ஸ்தேவானுக்குக் கிடைத்த காட்சி அவரை அடக்கம்பண்ணும் மனுஷருங்கூடச்சேர்ந்து காணக் கூடியதா. இலமோட்டைத்தான் பாவி என்கண் காணக்கூடியதாயிருக்கிறது.

ஐயாவைக்குளிப்பாட்டுவதற்கு அண்ணாட்சி ஏற்பாட்டின்படிக்கு கட்டிலோடு தூக்க ஆரம்பித்தார்கள். எனக்கு வந்த விசனமும் வெப்பமும் துக்கமும் அளவு கடந்துவிட்டது. ஐயாவுடைய பரிசுத்த தேகத்தை ஏதோ மரியாதைக்குறைச்சல் செய்யப் போவதுபோல எனக்கிருந்தது. எனக்கு இப்போது 31 வயசு நடக்கிறது. ஆனாலும் இப்படிப்பட்ட வைபவங்களை அநுபோகமாய்க் கண்டறிந்தவனல்ல. அண்ணாட்சியவர்கள் நடப்பிக்கப்போகும் காரியத்தை அல்லவென்று வாய் திறப்பதற்கு நான் எம்மாத்திரம். என் துக்கம் மிகுதியினால் அதே யிடத்திலேயே மயங்கிப்படுத்து தூங்கிவிட்டேன், சீவன் பிரிந்த கால்மணி நேரத்துக்குள்ளாக நான் இப்படி அயர்ந்து தூங்கிவிட்டேன். [நமது ஆண்டவருடைய சீஷர்கள் தோட்டத்தில் தூங்கினதையிட்டும் அவர்களுக்கு நமது ஆண்டவர் தம்முடைய மரணத்தைக்குறித்துச் சொன்னதை உணராமலும் அறியாமலும் போனதையிட்டும் இந்த இரு சங்கதி போலவே பின்னும் ஆதியோடந்தம் தேவ வசனத்தின் அருமையும் அதிசயமும் சத்தியமும் வியாக்கியானிகளினாலல்ல, என் சொந்த இருதய அநுபவத்திற்கே உணர்ச்சியாயிருக்கிற என் நியானங்களை வெளியாய் சொல்லுகிறதற்கு இது இடமல்ல.)



நான் முழித்தேன். ஐயாவை குளிப்பாட்டி, உடுத்தி, கொண்டுவந்தார்கள். சற்று உயர்ந்த ஒரு நார்க்கட்டிலில் அவர்கள் முன்வழக்கமாய்ப் படுத்திருக்கிற இடத்தில் நடு அறையில் மேல்புறமாய் தெற்கே தலையும் வடக்கே காலுமாய் வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் முன்னாட்களில் கோயிலுக்குப் போகிற போது உடுத்துகிற மாதிரியாய் நீளச் சொக்காவும் போட்டு தலையில் வெள்ளைக் கட்டுத்தலைப்பாகையும் வைக்கப்பட்டிருந்தது- நாங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தோம். மெழுகுதிரி இரண்டொன்று தண்டில் எரிந்து கொண்டிருந்தது, ஒரு மெழுகு திரி தண்டுக்குழியில் முழுவதும் எரிந்து அணைகிறதற்குமுன் அதின் பிரகாசம் படிப்படியாய் குறைகிறதும் திரும்பவும் திடீரென்று அதிக வெளிச்சமாகிறதும், திரும்பவும் மங்குகிறதும் அணைந்துபோகிறது போல காணுகிறதும், திரும்பவும் எரிந்து பிரகாசிக்கிறதும், பின்னும் குறைந்து மங்கி அதின் ஒளி நிறமாறுகிறதும், தோற்றியும் தோற்றுமலுமாயிருந்து கடைசியில் முற்றும் அணைந்து போனதும் நாங்கள் வெகுநேரம் வாய் பேசாமல் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தோம்- ஐயாவுடைய சீவ ஓட்டத்தின் முடிவை மகா தெளிவாய் அந்தத் தீபம் எங்களுக்குப் படம்போல காட்டிற்று.

செவ்வாய்க்கிழமை விடிந்தது. அண்ணாட்சியார் இருவரும் வரக்கூடுமேயென்று ஆவலாய் வழிநோக்கியிருந்தோம்- அவர்கள் வந்து பார்த்துத் தான் எடுக்கவேணுமென்று எல்லாருடைய ஆசை. நான் எத்தனையோ தடவை அவர்கள் வருகிற வழிநோக்கிப்போய் மனவருத்தத்தோடு திரும்பி வந்தேன். இடையன்குடியிலிருந்து கனம் சாமுவேல் ஐயரவர்கள் அதிகாலையில் வந்திருந்து திரும்பிப்போய் விட்டதாக எனக்கு ஞாபகம். 4-மணிக்கு அவர்கள் திரும்ப வந்தார்கள்-

அண்ணாட்சியார், ஐயோ, இன்னும் வந்துசேரவில்லை. அடக்கத்துக்கு மூத்த அண்ணாட்சி ஆயத்தங்கள் செய்தார்கள். அண்ணாட்சிமார்கள் வந்து விடுவார்கள், இன்னும் கொஞ்சம் பார்ப்போமென்று நான் நேரத்தைக் கடத்தப்பார்த்தேன். மூத்த அண்ணாட்சி சரியானபடி உடுத்திக்கொண்டது மல்லாமல் மற்ற நாங்கள் சகோதரர் மூவரும் அப்படியே நன்றாய் வெளுத்த வெள்ளை வஸ்திரங்களினால் யோக்கியமாய் தப்புரவாய் உடுத்திக்கொள்ளும்படிக்கு சாடை காண்பித்தபடி நாங்கள் எல்லாரும் உடுத்திக்கொண்டோம்,

இந்த வேளை உண்டான துக்கமும் துயரமும் யார் நினைக்கக்கூடும்;

எங்கள் நெஞ்சம் உடைந்து உருகி ஓடிற்று. எங்கள் கண்ணீர் அக்கினி வெள்ளமாக வழிந்த வண்ணமாக யிருந்தது எங்களை அறியாமல். வாய் விட்டலறி அழுதால் மூத்த அண்ணாட்சி சகிக்கமாட்டார்கள். எங்களுக்கு அவர்கள் மாதிரியாகவும் அவர்களுக்கு நாங்கள் மாதிரியாகவும் வாய்விட வில்லை. மூத்த அண்ணாட்சி தங்கள் துக்கத்தையும் வெப்பத்தையும் வாய் விடப்படாதென்று வாயை நெருக்கி மூடிக்கொண்டு பல்லை நெறு நெறு என்று கடிக்கிற சத்தம் நாங்களும் அலறுகிறதற்கு இடங்கொடுக்கக் கூடா தென்று எங்களை அடக்கிற்று. எங்கும் கண்ணீர் வெள்ளமேயன்றி கூக் குரலான ஒப்பாரியின்றி அமைதலாயிருந்தது. ஐயா பிராணன் பிரிந்த சமை யத்தில் அம்மை மண்டையில் அடித்துக்கொண்டு மூட்டிக் கூக்குரலிட்டு அழ ஆரம்பித்தபோது நாங்கள் மெதுவாய் அம்மையைத் தடுத்து நிறுத்திக் கொண்டோம். அப்புறம் அம்மை பெருங்கூப்பாடு பண்ணினதில்லை.

ஆபீஸ் மாப்பிள்ளை மரிய மிக்கேல் பிள்ளை தச்சவேலையில் நிபுண னானதால் பெட்டி செய்திருந்தார். அதில் ஐயாவை வைத்தோம். அனேக உபதேசிமார், வாத்திமார்களும், மூக்கந்தன்மார், சபையார்களும் திரள் கூட்டம். ஆசீர்வாதம் உபதேசியார் செபம் பண்ணினார், அனேக வருஷ மாய் நம்மையும் ஐயாவையும் அறிந்தவர். இந்த வேளையில் அண்ணாட்சி செய்திருந்த ஒழுங்குகளும் மாதிரியும் ஐயாவுடைய மற்றப்பிள்ளைகள் வீட் டார் வந்திருந்த இனத்தார் எல்லாரும் நடந்து கொண்ட மாதிரியும் செ. உபதேசியாருக்கும் மற்ற சனங்களுக்கும் அதிசயமா யிருந்தது. கலி யாண வீட்டுக்குப் போகிறதைப் பார்க்கிலும் துக்க வீட்டுக்குப் போகிறது நல்லதென்று சொல்லியிருக்கிற வாக்கியத்தின் அர்த்தத்தை இன்றுதான் படித்தேன் என்று செபத்தில் சொன்னார். வெகு உருக்கமாய் செபம் பண்ணி முடித்தார். ஐந்துமணி ஆயிற்று. பெட்டியைத் தூக்குகிறதற்கு எத்தனையோ பேர்கள் வந்து நெருங்கி, நான் நீ யென்று கை நீட்டித் தூக்கினதினால் நானும் நெருக்கத்துக்குள் போய் கைகொடுத்துத் தொ ட்டுக்கொள்வதற்கு இரண்டொரு நிமிஷந்தான் வருத்தத்தோடு இடங் கிடைத்தது. கோவிலுக்குக்கொண்டுபோய் வாசிக்க வேண்டிய பாகத்தை வாசித்தார்கள். சாமுவேல் ஐயாவர்கள்தான் எல்லாம் நடத்தினார்கள்.

கோவிலின் இராப்போசன அறையிலிருந்து தெற்கே உத்தேசம் ஐந்து கெஜ தூரத்தில் கிழமேலாய்க் குழி தோண்டி யிருந்தது. கல்லினாலும் சுண்ணாம்பினாலும் பெட்டிக்குச் சரியாய்த் தொட்டி கட்டப்பட்டு, மூடி



வாரக்கற்களும் ஆயத்தமா யிருந்தது. நான் இதற்கு முன் அனேகருடைய அடக்கத்தைப் பார்த்திருக்கிறேன். முதலில் மண்ணில் அடக்கம்பண்ணி அப்புறம் சிலகாலத்துக்குப்பின்புதான் மேலே கல்லறை கட்டுகிறது வழக்கம் இதுதான் முதல் முதலாக இந்தமாதிரியாய் இந்தப் பிரதேசங்களில் அடக் கம் பண்ணினது என்று நான் நினைக்கிறேன்.

ஐயாவுக்குத் தாங்கள் மரித்தால் சுவிசேஷபுரத்தில் தங்கள் மூத்தமகனை அடக்கம்பண்ணியிருக்கிற கல்லறைத்தோட்டத்தில் அடக்கஞ் செய்யவேணு மென்று எண்ணமிருந்தது. அந்த எண்ணத்தைத் தங்கள் மூத்த மகனிடத் தில் சாடையாய்க் காண்பித்து இந்தத் தேரிக்காட்டில்தான் போடு வீரோ என்பதாக மூன்னாட்களில் ஒருநாள் சொன்னார்களாம். (கல்லம்மாள்புரத்தில் மரித்தவர்களை தேரிப்பக்கத்தில் அவரவர்களுக்கு இஷ்டமான இடத்தில் அடக்கம் பண்ணுவார்கள்.) ஐயாவுக்குப் பதில் சொல்ல மகனுக்கு எப்படி வாய் எழும்பும். ஆனாலும் தேரிக்காட்டில் அல்ல, இந்தக் கோவில்பக்கத் தில் நம்முடைய கல்லறைகள் இருக்குமென்று ஐயாவுக்கு சாடையாய்த் தெரியும்படி செய்திருந்தார்கள்.

கல்லறையைச் சுற்றி நின்றோம். அண்ணாட்சிமார் இருவர் இன்னும் வரவில்லையே என்று எனக்குத் தீராத ஏக்கமாயிருந்தது. சாமுவேலய்யர வர்கள் மகா உருக்கமாய் செபத்தை வாசித்து முடித்தார்கள்.

அவர்களினும் வேத சாஸ்திரி, அவர்களினும் வல்லமையான பிரசங்கி; நான் கண்டதில்லை:—(இந்தக் காலத்தில் அவர்களுடைய தாயாரும் இடை யன் குடியிருப்பில் கொடிதான ஒரு வியாதியினால் வேதனையை அனுபவிக் கிறார்கள்) ஐயாவுடைய நடபடிக்கைகளைக் குறித்தும் ஐயாவுடைய குணலட் சணங்களைக்குறித்தும் ஐயா காண்பித்துப் போன நன்மாதிரியைக் குறித்தும் ஒரு அரைமணி நேரம் போல கூடியிருந்த பெரிய கூட்டத்துக்கு மகா உருக்கத்தோடும் மகா சாதுரியத்தோடும் பிரசங்கஞ்செய்து முடித்தார்கள். ஏதோ கீர்த்தனை ஞானப்பாட்டுகளும் பாடப்பட்டது. என் காதில் ஒன்றும் ஏறவில்லை. மனம் இருளடைந்து போயிற்று.

என் தலை முழுவதும் ஓட்டைப்போல் காய்ந்திருந்தது. என் ஐந்து புலன்களும் அந்தக் கல்லறைக்குள்ளிருந்தது. இனி எனக்கு சந்தோஷமுண் டா இனியென் வாயில் சிரிப்பு வருமா, என் சந்தோஷத்துக்கும் துக்கத் துக்கும் யாரோடு எனக்குப் பங்கு, யாரிடத்தில் சொல்லுவேன், யாரிடத் தில் பேசுவேன், இனி நாங்கள் சகோதரர்கள் எப்படி யிருப்போம், நடுத் தான் கம்பு எடுபட்டுப்போனபின்பு சச்சை யிருந்தும் கயறுகளிருந்தும்

மேனிகளிருந்தும் கூடாரத்துக்கு என்ன மகிமை, என்னத்துக்காகும்.

ஐயாவர்கள் பிரசங்கம் முடிந்தது. வெல்லப்பட்டவன் கற்களை வெடித்துக் குழிமேற் பாவி மூடி சாந்துப்பூசினார்கள். சூரியன் அஸ்தமித்து இருள் ஆயிற்று. மாலை வெளிச்சத்தில் வீட்டுக்குத் திரும்பினோம்.

---

இரக்கமுள்ள தேவனே, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார், அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருக்கையில் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் ஒருக்காலும் மரிக்கமாட்டான். அவருக்குள் நித்திரையடைந்தவர்களைக் குறித்து நம்பிக்கை யற்றவர்களைப் போலத் துக்கப்படாதபடி தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலைக்கொண்டு எங்களுக்குக் கற்பித்திருக்கிறாரே. எங்களுக்குத் தேவரீர் தந்த எங்கள் அருமைத்தகப்பனார் கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்து இளைப்பாறுகிறார்கள் என்று நாங்கள் அறிந்திருக்கிறதுபோல இம்மையைவிட்டுப் போகும்போது நாங்களும் எங்கள் இரட்சகரிடத்தில் இளைப்பாறவும், மரித்தோர் உயிர்த்தெழும்பும் கடைசி நாளிலே உம்முடைய சமுகத்தில் பிரியமுள்ளவர்களாய்க் காணப்படவும், உம்முடைய பிரியகுமாரன் உம்மிடத்தில் அன்பாயும் பயபக்தியாயுமிருக்கிற யாவரையும் நோக்கி: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்று அருளிச்செய்யும் ஆசீர்வாதத்தைப் பெற்று அனுபவிக்கவும், நீதியாகிய ஜீவனை அடைய பாவமாகிய மரணத்தினின்று எங்களை உயிர்ப்பித்தருள வேண்டுமென்று பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இரக்கமுள்ள பிதாவே, எங்கள் மத்தியஸ்தரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

என் மூச்சொடுங்கும் அந்தக் கடை இக்கட்டிலும்.
நீர் எனக்காய் இறந்த உருவைக் காண்பியும்.
அப்போ நான் உம்மைப்பார்த்துக் கண்ணோக்கி நெஞ்சிலே
அணைத்துக்கொண்டு சாய்ந்து தூங்குவேன் என் இயேசுவே.

ஆமென்.